செழியதரையன் பிரபந்தங்கள்

பொதுப் பதிப்பாசிரியர்
பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

செழியதரையன் பிரபந்தங்கள்

பொதுப் பதிப்பாசிரியர்
பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை

குறிப்புரை
புலவர் ப. வெ. நாகராசன்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

இந் நூல் மையஅரசு கல்வி மற்றும் பண்பாட்டுத்துறை வழங்கிய நல்கையின்வழி வெளியிடப்பெறுகிறது.

Published with the financial assistance of the Ministry of Education and Culture, Govt. of India, New Delhi.

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு : 47

திருவள்ளுவர் ஆண்டு–2017–பங்குனி–மார்ச்சு–1986

பொதுப் பதிப்பாசிரியர் : மு. சண்முகம்பிள்ளை

நூல் : செழியதரையன் பிரபந்தங்கள்

பதிப்பு : முதற்பதிப்பு

விலை : உரூ. 107-00

அச்சு : சர்மாஸ் சானடோரியம் அச்சகம்,
புதுக்கோட்டை

உள்ளுறை

மைய அரசு நல்கைத் திட்டம்

இயக்குநர் :

பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை,
தலைவர், ஓலைச்சுவடித்துறை.

இத் திட்டத்தில் பணிபுரிந்தோர் :

1. **புலவர் ப. வெ. நாகராசன்,** தொழில்நுட்ப உதவியாளர்.
2. **முனைவர் சா. கிருட்டினமூர்த்தி,** பதிப்பாசிரியர்.
3. **செல்வி க. லலிதாம்பிகா,** சுவடி பெயர்ப்பாளர்.
4. **செல்வி கோ. மணிமொழி,** தட்டச்சர்.
5. **திரு ப. சதாசிவம்,** கணிப்பொறி செய்திக்கூறு பதிவர்.
6. **திருமதி ச. லதா**

முகவுரை

1. பிரபந்த வகைமை

பாடாண் திணை

பாட்டு என்பது புலவர் ஒருவரால் பாடப்பெறும் பாடலையும் அவர் பாடிய பாடல்களின் தொகுப்புகளையும் சுட்டும். தொல் காப்பியப் புறத்திணையியலில் 'பாடாண் திணை' என ஒரு பகுதி உள்ளது. இது தலைவன் ஒருவனது ஆண்மை, கொடைமை, புகழ்மை முதலியவற்றைச் சிறப்பித்துப் பாடும் நிலைகளை விளக்குகின்றது. இப் பாடாண் திணையுள் புலவர் பாடும் இலக்கிய வகைகள் சில எடுத்துரைக்கப்பட்டுள்ளன. எனவே, பாட்டு என்பது புலவரால் படைக்கப்பெறும் இலக்கிய வகை களைச் சுட்டும் பொதுப்பெயராகக் கொள்ளலாம். இது பற்றியே இலக்கிய வகைகளின் இயல்புகளை விளக்கும் நூல்கள்'பாட்டியல்' எனப் பெயர் பெற்றுள்ளன.

தொல்காப்பியர் சுட்டும் பாட்டு

தொல்காப்பியர் வகுத்துரைக்கும் செய்யுளியல் பகுதி தனித் தனியே வரும் செய்யுள் வகைகளையேயன்றி இலக்கியம் எனப் போற்றப் பெறும் செய்யுள் நூல் மரபுகளையும் எடுத்தியம்பு கின்றது. 'செய்யுள் வழக்கு' என்றே நூல்வழக்கினை அவர் சுட்டுகின்றமையும் நோக்கத்தகும். 'வழக்காறு அல்ல செய்யுள் ஆறே' (தொல். சொல். கிளவி. 10) என்றாற்போலப் பல்வேறு இடங்களில் செய்யுள் மரபுகளையும் தொல்காப்பியர் தம் நூலுள் எடுத்துக்காட்டியுள்ளார். செய்யுள் என்பதுடன் பாட்டு, யாப்பு என்னும் பெயர்களாலும் இலக்கியங்களை அவர் சுட்டியுள்ளார்.

''மாட்டுஎன மொழிப பாட்டியல் வழக்கின்''
(தொல். பொருள். செய்யு. **202**),

''விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே''
(தொல். பொருள். செய்யு. **231**)

எனவரும் இடங்கள் மேலதற்குச் சான்றாம். இவற்றால் தொல் காப்பியர் இலக்கியங்களைச் செய்யுள், பாட்டு, யாப்பு என்னும் பெயர்களால் குறிப்பிடுதல் தெரியவரும். இவையெல்லாம் செய்யப்படுவது, பாடப்படுவது, யாக்கப்படுவது என்னும் காரணம்பற்றி எழுந்த பெயர்களாம்.

பிரபந்தம் என்னும் வழக்கு

பின்னாளில் இலக்கியவகைகளின் இலக்கணம் கூறும் நூல் களுக்கு ஒருசார் ஆசிரியர் பிரபந்த மரபியல், பிரபந்தத்திரட்டு, பிரபந்த தீபிகை எனப் பெயரிட்டுள்ளனர். பிரபந்தம் என்னும் வடசொல்லுக்கு 'நன்கு கட்டப்பட்டது' என்பது பொருளாம். இது தொல்காப்பியர் வழங்கியுள்ள செய்யுள், யாப்பு என்னும் சொற் களை ஒத்த அமைப்புடையதே. பிரபந்தம் என்னும் சிற்றிலக்கியம் சிறுநூல் என்னும் அளவில் இப்பொழுது வழங்கப்படுகிறது. ஆனால் இது எவ்வகைப்பட்ட நூலையும் குறிக்கும் பொதுப் பெயரேயாம். பிரபந்தம் என்னும் வழக்கு வைணவ சமயத்தா ரிடையே மிகுந்து காணப்படுகிறது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், ஆர்த்திப் பிரபந்தம், அட்டப் பிரபந்தம், தேசிகப் பிரபந்தம் என்னும் வழக்கு அச் சமயத்தாரிடையே உள்ளது. 'பிரபந்தம்' என்னும் வடசொல்லை வழக்கிற்குக் கொண்டு வருவதற்குக் காரணமாயிருந்தவர் வைணவ சமயத்தாரே எனக் கருதலாம்.

இவ் வழக்கு ஏனையரிடமும் இல்லாமலில்லை. 'திருமுகப் பாசுரம்' முதலிய 40 சிற்றிலக்கியங்களைக் கொண்டதும் சைவத் திருமுறைகளுள் ஒன்றாகியதுமான பதினொராந் திருமுறையைப் 'பிரபந்த மாலை' எனவும் குறிப்பிடுகின்றனர். குமர குருபரர், சிவப்பிரகாசர், சிவஞானமுனிவர், மீனாட்சிசுந்தரம் பிள்ளை முதலியோரின் நூல்கள் அடங்கிய தொகுப்பிற்குப் 'பிரபந்தத் திரட்டு' எனப் பெயர் சூட்டிப் பதிப்பித்துள்ளனர். இவ்வாறாக நாளடைவில் பாட்டு, இலக்கியம் என்பன பிரபந்தம் என்னும் வழக்கினை மிகுதியும் பெறுவதாயின.

செய்யுள் வகை

தண்டியலங்கார நூல் செய்யுள் வகைகளை முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை என நான்கு வகையாகப் பாகு படுத்திக் காட்டுகிறது. முத்தகம், குளகம் என்னும் இரண்டும் நூல்களில் பாடல்கள் அமையும் நிலையைச் சுட்டுவன. தனித்

தனியாகப் பொருள் முடிவுடையவை முத்தகச் செய்யுள்; ஒரு பாட்டிலேயே பொருள் முடியாது மேலும் ஒன்றோ பலவோ பாடல்களைத் தழுவிப் பொருள் முடிபவை குளகச் செய்யுளாம். 'குளகம் பலபாட்டு ஒருவினை கொள்ளும்' என்கிறார் தண்டி யாசிரியர்.

தொகைநிலைச் செய்யுள்

தொகைநிலைச் செய்யுள் என்பது ஒருவரால் இசைக்கப் பெற்ற பல பாடல்களின் தொகுப்பாயும் பலர் பாடிய பாடல் களின் தொகுப்பாயும் அமைவதாம். இத் தொகைநிலைச் செய்யுள் பொருள், இடம், காலம், தொழில், பாட்டு, அளவு என்னும் அடிப்படையில் பெயர்பெற்று விளங்கும். பண்டையோர் இயற்றிய சங்கப் பாடல்களுள் எட்டுநூல்கள், 'எட்டுத்தொகை' என வழங்கப்பெறுகின்றன. 'ஒருவரால் உரைக்கப்பட்டது திருவள்ளுவப் பயன்; பலரால் உரைக்கப்பட்டது நெடுந்தொகை; இஃது எல்லாத் தொகைக்கும் பொதுவிலக்கணம்; பொருளால் தொகுத்தது புற நானூறு; இடத்தால் தொகுத்தது களவழி நாற்பது; காலத்தால் தொகுத்தது கார்நாற்பது; தொழிலால் தொகுத்தது ஐந்திணை; பாட்டால் தொகுத்தது கலித்தொகை; அளவால் தொகுத்தது குறுந்தொகை' என்று தண்டியலங்கார உரையாசிரியர் சுப்பிர மணிய தேசிகர் விளக்கம் தருகிறார். இவ்வகையில் பெயர்பெற்ற நூல்கள் தமிழில் பல உள்ளன. தொகை நூல்களைத் 'திரட்டு' என்னும் பெயராலும் குறிப்பது உண்டு. 'புறத்திரட்டு' என்பது கி.பி.14 ஆம் நூற்றாண்டில் தொகுக்கப்பெற்ற நூல். பின்னாளில் திரட்டு என்னும் பெயரால் வந்துள்ள தொகைநூல்களும் பல. இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் பேராசிரியர் மு. இராக வையங்கார் தாம்தொகுத்த தொகைநூலுக்குப் 'பெருந்தொகை' எனப் பெயர் சூட்டியுள்ளார்.

தொடர்நிலைச் செய்யுள்

தொடர்நிலைச் செய்யுள் என்பதில் இலக்கியவகைகள் அனைத்தையும் அடக்குவர். பொருட்டொடர்நிலை, சொற் றொடர்நிலை என இருவகைப் பாகுபாடு தரப்பட்டுள்ளது. பொருட்டொடர்நிலை என்பது காப்பியம், புராணம், பெருங் காப்பியம் எனவரும் பெருநூல்களாம். சீவகசிந்தாமணி, கம்ப ராமாயணம், யசோதரகாவியம், திருத்தொண்டர் புராணம் முதலியன எல்லாம் இவ்வகையைச் சாரும்.

இப் பெருநூல்களைத் தவிர்த்து வரும் அந்தாதி, பிள்ளைத் தமிழ், ஆற்றுப்படை, அங்கமாலை போல்வன எல்லாம் சிற்றிலக்கியங்களே. முதற் செய்யுளோடு வருஞ்செய்யுள் தொடர்புற அமையும் அந்தாதிவகை இலக்கியங்களாகியஇரட்டை மணிமாலை, மும்மணிமாலை, கலம்பகம் முதலியன எல்லாமும் சொற்றொடர் நிலையே. பிள்ளைத்தமிழ், உலா, பரணி, குறவஞ்சி, பள்ளு போலவரும் பொருளடிப்படை நூல்களும் சிற்றிலக்கியங்களே. இவற்றையெல்லாம் பிரபந்தம் எனவும் வழங்கி வருகிறோம்.

2. செழியதரையர் பிரபந்தங்கள்

செழியதரையர் சிற்றிலக்கியம்

பெரும்பாலான சிற்றிலக்கியங்களுள் தெய்வத்தின்மீதும் பேரரசர், சிற்றரசர், குறுநிலத்தலைவர், சிறப்புநிலைபெற்ற மக்கள் முதலியோரைப் பற்றியும் பாடப்பட்டுள்ளன. பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம், குழுவ நாடகம் போல்வன ஒருசார் மக்களினத்தார் வாழ்வினைச் சுட்டி அமைவன. 'செழியதரையர் பிரபந்தங்கள்' என்னும் இந்த இலக்கியத் தொகுப்பு சின்னசேலம் பகுதியில் குறுநில மன்னராய் ஆண்டுவந்த நால்வரைக் குறித்துப் புலவர் பலர் பாடிய ஆறுநூல்களைக் கொண்டதாகும்.

இத் தொகுப்பில் வாது, நன்னெறி, கோவை, வண்ணம், பிள்ளைத்தமிழ், மஞ்சரி என்னும் அறுவகைப் பொருள்பற்றிய இலக்கியங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் கோவை, வண்ணம், மஞ்சரி என்பன அகப்பொருள் சார்ந்தவை; ஏனைய மூன்றும் புறப்பொருள் பற்றியவை.

இவற்றுள் மஞ்சரிப் பிரபந்தம் கொண்டவன் அந்தாலந் தீர்த்தான்;இவனுடைய மைந்தருள் மூத்தவனாகிய தாகந் தீர்த்த செழியன் பேரில் அமைந்தவை கோவையும் பிள்ளைத்தமிழுமாம். இளையவனாகிய திருவேங்கடசெழியன் மேல் பாடப்பெற்ற நூல் நன்னெறி. திருவேங்கட செழியனின் மைந்தன் கங்காதரச் செழியன்; இவன் மீது திருவாணிவாது, வண்ணம் என்னும் இரு நூல்களும் அமைந்துள்ளன.

இந் நூல்களை எல்லாம் ஒருசேரத் தொகுப்பாய் வெளியிடுவது என்னும் நோக்கம் பின்பு எழுந்தது. அப்பொழுது இந் நூல்களைச்

சுவடி பெயர்த்து எழுதுவித்து ஆராய்ந்து வந்தவர், **'செழிய தரையன் பிரபந்தங்கள்'** எனப் பெயர் சூட்டலாம் என்றனர். அவ்வாறே அமைத்து நூலின் பதிப்புப்பணி தொடங்கலாயிற்று.

செழியதரையன் பிரபந்தங்கள் எனில் எல்லாம் தலைவன் ஒருவனைக் குறித்த பிரபந்தங்கள் என்றுதான் எண்ணத்தோன்றும்; உண்மை நிலை அவ்வாறில்லை. இதற்கு முகவுரை எழுதத் தொடங்குமுன் சுவடிகளை ஆராய்ந்த பொழுது உண்மை புலப் பட்டது. நால்வரைப் பற்றிய நூல்கள் இதில் அடங்கியுள்ளன. எனவே, இத் தொகுப்பைச் செழியதரையன் பிரபந்தங்கள் எனல் அத்துணைப் பொருத்தமின்று.

ஒரு குலத்தவரைக் கூறும் போது சேரர், சோழர், பாண்டியர், முத்தரையர், பல்லவர், கங்கர், நாயக்கர் என்றாற்போலப் பன்மையாய்க் குறிப்பதே மரபாய் இருந்து வருகிறது. ஆகவே, **'செழியதரையர் பிரபந்தங்கள்'** என்று பெயர் சூட்டுவதே இத் தொகுப்பிற்குப் பொருத்தமான பெயராக அமையும். ஆயினும் ஒருமையில் அமைந்துள்ள தலைப்பிற்கு ஏற்கும் வகையில் **'செழிய தரையன்'** என்னும் சிறப்புப்பெயர் பூண்ட மரபினரைக் குறித்த பிரபந்தங்கள் என்று பொருள் கொள்ளலாம். செழியதரையன் எனும் பெரும்பான்மை வழக்கு நோக்கியதாகக்கொள்ளலும் ஆம்.

பிரபந்த அடைவு

முதலில் இப் பிரபந்தங்களைத் தனித்தனி நூல்களாக வெளி யிடும் கருத்து இருந்தமையால் பிரபந்தத் தலைவர்களையும் பொருள்களையும் நோக்கி அடைவு செய்யக்கூடவில்லை. அதோடு எந்த நூல் முதலில் சுவடியிலிருந்து பெயர்த்து எழுதிக் குறிப்புரை எழுதப்பெற்றதோ அதனை முற்பட அச்சுக்கு அனுப்பும் நிலையும் ஆயிற்று. ஆகவே, இப் பிரபந்தங்களை வரலாற்று முறையில் அடைவுசெய்ய இயலவில்லை.

வரலாற்றுமுறை கருதி நூல்களை முறைப்படுத்தி அமைக்கும் போது நூலுள்ளும் அந் நூல் ஏடு எழுதியோர் குறிப்பினுள்ளும் காணப்பெறும் செய்திகளின் அடிப்படையில் அமைத்தல்வேண்டும். இந் நோக்கில் இத் தொகுப்பில் அடங்கிய ஆறு நூல்களும் வரலாற்று முறையில் பின்வருமாறு அடைவு பெறும்.

1. **அந்தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி,**
2. **தாகந்தீர்த்த செழியன் பிள்ளைத்தமிழ்,**
3. **தாகந்தீர்த்த செழியன் கோவை,**

4. திருவேங்கட செழியன் நன்னெறி,
5. கங்காதரச் செழியன் பேரில் திருவாணி வாது,
6. கங்காதரச் செழியன் வண்ணம்.

இனிப் பொருள் அடிப்படையிலும் பிரபந்த வரலாறுகளைத் தழுவியும் அமைப்பதாயின் கோவை, மஞ்சரி, வண்ணம் என்பவை ஒன்றனை அடுத்து ஒன்று வரலாம். அடுத்துப் பிள்ளைத்தமிழ் வருதல் வேண்டும். பாட்டியல் நூல்கள், 'பிள்ளைத் தமிழ் முதல் புராணம் ஈறாக' என்று பிரபந்தங்களைச் சுட்டுவதால் 'பிள்ளைத் தமிழ்' எல்லாப் பிரபந்தங்களுக்கும் முற்பட வைக்கும் நிலை பெறுகிறது.

திருவாணிவாது பள்ளுப் பிரபந்தங்களில் காணும் பள்ளியர் தருக்கமுறை போலக் கல்வி, செல்வம் என்னும் இரண்டும் குறித்துக் கலைமகளும் திருமகளும் வாதிடுவதாக அமைகிறது. எனவே, இதனை ஈற்றயல் பிரபந்தமாக வைக்கலாம்.

நன்னெறி துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் நன்னெறியை நினைவூட்டும் வகையில் உள்ளது; சிவப்பிரகாசரின் நன்னெறி போலவே அறப்பொருளைக் கூறுவது. சுவாமிகளின் நன்னெறியோ வெண்பாவில் அமைந்தது; இந் நூலோ கட்டளைக் கலித்துறைப் பாவில் அமைந்துள்ளது. சுவாமிகளின் நன்னெறியில் அங்கங்கே மகடூஉ முன்னிலை இடம்பெறுகிறது; இந் நூலிலோ திருவேங்கட செழியனை விளித்து அறங்கூறும் பாங்கு அமைந்துள்ளது. இவ்வகை அமைப்புடைய இதனை இறுதிப் பிரபந்தமாக வைக்கலாம்.

இனி, இவற்றைப் பொருட்போக்கு, பிரபந்த மரபு அடிப் படையில் பார்க்கும் போது பிள்ளைத்தமிழ், கோவை, மஞ்சரி, வண்ணம், வாது, நன்னெறி என அமைத்தல் பொருத்தமாகும்.

3. செழியதரையர் வரலாறு

செழியதரையர்

இப் பிரபந்தங்களின் தலைவர்களாகிய செழியதரையர் வரலாறு பற்றிய பல குறிப்புகள் அவர்களைப் பற்றிய நூல்களில் அங்கங்கே காணப்படுகின்றன. ஏடுகளில் காணப்பெறும் ஏடெழுதி யோர் குறிப்புகளாலும் சில செய்திகள் தெரிய வருகின்றன.

மஞ்சரிப் பிரபந்தத்தில் இக் குலத்தினரைக் குறித்த செய்திகள் முறைப்பட உள்ளன (கண்ணி. 157–181).

செழியதரையர் என்னும் பெயர் ஏடு எழுதியோர் தரும் குறிப்புகளில் காணப்படுகின்றது. 'செழியதரையர் கோவை' 'கெங்காதரச் செழியதரைய நயினார் பேரில் வண்ணம்' 'தாகந் தீர்த்த செழியதரைய நயினாரவர்கள் துரையவர்கள் பேரில் பிள்ளைத்தமிழ்' எனக் கோவை, வண்ணம், பிள்ளைத்தமிழ் நூல் களில் ஏடெழுதியோர் குறிப்புக் காண்கிறது. பிரபந்தங்களில் இப் பெயர் மிகமிக அருகியே காணப்படுகிறது. பிள்ளைத்தமிழின் காப்புச் செய்யுளில் 'செழிய தரையத் திலகன்' என வந்துள்ளது. மேலும் இப் பிள்ளைத்தமிழில், 'செழியர் வரோதயன்' (1), 'செழியர் அதிபதி'(4), 'செழியதரையனைத் தாகந் தீர்த்தானை' (8), 'செழியகுல சேகரா' (11), 'செழியர்வழி நாயகன்' (51), 'செழியர் அதிபதி' (59), 'செழியர்தம் வழிமுதல்' (98) என்று இவ்வாறு செழியர், செழியதரையர் என்னும் குடிப்பெயர் சுட்டிப் பேசப்படுதலும் நோக்கத்தக்கது. முனையர், முனையரையர் என்றாற்போலச் செழியர், செழியதரையர் என்னும் பெயர்கள் காணப்படுகின்றன.

செழியதரையர் என்னும் பெயர் முத்தரையர் என்றாற்போல உள்ளது. இப் பெயர்களில் 'தரையர்' என அவர்கள் ஆண்ட நிலப்பகுதியைக் குறிப்பதுபோல்தோன்றுகிறது. ஆனால் செழியன், செழியர் என்னும் பெயர்களும் செழியா என்னும் விளிப்பெயரும் நூல்களில் மிகுந்துவரக் காண்கிறோம். தாகந்தீர்த்த செழியன் கோவையில் 32இடங்களில் செழியன் என்னும் பெயர் வந்துள்ளது. 'செழியன்' என்பது இவர்தம் குலப்பெயராகும். செழியர்குலேசன் (68), செழியர்கோன் (63) எனத் திருவாணிவாது நூலில் சுட்டப்படுதல் காணலாம்.

செழியன் என்னும் பெயர்

'செழியன்' என்னும் பெயர் பாண்டியர்களைக் குறித்து வழங்கும் பெயராகும். 'கொற்கையிலிருந்த இளஞ்செழியன்' (சிலப். உரை பெறுகட்டுரை 1), 'ஏந்துவாட் செழியன்' (சிலப். 14:5), 'செழிய வாழி தென்னவ வாழி' (சிலப்.20:32)'அரைசர் பெருமான்,அடுபோர்ச் செழியன்' (சிலப்.22:3) என்று இவ்வாறு செழியன் என்னும் பெயர் பாண்டியரைக் குறித்துச் சிலப்பதிகாரத்தில் வந்துள்ளது.

சின்னசேலம் பகுதியை ஆண்ட குறுநில மன்னர்களாகிய இக் குடியினருக்குப் பாண்டியர்க்கு உரித்தான 'செழியன்' என்னும் பெயர் எப்படி வந்து பொருந்தியது என்பது சிந்தனைக்கு உரியது. ஒருகால் இக் குடியினரின் மூதாதை பாண்டியர் குலத்திலிருந்து பிரிந்து வந்த ஒரு கிளையாக இருக்கலாம். அன்றிப் பாண்டியரின் கீழ்ச் சிற்றரசாய் அடங்கி வாழ்ந்தமையின் பேரரசன் குடிப் பெயரையும் இணைத்துக் கொண்டிருக்கலாம். பாண்டிய மன்னர் இக் குலத்தாருக்கு வழங்கிய சிறப்புப் பெயராகவும் இருக்கலாம். எவ்வாறாயினும் புலவர் பெருமக்கள் இக் குடியினரைச் செழியன் குலத்தவராகவே பாராட்டிப் பேசுகின்றனர். பாண்டியர்க்கு உரிய 'மாறன்' என்னும் பெயரும் இவர்களுக்குச் சுட்டிக் கூறப் படுகிறது. 'தமிழ் நேயம் மிக்க சீர் மாறன்' (கோவை. 33)எனத் தாகந்தீர்த்த செழியன் சிறப்பிக்கப்பட்டுள்ளான்.

பின்வரும் தனிப்பாடலில் செழியதரையரைப் பாண்டியருடன் ஒப்பிட்டுப் பேசுவது காணலாம்.

''சேலநக ரேமதுரை; சீர்ச்செழிய னேசெழியன்;
சாலவதில் உள்ளாரே சங்கத்தார்—சீலமிகும்
கம்பாள தேவன் கடம்பவன வாசர்;
தம்பாரி மீனாட்சித் தாய்!''

இதனால் சேலம் செழியதரையரைப் பாண்டியராகவே புலவர் போற்றிவந்தமை புலனாகும்.

செந்தமிழ் வளர்த்த பாண்டியரைப் போலவே செழியதரையரும் தமிழ் மொழியைப் போற்றிப் புலவரைப் புரந்தனர் எனக் கவிஞர் சிறப்பித்துள்ளனர்.

''பொதியப் பசுஞ்சாந்தும் தமிழும் கமழும்
திருநாடா'' (44)
''தென்மலைச் செந்தமிழ்க்கு அடிமை'' (2)
''தென்தமிழ்ச் செழியன்'' (3)
''முத்தமிழ்க் கும்போதயன்'' (97)
''சங்கத் தமிழ் கொண்டு விலைதரும்
தமிழ் வள்ளல்'' (34)

என்றெல்லாம் பிள்ளைத்தமிழில் இம் மரபினர் தமிழின்பால் பற்றுக் கொண்டு முத்தமிழையும் முறையாய் வளர்த்துப் புலவரை போற்றியமை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

இக் குலத்தார்க்கு 'நயினார்' என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. 'சேலம் திருவேங்கட நயினாரவர்கள் பேரில் நன்னெறி

கெங்காதர நயினார் பேரில் பத்தியகாவியம், தாகந்தீர்த்த செழிய தரைய நயினாரவர்கள் துரையவர்கள் பேரில் பிள்ளைத்திருநாமம்' என்று இவ்வாறு ஏடெழுதுவார் 'நயினார்' என்னும் சிறப்புப் பெயரிட்டு எழுதுகின்றனர். செழியதரையன் பரம்பரையினர் இன்றும் சின்னசேலத்தில் உள்ளனர். பிற்காலத்தில் பாளையக் காரராய் மாறிவிட்ட அவ் வழியினர் 'நயினார்' என்னும் பட்டப் பெயரை வைத்துக் கொண்டுள்ளனர். சின்னசேலம் பகுதியில் இக் குடிவழியினர் நயினார் என்னும் பெயருடன் வாழ்தலைக் குறித்துத் திரு. அடிகளாசிரியர் எழுத்து வாயிலாகத் தெரிவித் துள்ளார்.

செழியதரையர் நாடு

செழியதரைய மரபினர் ஆண்ட நாடு மகதை நாடு எனப் படுகிறது. இது நடுநாட்டின் மேற்குப் பகுதியாகும். நடுநாடு என்பதனைப் 'பெண்ணை நாடு' என்றும் உரைப்பர். தொண்டை நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் இடைப்பட்ட பகுதியாதலின் இது நடுநாடு எனப்பட்டது. தென்பெண்ணையாற்றினால் வளம் பெறும் நாடாதலின் பெண்ணைநாடு என்றும் குறிப்பிடலாயினர். வில்லிபுத்தூராழ்வார் தாம் பாடிய பாரதத்தில் இம் மகதை நாட்டு மன்னன் வக்கபாகை வரபதியாட்கொண்டானைச் சிறப் பித்துள்ளார். இவன் பாரதம் பாட அவரைத் தூண்டியவனாவன். எனவே, கி. பி. 14 ஆம் நூற்றாண்டுத் தொடக்கமாகவே சிற்றரசர் ஆட்சிக்கு உட்பட்ட நாடு இது என்பது தெளிவு. இந் நாட்டை ஆண்ட வாணகோவரையர் என்பாரைக் குறித்த தனிப் பாடல்கள் சில உள்ளன. இன்றைய தென்னார்க்காடு, திருச்சி, சேலம் மாவட்டங்களின் சில பகுதிகள் சேர்ந்ததே மகதைநாடு.

''செங்கம்மா மேற்கு வடக்குநதி சேயாறு
பொங்கு கடல்கிழக்கு பூண்முலையாய்—சங்கமூர்
வெள்ளாறு தெற்கு விளங்கு மகதையருக்கு
உள்ளான நாடுஎன்று உரை''

என்னும் ஒரு தனிப்பாடலை 'மேழிவிளக்கம்' என்னும் நூலில் பெரும்புலவர் வே. ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர் அவர்கள் அடிக்குறிப்பில் எடுத்துக் காட்டியுள்ளார் (மேழி விளக்கம், கண்ணி 571—ன் அடிக்குறிப்பு). இப் பாடல் மகதை நாட்டின் நான்கு எல்லையையும் குறிப்பிடுகிறது.

வடநாட்டில் மகதைநாடு ஒன்று உள்ளமையால் இவருடைய நாட்டைத் 'தென்மகதை' என்று புலவர் போற்றுகின்றனர்.

'மகதைத் திருநாடன்' (பிள்ளை. 24) எனப் பொதுவாகச் சுட்டுதலோடு.

''தென்மகதை நாட்டினான்'' (மஞ்சரி. 143),

''தென்மகதை நாடாளன் வருகவே'' (பிள்ளை. 56)

என்றும் சிறப்பித்துரைக்கின்றனர்.

மகதை நாட்டு நதி

இம் மகதை நாட்டில் ஓடும் நதி மணிமுத்தா நதியாகும்.

''உவாவால் தடிகறங்க ஊறுமதம் மாறா
நிவாஆ றுடைய நெடுமால்—சிவாகமத்துச்
சாற்றும் பெருந்தீர்த்தம் தாழ்வார் பவம்தீர்த்துஅங்கு
ஆற்றும் திருமணிமுத் தாற்றினான்''

என நிவா என்னும் பெயருடைய மணிமுத்தாற்றை மஞ்சரி போற்றுகிறது (141–142). பிள்ளைத் தமிழிலும், 'மணிமுத்தா நதியான்' (25), 'திருமுத்தா நதி காவலா!' (32), 'முத்தா நதீசன்' (97), 'முத்தா நிவா ஆறு எனும் பனித்துறையான்'(99) என்று இவ்வாறு மணிமுத்தாறு இவருக்கு உரியதாகச் சிறப்பிக்கப் பட்டிருத்தல் காணலாம்.

செழியதரைய மரபினர்

செழியதரைய மரபினர் முதலில் திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டத்தில் உள்ள வெண்பாவூரை அடுத்துவிளங்கும் பாலையூரில் வாழ்ந்து வந்தனர். அப்பொழுது இருந்த அரசியல் ஆதரவால் அங்கிருந்து பெயர்ந்து சின்னசேலம் பகுதிக்கும் பாளையக்காரராயினர். சின்னசேலம் அவர்களுக்குத் தலைநக ராயிற்று. 72 கிராமங்கள் அப் பாளையக்காரருக்கு உரிமையா யிருந்தன. மேலே சுட்டிய பாலையூரேயன்றித் தாகந்தீர்த்தான் புரம் என்னும் கல்லடியாபுரமும், பொன்பரப்பியும், உலகங் காத்தான் என வழங்கும் உலகியல் நல்லூரும் தலைமையான ஊர்களாகும். கள்ளக்குறிச்சி என இப்பொழுது வழங்கும் கல்லைக் குறிச்சியும் இவர்களுக்குரிய முக்கிய பதியாயிருந்தது. 'கல்லைக் குறிச்சிப் பெரும் பத்தில் கோமான்' என்று போற்றுகிறது மஞ்சரி நூல் (144). திருவாணிவாது என்னும் நூல், 'கோலம்ஆர் இனிய கல்லைக் குறிச்சிநல் நாடு அதன் பேர்' (11) எனக் கங்காதரச் செழியனுக்குரிய நாடாகக் குறிப்பிடுகிறது. இதற்குரிய தலை நகரம் உலகை என்னும் உலகாபுரியாகும். இச் செழியதரைய மரபினர் தமக்குரித்தான பாளையப்பட்டினைச் சிறுபிரிவுகளாகப்

பகுத்துக் கொண்டு வெவ்வேறு ஊர்களில் இருந்து ஆண்டனர் என்னும் செய்தியும் இதனால் புலப்படுகிறது.

மூன்று முதன்மை ஊர்கள்

சேலம், உலகாபுரி, பாலையூர் என்னும் மூன்று ஊர்களுமே முக்கிய நகரங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அந்தாலந்தீர்த்தானுக்குத் தசாங்கம் உரைக்குமிடத்து ஊர்ப் பெயர்களாகப் 'பாலையான்' (145,146), 'சேலத்தான்' (147, 148), 'உலகையான்' (149–151) எனப் பாலையூர், சேலம், உலகாபுரி என்னும் மூன்று ஊர்களையும் சுட்டி உரைக்கப்படுகிறது. தாகந்தீர்த்த செழியன் பிள்ளைத்தமிழின் வாழ்த்துப் பாடல், 'சேலம் திருப்பாலை உலகைச் செழும்பதி செழித்து வாழி' என மூன்று ஊர்களையும் ஒருசேர வைத்து வாழ்த்துகிறது. இவற்றை நோக்குமிடத்துச் சேலம் தலைமை நகராகவும் ஏனைய இரண்டும் அதற்கு அடுத்தபடியாக இம் மரபினர் தலைமை பூண்டு ஆண்ட நகர்களாகவும் கருதலாகும். சேலமே இவர்களுக்கு முதன்மை நகரமாய் இருந்தது என்பது இவரைக் குறித்த பிரபந்த ஏட்டுக் குறிப்புகளில் 'சேலத்தார் பிரபந்தம், சேலத்தார் நன்னெறிப் பிரபந்தம், சேலத்தார் பிள்ளைத்தமிழ், சேலத்தார் மஞ்சரி' எனக் காணப் படுதல் கொண்டும் தெளியலாகும்.

செழியர் குலம்

செழியதரையர் வேளாள மரபினர்; வேளாளருள்ளும் உயர்ந்த குடியினர். வேளாளரைக் கங்கைபுத்திரர், கங்கை குலத்தார் எனக் குறிப்பிடுவது மரபு. கங்கைக்குத் திரிபதகை, பாகீரதி, சானவி, சுரநதி முதலியனவாகப் பல பெயர்கள் உண்டு.

> ''பலசுவை யினும்அதிமதுரிய கவிகொடு
> பாடும் பாட்டுள வேளாள'' (தா.பி.29),
> ''திரிபதகை உதவுகுல திலக'' (தா.பி. 47–50),
> ''திரிபதகை குலதிலகன் வருகவே'' (தா.பி. 52),
> ''இணையில் திரிபதகை மரபுதிகழவருசதுரன்''(தா.பி.12),
> ''தடவரை அரவினர் சடைவரு பகிரதி
> சாருங் கோத்திர தாலேலோ''! (தா. பி. 29),

அந்தகக்கவி வீரராகவ முதலியார் பாடிய தனிப்பாடலில் 'திரிபதகை குலசேகரன்' என்று போற்றியுள்ளார்.

வேளாள மரபினருக்கு உரித்தான குவளைமாலையே இவர்களுக்குரிய மாலையாகவும் குறிக்கப்பட்டுள்ளது.

''சங்குவளை மாலைகொடு தாகமா லைக்கொடுக்கும்
செங்குவளை மாலைத் திருமார்பன்''

என அந்தாலந் தீர்த்தான் போற்றப்படுகிறான்(மஞ்சரி. 152).

''சென்னிமிசை வைத்திருக்கும் திங்கட்கு உறவான
வன்னக் குவளை மலர்த்தாரன்'' (நன்னெறி. கா. 2),

''வெறியாரும் தார்க்குவளைச் செழியா'' (நன்னெறி.13),

''விரையோடும் தார்க்குவளைச் செழியா'' (நன்னெறி.22)

என்று நன்னெறிப் பிரபந்தம் குவளை மாலையைச் சிறப்பித்துப் பேசுகிறது. இவரைக் குறித்த பிற பிரபந்தங்கள் சிலவற்றிலும் இக் குவளைமாலை பற்றிய குறிப்பு உண்டு.

இவருக்கு உரிய கொடி மேழிக்கொடியாகும்; அதாவது கலப்பைக் கொடி; வேளாளரின் உழுதொழில் முதற்கருவி.

''ஏமக் குவலய மாலிகை வரைய ருவிநிகர் தோளினன்
இணையில் திரிபதகை மரபு திகழவரு
சதுரன் பூமகள் இசைபெறு சபையான்
மேழிக் கொடியினன் நாவலர் மிடிகள் கெடுபுகவே பொருள்
மிகவு முதவுகுண எழிலி''

என்று கங்காதரச் செழியன் வண்ணத்தில் (11–15) இவருக்கு உரிய குவளை மாலை, கங்கைமரபு, மேழிக்கொடி ஆகியவை சுட்டப்பட்டுள்ளமை காணலாம்.

செழியதரையர் சமயம்

செழியதரையர் சைவசமயத்தினர்;சிவபெருமானிடம் பெரும் பத்தி பூண்டவர். அப் பெருமானுக்கு ஆலயங்கள் எடுத்தனர்; வழிபாடும் விழாக்களும் சிறக்கச் செய்துவந்தனர்.சின்னசேலத்தில் இம் மரபினரால் கட்டப்பெற்ற சிவன்கோயில் ஒன்று உண்டு. இத் திருக்கோயிலில் இரண்டு சிவலிங்கங்கள் எழுந்தருளச் செய்யப் பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று கங்காதேசுவரர்–காமாட்சியம்மை சன்னிதி; மற்றொன்று விசுவநாதேசுவரர் – விசாலாட்சியம்மை சன்னிதி. உலகை நல்லூரில் அந்தாலந்தீர்த்தான் சிவாலயம் ஒன்று எடுப்பித்த செய்தியைத் திருவாணி வாது நூல் தெளிவிக்கிறது.

இம் மரபினரின் சமயகுரு கம்பாள தேவர் ஆவார்; இவர் செஞ்சிப்பதியில் வாழ்ந்திருந்தவர்; வீரசைவத் துறவி. இவரைச்

சின்ன சேலத்திற்கு இம் மரபினர் அழைத்து வந்து போற்றிய செய்தி தெரியவருகிறது. செஞ்சியிலிருந்து வந்த இவர் முதலில் சிவகெங்கை என்னும் இடத்தில் தங்கியிருந்தார் என்றும், பின்னர் இவர்தம் தலைநகராகிய சின்னசேலத்திற்கு வந்து இம் மரபினர் அமைத்துத் தந்த திருமடத்தில் வாழ்ந்தனர் என்றும் தெரியவருகிறது. 'கம்பாள சுவாமியார் பிள்ளைத்தமிழ்' என்னும் நூல் இக் குருவின்மேல் பாடப்பெற்றதாகும்.

''பைங்கூழ் வளர்ந்து விளைகின்ற
பணைசூழ் இஞ்சியுறு செஞ்சிப்
பதிகம் பாள தேவ னென்னும்
பரம குருநா தனைப் புரக்க'' (காப்பு. 2)

என்றும்,

''சீரார் கமலப் பொகுட்டுறையும்
செழுநாண் மறையோன் தெரிந்துரைத்த
செய்ய சுருதி முழுதுணர்ந்து
தெளியார் சைவோத் தரமென்றே
பேரார் வீர சைவநெறி
பிறங்கச் சிவகங் கையில்தங்கு
பெம்மான் கம்பா ளப்பெயர்கொள்
பெருமான் தனைநா டொறுங்காக்க'' (1)

என்றும்,

''சேலநகரிற் குடிகொள் சிவமருள் சித்தேச
செங்கீரை யாடி யருளே'' (செங். 4)

என்றும் பிள்ளைத்தமிழ் நூல் இவர் செஞ்சியிலிருந்து சேலம் வந்து குடிகொண்ட செய்தியைப் போற்றுகிறது. பிள்ளைத்தமிழில் இக் குருநாதரைப் பற்றிய செய்திகள் பல உள்ளன.

செழியதரையர் குலமுறை

செழியதரையர் கொடிவழியில் மூன்று தலைமுறையாரைப் பற்றிய செய்திகள் தெளிவாகத் தெரிய வருகின்றன. இவர்கள் பெயரில் சில பிரபந்தங்களும் உள்ளன. இவற்றுள் அந்தாலந்தீர்த்த செழியன் பேரில் அமைந்த மஞ்சரிப் பிரபந்தத்தில்தான் இவர்தம் கொடிவழி பற்றிய செய்திகளைக் கவிஞர் முறைப்படப் பாடியுள்ளார் (கண்ணி 181).

அந்தாலந்தீர்த்த செழியனின் முந்தையராக இருவர் குறிக்கப் படுகின்றனர். ஒருவர் இராய செழியன்; இவர் உயர்ந்தாராய்ப் புகழ்படைத்த புலவரின் அமுதத் தமிழ்மாலை பெற்ற சிறப்புடையவர் எனக் குறிக்கப்படுகிறார். இவர் பெற்ற தமிழ்மாலை எது

என்பது இப்பொழுது தெரியவில்லை. மற்றொருவர் கொடை வள்ளலாய்த் திகழ்ந்த தியாகப்பிரமன் (158—160).

அந்தாலந்தீர்த்தானின் பாட்டன்மாராகச் சிற்றாஞ்செழியன், திருவேங்கடவன் என இருவர் குறிக்கப்பட்டுள்ளனர். இவர்களுள் சிற்றாஞ்செழியன் மூவெழு வள்ளல்களின் பின்வந்த இருபத்திரண்டாம் வள்ளல் எனப் போற்றப்படுகிறார். திருவேங்கடவனையும் காரணைய கொடைவள்ளலாகவே மஞ்சரி போற்றுகிறது. இவ்விருவர்க்கும் பேரன் என வந்த பிரபுராயன் அந்தாலந்தீர்த்தான். இவ்விருவரையும் முறையே அந்தாலனுக்குத் தந்தை வழி, தாய்வழிப் பாட்டனாராகக் கொள்ளலாம்.

அந்தாலனின் தந்தை பெயர் இருள்நீக்கும் செழியன் என்பது. இவர் தமிழ் நாட்டு முடிமன்னர் மூவரும் மூவெழு வள்ளல்களும் அரசாண்டு மறைந்தபின்பு யாவரையும் முத்தமிழையும் பலகலைகளையும் தாழ்ந்து போகாமல் வாழ்வித்த பெருமையர் எனப் பேசப்படுகிறார். 'நிலம் விளங்கத் தோன்றும் இருள் நீக்கும் செழியன் குலம் விளங்கத் தோன்றும் குமாரன் அந்தாலன்' (163, 164). அந்தாலனின் மாமனின் பெயர் பூலோக நாதன் என்பதாம்.

அந்தாலனின் தமையன்மாராக மெய்க்கும் பெருமாள், சூரப்பவாணன், தாகந்தீர்த்தான் என்னும் மூவர் குறிக்கப்பட்டுள்ளனர் (169—173).

இவனுக்குப் புதல்வர் நால்வர். அவராவார்: வினைதீர்த்த செல்வன் (176), தாகந்தீர்த்தான் (177), திருவேங்கடவன் (178), இருள் நீக்கின பெருமாள் (179). இவனுடைய மைத்துனனின் பெயர் உலகுடையான் (181) என்பதாம்.

அந்தாலந்தீர்த்த செழியனின் மகன் தாகந்தீர்த்த செழியன் பேரில் பாடப்பெற்ற பிள்ளைத்தமிழின் ஈற்றில் வரும் வாழ்த்துப் பாடல் அந்தாலந் தீர்த்த செழியனின் புதல்வர் ஐவர் எனக் குறிப்பிட்டு வாழ்த்துகிறது.

''தார்வாழி! உலகுஉய்ய வந்தகா லக்கொண்டல்
அந்தகா லந்தீர்த்தவன்
தந்ததா கந்தீர்த்த செழியனும் இவர்க்குஉயிர்த்
தம்பிதிரு வேங்கடவனும்


ஏர்வாழி! மற்றுஇவற்கு இளவலாம் இருள்நீக்கும்
எம்பிரான் வாழி! இவனுக்கு
இனியஅநு சன்சட்டை யான்வாழி! இங்குஇவர்க்கு
இளையதீர்த் தவனும் வாழி!
சீர்வாழி! ஐவர்க்கும் உற்றதுண ஆம்திருப்
பொன்பரப்பிய நாதனும்
தினம்வாழி! சேலம் திருப்பாலை உலகைச்
செழும்பதி செழித்து வாழி!
பார்வாழி! பத்துஅரசர் கண்டு கட்டாண்மையில்
படைகண்ட சேவகன் எனப்
பரராசர் பாடும்இவர் விருதோடும் தமரோடும்
பதுமநா ளொடும் வாழியே!''

இப் பாடலில் தாகந்தீர்த்த செழியன், திருவேங்கடவன், இருள்நீக்கும் எம்பிரான், சட்டையான், தீர்த்தவன் என்னும் ஐவர் குறிக்கப்படுகின்றனர். மஞ்சரிப் பிரபந்தம் தாகந்தீர்த்த செழியனுக்கு முன்னவனாக வினைதீர்த்த செழியனைக் குறிப்பிடு கிறது. சட்டையான், தீர்த்தவன் என்னும் இறுதியில் குறித்த இருவரைக் குறிப்பிடவில்லை. மஞ்சரிப் பிரபந்தம் தாகந்தீர்த் தானின் தந்தை அந்தாலன்பேரில் அமைந்தது. அந்தப் பிரபந்தம் பாடும்போது வினைதீர்த்த செல்வன் உயிரோடு இருந்திருக்க வேண்டும். சட்டையானும் தீர்த்தவனும் அப்பொழுது பிறக்க வில்லை என்று கொள்ள வேண்டும். வினைதீர்த்த செல்வன் இளமையில் இறந்துபட்டிருக்க வேண்டும். அதனால் அவன் பெயரைப் பின்வந்தோர் குறிப்பிடாமல் போயினர் என்று கொள்வது பொருத்தமே.

குகையூர் முதுபெரும் புலவரும் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் சுவடித்துறையில் இணைப்பேராசிரியராயிருந்து ஓய்வுபெற்ற வரும் ஆகிய திரு. அடிகளாசிரியர் அவர்கள் 1978 ஆம் ஆண்டு இக் குலத்தினரைக் குறித்து எனக்கு எழுதி விடுத்த செய்திகள் வருமாறு:

''அந்தாலந்தீர்த்தானுக்கு ஐவர் புதல்வர் பிறந்தனர்; அவருள் முதல்வனுக்குத் தாகந்தீர்த்த செழியன் என்றும், இரண்டா மவனுக்குத் திருவேங்கட செழியன் என்றும், மூன்றா மவனுக்கு எம்பிரான்செழியன் என்றும், நான்காமவனுக்குச் சட்டைச்செழியன் என்றும், ஐந்தாமவனுக்குத் தீர்த்தான் செழியன் என்றும் பெயராகும். தாகந்தீர்த்த செழியனின் மகன் ஒருவன் அவன் பாட்டன் பெயராகிய அந்தாலந்தீர்த்த

செழியதரையர் கொடிவழி



செழியன் என்னும் பெயரை வைத்துக் கொண்டான். திருவேங்கடச் செழியனுக்குக் கங்காதரச் செழியன், நடராச செழியன் என்று இருபுதல்வர் தோன்றினர். மற்றவர்தம் புதல்வரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை.''

திரு. அடிகளாசிரியரின் குறிப்பு மஞ்சரி, மற்றும் பிள்ளைத் தமிழ் தரும் விளக்கத்துடன் ஒத்திருப்பதோடு அந்தாலனின் பெயரர் மூவரைப்பற்றிய செய்திகளை நமக்குத் தருகிறது. இவர்கள் தந்துள்ள குறிப்பு மரபுவழி வந்த ஒன்று என்பது கங்காதரச் செழியன் பேரிலுள்ள பிரபந்தங்களால் தெளிவு பெறலாகும்.

அந்தாலந்தீர்த்த செழியன்

அந்தாலந்தீர்த்த செழியன் செழியதரையர் பிரபந்தங்களின் வழித் தெரியவருகின்ற அரசர்களுள் முந்தியவன். அந்தாலந் தீர்த்தான் என்பது அந்தகாலந்தீர்த்தான் என்பதன் மரூஉ ஆகும். தாகந்தீர்த்தசெழியன் பிள்ளைத் தமிழ் (102) இவனை 'அந்த காலந்தீர்த்தவன்' என்றே குறிப்பிடுகிறது. அந்தகாலம் என்றால் முடிவு காலம் போன்று அழிவு நேர்ந்த பெரும் பஞ்சகாலம் என்று கொள்ளலாம். தன் கீழ் உள்ள நிலப்பகுதிக்கு, அப் பகுதிவாழ் மக்களுக்கு நேர்ந்த பெருந்தீங்கைப் போக்கியமை குறித்து எல்லோரும் அந்தகாலந்தீர்த்தான், அந்தாலந் தீர்த்தான் என்று பேசலாயினர். சின்னசேலம் பகுதியில் வாழும் மக்கள் 'அந்தாலன்' என்னும் பெயரை இப்பொழுதும் சூட்டிக்கொள்கிறார்களாம். மஞ்சரிப் பிரபந்தத்துள் அந்தாலந் தீர்த்தான், அந்தாலன் என்னும் வழக்குப் பயின்றுள்ளது. அந்தகாலந் தீர்த்தான் என்பது சுருங்கி அந்தாலந் தீர்த்தான், தாலந்தீர்த்தான், அந்தாலன் என வழக்குப் பெறுதல் இயல்பே. அதியமான் நெடுமான் அஞ்சி என்னும் சங்ககாலக் குறுநிலமன்னனின் பெயர் அதிகமான், அதியமான், அதியன், நெடுமான் அஞ்சி, அஞ்சி என்றெல்லாம் புலவர் வாக்கில் சுருங்கி இடம் பெறுதல் போல அந்தகாலந் தீர்த்தான் என்னும் பெயரும் பல வடிவமாற்றத்துடன் வழங்கத் தலைப்பட்டது என்னலாம். இந்தக் காரணப்பெயர் இவனுடைய முன்னோன் ஒருவனுக்கு உரியதாயிருந்தது. அந்தப் பெயர் இவனுக்கு இயற்பெயராயிற்று என்னலாம்.

அந்தகாலம்தீர்த்த செழியனுக்கு 'உலகங் காத்தான்' என ஒரு பெயரும் வழங்குகிறது. இவனுடைய பெயரால் 'உலகங்

காத்தான்' என்னும் ஊர் ஒன்று கள்ளக்குறிச்சி வட்டத்தில் உள்ளது. அவ்வூர் இப்பொழுது 'உலங்காத்தான்' எனச் சிதைந்து வழங்குகிறது. இலக்கியங்களில் இவ்வூர் 'உலகாபுரம், உலகாபுரி, உலகை' என்று வழங்கப்பட்டுள்ளது.

''வாங்கு திகிரி வரையில் பெரிதுஎன்ன
ஓங்கு புரிசை உலகையான்—ஈங்குஅனைத்தும்

பெற்ற தலைமைப் பெரியவள் ஓர்பாகத்து
உற்றபிரான் வைகும் உலகையான்—பெற்றத்தான்

பூசை இயம்இயம்ஆர் பூதலம்ஓர் ஏழினும் போய்
ஓசை அதிரும் உலகையான்'' (149–151)

என்று உலகைநகரை மஞ்சரி நூல் சிறப்பித்துப் பேசுகிறது.

உலகை எனப்படும் உலகநல்லூரில் அந்தாலந் தீர்த்தான் சிவாலயம் ஒன்று எடுப்பித்தான். அந்த ஆலயத்தில் எழுந்தருளி உள்ள இறைவரின் திருநாமம் பொன்பரப்பீசர் என்பது. அம்மையின் திருநாமம் பெரியநாயகி என்பதாம். இத் திருப்பணியைத் திருவாணிவாது என்னும் நூல்,

''உவமைஇல் நலத்தது ஆகும்
உலகினில் வலிய ஊரில்
சிவன்அடி மறவாது ஏத்தும்
செழியன்அந் தாலந் தீர்த்தான்
நவமணி யால்இ ழைத்து
நன்குசெய் மண்ட பத்தில்
குவலயம் புகழ ஈசன்
கோளரி அணையில் உற்றான்'' (15)

என்று போற்றுகிறது.

''புல்கிய நம்பெரிய நாயகிக்குப் பொற்புஆகம்
நல்கியநம் பொன்பரப்பு நாயகற்குத் – தொல்கண்ண

சாயற்குத் தென்உலகைச் சங்கரற்கு நால்வேத
நாயகற்குப் பொன்பரப்பு நாதற்குச் – சேயதிருக்

கோபுரமும் மாமதிளும் கோயிலும் மண்டபமும்
மாபுரமும் தேரும் மணிமறுகும் – தீபமும்

நந்தா வனமும் நளினத் திருக்குளமும்
கந்தா அளகக் கணிகையரும் – நந்தா

விழாவும் சிறப்பும் விமானமும் செம்பொன்
குழாமும் பிறவும் கொடுத்து – வழாமொழியும்

சீறாத் திருமுகமும் செந்தமிழும் சந்ததியும்
மாறாப் பெருவாழ்வும் வாங்கினோன்''

(மஞ்சரி. 183–188)

என்று மஞ்சரிப் பிரபந்தம் அந்தாலன் செய்த திருப்பணிகளைப் பலபடியாகச் சிறப்பித்துப் பேசுகிறது. இவன் பெருவீரனாயும் வள்ளலாயும் திகழ்ந்தான் எனப்புலவரால் போற்றப்பட்டுள்ளான்.

தாகந்தீர்த்தசெழியன்

அந்தாலந்தீர்த்தானின் மக்களுள் மூத்தவனாகிய தாகந்தீர்த்தவனும் தன் தந்தையைப் போலவே புலவர் பலர் போற்ற வாழ்ந்த வள்ளலாய்த் திகழ்ந்தான் என்பது தெரிய வருகிறது. 'தாகந்தீர்த்தான்' என்னும் பெயர் வந்த வரலாறு பற்றி அந்தப் பரம்பரையினர் கூறும் சுவையான செய்தி ஒன்று உள்ளது. அந்தாலனுக்குச் சில குழந்தைகள் பெறப்பெற உடனாகவும் பச்சிளமையிலும் இறந்துபட்டன. எனவே, தாகந்தீர்த்தான் தாய் வயிற்றில் கருவுற்றிருக்கும் போதே அத் தாயைப் பக்கத்தில் உள்ள ஊருக்கு அனுப்பிவைத்து, அங்கேயே குழந்தை பிறக்கத் தக்க முன்னேற்பாடுகளைச் செய்தனராம். அங்குப் பிறந்த இந்தக் குழந்தை தங்கவே தனக்குப் பிள்ளை வேண்டும் என்னும் தாகத்தைத் தீர்த்தான் என்பது கருதித் தாகந்தீர்த்தான் என்று பெயர் வைத்தனராம்.

இதுகுறித்து முதுபெரும் புலவர் திரு. அடிகளாசிரியர் வரைந்துள்ள செய்தி பின்வருமாறு:

> ''தாகந்தீர்த்தான் என்னும் பெயர்க் காரணம் (அப் பரம்பரையினர் என்னிடம் கூறியது) செழியதரையன் பரம்பரையினர் இன்னும் சின்ன சேலத்தில் உள்ளனர். அவர்கள் பிற்காலத்தில் பாளையக்காரராய் மாறிவிட்டனர். 'நயினார்' என்று பட்டப் பெயரை மாற்றிக்கொண்டனர். அந்தாலந் தீர்த்தசெழியனுக்கு மகவுகள் பிறந்துபிறந்து உயிரோடு இராமல் இறந்துகொண்டே வந்தன. தன் மனைவி கருவுற்றிருந்த காலத்தில் தன் ஆட்சிக்கு உட்பட்ட கலடியாபுரம் என்னும் ஊரில் கொண்டுபோய், அங்கே பிரசவத்திற்குத் தங்கச் செய்தான். அங்குப் பிறந்த குழந்தை சாகாமல் இருந்தது. தங்கட்குப் புத்திரர் இல்லை என்ற தாகத்தைத் தீர்த்ததால் அக் குழந்தைக்குத் 'தாகந்தீர்த்தான்' என்று பெயர்சூட்டினர். அந்தக் குழந்தை பிறந்த ஊருக்குத் 'தாகந்தீர்த்தான்புரம்' என்று பெயர் வைத்து வழங்கலாயினர்.''

தாகந்தீர்த்த செழியனைக் குறித்துக் கோவை, பிள்ளைத் தமிழ் என்னும் இரு இலக்கியங்கள் நமக்குக் கிட்டியுள்ளன. பிள்ளைத் தமிழ் நூலுள் இவன் அந்தாலனின் புதல்வன் என்பதை,

''தருநிகராம்அந் தாலந்தீர்த்தான் தனது குமாரன்
செழிய குலேசன் தமிழுல கேசன் தாகந் தீர்த்தான்,'' (5)

''அந்தாலந் தீர்த்தபிரான் அருந்தவத்தின் பயனை,'' (9)

''அந்தாலன் உதவுதா கந்தீர்த்த செழியனுடன்
அம்புலீ ஆடவாவே'' (62)

என்றாற்போலப் பல பாடல்களில் கவிஞர் சுட்டியுள்ளார்.

இந்தத் தாகந்தீர்த்த செழியனை அந்தகக்கவி வீரராகவ முதலியார் சிறப்பித்துப் பாடியுள்ளார். அந்தகக்கவி வீரராகவ முதலியார் இச் செழியனுக்கு விடுத்த சீட்டுக்கவி ஒன்றும், அவன் அது கண்டு பரிசில்தர, மேலும் சில பொருள் வேண்டிப் பாடிய பாடல் ஒன்றும் தமிழ் நாவலர் சரிதையில் (250,251) காணப் படுகின்றன. அவை வருமாறு :

''ஏடா யிரங்கோடி எழுதாது தன்மனத்து
எழுதிப் படித்த விரகன்
எதுசொலினும் அதுவே எனச்சொலும் கவிவீர
ராகவன் விடுக்கும் ஓலை—
சேடாதி பன்சிரம் அசைக்கும் கலாகரன்
திரிபதகை குலசேகரன்
தென்பாலை சேலம் செனித்ததா கந்தீர்த்த
செழியன்எதிர் கொண்டு காண்க!
பாடாத கந்திருவம் எறியாத கந்துகம்
பத்திகோ ணாத கோணம்
பறவாத கொக்குஅனற் பண்ணாத கோடைவெம்
படையாய்த் தொடாத குந்தம்
சூடாத பாடலம் பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாத சடிலம்
சொன்னசொற் சொல்லாத கிள்ளைஒன்று எங்கும்
துதிக்க வரவிட வேணுமே''

''சாலப் பழுத்த மரம்பார்த்து
எறிவர்தண் ணீர்சுரக்கும்
ஞாலத்து அகழ்வர் கறக்கின்ற
ஆவைநற் கால்தளைவர்

நீலக் கடல்விட்டுப் பாலாழி
மத்திட்டு நிற்பர்இந்நீர்
சேலத்து வேந்தன் அகத்தாகந்
தீர்த்த செழியனுக்கே.''

17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அந்தகக்கவி வீரராகவர் போற்றுதலைப் பெற்ற இச் செழியனும் இவன் முன்னோரும் வழியினரும் இந் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது தெரியவரும். இவர்கள்பேரில் பிரபந்தங்கள் பாடிய புலவர்களும் இக் காலத்தவ ராதலும் பெறப்படும்.

திருவேங்கட செழியன்

தாகந்தீர்த்த செழியனின் அடுத்த தம்பி திருவேங்கட செழியன். 'திறைதரப் பெருகுதிரு வேங்கடவன் மெய்த்துணை' என்று தாகந்தீர்த்த செழியன் பிள்ளைத்தமிழில் போற்றப் படுகிறான் இவன்.

திருவேங்கட செழியன் நன்னெறி என்னும் நூல் இவனைப் போற்றுவதாகும். 'சேலம் திருவேங்கட நயினார் அவர்கள் பேரில் நன்னெறி நாற்பது' என்பது ஏட்டுக் குறிப்பு. இந் நூற் பாடல்கள் ஒவ்வொன்றும், 'வீராகரா! உலகைச் செழியா! திருவேங்கடமே!' என்றாற் போல இச் செழியனைக் குறித்த விளியை இறுதியில் கொண்டு பல நீதிகளை எடுத்துரைக்கின்றது. இவன் அந்தாலந் தீர்த்த செழியனின் மைந்தன் என்பதை 'அந்தாலன் மைந்தா' (6, 11) என இந் நூலுள் ஈரிடங்களில் வரும் குறிப்பு வெளிப்படுத்துகிறது. இவனுடைய வீரத்தைக் குறிக்கும் போது கவிஞர் விசயனுக்கும் அபிமனுக்கும் ஒப்பிட்டு உரைக்கிறார்.

''விசையன் எனுஞ் செழியா!'' – 21
''விற்கைத்தல விசையா!'' – 36
''மின்அஞ்சு வாள் அபிமா!'' – 4
''வெய்யவாள் அபிமா!'' – 33

என்பவை கவிஞர் வாக்கு.

இவனுடைய கொண்டத்திறத்தைச் சுட்ட வந்த கவிஞர் 'மேகக்கரகமலச் செழியா' (32) என்று குறிப்பிடுகிறார்; இவன் உலகம் புரந்த பாங்கை, 'மெலியாரை வாழ்வித்து வாழ்செழியா!' என்பதனால் வெளிப்படுத்துகிறார். இவனுடைய தலைநகரைச் சுட்டி, 'உலகைச்செழியா' (26, 34) என்றும், இவனுக்குரிய

மாலையைச் சுட்டி, 'வெறி ஆரும் தார்க்குவளைச் செழியா!' (13), 'விரையோடும் தார்க்குவளைச் செழியா! (22) என்றும் அவர் குறிப்பிடுகிறார். பெரியோர், அறிஞர் புகழச் சிறப்புற வாழ்ந்தவன் இவன் என்பதை, 'மேதைத் தமிழ் புகழும் செழியா!' (9) என்றும், 'மேதாவியர் புகழும் செழியா!' (41) என்றும் வரும் புகழ்மொழிகளால் கவிஞர் வெளிப்படுத்தி யுள்ளார். இவற்றால் இவன் பெருவீரனாய்த் தன் நாட்டைக் காத்து, எளியவர்க்கும் உதவி அவர்களை மேம்படுத்திப் புலவர் புகழும் சிறப்புடையவனாயிருந்தான் என்பது தெரியவரும்.

கங்காதரச் செழியன்

கங்காதரச் செழியனின் பேரில் பாடப் பெற்ற மூன்று நூல்கள் நமக்குக் கிட்டியுள்ளன. அவையாவன: 1. கங்காதரச் செழியன் பேரில் திருவாணிவாது, 2. கங்காதரச் செழியன் பேரில் வண்ணம், 3. கங்காதரச் செழியன் பேரில் பஞ்சதந்திரம். இவற்றுள் முன்னைய இரண்டும் இப் பிரபந்தத் தொகுப்பில் வெளியிடப்பட்டுள்ளன. பஞ்சதந்திரம் இவை போன்ற புகழ் மாலையன்று;அறநெறி உணர்த்தும் கதைகளைக் கொண்டுள்ளது. எனவே இது தனி நூலாக அடுத்து வெளியிடப்படுகிறது.

இப் பஞ்சதந்திர நூலுள் ஏனைய நூல்களை விடவும் இச் செழியனைப் பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. சிறப்பாக இந் நூலின் பாயிரப் பகுதியில் இவன் குடிவழிபற்றிய செய்திகளும் இவனுடைய கல்வி, வீரம், கொடை பற்றிய குறிப்பு களும் இவன் செய்த சமயத்தொண்டு முதலியனவும் குறிக்கப் படுகின்றன. அன்றியும் இந் நூலினுள்ளே பல்வேறு இடங்களில் கவிஞர் உவமை வாயிலாகவும் பிறவாறும் இவனுடைய இயல்பு களையும் பெருமைகளையும் வெளிப்படுத்தியுள்ளார்.

திருவேங்கட செழியன் புதல்வர்களுள் முதல்வன் கங்காதரன். இவன் கலை பல கற்றுப் புகழ்பெற விளங்கினான்.

''அரியதிசை முகங்கொண்டு பலகலைபெற்று
உயிர்உலகம் அளித்தல் செய்து
பொருவில்அறம் படைத்துஇனிய ஒருவாணி
தனைநாவில் பொறுத்த லானே
கரையில்புகழ்க் கடல்வளமும் செழியர்குலா—
திபன்உயர்கங் காத ரன்சீர்
வருதிருவேங் கடநாதன் புதல்வன்என
உலகில்மிக வயங்கி னானே''

என இவன் பேரில் பாடப்பெற்ற பஞ்சதந்திர நூலின் பாயிரப் பகுதிப் பாடல் (7) இவனுடைய கல்விப் பெருமையையும் திருவேங்கட செழியனின் புதல்வன் என்பதனையும் எடுத்துரைக் கிறது.

இவனுடைய தம்பி பெயர் நடராசன் என்பது. இவனும் கல்வியில் சிறந்தவன்; திண்மையுடையவன்; பகைவரை வெல்லும் திறம் வாய்ந்தவன். அறிஞர் பலர் இவனை அடுத்திருந்தனர். கொடைத்திறம் மிக்கவனாயும் இவன் திகழ்ந்தான்.

''உண்மையினால் விரிந்தகலைக் கல்வியினால்
கவிஞரிடத்து உரிமை தன்னால்
திண்மையினால் அடையலரை வெலும்திறலால்
அறிஞர்எலாம் சிறந்து சேரும்
அண்மையினால் இணைதவிர்த்த நடராசன்
தனைத்துணைவன் ஆகப் பெற்ற
வண்மையினால் உலகையில்கங் காதரபூ—
பதிக்குஎவரே மானு வாரே''

என்று கங்காதரச் செழியனின் தம்பி நடராசனின் பண்புகளைப் பாராட்டியுரைக்கிறது பஞ்சதந்திரப் பாயிரப் பகுதிப் பாடல் (8).

மதுரையில் பாண்டியனிடம் வளர்ந்த தமிழ்மகள் இக் கங்காதரச்செழியனை நாடி வந்தனளாம். தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் இவன் போற்றியமையால் இவ்வாறு புகழப்படு கிறான். மற்றும் வடுகு என்னும் தெலுங்கு முதலிய மொழி வல்லவர்களும் இவனைப் போற்றினர். எனவே, இவன் தமிழுடன் பிறமொழியாளர்க்கும் ஆதரவு நல்கினான் என்பது தெரியவரும். இத்தகு சீர்மையை,

''தடமதில்சூழ் திருமதுரைச் செழியனிடத் —
தேவளர்ந்த தமிழ்மா மங்கை
திடமருவு பாலையின்கண் கங்காதரபூ —
பாலன்எனும் செழியர் கோமான்
இடம்உதவி அளித்தமையால் அணிகளொடும்
சிறந்துதனக்கு இணைவேறு இன்றி
வடுகுமுதல் கலையான மடவார்கள்
பலர்புகழ வாழ்கின் றானே''

என்னும் பஞ்சதந்திரப் பாயிரப் பகுதிப் பாடல்(9)தெரிவிக்கிறது.

கங்காதரச் செழியன் பேரில் அமைந்த வண்ணப்பாடலின் முற்பகுதி இவனுடைய இயல்புகளையும் சிறப்புகளையும்

எடுத்துரைக்கிறது. முதலில் சிவபெருமானுடைய திருவடிகளை நினையும் சிவத்தொண்டன் என்று இந்த வண்ணப்பாட்டு கூறுகிறது. அதன்பின் அவனுடைய வாக்குத் தவறாத வாய்மை நிலை சுட்டப்படுகிறது. பின்னர் இவன்தன் வீரம் முதலியன விதந்து பேசப்படுகின்றன.

''ஏமக் குவலய மாலிகை வரைய ருவிநிகர் தோளினன்
இணையில் திரிபதகை மரபு திகழவரு,
சதுரன் பூமகள் இசைபெறு சபையான்
மேழிக் கொடியினன் நாவலர் மிடிகள் கெடுபுக வேபொருள்
மிகவு முதவுகுண வெழிலி திகிரிவரை
விசையுந் தாவிய நடைதரு புகழான்
ஏகிக் கனலிடை யேபழி கழுவி யிடுகுல தீபகன்
இடரு விகடதட கரட கடவருவி
பொழிதந் தாவள வணியுடை யடலான்
கணைதேர்ந்தனு விசயன் மானுவான்''

என்று இவனுடைய குலப்பெருமை, கல்வித்தகுதி, படை, வீரம் முதவியவற்றைப் புகழ்ந்துரைக்கிறார் இவன்பேரில் வண்ணம் பாடிய கவிஞர் (11–20).

இவன் பேரில் அமைந்த மற்றொரு நூலாகிய திருவாணிவாது நூல் இவன் ஆண்ட நாட்டைக் கல்லைக் குறிச்சி நாடு என்று குறிப்பிடுகிறது. இந் நாட்டின் எழிலையும் கங்காதரனின் சிறப்பையும் இருபாடல்களில் கவிஞர் எடுத்துக் காட்டுகின்றார்.

''எங்கணும் சிவால யங்கள்; எங்கணும் கரும்பு வாழை;
மங்கலச் செய்கள் எங்கும்; மறையவர் அகரம் எங்கும்;
பங்கயன் பலநாட் டின்சீர் யாவையும் படைத்துஒ ருங்கே
இங்குவைத் தனனோஎன்ன எழில்படைத்து உளதுஅந் நாடு,''

''சேரலர் செந்நீர் உண்டு,சிரங்களை அலகைக்கு ஈந்து,அங்கு
ஆருயிர் பிரித்துக் கூற்றுக்கு அளித்திடும்இலைகொள் வேலான்
மாரிஒத் தவன்நம் கங்கா தரன்எனும் மன்னர் மன்னன்
ஏர்திகழ் கவிகை நீழல் இனிதுவாழ் திருநல் நாடு'' (9,10)

உலகைநல்லூரில் தன் தந்தையார் எடுத்த பொன்பரப்பீசன் கோயிலில் இவனும் புதிதாகக் காவணம் ஒன்று சமைத்திருந்தான். இக் காவணத்திலே இறைவன் எழுந்தருளியமையை,

''பூண்பல அணிந்த பின்பு பொன்பரப் பீசன்அன்பால்
சேண்பயில் அமரர் பூவில் சிறந்திடும் அன்பர் ஆனோர்
மாண்பொடு வணங்கக் கங்கா தரன்மணித் தூண்கள் நாட்டிக்
காண்புற இனிதுஅ மைத்த காவணம் கருதி வந்தான்'' (17)

என்று கங்காதரன் புதிதாக அமைத்த காவணம் பற்றிய செய்தியைக் குறிப்பிட்டுள்ளார்.

இறைவி உமாதேவியின்முன் கலைமகளும் திருமகளும் கல்வி செல்வங்களின் உயர்வுபற்றி முறையே வாதிட்டபின், அவர்களை நோக்கி அம்மையார் இருவரிடமும் கங்காதரச் செழியனின் சிறப்பினைக் கூறி, இருவரும் அவனிடம் சேர்ந்து, அவனுக்குக் கல்வியும் செல்வமும் ஈந்து சிறப்புச்செய்க என ஆணையிடுகிறாள்.

''என்பல துதிகள் பேசி இருவரும் இறைஞ்சி நின்றார்;
நன்கென உமைம கிழ்ந்து நவிலுவள், ''எமது பாலே
அன்புடை யவன்சே லம்வாழ் அரசன்ஆ தரவி னாலே
மன்பதை புரப்போர் கங்கா தரனிடம் மன்னு வீரே,''
''போம்''என உரைக்க—வெண்டா மரைநறும் பூவின் மாதும்
வாமம்ஆர் இனிய செந்தா மரைமலர் மானும், ''நன்றே
ஆம்இது'' என்று, கங்காத ரனிடம் அமர்ந்து, கல்வி
ஏமுறு செல்வம் ஈந்தே இருவரும் இருக்கின் றாரால்.''

(101,102)

இறைவியின் கட்டளைப்படியே கல்வியும் செல்வமும் கங்கா தரனிடம் கவினுறப் பெருகக் கலைமகளும் திருமகளும் திருவருள் புரிந்தனர் என்று எடுத்துரைக்கிறார்.

சின்னசேலத்தில் சிவபெருமானுக்குக் கங்காதரேசுவரர் ஆலயமும் திருமாலுக்கு வரதராசர்ஆலயமும் இவன்எடுப்பித்தான் என்னும் செய்தி பின்வரும் பஞ்சதந்திரப் பாடல் ஒன்றினால் (6) தெரிய வருகிறது.

''மறைபுகழும் கங்காத ரேசர்இயல்
வாழ்க்கைக்கும் வரத ராசர்
செறிகருணை வாழ்க்கைக்கும் உளமகிழப்
பெருங்கோயில் சிறப்பின் ஈந்து
விறல்பெருகு தன்னுடைய அரசாட்சி
வாடகையை மிகவும் பெற்றான்
மறுவில்கலை வலன்உலகா புரன்கங்கா
தரச்செழிய மன்னர் ஏறே.''

இதனால் சிவநெறியில் பற்றுடைய மரபில்வந்த கங்காதரன் திருமாலுக்கும் கோயில் எடுப்பித்தது இவனுடைய சமயப் பொறைக்குச் சான்றாம். இந்தக் கங்காதர நயினார் உருவச்சிலை சின்னசேலம் கோயிலில் உள்ள செய்தியைத் திரு. அடிகளாசிரியர் கடிதவழி அண்மையில் தெரிவித்துள்ளார். இதனால் மக்கள் சிலை எடுத்துப் போற்றும் சிறப்பும் புகழும் உடையவனாய் இவன் திகழ்ந்தான் என்பது தெரியவரும்.

4. செழியதரையர் பிரபந்தங்கள்—சிலசிறப்புச் செய்திகள்

1. திருவாணிவாது

'வாது' என்றால் தருக்கம் என்பது பொருள். குறிப்பாக இருவர் தம்முள் வினாவும் விடையுமாக இஃது அமையும். பெரும் பாலும் வாதநிலை சமய தத்துவம் குறித்தே அமைகின்றது. மணிமேகலை காஞ்சிமாநகரில் பல்வேறு சமயக் கோட்பாட் டாளருடனும் வாது செய்த நிகழ்ச்சிகளை மணிமேகலைக் காவி யத்துள் காணலாம்.

''சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர்''

என மாணிக்கவாசகர் (திருவா. போற்றி. 52,53) சமய வாதிகளின் நிலையைச் சுட்டுகிறார்.

''இலிங்கத் திட்ட புராணத் தீரும்
சமணரும் சாக்கியரும்
வலிந்து வாதுசெய் வீர்களும் மற்றும்நும்
தெய்வமும் ஆகி நின்றான்'' (திருவாய். 4:1015)

என்று நம்மாழ்வாரும் இந்த வாதத்தில் முக்கியமாகச் சமணர், சாக்கியர் ஈடுபட்டமையைச் சுட்டுகின்றார். முன்னாளில் தருக்க நூல்கள் 'கேசி' என்னும் பெயராலும் வழங்கப்பெற்றன. அமிர்தபதி, பிங்கலகேசி என்பனவும் அஞ்சனகேசி, காலகேசி என்பனவும் யாப்பருங்கலவிருத்தியுள் தரப்பட்டுள்ளன (பக்கம் 487-540). இவற்றுள் 'கேசி' என்று முடிவன நீலகேசியிற் போலத் தருக்கம் பற்றிய காவியங்களாம். குண்டலகேசிக்கு மறுப்பாகத் தோன்றிய நூல் நீலகேசி, 'தருக்கமான ஏகாந்த வாதமும் அநேகாந்தவாதமும் என்பன. அவை குண்டலம், நீலம், பிங்கலம், அஞ்சனம், தத்துவதரிசனம், காலகேசி முதலிய செய்யுட்களுள்ளும் சாங்கியம் முதலிய ஆறு தரிசனங்களுள்ளும் காண்க' என்று யாப்பருங்கல விருத்தி தருக்க நூல்களைக் குறித்து விளக்கம் தருகிறது.

இலக்கிய வகையுள் வரும் தருக்கம், வாது என்பன பாட்டியல் நூல்களில் இடம்பெறாத புதுவகை இலக்கியங்களாம். 'திருவாணி வாது' நூல் கல்வி செல்வம் என்னும் இரண்டு பொருள்களுள் எது சிறந்தது என்பதைப் பொருளாகக் கொண்டது. கல்விக்குரிய தெய்வமாகிய கலைமகளையும் செல்வத்திற்குரிய தெய்வமாகப் போற்றப்படும் திருமகளையும் இவ்விரு பொருள் பற்றி வாதம் புரிவதாகக் கவிஞர் அமைத்துள்ளார்.

சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் தோன்றிய நாடகங்களில் 'தருக்கம்' என்னும் ஒரு பகுதி வருமாறு செய்து, மக்களுடைய சிந்தனையைத் தூண்டும் வகையில் இருபொருள் பற்றிய உயர்வு தாழ்வுகளை வினாவிடை வழியாக விளக்க முற்பட்டுள்ளனர். தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நாடகங்களிலும் பிறர் எழுதிய நாடகங்களிலும் 'தருக்கம்' என்னும் ஒரு பகுதி தக்கதோர் இடத்தில் அமையப்பெற்றிருத்தல் காணலாம்.

காமன் பண்டிகை பற்றி எரிந்த கட்சி, எரியாக் கட்சி என இருவேறு கூறாக நின்று காமன் பண்டிகையில் வாது செய்வது உண்டு. 'ரதி மதன நவரத்தின ஒப்பாரி' என்னும் நூல் சிவன், திருமால் இருவர்தம் இயல்புகளையும் செயல்களையும் சுட்டி வாதம் எதிர் வாதமாக அமைந்துள்ளது. பள்ளுப் பிரபந்தங்களில் வரும் பள்ளியர் ஏசலும் இவ்வகையாய் அமைந்துள்ளமை காணலாம்.

திருவாணி வாது நூல் கல்வி, செல்வம் என்னும் இரண்டின் மேன்மைகளையும் பயன்களையும் தக்க நூலாதாரங்கள் காட்டி நிறுவ முயல்கிறது. சிறப்பாகத் திருக்குறள், நாலடியார், நல்வழி, நீதிநெறி விளக்கம் என்னும் நீதிநூல்கள் எடுத்துக் காட்டப் பட்டுள்ளன. இந் நூல் கங்காதரச் செழியனின் பேரில் அமைந்து அவனுடைய சிறப்புகளை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந் துள்ளது. வெவ்வேறு வகைச் சந்தங்களைக் கொண்ட அறுசீர் விருத்தங்கள் 104 கொண்டது. இந் நூற்பொருள் விளங்கத் தக்க தலைப்புகள் தரப்பட்டுள்ளன. பாவகைப்பற்றிய குறிப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. பாக்களில் காணும் பாடவேறுபாடுகள் அவ்வப் பாடலின் அடி எண், சீர் எண் குறிப்புடன் தரப் பட்டுள்ளன.

கலைமகளின் வருகை குறித்துப் பேசுமிடத்து வேதம், ஆகமம் முதலாக உள்ள எல்லாக் கலைகளையும் அவருடைய அங்கங்க ளாகக் குறிப்பிட்டுக் கவிஞர் போற்றும் திறன் காணத்தக்கது.

''சுருதிஎழிற் சிரம்ஆக, ஆக மங்கள்
துலங்குறுநன் முகம்ஆகப், பரதம் தானே
மருவும்அடி இணையாகச், சங்கீ தம்தான்
வளமலியும் மிடறாக, எழுத்தும் எண்ணும்
வரியொளிசேர் இருவிழிகள் ஆக, மற்றும்
விளங்குறும்அங் கங்களும்அங் கங்கள் ஆகப்
பெரிதுஉயரும் புலவர்கள்நா என்னும் பாத
பீடிகைதொட்டு இனிதுஎழுந்து பெயர்ந்தாள்
மன்னோ.'' (30)

கலைமகளின் திருமுடி வேதம்; ஆகமங்கள் அவளுடைய முகம்; திருவடிகள் இரண்டும் தேசிகம், மார்க்கம் என்னும் இரு பகுப்புடைய கூத்தநூல்; அவளுடைய கழுத்தே சங்கீதம்; அவளுடைய இரு கண்கள் எண்ணும் எழுத்துமே; வேதாங்கங்கள் எனப்படும் சிட்சை முதலிய ஆறும் அவளுடைய பிற அங்கங்களாம். புலவரின் நாவே அவளுக்குரிய பாதபீடிகை. இவ்வாறாக மேற் கண்ட பாடல் உருவகிப்பதனால் எல்லாக் கலைகளும் ஒருங்கு கூடிய ஒரு பேருருவே கலைமகள் திருவுரு என்பது எடுத்துரைக்கப் படுகிறது.

கலைமகளுக்குப் பணிவிடைசெய்து பக்கத்தில் வந்தவர்களைச் சுட்டுமிடத்து வடமொழி, தென்மொழி முதலிய மொழிகள் மற்றும் வித்தைகளையே பெண்களாக உருவகித்துப் பேசுகிறார்.

''வடகலைமாது ஒருபாலும் தென்கலைமாது
ஒருபாலும் மலர்க்கை தாங்கத்
திடமுடைய ஆரியமும் கருநடமும்
தெலுங்கும்மிகு திறத்தைப் போற்றப்
புடவியின்மற் றுளவாய விஞ்சைகளும்
பரிசனமாய்ப் போத வாணி
படிமிசைக்கா வியங்கள்என்னும் பூண்தரித்துஅங்கு
இதிகாசம் பரவ வந்தாள்.'' (31)

இங்கே வடமொழியாகிய சமஸ்கிருதம், பிறஆரிய மொழிகள் ஆகியவற்றையும் தமிழ்மொழியுடன் கன்னடம், தெலுங்கு மொழிகளையும் குறிப்பிட்டுள்ளார். இம்மொழிகள் செழிய தரையர் நாட்டில் பயிலப்பட்டு வந்தன என்றும் இம்மொழி வாணர்களும் அங்கு வாழ்ந்தனர் என்றும் கொள்ளலாம். கலைமகள், திருமகள் ஆகிய இருவருக்கும் உரிய வேறுபெயர்கள் பலவும் இந் நூலுள் அங்கங்கே இடம்பெறுதல் காணலாம்.

கற்றறிந்த புலவர்களால் இலக்கியங்கள் பல ஆக்கப்படுதலைச் சுட்டுமிடத்து, 'உலாமுதல் பரணி கோவை உயர்தல புராணம் ஆகி நிலாவுறும்' (50) என்று குறிப்பிடுகிறார். இதனால் இந் நூலாசிரியர் வாழ்ந்த 17 ஆம் நூற்றாண்டில் சிற்றிலக்கியங் களையே புலவர் பலரும் பாடி வந்தனர் என்னும் செய்தியும் தெரியவரும்.

திருவள்ளுவரை 'வள்ளுவர்' எனக் குறிப்பிட்டதோடு (3) 'வள்ளுவதேவர்' என்றும் சுட்டுகிறார் (45). திருவள்ளுவருக்குரிய வேறுபெயர்களுள் 'தேவர்' என்பதும் ஒன்று. இதுபோலவே

நாலடியார் என்னும் அறநூலை 'நாலடி நானூறு' என்றும் (41) நாலடியாரின் ஆசிரியரை,' நாலடித்தேவர்' என்றும் (61), குறிப் பிடுகிறார். 'தேவர்' என்பது பெரும்பாலும் சமணசமயத்தார் பெயருடனேயே சேர்ந்து வருகிறது. இவற்றால் திருக்குறள், நாலடியார் நூல்களின் ஆசிரியர் சமணசமயம் சார்ந்தவர் என்னும் கருத்தினராய் இந் நூலாசிரியர் உள்ளார் என்று கொள்ளலாம். குலோத்துங்க சோழன்மீது கலிங்கத்துப்பரணி பாடிய செயங் கொண்டாரை ஒரு சமணத் துறவியாக இந் நூலாசிரியர் கருது கிறார் என்பது 57, 58 ஆம் பாடல்களால் தெரியுவருகிறது.

2. திருவேங்கட செழியன் நன்னெறி

நன்னெறியாவது நல்ல வழி; நேர்மையான நடத்தைக்குரிய அறிவுரைகள் தருவது. இப் பெயர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் படைத்த நன்னெறி என்னும் நாற்பது வெண்பாக்கள் கொண்ட அறநூலை நினைவூட்டுகிறது. இந் நூலுள் 43 பாடல்கள் காணப்படுகின்றன. இதன் ஏட்டுக்குறிப்பில், 'திருவேங்கட நன்னெறி' என்றும், 'செழியன் நன்னெறி' என்றும்,'சேலத்தார் நன்னெறி' என்றும் பெயர் காணப்படுகிறது. 'திருவேங்கடமே' என்னும் விளியுடன் ஒவ்வொரு பாடலும் முற்றுப் பெறுதலினால் 'திருவேங்கட நன்னெறி' என்னும் பெயரே மிகவும் பொருத்த முடையது.

'பல கலையும் வல்ல கவிராயன் வகுத்த பழமொழி' என்றும் ஏட்டுக் குறிப்பில் காணப்படுகிறது. உலகில் வழங்கும் சிலபழமொழி களும் முந்திய அறநூல்களும் இதற்கு மூலமாம். பெரும்பாலான அறநூல்களும் தமிழில் வெண்பாவில் அமைந்திருக்க இந் நூல் கட்டளைக் கலித்துறைப் பாவினால் ஆக்கப்பெற்றுள்ளது. 'அருணாசலக்கவிஞன் பேரன் குழந்தைவேல் கவிஞன்எழுதினான்' என்னும் ஏட்டுக்குறிப்பு ஏடெழுதியோரைச் சுட்டுமாயினும், இங்கே 'எழுதினான்' என்னும் சொல் 'இயற்றினான்' என்னும் பொருள் தொனிக்கும் படியாகவும் உள்ளது. மஞ்சரியின் ஏட்டில் (218) 'நல்லருணாசலம் எழுதினான்' என்றும், அதன்பின்னர், 'இந்தப் பொஸ்தகம் எழுதினவன் கனகசபைக் கவிஞன்' என்றும் உள்ள குறிப்பும் இதனுடன் ஒப்பிட்டுக் காணத்தகும். எனவே, இந் நன்னெறியை ஆக்கியோன் குழந்தைவேல் கவிஞன் என்று ஊகிக்கவும் இடமுண்டு.

இந் நூலின் காப்புச் செய்யுளில் 'கரிமுகவன் இக் கதைக்குக் காப்பு' என்று நூல் என்னும் பொருளில் 'கதை' என்னும்

சொல்லைக் கவிஞர் ஆண்டுள்ளார். காதா, காதை என்றால் பாட்டையும் குறிக்கும். ஆகவே, பாட்டு என்பதிலிருந்து பாட்டாலாகிய நூலைக்குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தமிழைக் கற்றோர் கல்விச் செருக்கினால் பிறரை மதியாமல் உரைப்பர் என்னும் உலகியல் நிகழ்சி ஒன்றை,

''கறுப்பான போரிடை வீரரும்,
காமத்தில் கன்னியரும்,
மறுப்பாடு இலாத தமிழைக்கற்
றோரும்,நல் வாலிபத்தில்
உறுப்பான மைந்தரும் வாய்மதி–
யாமல் உரைப்பர்; அச்சொல்
வெறுப்பார்க ளோ?உரை யாய்;செழி
யா!திரு வேங்கடமே! ''

என்னும் பாடலில் (42) சுட்டியுள்ளார். 'பணியுமாம் என்றும் பெருமை' என்னும் வள்ளுவர் வாக்கிற்கு இணங்க, நெற்பயிர் காய்த்துத் தலைவணங்கி நின்ற காட்சியைத் திருத்தக்க தேவர், 'கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே' என்று குறிப்பிடு கிறார்.அந்நிலை மாறி இந்த ஆசிரியர் காலத்தில் தமிழ்ப் புலவர் தருக்கால் பிறரை மதியாது நின்ற நிலை காணப்படுகிறது. கற்றோரை அடுத்துத் தமிழ் கற்பார் ஆசிரியர் கூறும் கடுஞ்சொற் களையும் தாங்கிக்கொண்டு கல்விப்பயனைப் பெறவேண்டும் என்னும் கருத்தை வெளிப்படுத்தியதாகவும் கொள்ளலாம்.

3. தாகந்தீர்த்த செழியன் கோவை

இந் நூலின் ஏட்டுப் பிரதியில், 'செழியதரையர் கோவை' என்று பெயர் காணப்படுகிறது. நூலுள் பாடல்களிலே தாகந் தீர்த்த செழியனைப் பற்றிய புகழுரைகள் உள்ளன. எனவே, இதனைத் 'தாகந்தீர்த்த செழியன் கோவை' என்று குறிப்பிடுதல் பொருத்தமாம்.

இங்கே சுட்டும் கோவை அகப்பொருட் கோவையாகும். அகப் பொருட் கோவைகளுள் பெரும்பாலானவை நானூறு பாடல் களைக் கொண்டு அமைகின்றன.அதனால் 'நானூற்றுக் கோவை' என்றும் வழங்குவது உண்டு.

இக் கோவை நூலுள் 75 பாடல்களே காணப்படுகின்றன. நூல் முழுமையானதா, குறையா என்று தெரிவிக்கும் குறிப்பு எதுவும் சுவடியில் இல்லை. ஆனால் ஏனைய கோவைகளிற்

போலக் காட்சி, ஐயம், துணிதல் என்னும் துறைப் பெயர்கள் முதலில் உள்ளன. இவை போன்றே ஏட்டில் மேலும் இருபது பாடல்களுக்குத் துறைப்பெயர் சுட்டப்பட்டுள்ளன. ஏட்டில் துறைப்பெயர் சுட்டப்பெறாத பாடல்களுக்குப் பொருட் போக்கினைக் கருதித் துறைப்பெயர்களைப் புதிதாக உரை யாசிரியர் சேர்த்திருக்கிறார். இவை பற்றிய குறிப்பு 222, 223, 224, 227, 228 ஆம் பக்க்ங்களில் அகர நிரலில் தரப்பட்டுள்ளன.

இந்தப் பிரபந்தத்தில் உள்ள 75 பாடல்களும் அகப்பொருட் கோவைப் போக்கில் அமையவில்லை என்று கருதிய உரையாசிரியர் பாடல்களை ஏட்டில் உள்ளபடியான அடைவில் தராமல், தாம் கருதுகின்றபடி மாற்றி அமைத்துள்ளார். எனினும் பக்கம் 222–224-ல் காணப்படும் துறைப்பெயர் அடைவில் புதிய எண்ணும் சுவடியில் இருந்த எண்ணும் சுட்டப்பட்டிருக்கிறது. இதைக் கொண்டு மூல நூலின் அடைவைத் தெரிதலும் கூடும்.

அகப்பொருள் பற்றிக் கோவை முறை நூல்களேயன்றிக் கவிஞர் தாம் கருதிய சிற்சில முக்கிய துறைகளைக் கொண்டு அமைக்கப்பெற்ற நூல்களும் உள. சடகோபராகிய நம்மாழ்வாரின் 'திருவிருத்தம்' நூறு கட்டளைக் கலித்துறைகளைக் கொண்ட அகப்பொருள் நூலே. இது போலவே கல்லாடர் ஆசிரியப்பாவில் வழங்கிய நூறு பாடல்களைக் கொண்ட கல்லாடமும் அகப் பொருளில்துறைகள் சிலவற்றைப் பாடுபொருளாகக் கொண்டதே. ஒருதுறைக்கோவையிலும் கூட நானூறு பாடல் கொண்டனவும் உண்டு; நூறு பாடல்களைக் கொண்டு அமைந்தனவும் உண்டு. இவற்றைப் போல இந்தக் கோவை நூலின் ஆசிரியரும் அகப் பொருள் துறைகளுள் சிலவற்றை மட்டும் பாடியிருத்தலும் கூடும்.

தமிழ்நாவலரைப் புரந்து அவர்களுடைய போற்றுதலைப் பெற்று, வாழ்க்கையில் பல நற்பயன்களைத் தாகந்தீர்த்தான் பெற்றான் என்பதைக் கோவை நூலாசிரியர் சிறப்பாகச் சுட்டி யுள்ளார்.

> ''தமிழ்நாவலவர் பயன்பெற்ற
> சொற்செழியன் தாகந்தீர்த்தவன்'' (68),
>
> ''தமிழ்நாவலவர் பலம் ஆன
> பாலைப்பதித் தாகந்தீர்த்தசெழியன் (71)

என்னும் போற்றுதல்களுடன்,

> ''பலகா வியநூற் பாஒன்றிய செழியன்
> தாகந்தீர்த்தவன்'' (62)

என்றும் சிறப்பிக்கப்படுகிறான். காவிய நூற்பா பல பெற்றவன் என்பது புலவரால் பாடப்பெற்ற புகழுரையைச் சுட்டியவா றாகலாம். இவன் பேரில் காவிய நூல் ஏதேனும் உளதா என்பது பற்றிய செய்தி எதுவும் இப்பொழுது தெரியவில்லை,

''சென்னி சேரன் தென்னன்
பாமாலைஆர் செழியன் தாகந்தீர்த்தவன்'' (43)

என்பது தமிழ்நாட்டு மூவேந்தராலும் போற்றிப்பாடப் பெற்றவன் என்பதைக் குறிக்கும்.

''மூவரும் வள்ளல்ஒரு மூஎழுவ ரும்முதலா
யாவரும் காவல் இகந்ததற்பின்—பாவலரும்
முத்தமிழும் பல்கலையும் மொய்கலியின் மூழ்காமல்
ஒத்த பெருவாழ்வு உதவினோன்''

என மஞ்சரிப் பிரபந்தம் (கண்ணி 163, 164) மூவேந்தர், முதல் இடை கடை எனப் போற்றப்பெற்ற இருபத்தொரு வள்ளல்கள் ஆகியோர் ஆட்சி முடிந்த பின்னர் அந்தாலந்தீர்த்தான் முத்தமிழ் வளர்த்துக் கலைகளை ஆதரித்தான் என்று குறிப்பிடுகிறது. சூழ்நிலை இப்படியிருக்க இவன் மைந்தனாகிய தாகந்தீர்த்த செழியனை மூவேந்தரும் பாமாலை பாடிப் போற்றினர் என்பதை உபசார வழக்காகக் கொள்ள வேண்டும் போலும். சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர் ஆட்சி இவர்காலத்திற்கு முன்பாகவே ஒடுங்கிவிட்டது என்பதே வரலாற்றால் நாம் அறிய வரும் உண்மையாகும்.

4. கங்காதரச் செழியன் வண்ணம்

'கெங்காதரச் செழியதரைய நயினார் பேரில் வண்ணம்' என்பது ஏட்டுக் குறிப்பு. இவ் வண்ணப் பாட்டின் இடையிலே ஒரு பகுதி இல்லை. ஓர் ஏடு இல்லாமையால் மூன்றாங்கலையின் பிற்பகுதி முதல் ஆறாங்கலையின் முற்பகுதி முடியத் தெரிய வில்லை. விடுபட்ட இப் பகுதியில் கங்காதரனின் பெயர் இடம் பெற்றிருக்க வேண்டும். இவ் வண்ணப்பாடல் 'தலைவி இரங்கல்' என்னும் அகப்பொருள்துறைப் பொருளில் அமைந்துள்ளது. இப் பாட்டிற்குரிய சந்தக்குழிப்பு ஏட்டில் தரப்பட்டுள்ளபடியே முதலில் சேர்க்கப்பட்டுள்ளது.

முன்பெல்லாம் பாரத நாட்டைப் பொதுவாக ஐம்பத்தாறு தேசங்களைக் கொண்டது என்று குறிப்பது இலக்கிய வழக்கு. இவ் வண்ணப் பாடல், 'ஏழெட் டெனவொளிர் தேசமும் உடையர் திறையிட வாழ்பவன்' (7) என்னும் கூற்றினைப் புலவர் மரபு

எனக் கொள்ளல் வேண்டுமேயன்றி உண்மையொடுபட்டதன்று. பாரதநாடு முழுவதும் இவனுக்கு அடங்கியிருந்தது என்பதும் புலவரின் உயர்வு நவிற்சியாகத்தான் அமையும்.

5. தாகந்தீர்த்த செழியன் பிள்ளைத்தமிழ்

பிள்ளைத்தமிழுக்குப் 'பிள்ளைத் திருநாமம்' என ஒரு பெயரும் உண்டு. 'தாகந்தீர்த்த செழியதரைய நயினாரவர்கள் துரையவர்கள் பேரில் பிள்ளைத் திருநாமம்' என்று நூலின் இறுதியில் ஏடெழுதியோர் குறிப்புக் காணப்படுகிறது. இப் பிள்ளைத்தமிழ் நூல் ஏனைய பிள்ளைத்தமிழ் நூல்களை ஒப்பவும் பாட்டியல் இலக்கண முறைக்கு ஏற்பவும் அமைந்துள்ளது.

காப்புச்செய்யுள் தவிர 101 செய்யுள்கள் இதில் உள்ளன. பருவத்திற்குப் பத்துப்பாடல் என்னும் வரையறையில் இந் நூல் அமைந்தாலும் காப்புப் பருவத்தில் மட்டும் பதினொரு பாடல்கள் உள்ளன. நூல் முடிவில் வாழ்த்துச் செய்யுள் ஒன்றும் உள்ளது. இதில் அந்தாலந் தீர்த்தானும் அவனுடைய புதல்வர்களும் குறிப்பிடப்பட்டுள்ளனர். இவ் வாழ்த்துச் செய்யுளும் சேரக் காப்பு உட்பட 103 பாடல்கள் இதில் காணப்படும். செய்யுட்களின் முதலில் இடம் பெற்றுள்ள யாப்பு வகைக்குறிப்பும் சந்தக்குழிப்பும் உரையாசிரியரால் இப்பொழுது சேர்க்கப்பட்டனவாகும். இந்நூல் சந்த நயங்களும் பொருட் பொலிவும் பெற்றுக் கற்பார்க்கு உவகை தரும் நடையில் உள்ளமை இதன் தனிச்சிறப்பாகும்.

ஏடெழுதியோர் குறிப்பில், 'தாகந்தீர்த்த செழியதரைய நயினாரவர்கள் துரையவர்கள் பேரில் பிள்ளைத் திருநாமம் சம்பிரதி சேலம் சாமுண்டியாபிள்ளை குமாரன் செல்லமுத்தா பிள்ளை குமாரன் வயித்தியலிங்கம் பிள்ளைத் தமிழ் எழுதி நிறை வேறினது' என்றும், 'கையெழுத்துச் செறுவெங்கைபுரியில் இருக்கும் சித்திலிங்க சுவாமிகள் பேரன் சுப்பராயன்' என்றும் காணப்படுகிறது. இக் குறிப்பினால் வயித்தியலிங்கம் என்பார் எழுதியஏட்டைப் பார்த்துச் சுப்பராயன் எழுதிய ஏடு இது எனக் கொள்ளலாம்.

இப் பிள்ளைத்தமிழின் பிறிதொரு ஏட்டுக் குறிப்பில், 'வாத்தியார் அண்ணாமலைத் தம்பிரான் எழுதின சேலத்தார் பிள்ளைத்தமிழ் பழமொழியை விய ௵ பங்குனி மீ ௰௨ ௳

ஏகாதசி சுக்கிரவாரம் சிரவண நட்சத்திரம் கூடின சுபதினத்தில் சேலம் செழியன் பேரில் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம் அருணாசலக் கவிஞன் மகன் கனகசபை ஏடு எழுதினான்' என்று காணப் படுகிறது. கனகசபை ஏடுஎழுதியவன் என்பது தெளிவாய்த் தெரிய வருகிறது. முன்னர்க் கூறிய அண்ணாமலைத் தம்பிரான் இந் நூலின் ஆசிரியராய் இருத்தல் வேண்டும் என்று கருதலாம்.

6. அந்தாலந்திர்த்த செழியுன் மஞ்சரி

பிள்ளைத்தமிழில் காணப்பெற்ற குறிப்புப் போலவே மஞ்சரி நூலுக்குக் கிட்டிய ஏடுகள் இரண்டில் ஒன்று (218) தரும் குறிப்பு உள்ளது.

> ''இந்த நேர்மையாகிய மஞ்சரி உலகுபுகழ் சேலத்துத் துரந்தரன் அந்தாலந்தீர்த்தான் பேரில் செய்த உலாப் பலகலையும் வல்ல கவிராயன் வகுத்த பழமொழியை பிரமோதூத ௵ புரட்டாசி மீ ௰சஉ மங்களவாரம் நல்லருணாசலம் எழுதினான். இந்த மஞ்சரிப் பிரபந்தம் விய ௵ மாசி மீ உ௫ உ புதவாரம் தசமி திதி திருவாதிரை நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் எழுதினது. இந்தப் பொஸ்தகம் எழுதினவன் கனகசபைக் கவிஞன்''

என்று காணப்படுகிறது. பிள்ளைத்தமிழ் ஏடும் இக்கனகசபைக் கவிஞன் எழுதியதே. நூல் எழுதியவராகக் குறிக்கப்பெறும் கவிராயனின் பெயர் எது என்பது தெரிவிக்கப்படவில்லை. பிரமோதூத வருடத்தில் ஏடு எழுதியவர் பெயர் அருணாசலம். அதனைப் பார்த்துக் கனகசபை 15 வருடங்களுக்குப் பின் விய வருடத்தில் எழுதினான் என்பது தெரியவருகிறது.

மஞ்சரிக்குரிய மற்றொரு ஏடு சாதராண வருடம் எழுதப் பெற்றது. இங்குக் குறிப்பிடப் பெற்ற பிரமோதூத ஆண்டு எழுதப்பெற்ற முதல் ஏட்டுக்கு 40 ஆண்டுகளுக்குப் பிற்பட்டு எழுதப்பட்டது இது. இந்த ஓர் ஏட்டின் துணையுடன் ஆராய்ந்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் நான் பணிபுரிந்து வந்தபோது, 1978 ஆம் ஆண்டு 'தமிழாய்வு' ஏழாம் தொகுதியில் மூல பாடத்தை வெளியிட்டேன். இப்போது மேலும் கிட்டியுள்ள முந்திய பழைய ஏட்டோடும் ஆராய்ந்து கண்ட தன் பயனாகப் பாடவேறுபாடுகளைத் தேர்ந்தெடுத்து அமைத்துக் குறிப்புரை யுடன் இந்தத் தொகுப்பில் வெளியிடப்பெறுகிறது. இது, முன்பு வெளியிடப்பெற்ற நூலாயினும் செழியதரையர் பிரபந்தங்களுள்

ஒன்றாதலானும் இக் குலமுதல்வனைப் பற்றியது ஆதலானும் இத் தொகுப்பிலும் சேர்த்துக்கொள்ளப்பெற்றது. பாடவேறு பாடுகள் காட்டிக் குறிப்புரையுடன் அமைவதனால் முந்திய பதிப்பினும் சிறந்த விளக்கம் பெற வாய்ப்பாகிறது.

இப்பொழுது நாம் அறிந்தவரையில் பிரபந்தம் பெற்ற செழிய தரையர்களுள் அந்தாலந்தீர்த்தானே முதல்வனாய்க் காணப் படுகிறான். பிரபந்த வகையுள் மஞ்சரி என்பது ஒரு வளர்நிலைப் பிரபந்தம் ஆகும். அகப்பொருள் அமைதியில் காதலை அடிப் படையாகக் கொண்டு பாட்டுடைத் தலைவனின் சிறப்புகளையும் ஏற்ற வண்ணம் அமைத்துத் தருகிறது. அகப்பொருட் பாடல் களுள் ஐந்திணை தழுவிய திணைநிலைப் பெயர் சுட்டிப் பேசப் பெறுமேயன்றி ஒருவனையும் ஒருத்தியையும் விதந்துகூறி அவர்தம் இயற்பெயர் சுட்டி உரைத்தல் மரபு அன்று.

> ''மக்கள் நுதலிய அகனைந் திணையும்
> சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்''

என்னும் நூற்பாவில்(தொல்.பொருள்.அகத்.54)தொல்காப்பியர் இதனை விதித்துள்ளார். இம் மஞ்சரியில் பாட்டுடைத் தலைவ னாகிய அந்தாலந்தீர்த்தான் பெயரும் அவன்மேல் காதல் கொண்ட அதிரூபவல்லியின் பெயரும் இடம் பெறுகின்றன. எனவே, இதனை அகப்புறம் என்றே கொள்ளவேண்டும், அஃதாவது ஐந்திணைப் புறத்ததாகிய கைக்கிளை,பெருந்திணைக் கூறுகளை உடையது என்பது கருத்து.

இம் மஞ்சரிப் பிரபந்தத்தின் முழு உருவமும் போக்கும் பிரபந்த இலக்கணம் கூறும் எந்த நூலிலும் தெளிவாக இல்லை. 'மஞ்சரி' என்பதற்குப் பூங்கொத்து, பூமாலை, தளிர், மலர்க் காம்பு, ஒழுக்கம், மஞ்சரிப்பா என்னும் ஆறு பொருள்களைச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரகராதி தருகிறது. பூங்கொத்துப் போல, பூமாலைப் போலப் பல்வேறு வகையான பாடல் தொகுப்புகளுக்கு 'மஞ்சரி' எனப் பெயர் சூட்டியுள்ளனர். தனிப்பா மஞ்சரி, காமரச மஞ்சரி முதலியன இவ் வகையின. யானையின் போர்த்தொழில் பலவற்றையும் விவரித்துப் பாடும் ஒரு பிரபந்தத்திற்கு 'ஆதோரண மஞ்சரி' எனப் பெயரிட்டு உள்ளனர்.பற்பல பொருள் பற்றி வெளிவரும் சிறந்த கட்டுரைகள், கதைகள் முதலியவற்றைத் தொகுத்துக் 'கலைமகள்' அலுவலகம் வெளியிட்டுவரும் திங்கள் இதழ் 'மஞ்சரி' என்னும் பெயருடைய தாதலைப் பலரும் அறிவர். இங்கெல்லாம் பலவற்றையும் ஒருங்கு திரட்டிய திரட்டு நூல் என்னும் கருத்திலேயே 'மஞ்சரி' என்னும் பெயர் வழங்கப்படுதல் காணலாம்.

காதலை முதன்மைப் பொருளாக வைத்துத் தலைவன் ஒருவனின் புகழ் பேசுகின்ற முறையில் அமைந்துள்ள மஞ்சரி என்னும் இலக்கியவகை மேற்கூறிய திரட்டு நூலிலிருந்தும் வேறு பட்டது. தலைவன் மேல் காதல் கொண்ட தலைவி ஒருத்தி தலைவனுடைய மார்பில் விளங்கும் பூமாலையை இரந்து பெற்று அவனையே நாயகனாக அடைந்து இன்பம் துய்த்து வாழ்வதனை இந் நூல் விளக்கமாய்த் தெரிவிக்கிறது. இதனை,

''தேமாலை அந்தாலந் தீர்த்தசெழி யன்மீதில்
மாமாலை யேபுகழும் மஞ்சரிக்கு''.

எனவரும் இந் நூலின் காப்புச் செய்யுளின் தொடக்கமே விளக்கி நிற்றல் காணலாம். இந் நூலின் தலைவனாகிய அந்தாலந்தீர்த்த செழியன் மீது அமைந்துள்ள அழகிய மாலையைப் புகழ்வது 'மஞ்சரி' என்பது இங்குக் குறிக்கப்படுகிறது. எனவே, பூமாலை யாகிய மஞ்சரியை முதன்மையாய்க் கொண்ட இந்தப் பிரபந்தமும் 'மஞ்சரி' எனப் பெயர்பெறுகிறது என்பது தெரியவரும்.

இந்தப் பிரபந்தத்தின் தலைவியாகிய அதிரூபவல்லி, வீதியில் யானையின் மேலே உலாவந்த அந்தாலந் தீர்த்த செழியன் எதிரே சென்று, அவனைப் புகழ்ந்து, அவனிடம் தனக்குள்ள ஆராக் காதலை வெளிப்படுத்திப் பேசுமிடத்து,

''மாலைஎனது இன்னுயிரை வாங்காமல் உன்குவளை
மாலைதனை இன்று வழங்குவாய்'' (357)

என்று அவன் மார்பில் அணிந்துள்ள குவளை மாலையைக் கேட்கிறாள்.

பின்னர்த் தன் பாங்கியை அம் மன்னனிடம் தூதாக விடுத்து அவனுடைய மாலையை அப் பாங்கியின் வாயிலாகப் பெற்று மகிழ்கிறாள்.

''.........அரசேகேள் – வாங்கும்இடை
எம்கொடிநிற் பாடும் எழில்விறலி தன்சொல்லால்
தங்கும்மயல் கொண்டு தளர்காலைத் – துங்கமுடை
உன்பவனி கண்டாள் உனதருள்பெற் றாள்இனிநீ
மன்புதிய தார்அளித்து மன்னனே–அன்பொடுபின்
வாஎன்று சொல்ல மருக்குவளைத் தார்அளித்துப்
போஎன்று அனுப்புதலும்.........'' (377–380)

எனவரும் பாடற் பகுதியால் பாங்கி சொன்னபடி தன் குவளை மாலையைத் தலைவிக்குத் தருமாறு செழியன் வழங்கி வழி அனுப்புகிறான்.

மாலை பெற்ற அதிரூபவல்லியோ தான் விரும்பிய தலைவனை அடைந்ததாய் பெருமகிழ்ச்சி கொள்கிறாள்.

''செங்கைதனில் வைப்பத் திகழ்அவ் அலங்கல்தனை
எம்கணவன் ஆகும் இதுஎன்று—கொங்கைமிசை
ஒற்றினாள் முத்தம் உதவினாள் கூந்தலிடைச்
சுற்றினாள் வைத்துத் துதித்துப்போய்—நல்தலைவன்
வந்தான் அவன்என்று வழிநோக்கி நிற்பளவில்''

(381, 383)

என்று அதிரூபவல்லியின் அன்புக்காதல் நிலையைக் கவிஞர் காட்டுகிறார்.

இந்த நிலையில் அந்நாலன் அவளுடைய இல்லத்திற்கு வருகிறான். அவனை அவள் வரவேற்று, மஞ்சத்தில் அமரச் செய்து உபசரித்து மகிழ்கிறாள். அவனுடன் கூடிக் குலாவி அவள் இன்பம் துய்த்து வாழ்கிறாள். இவ்வாறாக இந்தப் பிரபந்தத்தின் போக்கு அமைகிறது. தான் விரும்பிய தலைவனுடைய மாலையைப் பெற்று அவனைக் கூடிய தன்மையினால் 'மஞ்சரி' என்று மாலையையே முதன்மையாக வைத்து இப் பிரபந்தத்திற்கு கவிஞர் பெயர் சூட்டினார் எனல் பொருத்தமாகும்.

மஞ்சரி என்பது பூங்கொத்துக்கும் பெயராதல் போல இந்த மஞ்சரிப் பிரபந்தமும் அகப்பொருள் புறப்பொருள் பற்றிய சில பிரபந்தங்களின் கூட்டமைப்பாயும் உள்ளது. கேசாதிபாதம், விறலியாற்றுப்படை, தசாங்கம், காதல், குறம், உலா, தூது முதலியனவும் காதல் வளர்ச்சிக்குத் துணையாய் நிற்கின்ற வகையில் உள்ளமையால் மஞ்சரியில் விஞ்சி நிற்பது காதற்சுவை நிகழ்ச்சிகளே.

அதிரூபவல்லியின் அழகினை முதல் 21 கண்ணிகளில் பேசிய கவிஞர், தொடர்ந்து 21 முதல் 82 வரை 61 கண்ணிகளில் கேசாதிபாதமாக அவளை வருணிக்கிறார். எனவே இம் மஞ்சரியின் முதல் 82 கண்ணிகளைக் 'கேசாதி பாதம்' என்னும் பிரபந்தமாகக் கூறிவிடலாம்.

இதனை அடுத்துப் பெருங்காவியங்களில் இடம் பெறும் புனலாடல், கோலம் பூணுதல் போல இதிலும் அதிரூபவல்லி பாங்கியருடன் கூடி நீராடி மகிழ்தலும், பின்னர்ப் பாங்கிமார் அவளுக்குக் கோலம் புனைதலும் பற்றிக் கவிஞர் உரைக்கின்றார் (83-103). காலையில் ஆடவரும் மகளிரும் நீராடிக் கோலங்

கொள்கின்றனர் என்பதனைப் பின்னரும் அதிரூபவல்வி (273, 274), அந்தாலந்தீர்த்த செழியன் (282–294) என்பார் இருவருடைய காலை நிகழ்ச்சிகளைக் குறிக்குமிடத்துச் சுட்டியுள்ளார்.

சங்கப்பாடல்களில் ஆடல்பாடல் நிகழ்த்துவோராகக் குறிப்பிடப்பெறும் விறலியைத் தோற்றுவித்து, அவள் வாயிலாக வீணையிசையும் புகழ்ப்பாடலுமாக இப் பிரபந்தத்தில் இசைக் கலையின் மேன்மையினையும் கவிஞர் போற்றியுள்ளார். மன்னர், வள்ளல் முதலியோரைப் புகழ்ந்து பாடிப் பரிசு பெறும் இயல்பினள் விறலி என்பது அவள் கழுத்தில் அணிந்துள்ள முத்துவடம் அந்தாலந்தீர்த்தானிடம் பெற்றது என்பதனால் எடுத்துக்காட்டப் படுகிறது.

அதிரூபவல்லி தன்னிடத்திற்கு வந்த விறலியை நோக்கி, 'உன் கழுத்தில் அணிந்துள்ள முத்துவடம் யார் தந்தது' என்று கேட்க, அதற்கு விடையிறுக்குமுகத்தால், விறலியின் வாய்மொழி யாக அந்தாலந்தீர்த்த செழியன் குடிவழி, வெற்றிச் சிறப்பு, கொடைச்சிறப்புகளைக் கவிஞர் அறிமுகப்படுத்துகிறார்.

அந்தாலந்தீர்த்த செழியனின் புகழ் பேசவரும் விறலி முதலில் அவனுக்கு உரிய தசாங்கங்களையும் (மலை, ஆறு, நாடு, நகர், மாலை, குதிரை, யானை, கொடி, முரசு, ஆணை) சிறப்பித்துப் பேசுகிறாள். இந்தப் பகுதியைத் (136–157) 'தசாங்கம்' என்னும் பிரபந்தமாகக் கொள்ளலாம்.

அடுத்து அந்தாலந்தீர்த்தானின் இராசபாரம்பரியம் கூறும் முறையில் குலமுறை கிளத்தியுள்ளார் (158–179). அவன் செய்வித்த தெய்வத் திருப்பணி முதலில் குறிக்கப்படுகிறது (179–188). அவன் மறைவாணர்க்கும் கவிஞர்களுக்கும் அளிக்கும் கொடைச் சிறப்பும் தொடர்ந்து பேசப்படுகிறது (188–194). பின்னர், அவனுடைய வெற்றிச் சிறப்புகளை விவரிக்கிறார் கவிஞர் (194–219). தனக்குச் செழியன் பரிசாகத் தந்த முத்து மாலையையும் விறலி புகழ்ந்து பேசுகிறாள் (219–227). அந்தாலந்தீர்த்தானின் அரும்புகழ் பேசிய அந்த விறலிக்குப் பரிசு தந்து வழியனுப்புகிறாள் அதிரூபவல்லி (227–230).

இந்த இடத்தில்தான் காதல் தலைக் காட்டுகிறது. தலைவனை அதிரூபவல்லி நேரில் கண்டு கொண்ட காதல் அன்று இது; அந்தாலந்தீர்த்த செழியனின் சிறப்புகளை விறலி வாயிலாகக்

கேட்டு அவள் அவன் மேல் ஆராத பெருங்காதல் கொள்கிறாள். நள தமயந்தியர் அன்னத்தின் உரை கேட்டுக் காதல் கொண்டது போல இதுவும் கேட்டதும் கொண்ட காதல்(230–231). மாலைப் பொழுதிலும் இரவிலும் காதல் நோயால் அவள் உற்ற துயரங் களும் இரங்கல் உரைகளும் அடுத்து வரக் காண்கிறோம் (232–268).

காலைக்கதிரவன் தோன்றுகிறான் (268-272). பொழுது வருணனை அதாவது கதிரவனின் தோற்றமும் மறைவும், மாலைப்பொழுதின் மயக்கமும் இப் பகுதியிலும் இதற்கு முன்னர்க் குறித்த பகுதியிலும் இடம்பெறக் காணலாம். இவ்வாறாகப் பொழுது வருணனைகளும் பெருங்காப்பியங்களிற் போல இம் மஞ்சரியிலும் சிறிதளவு இடம்பெற்றுக் கவிதைச் சிறப்பை மிகுவித்துக் காட்டுகின்றன.

காலையில் சேடியர் அதிரூபவல்லியை நீராட்டி, அவளுக்குக் கோலம் புனைகின்றனர் (272-274). அச் சமயத்தில் குறி சொல்லும் குறத்தி ஒருத்தி வருகிறாள். அக் குறத்தியை அழைத்துச் சேடியர் தம் தலைவிக்கு நேர்ந்துள்ள துன்ப விளை வுகள் குறித்து வினாவுகின்றனர் (274-276). குறத்தி குறி சொல்லுகிறாள்; 'இது முத்துவடத்தால் வந்தது. உன் உள்ளத்தில் குடிகொண்டுள்ள தலைவன் பவனி வருவான். அவனுடைய மார்பின் மாலையைத் தோழி பெற்றுத்தரத் துயரம் நீங்குவாய்' என்கிறாள் (276-279). இங்கே குறத்தி குறி இடம் பெறுகிறது. 'குறம்' என்னும் பிரபந்தப் பொருள் இங்கு அமைகிறது.

இதன் பின்னர் அந்தாலந்தீர்த்த செழியனின் பவனி பற்றி (279-374) 96 கண்ணிகள் பாடுகின்றார். இந்தப் பகுதி உலா இலக்கியப் பாங்கில் உள்ளது. அந்தாலந் தீர்த்தான் நீராடிக் கோலம்பூண்டு, தெய்வத்தை வழிபட்டு, அரச பரிவாரங்கள் சூழ, யானைமேல் ஏறி வீதியிலே உலா வருகிறான். வீதியிலும் வீதியை அடுத்த மண்டபங்களிலும் மகளிர் அமர்ந்து அவனுடைய உலாவைக் கண்டு களிக்கின்றனர். பவனி கண்ட மாதர் பலரும் அவன்மேல் காதல் கொண்டவராய்ப் பலப்பல பேசுகின்றனர். இதன்பின் பேதை, பெதும்பை முதலிய எழுபருவ மகளிரும் காதல் உற்றதாக உலாப் பிரபந்தம் விவரித்துப்பாடும், பவனி கண்டு மாதர் பலரும் காதல் கொண்டனர் என்பது வரையுள்ள செய்திகள் உலாவின் முற்பகுதியாகும்.

இந்த இடத்தில்தான் குறத்தியிடம் குறி கேட்ட அதிருப வல்லியை மீண்டும் கவிஞர் நம் கண்முன் கொண்டு வருகிறார். அவள் செழியனின் எதிரே சென்று அவனைப் புகழ்ந்து, அவனுடைய மார்பு மாலையை வேண்டுகிறாள். அந்தாலந் தீர்த்த செழியன் அவள்மேல் கண்சார்த்தி அருள் செய்கிறான் (348-374). இந்த அளவோடு உலாப்பகுதி முற்றுகிறது.

தனது இல்லம் சேர்ந்த அதிருபவல்லி, தன் தோழியை அந்தாலனிடம் தூதாக அனுப்பி, அவன் மார்பில் அணிந்துள்ள குவளைமாலையைப் பெறுகிறாள். இங்கே நாம் தூதுப் பிரபந் தத்தின் சாயலையும் காண்கிறோம்(374—381). அந்தாலந் தீர்த்த செழியன் அதிருபவல்லியின் மாளிகைக்கு வந்து அவளுடன் இன்பம் துய்த்து மகிழ்ந்து வாழ்கிறான். இவ்வாறு கலவியில் களித்தலோடு இந்த மஞ்சரிப் பிரபந்தம் முற்றுப்பெறுகிறது.

'மஞ்சரி' என்னும் இப் பிரபந்த இலக்கணம் பற்றிப் பாட்டியல் நூல்கள்விளக்கமாக எதுவும் குறிப்பிடவில்லை. பிரபந்தமரபியலும் இலக்கணவிளக்கப் பாட்டியலும் மட்டுமே 'மஞ்சரி' இலக்கியம் பற்றிக் குறிப்பிடுகின்றன. பொருள், இடம், காலம், தொழில் என்னும் நான்கும் பற்றி வெண்பா அல்லது கலித்துறைப் பாவி னால் பாடப்படுவது மஞ்சரி என்கிறது பிரபந்த மரபியல். இதனால் பொருள், இடம், காலம், தொழில் பற்றி நால்வகை மஞ்சரிகள் உள என்பது தெரியவரும்.

இலக்கண விளக்கப் பாட்டியலுடையார் 'வளமடல்' முதல் 'மஞ்சரி' ஈறாகச் சொல்லப்பட்ட இருபத்திரண்டும் தனிநிலைப் பிரபந்தங்கள் எனத் தொகுப்புச் சூத்திரத்துள் சுட்டியுள்ளார் (சூ. 855). ஆனால் வகுத்து விளக்கம் கூறுமிடத்து இந்தப் பிரபந்த இயல்பினைத் தனிப்பட விளக்கினாரில்லை.

> ''.........தூதாகும் இருதிணை
> போற்றுமஞ் சரியெனப் புலவர் நிலைபெறச்
> சாற்றப் படும்அத் தனிநிலைச் செய்யுள்''

எனவரும் தொகைச்சூத்திரத்தில் தூதுப் பிரபந்தத்தை அடுத்து மஞ்சரியை வைக்கிறார். இதனால் தூது போன்று மஞ்சரியும் கலிவெண்பாவினால் அமையும் என்று குறிப்பிப்பதாகக் கொள்ளலாம்.

வீரமாமுனிவர் தம்முடைய சதுரகராதியில் 'மஞ்சரி ஓர் பிரபந்தம்' என்று பெயரகராதிப் பகுதியிலே குறிப்பிடுகிறார்.

ஆனால் அவர் பின்னர்த் தொகையகராதியில் விளக்கம் தரும் தொண்ணூற்றாறு பிரபந்தவகைகளுள் ஒன்றாக இதனையும் சேர்த்தாரில்லை. எனவே, 96வகைப் பிரபந்தங்களுள்அடங்காது வளர்ந்து பெருகிவரும் புதுமைப் பிரபந்தங்களுள் ஒன்றாக இம் மஞ்சரி மலர்ந்துள்ளது என்பது தெரியவரும்.

குறுநிலத் தலைவர்களை மகிழ்விப்பதற்காகவே காதல், தூது, கோவை, உலா, மஞ்சரி போன்ற காமச்சுவை மிகுந்த சிற்றிலக்கியங் களைப் புலவர்கள் இயற்றிவரலாயினார்கள். இவ்வகைப் பிரபந்தங் களை 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் குறிப்பிடுவ தனால் 14 ஆம் நூற்றாண்டுக்கு முன்பு தொட்டே இவ்வகைச் சிற்றிலக்கியங்கள் மிகுதியாய்த் தோன்றலாயின என்பது தெரிய வரும்.

''வஞ்சக லோபமூடர் தம்பொருளூர்கள் தேடி
மஞ்சரி கோவைதூது பலபாவின்
வண்புகழ் பாரிகாரி என்றிசை வாதுகூறி
வந்தியர் போலவீணில் அழியாதே'' (திருப்புகழ்.1236)

எனவரும் அருணகிரிநாதரின் வாக்கு அக் காலப் புலவர்களின் வாழ்க்கைப் போக்கினை ஒருவாறு புலப்படுத்தும்.

16 ஆம் நூற்றாண்டிற்கான படிக்காசுப்புலவர் தாம் பாடிய தொண்டை மண்டல சதகத்தில், காஞ்சிபுரத்தில் வாழ்ந்த ஞானப் பிரகாசர் என்பார் கிருஷ்ணதேவராயரின் மீது மஞ்சரிப்பாடல் பாடினார் என்பதைத் தெரிவிக்கிறார்.

''வானப்பிர காசப் புகழ்க்கிருஷ்ண
ராயற்கு மஞ்சரிப்பா
கானப்பிர காசப் புகழாய்ந்து
கச்சிக் கலம்பகம்செய்
ஞானப்பிர காச குருராயன்
வாழ்ந்த நலஞ்சிறந்த
மானப்பிர காச முடையார்
வளர்தொண்டை மண்டலமே''
(தொண்டை. சத. 95)

என்பது படிக்காசுப் புலவரின் பாடல். எனவே 15, 16 ஆம் நூற்றாண்டுகளில் 'மஞ்சரி' என்னும் இலக்கியவகை புலவர் களால் பெரிதும் போற்றிப் பாடப்பெற்றது என்று கொள்ளலாம். என்றாலும் இவ்வகைப் பிரபந்தம் பலவாக நமக்குக் கிட்டாமல் எவ்வாறோ மறைந்து போயிற்று.

பிரபந்தங்கள் பல்வேறு வகையில் அந்தந்தக் காலச் சூழலுக்கு ஏற்பத் தெய்வத்தின் மீதும் மக்கள் பேரிலும் புலவர்களால் தொடர்ந்து பாடப்பெற்று வந்துள்ளமை காணலாம். அவை யெல்லாம் மக்கள் மத்தியில் இடம்பெற்று நிலையான வாழ்வு பெறவில்லை. சிற்றிலக்கியங்களில் எத்தனையோ பெயரளவில் அறியப்படுவனவாயுள்ளன. இலக்கண நூல்களில் எடுத்து இயம்பப் பெறும் சிற்சில வகைகளுக்கு இலக்கியங்கள் இன்று காண்பது அரிதாயுள்ளது. இதற்குக் காரணம் இத்தகைய பிரபந்தங்கள் மக்கள் வாழ்வொடு ஒன்றி நிலைபெறாமையேயாம்.

அந்தாதி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், உலா, தூது, கோவை போன்ற சிலவகைப் பிரபந்தங்கள் பல்வேறு காலங்களிலும் மிகுதி யாய்த் தோன்றி வாழ்வு பெற்றுள்ளன. ஒருகாலத்து மிகுவழக்கா யிருந்து பின் அருகி வரும் தன்மையனவும் சில உள. இவ்வகையைச் சார்ந்ததே இந்த மஞ்சரிப் பிரபந்தம்.

எந்தப் பிரபந்தத்தை எடுத்துக் கொண்டாலும் அவற்றின் பொருள்கள், வருணனைகள் முதலியவற்றில் ஒருமைப்பாடும் அவற்றுள்ளே சிற்சில அருமைப்பாடும் காணப்படுகின்றன. ஒவ்வொரு வகையிலும் மரபு நிலையில் மாறாமல் நின்றே புதுமை களைப் படைக்கவும் பின் வந்தோர் முயன்றுள்ளனர்.

தமிழின் வளமும் நடை நலமும் பிரபந்த இலக்கியங்களிலும் சிறப்புற்றுக் காணப்படுகின்றன. சொற்கோவைகளும் புதுப்புதுப் பொருள்களும் வளர்ந்து வரும் பாங்கினை அளந்தறிவதற்கும் பிரபந்தங்கள் பேருதவி புரியவல்லன. ஆதலால், பிரபந்த இலக்கியங்களும் போற்றிப் பாதுகாத்துப் படித்துப் பயன்பெறத் தக்கவையே.

5. சுவடி விவரம்

செழியதரையர் பிரபந்தங்களுக்குரிய மூலச்சுவடிகள் எல்லாம் தமிழ்ப் பல்கலைக் கழகச் சுவடித்துறையில் சிறப்புநிலை இணைப் பேராசிரியராயிருந்த திரு. அடிகளாசிரியர் அவர்களிடமிருந்து இப் பல்கலைக் கழகச் சுவடி நூலகத்திற்குக் கிட்டியனவாம். பல ஆண்டுகளுக்குமுன் திரு. அடிகளாசிரியர் அவர்கள் சின்ன சேலத்தில் ஏடு தேடிச் சென்றபோது அவர்களுக்கு இவை கிட்டின. சின்ன சேலத்திலே செங்குந்த மரபைச் சார்ந்த கவிராயர் சிதம்பர வாத்தியார் இல்லத்திலிருந்து இச் சுவடிகளை அவர் பெற்றார் என்பது தெரிய வருகிறது.

தாகந்தீர்த்த செழியன் கோவை, கங்காதரச் செழியன் வண்ணம் ஆகிய இரண்டினையும் தவிர்த்து ஏனைய நான்கு நூல்

களுள் ஒவ்வொன்றற்கும் இரண்டிரண்டு சுவடிகள் உள்ளன. எனவே, ஒப்பு நோக்கிப் பாடவேறுபாடுகளைக் கண்டு தக்க பாடம் துணிய வாய்ப்பாகியது.

தஞ்சைச் சரசுவதி மஹால் நூல்நிலையத்தார் திரு. அடிகளாசிரியரிடமுள்ள இச் சுவடிகளை முன்பே பெற்று 1966-ல் காகிதத்தில் படியெடுத்து வைத்துள்ளனர். இந் நூல்நிலையத்தில் உள்ள கையெழுத்துப்படிக்கும் மின்பொறிப்படி (Zerox) பெற்று இப் பதிப்பிற்கு ஒப்பு நோக்கப் பயன்படுத்தப் பெற்றது.

6. நன்றியுரை

முதற்கண் செழியதரையர் பிரபந்தங்களைத் தேடிப் பெற்றுப் பாதுகாத்து இப் பல்கலைக் கழகத்திற்கு அளித்த முதியவர் திரு. அடிகளாசிரியர்க்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம் நன்றி பாராட்டும் கடப்பாடுடையது. செழியதரையர் பற்றிய வரலாற்றுச் செய்திகள் பலவற்றைக் கடிதமூலமாயும் நேரிலும் அவர்கள் எனக்குத் தெரிவித்து உதவினார்கள். ஆசிரியர் அவர்களுக்கு என் பணிவார்ந்த வணக்கங்களையும் உளமார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இந் நூல் உருவாகி வெளிவரப் பொருள் உதவி செய்தாரை நினைத்தல் வேண்டும். மைய அரசு கல்வி-பண்பாட்டுத் துறை தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச்சுவடித்துறைக்கு இரண்டு இலக்க ரூபாயினை நல்கையாக வழங்கியுள்ளது. இந்நூல் வெளிவர நிதி உதவிய மைய அரசின் கல்வி – பண்பாட்டுத்துறைக்குத் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை நன்றி பாராட்டுகிறது.

செழியதரையர் பிரபந்தங்களுள் ஏற்கெனவே அச்சாகியுள்ள அந்தாலந்தீர்த்த செழியதரையன் மஞ்சரி நீங்கலாக ஏனையவெல்லாம் சுவடியிலிருந்து பெயர்த்து எழுதப்பெற்றன. பெயர்த்தெழுதும் பணியைப் பெரும்பாலும் சுவடி பெயர்ப்பாளர் செல்வி க. லலிதாம்பிகா செய்துள்ளார். நன்னெறிப் பிரபந்தத்தை முனைவர் அரு. மருததுரை சுவடியிலிருந்து பெயர்த்தெழுதினார். அச்சுக்குரிய படிவத்தை முடிவாகத் தட்டச்சு செய்தவர் செல்வி கோ. மணிமொழி. இம் மூவருக்கும் என் நன்றியும் வாழ்த்தும்.

மூலக் கையெழுத்துப் படியுடன் சுவடிகளை ஒப்பு நோக்கிப் பாடவேறுபாடுகளைப் புலவர் ப.வெ. நாகராசன் குறித்துள்ளார். ஏற்ற பாடங்களை மூல பாடத்துடன் சேர்த்து ஏனைய வேறுபாடுகளை அடிக்குறிப்பில் அமைத்துத் தந்துள்ளார். இப் பிரபந்தத்

தொகுப்பு முழுமைக்கும் குறிப்புரை எழுதியுதவியவரும் இவரே. சில பகுதிகளுக்கு இவர் எழுதிய குறிப்புரை விரிவுரை போலவும் மிகுந்தும் காணப்படுகின்றது. அருஞ்சொற் பொருள்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. சொல்லிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம் ஆகியவை வேண்டும் இடங்களில் சுட்டப்பட்டுள்ளன. உரையுள் நூலோடு ஒத்த கருத்துள்ள பிற இலக்கியங்களிலிருந்தும் மேற்கோள் எடுத்துத் தந்து விளக்கியிருப்பது சிறப்பாகும். ஒவ்வொரு நூலின் முடிவிலும் உரை மேற்கோள் அகராதி ஒன்றையும் சேர்த்திருப்பதும் இவர்தம் புலமைக்குச் சான்றாகும். நூல் முகப்பில் தரப்பட்டுள்ள 'நூல் அறிமுகம்' என்னும் பகுதியை உருவாக்கியளித்துள்ளார். இப் பகுதி நூலின் உள்ளுறைபொருளைத் தெள்ளிதின் உணர உதவுவதாகும். இவருக்கு என்உளமார்ந்த நன்றி.

மூல பாடமும் உரையும் முதன்முறையாக அச்சில் வெளி வருகின்றன. அடுத்த பதிப்பு செம்மையும் தெளிவும் பெறுவதற்குப் புலவர் பெருமக்கள் தரும் கருத்துரைகளும் திருத்தங்களும் பெருந்துணையாகும்.

ஒவ்வொரு நூலின் இறுதியிலும் சொல்லடைவு சேர்த்து இருப்பது இப் பதிப்பின் தனிச்சிறப்பாகும். இச் சொல்லடைவுகளைச் செய்வதற்குக் கணிப்பு மையம் பெரிதும் துணைபுரிந்துள்ளது. சொற்களை ரோமன் எழுத்தில் திரு ப. சதாசிவமும் திருமதி ச. லதாவும் கணிப்பொறியில் பதிவு செய்து அடைவு படுத்தித் தந்தனர். அதனைத் தமிழெழுத்திற்கு மாற்றி அமைத்து வெளியிட்டுள்ளோம். கணிப்பொறியில் பதிவு செய்த இருவருக்கும் இவர்களை மேற்பார்த்து உரிய காலத்தில் பணி நடைபெற ஆவன செய்த கணிப்பு மைய இணைப்பேராசிரியர் கா. செ. செல்லமுத்து அவர்களுக்கு ஓலைச்சுவடித்துறை நன்றி பாராட்டுகிறது.

புதுக்கோட்டை சர்மாஸ் சானடோரியம் அச்சகத்தில் இருந்து நூல்களைப் பதிப்பிக்கும் பணியினைச் செய்து வந்துள்ள பதிப்பாசிரியர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கு நன்றி. இவரோடு ஒத்துழைத்து அச்சுப்பணியை நன்கு திறம்படச் செய்து உதவிய சர்மாஸ் சானடோரியம் அச்சகத்தாரும் பாராட்டுக்கு உரியவராவர். இத் தொகுப்பு நூல் நல்ல முறையில் வெளிவரஒத்துழைத்த மற்றவர்களுக்கும் நன்றி.

தமிழ்ப் பல்கலைக் கழகம்
24-2-86

மு. சண்முகம் பிள்ளை

நூல் அறிமுகம்

ப. வெ. நாகராசன்

1. திருவாணி வாது : இது கங்காதரச் செழியனைப் போற்றுமுகத்தான் அவன் அவைக்களப் புலவர் ஒருவரால் இயற்றப்பட்டது.

தென்ஆர்க்காடு மாவட்டம் உலக நல்லூரில் அந்தாலந் தீர்த்த செழியன் சிவாலயம் ஒன்றைக்கட்டியுள்ளான். அத் திருக் கோயிலில் கங்காதரச் செழியனால் ஒரு மண்டபம் அமைக்கப் பட்டுள்ளது. அத் தலத்தில் இறைவனும் இறைவியும் முறையே பொன்பரப்பீசர், பெரியநாயகி என்னும் திருப்பெயர் பெற்று விளங்குகின்றனர். அத் திருக்கோயிலில் அம்மையும் அப்பரும் திருவோலக்கத்தில் எழுந்தருளியிருந்த போது தொழவந்த திருமகளும், கலைமகளும் தம்முள் வாதம் செய்வதாக இந் நூல் இயற்றப்பட்டுள்ளது.

திருமகள் 'செல்வமே சிறந்தது' எனவும் கலைமகள் 'கல்வியே தலைமையானது' எனவும் வாதிடுகின்றனர். இறுதியில் பெரிய நாயகியம்மை உலகமக்கள் அனைவருக்கும் வீட்டின்பத்திற்குக் காரணமாகிய மலபரிபாகம் பெறும் வரையில் கல்வி, செல்வம் என்ற இரண்டுமே இன்றியமையாதன என்கிறாள். மேலும் அவை அவரவர்களின் வினைகளுக்குகேற்ப இறைவனால் ஊட்டப் பெறுகின்றன என்றும், இவ்விரண்டினுள் சிறப்புடையது எது என வாதிடல் பயனற்ற செயல் என்றும் அறிவுறுத்துகிறாள். திரு வாணி ஆகிய இருவரையும் கங்காதரச் செழியனிடம் பொருந்தி வாழுமாறு கட்டளையிடுகிறாள். 104 செய்யுட்களானியன்ற இந் நூல் நுதலிய பொருள் இதுவேயாகும்.

இந் நூலில் திருக்குறள், நாலடியார் கருத்துகள் பல இடங்களிலும் திருக்கோவையார் ஒரிரு இடங்களிலும் எடுத்தாளப் பட்டுள்ளன. 'நாலும் இரண்டும் சொல்லிற்கு உறுதி' என்பதற் கேற்ப அவ்விரண்டுமே சிறப்பாக முதலிடம் பெற்றுள்ளன. இச் சிறு நூலில் சமயத் தொடர்பான பல புராணச் செய்திகளும் காணப் படுகின்றன.

நூலின் நடை எளிமை வாய்ந்ததாக உள்ளது. இனிய ஓசை பெற்று ஆற்றொழுக்காகச் செல்கிறது. இடத்திற்கேற்ற யாப்புகளைப் பயன்படுத்துவதில் இந் நூலாசிரியர் வல்லவராகக் காணப்படுகிறார். இந் நூலாசிரியரின் பெயரை நூலாகிய அகச்சான்றாலோ, சுவடிகளில் இடம் பெற்றுள்ள குறிப்புகளாகிய புறச்சான்றுகளாலோ கண்டறிய இயலவில்லை.

2. திருவேங்கட செழியன் நன்னெறி : இது 43 கட்டளைக் கலித்துறைகளாலாகிய ஒரு நீதி நூல். ஒவ்வொரு பாடலும் திருவேங்கட செழியனை முன்னிலைப்படுத்தி நீதிகளைக் கூறுவ தாக அமைந்துள்ளது. விநாயகர் காப்பு, சிவபெருமான் காப்பு ஆகிய இரண்டு வெண்பாக்கள் நூலின் முகப்பில் விளங்குகின்றன.

திருவேங்கட செழியனைப் போற்றுகின்ற இந் நூலாசிரியரின் பெயரும் அறியக் கூடவில்லை. நூலின் நடை மிக எளிமையானது எனக் கூற இயலாது. ஒரு பாட்டில் பெரும்பாலும் ஏதாவதொரு உவமையைக் கொண்டு தாம் சொல்லக் கருதிய நீதியை ஆசிரியர் கூறுகிறார். இத்தகைய கருத்துச் செறிவின் காரணமாகப் பாடலின் நடை சில இடங்களில் செறிவுடையதாக உள்ளது. இயற்கை நிகழ்ச்சிகளையே யன்றிப் புராண வரலாறுகளையும் தக்க இடங்களில் உவமைகளாக அமைக்கிறார் (11, 13, 14, 17, 33).

சில பாடல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துகளையும் தக்க காரணம் பற்றி இணைத்துக் கூறுகிறார் (18, 19, 20, 21, 22). இவை சிறுபஞ்சமூலம், திரிகடுகம் போன்ற நூற்செய்யுட்களின் அமைப்பைப் பெற்றுள்ளன என்னலாம். இந் நூலில் இதற்குமுன் தோன்றிய நீதிநூற் கருத்துகள் பல உள்ளன.

நீதிநூல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலை பெற்று விளங்குகின்றன; ஆடூஉ முன்னிலை அருகியே காணப்படுகிறது. இந் நூல் திருவேங்கட செழியனை முன்னிலைப்படுத்துகிறது. கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் (1652–1684) தாம் இயற்றிய ஒரு நீதி நூலுக்கு நன்னெறி எனப் பெயரிட்டார். சற்றேறக் குறைய அதே சமயத்தில் தோன்றிய இதுவும் அப் பெயரே பெற்று உள்ளது. இவ்விரண்டுள் எது காலத்தால் முந்தியது எனத் துணியக் கூடவில்லை. வெண்பாவானமைந்ததால் சிவப்பிரகாச அடிகளாரின் நூல் முதலில் தோன்றியது என்றும், புதுமையாகக் கட்டளைக் கலித்துறை யாப்பை நீதி நூலுக்குக் கையாண் டிருப்பதால் இதனைச் சற்றுப்பிந்தியும் எனவும்கருதலாம். இது ஒரு கருதுகோளே; துணிபன்று.

3. செழியதரையன் கோவை : இது தாகந்தீர்த்த செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பெற்ற ஓர் ஐந்திணைக் கோவையாகும். சற்றேறக்குறைய 400 பாடல்கள் இருக்க வேண்டிய இந் நூலில் 75 பாடல்களே கிடைத்துள்ளன. கோவையின் முதல் துறையாகிய காட்சியின் செய்யுளில் பல கோவையாசிரியர்களின் மரபுப்படி கார், வில், வெற்பு, வாரி, கஞ்சம் என்ற சொற்களால் முறையே முல்லை, பாலை, குறிஞ்சி, நெய்தல், மருதம் ஆகிய ஐந்திணைகளையும் குறிப்பாகச் சுட்டுவதாலும், நூலின் யாப்பு கட்டளைக்கலித்துறையாக அல்லாமல் கோவைக் கலித்துறையாக இருப்பதாலும் இஃது ஓர் ஐந்திணைக் கோவையே என்பது உறுதி. நூல் முழுமையாகக் கிடைக்காதது நம் தவக்குறைவே.

இந் நூல் பெருமிதமிக்க சிறந்த நடையை உடையது. பிற்கால நூல்களைப் போன்று புராண வரலாறுகளை உவமையாக்கிக் கூறும் இயல்பை உடையது. வட சொற்களும், சொற்றொடர் களும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. உருவகம் முதலிய பொருளணிகளும், திரிபு முதலிய சொல்லணிகளும் பரவலாக இடம் பெற்றுள்ளன. இவ்வாசிரியர் செம்மொழிச் சிலேடை, பிரி மொழிச் சிலேடை ஆகிய இரண்டையும் ஆண்டுள்ளார்.

இப் புலவர் பாட்டுடைத் தலைவனாகிய தாகந்தீர்த்த செழியனிடம் பெருமதிப்புடையவர். அவனை மிகமிக உயர்த்தி வானளாவப் புகழ்கிறார். அவனுடைய போர் வீரம், இறையன்பு, வள்ளன்மை, தமிழ்ப்பற்று ஆகிய பண்புகள் பாராட்டப் பெறுகின்றன.

தன்துயர் தலைவற்கு உணர்த்தல் வேண்டல், அலர் அறிவுறுத்தல் ஆகிய இரு துறைகளின் கருத்தையும் ஒன்றாக்கி ஒரே பாடலாக ஆக்கியுள்ளார் (47). இதனையடுத்துப் 'பாங்கி நீயே உரை எனத் தலைவி நோதல்' என்ற ஒரு புதிய துறையை இவரே படைத்துக் கொண்டுள்ளார் (48). பிற கோவை நூல்களில் இஃது இல்லை. இவ்வாறே 'தலைவனின் புறத்தொழுக்கம் கண்ட ஆன்றோர் அறிவுரை' என்னும் புதுத்துறையும் இவருடைய சொந்தப் படைப்பே (68).

இந்நூலாசிரியர் தாகந்தீர்த்த செழியன் வாழ்ந்த காலமாகிய 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பதைத்தவிர வேறு செய்திகளோ இயற்பெயரோ அறியக்கூடவில்லை.

4. செழியதரையன் வண்ணம் : சுவடியிலுள்ள குறிப்பில் இருந்து இது கங்காதரச் செழியன்மேல் பாடப்பட்டதாக அறியப்

படுகிறது. எனினும் சுவடியின் இடையில் ஓர் ஏடு காணப்படாத தால் பாட்டுடைத்தலைவனின் பெயர் இடம்பெறும் பகுதி கிடைக்கவில்லை. எனவே இவ் வண்ணம் குறைநூலாகவே உள்ளது.

அகப்பொருள்துறைகளுள் ஒன்றைச் சந்தக் குழிப்பமைந்த பாடலால் விரித்துப் பாடுவதே வண்ணம் எனப்படும். வண்ணப்பாடலின் ஒவ்வொரு பகுதியும் கலை எனப்படும். இரண்டு கலைகளைக்கொண்டது ஓர் அடி. முதல் நான்கு கலைகளில் (இரண்டு அடிகள்)பாட்டுடைத் தலைவனின் சிறப்பும், அவனுடைய ஊர்ச்சிறப்பும் கூறப்படும். இது புறப்பொருள் பற்றியது என்பது வெளிப்படை. இப் பகுதி ஆண்கலை எனப்படும்.

வண்ணத்தின் பிற்பாதியை (பின்னிரண்டு அடிகள்) பெண் கலை என்பர். இதில்தான் அகப்பொருள்துறைக்கருத்து இடம்பெறும். சிலர் இந்த வண்ணத்தைப் புறப்பொருள் பற்றிப் பயன்படுத்தியிருப்பினும் (பட்டினத்தாரின் உடற்கூற்றுவண்ணம்) பெரும்பாலும் இஃது அகப்பொருள் பற்றியேவரும். இவ் வண்ணப் பாடல்களின் இலக்கணத்தை வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அவர்கள் அருளிய வண்ணத்தியல்பில் தெளிவாகக் காணலாம். தமிழில் சுமார் நூறு வண்ணங்கள் வரை இருக்கலாம்.

இந்த வண்ணம் சந்தக்குழிப்பிற்கேற்றவாறு இயல்பான சொற்களைப்பெற்று நன்கு அமைந்துள்ளது. பொருளே விளங்காத மிகக் கடின சொற்களோ அல்லது மிகக் கொச்சையான வார்த்தை களோ இல்லை. (பிற வண்ணங்களில் இவை காணப்பெறும்).

இவர் பாட எடுத்துக் கொண்ட துறை 'தலைவி இரங்கல்' ஆகும். இது நெய்தல் திணையைச் சேர்ந்தது. எனவே இத் திணைக்குரிய கருப்பொருள்களை விளித்துத் தலைவி தன் துயரத்தை எடுத்துக் கூறுவதாகப் பாடும் பழைய மரபைப் பின் பற்றுகிறார். பிறகு, தலைவி தன் துன்பத்திற்குக் காரணம் தான் செய்த தீவினையே எனப் புலம்புகிறாள். தலைவன் செயல் நீதி யன்று என முத்தாய்ப்பு வைக்கிறாள்.

பாட்டுடைத்தலைவனாகிய கங்காதரச்செழியனின் பெருமை களைப் பாராட்டிக் கூறும் இந் நூலாசிரியரின் இயற்பெயர் அறியக் கூடவில்லை.

5. தாகந்தீர்த்த செழியன் பிள்ளைத்தமிழ் : இப் பிள்ளைத் தமிழ் காப்பு 1, நூற்பாடல்கள் 101, வாழி விருத்தம் 1 ஆக மொத்தம் 103 பாடல்களாலானது. ஆண்பாற்பிள்ளைத்தமிழிற் குரிய பத்துப் பருவங்களையும் கொண்டு விளங்கும் இந் நூலில் காப்புப்பருவம் மட்டும் 11 பாடல்களை உடையது. மற்ற ஒன்பது பருவங்களும் பத்துப் பத்துப் பாடல்களால் அமைந்தவை.

இந் நூலின் நடை மிடுக்கானது. சில இடங்களில் திரிசொற் களைச் சற்று அதிகமாகவே காணமுடிகிறது. வடசொல், சொற்றொடர்களின் வழக்காறும்அதிகம். பொதுவாக இப் பிள்ளைத் தமிழைப் படிக்கும் போது வில்லிபுத்தூராழ்வாரின் வில்லிபாரத நடை நினைவிற்கு வரும். அதைவிடச் செறிவில் இப் பிள்ளைத்தமிழ் சற்றுக் குறைந்தது. மற்றபடி சற்றேறக்குறைய ஒரேவகையான நடை எனலாம்.

காப்பு, அம்புலிப் பருவங்களில் பல புராண வரலாறுகளைச் சொல்கிறார். தாகந்தீர்த்த செழியனைத் திருவுடை மன்னனைத் திருமாலாகவே காணும் மரபின்படி பதினோராவது அவதாரம் என்றே கூறிவிடுகிறார் (68). பாண்டியரின் சிறப்புகள், வாணர் களின் பெருமைகள், வேளாளர்களின் கீர்த்திகள் ஆகிய யாவுமே இச் செழியனின் மேலேற்றிக் கூறப்படுகின்றன. நாட்டுவளம் முதலியனவும் இந் நூல் தோன்றிய காலத்தின் இலக்கியமரபிற் கேற்ப இயற்கைகடந்த வியப்பு நிலையில் கூறப்பட்டுள்ளன.

இந் நூலாசிரியர் பல்வேறு வகையான விருத்தங்களையும், பல சந்தப் பாடல்களையும் சிறப்பாகக் கையாண்டுள்ளார். அம்புலி,சிறுபறை,சிற்றில் ஆகிய மூன்று பருவங்களிலும் யாப்பை மாற்றாமல் ஒரேவகையான பத்துப் பாடல்களைச் செய்துள்ளார். பொதுவாகப் பருவத்திற்குக் குறைந்தது இருவகையான யாப் பாவது அமைவதே பெரும்பான்மை.இவருடையசந்தப் பாடல்கள் இனிமையாக அமைந்துள்ளன.

உருவகம் முதலிய பொருளணிகள், கற்பனை நயம், தொனிப் பொருள், மடக்கு முதலிய சொல்லணிகள், சிலேடை, இரட்டுற மொழிதல் போன்ற இலக்கியக்கூறுகள் நிரம்பியுள்ளன.

இப் பிள்ளைத்தமிழை இயற்றிய ஆசிரியரின் பெயர் அறியக் கூடவில்லை. இவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவரென்பது திண்ணம். ஆனால் இந் நூல் முழுவதிலும் திருமாலையும் மனங் கனிந்து போற்றியுள்ளார்.இதனால் இவர் பிற சமயக் காழ்ப்பற்ற

செம்மையாளர் என அறிய முடிகிறது. மேலும் தம்மை ஆதரித்த தாகந்தீர்த்த செழியன்மீது மட்டுமின்றி அவன் குடும்பத்தினர் அனைவர்மீதும் பேரன்பு கொண்டிருந்தார் எனவும் உணர முடிகிறது.

6. **அந்தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி :** இந் நூல் அந்தாலந் தீர்த்த செழியனின் பெருமைகளை ஒரு விறலியின் வாயிலாகக் கேட்ட அதிருபவல்லி என்பாள் அவன்மீது காதல் கொண்டு, அவன் உலாவைக் கண்டு, தன் பாங்கியைத் தூதுவிட்டு, அவன் மாலை பெற்று மகிழ்ந்ததாகக் கூறும் பனுவலாகும். 395 கண்ணிகளா லான கலிவெண்பாவானியன்ற இந் நூலில் தனியாக ஒரு காப்பு வெண்பா காணப்படுகிறது. களவித்தலைவன், தலைவி என்ற நிலையில் இல்லாமல் இவர்களின் பெயர் சுட்டப்படுவதால் இம் மஞ்சரியைத் தூய அகப்பொருள் நூல் எனக்கொள்ள இயலாது.

அதிருபவல்லியின் அழகைப் புனைந்துரைக்கும் போது கேசாதி பாதம், தாகந்தீர்த்த செழியனின் பவனியை விரிக்குங்காலை உலா, தோழியை அவன் பால் தூதனுப்புகையில் பாங்கி விடு தூது போன்ற பிறவகைச் சிற்றிலக்கியத்தின் கூறுகளையும் இதில் காண முடிகிறது. தமிழில் இன்று நாம் காணக்கிடைத்துள்ள ஒரே மஞ்சரிப் பிரபந்தம் இதுதான் என்பது மற்றொரு சிறப்பாகும்.

இந் நூல் பெருமிதமான நடையை யுடையது. மடக்கு, சிலேடை, வடசொல்லாட்சி ஆகியவற்றால் நிரம்பிய இந் நூல் பல திரிசொற்களைப் பெற்று விளங்குகிறது. எனினும் ஆற்றொழுக் காகச் செல்கிறது. இன்பச்சுவையை முதன்மையாகக் கொண் டது. பல புரான வரலாற்றுச் செய்திகளை ஆங்காங்குக் குறிப் பிட்டுச் செல்கிறது; கற்பனைநயம் மிக்கது.

17 ஆம் நூற்றாண்டில் இருந்த இந் நூலாசிரியரைப் பற்றிய எந்தச் செய்தியையும் துணிந்து கூறஇயலவில்லை. இவர் சைவர் என்பது உறுதி. செழியதரையர்களின் அவைக்களப் புலவராக இவர் இருந்திருக்கலாம்.

திருவாணிவாது

திருவாணி வாது

(காப்பு)
(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

திருவும்நல் வாணி மாதும்,
சிறந்துஉயர் உலகை தன்னில்
பரிவுடன் இனிதுஅ மர்ந்த
பொன்பரப் பீசர் முன்னர்,
மருவியே வாது செய்த
வளத்தினை வழாது சொல்கேன்-
சொரிமதக் கலுழி யானை
முகத்தனைத் தொழுது கொண்டே. 1

(பொன்பரப்பீசர் துதி)
(அறுசீர் ஆசிரிய விருத்தம்—வேறு)

மணிகொண்ட பாற்கடலில் அறிதுயில்கொள்
நெடுமாலும், மலரோன் தானும்,
மணிகொண்ட திருமாலும், கலைமாதும்,
அமரர்களும் மலர்கள் தூவிப்
பணிகின்ற தாளானை-உலகைநகர்ப்
பெம்மானைப் பரந்த காளம்
திணிகின்ற களத்தானைப் பொன்பரப்பு
நாயகனைச்-சிந்தை செய்வாம். 2

---

1. பா. வே. 4 : 4 முகத்தினை

தலைப்புகளும், பாவகைகளின் பெயர்களும் பதிப்பாசிரியரால் தரப்பட்டவை ஆகும்.

முகத்தனைத் தொழுது கொண்டே வளத்தினை வழாது சொல்கேன் என்பது பொருள் முடிபு.
உலகை—உலகாபுரி என்பதன் மரூஉ. இவ்வூர் இப்போது 'உலக நல்லூர்' என வழங்கப் படுகிறது; பொன்பரப்பீசர்—இவ்வூரில் திருக்கோயில் கொண்டுள்ள சிவபெருமான்; புரிவு—விருப்பம்; கலுழி—வெள்ளம்.

2. காளம்—கருநிறமுடைய நஞ்சு, இங்கு ஆலகால விடம்; களத்தான்—கழுத்தினை உடையவன்; காளம் திணிகின்ற களத்தான்—விடம் செறிந்த கண்டன், சிவபிரான்.

(பெரியநாயகி துதி)

மெஞ்ஞான மயம்ஆகி நின்றாளை,
உலகுஉருவாய் விளங்கி னாளை,
எஞ்ஞான்றும் அருள்பொழியும் விழியாளை,
அகிலம்எலாம் இனிதுஈன் றாளை,
அஞ்ஞானம் தனைஅகற்றும் பொன்பரப்பு
நாயகனுக்கு அன்புஆ னாளை,
செஞ்ஞாயிறு ஒத்தாளை, உலகைநகர்ப்
பெரியாளைச்-சிந்தை சேர்ப்பாம். 3

(செல்வ விநாயகர் துதி)

ஐந்துகரம் படைத்தானை, அரன்தொழவும்
கிடைத்தானை, (அமரர்க்கு) ஆகத்
தந்திமுகன் வலிஅனைத்தும் உடைத்தானை,
தனிஇலங்கை அரக்க னாரை
மைந்தினொடும் புடைத்தானை, அடியர்வினை
துடைத்தானை, வளரும் சோலை
நந்துஉலகை இடத்தானைச்-செல்வவிநா-
யகனைஉன்னி, நான்உய் வேனே. 4

---

3. பெரியாள்—பெரியநாயகி, தலத்துத் தேவியின் திருநாமம்.

4. செல்வ விநாயகர்—தலத்துப் பிள்ளையார் திருநாமம்; தந்திமுகன்—யானை முகத்தினை உடைய கயமுகாசுரன்; இலங்கை அரக்கன்—இராவணன்; மைந்து—வலிமை; நந்து—பொருந்தியுள்ள.

(முருகக்கடவுள் துதி)

இனியவள்ளிக் கொடிபடரும் புயமலைகள்
உடையானை—இமையோர் வாழ்வை
நனிஅளித்த கொடையானைப்—பெரும்பூதப்
படையானை—நம்பி டார்தம்
துனிஅகற்றக் கிடையானைத்—தொழுதிஎனச்
சடையானைச் சொல்லி னானைக்—
கனிவளம்சேர் உலகைநகர்க் கடப்பமலர்த்
தொடையானைக்—கருதி வாழ்வாம், 5

(மூவர், அறுபத்து மூவர் துதி)

உமையவள்தன் திருமுலைப்பால் உண்டாரை—
ஒலிகடலின் உறுகல் மீது
தமைநிகர்க்க மிதந்துஏறி வந்தருளும்
அரசனைஓர் தையல் தன்பால்
இமையமகள் கொழுநரைத் தூது ஏவினாரை—
ஏழ்ஒன்பர் எனவாழ் வோரை-
விமலம்உறப் பணிந்து, அவர்தம் பதத்தூளால்
பவக்கடலை மேடு செய்வேன். 6

---

5. வள்ளிக்கொடி — கொடிபோன்றவளாகிய வள்ளியம்மை; துனி—துயரம்; கிடையான்—கிட்டாதவன்; தொழுதி—(பிரணவப்பொருளைக் கேட்டபோது) வணங்குவாயாக; சடையான்—சடைகளை உடைய சிவபெருமான்.

6. பா.வே. 2 : 6 பாவில்

உண்டார்—(ஞானப்பாலைப் பருகிய) திருஞான சம்பந்தர்; அரசர்—(கடலில் கல்லைத் தெப்பமாக்கிய) திருநாவுக்கரசர்; தையல் — பரவைநாச்சியார்; இமைய மகள்—பார்வதி; கொழுநர்—(உமையின் கணவராகிய) சிவபெருமான்; ஏவினார்—சுந்தரர்;ஏழ் ஒன்பர் என வாழ்வோர்—அறுபத்து மூன்று நாயன்மார், தொகைக்குறிப்புப் பெயர்;விமலம்உற—மாசுநீங்கிய தன்மை உண்டாக; பவக்கடல்—பிறவிக்கடல். பதத்தூளால் பவக்கடலை மேடுசெய்வேன் என்றது நயம்.

(அவையடக்கம்)

(அறுசீர் விருத்தம்—வேறு)

திருவும்நல் வாணி தானும்
செய்திடும் வாது தன்னைப்
புரிவொடு தமிழ்வல் லோர்முன்
புகலுவன்; இகழ்ந்து தள்ளார்-
கருவின்நூல் இனிது வல்ல
கம்மியர் ஆய்ந்து செய்யும்
உருவொடு குயவர் செய்யும்
உருக்களும் உலகில் உண்டே. 7

(நூல்)

(நாட்டுச்சிறப்பு)

பூஎனும் மாதின் மார்பில்
பொம்மல்வெம் முலைகள் ஏய்ப்ப
மேவுறும் கிரிக ளோடு
விளங்குவது—ஒளிகொள் முத்தக்
கோவைநல் அணிகள் என்னக்
குளிர்புனல் நதிகள் மிக்கு,
மூவுலகு உறுவோர் போற்றும்
முதன்மைபெற்று உளதுஓர் நாடு. 8

---

7. சிற்பநூல் வல்ல கலைஞர்கள் ஆகமங்களை ஆராய்ந்து அவற்றின் விதிமுறைகட்கேற்பச் செய்யும் சிலைகள் இறைவன் திருஉருவங்களாகப் போற்றப்படுதலைப் போலவே கல்வியறிவற்ற குயவர்கள் செய்யும் மண் வடிவங்களும் வழிபடப் படுதல் உண்டு. அங்ஙனமே பெருங் கவிஞர்களின் சிறந்த படைப்புகளுடன் இவ்வெளிய நூலும் பாராட்டப்படும் என்பது கருத்து.

புரிவு — ஆசையுடன்; கரு—சிலைகளைச் செய்வதற்கு உலோகத்தைஉருக்கி வார்க்கும் அச்சு; இங்குஆகுபெயராய்ச் சிற்பத்தை உணர்த்துகிறது.
கருவின் நூல் — சிற்ப சாத்திரம்,

எங்கணும் சிவால யங்கள்;
எங்கணும் கரும்பு, வாழை;
மங்கலச் செய்கள் எங்கும்;
மறையவர் அகரம் எங்கும்;
பங்கயன் பலநாட் டின்சீர்
யாவையும் படைத்துஒ ருங்கே
இங்குவைத் தனனோ என்ன
எழில்படைத்து உளது, அங் நாடு. 9

சேரலர் செங்நீர் உண்டு,
சிரங்களை அலகைக்கு ஈந்து, அங்கு
ஆருயிர் பிரித்துக் கூற்றுக்கு
அளித்திடும் இலைகொள் வேலான்-
மாரிஒத் தவன்நம் கங்கா
தரன்எனும் மன்னர் மன்னன்-
ஏர்திகழ் கவிகை நீழல்
இனிதுவாழ் திருநல் நாடு. 10

---

8. பா. வே. 1 : 2 மாது

கிரிகளோடு விளங்குவது ஓர் நாடு, நதிகள் மிக்கு முதன்மை பெற்று உளது ஓர் நாடு என இயைக்க.

பூ எனும் மாது—நிலமடந்தை; பொம்மல்—திரண்டுபருத்தல்; வெம் — வெம்மை, விருப்பம்.

9. மங்கலச் செய்கள் — வளப்பம் மிக்க வயல்கள்; அகரம் — அந்தணர் குடியிருப்பு; பங்கயன் — தாமரை மலரின்மேல் வீற்றிருக்கும் பிரமன்.

10. பா. வே. 2 : 2 பறித்து

சேரலர்—பகைவர்; செந்நீர் — இரத்தம்; அலகை — பேய்; இலைகொள் வேலான் — இலையின் வடிவில் அமைந்த தலைப்பகுதியை உடைய வேற்படையை ஏந்துபவன்; (கங்காதரன்).

(நகரச்சிறப்பு)

கோலம்ஆர் இனிய கல்லைக்
குறிச்சிநல் நாடு, அ தன்பேர்;
சீலமா தவத்தோர், சித்தர்,
செங்கம லத்தோன், மாலோன்
ஏலவே பூசை செய்ய,
இகபர பலங்கள் நல்கும்
பாலலோ சனனுக்கு அன்புஆம்
பழம்பதி அதில்ஒன்று உண்டால். 11

மருவியே மூழ்கு வார்தம்
வல்வினை நீக்கி, மற்றுஓர்
உருஎடுத்து உழலாது, ஆண்டே
உயர்கதி அளிக்கும் நீரால்
கருவிலி ஆறுஎன்று உய்ந்தோர்
கருதியே உரையா நிற்கும்
திருநதி வடபால் மேவத்
தென்கரை வைகும் அவ்வூர். 12

---

11. கோலம்-அழகு; கல்லைக்குறிச்சி-இந்நாளில் கள்ளக்குறிச்சி என வழங்கப்படுகிறது; தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ளது. செங்கமலத்தோன்—செந்தாமரைமேல் இருக்கும் பிரமன்; ஏல – நன்றாகப் பொருந்துமாறு; இகபரம்—இம்மை மறுமை; பால லோசனன்—நெற்றியில் கண்ணை உடைய சிவபெருமான்.

12. தன்னில் நீராடுவோரின் பிறப்புகளை இல்லாமற் செய்வதால் இந்த ஆறு கருவிலி ஆறு எனப்படுகிறது. கரு-பிறப்பை ஆகுபெயராக உணர்த்துகிறது. உரு—வடிவம், இங்கு உடல்; ஆண்டே – அவ்விடத்திலேயே; உயர்கதி – வீட்டின்பம்; நீர்—இச்சொல் இவ்விடத்தில் தண்ணீர், தன்மை எனச் சிலேடையாக ஆளப்பட்டுள்ளது.

அந்நால் நகரின் சீரை
யாவரே அறைய வல்லார்!
பந்தபா சங்கள் எல்லாம்
அத்தலம் பார்க்கத் தீரும்;
சிந்தையில் நினைத்த யாவும்
சித்திஆம்; திருப்பேர் ஓதின்,
முந்துஎழில் உலகை என்ன
உரைப்பர்கள், மூது ணர்ந்தோர். 13

பல்வளம் செறியும் அந்தப்
பதியினில் இனிது வாழும்
செல்வர்தம் மாடம் தோறும்
செழுந்தமிழ் ஆதி மல்கும்;
கல்வியுள் ளவர்மா டத்தில்
கனகபூண் ஆடை ஆதி
ஒல்லுறும்; வீதி தோறும்
திருவிழா அணிபெற்று ஓங்கும். 14

---

13. சீரை—சிறப்புகளை; பந்த பாசங்கள்—உயிர்களைப் பிறவித் தளையில் கட்டுணச் செய்யும் இயல்புள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள்; சித்தி ஆம்—நிறைவேறும்; உலகை—உலகாபுரி.

14. உலகாபுரி மக்கள் கல்விச்செல்வம், பொருட்செல்வம் ஆகிய இரண்டையும் குறைவறப்பெற்றிருந்தனர் என்பது கருத்து. செழுந்தமிழ் ஆதி—வளம் மிக்க தமிழ்மொழி முதலான பல மொழிகளின் கலைகள்; கனகபூண்—பொன் நகைகள்; ஆதி—முதலிய; ஒல்லுறும்—பொருந்தும்; ஓங்கும்—சிறக்கும்.

(சிவபெருமான் பூசை ஏற்றல்)

உவமைஇல் நலத்தது ஆகும்
 உலகினில் வலிய ஊரில்,
சிவன்அடி மறவாது ஏத்தும்
 செழியன்அந் தாலந் தீர்த்தான்
நவமணி யால்இ ழைத்து
 நன்குசெய் மண்ட பத்தில்,
குவலயம் புகழ ஈசன்
 கோளரி அணையில் உற்றான். 15

உற்றவன் ஆக மத்தின்
 உறுவிதி வழாது பூசை
முற்றுற முடிப்பக் கொண்டு,
 மொய்ம்புஉறு திருவின் நாதன்
குற்றம்நீங் குறச்செய் வித்த
 கோலமண் டபத்து இருந்து,
கற்றைஅம் சடில நாதன்
 கனகபூண் அணிந்திட் டானால். 16

---

15. உலகினில் வலிய ஊர்–உலகாபுரி; அந்தாலந் தீர்த்தான்–அரசனின் பெயர்; நவமணி–கோமேதகம், நீலம், பவளம், மரகதம், மாணிக்கம், முத்து, புருடராகம், வைடூரியம், வயிரம் ஆகிய ஒன்பது வகையான இரத்தினங்கள்; குவலயம்–உலகம்; ஈசன் கோளரி அணை–சிவன் வீற்றிருக்கும் சிங்காதனம்; அணையில் உற்றான்–ஆசனத்தில் எழுந்தருளினான். இது முதல் 18ஆம் பாடல் வரை நான்கு பாடல்களும் அந்தாதி.

16. மொய்ம்பு–வலிமை; திருவின் நாதன்–செல்வம் மிகப் பெற்ற தலைவன், அந்தாலந் தீர்த்தான்; சடிலநாதன்–சடைகளை உடைய சிவபெருமான்; கனகபூண்–பொன் ஆபரணம்.

பூண்பல அணிந்த பின்பு,
பொன்பரப் பீசன், அன்பால்
சேண்பயில் அமரர் பூவில்
சிறந்திடும் அன்பர் ஆனோர்,
மாண்பொடு வணங்கக்-கங்கா-
தரன்மணித் தூண்கள் நாட்டிக்
காண்புற இனிதுஅ மைத்த
காவணம் கருதி-வந்தான். 17

(சிவபெருமான் கொலு இருத்தல்)

வந்தநான் மறையோர் போற்ற,
வாய்த்தபல் கணங்கள் வாழ்த்த,
இந்திரன் முதல திக்குப்
பாலகர் இமையோர் யாரும்
தந்தம வரிசை நாடிச்
சார்ந்துஇரு பாலும் நிற்க,
நந்திகைப் பிரம்பு ஒலிக்க,
நலம்கொளும் கவரி வீச- 18

---

17. சேண்–மேல் உலகம்; அமரர்–தேவர்; பூ–நில உலகம்; காவணம்–பந்தல்.

18. பல்கணங்கள்-தேவகணங்கள் பதினெண்மர். இந்திரன் முதல திக்குப்பாலகர்;
கிழக்கு: இந்திரன்; தென்கிழக்கு: அக்கினி;
தெற்கு: இயமன்; தென்மேற்கு: நிருதி;
மேற்கு: வருணன்; வடமேற்கு: வாயு;
வடக்கு: குபேரன்; வடகிழக்கு: ஈசானன்.

இருமருங் கினும்ஆ லாத்தி
ஏந்திழை யார்கள் ஏந்த,
மருவுகந் திருவர் சித்தர்
விஞ்சையர் மகதி நல்யாழ்
ஒருகையில் பாட, விண்ணின்
மாதர்கள் உவப்பின் ஆட,
அரியணை மிசைஇ ருந்தான்-
அரிஅயன் பரவும் கோமான். 19

(இறைவியும் உடனிருத்தல்)

அண்ணலுக்கு அன்னை யாகி,
அருள்உரு வாகி, மாயை
வண்ணமாய், அலவும் ஆகி,
மாமறை போற்றற்கு எட்டா
உண்மையாய்ப்-பரனை நாளும்
உயிர்களுக்கு உதவும் நீர்மைப்
பெண்உரு வாய்-வி ளங்கும்
பெரியநா யகியும் உற்றாள். 20

---

19. *ஆலாத்தி—ஆரத்தி, விளக்கு; ஏந்திழையார்—சிறந்த ஆபரணம் அணிந்த மகளிர்; கந்திருவர், சித்தர், விஞ்சையர்—பதினெட்டுத் தேவகணத்தைச் சார்ந்தவர்; வீணை இசை வல்லவர்; விஞ்சையர்—வித்தியாதரர்; மகதி—நாரதருடைய வீணையின் பெயர்; மகதி நல் யாழ்—மகதி யாழைப் போன்ற நல்ல வீணை; ஒரு கையில்—ஒரு வரிசையில்; கை—வரிசை; உவப்பு—மகிழ்ச்சி; அரி—திருமால்; அயன்—பிரமன்.*

20. *பா. வே. 1 : 6 மாயா*

அண்ணலுக்கு அன்னை ஆகி—சக்தி தத்துவத்தில் இருந்து சதாசிவ தத்துவம் தோன்றுவதால் இவ்வாறு கூறப் பட்டது. ''சிவம்சத்தி தன்னை ஈன்றும் சத்திதான் சிவத்தை ஈன்றும் உவந்து இருவரும் புணர்ந்து இங்கு உலகு உயிர் எல்லாம் ஈன்றும்'' என்பது சிவஞான சித்தியார் (பாடல் 187). மாயை வண்ணமாய் அலவும்

(திருமகள் வருதல்)

இருந்திடும் அமையம் தன்னில்
எழில்மலர் மாது—போற்ற
முருந்துஉறழ் நகையா ரோடும்,
முளரிமா ளிகைவி டுத்துத்
திருந்துஒளி மணிசேர் பூண்கள்
அவயவம் செறியப் பூண்டு
பொருந்துபொன் மானம் ஏறிப்
போந்தனள்—புவியின் பாலே. 21

கற்பக மாலை யோடு
கவின்நவ மணியின் மாலை
பொற்பொடு நாற்றா நின்ற
பொருங்கல மானம் முன்னர்-
அஃபடி குழலார் தேடற்கு
அருமணி விளக்கம் ஏந்தி
முற்புகழ்ந்து ஏத்தத்—தேவர்
முறைமுறை வணங்கி நிற்க- 22

---

20. *ஆகி—(''வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யுமன்றே'' (சித்தியார் 143) என்றபடி அறிவை மயக்குவதோடு இறைவி ஞானமே வடிவாகவும் இருக்கிறாள் ஆதலின்) மாயையின் வடிவாகவும் அஃது இல்லாதவளாகவும் ஆகி.*

21. *அமையம்—நேரம்; மலர் மாது—தாமரையில் இருக்கும் இலக்குமி; முருந்து—மயில் இறகின் அடிப்பகுதி, இது பல்லுக்கு உவமை; நகையார்—பல்லினையுடையார்; பணிப் பெண்கள்; முளரி மாளிகை—தாமரையாகிய இருப்பிடம்; மானம்—விமானம் என்னும் ஒருவகைத் தேர்; போந்தனள்—வந்தனள்.*

மலர்மாது புவியின்பால் (இறைவனைப்) போற்றப் போந்தனள் என்பது பொருள் முடிபு.

நலம்கொளும் அடைப்பை தாங்கி
நாரியர் பலர்ந டக்கத்
துலங்குகா ளாஞ்சி தாங்கித்
தோகையர் அனேகர் சேர-
இலங்குநீர்க் கரகம் தாங்கி
எண்ணிலர் இருபால் ஏகச்-
சிலம்பொலி பரதம் காட்டத்
திருவனார் பலர்ந டிக்க 23

நறைப்பெரும் சந்தி னோடு
நானம்ஆ தியக லந்துஅங்கு
இறைத்தனர் முன்னர் ஏக-
இனியசா மரைஇ ரட்ட-
மறிக்குநேர் விழியார் ஆல
வட்டங்கள், குடைகள் தாங்கத்-
திறத்தினில், திரும டந்தை
சிவன்அடி பரவ வந்தாள். 24

---

22. நாற்றா நின்ற—தொங்கவிடப்பட்டிருந்த; பொரும் கல மானம்—அசைகின்ற அணிகலன்களால் அலங்கரிக்கப் பெற்ற விமானம்; அல்படி குழலார்—இருள் கவிந்திருத் தலைப் போன்ற கூந்தலை உடைய பெண்கள்; அரமகளிர்.

23. அடைப்பை–வெற்றிலைப்பை; காளாஞ்சி–எச்சிற் படிக்கம்; நீர்க்கரகம்–பூரண கும்பம், இது மங்கலப் பொருள், நாரியர், தோகையர், திருவனார் என்பன பெண்களைச் சுட்டும் ஒப்பினானாகிய பெயர்; பரதம்–நாட்டியத் திறமையை உணர்த்தியது.

24. நறைப்பெரும் சந்து–பெரும் நறைச் சந்து என்க; மிகுந்த மணத்தை உடைய சந்தனம்; வாசனையால் பெருமை பெற்ற சந்தனம் என்னவும் ஆம்; நானம்–கத்தூரி; சாமரை இரட்டல்–வெண்சாமரம் வீசல்; மறி–மான்.

வாய்ந்தபல் லியம்மு ழங்க
வந்தனள், உலகை மூதூர்க்கு;
ஏய்ந்திடும் மதிற்பு றத்தே
எழில்பெறும் மானம் நீங்கிக்-
காய்ந்துமுப் புரம்எ ரித்த
கண்ணுதல் காவ ணத்தில்
ஆய்ந்துஅறி முனிவர் ஏத்த
இருத்தல்கண்டு-அங்கண் வந்தாள். 25

வந்துமுன் பணிந்து நின்று
மாமணிக் குவையும் பொன்னும்
சந்தொடு குங்கு மாதி-
தையல்பங் காளன் முன்னர்-
நந்துதன் ஆசை முற்ற,
நண்பொடு பரப்பிப்-பின்னர்,
முந்துறும் அன்பி னாலே
முதல்வனைத் துதிக்க லுற்றாள். 26

---

25. *பல்லியம்—பலவகை இசைக்கருவிகள்; ஆய்ந்து அறி முனிவர்—மெய்ப்பொருள் நூல்களை ஆராய்ந்து நிலைத்த உண்மையை அறிந்த தவசியர்; முப்புரம்—பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றினால் கோட்டை கட்டிக் கொண்டு உலகிற்குத் துன்பம் செய்துவந்த மூன்று அசுரர் வாழ்ந்த ஊர்.*

26. *இது முன் பாட்டுடன் அந்தாதித்தொடை பெற்று வந்துள்ளது.*
தையல் பங்காளன்—மாதொரு பாகனாகிய சிவபெருமான்; திருமகள் படைக்கும் மாமணிக்குவை, பொன் போன்ற வற்றின் மேல் இறைவனுக்கு ஆசை இல்லை என்பதனையும் அவற்றைச் சமர்ப்பிக்கவேண்டும் என்பது திருமகளின் ஆசை என்பதனையும் புலப்படுத்த ''நந்துதன் ஆசை முற்ற'' என்றார். நந்துதல்—பெருகுதல்; நண்பு—அன்பு.

(திருமகள் இறைவனைத் துதித்தல்)

"பொன்எனும் பொருளி னாலே
  பொருந்துறப் பெண்ணும் மண்ணும்
மன்னுயிர் தனக்கு அ ளித்து
  வரிசையும் கீர்த்தி தானும்
துன்னுற ஆடல் செய்யும்
  தூயபொற் சடில, போற்றி!
பொன்னிகர் கொன்றை சூடும்
  பொன்பரப் பீசர், போற்றி! 27

"பொன்னின்நன் மலர்கள் தூவிப்
  பொன்னுல கத்தோர் போற்றப்
பொன்னிணர்த் தருவின் நீழல்
  அளித்திடு புனித, போற்றி!
பொன்னின்நல் நிறம்ப டைத்த
  புராரியே போற்றி!'' என்று
பொன்னெனும் மான்ப ணிந்தாள்-
  பொன்பரப் பீசன் தாளை. 28

---

27. *வரிசை — முதன்மை, சிறப்பு; துன்னுற—அடைய, பெற; பொற் சடில—பொன் நிறம் வாய்ந்த சடையை உடைய சிவபெருமானே; போற்றி—வணக்கம்.*

28. *பொன்னுலகத்தோர்-தேவலோகத்தில் வாழும் அமரர்கள்; பொன் இணர்த் தரு — தங்க மயமான பூங்கொத்துகளை உடைய கற்பகமரம்; தரு—மரம்; நீழல்—நிழல்; புராரி—முப்புரங்களுக்குப் பகைவனாகிய சிவபெருமான்; பொன் எனும் மான்—திரு என்னும் பெயரை உடையவளும் மான் போன்றவளும் ஆகிய இலக்குமி.*

திருமகள் பொருட்செல்வங்களுக்கு அதிதேவதை ஆதலானும், அவளுக்கு அச்செருக்கு இருப்பதாகப் பின்னர்க் கூறப் போவதானும் இவ்விரு பாடல்களிலும் பொன்னைப் பற்றியே நிரம்பக் கூறினார்.

அலர்மகள் போற்றி நிற்கும்
வேளையில்—அமலன் தாளைக்
கலைமகள் பரவ உன்னிக்
கவின்கொள்புண் டரீகம் நீங்கி,
உலகைமா புரியை நாடி,
உவப்பொடு நடந்தாள்—சூழ்ந்து
பலமுனி வரரும், விஞ்சை
படிப்பவர் தாமும் போற்ற. 29

(எண்சீர் விருத்தம்)

சுருதிஎழிற் சிரம்ஆக, ஆக மங்கள்
துலங்குறுநன் முகம்ஆகப், பரதம் தானே
மருவும்அடி இணையாகச், சங்கீ தம்தான்
வளமலியும் மிடறாக, எழுத்தும் எண்ணும்
வரியொளிசேர் இருவிழிகள் ஆக, மற்றும்
விளங்குறும்அங் கங்களும்அங் கங்கள் ஆகப்,
பெரிதுஉயரும் புலவர்கள்நா என்னும் பாத
பீடிகைதொட்டு, இனிதுஎழுந்து பெயர்ந்தாள்
மன்னோ. 30

---

29. பா.வே. 1 : 4 எல்லையில்

அலர்மகள்—செந்தாமரை மேலிருக்கும் திருமகள்; அமலன்—குற்றங்கள் இல்லாதவன் ஆகிய இறைவன்; புண்டரீகம்—தாமரை; இடத்திற்கேற்ப வெண்டாமரை எனக் கொள்க, விஞ்சை—வித்தை, கலைகள்.

30. பல கலைகளும் நாமகளின் பல்வேறு உறுப்புகளாக உருவகம் செய்யப்படுகின்றன.

சுருதி—காதினால் கேட்டே பயிலப்படும் வேதங்கள்; ஆகமம்—வேதங்களை விளங்கச் செய்யும் நூல்; பரதம்—கூத்து நூல்; கூத்து தேசிகம், மார்க்கம் என இரண்டு பெரும் பிரிவினை உடையதாதலின் இரண்டு தாள்களாக உருவகித்தார்; மிடறு—தொண்டை; எழுத்தும் எண்ணும் இரு விழிகள்—

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

வடகலைமாது ஒருபாலும் தென்கலைமாது
    ஒருபாலும் மலர்க்கை தாங்கத்-
திடமுடைய ஆரியமும் கருநடமும்
    தெலுங்கும்மிகு திறத்தைப் போற்றப்
புடவியின்மற் றுளவாய் விஞ்சைகளும்
    பரிசனமாய்ப் போத-வாணி
படிமிசைக்கா வியங்கள்எனும் பூண்தரித்து அங்கு
    இதிகாசம் பரவ வந்தாள். 31

(வேறு)

வந்து, பொன்பரப் பீசர்தம்
    கோவிலை வலங்கொடு, அங்குஉள்புக்கு,
நந்து பேர்எழில் காவணப்
    பந்தருள் நண்ணிய பரன்தாளைக்
கந்த மாமலர் தூவினள்,
    வணங்கினள்-கண்ணுதல் களிகூர,
முந்து நல்லிசை வீணைஒன்று
    ஏந்தினள், முனைவனைத் துதித்தாளே. 32

---

30. ''எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு'' (குறள்: 392)

அங்கங்கள்—முன்னது வேதத்தின் ஆறு அங்கங்கள் ஆகிய சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கற்பம், சந்தோபிசிதம் ஆகியவை, பின்னது உடலின் உறுப்புகள்; பாத பீடிகை—மிதியடி, தொட்டு, இட்டு, அணிந்து.

31. வடகலை—வடமொழி; தென்கலை—தமிழ்; ஆரியம்—இங்கு வடமொழியொழிந்த ஏனை ஆரியமொழிகள் போலும்; கருநடம்—கன்னடம்; புடவி—உலகம்; விஞ்சை—கலை, இவ்விடத்தில் மொழிகள்; பரிசனம்—ஏவலர்; படிமிசை—பூமியின் மேல்; காவியம்—கதை தழுவி வரும் பெருநூல்; பூண்—அணிகலன்; இதிகாசம்—பழங்கதை; இராமாயணம், மாபாரதம் போல்வன.

(கலைமகள் இறைவனைத் துதித்தல்)

(வேறு)

''நான்மறை பகர்ந்தோய் போற்றி!
நலங்கொள்ஆ கமங்கள் சொன்ன
வானவா போற்றி! மிக்க
மநுக்களும் ஆனாய் போற்றி!
ஏனைவன் னங்கள் ஆகி,
இலங்கும்ஓங் காரம் ஆகி,
ஞானிகள் பரவும் நாத-
நல்உரு ஆனாய், போற்றி! 33

உலகிடைச் செல்வம் எல்லாம்
துயர்தரும் ஒழியும் என்று
நிலைபெறு கல்வி யுள்ளார்
நெஞ்சிடைத் துறந்து எந்நாளும்
பலவித விஞ்சை தன்னால்
பரவுற, அவர்கள் தங்கள்
புலன்உற இனிது தோற்றும்
பொன்பரப் பீச, போற்றி!'' 34

---

32. பா. வே. 2 : 6 அரன்தாளைக்

இது முன் பாடலுடன் அந்தாதித்தொடை பெற்று வருகிறது. 25, 26 ஆம் பாடல்களைப் போன்ற அமைப் புடைமை காண்க. வலங்கொடு—வலம் வந்து, அஃதாவது திருக்கோயிலை வலமாகச் சுற்றி வந்து; காவணப்பந்தர்—ஒருபொருட் பன்மொழி; கந்தம்—மணம்; மா—அழகு; முனைவன்—முன்னவனாகிய இறைவன்.

33. மநு—மந்திரம்: வன்னம்—எழுத்து; ஓங்காரம்—ஓம் என்பது; நாத நல் உரு—(சிவபெருமானின் ஒன்பது வகையான வடிவங்களுள் ஒன்றான) நாதம் என்னும் நல்ல உருவம்; மற்ற எட்டு வருமாறு: சிவம், சத்தி, விந்து, சதாசிவன், மகேச்சுரன், உருத்திரன், திருமால், பிரமன்.

(திருமகள் வினா)

என்பன தோத்தி ரங்கள்
    இயம்பலும், அலர்மின் கேட்டுப்-
''பொன்பரப் பீசன் இந்த
    வைபவம் பொருந்தல் என்னே?
மன்பதை மாட கூட
    மண்டபம் கோபு ரங்கள்
இன்புற இயற்றல் என்னே?
    ஈசனும் கொள்வது என்னே? 35

(எழுசீர் விருத்தம்)

எங்குளர் தாழும் எவைகளும் உடுத்துண்டு
    இருப்பதற்கு இச்சையே படைத்தார்;
தங்குறும் நினது கல்வியில் இச்சை
    சார்ந்திடல் சிற்சிலர்க்கு அன்றோ?
கொங்கைஅம் குவட்டு வாணி!நீ இனிமேல்
    கூறுதி!'' என்னலும், கேட்டுப்-
''பங்கயத் திருவே! என்சொனாய்? இதுஓர்
    பான்மையோ? கேள்!''எனப் பகர்ந்தாள். 36

---

34. *பா. வே. 1 : 1 உலகு அடை*

துறந்து—துறவு நிலை எய்தி, பற்று விடுத்து; விஞ்சை—பொதுவாகக் கலைகள், இங்குச் சிறப்பாக உபாசனைக்கு உரிய மூலமந்திரங்களைக் குறிக்கும்; வித்யா என்பது வடமொழி; புலன் உற—அந்தக்கரணங்களால் அறியும்படி; மூல வித்தைகளால் தியானித்தல் யோகத்தின் பாற்படும்; இறைவன் யோகிகளின் உள்ளத்தே வெளிப்படையாக விளங்குவான் என்பது சமயநூல் துணிபு.

முன் திருமகள் செய்த தோத்திரம் பொருட்செல்வத்தின் அடிப்படையிலும் கலைமகளின் இத்துதி கல்விச் சிறப்பின் அடிப்படையிலும் அமைந்துள்ளமை காண்க.
இத்தோத்திரமே வாதத்திற்கு மூலமாக அமைந்துள்ளது.

35. *வைபவம்—சிறப்பு, இங்குத் திருமகள் கருதுவது செல்வச் செழிப்பை; என்னே—எதனால்; மன்பதை—உலகத்தவர்,*

(கலைமகள் விடை)

''பசுவொடு சிசுவும், பேயரும், விடம்சேர்
பாம்புடன் இழுதையர் தாமும்,
இசையொடு பாடில், விரும்புவார் என்னல்
ஏழுலக ங்களும் அறியும்;
கசிவுடன் உருகும் கல்லும்;மற்று என்னே!
கல்வியின் நலமெனக் கருதாய்!
நசைபெறு கல்வி அல்லதுஇவ் வுலகில்
நாட்டுதற்கு ஒருபொருள் உளதோ? 37

துறந்திடும் அவர்க்கும் விரதியர் தமக்கும்
சொல்லின்உண்டு உடுத்தல்வேண் டிலவாம்;
அறந்தெரி கல்வி விடுத்தவர் யாரே
அறை?''என வாணிமாது இசைக்க-
நிறந்திகழ் பதும மாளிகைத் திருவும்
நெஞ்சிடை வெகுண்டுபின் உரைத்தாள்:
''இறந்தவர் தமக்கும் பிறந்தவர் தமக்கும்
இரும்பொருள் வேண்டிடும், ஏழாய்! 38

---

36. *இச்சை—விருப்பம்; குவடு—குன்று; குவட்டுக்கொங்கை, அம்கொங்கை என இயையும். பங்கயம்—தாமரை.*

37. *பா. வே. 4 : 3* **அல்லதுஅவ்**

சிசு—குழந்தை; பேயர்—பேய் பிடித்தவர்கள்; இழுதையர்—அறிவற்றவர்கள்; கசிவுடன்—அன்புடன்; நலம்—நன்மை, சிறப்பு; நசைபெறு—விரும்பத்தக்க.

38. *விரதியர்—நோன்பு நோற்பவர்கள்; நிறம்திகழ்—வண்ணம் மிக்க; பதும மாளிகை—தாமரையாகிய இருப்பிடம்; ஏழாய்—ஏழையே, இங்கு அறிவற்றவளே என்னும் பொருளில் வந்தது.*

(திருமகள் மறுப்புரை)

''முனிவர்மன் னவர்கள் நினைந்தவை யாவும்
முடிக்குதல் பொன்னினால் என்ன,
நன்கனம் வாத வூர்இறை மொழிந்த
நறுந்தமிழ் அறிந்திலை கொல்லோ?
பிணையும்ஒன்று உரைக்கேன்: 'ஆயிரம் கோடி
பேசல்என், ஒருபயன் இன்றேல்'
எனஉலகு உரைக்கும் அதற்குஉளம் நாணாய்!''
என்றிடச் சொல்மகள் உரைப்பாள்; 39

(கலைமகள் பதில்)
(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

''என்னை என்னைநீ கூறினை?
அகப்பொருட்கு இயல்புஎனல் அறிந்தாயில்;
பின்னை, ஏன்அவர் தம்முடைத்
திருஎலாம் பெரிதுறத் துறந்துஏகித்
தன்னை, நேர்பரன் தன்னையேன்
பாடினர்? தகைமையொன்று அறிந்தாயில்;
இன்னும் நின்னுளத்து இருந்தவை
யாவையும் இயம்புதி, மலர்மாதே!'' 40

---

39. வாதவூர் இறை—திருவாதவூரர் ஆகிய மாணிக்கவாசகர்; நறுந்தமிழ்—திருக்கோவையார்; இங்குக் குறிக்கப்பெற்றது: 'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னான் முடியும்என' எனவரும் செய்யுட்பகுதி (திருக்கோவையார் 332:1). பேசுதல் அறிவின் கூறு, அஃதாவது கலைமகளின் அருள், ஆனால் பயன் பெறுதல் திருமகளின் கூறு; சொல்மகள்—சொல்லின் கிழத்தி, கலைமகள்.

40. அகப்பொருட்கு இயல்பு—கோவையில் இடம்பெறவேண்டிய அகப்பொருள் துறைக்காகத் திருவாதவூரர் அவ்வாறு கூறினார். அது அவருடைய சொந்தக் கருத்தன்று, அவர் அப்படிக் கருதி இருப்பின் அனைத்தையும் துறப்பானேன் என்கிறாள் கலைமகள். அறிந்தாயில்—அறியவில்லை; பெரிதுற—முற்றும்; பரன்—மேலோன், கடவுள்; தகைமை—தகுதி, முறைமை; உளம்—உள்ளம், மனம்; யாவையும்—எல்லாவற்றையும்; இயம்புதி—சொல்.

(திருமகள் மறுப்பு)
(வேறு)

''புண்டரிக மலர்மாதே! எத்தனைநீ
புகன்றாலும், பொருளே இல்லை;
பண்டுபெரி யோர்உரைத்தார் நாலடிநா
னூறதனில்: 'பத்தெட்டு உண்டேல்
மண்டலத்தில் அவர்பெரியர்; பொருள்இன்றேல்,
நற்குலத்தில் வந்துற் றாலும்
விண்டுயிர்போம் பிணத்தினுக்கும் கடையென்றார்?''
என,மொழிமான் விளம்ப லுற்றாள்: 41

(கலைமகள் கட்டுரை)

'திருமடந்தை! நீஅறைந்த செழுந்தமிழின்
உரைநன்றே! செப்புங் காலை,
உரியஇந்த அதிகாரம் உறுதிபெற
உரைத்தது அல்லால், உண்மை கொல்லோ?
அரியதிரு வள்ளுவர்முன் கல்வியினைப்
புகழ்ந்துஉரைத்தல் அறிந்தி லாயோ?
மருவுகல்வி உடையாற்குஎங் நாடும்தன்
நாடுஎனவே வகுத்திட் டாரே.'' 42

---

41. இங்கு இடம்பெற்ற நாலடியார்ப் பாடல் வருமாறு:
*''அத்துஇட்ட கூறை அரைச்சுற்றி வாழினும்
பத்துஎட்டு உடைமை பலருள்ளும் பாடுஎய்தும்
ஒத்த குடிப்பிறந்தக் கண்ணும்ஒன்று இல்லாதார்
செத்த பிணத்தின் கடை'' (281)*

அத்து இட்ட—செஞ்சாயம் ஊட்டிய; கூறை—ஆடை; பத்துஎட்டு என்பன அந்த எண்ணளவுப் பொருளைச் சுட்டும்; பாடு—பெருமை; விண்டு—வேறுபட்டு, பிரிந்து.

42. *அந்த அதிகாரம் உறுதிபெற—நாலடியாரில் வறுமையின் துயரைக் கூறும் 'இன்மை' என்னும் அதிகாரப் பொருளை வலியுறுத்த; திருக்குறளின் நாற்பதாவது அதிகாரமாகிய 'கல்வி' பொதுவாகவும்,*

*''யாதானும் நாடுஆமால் ஊர்ஆமால் என்ஒருவன்
சாம்துணையும் கல்லாத வாறு?'' என்னும் குறள் (397)
சிறப்பாகவும் எடுத்துக்காட்டப்பெற்றன.*

''செவியினது சுவைஉணரார் வாய்உணர்வில்
திரிந்துஉழலும் சிறிய மாக்கள்;
அவியினும்என், வாழினும்என்?' என்றுமுனம்
வள்ளுவர்தாம் அறைந்தது ஓராய்!
கவிசொலும்என் நலத்தினுக்கோ, திருவொடுவாழ்
நலத்தினுக்கோ, காது வீடாய்ப்
புவிபுகழ ஓர்இருவர்க்கு அளித்திட்டான்,
புராரிமுனம்? புகன்றி டாயே!'' 43

(திருமகள் மறுப்புரை)

(வேறு)

''நன்று, வாணிநீ கூறினை! கல்வியை
நாடியோ செவிஈந்தான்?
ஒன்றும் அன்பினுக்கு அல்லவோ? அன்றுஎனில்,
உரைக்குவன் பலகேளாய்!
துன்று கோவணம் மாவடு நீள்மயிர்
துற்றஊன் முதலாக
நின்ற புல்லிய பொருள்கொடு தன்னொடு
கலந்திட நினைத்தானே. 44

---

43. ''செவியின் சுவைஉணரா வாய்உணர்வின் மாக்கள், அவியினும் வாழினும் என்'' என்னும் திருக்குறள் (420) ஆளப்பட்டது. புராரி—முப்புரங்களுக்குப் பகைவன் ஆகிய சிவபெருமான்; சிவபெருமான் இருவர்க்குக் காது வீடாக அளித்தமை—அசுவதரன், கம்பளன் என்னும் நாகலோக வாசிகள் இருவர் கலைமகளிடம் இசைப்பயிற்சி பெற்றவர். இவர்களிருவரும் இறைவனின் திருச்செவி களில் தோடுகளாக இருந்து எப்போதும் இசைத்துக் கொண்டே இருப்பர். ''பூதரும் இசைதிசை பரவ இருவர்கள் பயிலும் இயல்தெரி வெள்வளைத் தோட்டினர்'' (மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் 3:2).

44. இறைவன் எளிய பொருள்களைக் கொண்டே அடியார்களை ஆட்கொண்டான்; விலைமதிப்பு மிக்க பொருள்களால் அன்று என்கிறார். கோவணத்தால் ஆட்கொண்டது அமர்நீதி நாயனாரை; மா வடுவால் அரிவட்டாய நாயனாரை; மகளின் நீண்ட கூந்தலால் மானக்கஞ்சாற நாயனாரை; தான் புசித்த எச்சில் ஊனால் கண்ணப்ப நாயனாரை.

அந்த வள்ளுவ தேவர்ஏன்,
    'அருள்இலார்க்கு அவ்வுலகு இல்'ஓதினர்?
'இந்த மாநிலப் பயன்இலை
    பொருள்இலார்க்கு இயம்பின படி'என்றே
முந்த ஓதினர்; உரைத்திடாய்!
    கல்வியே மூலம்என் றிடில்,என்னே,
நந்துஅ றம்பொருள் இன்பமே
    நல்கதி நாட்டினர்? மொழிமாதே!'' 45

(கலைமகள் எதிர்வினா)

(வெண்டளைக் கலிப்பா)

'செல்லொத்த கூந்தல் திருமகளே! ஆண்டுஅவரே
செல்வத்துக்கு அன்றோ நிலையாமை செப்பினரால்;
'செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை'எனவும் செப்பினரே. 46

---

45. இங்கு ''அருள்இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருள் இல்லார்க்கு, இவ்வுலகம் இல்லாகி யாங்கு'' எனவரும் திருக்குறள் (247) சுட்டப் பெற்றது. மேலும் திருவள்ளுவர் தம் நூலில் அறம், பொருள், இன்பம் என்ற முப்பெரும் பிரிவுகளையே அமைத்துள்ளதும், பொருளைப் போலக் கல்வி தனி இடம் பெறாததும் குறிக்கப்படுகிறது.

46. செல்—மேகம்; ஆண்டு—அவ்விடத்தில், அஃதாவது அதே திருக்குறளில்; செல்வத்திற்கு நிலையாமை கூறியது 34ஆம் அதிகாரத்தில்; இப்பாடலில் 411ஆம் திருக்குறள் அப்படியே ஆளப்பட்டுள்ளது.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

கல்வியைவிட்டு ஒருநலமும் கண்டதுஉண்டோ?
மலர்மாதே! கழறக் கேளாய்!
கல்வியினால் இயல்இசைநா டகம்அனைத்தும்
உண்டு,அவற்றால் களிப்பும் சேரும்;
கல்விஉடை யார்எவர்க்கும் அரியவராம்;
நீஇதனைக் கருதிப் பாராய்!
கல்விஇலார் இகபரங்கள் தெரியார்காண்''
எனத்திருவும் கழற லுற்றாள்: 47

(திருமகள் துணிவுரை)

''இங்குஇவைநீ மொழிந்தஎலாம் வறியமொழி;
செல்வம்உளார் எங்குஉற் றாலும்;
அங்குஅடைவர், அனைவர்களும் தம்வயிறு
வளர்த்திடுவான்; அறைவ யாவும்
பொங்குறுசெல் வர்க்கு;அரிய பொருள்உண்டோ?
'பிடிஅனத்தைப் புவியில் வீசில்,
எங்குஉறுகா கமும்அடையும்' எனில்போலப்
பொருள்உளர்பால் எய்து வாரே. 48

---

47. கழறல்—சொல்லுதல், இடித்துரைத்தல்; களிப்பு—மகிழ்ச்சி; கருதி—எண்ணி, ஆராய்ந்து; இகபரம்—இம்மை மறுமை.

48. வறியமொழி—பொருளற்ற சொல்; 'கூரையின் மேல் சோற்றை எறிந்தால் ஆயிரம் காக்கை வரும்' என்பது பழமொழி.

(வேறு)

''பன்னிநான் உரைப்பது என்? பொன்-
  பரப்புநா யகர்த மக்குஇங்கு
என்னருள் பெற்றோர் தம்மால்
  எய்துறும், மாட கூடம்;
மன்னுகோ புரமும், மிக்க
  மதிலொடு திருவி ழாவும்,
மின்னுபூண் பலநி வேதம்
  ஆதியும் விளங்கும் தானே. 49

(கலைமகள் கருத்துரை)

சொலாய்இனி வாணி!'' - என்னச்
  சொல்வள் - ''என் அருள்பெற் றோரால்,
உலாமுதல் பரணி கோவை
  உயர்தல புராணம் ஆகி
நிலாவுறும்; மாட கூடம்
  நீண்மதிள் கோபு ரங்கள்
எலாம்அழி யினும்அந் நூல்கள்
  இருத்தலால், பின்னும் எய்தும்.'' 50

---

49. என் அருள்பெற்றோர்தம்மால் நாயகர்தமக்கு மாடகூடம் மன்னு கோபுரம் மிக்க மதிலொடு திருவிழாவும் மன்னுறும்; (என் அருள்பெற்றோர்தம்மால்) பூண் நிவேதம் ஆதியும் விளங்கும் எனக் கூட்டுக.
நிவேதம்—நிவேதனம்; இறைவனுக்குப் படைக்கப்படும் திருஅமுது. ஆதியும்—முதலியனவும்.

50. கலைமகள், ''செல்வத்தால் உண்டாக்கப்பெறும் மாட கூடங்கள் முதலியன காலத்தால் அழிந்துவிடும்; ஆனால் கல்வியாளர்களால் படைக்கப்படுகிற தலபுராணம் முதலிய இலக்கியங்கள் காலத்தை வென்று நிலைத்து வாழும்; அந்நூல்களால் ஒரு தலத்தின் சிறப்புகள் உணரப்பட்டு அழிந்த மதில், கோபுரம் ஆகியன மீண்டும் எழும்; எனவே

(திருமகள் திடமொழி)

(வேறு)

என்ன வாணிதான் இசைத்தலும்,
மலர்மகள் இயம்புவாள்: ''இனிதேநீ
சொன்ன வாசகம்? எத்தனை
புராணங்கள் சொல்லினும் பயனில்லை!
பொன்னி னால்தலம் என்பதும்,
பரிசனம் பொருந்தலும், புவியுள்ளார்
மன்னி அன்பொடு வணங்கலும்
உண்டுகாண்! வறியசொற் றிடல்என்னே! 51

(வேறு)

விடுகினது வார்த்தைகளை; ஒருநலமும்
பொருளிலார்க்கு மேவா கண்டாய்;
'வடு அகலும் வையகத்தின் மன்னியமூன்
றினில்நாடி வகுக்கும் காலை,
நடுவணது பொருந்திடினே இருதலையும்
பொருந்தும்இன்றேல் நாடி னோனுக்கு
அடுஉலைப்பெய் திடுவதுபோல் துயரடையும்'
எனவுமுன்னோர் அறைந்திட் டாரே. 52

---

50. கல்வியே சிறப்புடையது'' என்கிறாள். ''நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினும் நூற்சீலை, நால்திங்கள் நாளுக்குள் நைந்துவிடும் – மாற்றலர்கள், பொன்றப் பொருதடக்கைப் போர்வேல் அகளங்கா, என்றும் கிழியாதுஎன் பாட்டு'' (அவ்வையார் தனிப்பாடல்), ''கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும், மலரவன் வண்தமிழோர்க்கு ஒவ்வான்–மலரவன்செய்,வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு, மற்றுஇவர் செய்யும் உடம்பு'' (நீதிநெறி விளக்கம். 6) என்பன இங்குச் சிந்திக்கத்தக்கன.

51. பரிசனம்–ஏவலாளர்.

52. ''வடுஇலா வையத்து மன்னிய மூன்றில், நடுவணது எய்த இருதலையும் எய்தும், நடுவணது எய்தாதான் எய்தும் உலைப்பெய்து, அடுவது போலும் துயர்''
(நாலடியார். 114).

''இக்கணத்தில் வறியனைஇந் திரன்ஆக்கி,
இந்திரனை வறியன் ஆக்கித்
தொக்கவரும் புகழ்ந்திடவும் இகழ்ந்திடவும்
புரிந்திடுவேன்; சொல்லின் மாதே!
மைக்கடல்சூழ் உலகிடைபொன் ஆசைவிடுத்-
தவர்எவர்தாம்? மழுமான் ஏந்தும்
முக்கணனும் துறந்தவர்க்கு முத்தியென்றான்''
எனமொழிமான் மொழிய லுற்றாள்: 53

(கலைமகள் தெளிவுரை)

''ஒருகணம்இந் திரன்ஆக்கி ஒருகணம்நல்-
குரவன்என உஞற்றல் கண்டே,
'திருநிலைஅன்று' எனஅறிஞர் செப்பினரால்;
கல்வியைப்போல் சிறந்துஎந் நாளும்
மருவல்உண்டோ? 'கல்வியின்மேல் ஆசையினை
விடுக'என மாற்றி னாரோ?
உரியகல்வி உடையவரே நலம்அடைந்தார்''
எனமலர்மாது உரைக்க லுற்றாள்: 54

---

53. மைக்கடல்—மையைப்போல் கரிய நிறம் படைத்த கடல்.

54. ''அகடுஉற யார்மாட்டும் நில்லாது செல்வம் சகடக்கால் போல வரும்'' (நாலடி 2—3, 4), ''அற்கா இயல்பிற்றுச் செல்வம்'' (குறள் 333), ''ஆறுஇடும் மேடும் மடுவும் போல் ஆம்செல்வம் மாறிடும் ஏறிடும்'' (நல்வழி. 32:1, 2) என்பனவற்றை நினைந்து கூறியது. உஞற்றல்—செய்தல், மருவல்—கலத்தல், பொருந்துதல்; மாற்றினரோ—எதிர் மொழி கூறினரோ. மலர்மாது - செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள்.

(திருமகள் செருக்குரை)

''செல்வமது பெற்றவரே நலமனைத்தும்
பெற்றிடுவர்; சிறப்பின் ஊடே
கல்வியினால் பெறுநலமும் உண்டுகொலோ!
உண்டாயின், காட்டி டாயே!
அல்விரியும் குழலாளே! உலகினிடை
யாவர்களும் அறிவர் கண்டாய்;
பல்விதமாய் விரித்தோதின் அல்லதுஉனக்
குத்தெரியா; பகரக் கேளே! 55

(கலிநிலைத்துறை)

கல்விஅ டைந்தவர் செல்வம்நி-
றைந்தவர் கண்டவாயிற்
பல்வளம் வேண்டிந டப்பர்கள்
அல்லது, பரிவாகச்
செல்வம்அ டைந்தவர் கல்விஉ
ளாரிடைச் செலல்உண்டோ?
அல்வளர் மென்குழ லாய்,''என-
மொழிமான் அறைகின்றாள்: 56

---

55. அல் விரியும் குழலாள்—இருளைப் போன்ற கரிய ஒளியைப் பரப்பும் கூந்தலை உடையவள், இங்கு நாமகள்.

56. ''கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின் எல்லோரும் சென்று அங்கு எதிர்கொள்வர்'' (நல்வழி 34 : 1, 2), ''என் சொலினும் கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும் கடல் ஞாலம்'' (நீதிநெறி விளக்கம் 10 : 2–3), கடைவாயில்—தலைவாயில்; மொழிமான்—சொல்லின் கிழத்தியாகிய கலைமகள்.

(கலைமகள் மறுப்புரை)

"அறிந்திலை, ஒன்றும்அ றிந்திலை,
நீசெவ் வலர்மாதே!
துறந்தவர் தம்முழை சென்றொரு
சோழன் தொழுதுஇன்பம்
பெறுந்தமிழ் கொண்டதுஅ றிந்திலை;
சங்கரர், பேசுங்கால்,
சிறந்திடு தூதுந டந்ததுஎ
வர்க்கும் தெரியாதோ?" 57

(திருமகள் இகழ்வுரை)

"தூதுந டந்தது தோழமை;
யார்கவி சொன்னாலும்
போதுவ ரோவிடு தன்புகழ்
வீரம் புவிகாணும்
ஏதுவி னால்ஒண் பரணித்
தமிழ்அவ் இறைகொண்டான்;
ஓதுறில், உதரம்வ ளர்த்திட
வோ;என் உரையாயே! 58

57\. துறவியின்பாற் சென்று வழிபட்டுச் சோழன் பெற்ற தமிழ் நூல் பரணி என்பது அடுத்த பாடலால் புலனாகிறது. சோழர்களைப் போற்றும் கலிங்கத்துப் பரணியை இயற்றிய செயங்கொண்டார் ஒரு துறவி என்பதும் அந்தப் பிரபந்தம் சோழ மன்னனின் வேண்டுகோளால் இயற்றப் பட்டது என்பதும் இந்நூலாசிரியர் கருத்து என்பது தெரிகிறது. அலர்மாது—திருமகள்; துறந்தவர்—துறவி, செயங்கொண்டாரைக் குறிக்கிறது.

சோழன்—அபயன் எனப்பெயர் பெற்ற முதல் குலோத்துங்க சோழன்; சங்கரர் தூது நடந்தது — சுந்தரமூர்த்தி நாயனாருக்காகத் திருவாரூரில் பரவை நாச்சியார் திருமாளிகைக்கு.

58\. இறைவன் தூதுவராகச் சென்றது சுந்தரர் மாட்டுத் தாம் கொண்ட நட்பினால்தானேயன்றி அவர் கவிஞர்

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

எனதுஅருள் படைத்த திருவினர் அன்றோ,
இரப்பவர்க்கு ஈபவர், களிப்போர்,
நினதுஅருள் படைத்தோர் அன்றுகொல், ஏற்போர்,
நெடுந்துயர் பெறுகுவர்? நிகழ்த்தின்,
எனதுஅருள் படைத்தோர் அன்றுகொல், சிறப்பொடு
இருந்துஉயர்ந் திடும்மொழி மொழிவார்?
நினதுஅருள் படைத்தோர் சிறப்பழிந்து எவர்க்கும்
நிகழ்த்துவர் இனியசொல்'' எனவும்- 59

(கலைமகள் கனிவுரை)

(அறுசீர் விருத்தம்)

''மலர்ம டந்தை,கேள்!'' என்றுஇவை
வகுத்தனள்: ''மகிழ்வின்என் அருள்பெற்றோர்
உலகின் முன்தமிழ் ஈவர்கள்;
ஈயினும், ஒழிந்திடார்; தமிழ்சேர்வர்;
நிலவு றும்சபை புகழ்ந்திடக்
களிப்பர்கள்; நெடுஞ்சபைக்கு அணிஆவர்:
உலவு மென்மொழி கூறுவர்;
செல்வர்போல் கொடுமொழி கூறாரே. 60

---

58. என்பதால் அன்று எனவும் கவி பாடுபவர்கள் அனைவர்க்கும் சிவபெருமான் பணிபுரிய மாட்டார் எனவும் திருமகள் கூறுகிறாள். விடு—பயனற்ற அந்த வாதத்தை விட்டுவிடு.

குலோத்துங்க சோழன் கலிங்கத்துப்பரணி நூலை விரும்பியதும் தன்னுடைய பெரும் புகழையும், ஆற்றலையும் உலகினர் அறியவேண்டும் என விரும்பியதாலன்றித் தமிழ்க் காதலால் அன்று என்பது திருமகளின் கருத்து.
உதரம் வளர்த்திடல்—வயிறு வளர்த்தல், பிழைப்பதற்காகப் பொருளீட்டுதல் என்பது கருத்து.

59. அன்றுகொல்—அல்லவா?

உயர்ந்திடும் மொழி-தன் சிறப்பைப் புலப்படுத்தும் மொழி, மொழிவார்-தம்உயர்ச்சி மொழியின்மேல் ஏற்றப்பட்டது; உபசார வழக்கு.

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

மன்னு கல்விதான் வைப்புழிக்
 கோட்படா; வாய்த்தளித் திடில்குன்றாது;
உன்னும் வேந்தரால் வவ்வுறற்கு
 எளியதுஅன்று; உலகிடைப் புதல்வர்க்குப்
பின்னும் உண்டுகொல், விச்சைஒன்று,
 அன்றியே பேணிவைத் திடற்குஎன்னா
முன்னம் நாலடித் தேவரின்
 உரைதரு மொழிநலம் அறியாயோ. 61

இன்னும் வேண்டிய நலம்எலாம்
 உண்டுகாண்; எழில்மலர்த் திருவே,கேள்!
நின்னது ஆர்அருள் பெற்றிடும்
 செல்வர்கள் நெடும்பொருள் தனைவல்லோர்
மன்னி வாங்குவர் என்னவே
 மறைப்பர்கள்; வழங்கிடில குறையாம்என்று
உன்னி ஈந்திடார்; துன்பமே
 உழப்பர்கள்; உண்டுஉளங் களியாரே. 62

---

59. இனியசொல் – (கூறுபவரின் கருத்துக்கு மாறுபட்டதாக இருப்பினும் கேட்பவருக்கு) இனிமை தரும் சொல், இனியசொல் என்பது பணிவான சொல் என்ற கருத்தில் ஆளப்பட்டது.

60. தமிழ் ஈவர்கள்—தமிழ்க் கலைகளைக் கற்பிப்பர்; ஈயினும் ஒழிந்திடார்—அவ்வாறு கற்றுத் தருவதால் தம் கல்விச் செல்வத்தில் குறைந்தவராக ஆகார்; தமிழ் சேர்வர்—(மாறாக) அவர்கள் அறிவு மேலும் வளரும்; ''இம்மை பயக்குமால் ஈயக் குறைவுஇன்றால்'' (நாலடியார் 132) என்பதனை நினைந்து கூறியது.
மென்மொழி கூறுவர் – ''இன்சொலால் ஈரம்அளைஇ படிறு இலவாம் செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்''. (திருக்குறள் 91).
கொடுமொழி—வன்மொழி, கடுஞ்சொல்.

61. ''வைப்புழிக் கோட்படா வாய்த்துஈயின் கேடுஇல்லை மிக்கசிறப்பின் அரசர்செறின் வவ்வார் எச்சம் என ஒருவன் மக்கட்குச் செய்வன விச்சைமற்று அல்ல பிற'' (நாலடியார்-134). நாலடித்தேவர்—நாலடியார் ஆசிரியர்

எனது நல்அருள் பெற்றிடு
கல்வியோர் எவரிடத் தினும்ஏகி,
மனம்ம கிழ்ந்தனர், விரித்தனர்
காட்டுவர்; வழங்குவர்; குறையாமல்
பினையும் அங்குஅது வளர்ந்திட,
வாழ்வர்கள்; பேதை!நீ அறியாயோ?
தனைநி கர்த்தது கல்வியே''
என்னலும் - சாற்றுவர், அலர்மாதே: 63

(திருமகள் மறுமொழி)

''வெறுங்கை யோடுவந் தவர்களைப்
புவியிடை விரும்பிடாது, எறும்பேனும்;
மறங்கொள் வேந்தர்கள் என்செய்வார்?
ஈதுஒரு வார்த்தைபோற் படித்தாயே!
சிறந்தது எவ்விடம், அவ்விடம்
திருவொடு சேர்ந்ததுஎன் பர்கள்அல்லால்,
உறைந்த சீர்பெறும் இடத்தினைக்
கல்வியோடு உற்றதுஎன் றிடல்உண்டோ?'' 64

---

61. என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டது; சமண முனிவர்களுக்குத் தேவர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்படுதல் மரபு.

62. வல்லோர் – வலிமை படைத்தோர்; உன்னி – நினைந்து. துன்பமே உழப்பர் – ''ஈட்டலும் துன்பம் மற்று ஈட்டிய ஒண்பொருளைக், காத்தலும் ஆங்கே கடுந்துன்பம்–காத்த, குறைபடின் துன்பம் கெடின்துன்பம் துன்பக்கு, உறைபதி மற்றைப் பொருள்'' என்னும் நாலடியார்ப் பாடலின் (280) கருத்துரை இப்பாட்டுள் பொதிந்துள்ளது.

63. முன் அறுபதாம் பாடலில் கூறப்பட்ட கருத்தே இங்கு மீண்டும் விளக்கமாக வற்புறுத்தப்படுகிறது. தனை நிகர்த்தது–தானே தனக்கு ஒப்பாம் சிறப்புற்றது.

64. புவியிடை எறும்பேனும் வெறுங்கையோடு வந்தவர்களை விரும்பிடாது எனக்கூட்டுக. என் செய்வார்–(எறும்பும் விரும்பாமை உண்மையாதலின் மன்னர்கள் எப்படி நடந்துகொள்வார்கள், திண்ணமாக விரும்பமாட்டார்கள் என்பது குறிப்பு.

(கலைமகள் அறிவுரை)

"குஞ்சி யொடுவெண் தானையும்
மஞ்சளும் கூறுவர் அழகன்றால்;
விஞ்சு கல்வியே அழகுஎன
மேலவர் விளம்பியது அறியாயோ?
மஞ்சு நேர்குழல் மலர்க்கொடி!
இதனைநீ மனங்கொளாது இருந்தாயே?
தஞ்சம் என்றவர்க்கு அருள்செயும்
செழியர்கோன் சபையினுற்று அறி"என்றாள். 65

(திருமகள் திடவுரை)

"இனிது, வாணி!நன்று இசைத்தனை!
சேலம்வாழ் ஏந்தல்அம் சபைமேவி
நனிஇ ருந்திடும் வேந்தர்தம்
செல்வமும், நலங்கொள்அங்கு அவர்பூணும்,
தனிம தம்பொழி தந்தியின்
பெருக்கமும், தாண்டும்மாக் களின்சீரும்,
பினைஅ டைந்திடும் ஆதுலர்க்கு
அளித்திடும் பெருமையும் பார்"என்றாள். 66

---

65. இப்பாடலில் இடம் பெற்றது,
" குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகுஅல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு"
என்னும் நாலடியார் வெண்பா (131). குஞ்சி—குடுமி, ஆண்மயிர்; தானை—ஆடை; விஞ்சுதல்—மேற்படுதல்; மஞ்சு—மேகம்; தஞ்சம்—அடைக்கலம்.

66. பூண்—அணிகலன்கள்; தந்தி—தந்தத்தை உடையது, யானை; தாண்டுதல்—தாவிக்குதித்தல்; மா—குதிரை; பினை—பின்னை என்பதன் சுருக்கம்; ஆதுலர்—இரவலர்.

(கலைமகளின் எதிருரை)

திருஉ ரைத்தல்கேட்டு உரைத்தனள்:
''பாலைவாழ் செழியன்மிக்கு உயர்செல்வம்
மருவு தன்மையும் புதிதுகொல்?
ஆதுலர் வந்தவர் நிலைதேர்தல்
உரிய கல்வியால் அன்றுகொல்?
அறத்தினை உணர்வதும் எதனாலே?
பெரிது கல்வியே அடைந்தவன்''
என்னலும் பேசுவள், அலர்மாதே. 67

(திருமகள் வினா)

(கலிநிலைத்துறை)

''செங்கோல் மன்னன் செழியர்கு
லேசன் திகழ்பாலைக்
கங்கா தரனே கல்விக்
கடலாம்; கனகீர்த்தி
தங்குஓர் பொருளைஅ ளித்தோ?
வறுமொழி சார்வார்கட்கு
அங்கே சொலியோ? மொழி!''என
மொழிமான் அறைவாளே! 68

---

67. பாலை—செழியனின் தலைநகரம்.

68. குலேசன்—குலஈசன் (வடமொழி குணசந்தி), மரபின் தலைவன்; கனகீர்த்தி—பெரிய புகழ்; (கங்காதரன் பெற்றுள்ள பெரும்புகழ்) ''சார்வார்கட்குத் தங்குஓர் பொருளை அளித்தோ (அல்லது) அங்கே வறுமொழி சொலியோ மொழி'' என்பது திருமகள் வினா. செவிக்கு மட்டும் இன்பம் பயக்கும் மொழிகளை வறுமொழி எனவும் கையிலே பெறும்படி வழங்கப்பட்ட பொருளைத் தங்குஓர் பொருள் எனவும் கூறியதால் அருத்தாபத்தியாகச் சொல் லின்பம் புலனுகர்ச்சியில் பயன்படாத வறுமையை உடையது என்பதுவும், பொருள் தன்னைப் பெறுவானிடம் நிலைத்திருந்து அவனுக்கு இன்பம் தரத்தக்கது என்பதுவும் திருமகளின் கருத்தாகப் பெறப்பட்டது. ''உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்குஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழ்'' என்னும் திருக்குறள் (232) இங்குச் சிந்திக்கத்தக்கது.

(கலைமகள் விடை)

''வரும்ஆ தரவின் அளிப்பதுஅ
றம்காண் மலர்மாதே
பெரிதுஆ தரவை அகன்று
கொடுப்பது பிழையன்றோ?
விரிநீர் உண்டிடு குறியமு
னிக்குஉயர் வேலோன்தன்
அருளோடு ஓதினன் விஞ்சையின்
ஆதரவு அடைவாயே. 69

இன்னும்உ ரைக்குவல் கேள்மலர்
மாதே! எழில்விஞ்சை
துன்னினர் மந்திரம் ஓதிய
வழியே சுருதிக்கோன்
மன்னுவன் எந்தஉ ருத்தனி
லும்;சிவன் வறிதாய்அப்
பொன்ஒரு கோடிஇ றைப்பினும்
வாரான்; புகல்''என்றாள். 70

---

69. *விரிநீர்–விரிகின்ற நீர்ப்பரப்பாகிய கடல்; குறிய முனி–அகத்தியர்; வேலோன் – முருகன்; விஞ்சை – வித்தை, சிறப்பாகத் தியானத்திற்கு உரிய மந்திர வித்தையைச் சுட்டிற்று.*

70. *உரைக்குவல்–உரைப்பேன்; சுருதிக்கோன் மந்திரம் ஓதிய வழியே எந்த உருத்தனிலும் மன்னுவன்; வறிதாய்ப் பொன் ஒரு கோடி இறைப்பினும் சிவன் வாரான் எனக் கூட்டுக. சுருதிக்கோன் – வேதங்களுக்குத் தலைவன், சிவபெருமான்; உரு–(அடியார்களால் தியானிக்கப்படும்) வடிவம்.*

(திருமகள் தெளிவுரை)

"இதுஎன் மொழிஎன வாணிமொ
 ழிந்தாய்; இதுகேளாய்!
சதுவே தங்களும் ஓதினும்,
 இறைவன் சாரானே;
முதிரும் தந்திரம் இன்றிஇ
 வைக்கே முதல்வித்தம்
அதுகொண்டு அல்லது யாதும்அ
 டைந்திடல் அரிதாமால். 71

செல்வம்உ ளார்கட்கு எய்தா
 நலமும் சிலவுண்டோ?
செல்வம்உ ளாரே எல்லா
 நலமும் செறிவாரே;
செல்வம்உ ளாரே கீர்த்தியி
 னுடனே திறல்உண்டாய்ச்
செல்வம்உ ளாரே வாழ்வர்கள்"
 என்றாள் திருமாதே. 72

---

71. தந்திரம் இன்றி ஓதினும் இறைவன் சாரானே; இவைக்கே வித்தம் முதல் எனக் கூட்டுக.

சதுவேதங்கள்–நான்கு மறைகள்; தந்திரம்–சமயச் சடங்குகளின் செயல்முறைகளை விளக்கும் நூல், ஆகுபெயராகச் சடங்குகளை உணர்த்துகிறது; முதல்–முதலில் வேண்டப் படுவது; வித்தம்–பொருள்.

72. செறிதல்–மிகுதியாகப் பெறுதல்.

(கலைமகள் காட்டுரை)

இனிதென நகையா, இவையிவை
சொன்னாள், எழில்வாணி:
''மனுநல் கல்வியி னாலே
யோகுஉறு வளம்மல்கிப்
பிணைஅழி யாதுபு சுண்டர்கள்
ஆதியர் பெரிதுற்றார்;
துனிதரு திருவால் அழிவுஆ
னவரைச் சொல்வேனால். 73

சூரன் பெற்றிடு திருவால்
ஆவிதொ லைந்தானே;
சீர்அங்கு ஒன்றும்இ லங்கையர்
கோவும் சிரம்அற்றான்;
சாரும் செல்வம்மி குத்தே
துரியோ தனன்மாய்ந்தான்;
யார்இங்கு உளர்காண் செல்வமு
ளார்கள் இயம்பாயே!'' 74

---

73. மனு நல் கல்வி—மந்திரமாகிய நல்ல கலை; புசுண்டர்—ஒரு யோகி; பிராம்மியின் வாகனமாகிய அன்னப்பறவையும் சண்டன் என்னும் காகமும் கூடிப்பெற்ற இருபத்தொரு புதல்வர்களில் ஒருவர், பிராம்மியை நோக்கித் தவமிருந்து பல கற்பகாலம் வாழ்ந்திருந்தவர், இவர் வரலாறு ஞானவாசிட்டத்தில் கூறப்பட்டுள்ளது. துனி—துன்பம்.

74. சூரன்—முருகப்பெருமானால் கொல்லப்பட்ட சூரபதுமன்; இலங்கையர்கோ—இலங்கை வேந்தனாகிய இராவணன்; துரியோதனன்—கௌரவர் நூற்றுவருள் மூத்தவன்; திரிதராஷ்டிரனின் மகன்.

(திருமகள் மறுப்புரை)

''திருவா லோமொழி, மாதே
ஆவிசி தைந்தாரே?
அரிநேர் விழியார் தமதுஆ
சையினும் அகன்ஞாலப்
பெரிதுஆ சையினும் அழிந்தார்;
வீரம் பினும்நின்றது;
ஒருவாது உயர்கல் வியின்மாண்
டோர்களை உரைசெய்வேன். 75

''கல்வியி னால்உயர் தாருவ-
னத்தினர் கருமங்கள்
பல்வித மாகிந டத்திஅ
ழிந்தனர், பாராயோ?
வெல்வமஎ னக்கொடு வாதுபு
ரிந்தே மிகுகூடற்
செல்வந கர்க்குட் சயினர்அ
ழிந்தனர், தெரியாதோ? 76

---

75. அரி—வண்டு (மகளிரின் கண்களுக்கு உவமை); ஞாலம்—உலகம். கலைமகளால் முன்பாடலில் சுட்டப்பட்டவர்களின் அழிவு பொன்னாசையால் நேரவில்லை என்றும் மண்ணாசை, பெண்ணாசை ஆகிய இரண்டுமே காரணங்கள் என்றும் திருமகள் சொல்கிறாள்.

76. தாரு வனத்தினர்—தாருகா வனத்தில் இருந்த முனிவர்கள், இவர்கள் வினைகளே தத்தமக்கு உரிய பலன்களை நல்கிவிடும் எனவும் வினைப்பயன்களை ஊட்டுவதற்கு இறைவன் ஒருவன் தேவை இல்லை எனவும் பூர்வ மீமாம்சையின் வழி நின்றவர்கள். அவர்களுக்கு மெய்யறிவு கொளுத்தச் சிவபெருமான் பிட்சாடனர் ஆகவும், திருமால் மோகினியாகவும் சென்று அங்கிருந்த ஆண்பெண் இருபாலரின் நிறையையும் அழித்தனர். இவ்வரலாறு கந்த புராணம் முதலிய பல சைவ புராணங்களில் விரிவாக இடம் பெற்றுள்ளது. கருமங்கள்—சமயச்சடங்குகள்.

அருந்தவம் இயற்றுச னற்கும
ரன்முனம் அரன்வந்து
பொருந்தலும், அன்பின்வ ணங்கில
னாய்,எதிர் பொருளெல்லாம்
வருந்திஅ ழிந்துஉறும் எனவே
கல்வியின் வலியோடே
இருந்துஉயர் ஒட்டகம் ஆகிஅ
ழிந்தமை எண்ணாயோ? 77

சங்கம்அ மர்ந்துஉயர் கீரனும்,
விஞ்சைகள் தான்மிக்கே,
பங்கம்அ டைந்துவ ருந்தினன்;
இன்னும் பகர்வேனால்:
பொங்குறு கல்வியின் ஆதர்கள்
தில்லைப் புவிமேவி
மங்குறும் மூங்கையர் ஆனார்
கல்விம தத்தாலே. 78

---

76. *அடுத்து மதுரையில் சமணர்கள் திருஞான சம்பந்தப் பெருமானொடு வாதிட்டுத் தோற்றுக் கழுவேறிய செய்தி இடம் பெற்றுள்ளது. இது பெரிய புராணம், திருவிளை யாடற் புராணங்கள் முதலியவற்றில் விரிவாகக் கூறப் பட்டுள்ளது.*

77. *சனற்குமரன்—இவர் திருமாலின் அம்சமாகப் பிரம தேவனின் மகனாகத் தோன்றியவர். இவர் ஒருசமயம் சதச்ருங்க மலையில் யோகம் புரிந்து வருகையில் சிவபெருமான் எதிரில் காட்சி தந்தார். முனிவர் வணங்க வில்லை. அதனால் சினமுற்ற நந்திதேவர் இவரை ஒட்டகமாகப் போகும்படி சபித்தார். இவ் வரலாறு காஞ்சிப்புராணத்திலும், சிவமகாபுராணத்திலும் காணப் படுறது.*

78. *சங்கம்—தமிழ்ச் சங்கம்; கீரன்—நக்கீரன்; விஞ்சை—கல்வி; பங்கம்—அவமானம்; கல்விச் செருக்கால் நக்கீரர் சிவபெருமானுடன் வாதிட்டுத் துயரடைந்த வரலாறு திருவிளையாடல் புராணம், சீகாளத்தி புராணங்களில்*

செல்வம்மி குத்தே சோழர்கள்
ஆலய மேசெய்தார்;
செல்வமி குத்தே யாகா
திகளும் செய்தாரே;
செல்வம்மி குத்தே இரணிய
வருமன் திலைதன்னில்
செல்வம்மி குத்திட ஆலயம்
முதலிய செய்தானே. 79

நீஒரு பெண்போல் என்முன்
நின்றனை; நின்கேள்வன்
போய்ஒரு பெண்ணுக் காமுகம்
நாலுபொ ருந்துற்றான்;
நாயக னுக்குஅன் புடையாள்
ஆகிந யந்தாயே,
தூயள னைப்போல்?'' என்றுஅலர்
மாதுசொ லும்போது- 80

78\. விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அடுத்த வரலாறு தில்லைப் பதியில் மாணிக்கவாசகரிடம் சொற்போர் புரியவந்த இலங்கைப் புத்த பிக்குகளைப் பற்றியது. இந்நிகழ்ச்சி திருவாதவூரர் புராணத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆதர்கள்—புத்தர்கள்; கல்விமதம்—கல்விச்செருக்கு.

79\. யாகாதிகள்—யாக+ஆதிகள் (வடமொழி தீர்க்க சந்தி), வேள்வி முதலிய சமயச்சடங்குகள்; இரணிய வருமன்—தில்லையில் திருக்கோயில் கட்டிய மன்னன், இவனைப் பற்றிய செய்திகள் கோயிற்புராணம், சிதம்பர புராணம் ஆகிய இருநூல்களிலும் இடம்பெற்றுள்ளன.

80\. கேள்வன்—(கலைமகளின் கணவன் ஆகிய) பிரமன், ஒருபெண்—திலோத்தமை; முகம் நாலு பொருந்தியது—பிரமன் இவ்வுலகில் உள்ள எழில்மிக்க பொருள்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் எள்அளவு எடுத்து ஒரு மங்கையைப் படைத்தான். எள் அளவு எடுத்த உத்தம மான பொருள்களால் அவன் உண்டாக்கப்பட்டமையின் அவள் திலோத்தமை எனப்பெயர்பெற்றாள்(திலம்—எள்).

(கலைமகளின் கடுப்புரை)

வாணிஉ ரைப்பாள்: ''நான்இலை கொல்லோ, மலர்மாதே!
காணுறு தேவா லயம்அது செய்தோ கதிபெற்றோர்,
மாண்உறு முதலியர் மூவர்கள்? முன்ஓர் வளம்மல்க
ஆணமொடு ஓர்கவி சொலிமுன் சிவனைஅ ழைத்தாரே. 81

பெண்மைநி னக்குஉண் டாம்எனில் அசுரன் பெருந்தேவிக்கு
உண்மைவி டுத்தே நெடியோன் அவன்உடல் உறுவான்ஏன்?
தண்மைப டைக்குந் துளசியின் மாலைத ரிப்பான்ஏன்?
உண்மைஓர் சற்றும்அ றிந்திலை; இனிநீ நுவல்''என்றாள். 82

---

80. இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட திலோத்தமையின் பேரெழிலைக் கண்டு பிரமன் காமுற்றான். அவளைப் பற்றியபோது அவள் நான்கு திசைகளிலும் ஓடினாள். அப்படி ஓடும் அப்பேரழகியைப் பார்க்க விரும்பிய பிரமன் திசைக்கு ஒரு முகமாக நான்கு முகங்களை உடையவன் ஆனான். இந்த வரலாற்றை எடுத்துக்காட்டி இத்தகைய வளின் மனைவியாகிய நீயும் நாணமில்லாமல் என்முன் நிற்கிறாயே என இழித்துரைக்கிறாள்.

81. முதலியர் மூவர்கள்—மூவர் முதலிகள், தேவாரம் அருளிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்திகள் ஆகிய சமயாசாரியர்; ஓர் வளம்—ஒப்பற்ற சிறப்பு; ஆணம்—அன்பு; சிவனை அழைத்தார் என்றது சிவபெருமானின் திருவருளை வெளிப்படுத்தினர் என்ற கருத்தில். திருஞானசம்பந்தர் எலும்பைப் பெண்ணாக ஆக்கியது முதலிய பல நிகழ்ச்சிகளிலும், திருநாவுக்கரசர் அரவம் தீண்டிய பாலனை எழுப்பியது போன்ற பல அருளாடல்களிலும், சுந்தரர் முதலைவாய்ப் பிள்ளையை மீட்டமை போன்ற பல திருவருட் செயல்களிலும் தமிழ்ப் பாடல்களையே பாடியருளினர்.

82. பெண்மை—கணவனை முற்றிலுமாகக் கவர்ந்து தன்வசப் படுத்தும் தன்மை கருதப்பட்டது; அசுரன்—சலந்தராசுரன்; பெருந்தேவி—அவன் மனைவியாகிய பிருந்தை. சலந்தராசுரனின் மனைவியாகிய பிருந்தையின் மேல் திருமால் பெரும் மையல் கொண்டிருந்தார். அவளுடைய கற்பின்

(திருமகள் உரிமையுரை)

''மொழிமட மாதே ஒன்றும்அ
றிந்திலை! மொழிவேன், கேள்:
எழில்பெறு மாதரை யாவர்உ
ரைப்பினும், 'இனிதாய்அப்
பிழிமலர் மாதுஇணை ஆயினர்'
எனவே பெரிதுஓதும்
வழிமுறை தன்னை அறிந்திலை,
வாணீ! மதிஇன்றோ? 83

ஒக்கஉ ரைத்தனை, தக்கது
வோஇஃது? ஓராயோ!
அக்க மலத்தன்என் நாயகன்
உந்திய னாவந்தான்;
தக்கநின் மாமியும் நான்அல
ளோ?அறம் சாராயோ?
இக்கடல் வையகம் உனைநகை
யாதோ? இழிவுற்றாய்!'' 84

---

82. வலிமையால் நெருங்க முடியவில்லை. அசுரன் சிவ பெருமானால் அழிக்கப்பட்ட உடனே திருமால் சலந்தரா சுரனின் வடிவத்தோடு சென்று பிருந்தையைக் கலந்து இருந்தார். ஒருநாள் உண்மையை உணர்ந்த பிருந்தை தீக்குளித்து உயிர்நீத்துவிட்டாள். இதனால் திருமால் பித்தம் பிடித்தவராக ஆனார். இவர் நிலை கண்டு இரங்கிய உமாதேவி சில விதைகளைத் திருமாலிடம் தந்தார். அவற்றைப் பிருந்தை தீக்குளித்த இடத்தில் திருமால் தூவினார். அங்கே துளசிச்செடிகள் முளைத்தன. அவற்றைத் திருமால் அணிந்தார்.

83. பிழி—தேன்; பிழி மலர்—தேன் நிறைந்த தாமரைப்பூ. ''அழகிய மகளிரை எப்போதும் திருமகளை நிகர்த்தவள் என்றே கூறுவர்; இதனை நீ அறிவாயோ'' என்கிறாள் இலக்குமி. இதனால் பொருட்செல்வம் மட்டும் அன்று, கண்டாரால் விரும்பப்படும் தன்மையாகிய அழகும் தனக் குரியதுவே என்றாளாயிற்று.

(கலைமகள் சினவுரை)

''அறம்நான் விட்டேன் என்றுமொ
ழிந்தாய் அறிவில்லாய்;
விறலோடு ஒருவரை ஒருவர்வி
ழுங்கினர் மேல்நாளே;
மறமோடு உந்தியின் மலரவன்
வந்தனன்; மால்ஆனோன்
செறிவே தன்குதம் வந்தனன்;
அதைநீ தெளியாயோ? 85

அன்றியும் இன்னமும் ஓதுவல்
கேளாய் அம்மால்முன்
பின்றையும் ஓர்ஒன் பான்உரு
வானான்; பெரிதுஎன்கோ
நன்றுப டைத்தனன்; நாளையும்
மாஉரு நல்கானோ?''
என்றுஉயர் வாணிமொ ழிந்தனள்;''
அலர்மாது இதுசொன்னாள்: 86

---

84. *கமலத்தன்—தாமரைப்பூவில் உள்ள பிரமன்; என் நாயகன் உந்தியனா வந்தான்—என் கணவராகிய திருமாலின் கொப்பூழில் உன்டானவனாகப் பிறந்தான். எனவே பிரமன் திருமாலின் மைந்தன் ஆகிறான். இலக்குமிக்கும் மகனே. பிரமனின் மனைவி இலக்குமிக்கு மருமகள் ஆகிறாள். அவள் தன் மாமியாருக்கு அடங்கி ஒழுகாவிடில் உலகம் இகழும் என்கிறாள்.*

85. *விறல்—வலிமை; மேல்நாள்—முன்னாளில்; மறம்—வீரம்; உந்தி—கொப்பூழ்; குதம்—கருவாய்.*

86. *ஒன்பான்—ஒன்பது; என் கோ—என் தலைவன் ஆகிய பிரமன்.*

(திருமகள் பதிலுரை)

''என்னுரை செய்தாய்? வெண்மலர்
மாதே! இயல்ஓராய்!
நின்னுடை நாயகன் வேதம்இ
ழந்தே நிலைகுன்ற
மன்னுறு மீனஉ ருக்கொடு
போய்அம் மறையீந்தான்;
தன்னிகர் பன்றிஉ ருக்கொடு
தரையைத் தனிதந்தான். 87

மற்றுஉள உருவம் கொண்டதும்
நும்முடை வளம்மல்க,
முற்றுற அஃதுஎன நான்சொலல்
என்னே; முறைநூல்கள்
சொற்றிடும்; உலகும்அ றிந்திடும்;
மறையும் சொலும் மாதே!
குற்றம்அ றிந்திலை'' என்றாள்
அலர்மின் கொடிதானே. 88

---

87. இயல்—உண்மை. ஓராய்—தெளியமாட்டாய்; நின்னுடை நாயகன்—பிரமன்; மீனஉரு—மச்சாவதாரம்; மறை—வேதம்; ஈந்தான் — (மீட்டுத்) தந்தான்; பன்றிஉரு—வராகவதாரம்.

88. நும்முடை வளம்—கல்வி; மல்குதல்—பெருகுதல்; உலகு : ஆகுபெயர்; குற்றம்—குறை; அலர்மின்கொடி: திருமகள்.

(இறைவியின் தீர்ப்பு)

(அறுசீர் ஆசிரிய விருத்தம்)

அந்த வேளையில், பொன்பரப்
பிசனுக்கு அணிஎன அமர்ந்துஉற்றாள்
நந்து பேர்அருட் பெரியநா
யகிஅவர் நளினநன் முகம்பார்த்து-
''முந்து நும்அழுக் காற்றினால்
இவைஎலாம் மொழிந்தனிர்; நெடுமாலைக்
கந்த மாமல ரவன்தனைப்
பழித்தல்என்? கருதிடில், ஆம்அன்றால். 89

சொற்றி றங்களை ஒழிமின்''என்று
உமையவள் சொல்லலும், அவர்தாமும்,
உற்ற கைகொடு வாயினைப்
புதைத்தனர்; ஒடுங்கினர் நின்றாரால்;
மற்றுஅவ் வெல்லையில் உலகுடை
நாயகி வகுப்பள்,''மால் அயன்ஆனோர்
கற்றை அம்சடைக் கண்ணுதல்
இருபுயம், கருதுறில், அவர்தாமே. 90

---

89. இவை எலாம் மொழிந்த நீர் நும் அழுக்காற்றினால் நெடுமாலைக் கந்த மாமலரவன்றனைப் பழித்தல்என்? கருதிடில், ஆம் அன்று எனக் கூட்டுக.

கருதிடில்—எண்ணினால், ஆராய்ந்தால்.

நளின நன்முகம்—தாமரையைப் போன்ற அழகிய முகம்; கந்தமா மலரவன்—நறுமணமும் பெருமையும் மிக்க தாமரை மலரின் மேல் உள்ள பிரமன்; ஆம்—ஏற்புடைத்து ஆகும்; ஆம் அன்று—ஒவ்வாது.

90. கற்றை அம் சடைக் கண்ணுதல் இருபுயம் ஆனோர் கருதுறில் மால் அயன் அவர்தாமே என இயையும்.

நுங்கள் தம்மைஎன் கண்களாய்க்
    கொண்டிடும் நோன்மையும் அறியீரோ?
பொங்கர் சூழ்திருக் காஞ்சியம்
    புரத்தினில் பொலிந்தஎன் பெயர்நாட்டீர்!
மங்கு பேர்அழுக் காற்றினை
    விட்டிடும்; வளத்தில்ஒத் தவர்நீரே;
எங்கள் நாயகற் பணிமின்நீர்,
    இவ்விடை இகல்செயுந் துயர்தீர. 91

(வேறு)

செல்வமும் கல்வி தானும்
    செழும்புவி தனக்கு வேண்டும்;
சொல்லொடு பொருளும் காணில்
    பேதமாம்; சொல்லில், வேறோ?
அல்லமர் குழலீர்! ஈசன்
    அருளினால், எனது நோக்கால்,
புல்லுயிர் வினைக்குஈடு ஆகப்
    பயன்அளித்து, இனிது வாழ்வீர்! 92

---

91. *நோன்மை—வலிமை; பொங்கர்—சேலை;*

காஞ்சியம் புரத்தினில் பொலிந்த என் பெயர் நாட்டீர்—காஞ்சிபுரத்தில் இறைவியின் திருப்பெயர் காமாட்சி என்பதாகும். இப்பெயருக்குக் கலைமகளையும், திருமகளையும் தன் விழிகளாக உடையவள் எனப்பொருள் (க — கலைமகள், ம — திருமகள், ஆட்சி — கண்களை உடையவள்). அப்பெயருக்குக் களங்கம் நேரும்படி உங்களுக்குள் போரிட்டுக் கொள்ளவேண்டாம் என்பது குறிப்பு. எங்கள் நாயகன் என்றது பொன்பரப்பீசராம் இறையவனை.

92. *சொல்லும் அதற்குரிய பொருளும் ஒரு முறையில் பார்த்தால் தம்முள் வேறுபட்டவையாகும். (அஃதாவது சொல் என்பது வேறு, அதனால் உணர்த்தப்படும் பொருள் என்பது வேறு.) ஆனால் பொருள் இல்லாத சொல்லையோ சொல் இல்லாத பொருளையோ நினைத்துப் பார்க்கவும் முடியாது. இவ்வாறே கல்வியும்*

பல்லுயிர் வினைகள் ஒத்துப்
பரிபாகம் அடையும் காறும்,
செல்வமும் கல்வி தானும்
செப்பிடில் வேண்டும்; அப்பால்,
அல்லல்விட்டு உண்மை தேரில்,
அரியமெஞ் ஞானம் என்னால்
ஒல்லுறும்; ஈசன் தானும்
உறும்பினர் உயிர்கள் தம்மேல். 93

இந்தநல் நீர்மை தன்னை
அறிந்திலீர்; இகலி, உங்கள்
சிந்தும்ஆ திக்கம் தன்னைத்
திரம்என மதித்தீர்; முன்னாள்,
அந்தமால் அயன்இவ் வாறே
அவமதித்து அடல்செய் தாரே;
நந்தருள் ஈசன் வந்து
நாப்பண்நின்று அகற்றி னானால். 94

---

92. செல்வமும் ஒன்றாகத் தமக்குள் பொருந்தியிருக்க வேண்டும் என்பது கருத்து. ஒருவனுக்குக் கல்விச் செல்வமோ பொருட்செல்வமோ அவனுடைய முந்தைய வினைகளின் பயனுக்கேற்பவே அமைகின்றன.

93. வினைகள் ஒத்து—ஒருயிரின் நல்வினைகளும் தீவினைகளும் சமமாகி நசிக்கத்தக்க நிலையை அடைந்து; இந்நிலை இருவினையொப்பு எனப்படும்; பரிபாகம் — மூல மலமாகிய ஆணவம் செயலழிந்து அடங்குவதற்கேதுவான பக்குவம் பெறுதல்; இதனை மலபரிபாகம் என்பர். என்னால்—(சக்தியாகிய) என்னால், இறைவனின் அருள் வீழ்ச்சி பக்குவமடைந்த ஆன்மாவின்மேல் ஏற்படுதலைச் சத்திநிபாதம் என்பர், ''அருளது சத்தியாகும் அரன்தனக்கு'' (சித்தியார்). ஆதலின் இறைவி 'என்னால்' என்றாள்; ஈசன் தானும் உயிர்கள் தம்மேல் பின் உறும்—சத்திநிபாதத்திற்கு ஆன்மா சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்னும் படிநிலைகளில் பேரின்பம் பெறுதலை ஈசன் உயிர்கள் மேல் உறும் என்றார்.

உலகிடைத் தம்மை மதித்தல்
ஒருவரை விட்டது இன்றால்;
பலசொலல் இனிஎன்? நீவிர்
பாலைவாழ் செழியன் பாலே
நிலவுவீர்; எனது அ ருட்கண்
நிறை அவற்கு இருத்தல் ஏய்ப்பக்
குலவும்நும் பயன்நு கர்ந்து, அக்
கோமகன் வாழ மாதோ!'' 95

(இருவரும் இறைவியைப் பணிதல்)

என்றுஉமை கூறக் கேட்டு, அவ்
இருவரும், 'தவம்ஈது' என்றே
கொன்றையந் தார்அ ணிந்த
குழகனை, இமையம் ஈன்ற
மன்றல்அம் குழலி னாளை
வணங்கியே மலர்கள் தூவி,
நின்றுஇரு கரங்கள் கூப்பி,
நேசமாய்த் துதிக்க லுற்றார்: 96

---

94. சிந்தும் ஆதிக்கம் — (ஒருநாள்) அழியப் போகின்ற அதிகாரம்; திரம்—என்றும் நிலைபேறுடையது; நாப்பண்—நடுவே; சிவபிரானின் அடியைத்தேடித் திருமாலும் முடியைத் தேடிப் பிரமனும் முறையே பன்றி, அன்னப் பறவை வடிவத்தில் சென்ற வரலாறு குறிக்கப்பட்டது. இது அருணாசல புராணத்தில் விரிவாகவும் பற்பல சிவபுராணங்களில் ஆங்காங்கும் சொல்லப்பட்டுள்ளது.

95. உமாதேவியின் திருவருட்பார்வை முன்பே செழியன்பால் உள்ளது. எனவே அவன்மீது திருமகள், கலைமகள் ஆகியோரின் அருள்நோக்கமும் அமைவதே பொருத்தமாம் என்பது கருத்து. நும்பயன்—செல்வப்பயனும், கல்விப் பயனும்.

96. மன்றல்அம் குழலினாள் — நறுமணத்தையும் அழகையும் பெற்ற கூந்தலை உடையவளாகிய பெரியநாயகி.

(இருவரும் துதித்தல்)

பொருளொடு சொல்லும் ஆனீர்;
பொறையொடு தவமும் ஆனீர்;
திரிவுஅதுஇல் இனிய சத்தும்
அசித்துமாய்த் திகழ்ந்தீர்; நாத
உருஎழும் விந்தும் ஆனீர்;
உரைக்கஅரி தால்நும் செய்கை;
பெருகுபொன் பரப்பு நாதா!
பெரியநா யகியே, போற்றி! 97

மாசுஅகல் நாதம் மிக்க
வன்னமும் ஆனீர் போற்றி!
ஆசுஅறு வித்தை யோடே
அவித்தையும் ஆனீர் போற்றி!
நேசமும் வெறுப்பும் ஆனீர்
எனமறை நிலையை நாடிப்
பேசுபொன் பரப்பு நாதா!
பெரியநா யகியே, போற்றி! 98

அறிவுமாய் அறிவி னுக்கே
அறிவுமாய் அமர்ந்தீர் போற்றி!
வெறியொடு மலரும் என்ன
எவற்றினும் விளங்கி, அப்பால்
நெறியதாய் நின்றீர் போற்றி!
நினைக்கும்எப் பொருளி னுக்கும்
பிரிவுஇல்பொன் பரப்பு நாதா!
பெரியநா யகியே, போற்றி! 99

கறங்கெனப் பிறந்துஇ றந்து
திரிதலில் களைத்தே யாவும்
துறந்தவர் மனத்தில் வாழ்வீர்!
சோதியாய் இருளும் ஆனீர்!
அறந்தெரி யாதே யாங்கள்
அடல்செயும் பாவம் தீர்ப்பீர்-
பிறங்குபொன் பரப்பு நாதா!
பெரியநா யகியே, போற்றி!'' 100

(இறைவியின் ஆணை)

என்பல துதிகள் பேசி
 இருவரும் இறைஞ்சி நின்றார்;
நன்கென உமைம கிழ்ந்து
 நவிலுவள், ''எமது பாலே
அன்புடை யவன்சே லம்வாழ்
 அரசன்,ஆ தரவி னாலே
மண்பதை புரப்போன், கங்கா
 தரனிடம் மன்னு வீரே. 101

(இருவரும் கங்காதரச் செழியனிடம் நிலைத்தல்)

போம்''என உரைக்க-வெண்டா
 மரைநறும் பூவின் மாதும்,
வாமம்ஆர் இனிய செந்தா
 மரைமலர் மானும், ''நன்றே
ஆம்இது'' என்று, கங்கா
 தரனிடம் அமர்ந்து, கல்வி
ஏமுறு செல்வம் ஈந்தே
 இருவரும் இருக்கின் றாரால். 102

---

101. அன்புடையவனும் அரசனும் மண்பதை ஆதரவினாலே புரப்போனும் ஆகிய கங்காதரன் என இயைக்க. மன்னுதல்—நிலைபெறுதல்.

102. நறும்பூ—மணமுள்ள மலர்; வாமம்—அழகு; ஆர்தல்—நிறைதல்; நன்றே ஆம்—நன்மை தருவதே ஆகும். ஏமுறு—ஏமம் உறு என்பது ஏமுறு என்றாயிற்று. ஏமுறு செல்வம்—இன்பம் பெறுவதற்கு ஏதுவான பொருள்வளம்.

(நூற் பயன்)

இம்முறை மலரின் மாதும்
எழில்பெறு வாணி தானும்
தம்முளே இகல்பு ரிந்து,
தணிந்தவா வாழ்ந்த நீர்மை
செம்மனத் துடனே யாவர்
படிப்பினும், திருநல் வாணி
வம்மெனக் கல்வி செல்வம்
வழங்கிட, மகிழ்ந்து வாழ்வார். 103

அந்தணர் வாழ்க! மாரி
அநுதினம் பொழிக! நீதி
இந்தமா நிலத்தில் ஓங்க!
இன்மையோர் கொடுமை தீர்க!
கந்தம்ஆர் குழலி னார்கள்
கற்பொடு பொலிக! தீம்பால்
நந்தஆன் இனங்கள் மிக்கு
நன்மையே நிறைக மாதோ! 104

---

103. திருநல்வாணி வழங்கிட யாவர் படிப்பினும் (அவர்) மகிழ்ந்து வாழ்வார் என இயைக்க.
செம்மனத்துடனே—கல்வி, செல்வம் ஆகிய இரண்டின் இன்றியமையாத் தன்மையை நன்கு புலப்படுத்துவதற் காகவே திருமகளும் கலைமகளும் தம்முள் வாதிட்டுக் கொண்டதாகப் படைத்து மொழியப்பெற்றதேயன்றி அவர்களை இழிவுபடுத்தும் நோக்கத்தாலன்று. ஆசிரியரின் இந்த உணர்வை நன்கு புரிந்துகொண்ட உள்ளமே இங்கு செம்மனம் எனப்படுகிறது; வம்என— வருக என்று அழைத்து.

104. மாரி—மழை; அநுதினம்—நாள்தோறும்; இன்மையோர்— வறியோர்; கொடுமை — துன்பம்; கந்தம் ஆர் குழலினார்கள்—மணம் பொருந்திய கூந்தலை உடைய மகளிர்; தீம்பால் நந்த—இனிய பால்வளம் மிகுதியாம்படி; ஆன் இனம்—பசுக்கூட்டங்கள்.

திருவாணி வாது
முற்றும்.

பாடல் முதற்குறிப்பு அகரநிரல்

உரை மேற்கோள் நூலகராதி

(எண், செய்யுள் வரிசை எண்)

சொல்லடைவு

செழியதரையன்
நன்னெறி

செழியதரையன் நன்னெறி

காப்பு

விநாயகர்

(நேரிசை வெண்பா)

தென்னு தமிழ்க்குஉதவு சேலம் செழியனுக்கே
உள்ளபடி நீதி உரைக்கவே—வள்ளல்
திருமுகவன் வேரிச் செழும்கமலத்து எந்தை
கரிமுகவன் இக்கதைக்குக் காப்பு. 1

---

1. *பா. வே. 1:2 தமிழ் வல்ல; 3:2 வெற்றிச்; 3:3,4 செழுங்கமலத்தோற்றிக்*

தென்னு—தெளிவான, இங்கு மயக்கமற்ற பொருள் தெளிவினை உடைய என்ற கருத்தில் ஆளப்பட்டுள்ளது; வேரி—நறுமணம்; வேரிக்கமலம் செழுங்கமலம் என இயையும். மணமிக்கதும் செழிப்பானதுமாகிய தாமரை மலர்; கமலத்து எந்தை—தாமரையில் எழுந்தருளியுள்ள பிரமன்; செழுங்கமலத்து எந்தை கரிமுகவன்—பிரமகணபதி; சின்ன சேலத்தலவிநாயகரின் திருநாமம் பிரமகணபதி என்பதாகும்; ''தவர்பரவும் சேலநகர்ப் பிரமகண பதிஇருதாள் சார்ந்து வாழ்வாம்'' எனவரும் செழியதரையன் பஞ்சதந்திரப் பாயிரத்தின் 4ஆம் பாடல் சான்றாம். இவ்வெண்பாவிலும் 'கமலத்துஎந்தை கரிமுகவன்' எனக் குறிக்கப்பட்டுள்ளமை காணலாம். வள்ளலும் திருமுகவனும் ஆகிய கமலத்து எந்தை கரிமுகவன் என இயையும். திருமுகவன்—தெய்விகத் திற்கு இருப்பிடமானவன்.

சிவபெருமான்

சென்னிமிசை வைத்திருக்கும் திங்கட்கு உறவான
வன்னக் குவளை மலர்த்தாரான்—(உன்னுசிவம்
நீங்காது) நின்று (நவில்) நீடுநெறிப் பாஇதனைத்
தேங்காது அளிக்கும் திறம். 2

குறிப்பு : * இவ்வெண்பா 221ஆம் எண்ணிட்ட சுவடி ஒன்றில் மட்டுமே காணப்படுகிறது. மற்ற இரு சுவடிகளிலும் இல்லை. நகவளைவில் கொடுக்கப்பட்டுள்ள பகுதிகள் பதிப்பாசிரியரால் ஊகிக்கப்பெற்றவை.

2. சென்னிமிசை — (சிவபெருமான்) தன்னுடைய தலையில்; திங்கள்—சந்திரன்; வன்ன—நல்ல நிறம் பொருந்திய; குவளை மலர்கள் மதியின் வரவைக் கண்டு மலர்வன ஆதலின் திங்கட்கு உறவான குவளை எனப்பட்டது; மலர்த்தாரான்—மலர்களாலாகிய மாலையை அணிந்த செழியதரையன்; செழியதரையன் வேளாளன் ஆதலின் அவ்வினத்திற்குரிய அடையாளப்பூ குறிக்கப்பெற்றது.

''மேழிக் கொடியொடு வெண்ணிறக் குடையும்
காவி மாலையும் கங்கைசே யினர்க்கே''

என்பது அறுவகை இலக்கணம் (நூற்பா 593); உன்னு—(செழியதரையனால்) நினைக்கப்படுகின்றவராகிய; நீங்காது நின்று—(என் உள்ளத்தே) நிலைத்திருந்து; நவில்—(நான்) கூறும்; நீடுநெறிப்பா—நீண்ட காலமாக ஆன்றோர்களால் கடைபிடிக்கப்பட்டுவரும் ஒழுக்க நெறிகளைத் தொகுத்துச் சொல்லும் பாக்களாலாகிய இந்த நூல்; நீடுநெறி—வினைத் தொகை; நெறிப்பா—இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை; பா ஆகுபெயராகப் பாவானியன்ற நூலை உணர்த்துகிறது; தேங்காது—இடையில் தடைகள் வராதவாறு; அளிக்கும்—காப்பாற்றும்; திறம்—(இது) உறுதி.

மலர்த்தாரான் உன்னுசிவம் நீடுநெறிப்பா இதனைத் தேங்காது அளிக்கும்; (இது) திறம் என்பது பொருள் முடிபு.

சிவபெருமானின் தலையில் இடம் பெற்ற மதிக்கு உறவான மலர்களைச் சூடியவன் என்பதோடு செழிய தரையன் எப்போதும் சிவத்தையே தியானித்துக் கொண்டு

நூல்

(கட்டளைக்கலித்துறை)

நீர்ஆம் அவற்கும், அறிவுஒன்று
    இலானுக்கும் நீதிசொன்ன
பேராளர் தாம்மற்று ஒருவர்கொல்-
    லோ?பெரும் பாரம்கண்டாய்
பாராது தாழ்விக்கும்; நொய்துகண்-
    டாய்பறிந்து ஏறும்கண்டாய்;
வீரா கரா!உல கைச்செழி-
    யா!திரு வேங்கடமே! 1

இருப்பதால் அவனைப்பற்றிய இப்பிரபந்தத்திற்கு இறைவன் உறுதியாக அருள்புரிவன் என்னும் கருத்தமைய அடைமொழிகள் புணர்த்தப்பெற்றமையின் இது கருத்துடையடைகொளியணியின் பாற்படும்.

1. பா. வே. 1:2 அதற்கும்; 3:4,5 பரிந் தேதடுத்து

நீர் ஆம் அவற்கும்—நற்பண்புகளைப் பெற்றுள்ள ஒருவனுக்கும், நீரார் (திருக்குறள் 527) என்புழிப்போல இங்குப் பொருள் பயந்துநின்றது; பேராளர்—பேர்+ஆளர்; புகழ் படைத்தவர்; பாரம்—கனம், பளு; பாராது—முயற்சியில்லாமல், இயல்பாகவே என்பது கருத்து; கண்டாய்—ஈரிடங்களிலும் முன்னிலை அசை; நொய்து—கனமற்றது; பறிந்து—தன் எல்லையைத் தாண்டி ஓடி; ஏறும்—மேல் நோக்கிச் செல்லும்; தன் இயல்பான நிலையை விட்டு வேகமாக மேலே செல்லும் என்பார் பறிந்து ஏறும் என்றார்; வீராகரா—வீர+ஆகரா, வீரமே வடிவானவனே, வடமொழி தீர்க்க சந்தி; உலகை—உலகியல் நல்லூர் என்பதன் மரூஉ.

திருவேங்கடமே! பாரம் பாராது தாழ்விக்கும்; நொய்து பறிந்து ஏறும்; (இது அவற்றின் இயல்பு. எனவே) நீராம் அவற்கும் அறிவு ஒன்று இலானுக்கும் நீதி சொன்ன பேராளர் தாம் மற்றொருவர் கொல்லோ என்பது பொருள் முடிபு; யாரும் இல்லை என்பது கருத்து.

நாலா கியவகைப் போதும்எப்-
போதும் நயந்துதெய்வப்
பாலாவ தும்கிளை நீத்துஅல
வோ?பரம் காதலித்துச்
சீலா கமத்தை உணர்ந்தாலும்
நீத்துஅன்றிச் சேர்வதுஉண்டோ?
வேலா வலயம் தொழும்செழி-
யா!திரு வேங்கடமே! **2**

சான்றோர்கள் புல்லர்களின் எக்களிப்பைக்கண்டு தாம் பணிந்து ஒதுங்கிவிடுவர் என்னும் கருத்தும், ஒவ்வொருவருடைய குணநலனும் அவருடைய வினை, குலம், கல்வி, நட்பு போன்றனவற்றிற்கேற்ப இயல்பாக அமையுமே அன்றிச் சொல்லிக் கொடுப்பதால் பண்புகள் வந்துவிடா என்னும் பேருண்மையும் இதில் கூறப்பட்டன.

ஒப்புமை:

''ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப–தூக்கின்
மெலியது மேல்மேல் எழச்செல்லச் செல்ல
வலிதுஅன்றே தாழும் துலைக்கு''

(நீதிநெறிவிளக்கம் 16),

''வளம்பட வேண்டாதார் யார்?யாரும் இல்லை;
அளந்தன போகம் அவரவர் ஆற்றான்
விளங்காய் திரட்டினார் இல்லை; களங்கனியைக்
கார்எனச் செய்தாரும் இல்'' *(நாலடியார் 103)*

இதே நூலின் 35ஆம் பாடலும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

2. நாலாகிய வகை–கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, புதற்பூ என்னும் நான்கு விதங்களுள்ள; சிலர் நிலப்பூ என ஒன்றைச் சேர்த்து ஐவகை என்பர்; கொடி, கோடு, புதல் ஆகிய மூன்றும் நிலப்பூவே ஆதலின் நான்கையே இவர் கொண்டார்; எப்போதும் என்பது இரட்டுற மொழிதலாக நான்கு வகைப்பட்ட மலர்களில் எந்த மலராயினும் என ஒரு பொருளும், எப்பொழுதும் எனக் காலப்பொருள் ஒன்றையும் தந்து நின்றது; தெய்வப்பால் ஆவது–இறைவனிடம் சென்று அடைதல்; கிளை நீத்து அலவோ–கிளை என்ற சொல் பெரிய

செருஅத்தி கட்டும் தொடரும்ஒன்-
றோடுஒன்று சேர்ந்திலையேல்
மருவக் குறுமுய லேனும்கட்-
டாது; மணந்துநட்டார்
ஒருவர்க்கு ஒருவர் பிரிந்தால்நொய்-
தாவர்;ஈது உண்மைகண்டாய்;
வெருவப் பொரும்சிங்க மே!செழி-
யா!திரு வேங்கடமே! 3

கொம்பிலிருந்து சிறிய காம்புவரை அனைத்திற்கும் பொதுவாக ஆளப்பட்டது; பரம்—பேரின்பமாகிய வீட்டை; காதலித்து—அடைய விரும்பி; சீலாகமத்து—சீல+ஆகமம், வடமொழி தீர்க்க சந்தி, இறைவனை அடைவதற்குக் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கத்தை உணர்த்தும் ஆகமம் என விரியும்; ஆகமம்—இறைவன் அருளிய ஞானநூல்; நீத்து அன்றி—(முன் கூறப்பட்ட கிளை என்பதனை ஈண்டும் இணைத்துக் கொள்க)சுற்றத்தாரைத் துறந்தால் அல்லாமல்; வேலாவலயம்—உலகம், இடவாகு பெயராக உலகில் வாழும் மக்களைச் சுட்டியது.

எப்போதும் நயந்து தெய்வப்பாலாவது கிளை நீத்து அலவோ? பரம் காதலித்துச் சீலாகமத்தை உணர்ந்தாலும் (கிளை) நீத்து அன்றிச் சேர்வது உண்டோ? என்பது பொருள் முடிபு. சேராது என்பது கருத்து.

கிளை என்ற சொல் இடைநிலைத்தீபகமாகவும் இரட்டுற மொழிதலாகவும் அமைந்துள்ளது.

3. செரு அத்தி—போரில் பயன்படும் யானை, ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை; தொடர் — சங்கிலி; மருவ — தன்பாற் பொருந்துமாறு; மணந்து—மனம் கலந்து பழகி; நட்டார்—நட்புப் பூண்டவர்; நொய்தாவர்—வலிமையற்றவராவர்; வெருவ—(பகைவர்கள்) அஞ்சுமாறு; பொரும்—போர் புரியும்.

திருவேங்கடமே! அத்தி கட்டும் தொடரும் ஒன்றோடு ஒன்று சேர்ந்திலையேல் மருவக் குறுமுயலேனும் கட்டாது. (அதுபோல) நட்டார் பிரிந்தால் நொய்தாவர்; ஈது உண்மை கண்டாய் என்பது பொருள் முடிபு. கண்டாய் என்னும்

வல்நெஞ்சர் மெய்வணக் கத்துடன்
போய்மலர்த் தாள்பிடிப்பது
என்?நெஞ்சம் மெய்என்று இராதுகண்-
டாய்;இரும் பாகவளைந்து
அன்னம் செறிவயல் நெற்கால்
பிடிப்பது அரிதற்கு அன்றே?
மின்அஞ்சு வாள்அபி மா!செழி-
யா!திரு வேங்கடமே! 4

முன்னிலை அசை வற்புறுத்தல் பொருளில் வந்தது. இப்பாடலில் எடுத்துக்காட்டுவமையணி பயின்றது.

''நீக்கம் அறும்இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம்'' (நன்னெறி 5)

சிவப்பிரகாசரின் இப் பாடல் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

4. பா. வே. 1:4,5 மலர்க்கால்; 2:2 நன்று என்று; 3:5 அரிகைக் கன்றோ

மெய் வணக்கத்துடன்—வணங்கிய உடம்பினராக; என்—எதற்காக; நெஞ்சம் மெய் என்று இராது—அவர்கள் வணங்கும் போதே அவர்களுடைய உள்ளத்தில் இப்பணிவு உண்மையன்று என்னும் நினைவு இருக்கும், அவர்கள் நெஞ்சறிந்து பொய்யாக வணங்குவர் என்பது கருத்து; இரும்பாக—அரிவாளாகி, முதல் அதனாலான கருவிக்கு ஆகிவந்த ஆகுபெயர்; அகம் வளைந்து—தன் உடல் கூனி; நெற்கால் பிடிப்பது—நெற்பயிரின் தாளைப் பற்றுவது; அரிதற்கு—நெல்லை அறுவடை செய்வதற்கு;

மின் அஞ்சு—மின்னலும் கண்டு பயப்படுமளவு ஒளிவீசுகின்ற; அபிமா—அபிமன்யுவே, இவன் அருச்சுனனின் மைந்தன், பெருவீரன்.

அரிவாளின் வளைவு வன்னெஞ்சரின் உடல் வளைவிற்கும், கால் பிடித்தல் ஒரே தன்மையினதாகவும் காட்டப்பெற்றன.

"அங்கணச் சேறும், அகிற்சேறும்
ஒக்கும்"என்று ஆர்சொலினும்
எங்கணும் நாசிக்கு இதம்ஒக்கு-
மோ?இழிந் தோர்உயர்ந்தோர்
தங்கணம் ஒப்பர்என் றால்,அறி
வார்இத் தலத்துஇலையோ?
வெங்கணம் ஆர்த்துஎழும் வேல்செழி-
யா!திரு வேங்கடமே. 5

அரிவாள் நெற்பயிரை அறுத்துவிடுவதைப்போன்று வன்னெஞ்சர் சான்றோர்களைத் துன்புறுத்துவர் என்பது கருத்து. இப்பாடலில் வேற்றுப்பொருள் வைப்பணி பயின்று வந்தது.

"சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க; வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்"

"தொழுதகை யுள்ளும் படைஒடுங்கும்; ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து" (திருக்குறள் 827,828)

என்பன ஈண்டுக் கருதத் தக்கனவாம்.

5. பா. வே. 2:2,3,4 நாசி பிறர்க்கிலையோ

அங்கணம் – கழிவுநீர்க்கால்; அங்கணச் சேறு – சாக்கடைச் சேறு, ஏழன் தொகை; எங்கணும் – எவ்விடத்திலாயினும்; நாசிக்கு–மூக்கிற்கு; இதம்–நன்மை, இங்கு இன்பம் தருதலாகிய பயன்; ஒக்குமோ–ஒரேமாதிரி இருக்குமோ; நாசிக்கு இதம் ஒக்குமோ என்றது சாக்கடைச் சேறும், அகிற்சாந்தும் நாசிக்கு ஒரேவிதமான இன்பத்தைத் தராது என்ற கருத்தில்; தம் கணம்–(இழிந்தோர், உயர்ந்தோர் ஆகிய) அவர்கள் கூட்டம்; அறிவார் – (இழிந்தவர்களையும், உயர்ந்தவர்களையும் அவர்களின் சால்பு நோக்கிப் பிரித்து உணரத்தக்க) அறிவுடையவர்கள்; இத்தலத்து–இவ்வுலகில்; இலையோ என்ற வினா உள்ளனர் என்ற பொருளில் வந்தது; வெம்கணம்–அச்சத்தை விளைக்கும் தீப்பொறிகள்; ஆர்த்து-ஒளிவீசி; எழும் – தோன்றுகின்ற; வேல்: இங்குப் படைப் பொதுவாக நின்றது; மாற்றான் படையோடு மோதி பயங்கரமான தீப்பொறிகளை வீசும் படைகளை

ஆறும் கயமும் புயலும்அல்-
லால்அவைக்கு அம்புகொடுத்து
ஏறும் கடல்வடி யக்கண்ட-
தோ?இர வேஇரந்தும்
மாறும்அவ் வாறுஇல்லை; ஈவார்க்கும்!
ஈந்து மறுப்பதுஇல்லை;
வீறும்அந் தாலன்மைந் தா!செழி-
யா!திரு வேங்கடமே! 6

உடையவன்; வேற்செழியன்—இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்கதொகை.

இப்பாடலில் எடுத்துக்காட்டுவமையணி பயின்று வந்தது.

6. பா. வே. 3:3 ஈவாற்கும்

கயமும்—குளங்களும்; புயலும்—மேகமும்; உம்மைகள் எண்ணுப் பொருளில் வந்தன; அவைக்கு—அவற்றிற்கு என இருக்க வேண்டியது இவ்வாறு நின்றது வற்றுச் சாரியை கெட்ட புணர்ச்சி; அம்பு—நீர்; ஏறும்—(ஆறு முதலியவற்றின் பயன்பாட்டை)உயர்த்தும், பிறவினைப் பொருளில் வந்தது; இனி, ஏறும் என்பதனைத் தன்வினையாகவே கொண்டு பெருமைபெறும் என உரைத்தால் தவறில்லை எனினும் சிறப்பும் இல்லை; வடிதல்—நீர் மட்டம் குறைதல்; இரவு—யாசகம்; மாறும் அவ்வாறு—தன் இயல்பிலிருந்து மாறுபடுவதாகிய அத்தன்மை; ஈந்து—(தான் வளத்தோடு வாழ்ந்த காலத்தில்) கொடுத்து; மறுப்பது—(தன் நிலை கெட்டுவிட்ட காரணத்தால் பிறகு) வழங்க மறுத்து விடும் செயல்; வீறும்—மென்மேலும் வளர்ந்து கொண்டே உள்ள; அந்தாலன்—திருவேங்கடச் செழியனின் தந்தை.

ஆறு, குளம் முதலிய நீர்நிலைகள் வற்றலாம்; மேகங்கள் சூலுற்று மழை பொழியாமல் போகலாம்; ஆனால் இவை அனைத்திற்கும் தண்ணீர் வழங்குகின்ற கடல் எப்போதாவது வற்றுவதுஉண்டோ? இல்லை. அதுபோல நல்ல வள்ளன்மை உடையவர்கள் தம் கொடைப்பண்பிலிருந்து மாறவே மாட்டார்கள். புரவலர்களாக இருந்தவர்கள் விதி வசத்தால் இரவலராக மாறிவிட்டாலும் அந்நிலையிலும் தம் வசதிக்கேற்ப வழங்கிக்கொண்டே இருப்பர். இஃது அவர்

பழிபடுக் கும்பர தாரத்தின்
வேட்கைப் பசிமிகுத்தால்
இழிபுஅடுக் கும்;சுவை யார்ந்து
பாரிடு காட்டலகை
பொழிபடுக் கும்தலை மேற்றலை
யாய்ப்புற்றி னூட்டியபா-
லிழிபடுக் கும்சுவை காண்செழி-
யா!திரு வேங்கடமே! 7

நட்டார், துணைவர், தனயர்,எஞ்-
ஞான்றும் நலிவுசெய்வார்
ஒட்டாமல் ஒட்டிப் பகைத்தால்
முடிப்பதுஇஃது உண்மை அன்றோ?

களுக்கு இயல்பு என்பது கருத்து. கடல் வற்றினால்தான் நல்ல வள்ளல்கள் பண்பு மாறுவர் என எடுத்துக்காட்டப் பெற்றதால் எடுத்துக்காட்டு இல்பொருள் உவமையணி.

ஒப்புமை:

'' சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடாது ஆதலால்—தம்தம்
தனம்சிறியர் ஆயினும் தார்வேந்தர் கெட்டால்
மனம்சிறியர் ஆவரோ மற்று'' (வாக்குண்டாம் 28)

7. பா. வே. 2ஆம் அடி: இழிபடுக் குஞ்சுவை யாருந்துப் பாயிடு காட்டலகை; 3;2,3 புலிமேல் தலை

பிறர்மனை நோக்குவதால் வரும் கேட்டினைக் கூறும் இப்பாடலின் உண்மைப் பாடம் விளங்காமையால் தொடர் நிலை தெளிவாகத் தெரியவில்லை. எனவே இதற்கு உரை எழுத இயலவில்லை.

8. பா. வே. 1:3 பகைஞர்; 1:5 நலிவு செய்தால்; 2:2 ஒட்டப்; 3:1 எட்டாத

நட்டார்—(அரசனாகிய தனக்கு) நண்பர்கள்; துணைவர்— உடன்பிறந்தார்; தனயர் – மக்கள்; நலிவு செய்வார் — அரசிற்குத் தீமை செய்பவர்கள்; ஒட்டாமல் ஒட்டி—மனப்

எட்டாது கொல்லைப் பயிருடன்
கூடி எழுந்தபுல்லை
வெட்டா விடத்தகு மோ?செழி—
யா!திரு வேங்கடமே! 8

பேதைப் பருவத்தைப் போல்அடங்
காது பெருத்துஎழுந்த
சூதைப் பொருமுலை வாரால்கட்-
டுண்டு,சேர்ப்பு ஆவலர்கை

பூர்வமாக நட்புக் கொள்ளாமல் வெளிக்கு மட்டும் நட்புக் கொண்டது போலப்பொய்த்தோற்றம் காட்டி;பகைத்தால்—(மறைமுகமாகப்) பகைமையோடு செயல்பட்டால்; முடிப்பது இஃது—(முடிந்தால் அவர்களின் பகைமையை, இயலாவிடில் அவர்களையே) இல்லாமல் செய்வதாகிய இச்செயல்; உண்மை என்ற சொல் இங்கு நீதி என்ற பொருளில் ஆளப் பட்டுள்ளது; யாராக இருப்பினும் அரசு பணிகளுக்கு இடையூறாக இருப்பவர்கள் நீக்கப்பட வேண்டியவர்கள் என்பதே நீதி. எட்டாது—எளிதில் பார்வைக்கு அகப்படாமல்; எழுந்த—முளைத்த; வெட்டா—வெட்டாமல்; விடத்தகுமோ என்ற வினா விடத்தகாது எனற்பொருட்டு.

''எங்கண் அனையர் எனக்கருதின் ஏதமால்;
தங்கண்ண ரானும் தகவுஇல கண்டக்கால்
வன்கண்ண னாகி ஒறுக்க; ஒறுக்கல்லா
மென்கண்ணன் ஆளான் அரசு''
(பழமொழி 322)

என்னும் முன்னுறையரையனார் பாடல் இங்கு ஒப்புநோக்கத் தக்கதாம்.

9. பேதைப்பருவம்—ஏழுவயதிற்குட்பட்ட பருவம்; இப்பருவத்தில் வளர்ச்சி மிக விரைவாக இருத்தலின் தொழிலுவமை ஆவதோடு, இவ் வயதுப்பெண்கள் பெரியவர்களின் கட்டுப் பாட்டை மீறி வெளிப்பட முயல்வதைப் போலக் கச்சை விட்டுப் பிதுங்கி இருத்தலானும் இணையாயிற்று; சூது—வல், ஒரு வகையான சூதாடு கருவி; வார்—முலைக்கச்சு; சேர்ப்பு—மெய்யுறு புணர்ச்சி; ஆவலர்—விருப்பம் உள்ளவர்; சேர்ப்பு ஆவலர்—கலவி புரியும் காதலர்; கை வாதைக்கு—கைகளால் செய்யத்தகுந்த புறத்தொழிலால் நேரும் வருத்தத்திற்கு;

வாதைக்கு இசைந்து, தலைதாழும்;
ஆர்க்கும்இவ் வாறுஒக்கும்காண்;
மேதைத் தமிழ்புக ழும்செழி-
யா!திரு வேங்கடமே! 9

ஏசிய லோபர் மரக்காதும்,
கம்மியர் எஃகில்செய்த
ஊசியின் காதும் ஒருபிறப்-
பே;ஒழி யாக்கலையின்

தலைதாழும் — பருவம் கடந்ததும் சரிந்துவிடும்படியான; ஆர்க்கும் — யார்க்கும், யாராக இருப்பினும்; இவ்வாறு — (ஒரு காலத்தில் செம்மாந்திருந்து பிறகு நிலை தாழ்கின்ற) இத்தகைய நிலை; மேதைத்தமிழ் — அறிவுடையோர்களால் இயற்றப் பெற்ற தமிழ் நூல்கள்; தமிழ் என்ற சொல் ஆகு பெயராகத் தமிழ்மொழியானியன்ற நூல்களை உணர்த் திற்று; இயற்றியவரின் அறிவுடைமையை இயற்றப்பட்ட நூலின் மேலேற்றியது உபசார வழக்கு.

அடங்காது பெருத்து எழுந்த சூதைப் பொரு முலை விரும்பியே வாரால் கட்டுண்கிறது; சேர்ப்பு ஆவலர் கை வாதைக்கு இசைந்து களிக்கிறது;மக்கட்பயந்துதலைதாழ்ந்து பெருமிதம் கொள்கிறது. இதைப் போலவே எல்லோரும் தம்மால் மிக நேசிக்கப்படும் ஒருவரிடம் தம் உயர்வுகளை எல்லாம் விட்டுவிட்டு அன்பால் விளைந்த பணிவுடன் ஒழுகுவர். இஃது அவர்களின் அறிவின்மையையோ அல்லது வலியின்மையையோ காட்டாமல் அன்புடைமையையே காட்டும்.இஃது இயல்பானதும் போற்றுதற்குரியதுமேயாகும் என்பது கருத்து.

கவிஞன் தான் கருதிய பொருளை வெளிப்படக் கூறாது உவமையைக் கொண்டு பெறவைத்ததால் பிறிதுமொழிதல் அல்லது நுவலா நுவற்சி என்னும் அலங்காரமாயிற்று,

10. ஏசிய—தம்பால் வரும் இரவலர்களைச் சுடுமொழி கூறி விரட்டுகின்ற, லோபியர் ஏசுதலை அருணகிரிநாதர்,

''சீர தாகஎ டுத்துஒன்றும் மாகவி
பாடி னாலும்இ ரக்கம்செ யாதுஉரை
சீறுவார்'' (திருப்புகழ் 198);

மூசிய நூல்புக்கும் சற்றுஇரங்-
காது;என்கொல்? மூஉலகும்
வீசிய பேர்உல கைச்செழி-
யா!திரு வேங்கடமே! 10

மரக்காது – (இரவலர்களின் சொற்களைக் கேட்பதற்குப் பயனாகச் செயல்படாததால் அறிகருவியாகிய காதாக இல்லாமல்) மரத்தால் செய்யப்பெற்ற பொம்மைக் காது ஆயிற்று; 'கேட்பினும் கேளாத் தகையவே' என்பது போல (திருக்குறள் 418); கம்மியர்—உலோகத் தொழில் செய்பவர், கம்மாளர்; ஒரு பிறப்பே—ஒரே தன்மையைக் கொண்டதாகும் என்பது கருத்து;

ஒழியாக்கலையின் மூசிய நூல்புக்கும் சற்று இரங்காது என்னும் தொடர் இவறல் தன்மையுடையாரின் செவிகளுக்கும் ஊசியின் காதுக்கும் சிலேடை.

1. லோபியர் செவி: ஒழியாக்கலையின் மூசிய நூல்—அழிவற்ற மொழிகளானியன்று விளங்குகின்ற இலக்கியங்கள்; கலை மொழியை உணர்த்திச் சொற்களை உணர்த்தியது; சொற்கள் மொய்ப்பதனாலே நூல் தோன்றுகிறது; சப்தம் அழிவற்றது ஆதலின் இலக்கியம் இறக்காது; எனவே ஒழியா என்றார். "மலரவன்செய், வெற்றுடம்பு மாய்வனபோல் மாயாபுகழ் கொண்டு மற்றிவர் செய்யும் உடம்பு (நீதிநெறி விளக்கம் 6),

"நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினும் நூற்சீலை
நாற்றிங்கள் நாளுக்குள் நைந்துவிடும்—மாற்றலர்கள்
பொன்றப் பொருதடக்கைப் போர்வேல் அகளங்கா
என்றும் கிழியாதுஎன் பாட்டு"

(அவ்வை. தனிப்பாடல்)

போன்றவை இக்கருத்தான் எழுந்தனவே; இரங்காது—ஒலிக்காது; சற்றும் ஒலிக்காது என்றது அச்சுவையில் ஈடுபட்டு மகிழ்ந்ததற்குக் கைமாறாகப் பரிசில் தராமையின்; உம்மை விகாரத்தால் தொக்கது.

2. ஊசிக்காது: ஒழியாக் கலையின் மூசிய நூல் புக்கும் சற்று இரங்காது—ஓய்வில்லாமல் எப்போதும் துணிகளில் தன்பாற் பொருந்திய நூலோடு புகுந்தாலும்

கல்லும், கொடுமர மும்சிவ-
னார்க்கும்,கை வீரியர்க்கும்
புல்லும் குணத்தில் வணங்கக்கண்-
டோம்;புகழ்ந்து ஆயிரமும்
சொல்லும்அன் பாலும் குழையாத
புல்லர்க்குஎன் சொல்வது?ஐயோ!
வெல்லும்அந் தாலன்மைந் தா!செழி-
யா;திரு வேங்கடமே! 11

கொஞ்சமும் ஒலியை உண்டாக்காது; இரங்குதல்—ஒலித்தல்.

ஊசிக்காதில் நூல் (கயறு) நுழைந்தாலும், அக்காது துணிகளோடு தொடர்பு கொண்டிருந்தாலும் அவ்வறிவு நிலைத்திருக்காது. இப்பாடலில் சிலேடையை அங்கமாகக் கொண்ட உவமையணி பயின்றது.

11. பா. வே: 2:1 புல்லின்; 3:3 தொலையாத

கல்லும் — இமயமலையும், கொடுமரமும்—வில்லும், சொற்கிடக்கையால் கொடுமையான மரம் என்ற தொனிப் பொருளைத்தந்தது;கல்லும்மரமும்போன்ற நிலைத்திணைப் பொருள்களும் கூட; சிவனார் இமயத்தை வில்லாக வளைத்தார்; வீரர்கள் வில்லை வளைக்கின்றனர்; நிரனிறைப் பொருள்கோள்;புல்லும்—தம்பாற் பொருந்துகின்ற;வணங்கக் கண்டோம்—வளைவதைப் பார்க்கிறோம்;ஆயிரமும் என்றது இங்கு மிகுதியாக என்ற பொருளில் ஆளப்பட்டது;குழையாத உள்ளம் கசிந்து ஒன்றுபடாத; புல்லர்க்கு — புல்லர்களை, வேற்றுமை மயக்கம்; என் சொல்வது—உவமை கூற முடியாத அளவு இழிந்தவர்கள் என்பது கருத்து; ஐயோ—இரக்கத்தைக் காட்டும் இடைச்சொல். வெல்லும் அந்தாலன்—எப்போதும் வெற்றியைப் பெறுகின்றவனாகிய அந்தாலன், வெல்லும்—பெயரெச்சம்.

செழியா! கல்லும் கொடுமரமும் வணங்கக்கண்டோம்; (ஆனால்) ஐயோ! அன்பாலும் குழையாத புல்லர்க்கு என் சொல்வது? என்பது பொருள் முடிபு.

துன்பங்கள் யாவர்க்கும் தேடிக்கொ-
லோவந்த? தொல்வினையால்;
இன்பங் களும்இப் படிக்குஅல-
வோ? வித்தத்து ஆசையினால்
வன்புஅங்கண் நொந்து தவம்புரி
யாதுஅவம் மாய்வதுஎன்னோ?
மென்பங் கயவிழி யா! செழி-
யா! திரு வேங்கடமே! 12

''இணக்காது இரார்வல் இரும்புஒடிந்-
தால்வைத்து இருதலையும்
வணக்காது இரார்வில் நிமிர்ந்ததுஎன்-
றால்; புல்லர் மாறுபடும்
பிணக்குஆர் தடுப்பவர்? நாய்வாலை
நீளப் பிடித்துஇழுத்துக்
குணக்குஆர் எடுக்கவல் லார்? அச்சு-
தாநந்த கோவிந்தனே''

(கோவிந்த சதகம் 17)

என்பது சற்றேறக்குறைய இப்பொருளில் வந்தது.

12. யாரும் தமக்குத் துன்பங்கள் வரவேண்டுமென்று விரும்பித் தேடிச் சென்று அடைவதில்லை. இன்பங்களை விரும்புகிறார்கள்; எப்படியோ சில இன்பங்கள் கிடைத்துவிட்டால் அவற்றைத் தாமே முயன்று பெற்றுவிட்டதாகக் கருதி மகிழ்கிறார்கள். இன்பதுன்பமாகிய இரண்டுமே ஒருவன் செய்த நல்வினை, தீவினைப் பயன்களே என்கிறது இக்காரிகை.

தேடிக்கொலோவந்த — வினா எதிர்மறைப்பொருட்டு, அல்ல என்பது பொருள். பிறகு எப்படி வந்தது என்ற கேள்வியை அவாய் நிலையான் வருவிக்க; விடை தொல்வினையால்; இப்படிக்கு அலவோ—இவ்விதமாகவே வந்தனவன்றோ, அஃதாவது நல்வினைப் பயனாக விளைந்தனவன்றோ; வித்தத்து ஆசை—பொருளாசை, வித்தம்—செல்வம்; வன்பு—வன்மை, தீய செயல்களைக் குறித்து நின்றது, அம்-அசை, கண்-ஏழன் உருபு; வன்பு அம்கண்—தீயசெயல்களால், வேற்றுமை மயக்கம்; நொந்து—வருந்தி; அவம்—வீணே; மென்பங்கயவிழியா—

நெறிஆர் முனிபன் னியர்கற்பு
நீக்க நினைந்துஉழைபோய்
வறிதாகிச் சங்கரன் ஓடுகொண்-
டான்;மற்ற மானிடர்தாம்
செறிவுஆர் பிறர்மனைப் பாங்குஎய்தி-
னால்என்ன தீங்குஎய்துமோ?
வெறிஆரும் தார்க்குவ ளைச்செழி-
யா!திரு வேங்கடமே! 13

மிருதுவான தாமரை இதழைப் போன்ற அழகிய கண்களை உடையவனே.

இன்பதுன்பமாகிய இரண்டுமே வினைப்பயனாக இருக்கப் பலர் நல்லது வரும்போது தம் திறமையாலும், தகுதியாலும் அடைந்துவிட்டதாகக் கருதித் தருக்குவர்; அவரே தீமை வரும்போது தம்மிடம் குறை காணாமல் ஊழைப் பழிப்பர்; இத்தகைய செயல் அறிவுடைமை ஆகாது; தீமையைப் புரிந்து ஆயுள் முழுவதும் வருந்திக் கொண்டிருந்து விட்டுத் தனக்கும் பிறர்க்கும் பயனின்றி வீணே இறத்தலால் பயன் இல்லை என்பது கருத்து.

13. பா. வே. 1;5 நினைந்த அரன்; 2:5 மானிடரே

நெறிஆர் – தமக்குரிய கற்பொழுக்கத்திலே விடாமல் பொருந்தி நின்ற; முனிபன்னியர் – தாருகாவனத்திலிருந்த முனிவர்களின் மனைவியர்; உழை – அருகே; வறிதாகி– வறுமை பெற்று; சங்கரன் – சிவபெருமான், சம்+கரன் – உயிர்களுக்கு நன்மையைச் செய்பவன் என்பது பொருள்; ஓடு—கையோடு, பிச்சைப்பாத்திரம்; செறிவுஆர்— (மற்றவனோடு) நெருங்கி உள்ளவளாகிய; பிறர்மனைப் பாங்கு–மாற்றான் மனைவியின் அருகே; வெறி—நறுமணம்; தார்க்குவளை-குவளைத்தார் என மாற்றுக, முன்பின்னாகத் தொக்க மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

சிவபெருமானே பிறனில் விழைந்து பிச்சைப்பெருமான் ஆனார் எனில் மற்றையோர் கதி யாதாகுமோ என்பது

அரவுஆ யினும்மரு விப்பிரிங்-
தால்பிரிவு அல்லல்எனும்
பரவா சகம்அரி காட்டக்கண்-
டோம்;பண்டு அயோத்தியில்போய்
உறவுஆன பாம்பும் ஒருதுணை-
யாய்க்கொண்டு உடன்பிறந்தான்;
விரவார் தொழும்சிங்க மே!செழி-
யா!திரு வேங்கடமே! 14

கருத்து. அதைவிட இழிநிலை ஏற்படுதல் திண்ணம். எனவே பிறனில் விழைதல் தகாது என்பது அறிவுரை.

சிவபெருமான் முனிபன்னியரை விழைந்த வரலாறு: ஒரு காலத்தில் தாருகாவனத்தில் வாழ்ந்த முனிவர்கள் இறையன்பற்றவர்களாக வெறும் சடங்குகளிலேயே மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்தனர். இத்தகைய வேள்வி முதலிய வற்றாலேயே வீட்டின்பத்தைப் பெற்றுவிடலாம் என நம்பினர் இவர்களைத் திருத்தி ஆட்கொள்வதற்காகச் சிவபெருமானும் திருமாலும் பேரழகனாகவும் பேரழகியாக வும் சென்றனர்.சிவபெருமான் கவினெலாம் திரண்ட வடிவத் தோடு பிட்சாடனராகச் சென்றார். இவரைக்கண்ட ரிஷி பத்தினிகள் அனைவரும் காம மிகுதியால் தம் நிறையழிந்த னர். சிவபெருமான் முனிவர்களின் மனைவியரை நெருங்க நினைத்த அளவிலேயே அவர் பிச்சைக்காரராக நேரிட்டது எனக் கவிஞர் சாதுரியமாகக் கூறுகிறார். இவ்வரலாறு கந்தபுராணம், கூர்மபுராணம், கோயிற்புராணம், திருப் பேரூர்ப் புராணம் முதலிய பல சைவ புராணங்களில் இடம் பெற்றுள்ளது.

14. பா. வே. 1:5 அல்லல் என்ற

அரவாயினும் – பாம்பாகவே இருப்பினும்; மருவி – கலந்து பழகி; அல்லல் – துன்பம் தருவது; பரவாசகம் – பழமையான வார்த்தை, பழமொழி; அரி–திருமால்; பண்டு– முற்காலத்தில்; உறவுஆன–(திருமாலுக்குக் குடையாகவும், பாதுகைகளாகவும், படுக்கையாகவும் அமைந்து) நெருங்கிய தொடர்பினை உடைய; பாம்பும்–ஆதிசேடனையும், இரண்டன் உருபு தொக்கது. உம்மை இழிவு சிறப்பு; துணை யாய்க்கொண்டு – தன் சகோதரனாகிய இலக்குவனாகப்

கோல்ஆழி கோலில் சுழற்ற,வெம்
கூரில் குறைப்ப,மரத்
தாலானும் சாடச் சுடப்பட்ட-
தேனும் அமைந்துகும்பும்

பெற்று; உடன் பிறந்தான் — அப் பாம்புடன் இணையாகத் தானும் பிறவியெடுத்தான்;விரவார்-பகைவர்கள்;சிங்கமே— சிங்கத்தைப் போன்றவனே, உவம ஆகுபெயர்.

''விலங்கேயும் தம்மோடு உடன்உறைதல் மேவும்;
கலந்தாரைக் கைவிடுதல் ஒல்லா—இலங்கருவி
தாஅய் இழியும் மலைநாட! இன்னாதே
பேஎயோ டானும் பிரிவு'' (பழமொழி 122)

என்னும் பாடல் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

ஆதிசேடன் திருமாலுக்குப் பலவகையாகவும் தொண்டு செய்து நெருங்கிய தொடர்பைப் பெற்றிருப்பதைப் பிள்ளைப் பெருமாளையங்கார் பின்லருமாறு தெளிவாகக் கூறுகிறார்.

''சென்றால் குடைஆம்; கடற்புணை ஆம்;திருத் தீவிகைஆம்;
நின்றால் இருதிருப் பாதுகை ஆம்;நித் திரைக்குஅணைஆம்;
குன்றா மணிஒளி ஆசனம் ஆம்;புனை கோசிகைஆம்—
அன்றுஆ லிலையில் துயில்அரங் கேசர்க்கு அரவுஅரசே''
(திருவரங்கத்து மாலை 87)

15. பா. வே. 3:5 பொழியவன்றோ

கோல் ஆழி—வளைந்த சக்கரம், இங்குக் குயவனின் சக்கரத்தை உணர்த்துகிறது, வினைத்தொகை; கோலில் சுழற்ற — ஒரு தடியைக் கொண்டு வேகமாகச் சுற்ற, வேற்றுமை மயக்கம், மண் பாண்டம் செய்வோர் தம் சக்கரத்தை ஒரு கோல் கொண்டு சுற்றுவர்; வெம்— கொடிய, இங்கு மிக்க என்ற கருத்தில் ஆளப்பட்டுள்ளது; கூர்—முனை, குயவர்கள் சக்கரத்திலிருந்து தாம் செய்யும் பாத்திரத்திற்குத் தேவையான மண்ணைத் தவிர மீதம் உள்ளவற்றை ஒரு கூர்மையான ஒட்டைக் கொண்டு பிரித்து எடுப்பர், இதுவே கூரில் குறைப்ப எனப்பட்டது; கூர் ஆகுபெயராகக் கூரான ஓட்டை உணர்த்தியது, வளை என்பதைப்போல; கூரில்—கூரால், வேற்றுமை

போலாகி, அன்னம் புனல்ஏந்தி,
யார்க்கும் பொழியும்அன்றோ?
மேலார் மெலிவும்அஃதே;செழி-
யா!திரு வேங்கடமே! 15

நஞ்சோடு நஞ்சிட்டு மீட்பதுண்-
டோ?நன்றி ஒன்றும்இல்லா
நெஞ்சோரைத் தீநெஞ்சர் தேற்றுவ-
ரோ?நெடும் கூறைப்படும்

மயக்கம்; தால் — நாக்கு; மரத்தால் — நாக்கைப்போல் மரத்தால் செய்யப்பெற்ற பலகை, குயவர்கள் மண் பாண்டத்தைத் தட்டப் பயன்படுத்தும் பலகை, உவம ஆகுபெயர்; சுடப்பட்டதேனும்—சூளையிலிட்டுக் காய்ச்சப் பட்ட தேனும்; அமைந்து—முழு வடிவம் பெற்று; கும்பம் போலாகி—குடத்தின் வடிவத்தைப் பெற்று, மண் என்பது தோன்றாஎழுவாய்; மண் கோலில் சுழற்ற, கூரில் குறைப் பத் தாலானும் சாடச் சுடப்பட்டதேனும் அமைந்து, கும்பம் போலாகி யார்க்கும் அன்னம் புனல் ஏந்திப் பொழியுமன்றோ என்பது பொருள் முடிபு. அன்னம்—உணவு; புனல் — தண்ணீர்; அன்னம்புனல் — உம்மைத் தொகை; மேலார் — சான்றோர்கள்; மெலிவும் — துன்புறுதலும்; அஃதே — (முற்கூறப்பட்ட மண்ணின் துன்பத்தைப்போலப்) பிறர்க்கு உதவி செய்வதற்காகவே; ஏகாரம்—தேற்றம்.

சான்றோர்கள் துன்பப்படுவது பிறர்க்கு உதவி புரிவதற் காகவே என்பது கருத்து.

16. பா.வே. 3:5 தீர்ப்பதுண்டோ

மீட்பதுண்டோ — (நஞ்சை உடலில் இருந்து) திரும்பப் பெறுதல்; அஃதாவது வெளியே கொண்டுவருதல் உண்டோ என்பது கருத்து, வினா எதிர்மறைப் பொருளில் வந்தது; பின்வருவனவும் இவ்வாறே கொள்க; தீநெஞ்சர்—தீய எண்ணத்தினர்; தேற்றுவரோ — (மயங்கிய அறிவைத்) தெளிவித்து நல்லோராக மாற்றுவரோ, மாற்றார்; நெடும் கூறை—நீண்ட துகில், சிறப்பாகப் புத்தாடை; செஞ்சோரி—சிவந்த உதிரம்.

செஞ்சோரி யின்கறை தீர்ப்பது
நீர்அன்றிச் (சேரும் அந்த)
வெஞ்சோரி யோ?மொழி யாய்;செழி-
யா!திரு வேங்கடமே! 16

வய்யம் குணம்குற்றம் ஏதுஏது
மீறி வரும்அதுவே
அய்யம் கெடஎடுத்து ஆட்கொளும்
காண்;அந்த நீலகண்டன்

துணியில் படுகின்ற இரத்தக்கறை நீரால் நீங்குமன்றி மீட்டும் உதிரத்தால் போகாது; நஞ்சினை அருந்தியவர்களுக்கு அதனை வெளியேற்ற மேலும் நஞ்சைக் கொடுப்பதால் பயன் இல்லை; இவற்றைப்போலத் தீயவர்களைத் தீயவர்களால் நன்னெறிப்படுத்த இயலாது என்பது கருத்து.

நன்றி ஒன்றும் இல்லாரைத் தீநெஞ்சர் தேற்றார் என்னும் உவமேயத்திற்கு நஞ்சிட்டு நஞ்சினை மீட்க இயலாது, சோரியின் கறை சோரியால் நீங்காது எனும் இரு உவமானங்கள் கூறப்பட்டதால் இது பல்பொருள் உவமையணியின் பாற்படும்.

சமய நூலாசிரியர்கள் வண்ணான் உவர்மண்ணை ஏற்றித் துணியில் அழுக்கெடுப்பதைப்போல இறைவன் கன்மம், மாயை என்னும் ஆகந்துக மலங்களைக் கூட்டி ஆணவமாகிய மூலமலத்தை ஒடுக்குவன் என்பர்.

"செழுநவ அறுவைசாணி உவர்செறி வித்த ழுக்கை
முழுவதும் கழிப்பன் மாயை கொடுமல மொழிப்பன்
முன்னோன்"

(சித்தியார் சுபக்கம் 142)

வடமொழியிலும் 'உஷ்ணம் உஷ்ணேன சீதளம்' என்பர். சூட்டுடன் சூடுசேரின் குளிர்ச்சியாம் என்பது இதன் பொருள். தத்துவ உலகில் எப்படி இருப்பினும் சமுதாயத்தில் தீயவர் நட்பு நற்பலனைத் தராது என்பதனை இரண்டு உவமைகளைக் காட்டி ஆசிரியர் வலியுறுத்துகிறார்.

17. பா. வே. 1:4 லீறி, துன்றி

துய்யன் சிவப்பன் சிவந்தகண்
கால்கை துணைபெற்றதோள்
மெய்யன்; கறுப்பன்அன் றோ?செழி-
யா!திரு வேங்கடமே! 17

வையம், ஐயம் என்பன இரண்டும் எதுகை நோக்கி வய்யம், அய்யம் எனப் போலியாயின. வையம் ஐயம் கெட எடுத்து ஆட்கொளும் என இயையும்; அதுவே—அதனையே; இரண்டன் உருபு தொகுக்கப் பெற்றது; எல்லாப் பொருள் களிலும் நன்மையும் தீமையும் கலந்தே இருக்கும். எங்கு எது மிகுதியாக உள்ளதோ அங்கு அது சிறப்பாகக் கருதப் பெறும். மேலும் அப்பண்பையே அப்பொருளுக்குரியதாகவும் கொள்வர்.

''குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்'' (திருக்குறள் 504)

என்பது தமிழ்மறை அடுத்து இதற்கு எடுத்துக்காட்டு இடம் பெறுகிறது.

நீலகண்டன்—நீல நிறம் வாய்ந்த கழுத்தை உடைய வராகிய சிவபெருமான்; தேவர்கள் அமுதம் வேண்டிப் பாற்கடலைக் கடைந்த போது ஆலகால நஞ்சு தோன்றி யது; அமரர்களையும் உலகங்களையும் காப்பாற்றச் சிவபெருமான் அதனைத் தன் மிடற்றில் அடக்கிக் கொண் டார். அதனால் அவர் கழுத்து நீல நிறம் பெற்று அவர் நீலகண்டர் ஆனார்; துய்யன்—தூயவன்; கண் கால் கை துணை பெற்ற தோள் சிவந்த மெய்யன் என இயையும்; கண், கால், கை, தோள் ஆகிய நான்கிடங்களிலும் எண்ணும்மைகள் தொக்கன; சிவபெருமான் உடல் முழு வதும் சிவந்தவர்; எனவே அவர் செம்மேனி அம்மான் எனப்படுவார்; ஆனால் அவர் கழுத்து மட்டும் நீலமாக உள்ளதால் அதையும் சிறப்பாகக் குறிப்பிட்டு நீலகண்டன் எனப்படுவார்; இவ்விதமாக ஒரே பொருளில் மாறுபட்ட பண்புகள் இருக்கும் போது மிகுதியானதால் அது சிறப் படையும் என்பது கருத்து; கறுப்பன்—(கழுத்தில்) கரிய நிறமுடையவன்; அன்றோ என்ற வினா கழுத்தளவில் கரியவனாகவே கருதப்படுகிறான் என்ற உடன்பாட்டுப் பொருளில் வந்தது.

ஓயாத ஈகையன், பாவாணன்,
பாக்கொண்டு உலகில்நிற்போன்
மாயாத சூரன் மநுநீதி
வேந்தன், மறலிகையில்
போய்ஆவி புக்கும் உடம்பினை
நீத்தும் புகழுடம்பு
வீயார் இவர்ஐவர் காண்;செழி-
யா!திரு வேங்கடமே! 18

---

18. பா. வே. 1:3 பாவேந்தன்; 2:4 மன்னன்;

3ஆம் அடி: போயாவி புக்கு முடம்பொடு நீத்தும் புகழுடம்பு,
போயாவி புகினும் பூமியில் என்றும் புகழ்பெறவே

பாக்கொண்டு—புலவர்களின் பாராட்டுப் பாடல்களைப் பெற்று, பாடல் பெற்று என்றவாறு; மாயாத சூரன்—எந்நிலையிலும் சற்றும் அழியாத வீரத்தை உடையவன், மாய்தல் என்னும் தொழில் சூரனுக்கன்றிச் சூரத்தனத்திற்கு அடையாயிற்று; மறலி—இயமன்; ஆவி போய் மறலி கையில் புக்கும் என இயையும்; உடம்பினை நீத்தும்—பூத உடலை இழந்த பின்பும்; வீயார்—அழியப்பெறார்.

ஈகையன், பாவாணன், உலகில் நிற்போன், சூரன், வேந்தன் என்னும் இவர் ஐவர் ஆவிபோய் மறலி கையில் புக்கும் உடம்பினை நீத்தும் புகழுடம்பு வீயார் என்பது பொருள் முடிபு. காண்—முன்னிலை அசை.

"அனைவர்க்கும் உபகார மாம்வாவி கூவம்உண்
டாக்கினோர் நீதிமன்னர்
அழியாத தேவால யம்கட்டி வைத்துளோர்
அறங்கள் செய்தபெரியோர்
தனையொப்பு இலாப்புதல்வ னைப்பெற்ற பேர்பொருது
சமர்வென்ற சுத்தவீரர்
தரணிதனில் நிலைநிற்க எந்நாளும் மாறாத
தருமங்கள் செய்தபேர்கள்
கனவித்தை கொண்டவர்கள் ஓயாத கொடையாளர்
காவியம் செய்தகவிஞர்
கற்பினில் மிகுந்தவொரு பத்தினிம டந்தையைக்
கடிமணம் செய்தோர்கள்இம்

நீந்தா வறிஞர், பிணியாளர்,
ஒத்த நெறிஅறியார்,
பூந்தாரம் அஞ்சி விருந்துஒழிப்-
பார், பொருட் கேசிவிகை

மனிதர்கள் சரீரங்கள் போகினும் சாகாத
மனிதரிவர் ஆவர்அன்றோ?
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே''

(குமரேச சதகம் 31),

''தேவால யம்கோபு ரம்கல்வி பயிலிடம்
தேர்முதல உண்டாக்கினோர்
செகமெலாம் கீர்த்திபெறும் ஓயாத கொடையுளோர்
தேசத்தின் நீதிமன்னர்
காவியம் செய்கவிஞர் சுத்தரண வீரரொடு
கனவித்தை கற்றபெரியர்
கதிர்மதியும் உள்ளளவும் மாறாத அறமெலாம்
காதல்கொடு செய்தபேர்கள்
வாவிகூ பம்சோலை தருமசத் திரம்மடம்
வண்மைபெற வேசெய்தபேர்
வானகத்து உயிர்அகன்று ஏகினும் புவியதனில்
மாளாத பேர்களிவர்காண்''

(கயிலாசநாதர் சதகம் 12: 1–3)

என்பன இங்கு ஒப்பிடத் தக்கன.

19. நீந்தா வறிஞர்—எவ்வளவு முயன்றாலும் கடக்க முடியாத அளவு வறுமை வெள்ளத்தில் சிக்குண்டுள்ள ஏழைகள்; பிணியாளர் – தீராத நோயினால் துன்புறுவோர்; ஒத்த நெறி அறியார் – உலகத்தோடு ஒட்ட ஒழுகும் வழிமுறைகளை உணராதவர்கள்; பூந்தாரம் – அழகிய மனைவி, பண்புத்தொகை; விருந்து ஒழிப்பர்—தம் இல்லத்திற்குவந்த விருந்தினர்களை உபசரிக்காமல் திருப்பி அனுப்புபவர்கள்; பொருட்கே—பணம்ஈட்டுதல் ஒன்றையே பெரிதாகஎண்ணி; சிவிகை ஊர்ந்தார் முதுகில் சுமந்தும்—பல்லக்கில் செல்பவர்களைத் தமது முதுகில் சுமத்தலாகிய இழிதொழிலைச் செய்தும், உம்மை இழிவு சிறப்பு, ஒருவர் தம் உண்மையான தகுதியைவிட இழிந்த செயல்களில் பொருள்நாட்டத்தால்

ஊர்ந்தார் முதுகில் சுமந்தும்உண்-
　　பார்தம் உடல்இருந்தும்
வீந்தார் இவர்ஐவர் காண்;செழி-
　　யா!திரு வேங்கடமே! 19

கற்புஆ யிழைக்குஉரி யார்அர-
　　சோடு களத்து இறந்தார்,
சொற்பால் இயல்பகை நண்பும்ஒப்-
　　பார்,சொன்ன வாறுசெய்வார்,

ஈடுபடலாகாது என்பது கருத்தேயன்றி உடல் உழைப்பை இழிவு படுத்தியதாகாது; உடல் இருந்தும் வீந்தார் — உடலளவில் உயிருடன் இருந்தாலும் இறந்தவராகவே கருதப்படுவார்; காண்—உறுதிப்பொருளில் வந்த முன்னிலையசை.

ஒப்புமை :

மாறாத வறுமையோர் தீராத பிணியாளர்
　　வருவேட்ட கத்தில்உண்போர்
　　மனைவியை வழங்கியே சீவனம் செய்குவோர்
　　மன்னும்ஒரு ராசசபையில்
தூறாக நிந்தைசெய்து உய்குவோர் சிவிகைகள்
　　சுமந்தே பிழைக்கின்றபேர்
　　தொலையா விசாரத்து அழுந்துவோர் வார்த்தையில்
　　சோர்வுபட லுற்றபெரியோர்
வீறாக மனையாள் தனக்குஅஞ்சி வந்திடும்
　　விருந்தினை ஒழித்துவிடுவோர்
　　வீம்புடன் செல்லாத விவகார மதுகொண்டு
　　மிக்கசபை ஏறும்அசடர்
மாறாக இவர்எலாம் உயிருடன் செத்தசவம்
　　மாகியொளி மாய்வர்கண்டாய்.

(குமரேச சதகம் 32)

20. பா. வே. 4:3 புகழ்ச்செழி

கற்பு ஆயிழைக்கு உரியார்—கற்பினாற்சிறந்த மனைவியைப் பெற்றவர், கற்பு ஆயிழை — இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்கதொகை,ஆயிழை—ஒருசொல் நீர்மைத்தாக

பொற்புஆய வாழ்வில் பணிந்தார்என்று
ஐவர் புகழத்தக்கார்;
வெற்பாய் வளரும் புயச்செழி-
யா!திரு வேங்கடமே! 20

சொல்லால் மிகுத்துத் தொழில்குறை-
வார்,துணை போய்த்தப்புவார்,
செல்லாமை என்றுஅழு வார்,வணங்-
காமை செலுத்திச்செய்வார்,

நின்றது; அரசோடு களத்து இறந்தார் — போர்க்களத்தில் தம் அரசனுக்கு உதவியாகநின்று போரிட்டு அவன் போரில் இறக்கத் தாமும் உடனிறந்த வீரர்கள்; சொற்பால்—ஒரு வழக்கில் தீர்ப்பு வழங்கும்போது,''உரை முடிவு காணான்; இளமையோன்'' (பழமொழி 21) என்புழிப்போல இங்குச் சொல் வழக்கு என்ற பொருளில் வந்தது; இயல்—நொது மலர்; ஒப்பார்—(தீர்ப்புக் கூறுகையில் நியாயத்தை மட்டுமே கருதித் தமக்கு வேண்டியவர், வேண்டாதவர், தொடர் பற்றோர் என்ற மூவகையினரிடமும்) சமமாக ஒழுகுபவர்; சொன்னவாறு செய்வார் — கொடுத்த வாக்குறுதியை எப்படியும் நிறைவேற்றுபவர்கள்; பொற்பு ஆய வாழ்வில்— இளமை, செல்வம், அதிகாரம், வலிமை முதலியவற்றால் சிறந்து விளங்குகின்ற வாழ்க்கையை யுடையவராய்; பணிந்தார் — அடக்கமாக இருப்பவர்கள்; என்று ஐவர்— என்னும் ஐவரும், உம்மை தொக்கது; வெற்பாய் வளரும்— மலை போல ஓங்கி வளர்கின்ற, ஆதல்—ஆள்வாரிலிமாடு ஆவேனோ (திருவாசகம் — கோயில் மூத்ததிருப்பதிகம் 7) என்பதைப் போன்று உவமைப்பொருட்டு.

21. பா. வே. 1:5 போல் தப்புவார்

சொல்லால் மிகுத்து—பேசும்போது மிகைபடப் பேசி; தொழில் குறைவார்—செயல் புரியும்போது உரியமுறையில் செய்யாது மிகக் குறைவாகச் செய்பவர்கள்;துணைபோய்த் தப்புவார் — ஒரு காரியத்திற்கு உதவி புரிவதாகக் கூறி இடையில் மறுத்து விடுபவர்கள் (துணையாகச் சென்று பாதிவழியில் கைவிட்டு விடுவோர்); செல்லாமை என்று அழுவார் — ஒரு காரியத்தை முயன்று பாராமலே அது தன்னால் செய்ய முடியாதது என்று எண்ணி நொந்து

இல்லாள் குறிப்பில் நடப்பார்என்று
ஐவர் இகழத்தக்கார்;
வில்லாள் விசையன் எனும்செழி-
யா!திரு வேங்கடமே! 21

உரையோடு பட்டும் அகம்உரு
காக்கல்லும், ஒண்கலையின்
நிரையோடு சேர்ந்தும் மறுஆர்
மதிஅதும், நெட்டுஉடலின்

கொள்ளுவோர்; வணங்காமை செலுத்திச் செய்வார்—உண்மையாகப் பணிய வேண்டிய பெரியோர்களுக்குக் கூட பணியாமல் அடக்கமின்றியிருப்பதைக் கட்டாயமாகக் கடைபிடிப்போர்; இல்லாள் குறிப்பில் நடப்பார் — தன் மனைவியின் எண்ணத்தின்படியே எல்லாச் செயல்களிலும் நடந்து கொள்வோர்; வில் ஆள் விசையன் — வில்லைச் சிறப்பாகப் பயன்படுத்தவல்ல அருச்சுனன், கூறப்பட்ட இவர்களுக்குப் பெருமையில்லை என்பது கருத்து.

22. பா. வே. 1:3 மனம் உரு; 2:5 நெட்டளைந்து; 3;1 புரையோடு

இச்செய்யுளில் உரை, கலை என்னும் இரு சொற்களும் சிலேடைகளாக ஆளப்பட்டுள்ளன.

1) உரையோடு பட்டும்—தங்கத்தின் மாற்றறிய உரை கல்லாகப் பயன்படுத்தப்படும்; அகம் உருகாக் கல்லும்—பொன்னைத் தேய்த்தாலும் தான் தேயாத கட்டளைக் கல்லும்; (2) உரையோடு பட்டும்—நல்ல அறிவுரைகளைக் கேட்டும்; அகம் உருகாக் கல்லும் — மனம் கசியாத பாறையைப் போன்ற உள்ளத்தை உடையவர்களும்; கல் என்பது உவம ஆகுபெயராகக் கரையாத நெஞ்சத்தை உணர்த்தியது. ''நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருக'' (கந்தரநுபூதி—காப்பு) என்பார் அருணகிரியார்.

(1) ஒண் கலையின் நிரையோடு சேர்ந்தும் — ஒளி வீசுகின்ற சந்திர கலைகளின் வரிசையோடு கூடியும்; மறு ஆர் மதிஅதும்—மாசினைத் தன்பாற்பெற்ற திங்களும்; (2) ஒண் கலையின் நிரையோடு சேர்ந்தும் — புகழ் மிக்க கல்வியின் நிறைவோடு பொருந்தியிருந்தும்; மறு

சிரையோடு, கள்உண்ட வண்டும்ஒப்-
பார்சிலர் புல்லர்அன்றோ?
விரையோடும் தார்க்குவ ளைச்செழி-
யா!திரு வேங்கடமே! 22

கொடுங்கோல் அரசுக்கு ஒதுங்கி,மற்-
றோர்கொடுங் கோலுடைய
கடும்கோன் நகரம்நன்று என்று,புக்-
கார்களித்து ஆடும்மஞ்ஞை
அடும்கோபம் அஞ்சிப்புள் வேந்தனின்
சேக்கை அடைக்கலமாய்-
விடும்கோள் அரவுஒப்பர் காண்;செழி-
யா!திரு வேங்கடமே! 23

ஆர் மதி அதும்—ஐயம் திரிபு போன்ற குற்றங்களை உடைய அறிவும்; நெட்டு உடலின்—நீண்ட உடம்பைப் பெற்றுள்ள; சிரை—குரங்கு; புல்லர்—இழிந்தோர்; அன்றோ என்னும் வினா உடன்பாட்டுப் பொருளில் வந்தது; விரையோடும்—மணம்பரப்புகின்ற;

இங்கு நிரனிறைப் பொருள்கோளாக உரையோடு பட்டும் அகம் உருகாதவர்களுக்குக் குரங்கினையும், ஒண் கலையின் நிரையோடு சேர்ந்தும் மறு ஆர் மதியுடையார் களுக்குக் கள்ளுண்ட வண்டினையும் உவமைகளாகக் கொள்ளவேண்டும். குரங்கின் பிடிவாத இயல்பும், மது அருந்திய வண்டின் மயக்கமும் பொதுக் குணங்களாம். பிடிவாதமும் அறிவில் தெளிவின்மையும் உடையவர்கள் இழிவுடையோராவர் என்பது கருத்து.

23. பா. வே. 4:2,3 அரவுஒப்ப ரோசெழி

கடும்கோன்—கடுமையை உடைய மன்னன்; புக்கார்—குடியிருக்கப் புகுந்தவர்கள்; மஞ்ஞை—மயில்; அடும்—போரிடும்; புள்வேந்தனின்—பறவைகட்கு அரசனாகிய கருடனின்; சேக்கை-படுக்கை; கோள் அரவு-கொல்லும் தன்மையை உடைய பாம்பு; காண்—உறுதிப் பொருளில் வந்த முன்னிலையசை.

புக்கார் அரவு ஒப்பர் காண் என்பது பொருள் முடிபு.

செய்யோன் ஒருவன் செலுத்திய
போகத்தைச் சிந்தைசெய்யும்
மையோ தியைப்பற்றி மற்றொரு
காளை மணப்பதுஎல்லாம்
அய்யோ! சுவைத்துஎறி கன்னலங்
கோதை அரித்துஎறும்பும்
எய்யோ டலைஒக்கும் காண்;செழி-
யா!திரு வேங்கடமே! 24

பாம்புக்கு மயில், கருடன் ஆகிய இரண்டுமே பகை யானவை. எனினும் அது மயிலிடமிருந்து ஒருவேளை தப்பித்துக் கொள்ளக்கூடும் ஆனால் கருடன் கண்ணில் பட்டால் உயிர் தப்பல் அரிதினும் அரிது. எனவே ஒரு கொடுங்கோன்மைக்கு அஞ்சிப் பிறிதோர் கொடுங் கோலனின் ஆட்சிக்குள் அகப்படுவது பாம்பு கருடனின் படுக்கையை அடைக்கலமாக அடைந்ததைப் போல என்கிறார்.

24. பா. வே. 1:4 போகத்தில்; 2:5மணம் புணர்தல்

செய்யோன் ஒருவன்—மகளிரைத் தன்வயப்படுத்தும் கலை யில் தேர்ச்சி பெற்ற ஓர் ஆடவன்;செலுத்திய போகத்தைச் சிந்தை செய்யும் – தனக்களித்த கலவி இன்பத்தையே எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கும்; மைஓதியைப் பற்றி—கரிய கூந்தலுள்ள ஒரு மங்கையை வலிதில் பிடித்து; மையோதி:பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை, பின்மொழி நிலையல்; காளை – இளைஞன், உவம ஆகுபெயர்; மணப்பது—இடக்கரடக்கலாகக் கூட்டத் தைக் குறித்தது;அய்யோ—இரக்கக் குறிப்பு; சுவைத்து எறி அம் கன்னல் கோதை என மொழி மாற்றிக்கொள்க; ஒருவன் சுவைத்துத் துப்பிய அழகிய கரும்பின் சக்கையை; அம் என்னும் அடைமொழி சுவைப்பதற்கு முன்பிருந்த கரும்பின் நிலையைச் சுட்டவந்து அருத்தாபத்தியாகச் சக்கையின் அழகற்ற தன்மையையும் உணர்த்துகிறது; எய்ஓடலை – எய்த்து மீட்டும் மீட்டும் அதன் மேலேயே ஓடுதலை; எறும்பும்: உம்மை முன் சுவைத்தவனைத் தழுவிய எச்சவும்மை; எறும்பும் கோதை அரித்து எய்த்து ஓடலை ஒக்கும் காண் என்பது கருத்து.

கனைஆழி வஞ்சிப்ப தோ?இப்பி
வாய்க்கர வோ?குளிக்கும்
வனையார்அங்கு ஓடி மதிப்பர்;
எனினும் மதிக்கப்பெறார்;
நினையார் முயற்சி; நினைந்தாலும்
கைப்பொருள் நேர்வதுஎல்லாம்
வினையார் செயல்அல்ல வோ?செழி-
யா!திரு வேங்கடமே! 25

சக்கையை அரித்துக் கரும்பைச் சுவைப்பதாகத் தம்மைத்தாமே ஏமாற்றிக் கொள்ளும் எறும்புகளும், மாற்றானால் துய்க்கப்பட்டு அவனையே நினைத்து உருகும் மகளொருத்தியை வலிதிற் புணர்ந்து மகிழும் காளையும் தம்முள் ஒத்தவராவர் என்பது உவமை. இருவர்பெறும் இன்பமும் முழுமையானதன்று என்பது கருத்து.

25. பா, வே, 2:3 மதிப்பரென்; 2:4 றேனும்; 3:5 நேர்வது அல்லால்

கனைஆழி — ஒலிக்கின்ற கடல், வினைத்தொகை; இப்பி வாய்க் கரவோ — முத்துச்சிப்பிகளின்பால் வஞ்சனை உளதோ; வஞ்சிப்பதோ கரவோ என்னும் வினாக்கள் எதிர்மறைப்பொருளில் வந்தன; குளிக்கும் வனையார்— முத்துக் குளிக்கின்ற செயலினர்; அங்கு ஓடி—முத்துச்சிப்பிகள் நிறைந்த கடலிடத்தே மனஎழுச்சியுடன் சென்று; மதிப்பர் — (நன்முத்துக்களைப் பெறுவோம் எனும் நம்பிக்கையில்) கடைவர், சிப்பிகளைத் தேடிப்பிடிப்பர் என்பது கருத்து; மதிக்கப்பெறார் — (ஆணிமுத்துக்களை அடையாத காரணத்தால் அவர்கள் நல்ல ஊதியத்திற்குத் தகுதி உடையவர்களாகக்) கருதப்பட மாட்டார்கள்; நினையார் முயற்சி — (பலர் பொருளீட்டுவதற்கு ஏற்ற) முயற்சிகளைப் பற்றியே சிந்திக்கமாட்டார்கள், எனில் முயலல் கூற வேண்டாவாயிற்று; நினைந்தாலும் — ஒரு சிலர் பொருளீட்டவேண்டும் எனக் கருதினாலும், நினைத்தல் எண்ணத்தின்படி செயல்படுதலுக்கு உபலட்சணம்; வினையார் — அஃறிணைச் சொல்லாகிய வினைக்கு ஆர்விகுதி சேர்த்து உயர்திணையாக்கப்பட்டு உள்ளது; ஒருவருக்குச் செல்வம் சேர்வது வினைப்பயனாகும் என்பது கருத்து.

தொன்மா மரத்தின் நிழல்போல்வ-
தேஅன்றித் தும்பைநிழல்
பன்மா மதகரி காக்கும்கொ-
லோ?பண்புஇ லாதபுல்லர்
தன்மா னிடரை அறிந்தும்,நின்
போல்நன்றி தாங்குவரோ?
மின்மா ளிகைஉல கைச்செழி-
யா!திரு வேங்கடமே! 26

கடலுக்கோ முத்துச்சிப்பிக்கோ இன்னானுக்குத்தான் தரவேண்டும்,இன்னானுக்குத் தரலாகாது என்றவஞ்சனை இல்லை; முத்துக்குளிப்பவர்கள் பாடுபட்டுத் தேடுகிறார்கள் என்றாலும் அவர்கள் பயனடைவதில்லை. இஃது ஊழ்வினையின் விளைவே யாகும். பலருக்குப் பொருளீட்டுவதற்கான முயற்சி செய்ய வேண்டும் என்ற எண்ணமே தோன்றுவதில்லை; சிலர் முயன்றாலும் வெற்றி பெறுவதில்லை; இதற்கெல்லாம் காரணம் அவரவர்களின் ஊழ்வினையே ஆகும் என்றவாறு.

ஒப்புமை :

எழுதியவா றேகாண் இரங்கும் மடநெஞ்சே
கருதியவாறு ஆமோ கருமம்—கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்
முற்பவத்தில் செய்த வினை'' (வாக்குண்டாம் 20)

26. பா. வே. பார்க்கும்; 3:1,2,3 நன்மா னிடராய்ப் பிறந்தும்நின்

தொன்மாமரம்—பழமையான பெரிய மரம், இங்குக் குறிக்கப்பட்டது மாமரம் அன்று ஆலமரம் போன்ற பல வகையான பெரிய மரங்களும் பொதுவாகக் கூறப்பட்டன; தும்பை—வெண்மையான மலர்களை உடைய ஒரு சிறிய செடி; பன்மா—பல குதிரைகள், பின் யானைகள் கூறப்பட்டமையின் இனம் பற்றி இவ்வாறு கூறப்பட்டது; மதகரி—மதத்தை உடைய யானைகள், இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை; காக்கும் கொலோ என்ற வினா எதிர்மறைப் பொருள் தருகிறது; காத்தலாவது வெய்யில், மழை இவற்றிலிருந்து விலங்குகளைப் பாதுகாத்தல்; தன் மானிடரை—தனக்கு உரிய மனிதர்களை; நன்றி தாங்குவரோ—பேணிப் பாதுகாப்பார்களோ?

தள்நகை உற்று நரைத்தோரைச்
சேரும் தருணியர்க்கும்,
வள்நகை மென்முலை சாய்ந்தோரைச்
சேரும் மழவருக்கும்
உள்நகை கூரப் புறத்துஅன்பு
பாலிப்பது உண்மைகண்டாய்;
வெள்நகை வேல்கைத் தலச்செழி
யா!திரு வேங்கடமே! 27

காவார் என்றபடி; மின் மாளிகை—ஒளிவீசுகின்ற பெரிய வீடுகள், வினைத்தொகை.

தும்பைக்கும் நிழல் உண்டு. ஆனால் அது பன்மா மதகரியைக் காக்கப் போதாது. அதைப் போலப் பண்பிலாத புல்லர் ஒருவேளை தன்னால் பேணப்பட வேண்டியவர்கள் இன்னார் என அறிந்தாலும் அவர்களைக் காக்க அறியார். தொன் மா மரம் போலப் பேணும் ஆற்றல் படைத்தவர்கள் திருவேங்கடச் செழியன் போன்ற பண்பு நலம் மிக்கவர்களே என்பது கருத்து, தொன்மை குடிச் சிறப்பையும், பெருமை ஆற்றலையும் குறித்து நின்றன.

27. பா வே. 1:2,3 முற்றி நகைத்தாரைச்; 4:2,3 வேல்உல கைச்செழி

தள்நகை உற்று—பற்களெல்லாம் விழப்பெற்று, நகை ஆகுபெயராகப் பற்களை உணர்த்திற்று, தள்நகை—வினைத்தொகை; தருணியர் — இளமங்கையர்; வள் — ஒன்றையொன்று மிக நெருங்கியுள்ளதும்; நகை—அணி கலன்களை அணியப் பெற்றதும்; மென்—மென்மையானது மாகிய; முலை சாய்ந்தோரை—நகில்கள் சரிந்து விழுமளவு வயதாகிவிட்ட பேரிளம்பெண்களை; மழவருக்கும் — வாலிபர்களுக்கும்; உள்நகைகூர — உள்ளத்திற்குள்ளே மற்றவரைப் பரிகசித்துக் கொண்டிருக்க; புறத்து அன்பு பாலிப்பது—வெளியே மிக்க காதல் கொண்டவர்களைப் போலக் காட்டிக்கொள்வது; கண்டாய்—உறுதிப்பொருளில் வந்தது; வெள் நகை வேல்—வெண்மையான ஒளியைவீசும் வேல்; வெண்மையான ஒளியைவீசும் வேலை ஏந்திய கைகளை உடையவன் செழியன் என்றவாறு.

எவ்வாறு உயர்ந்தவ ரும்சிறி-
யோர்தம் மிடைநுழைந்தால்
அவ்வாறு தம்மிற் சிறுகுவர்
காண்;கம்பி அச்சு அளவா
செவ்வா டகம்நுழைந்து அவ்வளவு
ஆவதும் உண்மைகண்டாய்;
வெவ்வா ரணத்துஇந் திரா!செழி-
யா!திரு வேங்கடமே! 28

நொய்தாய் ஒருமணி பெற்றுஆ
யிரம்விற்பர் நுண்மலைபோல்
கைதான் மெலிந்துஒரு கைமதி-
யாய்க்கொள்வர் காதலை(யே)
செய்தாக நொந்தடை யாரணை-
யாமலும் செந்திருவின்
மெய்தான் அவர்கள்கண் டாய்;செழி-
யா!திரு வேங்கடமே! 29

---

28. *எவ்வாறு உயர்ந்தவரும் — எவ்வளவுதான் உயர்ந்தவர்களாக இருந்த போதினும்; அவ்வாறு—அச்சிறியோர்களின் தன்மைக்கேற்ப; சிறுகுவர்—சிறுமையைப் பெறுவர்; காண்—முன்னிலை அசை, உறுதிப்பொருளில் வந்தது; கம்பி அச்சு—உலோகங்களைக் கம்பியாக நீட்டும் கருவி; அளவா — அளவாத, கம்பி அச்சின் அளவில் இல்லாமல் அதைவிடப் பெரிதாக உள்ள; செவ்வாடகம்—செம்பொன்; அவ்வளவு—அந்த அச்சின் அளவு; வெவ்வாரணத்து — கொடிய யானையை உடைய, யானைப்படையை உடைய எனினுமாம்; இந்திரா—தேவேந்திரனை நிகர்த்தவனே!*

கம்பிநீட்டும் அச்சைவிட அளவால் பெரியதும் மதிப்பால் உயர்ந்ததுமாகிய பொன் (அச்சு இரும்பினாலாயது; அச்சின் அளவு என்பது கம்பி வரும் புழையை மட்டும் குறித்தது) அதனோடு தொடர்புற்ற போது அப்புழையின் அளவிற்குச் சிறுத்து விடுதலைப் போல மேலோரும் கீழோரோடு சேர்ந்தால் பதனழிவர் என்பது கருத்து.

29. *பா. வே. 1:3,4,5 பெற்றாலும் விற்பர்நுண்மலைபோய்க்; 2:2 கையம்மி 2:5 காதலினால்*

ஆளான குஞ்சரம் வாய்ஊறிச்
சிந்திய தாம்எனினும்
மாளாது எறும்புக்கு அநேகம்அன்-
றோ?வலி யோருக்குஒரு
நாளாகும் உண்டி எளியோர்க்குப்
பல்நெடு நாட்குஉண்டு காண்;
வேளா அழகுஒழு கும்செழி-
யா!திரு வேங்கடமே! 30

வல்லா னுடன்பொர மாட்டான்
ஒருபடை மாற்றிவென்றால்
எல்லாப் படையினும் வென்றுஉய்வ-
னோ?இடை யூறுவந்தால்

இக்கட்டளைக் கலித்துறையின் தெளிவான வடிவம் அறியக் கூடவில்லை. மூன்று சுவடிகளிலும் பாடம் இவ்வாறே உள்ளது. இதற்கு உரை விளங்கவில்லை.

30. பா. வே. 2:3,4 அநேகம் உண்டாம்வலி; 3:2 அன்றி; 3:5 நாட்குண்டிகாண்

ஆளான குஞ்சரம்—நன்றாக வளர்ந்த யானை; வாய்ஊறி—விரும்பித்தின்று; அநேகம் எறும்புக்கு மாளாது அன்றோ என இயையும்; தின்று முடிக்க இயலாமல் நிரம்பியிருக்கும் என்பது கருத்து; வலியோர் எளியோர் என்பன இங்குச் செல்வரையும் ஏழைகளையும் குறித்தன; வேளா—காமனைப்போன்று. பெருஞ்செல்வர்கள் வேண்டாம் என்று கழித்துவிடும் பொருள் பல ஏழைகள் பல நாள் துய்க்கப் போதுமானதாகும் என்பது கருத்து.இப்பாடலில்,

''வாங்கும் கவளத்து ஒருசிறிது வாய்தப்பின்
தூங்கும் களிறோ துயர்உறா—ஆங்குஅதுகொண்டு
ஊரும் எறும்புஇங்கு ஒருகோடி உய்யுமால்
ஆரும் கிளையோடு அயின்று'' (நீதிநெறிவிளக்கம் 37)

என்னும் குமரகுருபரரின் உவமை அப்படியே ஆளப்பட்டுள்ளது.

உணவுப்பொருளை வீணாக்காமல் வறியவர்களுக்கு உதவவேண்டும் என்பது இதனால் போந்த பொருள்.

31. பா. வே. 2:4,5 னோவினை காதலித்துக்

கல்லான் ஒருசொற்கு எதிர்த்தாலும்
கற்றவ னோடுஅனைத்தும்
வெல்லாநிற் கப்படு மோ?செழி-
யா!திரு வேங்கடமே! 31

காகத்து இருக்கைபுக் கால்என்பும்
ஊனும், கலுழன்வைகும்
மாகக் குடம்பை பணிமணி
யாவும் வழங்குவபோல்

வல்லானுடன் – நல்ல ஆற்றல் படைத்தவனோடு; பொர மாட்டான் – போரிட இயலாதவன்; ஒரு படை– ஓர் ஆயுதத்தை; உய்வனோ – வினா உய்யான் எனற் பொருட்டு; இடையூறு வந்தால் – (கல்வியிற் சிறந்த அறிஞனுக்கு எப்போதாவது) ஒரு தடை நேர்ந்தால்; அனைத்தும் வெல்லா நிற்கப்படுமோ என்ற வினாவும் எதிர்மறைப் பொருளது.

வலியவனோடு போர் புரிகின்றபோது மெலியவன் ஒரு படைக்கலத்தை மாற்றித் தாக்கினால் அப்போர் முறை வலியவனுக்குத் தெரியாமல் இருந்தால் ஒருவேளை மெலியவனும் வெல்லலாம். இதைக்கொண்டு மெலியவன் எல்லா ஆயுதங்களாலும் வலியவனை வென்று விடுவான் எனலாகாது. அதே போல அறிவற்ற ஒருவனும் ஒரு சமயத்தில் ஓர் அறிஞனைப் பேச்சில் மடக்கிவிடலாம். இதை மட்டுமே கொண்டு அறிவற்றவன் எப்போதுமே வென்று விடுவான் என நினைத்தல் தவறு என்பது கருத்து; எடுத்துக்காட்டுவமையணி.

32. பா. வே 2:5 வழங்குமன்றோ

காகத்து இருக்கை – காக்கையின் இருப்பிடம்; ஊன் – மாமிசம்; கலுழன்–கருடன்; வைகும்–வசிக்கும்; மாக – வானளாவ உயர்ந்த; குடம்பை–கூடு; பணிமணி – நாக மாணிக்கம்;மோக–தம்பால் உள்ள சிறிய பொருளிடத்தும் பெரும் பற்றுள்ளம் கொண்ட; காகத்து இருக்கையும் கலுழன் குடம்பையும் நிரனிறை, மோகச் சிறியோருக்கும் பெரியோருக்கும் உவமையாயின;மேக–முகிலைப் போன்று

மோகச் சிறியர் பெயர்தம்-
பால்முயன்று ஏகுவதும்;
மேகக் கரகம லச்செழி-
யா!திரு வேங்கடமே! 32

வையமும் கைவிட்டு வான்நாடு
புக்கும் வசந்தன்வந்தான்;
கொய்யவும் கொய்யவும் தன்சென்னி
மீண்டும் கொடியன்பட்டான்;

கைம்மாறு கருதாமல் வழங்குகின்ற;கர கமல—கைகளாகிய தாமரைகளைப் பெற்ற; உருவகம்.

காக்கையின் இருப்பிடத்தை யார் வேண்டுமானாலும் எளிதில் அடைந்துவிடலாம். கருடனின் கூட்டை அவ்வாறு அடைய முடியாது என்பதைக் காட்டவே மாகக் குடம்பை என்றார். மேலும் முயன்று ஏகுதல் என்னும் தொடரும் பெரியர் தம்பால் ஏகுவதற்கே சிறப்பாகப் பொருந்தும். எளிதில் சிறியோரைக்கண்டு சிறு உதவி பெறுவதிலும் அரிதின் முயன்று பெரியோரை அடைந்து உயர்ந்த பரிசிலை அடைவதே சிறப்பாகும் என்றவாறு.

33. பா. வே. 4:1,2,3 வெய்யவில் லான்விசை யாசெழி

வையமும் கைவிட்டு—உலகை நீத்து;வான்நாடுபுக்கும்—இறந்து மேலுலகை அடைந்தும்; வசந்தன்—கும்பகர்ண னால் பிசைந்து நெற்றியில் திலகமாக இட்டுக் கொள்ளப் பட்ட ஒரு வானர வீரன்; இவன் பிறகு கருடன் அணுகிய தால் பிழைத்து விடுகிறான்.

''பற்றின வசந்தன் தன்னைப்
பனைத்தடங் கைக ளாலே
எற்றினன் இவனை மீள
விடஒணாது என்று சொல்லிக்
கொற்றமு முடையன் என்னாக்
குழம்பெழப் பிசைந்து கொண்டு
நெற்றியிற் றிலத மாக
இட்டனன் நிகர்இ லாதான்''

(கம்ப. யுத்த. கும்பகர்ணன். 172)

செய்யதெய் வீகத்தை யாரேனும்
வெல்லும் செயல்வல்லரோ?
வெய்யவை வாள்அபி மா!செழி-
யா!திரு வேங்கடமே! 33

என்றதால் வசந்தனின் இறப்பும்,

''தருமத்தின் ஒன்றும் ஒழுகாத செய்கை
தழுவிப்பு ணர்ந்த தகையால்
உருமொத்த வெங்கண் வினைதீய வஞ்சர்
உடல்உய்ந்தது இல்லை உலகின்
கருமத்தின் நின்ற கவிசேனை வெள்ளம்
மலர்மேல்அவ் வள்ளல் கடைநாள்
நிருமித்த வென்ன உயிரோடு எழுந்து
நிலைநின்ற தெய்வ நெறியால்''

(கம்ப. யுத்த. நாகபாசப். 265)

என்றதால் வானரசேனையைச் சேர்ந்த அனைவரோடும் அவன் உயிர் பெற்றதும் உணரப்படும்.

மன்மதன் இயல்பாகவே விண்ணுலக வாசியாதலின் 'வையமும் கைவிட்டு வான்நாடு புக்கு' என்ற தொடர் அவனுக்குப் பொருந்தாமை கண்டு வானர வீரன் வரலாறு கொள்ளப்பட்டது. மேலும் அடுத்த இராவணன் செய்தியும் இவ்வரலாற்றின் தொடர்புடைமை இதனை உறுதிப் படுத்துகிறது. சென்னி—தலைகள்; கொடியவன்—இங்கு இராவணன்; பட்டான்-இறந்தான்; செய்ய—சிறப்பான; தெய்வீகத்தை—அருட்செயலை; செயல்வல்லரோ — வினா வல்லார் அல்லர் என்னும் எதிர்மறைப்பொருட்டு;வெய்ய—(பகைவர்களைக் கொல்வதால்) கொடுமை மிக்க; வை—கூரிய; வாள்—வாட்படையை ஏந்திய; அபிமா—அபிமன்யுவைப் போன்றவனே, உவம ஆகுபெயர், அபிமன்யு அருச்சுனனுக்குச் சுபத்திரையிடம் பிறந்த மகன், பெருவீரன்.

ஒரு சிறிய வானர வீரன் உயிரிழந்து உடலும் சிதைவுற்ற பிறகும் சிலநாள் கழித்துப் பிழைத்தெழுந்தான். ஆனால் இந்திரப் பெருபதம் பெற்ற இராவணன் துணிக்கத் துணிக்கத் தன் தலைகள் தோன்றிக் கொண்டே இருக்கவும் இறந்தொழிந்தான். எனவே இறையருட் செயலை

இதம்ஆ னிரைத்தெரு வின்மது
    மாந்தினும், ஈர்ம்பனைக்கீழ்த்
திதமாய் அமுதுஉண வேபயம்
    ஆம்ஒரு தீதுஅலரால்;
மதமா மருட்சிய ரால்புன்மை
    மேன்மை மறப்பும்இந்த
விதமாய் விடும்;உல கைச்செழி-
    யா!திரு வேங்கடமே! 34

யாராலும் வெல்லஇயலாது என்பது கருத்து. மேற்காட்டப் பட்ட நாகப்பாசப்படலப் பாடலில் பயின்ற 'நிலைநின்ற தெய்வநெறியால்' என்ற தொடரே'செய்ய தெய்வீகத்தை' எனப் பாட வைத்தது போலும்.

34. பா. வே. முதல் அடி: இதமா னிரைக்கீழ் வினமாது மாந்த விரும்பனைக் கீழ், இதமா னிரையிற்சென் றேமது மாந்தமுன் னீர்ம்பனைக்கீழ்;
2:3,4,5 வேபிறி தாமொரு தீதிலர்பால்,
வும்பய மாமொரு தீதிலாரால்

இதம்—நன்மையைத் தருகின்ற; இதம்+ஆனிரை என்புழி நிலைச்சொல் ஈறுகெட்டு வகர உடம்படுமெய்பெற்று இதவானிரை எனப் புணரவேண்டியிருக்க இங்கு எதுகை நோக்கி இயல்புப் புணர்ச்சி பெற்றது; ஆனிரைத் தெருவில்—பசுக்கூட்டங்கள் மிகுந்த வீதியில்; மது—கள்; மாந்தினும்—அருந்தினாலும்; ஈர்ம்பனை—குளிர்ச்சியைத் தருகின்ற பனைமரம்; திதமாய்—நிலைபெற்று, இருந்து என்பது கருத்து; அமுது உணவே – பால் குடிக்கவே; பயம் – அச்சம்; தீது அலரால் – தீமையைச் செய்கின்ற பழிமொழிகளால்; ஆனிரைத் தெருவின் மது மாந்தினும் பனைக்கீழ் அமுதுணவே தீது அலரால் பயம் ஆம் என இயையும்; மாமத மருட்சியர் என மாற்றுக, மிகுந்த ஆணவத்தையும் மதி மயக்கத்தையும் உடையவர்கள்; புன்மை—இழிவு; மறப்பு—கவனிக்கப்படாத நிலை.

'பனைமரத்தின் கீழிருந்து பாலைக் குடித்தாலும் உலகம் கள் என்னும்' என்பது பழமொழி. அவசரக் காரர்கள் ஒரு மனிதனின் செயலைப் பற்றித் தீர விசாரிக் காமல் அவன் சூழலை மட்டும் கொண்டு உடனடியாக அவனைப் போற்றவோ, தூற்றவோ, புறக்கணிக்கவோ துணிந்துவிடுவர் என்பது கருத்து.

தலையே இறைஞ்சும்; வயறே
நிறைக்கும்; தணியநிறைந்து
இலையே வணக்கம்; அது என்றுஇறு—
மாந்தும் இறைவர்நீதி
நிலையே கடக்கும் பதகற்கும்
தான்கற்ற நீதிஒன்றே;
விலையே தமிழ்க்குஎழு தும்செழி—
யா! திரு வேங்கடமே! **35**

ஒப்புமை :

மிடித்தாலும் மெத்தப் பசித்தாலும்
நல்லவர் மேரைதப்பி
வடித்து ஆயிரந்தரம் கள்குடிப்
பார்மனை வாசல்புகார்;
படித்தார்கள் கள்இறக் கும்பனங்
காட்டினில் பால்கொண்டுபோய்க்
குடித்தாலும் கள்என்ப ரேஅச்சு
தாநந்த கோவிந்தனே.

(கோவிந்த சதகம் 59)

35. பா.வே. 2ஆம் அடி: இலையே வணக்கந் தென்றிசை வார்திறை யநுந்தி; 3:3 பதகமும்

இறைஞ்சும் – பணிந்து தாழும்; நிறைக்கும் – நிறையும் என்னும் தன்வினைப் பொருளில் ஆளப்பட்டுள்ளது; தணிய—பருக்கும்படி; நிறைந்தும் என இருக்க வேண்டியதில் சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது; நிறைந்தும் வணக்கம் இலையே என இயையும்; அது என்று—அதைப் போல; இறுமாந்தும்—செருக்குக் கொண்டும்; இதில் உள்ள எச்சஉம்மை தன் காரியத்தை முடித்துக் கொள்வதாகிய வயற்றின் சுயநலத்தைத் தழுவியது; இறைவர்நீதி—அரசனின் கட்டளைகள், அல்லது கடவுளால் வகுக்கப் பட்ட நீதிமுறைகள் எனினும் ஆம்; சுயநலம் பேணலும் பணிவின்றி இறுமாந்திருத்தலும் ஆகிய இரு தீய பண்புகள் வயற்றின் மேல் ஏற்றப்பட்டன; பதகன்—இழிந்தோன்; பதகற்கும் என்பதன் எச்சஉம்மை உவமானமாகிய வயற்றைத் தழுவியது; கற்றநீதி—கடைபிடிக்கும் தீநெறி என்பது கருத்து; ''கருதிய பொருளைப் புகழ்வது போலப்

''சொற்கத்து அடைந்தவர் எல்லாம்
துயர்அடை யார்கள்''என்று
கற்கத் தரும்கலை பொய்சொலு-
மோ?கள்ள வேசியர்தம்
வற்கத் திருச்சொர்க்கம் புக்கார்க்குத்
துன்பம் வருதல்மெய்காண்;
விற்கைத் தலவிசை யா!செழி-
யா!திரு வேங்கடமே! 36

பழித்திறம் புனையும்'' இலேசணியாகக் கற்ற நீதி என்றார்; ஒன்றே என்பதிலுள்ள பிரிநிலை ஏகாரம் இவ்விழிந்தோர் பிற நற்குணங்களைப் பயிலவே இல்லை என்பதனை உணர்த்தி நின்றது; விலையே தமிழ்க்கு எழுதும் — சொற்பொருட்சிறப்பு வாய்ந்த தமிழ் நூல்களுக்கு விலையாகத் தன்னையே அடிமைச்சாசனம் எழுதிக் கொடுத்து விடும்; தமிழ் என்பது ஆகுபெயராகத் தமிழ் மொழியானியன்ற நூல்களைக் குறித்தது.

36. இப் பாடலில் சொர்க்கம் என்னும் சொல் வானுலகம், நகில்கள் என்னும் இரு பொருள்படச் சிலேடையாக ஆளப் பட்டுள்ளது. சொர்க்கம், வர்க்கம் என இருத்தற்பாலன எதுகைநோக்கிச் சொற்கம்,வற்கம்என வலித்தல் விகாரம் பெற்றன.

வானுலகாகிய சுவர்க்கத்தை அடைந்தவர்கள்எல்லாம் எப்போதும் துன்பப்படமாட்டார்கள் எனத் தேடிக் கற்கத்தக்க நூல்கள் கூறுகின்றன. இது பொய்யன்று. ஆனால் சுவர்க்கம் என்பதைத் தவறாக நகில்கள் எனக் கருதி அவற்றை விற்கும் பொதுமகளிர்பால் அடைந்தால் உண்மையாகத் துன்பம் வரும் என்பது கருத்து.

கலை—நூல்கள்;சொல்லுமோ—சொல்லாது என்றபடி; கள்ள வேசியர்—வஞ்சிக்கும் இயல்பினராகிய விலைமகளிர்; வர்க்க—ஒன்றற்கொன்று இணையான; திருச்சொர்க்கம்— அழகிய நகில்கள்;வில் கைத்தல—வில்லை ஏந்திய கைகளை உடைய; விசையா—அருச்சுனனைப் போன்றவனே, உவம ஆகுபெயர்.

எட்டிக்கும் இன்பக் கரும்புக்கும்
    பார்புனல் என்றும்ஒன்றே;
கட்டிச் சுவைபிரித்து ஆர்வைத்த-
    தோ?கடும் தீமைநன்மை
சிட்டித்த தொல்குணம் இல்லாது
    இராது; திருந்தலரை
வெட்டித் திறைகவ ரும்செழி-
    யா!திரு வேங்கடமே! 37

'நல்நாரும் சென்று மலர்க்காலைப்
    பற்றி நயந்துமணம்
துன்னாதுஇ ராது'என்கை தொன்மையன்-
    றோ?தொன்மை மாதவரை

எட்டி—கசப்பான காயையுடைய ஒரு மரம்; பார்புனல்—நிலமும் நீரும், உம்மைத்தொகை; பிரித்துக்கட்டி ஆர்சுவை வைத்ததோ என இயையும், யாரும் அவற்றைப் பிரித்து முறையே கசப்பையும் இனிப்பையும் ஊட்டவில்லை என்பது கருத்து; சிட்டித் தொல் குணம்—படைக்கப்பெற்ற போதே உடன்பிறந்த பழமையான பண்புகள்; இல்லாது இராது—(எப்பொருள்களிடத்தும்) இல்லாமல் போகாது; திருந்தலரை—பகைவர்களை; வெட்டி—போரிற் குறைத்து; திறைகவரும்—கப்பத்தைப் பெறுகின்ற.

''விளங்காய் திரட்டினார் இல்லை; களங்கனியைக்
காரெனச் செய்தாரும் இல்'' (நாலடியார் 103),

''கற்பூரப் பாத்திகட்டிக் கஸ்தூரி
    எருப்போட்டுக் கமழ்நீர் பாய்ச்சிப்
பொற்பூர உள்ளியினை விதைத்தாலும்
    அதன்குணத்தைப் பொருந்தக் காட்டும்''
(விவேக சிந்தாமணி 88)

''ஆலைப் பலாஆக்க லாமோ? அரும்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ?—நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ? கருணையிலா
மூர்க்கனைச்சீ ராக்கலா மோ?''
(ஔவை—தனிப்பாடல்)

என்பன இதே கருத்தை விளக்க எழுந்தனவாகும்.

38. பா.வே. 4:2,3 தொழும்மத வேள்செழி

எந்நாளும் தான்பணிந்து எல்லோரும்
மெய்த்தவம் எய்துவர்காண்;
மின்னார் தொழும்பவ னிச்செழி-
யா!திரு வேங்கடமே! 38

நலியா மணலையும் எஃகையும்
தீண்ட நடுங்கும்அது
பொலிஆ தவத்தினும் தீயினும்
காண்;புரந்து ஓர்சிறியன்

நல்நார் – (மலர் தொடுப்பதற்குப் பயன்படும்) நல்ல வாழை நார்; மலர்க்காலை – பூவின் காம்புகளை; மணம் துன்னாது–(அம்மலர்களுக்குரிய) நறுமணத்தைப் பொருந்தாமல்; தொன்மை–பழமொழி; பூவோடு சேர்ந்த நாறும் மணம் பெறும் என்பது பழமொழி;தொன்மை மாதவரை–முற்பிறவியின் நல்வினைத் தொடர்பால் தவம்மேற்கொண்ட பெரிய தவசிகளை.

''தவமும் தவம்உடையார்க்கு ஆகும்; அவம்அதனை
அஃதிலார் மேற்கொள் வது'' (திருக்குறள் 262)

என்னும் தமிழ்மறைபற்றித் தொன்மைக்குப் பொருள் கொள்ளப்பட்டது; எல்லோரும் மெய்த்தவம் எய்துவர் எனக் கூறப்பட்டிருப்பினும் உவமானத்தில் நல்நார் என அடை புணர்க்கப்பட்டதால் மெய்த்தவம் அடைதற்குரிய பக்குவம் உடையவர்கள் மட்டுமே என்ற கருத்து புலப்படுகிறது; மின்னார்–மகளிர்; பவனி–உலா.

39. நலியா என்பதனை மணல்,எஃகு ஆகிய இரண்டுடனும் தனித்தனியே கூட்டுக. (தான் தனியாக இருக்கும் போது) வருத்தத்தைத் தராத என்பது பொருள்; ஆதவம்–வெய்யில்; மணல் வெய்யிலோடு சேர்ந்தும், எஃகு தீயுடன் கூடியும் தொட்டால் நடுங்க வைக்கிறது என நிரல்நிறையாகப் பொருள் கொள்க; புரந்து–வணங்கி; ஓர்சிறியன் (வலியாரைப்) புரந்து வலியார் வலி பெறின் என இயையும்; அன்னோன் பொருட்டு–அவ்வலியவனுக்காக; மெலியாரை வாழ்வித்து வாழ் செழியன்–இரவலர்களைப் பாதுகாத்து அவர்களின் வாழ்க்கையை வளப்படுத்துவதோடு தானும் சிறப்பாக வாழ்கின்ற செழியதரையன்.

வலியார் வலிபெறின் அன்னோன்
பொருட்டு வணங்குவர்காண்;
மெலியாரை வாழ்வித்து வாழ்செழி-
யா!திரு வேங்கடமே! 39

மாறாத தீப்படின் அத்தோடு
இனம்புக்கு மண்குழையா;
மாறாத நீர்ப்பட்டு அதேபிறிது
ஆம்;அறி வாளரையும்,
தேறாத தீயினத் தோரையும்
சேர்ந்தவர் சிந்தைஎல்லாம்
வேறாவது இப்படிக் காண்செழி-
யா!திரு வேங்கடமே! 40

ஒப்புமை :

''ஆம்பிள்ளாய் எனக்கொடுக்கும் பெரியோரை
அடுத்தவரை அவனிக்கு எல்லாம்
நாம்பிள்ளாய் அதிகம்என்பார் நண்ணாரும்
ஏவல்செய நாளும் வாழ்வார்
வான்பிள்ளாய் எனும்மேனித் தண்டலையார்
பூஷணமாய் வளர்த்த நாகம்
ஏன்பிள்ளாய் கருடாநீ சுகமோஎன்று
உரைத்தவிதம் என்ன லாமே''

(தண்டலையார் சதகம் 44)

40. பா.வே முதல் அடி: மாறாத தீப்பட்டி னத்தொடின் புக்கு மணங்குழையா;
2:1,2,3,4 வாறாத திப்பட் டதேபிறி வாம்அறி,
மாறா தனிப்பட் டதேபிறி வாம்அறி;
3;1,2,3 தேறா மதியினத் தோரையும்

மாறாத–தன் இயல்பினின்றும் எப்போதும் மாறுபடாத; அத்தோடு–அத் தீயுடன்; இனம்புக்கு–இனமாகக் கலந்து; குழையா–நெகிழ்ந்து ஒன்றாகாது, வினைமுற்று; மாறாக – இந்நிலைக்கு முரணாக; நீர்ப்பட்டு – தண்ணீரோடு சேர்ந்து; அதே–அந்த மண்ணே; பிறிது ஆம்–வேறு இயல்பைப் பெற்றதாக இருக்கும், குழையும் என்பது கருத்து; அறிவாளர்–அறிஞர்; தேறாத–நன்மை, தீமைகளைப் பிரித்துத் தெளிந்து அறியாத; தீயினத்தோர்–தீய சேர்க்கையை உடையவர்; சிந்தை–உள்ளம்.

ஏதாலும் நீக்க முடியா-
    தவரை இனத்தகையார்
தீதா னதுதெரிந் தாலும்
    வெறார்;திறை யால்பொருது
மூதாதை யைச்செற்ற தண்ணீரை
    உண்ணா முனிந்துஉய்வரோ?
மேதா வியர்புக ழும்செழி-
    யா!திரு வேங்கடமே! 41

மண் தண்ணீரில் சேர்ந்தால் குழைகிறது; தீயோடு பட்டால் நெகிழ்தல் இல்லை. பொருள் ஒன்றேயாயினும் தான் சேரும் பிறிதொரு பொருளுக்கேற்ப நடந்து கொள்கிறது. அறிஞர்களுடனும், அறிவற்ற தீயவர்களுடனும் கலக்கும்போது மனிதர்களின் உள்ளமும் இவ்வாறே இனத்திற்கேற்ப மாறுபடுகிறது என்றவாறு.

''நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும்; மாந்தர்க்கு
இனத்தியல்பது ஆகும் அறிவு''

(திருக்குறள் 452)

என்பதும் மேற்கருத்துடையதே.

41. பா. வே. 1:2 நீக்கி; 2:2-3 னதுபிரிந்தாலும்

ஏதாலும்—எந்த வகையிலும்; நீக்க முடியாதவரை—தொடர்பு கொள்ளாமல் தவிர்க்க முடியாதவர்களை; இன—ஏதேனும் ஒரு விதத்தில் அன்னாருடன் தொடர்பு கொண்டுள்ள; தகையார் – தகுதிவாய்ந்தவர்கள்; தீது ஆனது – அவர்களின் குற்றம் ஆனது, பகுதிப் பொருள் விகுதி; தெரிந்தாலும் – ஐயத்திற்கு இடமின்றி வெளிப்படையாகக் காணப்பட்ட போதிலும்; வெறார்—வெறுத்தொதுக்க மாட்டார்கள்; திரையால் – அலைகளால்; பொருது—போரிட்டு; மூதாதையை—தன் முன்னோர்களில் ஒருவரை; செற்ற – கொன்ற, அலைகளால் பொருது அழித்தலாவது மூழ்கடித்தல்; தெண்ணீரை – தெளிந்த நீரை; உண்ணா—பருகாமல்; முனிந்து—(தண்ணீரின் மேல்) சினம் கொண்டு; உய்வரோ—பிழைப்பார்களா, பிழைக்க மாட்டார்கள் என்ற கருத்து வினா வாய்பாட்டால் கூறப்பட்டது; மேதாவியர்—பேரறிஞர்கள்.

கறுப்பான போரிடை வீரரும்,
காமத்தில் கன்னியரும்,
மறுப்பாடு இலாத தமிழைக்கற்-
றோரும்,நல் வாலிபத்தில்
உறுப்பான மைந்தரும் வாய்மதி-
யாமல் உரைப்பர்; அச்சொல்
வெறுப்பார்க ளோ?உரை யாய்;செழி-
யா!திரு வேங்கடமே! 42

கொடுப்பார் இலைஎனில் ஏற்போர்
விடார்;நற் குளத்தினில்நீர்
எடுப்பார் நிரம்பி இருந்தால்;
அதில்சலம் இல்லைஎனில்

தண்ணீருள் மூழ்கி ஒருவனின் முன்னோர் ஒருவர் இறந்திருக்கலாம். அதற்காகத் தண்ணீரின் மேல் கோபங் கொண்டால் உயிர் வாழ முடியாது. இவ்வாறே தவிர்க்க முடியாது பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டிய சிலரிடம் சில தீமைகள் காணப்படினும் அவர்களை வெறுத்து நீக்கி விடமாட்டார்கள் என்பது கருத்து, எடுத்துக் காட்டு உவமையணி.

42. பா. வே. 2.3 கவிதைகற்; 3:3,4,5 எண்ணாது உரைக்கில் அவர்கள்தமை 4:2,3 ளோவுல கைச்செழி

கறுப்பான—சினம் மிகுந்த; காமம்—கலவிக்காலத்தை உணர்த்தியது; மறுப்பாடு இலாத-மாசடைதல் இல்லாத, தூய்மையான; உறுப்பான—தன் குடும்பத்தின் ஓர் அங்க மான; வெறுப்பார்களோ என்ற வினா வெறுக்கமாட்டார் கள் என்ற எதிர்மறைப் பொருளில் வந்தது.

ஒப்புமை :

''கதன வீரர் களத்திடை வையினும்
குதலை வாயிற் குழவிகள் வையினும்
மதன லீலையின் மங்கையர் வையினும்
இதமு றச்செவிக் கின்பம் விளையுமே''

(விவேக சிந்தாமணி 46)

43. குளத்தினில் நல்நீர் நிரம்பி இருந்தால் எடுப்பார்; அதில் சலம் இல்லை எனில் கடப்பாரை கையில் கொண்டு ஊற்று

கடப்பாரை கையில்கொண்டு ஊற்றுஉறுஅத்
தோயமும் காண்பர்; அதை
விடுப்பார்க ளோ?உரை யாய்;செழி-
யா!திரு வேங்கடமே! 43

உறு அத்தோயமும் காண்பர்; அதை விடுப்பார்களோ? (அதேபோலக்) கொடுப்பார் 'இலை' எனில் ஏற்பார் விடார் என்பது பொருள் முடிபு.

இலை எனில் - (நீங்கள் கேட்கும் பொருள் என்னிடம்) இல்லை என்று கூறினால்; தோயம்-தண்ணீர்; விடுப்பார் களோ என்னும் வினா விடார் என்னும் பொருட்டு; எடுத்துக்காட்டுவமையணி.

அந்தகக்கவி வீரராகவ முதலியார் இத் திருவேங்கடச் செழியனின் அண்ணனாகிய தாகந்தீர்த்தசெழியனைப் பற்றிப் பாடிய,

''சாலப் பழுத்த மரம்பார்த்து
எறிவர்தண் ணீர்சுரக்கும்
ஞாலத்து அகழ்வர் கறக்கின்ற
ஆவைநற் கால்தளைவர்
நீலக் கடல்விட்டு பாலாழி
மத்திட்டு நிற்பர்இந்நீர்
சேலத்து வேந்தன் அகத்தாகம்
தீர்த்த செழியனுக்கே''

(பெருந்தொகை 1248)

என்னும் தனிப்பாடல் இதனுடன் ஒப்பிடத்தக்கது.

பாடல் முதற்குறிப்பு அகரநிரல்

உரை மேற்கோள் நூல் அகரநிரல்

(எண் - செய்யுள் வரிசை எண்)

சொல்லடைவு

செழியதரையன்
கோவை

செழியதரையன் கோவை

காட்சி

கார்பூத்து வில்கொண்டு வெற்புஏந்தி
வாரி கவர்ந்துகஞ்சத்து
ஏர்பூத்து மால்வடி வம்காட்டி
யேஇமை யோர்பதிபோல்
சீர்பூத்த பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
நேர்பூத்த காவில் ஒருவல்லி
தான்எதிர் நின்றதுவே. 1

---

1. **காட்சி:** *தலைமகன் தலைவியைத் தனித்துக் காணுதல்.*

இப்பாடலின் முதலிரண்டு அடிகள் தலைவிக்கும் திருமாலுக்கும் சிலேடை.

தலைவி:— கார்பூத்து—மேகத்தின் அழகு பொருந்திய கூந்தலைப்பெற்று; வில்கொண்டு — வில்லினைப் போன்ற புருவத்தைப் பெற்று; வெற்பு ஏந்தி—குன்றுகளைப் போன்ற நகில்களைச் சுமந்து; வாரிகவர்ந்து—கடலின் பரப்பைக் கவர்ந்த விழிகளைப் பெற்று; கஞ்சத்து ஏர்பூத்து—தாமரை மலரின் அழகைப்பெற்ற முகத்தளாகிய; மால் வடிவம் காட்டி—கண்டோரை மயங்கச்செய்கின்ற அழகிய உருவத்தை வெளிப்படுத்தி.

திருமால்:— கார்பூத்து—மேகத்தின் அழகிய நிறத்தைப் பெற்று; வில்கொண்டு—(சாரங்கம் என்னும்) வில்லை ஏந்தி; வெற்பு ஏந்தி—(கோவர்த்தனம் ஆகிய) மலையைத் தாங்கி; வாரி கவர்ந்து — பாற்கடலை (இருப்பிடமாக) விரும்பி; கஞ்சத்து ஏர் பூத்து—(திருவடிகள், திருக்கரங்கள், திருவிழிகள் ஆகிய உறுப்புகளில்) தாமரைமலரின் எழிலைப் பெற்று; மால்வடிவம் காட்டி — திருமாலாகிய தன் உருவினைத்

கொங்குஏறு தாமரையோநில
மோகுன்ற மோவிசும்போ
சங்குஏறு வாரிதி யோநெஞ்ச
மேதணி யார்பணிதாள்
பங்கேரு கச்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
இங்கே இவர்எய்த அங்கே
பொருந்துஒளி எய்தியதே! 2

தோற்றுவித்து; இமையோர்பதி–தேவர்களின் தலைநகரம், அமராவதி; வல்லி–கொடி. செழியன் வெற்பில் நேர்பூத்த காவில் ஒரு வல்லிதான் மால் வடிவம் காட்டி எதிர் நின்றது என்பது பொருள் முடிபு. பூத்து, கொண்டு, ஏந்தி, கவர்ந்து காட்டி என்னும் வினையெச்சங்கள் நின்றது என்ற முற்றைக் கொண்டு முடிந்தன.

மகளிரின் கண்களுக்குக் கடல் உவமை–''மகரம் எறிகடல் விழியினும்'' (திருப்புகழ் 565).

திருமாலின் உறுப்புகளுக்குத் தாமரை உவமை–''பெருத்த முகில் வண்ணம்; அம் கை கண் கால் வனசம்; திருவரங்கம் கண்ணமங்கை ஊர்'' (நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி 27).

2. ஐயம்–தலைவியைக் கண்ட தலைவன் அவள் பேரெழிலால் மயங்கி, ''இவள் எத்தகைய தெய்வப்பெண்ணோ'' என்று என்று ஐயுறுதல்.

கொங்கு ஏறு தாமரையோ – தேன் மிகுந்த தாமரை மலராமோ இவள் வசிப்பிடம் என்பதைப் பொருளெச்சமாக ஒவ்வொரு வினாவுடனும் கூட்டுக. தாமரையில் இருப்பவர் திருமகளும், கலைமகளும்; நிலம் – மண்ணுலகு; குன்றம்–மலை; விசும்பு – அமரர் உலகம் (அகல் விசும்புஉளார் கோமான் இந்திரன்–குறள் 25); சங்கு ஏறு வாரிதி–சங்குகள் நிறைந்த கடல்; நெஞ்சமே-விளி; நெஞ்சமே இவள் இருப்பிடம் தாமரையோ, நில உலகமோ, மலையோ, தேவலோகமோ, கடலோ என்றமையானே இவள் தாமரைக் கிழத்தியர் இருவருள் ஒருத்தியோ மலையரமகளோ விண்ணுலக மங்கையோ நீரரமகளோ இந்நிலவுலகப் பெண்தானோ என ஐயுற்றவாறு தணியார்–பகைவர்; தாள் பங்கேருகம்–காலாகிய தாமரை, உருவகம்; பங்கேருகச் செழியன் – இரண்டன்உருபும் பயனும் உடன்தொக்க தொகை; பாலை–

துணிதல்

காலாறு மென்சிறை காலாறு
வண்டின்கண் காட்டவல்லி
மேலாறும் வல்லிபிற் காலாறும்
காட்டவிண் ணாற்றின்கண்
சேலாறும் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
மாலாறு நெஞ்சிடம் சேரநின்
றார்இடம் மாநிலமே. 3

திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டத்தில் உள்ள பாலையூர்; இது சின்ன சேலத்திற்குத் தெற்கே சுமார் இருபதுமைல் தொலைவில் உள்ளது. இவ்வூரில் மலை இல்லை. எனினும் குறிஞ்சித்திணை என்னும் இலக்கிய மரபுபற்றிப் பாலை வெற்பு எனப்பட்டது. இங்கே—பாலை வெற்பாகிய இவ்விடத்திலே; இவர்—தலைவி, நெஞ்சறி சுட்டு; அங்கே—தாமரை முதலாக முன் கூறப்பட்ட இடங் களில்; பொருந்து ஒளி—அமைந்துள்ள அழகு; இவர் இங்கே எய்த அங்கே பொருந்து ஒளி (யாவும்) எய்தியதே என்பது முடிபு. ஏகாரம் வியப்பின்கண் வந்தது.

3. **துணிதல்—தலைவன் தலைவியைத் தெய்வமகள் அல்லள், மானிடப் பெண்ணே எனத் துணிதல்.**

காலாறும் — இளைப்பாறுகின்றதும்; மென் சிறை — மென்மையான சிறகுகளை உடையதும்;காலாறு—கால் ஆறு. ஆறு கால்களை உடையதுமாகிய; வண்டின்—வண்டினைப் போன்று, இன்—உவம உருபு; கண்காட்ட—கண்கள் காட்சி யளிப்பதாலும்; வல்லிமேல் ஆறும் — கொடியைப் போன்ற தலைவியின் மேல் வெயர்வையின் ஒழுக்கமும்; வல்லி—உவம ஆகுபெயர்; வல்லி பிற்கால் ஆறும்—தலைவி சென்ற பிறகு அவள் நடந்த வழியும்; காட்ட — காணப்படுதலால்; இம் மங்கையின் மேனி வியர்த்தலானும், இவள் காலடிகள் நிலத்தில் தோய்ந்து தாம் சென்ற வழியைச் சுவடுகளால் தெரிவித்தலானும் இவள் மானிடப் பெண்ணே, அரமகள் அல்லள் எனத் துணிந்தவாறு.

குறிப்பறிதல்

நடைக்காவி யத்தர் உவமைக்குளட்
டாதுஅளி நாடச்செந்தேன்
மடைக்கா வியப்பநின் றார்இடத்
தேஅமர் வாய்த்தொடர்ந்தோ
படைக்குஆவி ஆம்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைப்பிரான்
தொடைக்கா வியுமதன் காவியும்
காட்டும் துணைக்கண்களே. 4

விண் ஆறு—ஆகாய கங்கை;பாலை வெற்பின் கொடிமுடி விண்ணைத்தொடுவதால் இவ்வெற்பின் நீர்நிலைகளிலுள்ள சேல்மீன்கள் ஆகாய கங்கையில் நீர் பருகுகின்றனவாம். ஆரும் என்னும் சொல் எதுகை நோக்கி ஆறும் என விகாரப் பட்டது; மால் ஆறு நெஞ்சிடம்—விருப்பங்கள் நிறைந்துள்ள உள்ளத்தின்கண்; இங்கும் ஆரும் ஆறும் என நின்றது.

வண்டின் கண்காட்ட, வல்லிமேல் ஆறும் பிற்கால் ஆறும் காட்ட, வெற்பில் நின்றார் இடம்,மாலாறு நெஞ்சிடம் சேர நின்றார் இடம் இம்மாநிலமே என்பது முடிபு.

4. **குறிப்பறிதல் :-** தலைவியின் பார்வையால் அவளுக்குத் தன்மீது விருப்பம் உண்டெனத் தலைவன் அறிதல்.

நடைக்காவியத்தர் — சிறந்த நடையழகு வாய்ந்த காப்பியங்களை இயற்றும் புலவர்; காவியத்தர் உவமை— புலவர்களால் கையாளப்படும் உவமை அணி, மூன்றன் உருபும் பயனும் உடன்தொக்கதொகை; செந்தேன் மடைக்கா அளிநாட என இயையும்; செந்தேன் மடைக்கா— சிறந்த தேனாகிய உணவிற்காக; அளி—வண்டுகள்; புலவர்கள் உவமை கூறமுடியாமலும், தேன் நாடி வரும் வண்டுகள் தன் தொழிலை மறந்தும் வியப்படையுமாறு நின்றாள் தலைவி என்பது கருத்து.

அமர்—போர்; வாய்—ஏழன் உருபு; தொடர்ந்தோர் படை— தொடர்ந்தோராகிய படை, பின்பற்றிச் செல்லும் படை வீரர்; படைக்கு ஆவி ஆம் செழியன்—படைவீரர்களால் தம் உயிரைப் போன்று நேசிக்கப்பட்டவனாகிய செழியன். தொடைக்காவி—மாலையின்கண் உள்ள குவளைமலர்,ஏழாம்

இரந்து பின்னிலை நிற்றற்கு எண்ணல்

இரப்பாற்கு இரக்கப் படுவார்;நம்
காதல் இசைத்துஇரப்போம்
புரப்பார் இவர்அன்றி வேறுஇலை
யேமதப் போதகமல்
திரைப்பாராப் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
கரைப்பார் இலைநெஞ்ச மேதஞ்ச
மேஎனக் கைதொழுதே. 5

வேற்றுமைத்தொகை. மதன்காவி – மன்மதனின் ஐந்து கணைகளில் இறுதியானதாகிய குவளை மலர், ஆறாம் வேற்றுமைத் தொகை; செழியன் வேளாளர் மரபினன் ஆதலின் அதற்குரிய குவளை மாலை அணிந்துள்ளான். ''மேழிக் கொடியொடு வெண்ணிறக் குடையும் காவி மாலையும் கங்கை சேயினர்க்கே'' என்பது அறுவகை இலக்கணம் (நூற்பா 593). செழியனின் மாலை அவன் வள்ளன்மையையும், காதலியர்க்குச் சுகமளித்தலையும் காட்டுதலின் இன்பத்தைத் தரும் மகளிரின் விழிக்கு உவமை ஆயிற்று. ''கூற்றம் அனைய நறுநீலம் கொலும்வேள் அம்பின் குணம் இதுவே'' என்பது உவமான சங்கிரகம், (56–4). தலைவியின் கண்கள் பொதுநோக்கால் வருத்து தலின் துன்பம் தரும் மாரனின் குவளைக் கணை உவமை ஆயிற்று. பொது நோக்கால் துன்பம் தருவதுடன் சிறப்பு நோக்கால் தண்ணளி செய்கிறாளாதலின் இவள் நம்மாட்டு வேட்கை உடையவளே எனத் தலைவன் அறிகின்றான்.

இக்கட்டளைக் கலித்துறையில் திரிபு என்னும் சொல்லணி பயின்று வந்தது.

ஒப்புமை :

''இருநோக்கு இவள்உண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்குஒன்று அந்நோய் மருந்து'' (குறள் 1091)

5. **இரந்து பின்னிலை நிற்றற்கு எண்ணல் :** தலைவன் தலைவியிடத்தில் தன் காதல் மிகுதியைத் தெரிவித்து இன்மொழி கூறிக் குறைநயக்க எண்ணுதல். பின்னிற்றல் என்பது இன்மொழி கூறல் எனப்பொருள் தரும் ஒரு சொல்.

இரந்து பின்னிலை நிற்றல்

**துரக்குங்கண் ணம்பு புருவவில்
லால்தொடுத்து எந்தனையே
புரக்கும் படிநினை யாதிருந்
தீர்;(இது புண்ணியமோ?
சுரக்கும் கருணையன் பாலைச்
செழியன் சுனையிடத்தில்)
அரக்கும் கமலம் எனஅறிந்
தேன்நும் அரமனையே.** 6

''உலகில் எவரும் தம்பால் வந்து யாசிப்பவருக்குக் கருணை காட்டுவர்; அதனால் நாமும் இவளிடம் குறையிரப்போம்; இவளைத் தவிர நம் காதல்துன்பத்தைப் போக்குவார் பிறர் இலர்; நமக்காக இவள் மாட்டுச் சென்று இவள் உள்ளத்தை உருக்குவார் பிறர் இலர்; எனவே மனமே! நீயே அடைக்கலம் என இவளைப் பணிந்து நம் காதல் நோயைக் கூறி யாசிப்போம்'' எனத் தலைவன் நினைக்கின்றான்.

மதப் போதகம்—மதத்தினை உடைய யானை; இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்கதொகை; மல்—போர்; போதக மல்—யானைப் போர்; திரைப்பு—சுருங்குதல். இங்குக் குறைதல் எனும் பொருளில் பயின்றது; திரைப்பு ஆரா—குறையாத. தஞ்சம்—அடைக்கலம், புகலிடம்.

6. **இரந்து பின்னிலை நிற்றல்:** தலைவன் தான் எண்ணியவாறு தலைவியிடம் குறையிரத்தல்.

புருவ வில்லால் துரக்கும் கண் அம்பு தொடுத்து என இயையும். புருவவில் — உருவகம்; துரக்கும் என்னும் பெயரெச்சம் செளுத்தப்படும் எனப் பிறவினைப்பொருளில் வந்தது, துரக்கும் அம்பு, கண் அம்பு என இயையும், செலுத்தப்படுகின்ற கண் ஆகிய கணை என்பது பொருள், கண்ணம்பு—உருவகம்; புரக்கும்—காப்பாற்றும், இங்குக் காதல் நோயைத் தீர்க்கும்; எனக்குக் காதல்நோய் தந்த நீ அதனை மாற்றாதது அறமன்று என்பது கருத்து; அரக்கும் — செம்மை நிறம் காட்டும், பெயரெச்சம்; அரமனை — மன்னன் மாளிகை, இங்கு வாளா வசிப்பிடம் என்ற பொருளில் வந்தது; நும் அரமனை கமலம் என அறிந்தேன் என்றமையானே தான் அவளைத் திருமகளாகக் கருதுகிறான் எனக் கூறியவாறு.

முன்னிலை யாக்கல்

நசைஆயம் நீங்க மதன்ஏவல்
கேட்கநண் ணாமல்என்கண்
இசையா அறிஞர் புகழ்ந்திட
வேஇரப் போர்க்குஉதவும்
திசையாளன் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
அசையாது நின்றதுஎன் என்னாவி
யேயென்று அறைந்திடுமே. 7

கருணை நிறைந்த செழியதரையனுக்குரிய சுனையினிடத்தில் தோன்றிய போதிலும் உன்பால் கருணை இல்லையே எனக் குறிப்பித்தவாறு. பகைவர்களைப் போரில் செழியன் துன்புறுத்தினாலும் பின் அவர்கள் பணிந்தால் மன்னித்து அருள் புரிவான். அவன் சுனையில் தோன்றிய நீ என்மேல் விழிக்கணை தொடுத்தாய்; அதற்காற்றாது இப்போது நான் உன்னிடம் இரக்கின்றேன். நீ அருள்புரிய வேண்டும் என்பது கருத்து.

7. **முன்னிலையாக்கல் :** *தலைவன் தலைவியை முன்னிலைப் படுத்திக் கூறுதல்.*

நசை ஆயம் நீங்க மதன் ஏவல் கேட்க நண்ணாமல் என் கண் இசையா என்ஆவியே என்று செழியன் வெற்பில் நின்றது என்; அறைந்திடுமே என இயையும்.

நசை ஆயம்—விரும்புகின்ற தோழியர் கூட்டம், வினைத் தொகை; நண்ணாமல்—(என் அருகே) நெருங்காமல்; என் கண் இசையா—(அருகே வாராதிருப்பினும்) என் பார்வையிற் பொருந்தி; இசையா — செய்யா என்னும் வாய்பாடு; திசையாளன்—எட்டுத் திசைகளையும் ஆள்பவன்; என் ஆவியே என்று—என் உயிரைப் போல; அசையாது நின்றது என்—அசைவற்று ஓர் ஓவியம் போல நின்று கொண்டிருப்பதன் காரணம் யாது; அறைந்திடும்—கூறுவராக; உன்னைக் கண்டதிலிருந்து என் உயிர் இயக்கமற்று ஓரிடத்திலேயே நிலைபெற்றுவிட்டது. அதுவேபோல நீயும் தனித்து நிற்பதேன் என்பது கருத்து.

மெய்தொட்டுப் பயிறல்

போர்ஊர் கரும்பு குழைத்தவண்
டீர்அது போல்அளிநாண்
சீர்ஊர் கரும்பு குழைக்கஉற்
றீர்செம்பொன் மேருசுற்றுஇப்
பார்ஊர் புகழ்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
வார்ஊர் முலைக்குஇடை நில்லாது
உமக்கு வரும்பழியே. 8

---

8. **மெய்தொட்டுப்பயிறல் :** தலைவன் தலைவியின் மேனியைத் தொட்டு நெருங்குதல்.

இத்துறை வண்டோச்சி மருங்கணைதல் என்றும் கூறப்படும்.

போர் ஊர் கரும்பு—அமர் புரியும் தொழிலில் ஈடுபட்ட கரும்பு வில், இது மாரனின் கரும்புவில்லைக் குறித்தது; குழைத்த வண்டீர்—(காமனின் வில்லிற்கு நாணாக அமைந்து அதனை)வளையச் செய்த தும்பிகளே; நேராக உள்ள வில் நாண் பூட்டப் படுவதால் வளைகிறது. அதனையே குழைத்த என்றார். ''ஆலைக் கரும்புசிலை ஐங்கணைபூ நாண்கரும்பு'' என இரத்தினச் சுருக்கம் என்ற நூல் (பாடல் 9) மன்மதனின் வில், அம்புகள், நாணைக் குறிப்பிடும்.

அளி நாண் சீர் ஊர் கரும்பு—அன்பு, நாணம் ஆகிய பண்புகளால் சிறந்தவளும் கரும்பைப் போன்று இனியவளு மாகிய தலைவி; அளி நாண் என்னும் உம்மைத் தொகைத் தொடர் ஒரு சொல் நீர்மைத்தாக நின்று அளிநாண்சீர் என மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை ஆயிற்று; கரும்பு—உவம ஆகுபெயர்; அளி நாண் சீர் ஊர் கரும்பு என்னும் தொடர் மன்மதனின் வில்லுக்கும் தலைவிக்கும் சிலேடை. வண்டுகளாலாகிய நாணின் சிறப்பைப் பெற்ற கரும்பு வில் என ஒரு பொருளையும் அன்பு நாணம் ஆகிய குணங்களால் சிறப்புற்ற இனியவ ளாகிய தலைவி என மறுபொருளையும் தந்துநிற்கிறது. ''மன்மதன் வில்லை வளைத்தலால் உமக்குப் பெருமையே அன்றிப் பழி இல்லை; ஆனால் சிலேடை வகையால் அதனை நிகர்த்த தலைவியின் கூந்தலில் நீங்கள் படிந்தால் உம் சுமை

பொய் பாராட்டல்

மருமேவு கஞ்சமும் திங்களும்
நீர்என மாறுபட்டே
உருமேவு றாதுஉமது ஆனனத்
தால்நறை யூறுகஞ்சத்
திருமேவு பாலைப் பதித்தாகந்
தீர்த்தவன் செழியன்வெற்பில்
அருமேவு வேள்குடை யாய்க்கணை
யாய்த்தினம் ஆதரித்தே. 9

தாங்காது அவள் இடை இற்றுவிடும். உமக்குப் பெண் பழி உண்டாகும்'' என்பது தலைவன் கூற்று.

மேரு சுற்று இப்பார்—மேரு மலையைச் சூழ்ந்துள்ள இவ்வுலகம்; பார் ஊர்—பாரும் ஊரும், உம்மைத்தொகை, இடவாகுபெயராகப் பாரிலும் ஊரிலும் உள்ள மக்களை உணர்த்திற்று; வார் ஊர்—கச்சு பொருந்திய.

கரும்பு குழைத்த வண்டீர்! அது போல் பாலைவெற்பில் கரும்பு குழைக்க உற்றீர்; முலைக்கு இடை நில்லாது; உமக்குப் பழியே வரும் என்பது சொன்முடிபு. ஈற்றே காரம் புகழன்று பழியே என்னும் பொருளில் வந்த பிரிநிலை.

9. **பொய் பாராட்டல் :** தலைவன் தன் வேட்கை மிகுதியால் தலைவியின்பால் இல்லாத சிறப்புகளையும் இருப்பதாகக் கூறிப் பாராட்டுதல்.

மரு—நறுமணம், களங்கம், முதல் நிலை விளக்காகக் கஞ்சம், திங்கள் என்ற இரண்டோடும் இயைந்தது, களங்கத்தை உணர்த்துங்கால் மறு என இருத்தற்பாலது சிலேடை மற்றும் தீபகம் காரணமாக மரு எனப் போலி ஆயிற்று. கஞ்சம்—தாமரை.

கஞ்சமும் திங்களும் உமது ஆனனத்தால் நீர் என மாறு பட்டே அருமேவு வேள் குடையாய்க் கணையாய்த் தினம் ஆதரித்து உரு மேவுறாது என்பது சொன் முடிபு. தாமரை, மதியம் ஆகிய இரண்டும் தானே தலைவியின் முகத்திற்கு நிகர் எனத் தம்முள் போராடினவாம். இக்குற்றத்தின்

இடம் பெற்றுத் தழால்

தடம்காட்டு அருவிப் பொழில்காட்டிக்
காட்டும் தனிநிழலின்
இடம்காட்டி என்உளத்து ஆசையும்
காட்டியே ஏற்றபுயல்
தடம்காட்டும் பாலைப் பதித்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
மடம்காட்டி நாண்புறம் காட்டாது
அருள்மலர் வாழ்வல்லியே. 10

காரணமாகவே அவை வடிவமற்ற மாரனுக்கு அம்பாகவும், குடையாகவும் அமைந்து அவனுக்குப் பணி புரிகின்றனவாம். உருவமற்ற ஒருவனுக்குப் பணி புரிவதால் தம் உருவத்தையும் இழந்தனவாம்.

உரு—சிலேடை; வடிவம், அழகு என்ற இரு பொருள் படுமாறு ஆளப்பட்டுள்ளது. வடிவற்றவனின் பணியாளராகியதால் தாமரையும் மதியும் தம் வடிவத்தை இழந்தன; அம்மட்டோ? தலைவியின் முகத்தழகின் முன் தம் எழிலையும் இழந்தன என்பது கருத்து. ஆனனம்—முகம்; நறை—தேன்; கஞ்சத்திரு—தாமரையின்கண் விளங்கும் இலக்குமி, இங்கு அவள் கடைக்கண் நோக்கின் பயனாகிய செல்வவளத்தைச் சுட்டுகிறது; அரு—உருவமின்மை;

வேள் குடை கணை—முன் கஞ்சமும் திங்களும் என்றவர் இங்கு முறை மாற்றிக் கூறியதால் எதிர் நிரல்நிறை. தாமரையும், சந்திரனும் வேளுக்குக் கணையும் குடையுமாக ஆனதற்குப் புலவர் தாமே ஒரு காரணத்தைக் கற்பித்துக் கூறுதலின் தற்குறிப்பேற்ற அணி.

10. **இடம் பெற்றுத் தாழால் :** *தலைவியைத் தழுவுவதற்கு வாய்ப்பான ஓர் இடத்தைக் காணப்பெற்று அங்குத் தலைவன் தலைவியைத் தழுவ விரும்பிக் கூறுதல்.*

தடம்—மலையின் பக்கம்; காட்டு—காணப்படுகின்ற; அருவிப்பொழில்—அருவியைத் தன்பால் பெற்ற சோலை, இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை; தனி—ஒப்பற்ற, சிறந்ததாகிய; புயல்தடம்—மேகத்தின் பெருமை,

நாணிக் கண்புதைத்தல்

நோயும் மருந்தும் தரும்கண்
புதைத்துஉற நுண்இடைமேல்
காயும் தனத்தை வெளிக்காட்டி
னீர்கரு தார்முடிமேல்
பாயும் பரிச்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைஅன்னீர்
ஆயும் குணம்அன்மை நோக்காது
செய்வது அறிவின்மையே. 11

அஃதாவது பயன் கருதாது உதவி செய்தல், ஆறாம் வேற்றுமைத் தொகை; மடம்—மடமை, அஃதாவது கொளுத்தக் கொண்டும் கொண்டது விடாத மகடூஉக் குணம்; நாண்புறங் காட்டாது—நாணத்தால் (முகத்தைக் காட்டாது மறைத்துக் கொண்டு) முதுகு காட்டாமல்; புறங்காட்டல்—ஒருசொல் நீர்மைத்து, நாண்புறங் காட்டாது—மூன்றாம் வேற்றுமைத்தொகை; மலர் வாழ் வல்லியே—தாமரையில் உள்ள திருமகளை நிகர்த்த தலைவியே; வல்லி—கொடி; உவமவாகு பெயராகத் தலைவியை உணர்த்திற்று, ஏகாரம்—விளி.

வல்லியே! பாலை வெற்பில் இடம் காட்டி ஆசையும் காட்டி மடம் காட்டி நாண்புறம் காட்டாது அருள் என்பது சொன்முடிபு.

11. **நாணிக் கண்புதைத்தல் :** *தலைவி நாணத்தால் தன் கண்களைக் கைகளில் புதைத்துக் கொள்வதால் விளைந்த துன்பத்தைத் தலைவன் கூறுதல்.*

இத்துறை இடையூறு கிளத்தல் எனவும் பெயர் பெறும்.

நோயும் மருந்தும் தரும் கண் – நான்காம் பாடலில் விளக்கப்பட்டது; நுண் இடைமேல் காயும் தனம் – தாம் மிகப்பருத்து முன்னமே மிக மெலியதாய் ஒசிந்துள்ள இடையின் சுமையை அதிகரிப்பதன் வழியாகத் தன் சினத்தைக் காட்டும் நகில்கள்; கருதார்—பகைவர்; பரி—குதிரை; பரிச் செழியன் – இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை; ஆயும்—ஆராயப்பட வேண்டிய, இப்பெயரெச்சம்

முறுவற் குறிப்புணர்தல்

விருந்துஆரும் பண்வண்டு கண்டே
புறமுகை விண்டுதண்தேன்
பொருந்துஆம் பலின்இன் னுயிர்தாங்கி
ஓங்கும்வெம் போரில்வந்து

பிறவினைப் பொருளில் நின்றது, பருகும் நீரும் என்புழிப் போல; குணம் அன்மை–நன்மையல்லாதது.

கண்கள் துன்பத்தைத் தந்தாலும் கூடவே அதனைத் தணிக்கவும் செய்கின்றன. ஆனால் நகில்களோ மெலியா ராகிய இடையை இடைவிடாது வருத்துகின்றன. இவ் விரண்டினுள் நகில்களின் தீமையே மிக்கது. இதனை ஆராயாது அவற்றைச் சுதந்திரமாக விடுத்துக் கண்களைக் கைகளால் புதைத்துச் சிறைப்படுத்தல் அறிவுடைமை ஆகாது என்றபடி.

12. **முறுவற் குறிப்புணர்தல் :** தலைவியின் முகத்தே தோற்றிய சிறுநகையால் அவட்குத் தன்மேல் காதல் தோன்றுவதைத் தலைவன் உணர்தல்.

விருந்து ஆரும்–விருந்தினராகத் தன்பால் வருகின்ற; பண்வண்டு–இசையை மிழற்றுகின்ற தும்பியை, இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்கதொகை; புற முகை–மலரின் வெளிப்புறத்து இதழ்; விண்டு–விரித்து; தண்தேன்–குளிர்ச்சியான தேன்; பொருந்து-அமைந்துள்ள; ஆம்பல்–செவ்வல்லி; பொருந்துஆம்பல் – வினைத்தொகை; ஆம்பலின் என்புழி இன் உவம உருபு.

பருந்து ஆரும் வேல்–பகைவர் உடலிற் பாய்ந்ததால் தன் மேல் பதியப் பெற்றுள்ள இறைச்சியை நாடிக் கழுகு களால் அடையப் படுகின்ற ஈட்டி; வேற்செழியன்–வேலை ஏந்தியுள்ள செழியன், இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை; முருந்து–மயிலிறகின் அடிப்பாகம், இது மகளிரின் பற்களுக்கு உவமை, ''முருந்தும் மாதளை அரிசியும் முல்லை அரும்பும் நகைக்கு இணை அறைவது முறையே'' என்பது அறுவகை இலக்கணம்(நூற்பா 559). நகை நிலவு–உருவகம்; கங்குல்–இருள்; ஆசைக் கங்குல்–உருவகம்.

பருந்துஆரும் வேல்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைஅன்னார்
முருந்துஆர் நகைநிலவு என்ஆசைக்
கங்குல் முறித்ததுவே. 12

புகழ்தல்

நீர்புக்கு அறல்புக்கு ஒருதாளில்
நின்றுஉட னேர்ந்துநெகிழ்ந்து
ஏர்புக்க மாதவத் தால்மிக
வாடினும் ஏந்துபொன்தேர்

யாலை அன்னார் நகை நிலவு ஆம்பலின் (என்) இன் உயிர் தாங்கி என் ஆசைக்கங்குல் குறித்தது என்பது சொன்முடிபு.

தேன் வண்டிற்கு விருப்பத்தோடு நுகரப்படும் இன்பப் பொருளாக மட்டும் அன்றி உயிர் வாழ இன்றியமையாத உணவுப் பொருளாகவும் இருப்பதைப் போலத் தலைவி தனக்கு ஒரு போகப் பொருளாக மட்டுமன்றி இன்றியமை யாத உயிர்த்துணையாகவும் வேண்டப்படுபவள் ஆவாள் என்பது குறிப்பு. ஆம்பலின் புறமுகை விண்ட அளவில் உள்ளிருக்கும் தண்தேன் வெளியிற்றோன்றுமாறு தலைவி சற்றே புன்முறுவல் பூப்ப அவள் இதழமுதம் ஓரளவு காட்சிப் பொருளாகிறது என்றவாறு. வண்டு கண்டு புற முகை விண்டது என்பதால் ஆம்பல் தும்பியின் வரவை விரும்பியது என ஆயிற்று. இதனால் தலைவியும் தலைவன் மாட்டு விருப்புடையவள் ஆயினாள் என்பது அவனால் உணரப்பட்டது.

13. புகழ்தல் : தலைவியை முயங்கிய தலைவன் அவளது நலத்தைப் பாராட்டிக் கூறல்

இப்பாடலின் முதலடி தாமரைக்கும் தவசியர்க்கும் சிலேடை.

தாமரை: நீர்புக்கு–தண்ணீரில் மூழ்கி; அறல்புக்கு– கருமணலிடை நின்று; ஒரு தாளில் நின்று – ஒற்றைத் தண்டில் நின்று; உடன்நேர்ந்து – தாளொடு சேர்ந்து தோன்றி; நெகிழ்ந்து–மலர்ந்து.

பார்புக்க மால்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
சீர்புக்க கொங்கை முகம்நிக
ராசுனை சேர்கஞ்சமே. 13

அணிந்துழி நாணியதுஉணர்ந்து தெளிவித்தல்

கங்குலும் தாரகைக் கூட்டமும்
போல்உன் கருங்குழற்கே
கொங்குஉறை நாண்மலர் எல்லாம்
அணிந்தனன் கூறுஇசையோர்

தவசியர்: நீர்புக்கு — நீர் நிலைகளில் குளித்து; அறல்புக்கு (ஆற்றங்கரை போன்ற) மணல் வெளிகளை அடைந்து; ஒரு தாளில் நின்று — ஒற்றைக்காலில் நின்று; உடல் நேர்ந்து—மேனி மெலிந்து; நெகிழ்ந்து—(இறைவனை எண்ணி எண்ணி) உள்ளம் உருகி.

ஏர்புக்க—சிறப்பமைந்த; ஏந்துபொன்—(திருமாலாகிய தன்னால் மார்பில்) தாங்கப்பட்ட திருமகள்; பொன்தேர் பார்—திருமகளால் விரும்பப்படும் உலகம் அஃதாவது வள மிக்க உலகம்; பார்புக்க மால் செழியன்—உலகில் தோன்றி யுள்ள விட்டுணுவைப் போன்ற செழியதரையன்; சுனை— அருவி; கஞ்சம்—தாமரை;நிகரா—இணை ஆக மாட்டா; கொங்கை மாதவத்தால் நேர்ந்து கொங்கை நிகரா என இயைக்க; நிரனிறை; ஏந்து பொன் — வினைத்தொகை; பொன் தேர் பார்—மூன்றாம் வேற்றுமைத் தொகை; மால் செழியன் — உவமைத்தொகை; இனித் திருமாலாகிய செழியன் என உரைத்து இருபெயரொட்டுப் பண்புத் தொகையாக்கினுமமையும்.

தாமரை இயல்பாக நீரில் ஒருதாளில் நிற்பதைத் தவஞ் செய்வதாகக் கற்பித்துக் கூறியமையின் இஃது சிலேடையை அங்கமாகக்கொண்ட தற்குறிப்பேற்ற அணியின்பாற்படும்.

*14. **அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தல்:** புணர்ச்சி யால் வேறுபட்ட தலைவியின் ஒப்பனையைத் தலைவன் நேராக்க இது முன்னையதினின்றும் வேறாகிப் பாங்கி முதலாயினோர்க்கு ஐயம் விளைக்குமோ எனத் தலைவி*

பங்குஎன வாழ்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
இங்குநில் லாதுஐயம் எய்தாமல்
ஆயத்தில் எய்துதியே. 14

பெருநயப்புரைத்தல்

வேற்றுப் பகைக்கும் உவா அமுது
ஊட்டி, மெலிந்தும்உதவு
ஊற்றுச் சுனைக்குள் வளர்மரை
காள்ஒன்ன லார்கள்உடல்
பாற்றுக்கு அருள்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
நோற்றுத் தொழத்தகும் வஞ்சிஅன்
றோகாம நுண்இடையே. 15

நாணுவாள்; தலைவன் இதனை உணர்ந்து "அஞ்சற்க! நின்னைப் பண்டைய முறையிலேயே அலங்கரித்துள்ளேன்" எனல்.

கங்குல்—இருள்; தாரகை—விண்மீன்; கொங்கு உறை—தேன் நிறைந்த; நாள்மலர் – அன்றலர்ந்த; கூறு இசையோர்—சொல்லப்படும் புகழை உடையவர்கள்; பங்கு—சுற்றம்; ஆயம்—தோழியர் கூட்டம்.

இருளிலே விண்மீன்கள் விளங்குவதைப் போன்று தோற்றமளிக்கும்படி உன் கரிய கூந்தலில் மலர்களை அணிவித்துள்ளேன் என்றமையால் இவ்வொப்பனை உனக்கு இயற்கையாய் அமைந்திருந்த ஒப்பனையைப் போன்றே விளங்குகிறது; வேறு மாற்றம் தெரியவில்லை என்பது குறிக்கப்பட்டது.

கருங்குழற்கே அணிந்தனன்—நான்கன் உருபு ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்தது. கூறு இசையோர்—வினைத்தொகை.

15. **பெருநயப்புரைத்தல் :** *இயற்கைப் புணர்ச்சிக்குப் பிறகு தலைவி மீண்டும் தலைவன் தன்னை நாடி வருவானோ என ஐயுற்றபோது தலைவன் தன் காதல் மிகுதியை உறுதிப்படுத்துதல். இத்துறை பொதுவாகக் கோவைகளுள் கருப்பொருள்களை முன்னிலையாக்கித் தலைவன் கூறுவதாகவே அமையும்.*

பிரியேன் என்றல்

நீங்கான் நிசாரி கமலத்தை;
நீங்கினும் நின்றதுயர்
தாங்கான் எழும்முன் கரம்நீட்டு
வான்; இத் தரை ஆள் ஐவர்

வேற்றுப்பகைக்கும்-(தான்அமைந்துள்ள நாட்டோடு) மாறுபட்ட பகைவர்களுக்கும்; உவாஅமுது — நிறைந்த தண்ணீர்; மெலிந்தும் உதவு—தன்பால் தண்ணீர் சுருங்கினாலும் தவறாமல் உதவுகின்ற, இழிவு சிறப்பும்மை தொக்கது; ஊற்றுச்சுனை—(இயற்கையாக அமைந்த) நீர் ஊற்றுக்களை உடைய குளம், இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை; மரை—தாமரை, முதற்குறை; ஒன்னலார்கள்—பகைவர், கள் விகுதிமேல் விகுதி; பாற்றுக்கு — பருந்துகளுக்கு, இன ஒருமை; காம நுண் இடை நோற்றுத் தொழத்தகும் வஞ்சி அன்றோ என இயையும்; காம—விரும்பத்தக்க; நோற்று—விரதங் காத்து; வஞ்சி—சீந்திற்கொடி; அன்றோ—ஆம் என்னும் பொருளில் வந்தது.

மரைகாள்! நுண் இடை வஞ்சி அன்றோ என்பது பொருண் முடிபு. தலைவியின் இடை நோற்றுத் தொழத் தக்கது என்பதனால் தன் பெருவிருப்பைத் தெரிவித்த வாறு. இத்துணை விருப்பம் உடையவனாகிய நான் நின்னைப் பிரியேன் என்பது கருத்து.

வேற்றுப் பகைக்கும் உவா அமுது ஊட்டி மெலிந்தும் உதவு ஊற்று என்றது இறைச்சிப்பொருள். பகைவர்களுக்கும் தான் மெலிவுற்ற காலத்திலும் ஊற்று உதவும் என்றால் தன்னால் உயிருக்கும் மேலாக நேசிக்கப்படுகின்ற தலைவிக்குத் தலைவன் துன்பம் தரமாட்டான் என்பதைக் குறிப்பால் உணர்த்தியவாறு.

16. **பிரியேன் என்றல் :** தலைவி கலவி இன்பத்தால் பெற்ற அழகு தலைவன் தன்னைப் பிரிந்துவிடுவானோ என்னும் அச்சத்தால் மங்கக்கண்ட தலைவன், ''நின்னை என்றும் பிரியமாட்டேன்'' என உறுதியளித்தல்.

பாங்கா கியசெழி யன்தாகந்
　　தீர்த்தவன் பாலைவெற்பில்
பூங்கா வியங்கண்ணி நீங்கேன்
　　உனையது போல்இனியே. 16

பிரிந்து வருகென்றல்

உதையா தவத்தன் எழுநீழல்
　　முன்னைவந்து உற்றெனஎன்
இதையார விந்தத்து உனைமீண்டு
　　சேருவன் ஏத்தலர்க்கும்
சிதையாத பாலைப் பதித்தாகந்
　　தீர்த்த செழியன்வெற்பில்
புதையார் கணைவிழி நீவிளை
　　யாடுஇப் பொழிலிடத்தே. 17

நிசாரி—நிச+அரி, இரவின் பகைவனாகிய சூரியன்; தாங்கான்—தாங்காதவனாக, முற்றுவாய்பாட்டான் வந்த வினையெச்சம், ''மோயினள் உயிர்த்த காலை'' (அகம் 5—24) என்புழிப்போல; எழும் முன்—உதிப்பதற்கு முன்பே; கரம்—கை, கதிர்; தரை — உலகம்; ஐவர் — பாண்டவர், தொகைக் குறிப்புப்பெயர்; பாங்கு ஆகிய—சுற்றம் ஆகிய; பாண்டவர்க்குச் சுற்றமாகியவர் கண்ணபெருமான், இவர் திருமாலின் அவதாரம். அரசர்களைத் திருமாலாகக் கூறும் மரபுபற்றிச் செழியதரையனைக் கண்ணன் என்றார்; பூம் காவி—அழகிய குவளை மலர் போன்ற; அம் கண்ணி—அழகிய விழிகளை உடையவளே. இனி பூக்காவி என்பது எதுகைநோக்கி பூங்காவி என மெலிந்தது எனினுமமையும், பூக்காவி — முன்பின்னாகத் தொக்க இருபெயரொட்டுப் பண்புத்தொகை; கண்ணி—அண்மை விளி இயல்பாயிற்று.

நிசாரி கமலத்தை நீங்கான்; நீங்கினும் துயர்தாங்கான்; எழும்முன் கரம் நீட்டுவான்; அதுபோல் உனை இனி நீங்கேன் என இயையும்.

17. **பிரிந்து வருகென்றல்:** *தலைவியை என்றும் நிரந்தரமாகப் பிரியேன் எனச் சூளுரைத்த தலைவன் தான் அப்போது தலைவியை விட்டுப் பிரிந்து தன்னிடத்திற்குச் சென்று விட்டுப் பிறகு மீண்டு வந்து அவளைச் சந்திப்பதாகச் சொல்லல்.*

இடம் அணித்து என்றல்

கொத்துஆரும் பூங்குழ லாய்எமது
ஊரும்நும் குன்றும் உன்பால்
முத்துஆர் முலையும் அணியும்ஒப்
பாம்மணி மூழ்குவளைப்
பைத்துஆரும் தார்ச்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
எத்தூரம் நல்லர் உளத்தூ ரம்
நீங்குஉன் இடைவினையே. 18

உதைய+ஆதவத்தன்—உதையாதவத்தன், உதிக்கின்ற சூரியன்; ஆதவம் – வெயில், அதனை உடையவன் ஆதவத்தன்; எழு—எழுகின்ற ஒளி, வினைத்தொகை; அல்லது ஞாயிற்றின் கதிர்களில் விளங்கும் ஏழு ஒளிக் கதிர்கள் எனினுமாம்; முன்னை வந்து உற்றென—ஞாயிறு தப்பாமல் வந்து உரிய காலத்தே தோன்றுதல் போல; என் இதைய அரவிந்தத்து உனை—எனது உள்ளக் கமலத்தில் இடம் பெற்றவளாகிய நின்னை; உதைய, இதைய என்னும் ஈரிடங்களிலும் அகரம் எதுகை நோக்கி ஐகாரப் போலியாயிற்று. ஏத்தலர்க்கும்—தன் சிறப்பைப் பணியாத பகைவர்களாலும், நான்கன் உருபு மூன்றாம் வேற்றுமைப்பொருளில் வந்தது, உம்மை சிறப்பும்மை; சிதையாத—கொடுக்க முடியாத; புதை – அம்புக்கட்டு; புதை ஆர்கணை—கட்டுக் கட்டாகக் கட்டப்படுகின்ற அம்புகள்; கணைவிழி – பாணத்தை போன்று கூரிய கண்களை உடைய பெண்ணே, உவமைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை, பின்மொழி நிலையல், அண்மைவிளி இயல்பாயிற்று.

கணைவிழி! (நான்) நீழல் உற்றென உனை மீண்டு சேருவேன்! நீ இப்பொழிலிடத்தே விளையாடு என்பது பொருள் முடிபு.

18. **இடம் அணித்து என்றல் :** தலைவனின் ஊர் எவ்விடத்ததோ எனக் கவன்ற தலைவிக்கு அவன் 'அது அருகே உள்ள ஒன்றுதான்' எனல்.

பூங்குழலாய்—மலர்களை அணிந்த கூந்தலை உடையவளே, இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை;

செல்லும் கிழத்தி செலவுகண்டு உளத்தொடு சொல்லல்

தொடைதாங்கு கூந்தல் இடைதாங்கு
பூந்துகில் சோரக்கால்கள்
புடைதாங்க வேற்கண் அளிதாங்க
வேபுல வோர்களிக்கப்
படைதாங்கு வேல்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
நடைதாங்கி மெல்ல நமதுஆவி
சென்றது நல்நெஞ்சமே, 19

முத்து—இங்கு முத்து மாலை; அணி—அணிகலன்; மணிமூழ்—நீலமணியைப் போன்ற அரும்பினை உடைய, உவமைத் தொகை; மூழ்—முகிழ் என்பதன் திரிபு. பைத்து ஆரும் தார்—பசுமை பொருந்திய மாலை, செழியதரையன் வேளாள மரபினன் ஆதலின் குவளைத்தார் கூறப்பட்டது; நல்லர் உள எத்தூரம் தூரம்—நல்லவர்கள் நினைப்பதற்கு எத்தனை தொலைவு தொலைவு ஆகும்; எவ்வளவு சேய்மையிலிருப்பினும் சான்றோர் தம்பால் அன்புடைய வர்களை நினைத்தே இருப்பர் என்பது கருத்து; இடைவு—துன்பம்.

நீ வாழும் மலையும் என் ஊரும் உன் நகிலையும் அதைச் சார்ந்துள்ள ஆபரணத்தையும் போன்று அருகருகே ஒன்றையொன்று தொட்டுக் கொண்டுள்ளன என்பது கருத்து. நகில்களும் அணிகளும் ஒன்றோடொன்று இணைந்து ஒன்றுக்கொன்று சிறப்படைதலைப் போன்று நம் கூட்டமும் இருவருக்கும் சிறப்பைத் தரும் என்பது குறிப்பு.

19. **செல்லும் கிழத்தி செலவு கண்டு உளத்தொடு சொல்லல் :** *புணர்ச்சிக்குப் பிறகு தன் தோழியர் கூட்டத்தை நோக்கிச் செல்கின்ற தலைவியின் செலவைப் பார்த்துத் தலைவன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.*

தொடை—பூச்சரம்; இடை தாங்கு—இடையால் தாங்கப் பட்ட; பூந்துகில்—அழகிய ஆடை; கால்கள் புடைதாங்க—கால்கள் தாம் செல்லும் திசைக்கு எதிர்த் திசையில்

சுனைவியந்து உரைத்தல்

**ஏனல் புனமங்கைக்கு ஒவ்வாத
முத்தும் எழிலும்இள
வேனில் பொருவல்லி போல்தோற்ற
மும்தரில் வேரிதுள்ளும்
பானல் புயச்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
யான்அற்பில் அச்சுனை உன்போல்
குடைந்துஇவண் எய்துவனே.** 20

செல்ல விரும்ப; வேல்கண்—வேலைப் போன்ற விழிகள், உவமைத்தொகை; அளி – அன்பு; நமது ஆவி—நம் உயிர் போன்றவளாகிய தலைவி; நல்நெஞ்சமே—விளி; கூந்தல் துகில் என்னும் ஈரிடங்களிலும் எண்ணும்மைகள் தொக்கன. நல்நெஞ்சமே! கூந்தலும் துகிலும் சோரக் கால்கள் புடைதாங்கக் கண் அளி தாங்க நடை தாங்கி நமது ஆவிமெல்லச் சென்றது என்பது பொருண்முடிபு.

தலைவி தன் தோழியர் இருந்த இடம் நோக்கிச் செல்ல முயன்றாலும் அவள் கால்கள் அதற்கு நேர் எதிர்த் திசையான காதலன் இருக்குமிடம் நோக்கியே முன்னேற விரும்பின என்பது புடைதாங்க என்பதால் பெறப்பட்டது.

ஒப்புமை :

*'' பின்னே சரிகொண்ட ஓர்காந்தள் ஏந்தவும் பெய்கலையைத்
தன்நேர் இலாதொரு தாமரை தாங்கவும் தண்டமிழ்க்குப்
பொன்னே பொழியும் குலோத்துங்க சோழன் புகார்வரைவாய்
என்னே நடக்கின்ற வாநெஞ்ச மேஎனது இன்னுயிரே''*

(குலோத்துங்க சோழன் கோவை 30).

20. சுனைவியந்து உரைத்தல் : தலைவியின் புணர்ச்சியை ஆராய்ந்துணர்ந்த பாங்கி தலைவியின் மேனி வேறுபாட்டிற்குக் காரணம் அவள் சுனை நீராடியதோ எனக்கவர் பொருளால் வினாவி அச்சுனையில் நானும் நீராடுவேன் எனக்கூறுதல்.

ஏனல்—செந்தினை; ஏனல்புனம்—செந்தினை விளையும் கொல்லை; புனமங்கை—புனத்தைக் காக்கின்ற பெண்,

பெயர் வினாதல்

பரிசித்த வேதி நிகர்உமது
ஊரைப் பகரில் அந்தோ
வரிசித்த வாய்முத்து உகுவதுஉண்
டோஉமை கேழ்பதத்தைத்

இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்கதொகை; முத்து–இவ்விடத்தில் முத்தைப் போன்ற வியர்வைத் துளிகள்; எழில்–நிறம்; இளவேனில்–வசந்த காலம், சித்திரை வைகாசி மாதங்கள்; வல்லி–கொடி; வேரி–தேன்; பானல் – குவளை, இங்கு ஆகுபெயராகக் குவளை மாலையை உணர்த்துகிறது. யான் என்புழி உம்மை விகாரத்தால் தொக்கது. அன்பில்–அன்புடன், ஐந்தன் உருபு மூன்றாம் வேற்றுமைப் பொருளில் வந்தது; ஈற்றேகாரம் அசைநிலை.

தலைவன் அளித்த மலர்களை அணிந்து புணர்ச்சியால் வியர்வையுடன் நிறம் வேறுபட்டவளாகத் தலைவி விளங்குவதைத் தோழி குறிப்பிடுகின்றாள். குறிஞ்சி நிலத்தில் இருப்பவளுக்கு முத்து கிடைத்தல் அரிது. எனவே ஏனல்புனமங்கைக்கு ஒவ்வாத முத்து என்கிறாள். குளிர்ச்சி நிறைந்த மலைப்பகுதியில் வியர்வை தோன்றியது ஏன் என்ற பொருளும் தொனிக்கிறது. கன்னிமையுடைய பெண்ணிற்குப் பொருந்தாததாகிய நிறம் மங்கைக்கு ஒவ்வாத எழில் ஆயிற்று. இவ்வாறு ஒவ்வாத என்பதனை ஈரிடங்களிலும் கூட்டுக. இளவேனிற் காலத்தில் கொடிகள் யாவும் மலர்ந்திருப்பதைப் போலத் தலைவியும் நிறைய மலர் சூடியிருந்தாள் என்பது குறிப்பு. (சுனை) முத்தும் எழிலும் தோற்றமும் தரில் உன்போல் யானும் அற்பில் அச்சுனை குடைந்து இவண் எய்துவன் என்பது பொருண் முடிபு.

21. **பெயர் வினாதல் :** தலைவன் தழையும் கண்ணியும் கையுறையாக ஏந்திக் குறையுற்றான்போல் பாங்கியின்பால் வந்து அவளின் ஊர் வினாவப் பதிலின்மையின் அடுத்துப் பெயரைக் கேட்டல்.

பரிசித்த வேதி–இழிந்த உலோகங்களைத் தொட்ட மாத்திரத்தால் பொன்னாக்கும் ஒரு குளிகை, தன்னோடு

தெரிசித்த பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
அரிசித்த வேள்புகல் பேரா
யினும்என் அறைந்திடுமே. 21

இறைவனை நகுதல்

அரமான்நி கர்மங்கை இங்கிவர்
வில்லொடுஅம்பு அற்றவெற்றுக்
கரம்மான் இனம்வலிது எய்திய
தோபுவிக் காவலர்கள்
சிரம்ஆன பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
புரம்ஆன ஈசன் பொருசெய
லேஇவர் போர்ச்செயலே. 22

தொடர்புற்ற பொருளை பரிசனவேதி பொன்னாக்குதல் போலத் தோழியின்(மற்றும் தலைவியின்) ஊரும் தன்னுள் வசிப்பவர்களை உயர்த்துகிறது என்பது கருத்து; வரிசித்த— வரிசையாக உள்ள என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது, அரிய வழக்கு; வாய் முத்து — வாயில் உள்ள முத்துப் போன்ற பற்கள்; கேழ்—ஒளிவிடுகின்ற; பதத்தை—திருவடி களை; அரி சித்த வேள் — திருமாலின் மனத்திலிருந்து தோன்றிய காமன்; புகல் பேர்—சொல்லப்படுகின்ற பெயர், வினைத்தொகை; தலைவியின் சிறப்பு நோக்கி அவள் பெயரை மன்மதன் கூறுவான் என்கிறான்; என்—என்ன? அறைந்திடும்—கூறுவீராக.

ஊரைப் பகரில் உன் வாய் முத்து உகுவது உண்டா? பேராயினும் என் (என) அறைந்திடுமே என்பது பொருண் முடிபு.

22. **இறைவனை நகுதல் :** *பாங்கியும் தலைவியும் சேர்ந்திருக் குமிடம் நாடித் தலைவன் வந்து 'என் கணைக்குத் தப்பிய ஒரு மான் இப்பக்கம் வந்ததோ' எனக் கேட்பான். அவ் வுரையின் பொய்ம்மையைக் கண்ட தோழி தலைவன் அப்பாற் சென்ற பிறகு தலைவியை நோக்கி அசதியாடுதல்.*

அரமான் — தெய்வலோகப்பெண்; அரமான் நிகர் மங்கை—அண்மை விளி இயல்பாயிற்று; வெற்றுக் கரம்—

தலைவன் உட்கோள் சாற்றல்

காமாரி வில்லும் முராரிமின்
　　பால்தரு காவும்இன்பால்
பூமாரி மைக்குழ லீர்தரு
　　வேன்மலர் பூங்குவளைத்
தேமேவும் பாலைப் பதித்தாகந்
　　தீர்த்த செழியன்வெற்பில்
மாமேவு செய்குன்று இளங்கா
　　எனஅருள் வைத்திடவே. 23

வெறுமையான கைகள்; வில், அம்பு முதலிய வேட்டைக் கருவிகளை ஏந்தாத இவர் கைகளில் மான் கூட்டங்கள் தாமே வலிய வந்து சிக்கினவோ என்கிறாள்;புவிக் காவலர் கள்—உலகை ஆளும் அரசர்கள்; சிரம்—தலைமையானவன்; காவலர்கள் சிரம்—மன்னர்களுள் தலையாயவன்; இவர் போர்ச்செயல் ஈசன் புரம் ஆன பொரு செயலே என இயையும். ஈசன் – சிவபெருமான்; புரம் – முப்புரங்கள்; இறைவர் முப்புரங்களை ஆயுதமின்றிச் சிரித்து எரித்தார். இத்தலைவன் வெறுங்கையுடன் செய்த வேட்டையும் அத் தகையதே.ஆதலால் அது நகைப்பிற்கே இடமாகும் என்று தோழி பரிகசிக்கிறாள்.

''சொல்லுக்கு இனிய கழுக்குன்ற ரேஉமைச் சொல்லஎன்றால்
அல்லற் பிழைப்புப் பிழைத்துவிட் டீர்முப் புராதியர்மேல்
வில்லைக் குனித்துஎய்ய மாட்டாமல் நீர்அந்த வேளையிலே
பல்லைத் திறந்துவிட் டீர்இது வோநும் படைத்தொழிலே''
என்னும் தனிப்பாடல் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

23. **தலைவன் உட்கோள் சாற்றல்:** தலைமகன் தலைவியின் மேல் தான் கொண்ட காதலைச் சொல்லல்.

காமாரி—காம+அரி, மாரனின் பகைவராகிய சிவ பெருமான்; அவர் வில் என்றது மேருமலையை; முராரி— முர+அரி, முரன் என்னும் அசுரனுக்குப் பகைவராகிய கண்ணபெருமான்; மின்பால் – சத்திய பாமையிடம்; கா—இங்குப் பாரிசாதத்தைக் குறித்தது; பூமாரி மைக் குழலீர்—அழகிய மேகம் போன்ற இருண்ட கூந்தலை உடையவரே; மாரி—மேகம், ஆகுபெயராக மேகத்தை

பாங்கி குலமுறை கிளத்தல்

அரம்தாவு வேல்மன்னன் நீ;குற
மாதுஇவள்; ஆர்அமுதுஊண்
புரந்தார் நிலத்துஉண்டி உண்பர்கொ
லோ?புண்ட ரீகச்செங்கண்
பரந்தாமன் ஆம்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பின்
இரந்தாய் இதுஎன்?புவி கொள்ளாது
இவள்மணம் ஏற்பதுஅன்றே. 24

உணர்த்திற்று; மலர் பூங்குவளை—அலர்கின்ற காவிமலர்; தேம் மேவும் — மணம் நிறைந்த; மா மேவு — அழகு பொருந்திய; செய் குன்று—மகளிர் விளையாடுவதற்காக இயற்றப்படும் செயற்கை மலை; இளங்கா—மலர்ச்சோலை; மைக்குழலீர்! செய்குன்று இளங்கா என அருள் வைத்திட (நான்) வில்லும் காவும் இன்பால் தருவேன் என்பது பொருண் முடிபு. வில்—குன்று; கா—இளங்கா என நிரல் நிறையாகப் பொருள் கொள்க.

கண்ணன் சத்தியபாமைக்காக விண்ணில் இருந்து பாரிசாத மரத்தையே மண்ணிற்குக் கொண்டுவந்ததாக வரலாறு.

"நுமக்கோர், மேவுஞ்செய் குன்றமும் சோலையும் ஆகப்பொன் வெற்பும்விண்ணோர் காவும் தரவும்வல் லேன்எனை ஆளும் கடைக்கண்வைத்தே" (தஞ்சை வாணன் கோவை 81—3, 4) என்னும் பகுதி இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

24. **பாங்கி குலமுறை கிளத்தல்** : தலைவன் தன் உட்கோள் சாற்றிய பிறகு தோழி, தலைவன் தலைவியர் இருவரும் வேறுவேறு குலத்தினராதலின் அது இயையாது எனச் சொல்லுதல்.

அரம் தாவு வேல்—அரத்தால் தீட்டிக் கூர்மையாக்கப் படும் ஈட்டி; வேல்மன்னன்—வேலை ஏந்துதற்கு உரிய அரச குலத்தினன், இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை; ஆர்அமுது ஊண்—துய்க்கப்படும் அமுதமாகிய

தலைவன் தலைவியை உயர்த்தல்

(நடமிடு)ம் ஈசன் விசையனைப்
போர்பொரு நாளில்மின்னே
இடம்அவிர் மாதினோடு எவ்உரு
ஏற்றனன்? ஏந்திழை(யார்)
திட(ம்உடைப்) பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
படைஅழகு (அன்றோ) நலம்குலம்
வேறு பயன்இல்லையே. 25

உணவு; புரந்தார் – காப்பவர்கள், வினையாலணையும் பெயர்; நிலத்து உண்டி – மண்ணுலக மாந்தரின் உணவு; புண்டரீகம்—தாமரை; பரந்தாமன்—வைகுந்தத்தைத் தன் இடமாகப் பெற்ற திருமால்.

நீ மன்னன்; இவள் குறமாது; இவள் மணம் ஏற்பது அன்று;அமுதூண் புரந்தார் நிலத்துண்டி உண்பர்கொலோ; இது என் இரந்தாய்; புவி கொள்ளாது என்பது பொருண் முடிபு.

25. **தலைவன் தலைவியை உயர்த்தல் :** தலைவன் தோழியை நோக்கித் தலைவி பெண்மை நலத்தால் மிக்கவள்; ஆதலால் இழிகுலம் என்பதில்லை எனக்கூறுதல்.

ஈசன்—சிவபெருமான்; விசையன்—அருச்சுனன்; இடம் அவிர் மாது—இறைவனின் இடப்பாதியில் விளங்குகின்ற உமாதேவியார்; மூகன் என்னும் அசுரனைக் கொல்லவும், பாசுபதக் கணை வேண்டித் தவம்புரிந்து கொண்டிருந்த அருச்சுனனுக்கு அருள்புரியவும் சிவபிரான் உமையம்மை யுடன் குறவனின் வடிவத்தில்தான் சென்றார். அப்போது தான் விசயனுடன் பொருது வில்லடிபட்டார். இறைவனே குறவனாக வந்ததால் அக்குலம் உயர்ந்ததாயிற்று. தலைவியின் குலமும் அதுவே; திடம்—வலிமை; படை அழகு—படைத்துள்ள அழகு, வினைத்தொகை.

மின்னே! ஈசன் எவ்வுரு ஏற்றனன்! ஏந்திழையார் படை அழகு அன்றோ நலம்? குலம் (தரு) பயன் வேறு இல்லையே என்பது பொருண் முடிபு.

பாங்கி அறியாள் போன்று வினாவுதல்

தொடைவார் அலர்கொய்து அணிஊசல்
ஆடிச் சுனைபடிந்து
மிடைவார் பலருண்டு; அவர்தம்மி
லேஅறம் மேவுசெம்பொன்
படைவாணன் ஆம்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
உடைவாள் விழியின் பொருதாள்
எவள்என்று உரைத்தருளே. 26

தலைவன் கையுறை புகழ்தல்

வான்தாரு வின்தழை வேலன்
தரும்தழை மாநிலத்தை
ஈன்றாள் மலர்த்தழை இத்தழை
நேரின் இறால்உழக்கத்

---

26. **பாங்கி அறியாள் போன்று வினாவுதல் :** தலைவியின் அன்பைப் பெற்றவள் யார் என அறியாதவளைப் போல அவனை நோக்கி, 'நீ யார்மாட்டுக் காதல் கொண்டாய்' எனக் கேட்டல்.

தொடை வார் அலர்—சரத்திற்கு ஏற்புடையதாகத் தெரிந்தெடுக்கப்படுகின்ற மலர், வார் அலர்—வினைத் தொகை; மிடைவார் — (ஒருவரோடொருவர்) நெருங்கி இருப்பவர்கள்; அறம் மேவு செம்பொன் படை வாணன்— நற்செயல்களாலும் தன்பாற் பொருந்திய செல்வத்தாலும் சேனைகளாலும் சிறப்பொடு வாழ்பவன்; உடைவாள் விழியின்—உடையிற் கட்டும் வாளைப் போன்ற கண்களால்;பொருதாள்—போரிட்டவள்,காமநோய் தந்தவள், வினையாலணையும்பெயர்.

27. **தலைவன் கையுறை புகழ்தல்:** தான் தலைவிக்குப் பரிசிலாய் அளிக்கக் கொண்டு வந்துள்ள தழையாடையின் சிறப்பை மிகைப்படுத்திக் கூறல்.

வான் தாரு-விண்ணுலகிலுள்ள மரம்,சிறப்பு நோக்கிக் கற்பக மரம் என்றவாறு, ஏழன்தொகை; வேலன் தரும் தழை—முருகப்பெருமானால் வள்ளியம்மையாருக்குத் தரப் பட்ட தழையாடை; மாநிலத்தை ஈன்றாள் மலர்த்தழை—

தேன்தாழும் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
ஊன்றுஆ தரவில் கொடுப்பர்
களும்உளர் ஏந்திழையே. 27

பாங்கிக்கு மடலை உலகியல்மேல்
வைத்து உரைத்தல்

நாண்ஆரும் மாதர் விழிவலைக்
கேபட்ட ஞாலமன்னர்
சேண்ஆர் பனைமடல் ஊர்வர்பின்
போய்ச்செவி நீத்தவண்டின்

உலகத்தைப் பெற்றெடுத்த தாயாகிய உமையம்மைக்குச் சாத்தப்பட்ட மலர்களோடு கூடிய தழை, ''கருதரிய கடலாடை உலகுபல அண்டமும் கருப்பமாய்ப் பெற்ற கன்னி'' (சிவப்பிரகாசர் தனிப்பாடல்). உமையம்மை ஆதலின் மாநிலத்தை ஈன்றாள் என்றார்; மலர்த்தழை—மூன்றன் தொகை; நேரின்—இணையாகுமாகில்; இறால்—ஒருவகைமீன்; உழக்க — (பாய்ந்து தேன் கூட்டைத்) தொளைக்க; தாழும் — கொட்டும்; ஊன்று ஆதரவு — நிலைத்த நட்பு; ஏந்திழை என்பது இங்குத் தோழியைக் குறித்தது.

ஏந்திழையே! வான் தாருவின் தழை, வேலன் தரும் தழை, ஈன்றாள் மலர்த்தழை (ஆகியன யான் தரும்) இத் தழை நேரின் ஊன்று ஆதரவில் கொடுப்பார்க்கும் உளர் என்பது பொருண் முடிபு, என் தழை கூறப்பட்டவற்றை விட உயர்ந்தது என்பது தலைவன் கூற்று. தான் தலைவி மேல் கொண்ட காதல் நிலையானது என்பதை ஊன்று ஆதரவு என வெளிப்படுத்தியவாறு.

28. **பாங்கிக்கு மடலை உலகியல்மேல் வைத்து உரைத்தல்:**
தலைவன் தோழியிடம் தன்னால் காதலிக்கப்பட்ட மகளிரை அடைய முடியாதபோது மடல்மா ஊர்ந்து அவளை வலிதில் பெறுதலே இளைஞர்களின் இயல்பு எனக் கூறுதல்.

மடல்மா ஊர்தலாவது பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரையின்மேல் தலைவன் தன் உடலெங்கும் நீறுபூசிப் பூளை, எருக்கு மலர்களாலாகிய மாலையை அணிந்து

பாண் ஆர் புயச்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
ஏண் ஆர் விடைதழு விக்கிரி
பாயஉள் எண்ணுவரே. 28

மடலேற்றினைத் தலைவன் தன்மேல்
வைத்துச் சாற்றல்

எருக்கே மலர்த்தொடை; என்பே
அணி;மடல் ஏறிவரும்
தருக்கே பவனி;வெண் நீறே
அணிதல்;தண் தாமரையின்

கொண்டு, தலைவியின் வடிவத்தைக் கிழியில் வரைந்து கைகளிலேந்தி ஊரார் முன் தோன்றுதல்.

விழி வலை – கண்களாகிய வலை, உருவகம்; ஞால மன்னர்–புவியரசர்; சேண் ஆர் – வானளாவிய, உயர்ந்து வளர்ந்த என்பது கருத்து; செவிநீத்த வண்டு – வண்டு களுக்குச் செவிப்புலன் இல்லை என்பது இலக்கிய வழக்கு. ''நண்டும் தும்பியும் நான்குஅறி வினவே'' என்பது தொல் காப்பியம் (பொருள்-மரபு-31); பாண்ஆர் – இசையைப் பொருந்திய செழியனின் தோளில் குவளை மாலை உள்ளது. அதை நாடி வருகின்ற வண்டுகளின் முயற்சியைப் புயங்கள் துய்ப்பதாகக் கூறியது உபசார வழக்கு;ஏண்ஆர்– பெருமை பெற்ற; விடை தழுவல்–ஏறு தழுவல், மஞ்சு விரட்டு என்பர்; கிரி பாய்தல்–மலையுச்சியிலிருந்து கீழே குதித்துத் தன் உயிரைத் தானே போக்கிக்கொள்ளல்.

நாண் ஆரும் மாதர் விழிவலைக்கே பட்ட ஞால மன்னர் (அவள் கிடைத்திலளேல்) மடல் ஊர்வர், பின் போய் விடைதழுவிக் கிரிபாய உள் எண்ணுவர் என்பது பொருண்முடிபு. தலைவி தன் நாண மிகுதியால் தலை வனுக்கு இரங்காவிடில் அவன் தன் நாணத்தோடு உயிரை யும் துறக்க வேண்டி நேரும் என்பதைக் குறிப்பால் உணர்த்த 'நாண்ஆரும்' என்ற அடை புணர்க்கப்பட்டது.

29. மடலேற்றினைத் தலைவன் தன்மேல் வைத்துச் சாற்றல்: ***தனக்குத் தலைவி கிட்டாளாயின் தானும் மடலூர்வன் எனத் தலைவன் கூறுதல்.***

திருக்கேள்வன் பாலைப் பதித்தாகந்
தீர்த்தவன் செழியன்வெற்பில்
மருக்கேழ் மயில்பொருட் டால்சிவன்
போல மருவுவனே. 29

எருக்கு — எருக்கம்பூ; மலர்த்தொடை — பூமாலை; என்பே அணி—எலும்புகளே அணிகலன்கள்; மடல் — பனங் கருக்கினாற் குதிரைபோல் செய்யப்பட்ட ஒன்று; தருக்கு— பெருமிதம்; பவனி—உலா; மடல் ஏறி வரும் தருக்கே பவனி—யானை, குதிரை, தேர் போன்றனவற்றில் வந்தால் பெருமித மிக்க உலாவாகும். மடல்மா ஏறுதல் கண்டோ ரைப் பரிதாபப்பட வைத்தலால் நாணமும் துன்பமும் தருமேயன்றிப் பெருமிதம் தராது. எனவே தருக்கு, உலா என்பன அங்கதமாக இழிநிலையைக் குறித்து நின்றன. சிறிதும் அறிவற்றவர்களைப் பிரகஸ்பதி என்பதைப்போல; திருக்கேள்வன் — இலக்குமி நாயகன்; மருக்கேழ் மயில் — நறுமணத்தையும் ஒளியையும் உடைய மயில் போன்ற வளாகிய தலைவி; மருக்கேழ்—உம்மைத் தொகை, இயல் பாக இருக்க வேண்டிய தொடர் எதுகை நோக்கி இனமெய் மிகுத்து மருக்கேழ் என வந்தது; மயில் — அன்மொழித் தொகை, பின்மொழி நிலையல்; மயிலுக்கு ஒளியன்றி மணம் இன்மையின் மருக்கேழ் மயில் என்றது இல்பொருளு வமை;சிவன் போல—இறைவன் எருக்குமாலை, எலும்பணி, வெண்நீற்றுப் பூச்சு ஆகியவற்றை உடைத்தாயிருப்பதைப் போன்று (நானும் பெற்று).

ஒப்புமை :

''காசியின் மேன்மைக் கலைசைத் தியாகர்மெய்க்
காட்சியைப்போல்
பூசிவெண் ணீறுஎருக் கம்பூ அணிந்துஎன்பு பூண்டுநல்லாய்
பாசிழை யார்வடிவு ஆர்படம் காட்டிப் பனைமடல்ஆம்
வாசியை நாளைஉன் ஊர்வயின் ஊர்ந்து வருகுவனே''

(கலைசைக் கோவை 116).

பாங்கி அருளியல் கிளத்தல்

தடியார்கள் தாலம்; புரப்பார்கள்
தாலத்தை; தாலத்துஅன்றில்
குடியாம்; அண் டம்களை யார்; அண்டம்
காப்பவர் கூறும்எழில்
படிஆளும் மால்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
ஒடியா அருள்உடை யார்க்குஅழ
கோமடல் ஊருவதே. 30

---

30. **பாங்கி அருளியல் கிளத்தல் :** *தலைவன் மடலேறுவன் எனக்கேட்ட தோழி அச்செயலை அருளுடைமை அன்று எனக் கூறி விலக்கல்.*

தாலம்-பனைமரம்; தடியார்கள்-வெட்டமாட்டார்கள்; புரப்பார்கள் — காப்பாற்றுவர்; அன்றில் — எப்பொழுதும் தன் துணையைப் பிரியாததும், பிரிந்தால் உயிர் வாழா ததுமாகிய ஒரு பறவை; குடி ஆம் — வசித்திருக்கும்; அண்டம் களையார் — (பனைமரத்தை வெட்டுவதால் அதில் வசிக்கும் அன்றிற் பறவைகளின்) முட்டைகளைக் கலைக்கமாட்டார்கள்; அண்டம் காப்பவர் கூறும்— உலகைப் புரத்தல் செய்கின்ற அரசர்களால் புகழப்படும்; படி—உலகம்; ஒடியா அருள் — சற்றும் குறைவுபடாத அன்பின் முதிர்ச்சி.

தாலத்து அன்றில் குடி ஆம்; (எனவே) தாலம் தடியார்கள்; அண்டம் களையார்; தாலத்தைப் புரப்பார் கள்; மடல் ஊருவது ஒடியா அருளுடையார்க்கு அழகோ என்பது பொருண் முடிபு. அழகன்று என்பது கருத்து.

ஒப்புமை :

*'சின்மயன் ஆளும் சிராமலை யான்அருள் சேர்ந்தமன்னா
வன்மையர் போல்பெண்ணை வேட்டுஒரு பெண்ணை
வருந்தவெட்டின்
நன்மைய தோஅண்டம் விண்டிடும் அன்றில் நலிவுறுமால்
அன்மைய தேஎன ஊரார் மடல்கலை ஆய்ந்தவரே''*

(சிராமலைக்கோவை 191).

கோவை

இறைவி கையுறை ஏற்றமை பாங்கி இறைவற்கு உணர்த்தல்

அளித்தேன் தழை; அத் தழைபெற்ற
பேறுஅடி யேற்குஇலை; நீ
ஒளித்தேதழை யுள்என் கையில்தந்
தாய்; உலகு ஏழுஉன்இசை
தெளித்துஏறு பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
குளித்தேஅவ் விஞ்சைமுன் கூறினை
யோ? ஏங்கள் கோல்வளைக்கே. 31

31\. **இறைவி கையுறை ஏற்றமை பாங்கி இறைவற்கு உணர்த்தல்:** *தலைவனால் பரிசிலாகத் தரப்பட்ட தழையாடையைத் தலைவி உவகையுடன் பெற்றுக்கொண்ட செய்தியைத் தோழி அவனுக்குத் தெரிவித்தல்.*

அத்தழை பெற்ற பேறு அடியேற்கு இலை—தலைவி உன்னால் தரப்பட்ட தழையாடையின் மீது காட்டிய பேரன்புடைமையை அவளுடைய உயிர்த்தோழியாகிய என்மீதும் காட்டியதில்லை என்பது கருத்து; நீ தழையுள் ஒளித்தே என் கையில் தந்தாய்—நீ நானறியாமல் அந்தத் தழைக்குள் உன்னை மறைத்துக்கொண்டு அதனை என்னிடம் அளித்தனையோ; உலகு ஏழு உன் இசை தெளித்து ஏறு—ஏழு உலகங்களும் நினைத்துப் போற்றுகின்ற புகழ் எங்கணும் ஒலித்து நாளுக்கு நாள் வளர்கின்ற; உலகு ஏழு என்புழி முற்றும்மை விகாரத்தால் தொக்கது. உன்இசை, ஏறுபாலை-வினைத்தொகைகள்; அவ்விஞ்சை-தலைவியைத் தன் வயப்படுத்திய அந்த வசியமந்திரம்; மந்திரம் புரிவார் நீராடியே உச்சரிப்பர் ஆதலின் வெற்பில் குளித்தே அவ்விஞ்சை முன் கூறினையோ என்றாள்; கோல்வளை—வளைந்துள்ள கைவளைகளை அணிந்துள்ள பெண், வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை, பின்மொழி நிலையல்.

செழியனின் புகழ் மலிந்து வளர்கிறது. அதனைக்கேட்ட மாத்திரத்தே உலகோர் அனைவரும் அவனைப் போற்றுகின்றனர். அவனுக்குரிய வெற்பிலுள்ள சுனையில் குளித்து நீ விஞ்சை கூறினையோ? அதனால்தான் அவள்

விருந்து இறை விரும்பல்

காவியின் நேர்விழி யீர்தினை
மாவில் கலந்தசெந்தேன்
மேவிய வேலற்கு நீர்தரு
நாள்முதல் மேதினிஎண்
தீவியன் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
ஆவிஅ னோரும்ஏ னைத்தேவர்
ஆரும் அருந்தினரே. 32

உன்னைப்பற்றிக் கேட்ட அளவில் உன்மீது அன்பு கொண்டாள் போலும் எனப் பொருள்படுதலின் இஃது இறைச்சிப் பொருளாகும்.

32. **விருந்து இறை விரும்பல் :** பாங்கியிற் கூட்டம் முடிந்த பிறகு தோழி தலைவனைத் தம்மூர்க்கு வந்து தங்கி விருந்துண்டு செல்க எனக் கூறியதனைத் தலைவன் உவகையுடன் ஏற்றுக் கொள்ளல்.

காவி – குவளைமலர்; வேலர் – முருகப்பெருமான்; நீர்தரு–தலைவியும் பாங்கியும் தினைப்புனம் காக்கும் வேட மகளிராதலின் அக்குலமும் தொழிலும் பெற்ற வள்ளியம்மை தந்தமையை இனம் பற்றி இவ்வாறு கூறினான்; மேதினி–உலகம், ஆகுபெயராக உலக மக்களை உணர்த்திற்று; எண்–மதிக்கின்ற; தீவியன்–இனியவன்; ஆவி அனோரும்–குறிஞ்சி நில மகளிரின் உயிரனைய காதலர்களும்.

விழியீர்! செந்தேன் வேலற்கு நீர்தரு நாள்முதல் ஆவி அனோரும் தேவர் ஆரும் அருந்தினர் என்பது பொருண் முடிபு. எனவே உம் விருந்தை யானும் மகிழ்ச்சியுடன் ஏற்பன் என்பது குறிப்பு.

ஒப்புமை :

"சுதைஎன்ற தெய்வப் பிடியுடன்
சேய்க்குச் சுரர்விருந்தாய்ச்
. . . .
ததைஎன்றும் ஆர்அமு தில்கொள்கு
வேன்சற்றும் ஐயம்இன்றே"
(திருப்பேரூர்க்கோவை 168)

நீங்கருமை தலைவி நினைந்திரங்கல்

சூர்மா உடல்இரு கூறாயும்
வாரணம் தோகைக்குஉயிர்
நீர்மா நிலத்திடை வேறுஉற்ற
போல்தமிழ் நேயமிக்க
சீர்மாறன் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
போர்மாரன் கோலில் இருவேமும்
ஆவிமெய் பூண்டனமே, 33

---

33. **நீங்கருமை தலைவி நினைந்திரங்கல்:** தன்னால் தலைவனைப் பிரிந்து தனித்திருக்க இயலாமையை நினைந்து தலைவி தனக்குள் நொந்துரைத்தல்.

சூர்மா-சூரபதுமனாகிய மாமரம், வாரணம்–சேவல்; தோகை–மயில்; நீர் மாநிலம்–நீராற் சூழப்பட்ட பெரிய உலகம், மாநிலம்–ஒருசொல் நீர்மைத்து; சீர்மாறன்–சிறப்புற்ற பாண்டியனைப் போன்றவன்; போர் மாரன்–போரியற்றும் மன்மதன், தோல்–அம்பு; இருவேமும்–(தலைவன்,யான் ஆகிய) யாமிருவரும்; ஆவிமெய்-உயிரும் உடலும், உம்மைத் தொகை.

ஒரு மாமரமாக இருந்த சூரனை முருகவேள் வேலாற் பிளந்தார். அம்மரத்தின் இருபகுதிகளும் சேவலும் மயிலுமாக வெவ்வேறு வடிவங்களில் வந்தன. என்றாலும் அவற்றின் உயிர் ஒன்றாகத்தானே இருத்தல் இயலும் அச்சேவலும் மயிலும் போலவே தலைவனும் நானும் உடலால் வேறுபட்டிருப்பினும் உயிரால் ஒருவரே. எனவே ஒருவரை விட்டுப் பிரிந்து மற்றொருவர் தனித்திருத்தல் அருமை என்பது குறிப்பு.

ஒப்புமை :

''அருள்மெய்க் குமரன் பரங்கிரி
வாய்அன்பு அமைந்திடும்எம்
இருவர்க்கு ஒருமெய் படைத்தல்
முறைஅல என்றுஅயன்தான்

தோழி ஆற்றுவித்தல்

வில்வத்தை வல்(இணை)யைப் போல்அதி
  ரும்தன மெல்லியர்பால்
கல்வைத்த நெஞ்சன் நகர்க்குஎய்தி
  மீளுவர் காரிஎனும்
செல்வத்தன் பாலைப் பதித்தாகந்
  தீர்த்த செழியன்வெற்பில்
அல்வைத்த கூந்தல்மின் னேஉயிர்
  போல்உறை அன்பர்இனே. 34

ஒருசொல்சொன் னால்முனம் சூரன்
  பதுமனுக்கு ஓர்உடம்பு
தருதற்குஎங் கேகற் றனைஎனில்
  என்சொலித் தப்புவனே''
(திருப்பரங்கிரிக் கோவை 178).

34. **தோழி ஆற்றுவித்தல் :** பிரிவாற்றாமையால் இரங்கும் தலைவிக்குத் தலைவன் விரைவில் மீண்டு வருவான் எனக் கூறிப் பாங்கி ஆற்றுவித்தலாகும்.

'ஒருசார் பகற்குறி' என்னும் இக்கிளவியில் பிற கோவை யாசிரியர்கள் கூறாத புதிய துறையாக இந்நூலாசிரியர் இதைப் படைத்துக் கொண்டுள்ளார்.

வில்வத்தை—கூவிளங்கனிகளை; வல் இணையை—இரு சூதாடு கருவிகளை; தன—நகில்களைப் பெற்ற; கல்வைத்த நெஞ்சன்—இரக்கம் காட்டாத உள்ளத்தை உடைய தலைவன்; நகர்க்கு—தன் சொந்த ஊருக்கு; காரி—கடைஏழு வள்ளல்களில் ஒருவன்; அல்வைத்த கூந்தல்—இருட்டைப் பொதிந்து வைத்தாலன்ன குழல்; மின் – மின்னலைப் போன்ற தலைவி, உவம ஆகுபெயர்; இனே – இன்னே, இப்பொழுதே, விரைவாக என்றவாறு.

மின்னே! நெஞ்சன் (ஆகிய)உயிர்போல் உறை அன்பர் நகர்க்கு எய்தி இனே மீளுவர் என்பது பொருண் முடிபு.

நீ அவனை உயிர்போற் கருதி நேசித்தாலும் அவன் உன்மாட்டு இரக்கங் காட்டாதவனாக இருக்கிறான் எனத்

தோழி சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல்

கொய்யார் தழைஉடைக்கு; அன்பர்எண்
பூவை குரல்குரற்காக்
கையால் கவண்எறிந்து ஓலம்என்
னார்;செம்பொன் காய்த்தகதிர்ச்
செய்ஆரும் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
பொய்யாத வேடர் கருங்கணி
யேஇங்ஙன் பூத்ததுவே. **35**

தோழி தலைவனைப் பழித்தால், அதனைப் பெறாது தலைவி ஆற்றுவள் ஆதலின் கல் வைத்த நெஞ்சன் என்றாள். அன்றியும் தலைவன், ''நின்னைத் தவிர பிற மாதரிடத்துச் சற்றும் மனம் இளகாதவன்; உன்னை மட்டுமே நேசிப்பவன்; எனவே உன்னைக் காண விரைவில் வருவான்'' என்றாள் எனினுமாம்.

35. **தோழி சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல் :** *தலைவியைக் காணவந்த தலைவன் வேலிக்கு வெளியே நிற்க அதனை அறிந்தே பாங்கி அறியாள் போலத் தினை அரியப் பட்டு விட்டதால் தலைவியும் தானும் புனத்தை விட்டு மறுநாள் வீட்டிற்குச் சென்று விடுவோம் என்பதனைப் பறவைகள், வேங்கைமரம் முதலியவற்றோடு சொல்வாள் போலச் சொல்லுதல்.*

உடைக்குத் தழை கொய்யார் – (தலைவியும் அவள் ஆயமும் தினைப்புனத்தில் இல்லாததால் யாரும்) தழை யாடை கட்டுவதற்காக இலைகளைப் பறிக்க மாட்டார் கள்; அன்பர்–தலைவன்;எண்–மதிக்கின்ற; பூவை–பெண். இங்குத் தலைவி, எண்பூவை – வினைத்தொகை; குரல்– தினை; குரல் – தானியக் கதிர்; குரல்குரற்கா – தினைக் கதிர்களைப் (பறவைக் கூட்டத்திலிருந்து) காப்பதற்காக; கவண்–பறவைகளைக் கல்லெறிந்து ஓட்டும் கருவி; ஓலம்– ஆலோலம், பறவை கடிவார் எழுப்பும் ஒலி வாய்பாடு; செம்பொன் காய்த்த–சிவந்த தங்கத்தைப் போன்ற நெல் மணிகள் முற்றிய, செம்பொன்–அடையடுத்த உவம ஆகு பெயர்; செய்–வயல்; பொய்யாத கருங்கணியே வேடர்

பாங்கி தலைவன்முன் நின்று உணர்த்தல்

கனக்குஆவ லின்கணிப் புத்தலர்
பூப்பக் கடிதினையால்
புனக்காவல் நீங்கினம் நின்றன
மேபொருங் தாரின்தனது
இனக்காவல் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
மனக்காவல் நீவிடப் பூண்பம்இக்
காவல் மனையிடத்தே. 36

கருங்கணியே என இயைக்க; பொய்யாத—தான் மலர்தலில் காலம் தப்பாத; கரும்கணி—பெரிய வேங்கை மரம்; கணி என்பதற்குச் சோதிடர் என்ற பொருளொன்றும் இருத்த லின் பொய்யாத சோதிடரே என ஒருபொருள் தொனிக் கிறது. வேடர்களுடைய புனத்தில் இருப்பதால் அது வேடர் கருங்கணி ஆயிற்று.

முருகப்பெருமான் தினைப்புனத்தில் வேங்கை மரமாக நின்றார். அஃது உண்மையான அஃதாவது இயற்கையாய் வளர்ந்த வேங்கை மரம் அன்று. பொய்யான வேடர் மரம். அஃதாவது பொய்யான வேடந்தாங்கிய வேங்கைமரம். ஆனால் இந்தப் புனத்தில் உள்ளது உண்மையான மரம். எனவே இயற்கையானதும் இப்புன வேடர்களுக்கு உரியது மாகிய வேங்கை என்பார் பொய்யாத வேடர் கருங்கணி என்றார். வேங்கை மலர்ந்தால் தினை கொய்யப்பட்டு விடும்; பிறகு தினைக்காவல் இருக்காது; தலைவி தன் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டு விடுவாள்; எனவே தலைவன் அவளை இப்புனத்தில் இனிச் சந்திக்க இயலாது என்பதனை மறைமுகமாக உணர்த்துகிறாள்.

36. **பாங்கி தலைவன்முன் நின்று உணர்த்தல்:** முன் சிறைப்புற மாகக் கூறிய இற்செறிப்பையே பாங்கி தலைவனிடம் நேரடியாகத் தெரிவித்தல்.

கணிப்புத்தலர் பூப்பக் கனக்கு ஆவலின் கடிதினை யால் புனக்காவல் நீங்கினம் நின்றனம் என இயையும்.

கணி — வேங்கை மரம்; புத்தலர் — புதிய மலர்கள்; கனக்கு ஆவலின்—மிகுதியான ஆர்வத்தோடு; கடி தினை யால் — கொய்யப்பட்ட தினைகளின் காரணமாக, தினை

பாங்கி நெறியது அருமைகூறல்

கவளக் கரிய குருகுஉணக்
கேசரி கைநிமிர்க்கும்;
துவளத் தடித்துஉரு மேறுஎழும்;
அம்செழும் சோதிபெற்ற
பவளப் பதச்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
இவள்அணி (வேட்டுஅரை யாமத்து
அதரிடை) எய்தலையே. 37

கொய்யப்பட்டு விட்டதால் கடிதினை என்பது வறுகடலை என்புழிப் போலச் செயப்பாட்டு வினைப் பொருளில் வந்த வினைத்தொகை; நீங்கினம் நின்றனம்—நீங்கி விட்டோம், நீங்கினம் முற்று வாய்பாட்டான் வந்த வினையெச்சம்; ஏகாரம் அசை; பொருந்தாரின் – பகைவர்களிடமிருந்து; நீ மனக்காவல் விட மனையிடத்தே இக்காவல் பூண்பம் என இயையும். நீ என்றது தலைவனைக் குறித்தது; நீ மனக்காவல் விட—(தலைவியைப் பிரிந்த பிரிவாற்றாமையால்)நீ உள்ளக் கட்டுப்பாட்டை இழந்து விடும்படி, மனங் கலங்குமாறு என்பது பொருள்; இக்காவல் என்றது இப்போது நாங்கள் செய்து கொண்டுள்ள (புனக்)காவல் என்பதைச் சுட்டியது.

இங்கே தினைப்புனத்தை நாங்கள் காவல் காத்துக் கொண்டிருக்கிறோம்;இனி மேல் வீட்டில் காக்கப்படுவோம் என்ற ஒரு முரணும், நீ மனக்காவல் விட யாம் காவல் பூண்பம் என மற்றொரு முரணும் அமைந்தது ஒரு நயம்.

37. **பாங்கி நெறியது அருமை கூறல் :** தலைவன் தலைவியை அவள் மனைக்கண் வந்து இரவு நேரங்களில் சந்திக்க ஏற்பாடு செய்ய வேண்டியபோது தோழி அவன் வரும் வழியின் கொடுமைகூறி வரவேண்டாம் எனக் கூறுதல்.

கவள—பெருங்கவளமாக உணவுகொள்ளும் இயல்புள்ள; கரிய—யானையினுடைய. அகரம் ஆறாம் வேற்றுமை உருபு; குருகு—மூளை இறைச்சியை; கேசரி—சிங்கம்; கை நிமிர்த்தல்—விலங்குகளின் முன்னங்கால்கள் கரங்களாகவும் பயன்படுதலின் முன்னங்கால்களால் அறைதலைக் கை

செழியதரையன் பிரபந்தங்கள்

தலைவன் நெறியதன் எளிமை கூறல்

ஏதுக்குஎன் நெஞ்சுஅவண் அஞ்சுவது
உன்அன்பிற்கு ஏற்றஇருள்
போதுக்குஎன் வேல்கதிர் தோன்றும்அட்-
டேபொருந் தார்முடியைச்
சேதிக்கும் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
கோதுஉற்ற மால்இருள் கைம்மா
இருள்நெறி கூடினுமே. 38

நிமிர்க்கும் என்றார்; துவள—அசையும்படி; தடித்து—மின்னிக் கொண்டு; உருமேறு—இடி; அம் செழும் சோதி பெற்ற செழியன், பவளப் பதச் செழியன் என இயையும். அழகும் செழிப்பும் நிறைந்த அறிவினை உடையவனும் பவளத்தைப் போன்ற சிவந்த கால்களை உடையவனுமான செழியன் என்பது பொருள்; இவள்—தலைவியைக் குறித்தது; அணி—அழகை; வேட்டு—விரும்பி; அரை யாமத்து—பாதி இரவில்; அதரிடை—காட்டு வழியில்; எய்தலை—வாராதே.

அதரிடை அரை யாமத்து கேசரி கை நிமிர்க்கும்; உருமேறு எழும்; (ஆதலின்) இவள் அணிவேட்டு எய்தலை என்பது பொருண் முடிபு.

38. **தலைவன் நெறியதன் எளிமை கூறல்**: இரவுக் குறிக்குத் தலைவன் வரும் வழியில் நேரும் இடையூறுகளைச் சுட்டிக் காட்டிய தோழிக்கு அவன் தனக்கு அச்சமின்மையின் வழி நடத்தல் எளிமையே என்று சொல்லுதல்.

என் நெஞ்சு அவண் ஏதுக்கு அஞ்சுவது என இயையும்; தலைவன் பாங்கியை நோக்கி உன் அன்பிற்கேற்ற என்றது அவள் தலைவியை விட்டு எப்போதும் நீங்காத தன்மையையும் வேறுபாடற்ற அன்புடைமையையும் நோக்கி ஒற்றுமை நயத்தால் கூறியது; அன்பிற்கு ஏற்ற இருள் போது—அன்பைப் பெறுவதற்கு வாய்ப்பான இரவுக் காலம்; கதிர்—ஒளி; வேல் கதிர் – வேலின் ஒளி, ஆறாம் வேற்றுமைத் தொகை; அட்டே – போரிட்டு, ஏகாரம் – அசை; சேதிக்கும்—துணிக்கும்; கோது உற்ற – தீமையைச் செய்வதும்; மால் – பெரியதும்; இருள் – கரியதும் ஆகிய; கைம்மா—துதிக்கையை உடைய விலங்காகிய யானை.

பாங்கி தலைமகனைக் குறியிடை நிறீஇத் தாய் துயில் அறிதல்

நவ்விஅம் கண்ணி! கழகச்
சிறார்என நள்இருட்கால்
பவ்விய மாக்கள் துயில்நீத்து
அரற்றப்பொற் பால்மதனின்
செவ்வியன் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
வெவ்விய யானை கணக்காயர்
நூலின் விதம்செய்ததே. 39

கைம்மா இருள்நெறி கூடினும் என் நெஞ்சு ஏதுக்கு அவண் அஞ்சுவது; இருள் போதுக்கு என் வேல் கதிர் தோன்றும் என்பது பொருண் முடிபு.

பாட்டுடைத் தலைவனைச் சிறப்பிக்கும் போது 'அட்டே பொருந்தார் முடியைச் சேதிக்கும் செழியன்' என்றதனால் நானும் தேவை ஏற்படின் எனக்குப் பகையாக வருவனவற்றைக் கொன்றழிப்பேன் எனத் த்லைவன் குறிப்பாகக் கூறியவாறாயிற்று. இதனை அணி நூலார் கருத்துடை அடைகொளி என்பர்.

39. **பாங்கி தலைமகனைக் குறியிடை நிறீஇத் தாய் துயில் அறிதல்:** இரவுக் குறிக்கண் வந்த தலைவனைக் குறியிடத்தில் நிறுத்தி வைத்துவிட்டுத் தலைவியை அங்கு அழைத்துச் செல்ல வாய்ப்பாக அன்னை உறங்கியாயிற்றா எனத் தோழி சோதித்துப் பார்த்தல்.

நவ்வி—மான்; அம் — அழகிய; கண்ணி — கண்களை உடையவளே, அண்மைவிளி இயல்பாயிற்று; கழகச்சிறார்—பள்ளி மாணவர்; நள்இருட்கால்—பாதி இரவில்; பவ்விய—பணிவான; மாக்கள்—விலங்குகள்; பவ்விய மாக்கள் என்றது முயல், மான் போன்ற சாதுவான பிராணிகளை; அரற்ற—அழும்படி; பொற்பால்—அழகால்; மதனின்—மன்மதனை விட; செவ்வியன் — சிறப்புடையவன்; வெவ்விய — சினம் கொண்ட; கணக்காயர் — ஆசிரியர்; நூலின் விதம் — இலக்கணத்தைப் போல; கணக்காயர் நூல் — மூன்றன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

புரவலன் தேற்றல்

கைவேழம் நீங்கக்கொங் கைவேழம்
காட்டும் கிளித்தொனியாய்
மைவேழம் நீங்கநின் மெய்யொளி
காட்டும் விளங்கும்முத்தச்
செய்வேழப் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
பைவேழத் தோளி மனம்துணை
ஆம்இப் பெருநெறிக்கே. 40

நள்இருட்கால் வெவ்விய யானை பவ்விய மாக்கள் துயில் நீத்து கணக்காயர் நூலின் கழகச் சிறார் என அரற்றச் செய்தது என்பது பொருண் முடிபு.

பள்ளி மாணவர்கள் ஆசிரியரால் கற்பிக்கப்படும் நூலுக்கு அஞ்சி அழுவதைப் போல எளிய விலங்குகள் அஞ்சி அரற்றுமாறு சினங்கொண்ட யானை வேகமாகத் திரிகிறது என்பது உவமை. இவ்வாறு ஏதாவது ஒரு புதுமையான செய்தியைக் கூறினால் தாய் விழித்திருந்தால் என்ன என்று மேல் விவரம்கேட்பாள். அவ்வாறு கேட்கா விடின் அவள் தூங்கி விட்டாள் என அச்சமின்றித் தலைவி யைக் குறியிடத்திற்கு அழைத்துச் செல்லலாம். தோழியின் இந்தக் கூற்றின் பயன் இதுவே.

40. **புரவலன் தேற்றல் :** இரவுக்குறிக்குத் தலைவன் வரும் வழியின் அருமையை எண்ணி இரங்கிய தலைவியை அவன் ஆற்றுவித்தல்.

கொங்கை வேழம் கைவேழம் நீங்கக் காட்டும்–உன் நகில்களாகிய யானை மருப்பைப் பற்றிய சிந்தனை (இடை வழியில் குறுக்கிடுகின்ற) துதிக்கையை உடைய யானையின் துயரிலிருந்து தப்பிக்கச் செய்யும்; கிளித்தொனியாய் – கிளியின் மொழி போன்று இனிமையான குரலை உடைய தலைவியே; மை வேழம்–இருளாகிய யானை, உருவகம்; நின் மெய் ஒளி மை வேழம் நீங்கக் காட்டும் – உடலின் பிரகாசத்தைப் பற்றிய நினைவு (வழியில் உள்ள) இருளாகிய யானையை விலக்க உதவும்; விளங்கும் முத்தச் செய் வேழம் – ஒளிவீசும் முத்துக்களை உண்டாக்குகின்றதும்

இறைவியை இல்வயின் விடுத்தல்

**பீர்பூத்த அந்தியில் விண்பூத்த
தேன்மலர் பெய்துமுல்லைத்
தார்பூத்த கூந்தற்கு அணிகாதல்
நீங்கு;தண் தாமரையாள்**

வயலில் விளைவதுமாகிய கரும்பு; செய் வேழம் – ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை; முத்துப் பிறக்கும் இருபது இடங்களில் கரும்பையும் ஒன்றாகக் கூறுதல் இலக்கிய மரபு; வேழம் என்பது யானை, கரும்பு, மூங்கில், நாணற்புல் முதலிய பல பொருள் தரும் ஒரு சொல். அவற்றுள் கரும்பு எனப் பிரித்தறிய வசதியாகச் செய் வேழம் என்றார். இத்தகைய சொல்லாட்சி வெளிப்படை எனப்படும். பை வேழத் தோளி– பசுமையான மூங்கிலைப் போன்ற தோள்களை உடையவளே, விளி; இப்பெருநெறிக்கு (உன்) மனமே துணை ஆம் என இயையும். நெறிக்கண் உள்ள ஏகாரத்தை மனத்தின்கண் கூட்டப்பட்டது. நீ என் நலம் நாடலின் அந்த நல்லெண்ணமே எனக்கு வழியில் தீமை நேராதவாறு காக்கும் என்பது கருத்து.

41. **இறைவியை இல்வயின் விடுத்தல் :** இரவுக்குறியில் தலைவியைச் சந்தித்த பிறகு தலைவன் வீட்டிற்குச் செல் என அவளை அனுப்புதல்.

பீர்–பீர்க்கம்பூ; அந்தி–மாலைப்பொழுது; விண் பூத்த--மேகங்களுக்கிடையே பூத்த, ஏழன்தொகை, வெற்பு மேகங்கள் தவழுமளவு உயர்ந்து விளங்குவதால் அங்கு மலர்கின்ற பூக்கள் மேகங்களுக்கிடையே மலர்ந்தனவாகக் கூறப்பட்டன; தேன் மலர் – தேனை உடைய மலர், இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை; பெய்து – இடையிற் சேர்த்து; முல்லைத்தார் பூத்த கூந்தற்கு-முல்லைச் சரங்களால் அழகு பெற்ற குழலுக்கு; அணி–சூடுகின்ற; காதல் நீங்கு–விருப்பத்தை விட்டுவிடு; தண்–குளிர்ச்சி மிக்க; தாமரையாள் சீர்–தாமரைமலரில் வீற்றிருக்கும் திருமகளின் சிறப்பாகிய செல்வச் சிறப்பு. பூத்த–நிறைந்த; ஏர் பூத்த தாய்–நற்றாய், ஏர்–நன்மை; **(நீ உன்) கூந்தற்கு தேன்மலர் பெய்து அணி காதல்**

சீர்பூத்த பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
ஏர்பூத்த தாய்உனைத் தேடவும்
கூடும்சென்று எய்துதியே. 41

இற்கொண்டேகல்

மணக்கூந்தல்! தாய்கண் மலர்ந்துஇலில்
தேடும்;அவ் வான்கதிரோன்
குணக்குஊர விண்ட மலர்க்கஞ்சம்
போல்இக் குவலயத்தில்

நீங்கு; தாய் உனைத் தேடவும் கூடும்; (உன் மனைக்கண்) சென்று எய்துதி என்பது பொருண் முடிபு.

தலைவனைச் சந்திக்கவே தலைவி இரவுக்குறிக்கண் வந்தவளயினும் அதனை நேராகக் கூறின் அவள் நாணுவாள் என்பதால் அவள் தன் கூந்தலில் முடிக்க மலர் கொய்ய வந்தாள் போன்று கூறுகின்றான். மீண்டு செல்லுங்கால் யாரேனும் கண்டு கேட்டாலும் பதில்கூற ஒரு வழி சொன்னவாறும் ஆயிற்று.

ஒப்புமை :

'' கற்புஆர் உமைபங்கர் செம்பொற் றியாகர் கலைமுழுதும்
கற்பார் துறைசைக் கரும்புஅன்ன சொல்லிநின்
கைத்தளிரால்
கற்பார் முகையும் தளிரும்கொய் யாதுஉன் கமலஇல்லில்
கற்பார் அடிவைத்துச் சென்றுசெய்ம் மோஇனிக்
கண்படையே''

(திருவாவடுதுறைக் கோவை 202).

42. ***இற்கொண்டேகல் :*** *இரவுக் குறியில் தலைவனைச் சந்தித்த பின் தலைவியைத் தோழி வீட்டிற்கு அழைத்துச் செல்லல்.*

மணக்கூந்தல்—வாசனையை உடைய குழலைப்பெற்ற தலைவியே, இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை. அண்மைவிளி இயல்பாயிற்று; கண் மலர்ந்து—உறக்கம் நீங்கி; அவ்வான் கதிரோன் குணக்கு ஊர மலர்க்கஞ்சம்

பணற்கு ஊர்ந்து உலாம்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
நிணக்கூர் அயிற்கண்ணி நில்லாது
செல்லுதி நின்மனைக்கே. 42

புலந்தவன் போதல்

மாமாலை ஈந்துஎன் இதயார
விந்தம் மருவல்அல்லால்
தேமாலை யந்தடத் தாமரை
யோசென்னி சேரன்தென்னன்

விண்டபோல் இக்குவலயத்தில் பணற்கு ஊர்ந்து உலாம் செழியன் என இயையும்; கதிரோன்—சூரியன்; குணக்கு—கிழக்கு; விண்ட—மலர்ந்த; மலர்க்கஞ்சம்—தாமரை மலர், முன் பின்னாகத் தொக்க இருபெயரொட்டுப் பண்புத் தொகை; வானில் சூரியன் உலா வருவதால் தாமரை மலர்வது போலச் செழியன் உலா வருவதால் உலக மக்களின் முகங்கள் மலர்கின்றன என்பது கருத்து; நிண—(பகைவர்களின்) ஊன் பொருந்தியதும்; கூர்—கூர்மை யானதுமாகிய; அயில்—வேலைப்போன்ற; கண்ணி—கண் களை உடைய தலைவியே; அயிற்கண்ணி—உவமைத் தொகை, அண்மை விளியாதலால் இயல்பாயிற்று.

மணக்கூந்தல்! கண்ணி! தாய் கண்மலர்ந்து இலில் தேடும்; (எனவே) நில்லாது நின் மனைக்கே செல்லுதி என்பது பொருண் முடிபு.

பாங்கி இறைவியை நோக்கி ''நீ உன் வீட்டிற்குச் செல்'' எனக் கூறியதாகச் சொல்லமைதி இருப்பினும் உன் வீட்டிற்குச் செல்லலாம் வா என அழைக்கிறாள் எனக் கொள்ளலே அகப்பொருளமைதிக்குச் சிறப்பு. இற்கொண்டு ஏகல் என்பதே துறையின் பெயருமாம்.

43. **புலந்தவன் போதல் :** *தலைவன் தான் குறிப்பிட்டிருந்த குறியிடத்திலிருந்து தலைவி அல்லகுறிப்பட்டதால் தன்னை சந்திக்க இயலாததால் வருந்தியவனாகத் தன் ஊருக்குத் திரும்பிச் செல்லுதல்.*

பாமாலை ஆர்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
பூமாலை தீதுஉற்ற போல்எனை
வாட்டிய பொற்கொடிக்கே. 43

மாமாலை—பெரிய மயக்கத்தை; இதயார விந்தம் — இதய+அரவிந்தம்; உள்ளமாகிய தாமரை, உருவகம்; மருவல்—பொருந்துதல்; தேம் ஆலயம்—விரும்பப்படுகின்ற உறைவிடம்; ஆலையம் என்புழி லகர மெய்யூர்ந்த அகரம் எதுகை நோக்கி ஐகாரமாகப் போலியாயிற்று; சென்னி — சோழன்; தென்னன்—பாண்டியன்; பாமாலை—(மூவேந்தர் களாலும் போற்றிப் பாடப்பட்ட) கவிதையலங்கல்; தீது உற்ற பூமாலை போல் — (அணிந்தவர்களுக்கு இன்பம் பயத்தலாகிய தன் நன்மையை இழந்து வருத்தும் இயல் பாகிய) தீமையைப் பெற்ற மலர்மாலையைப் போன்று; பொற்கொடி — பொன்னாலாகிய கொடியைப் போன்ற தலைவி, மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை, பின்மொழி நிலையல்.

பொற்கொடிக்கு என் இதய அரவிந்தம் மருவல் அலால் தேம் ஆலயம் தடத்தாமரையோ என்பது பொருண் முடிபு.

இரவில் தலைவன் வந்தபோது தலைவியின் வீட்டுக் கதவு சாத்தப்பட்டிருந்ததால் அவள் வீடு இரவில் குவிந் திருக்கும் தாமரையோ என்றான். கூட்டத்தில் இன்ப மளித்த தலைவி பிரிவில் துயரைத் தருவதால் தீது உற்ற பூமாலை என உவமித்தான்.

ஒப்புமை :

''நண்ணார் முடிதொடும் தாளான்
குலோத்துங்கன் நாகைவெற்பில்
கண்ணா னதுந்தெரி யாக்கங்குல்
வாய்க்கடை ஆயிரம்சூழ்
தண்ணார் கமலம் மனைஎன்றும்
தாய்விழி நீலம்என்றும்
எண்ணாமல் வந்தன மேஅவ
மேஇன்றுஇவ் வேந்திழைக்கே''

(குலோத்துங்க சோழன் கோவை — 223).

தலைவி குறிமருண்டமை தோழி தலைவற்கு இயம்பல்

கூறாது எழுகுறி நின்குறி
யேஎன்று கோதைசென்று
வேறாய் நினைகிலள் மீண்டன
ளே; வெயில் வீசும்விண்ணில்
பாறுஆரு வேற்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
தேறாத பேதை துறவார்
எனநின்று செல்கிலளே. 44

---

44. **தலைவி குறிமருண்டமை தோழி தலைவற்கு இயம்பல்:** *தலைவி இயல்பாக நேர்ந்த ஏதோ ஓர் ஒலியைத் தலைவன் செய்த குறி எனத் தவறாக நினைந்து குறியிடத்திற்கு வந்து ஏமாந்தாள் என்ற செய்தியைப் பாங்கி அவனுக்கு உரைத்தல்.*

கூறாது—(தலைவனாகிய நீ) ஒலிக்காமல்; எழு குறி—(வேறு எதனாலே தானே) ஏற்பட்ட குறியீட்டொலியை; நின் குறியே—நீ செய்த குறியீட்டொலியே; கோதை—தலைவி; கோதை (நீ) கூறாது எழுகுறி வேறாய் நினைகிலள் நின் குறியே என்று சென்று மீண்டனள் என இயையும்; நினைகிலள்—முற்று வாய்பாட்டான் வந்த எதிர்மறை வினையெச்சம் சென்று மீண்டனள் என முடிந்தது; மீண்டனளே என்பதில் ஏகாரம் இரக்கக் குறிப்பு; பாறு—பருந்துகள்; ஆரு—ஆர்கின்ற, பொருந்தும்; ஆருவேல்—வினைத்தொகை; சோர்தல் சோருதல் என ஆனாற் போன்று ஆர்தல் ஆருதல் ஆயிற்று; தேறாத பேதை—அல்லகுறிக்கும் தலைவனால் செய்யப்பட்ட குறிக்கும் வேறுபாட்டை உணர இயலாதவளாகிய தலைவி, இங்குப் பேதை என்றது பெண் என்ற அளவில் வந்தது; துறவார் என—(தலைவன் தன்னை எப்படியும்) கைவிட்டு விட மாட்டார் என்று; நின்று—(குறியிடத்தில் நீண்ட நேரம்) நின்று காத்திருந்து விட்டு; செல்கிலள்—(தன் வீட்டிற்குத் திரும்பச்) செல்லாதவள் ஆயினள்; அல்ல குறிபட்டுக் குறியிடத்திற்குச் சென்ற தலைவி தலைவன் வரும்வரை காத்திராதவளாக மீண்டு விட்டாள் என்பது கருத்து.

தலைவன் வருந்தொழிற்கு அருமை சாற்றல்

துஞ்சாள் அனைகண்; ஞமலிஇவ்
ஊரில் துடியர்அஞ்சார்;
மஞ்சார் நிலவுஎழும்; கூகையும்
கோழியும்—வாய்ந்தநீதிப்
பஞ்சாயு தன்செழி யன்தாகந்
தீர்த்தவன்—பாலைஒன்னார்
தஞ்சா யலின்ஒலி காட்டும்எவ்
வாறுஅன்பர் சாருவரே. 45

தலைவி சிறிது நேரமே குறியிடத்தில் தலைவனுக்காகக் காத்திருந்தாள்; அவன் வரவில்லை. இல்லத்தார் அறிந்துவிடுவார்களோ என்னும் அச்சம், நள்ளிரவில் குறியிடத்தில் தனித்திருக்க அச்சம் என்பவை காரணமாகவும் தலைவனின் மீதுள்ள அசையாத நம்பிக்கை காரணமாகவும் அவள் வீட்டிற்குத் திரும்பிவிட்டாள்.

45. **தலைவன் வருந்தொழிற்கு அருமை சாற்றல்:** தலைவன் இரவுக்குறிக்கண் வந்து தன்னைச் சந்திப்பதற்குள்ள இடையூறுகளைத் தலைவி தோழியிடம் சொல்லல்.

அனை கண் துஞ்சாள்; ஞமலி இவ்வூரில் துடியர் அஞ்சார்; மஞ்சு ஆர் நிலவு எழும்; கூகையும் கோழியும் ஒன்னார்தம் சாயலின் ஒலிகாட்டும்; அன்பர் எவ்வாறு சாருவர் என இயையும்.

ஞமலி—நாய்; ஞமலி இவ்வூர்—நாய்கள் மிகுந்த இந்த ஊர், என்றமையான் நாய் துஞ்சாமையும் பெறப்பட்டது; துடியர்—பறையடித்துக்கொண்டு ஊர்க்காவல் செய்வோர்; மஞ்சு ஆர் நிலவு—அழகிய நிலா, மேகங்களோடு பொருந்திய நிலா எனினுமாம்; கூகை — கோட்டான்; பஞ்சாயுதன்—சங்கு, சக்கரம், வில், வாள், கதை என்னும் ஐந்து போர்க்கலங்களை உடைய திருமால்; பாலை ஒன்னார் தம் சாயலின்—பாலையூரின் பகைவர்களைப் போல; மன்னர் மேல் கொண்ட பகைமை ஊரின் மேல் ஏற்றிக் கூறப்பட்டது.

கோவை

களவின் அழிவு உரைத்தல்

கண்ணீர்மை மெய்உறப் பெய்துஉரு
நூல்என் கமலச்செங்கை
தண்ஈர் வளைவிடச் சென்றார்வா
ரார்சஞ் சரிகப்புஞ்சப்
பண்நீர்மைத் தார்ச்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
விண்நீர்மை கண்டு மயில்ஆல
என்கண் மெலிவுஎண்ணியே. 46

தன்துயர் தலைவற்கு உணர்த்தல் வேண்டல்

வீசும் கவணில் புனக்காவல்
(நன்றுஎன) மெல்லியர்கள்
பேசும் புறமும் முளைத்துஎழுந்
தேமலர் பீழைஅறத்

---

46. **களவின் அழிவு உரைத்தல்:** *தலைவனின் பிரிவாற்றாமையால் தலைவி தன் மேனியெழில் குன்றுவதனைப் பாங்கியொடு பகர்தல்.*

கண்நீர்மை மெய்உறப் பெய்து—விழிகள் கண்ணீரை அஞ்சனம் உடல் எலாம் சேரும்படி பொழிந்து; உரு நூல் என்—(தன்)வடிவம் ஒரு நூலிழை போலாகும்படி மெலிந்து விட்ட; கமலச் செங்கை—தாமரை மலர்களைப் போன்று சிவந்த கரங்கள்; தண்—குளிர்ந்த; ஈர்—(சங்கை) அறுத்துச் செய்யப்பட்ட, ஈர்வளை—வினைத்தொகை; விட — கழல விட; சஞ்சரிகம் — வண்டு; புஞ்சம்—கூட்டம்; சஞ்சரிகப் புஞ்சம் — வண்டுகளின் கூட்டம்; பண் — இசை; நீர்மை— இயல்பாகப் பெற்ற; தார்—பூமாலை; விண் நீர்மை கண்டு— ஆகாயத்தில் நீருண்ட மேகத்தைப் பார்த்து, நீர்மை — இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை; ஆல— நடிக்க; என்கண்—என்பால் ஏற்படும், கண் ஏழன் உருபு.

கண்நீர் பெய்து கைவளை விடச்சென்றார் என்கண் மெலிவு எண்ணியே வாரார் என்பது பொருண் முடிபு.

47. **தன்துயர் தலைவற்கு உணர்த்தல் வேண்டல்:** *'களவு நிலை நீட்டிப்பதால் தனக்கு ஏற்படும் துயரத்தைத்*

தேசுஉந்து பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
மாசும் பிறவும் ஒழிப்பர்நண்
பர்க்குஉரை வாள்நுதலே. 47

தலைவனுக்கு அறிவிக்க வேண்டும் எனத் தலைவி பாங்கியொடு கூறல்.

இக்கோவையாசிரியர் இத்துறைப் பாடலிலேயே அலர் அறிவுறுத்தல் என ஆசிரியர் பிறர் தனித்துறையாக அமைக்கும் கருத்தையும் இணைத்துள்ளார்.

வீசும் கவணில் புனக்காவல்—கவண் எறிந்து செய்யப் படும் தினைக் கொல்லைக் காவல் தொழில்; கவணில் என்பது இரண்டன் உருபுக்குப்பதில் ஐந்தன் உருபு வந்த மயக்கம்; மெல்லியர்கள் — (ஊரில் உள்ள பிற) பெண்கள்; புறம்—புறமொழி, அலர்; முளைத்து எழுந்தே மலர்—தோன்றி வளர்ந்து விரிகின்ற, அலர் உண்டாகிப் பரவுகின்ற; பீழை — துன்பம்; தேசு உந்து —ஒளிமிக்க, புகழ் நிறைந்த என்பது கருத்து; மாசு — (வரும் வழிகளின் தடைகளைப் பற்றிய அச்சம், தன் உடல் மெலிந்து அழகு அழிவதால் நேரும் துன்பம் போன்ற) குற்றங்கள்; பிற—(தலைவியாகிய) என் காதல் மிகுதியால் காதலனைச் சந்திக்காமல் இருக்க இயலாத நிலை; ஒழிப்பர்—(தான் விரைவில் திருமணம் செய்துகொண்டு இத்தகைய இன்னல்களை) இல்லாமற் செய்வார்; வாள்நுதல்—ஒளி வீசுகின்ற நெற்றியை உடையவள், தோழி.

வாள்நுதலே! மெல்லியர்கள் வீசும் கவணில் புனக் காவல் நன்று எனப் பேசும் புறமும் மலர் பீழையும் அற மாசும் பிறவும் ஒழிப்பர்; நண்பர்க்கு உரை என்பது பொருள் முடிபு.

தலைவி தன் காம மிகுதியை வெளிப்படையாகக் கூற நாணிப் பிறவும் எனக் குறிப்பால் உணர்த்தினாள்.

பாங்கி, 'நீயே உரை' எனத் தலைவி நோதல்

பேசாத பாவை பருவரல்
நீஇன்று பேசுஎனவே
கூசாது உரைத்தன ளேகலுழ்ந்
தேன்ஒரு கோடிமதன்
தேசுஆரும் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
மாசுஆரும் நாவினர் பேசாதுஉற்
றார்என் வரக்குறைவே. **48**

---

48. **பாங்கி நீயே உரை எனத் தலைவி நோதல் :** *தலைவி களவொழுக்கம் நீட்டிக்கப்படலால் தனக்கு உண்டாகும் துன்பங்களைத் தலைவனிடம் எடுத்துக் கூறும்படி தோழியிடம் கூறுகிறாள். அதற்குப் பாங்கி, ''உன் துயரத்தை நீயே தலைவனிடம் கூறுக'' என்கிறாள்,இதனால் தலைவி வருந்துதல்.*

பொதுவாகக் கோவைகளில் இவ்விடத்தில் இப்படி ஒரு துறை காணப்படவில்லை.பாங்கியிற் கூட்டம் என்னும் கிளவியில் பாங்கி தலைவனிடம் 'நின்குறை நீயே சென்று தலைவியின்பால் உரை' என்பாள்; அதனைக் கேட்ட தலைவன் வருந்துவான். அதைப் போன்ற ஓர் அமைப்பை இக்கோவை இக்கிளவியில் பெற்றுள்ளது.

பேசாத பாவை - தலைவனிடம் ஒன்றும் பேசாமல் இருப்பவளும் பாவை போன்றவளுமாகிய தலைவியே, அண்மை விளி இயல்பாயிற்று; பருவரல்—(உனக்குற்ற) துன்பத்தை; கலுழ்ந்தேன்—துயரம் கொண்டேன்; மதன்—மன்மதன்; தேசுஆரும் — அழகைப் பெற்ற; மதன் தேசு—ஆறன் தொகை; மாசு ஆரும் நாவினர் — தலைவனோடு தன் துயரை எடுத்துச் சொல்ல மறுப்பதால் தோழியின் நா கடமையைச் செய்யாத குற்றத்தை உடையது எனத் தலைவி பழித்தவாறு; என் வரக் குறைவே—தோழி உதவ மறுக்கிறாள்; அவளைக் குற்றம் சொல்லிப் பயன் என்ன? என் நல்லூழ் இன்மையே காரணம் எனத் தன்னையே நொந்து கொள்கிறாள். மாசுஆரும் நாவினர் பேசாது உற்றார்; (அது மட்டுமன்று); பேசாத பாவை! நீ பருவரல்

பிறர் வரைவு விலக்குவித்தல்

கோடியின் மேற்பொன்மூ வாஏறு
தந்துநம் கோல்வளைபால்
நாடிய வந்தனர் என்றுஓது
உரைசெம்பொன் நாட்டினும்சீர்
தேடிய பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
ஓடிய புண்ணில் தழல்வேல்
எனச்செவி உற்றதுவே. 49

இன்று பேசு எனவே உரைத்தனளே; கலுழ்ந்தேன்; (இது) என் வரக்குறைவே என்பது பொருண் முடிபு.

49. **பிறர் வரைவு விலக்குவித்தல் :** *மற்றவர் பெரும் பரிசத் தொகை தந்து தலைவியைத் திருமணம் செய்து கொள்ள முயல்கின்றனர் எனத் தலைவனிடம் கூறுமாறு தலைவி தோழியிடம் கூறல்.*

இதனால் தலைவன் தன்னை விரைவில் மணக்க வேண்டும் என்பது விழைவு.

மூவா ஏறு—முதுமையடையாத காளைகள், இளங் காளைகள்; பொன், ஏறு ஆகிய ஈரிடங்களிலும் எண்ணும்மைகள் தொக்கன; கோல்வளை—திரண்ட வளையல்களை அணிந்தவள், தலைவி; கோலங்கள் வரையப்பட்ட வளையல்கள் அணிந்தவள் என்பாருமுளர்; கோல்வளைபால் என்புழிப் பால் என்னும் உருபு இரண்டன் பொருளில் வந்தது; நாடிய—நாடி, செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; ஓது உரை—சொல்லும் மொழிகள், வினைத்தொகை; செம்பொன் நாட்டினும்—அமரர் உலகிலும்; தழல்வேல்—தீயால் காய்ச்சப்பட்ட வேல்; ஓடிய—புரையோடிய; 'வெந்த புண்ணில் வேல் நுழைந்தாற் போல்' என்பது பழமொழி.

பொன் ஏறு தந்து நம் கோல்வளைபால் நாடிய வந்தனர் என்று ஓது புரை ஓடிய புண்ணில் தழல்வேல் எனச் செவி உற்றது என்பது பொருள் முடிபு. என்று நீ தலைவனிடம் கூறுவாயாக என்பது அவாய்நிலையால் பெறப்பட்டது.

வெறி அச்சுறுத்தல்

கற்றார்கள் கற்ற படிநோய்
மருந்துஅருள் கற்பின்எம்மைப்
பெற்றார்மின் நோய்க்கு வெறிபற்றி
னார்பெரும் போரிடத்தில்
பற்றார் பணிசெழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைஅன்பா
உற்றாள் பிணிஉனால் என்பதைச்
சற்றும் உணர்ந்திலரே. 50

---

50. **வெறி அச்சுறுத்தல் :** தாய் தலைவியின் வேறுபாட்டைத் தெய்வக் குற்றத்தால் நேர்ந்ததாகக் கருதி அதனை நீக்க வெறியாட்டாளனை அழைத்து வெறியாட்டு இயற்றக் கருதுகின்றாள் எனத் தோழி தலைவனிடம் கூறி அவனை அச்சுறுத்தல்.

அன்பா! உனால் பிணிஉற்றாள் என்பதைச் சற்றும் உணர்ந்திலர் எம்மைப் பெற்றார்; கற்றார்கள் கற்றபடி நோய் மருந்து அருள் கற்பின் மின் நோய்க்கு வெறி பற்றினார் என இயையும்.

உணர்ந்திலர் — உணராதவர்களாகி, முற்றுவாய் பாட்டான் வந்த எதிர்மறை வினையெச்சம்; நோய் மருந்து—நோயை நீக்குவதற்கு உரிய மருந்து. இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்கதொகை; கற்பின்— கல்வியைப் போல, இன்—உவம உருபு; ஒரு நோயைப் பல மருத்துவர்கள் தம் கல்விக்கேற்றவாறு வேறு நோயாகக் கொண்டு அதற்கேற்ற மருந்துகளைத் தருவர்; அதைப் போல நின் பிரிவால் விளைந்த துன்பத்தை எம் அன்னையர் தெய்வக்குற்றமாகக் கருதி வெறியாட்ட விழைகின்றனர் என்பது கருத்து; மின்—மின்னலைப் போன்ற பெண், தலைவி, உவம ஆகுபெயர்; பற்றார்—பகைவர்கள்.

'சற்றும் உணர்ந்திலர்' என்பதனை ஒரு வாக்கிய மாகவும் 'வெறி பற்றினர்' என்பதனைப் பிறிதொரு வாக்கியமாகவும் உரைப்பினும் அமையும். இவ்வுரைக்கு அவற்றிற்கு இடையே 'அதனால்' என ஒரு சொல் வருவிக்கப்படவேண்டும். எனவே நீ விரைவில் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்பது கூற்றெச்சம்.

பகல் வருவானை இரவு வருக என்றல்

புரவே தரும்கலை எல்லாம்
நிரம்பிவிண் பூத்தமதி
வரவே யலால்இப் பகல்வா
ரலைமா ற்றலர்கள் அஞ்சு
திரவேழப் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
இரவே வருதல் இயல்புஆம்
தலைவ எமக்கும்நன்றே. 51

இரவு வருவானைப் பகல் வருக என்றல்

சுருட்போது கொங்கை யலர்போது
கொய்திடச் சூழ்பொழிலில்
இருட்போது நீக்கிப் பகல்வரு
வாய்எண் இலாதகலை

---

51. **பகல் வருவானை இரவு வருக என்றல்:** பகல் நேரத்தில் வந்த தலைவியோடு அளவளாவிச் செல்லும் தலைவனை இனிமேல் பகலிலன்றி இரவு நேரங்களில் வருக என்றல்; இது பகற்குறி விலக்கல் எனவும் படும்.

புரவு—கொடை; புரவே தரும்—நன்கொடையாக ஒளியையே வழங்கும், ஏகாரம் பிரிநிலை; கலை—சந்திர கலை; மதி—ஆகுபெயராக இரவை உணர்த்திற்று; வாரலை—வராதே, முன்னிலை எதிர்மறை ஏவல்; மாற்றலர்கள்—பகைவர்கள்; திர—நிலையான, ஸ்திரம் என்னும் வடசொல்லின் தமிழ் வடிவம்; வேழம் ஆகு பெயராக யானைப்படையை உணர்த்தியது; திரவேழ—நிலையான யானைப்படையை உடைய; இரவு என்பதில் உள்ள ஏகாரத்தை வருதல் என்பதோடு கூட்டுக. எமக்கும் என்பதிலுள்ள எச்சவும்மை எமக்கு மட்டும் அன்று; உனக்கும் நன்மையே பயப்பதாகும் என உணர்த்திநின்றது; ஈற்றேகாரம் தேற்றப்பொருளில் வந்தது.

தலைவ! இரவு வருதலே இயல்பாம்; எமக்கும் நன்று; விண்பூத்த மதி வரவே அலால் இப்பகல் வாரலை என்பது பொருண்முடிபு.

52. **இரவு வருவானைப் பகல் வருக என்றல்:** இரவுக் காலங்களில் வந்து தலைவியைச் சந்தித்துச் செல்லும்

தெருட்போதன் பாலைப் பதித்தாகத்
தீர்த்த செழியன்வெற்பில்
இருட்போதும் எய்தினம் என்றே
பிழைநமக்கு ஏறியதே. 52

உரவோன் நாடும் ஊரும் குலனும் மரபும் புகழும் வாய்மையும் கூறல்

வரையாது உறில்எம்கண் நாடு,உங்
கள்தம் தூ மரபு,குலத்து
உரையாது உறும்?புகழ், வாய்மைஎன்
ஆம்?முத்தம் ஓங்குநதித்

தலைவனைப் பாங்கி இனிமேல் இரவில் வரவேண்டாம்; பகலில் வருக என்று கூறுதல்.

இது இரவுக்குறி விலக்கல் என்றும் கூறப்படும்.

வெற்பில் இருட்போதும் எய்தினம் என்றே நமக்குப் பிழை ஏறியது; (எனவே நீ) சூழ் பொழிலில் இருட்போது நீக்கிப் பகல் வருவாய் என இயையும்.

சுருள் போது—கூந்தலில் அணியப்படும் அரும்பு, ஏழன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை; கொங்கை அலர் போது—நகில்களின் வெப்பத்தால் மலரும்படி மார்பில் அணியப்பெறும் அரும்புகள்; கொங்கை அலர்—ஏழன் தொகை; சூழ் பொழில்—அடைகின்ற சோலை, வினைத் தொகை; இருள்போது—இருளாகிய பொழுது, இருபெய ரொட்டுப் பண்புத்தொகை; எண்இலாத — கணக்கற்ற; கலை தெருள் போதன்—கலை ஞானங்களில் தெளிவான அறிவுடைய அறிஞன்; பிழை—(வீட்டில் இருக்க வேண்டிய இரவு நேரங்களில் வெளியே செல்கின்றனர் என்ற) பழிச்சொல்; ஏறியது—மிகுதியாயிற்று.

53. **உரவோன் நாடும் ஊரும் குலனும் மரபும் புகழும் வாய்மையும் கூறல்:** *தலைவன் தலைவியை விரைவில் மணந்து கொள்ளாது களவொழுக்கத்தை மிக நீட்டித்தல் அவனுடைய நாடு முதலியவற்றின் தகுதிக்கு ஏற்புடையது அன்று எனப் பாங்கி கூறுதல்.*

திரைஓடும் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
விரைஆர் குழல்வள்ளி செவ்வேள்
எனமணம் வேட்டருளே. 53

ஆற்றுவித்திருந்த அருமை கூறல்

நீயே வலியை பிரிந்திட
இல்லத்து நேரிழையை
நோயே தணிக்க வழிஅறி
யாமையின் நோக்கும்வென்றிச்

எம்கண் வரையாது உறில் என இயையும்; எம்கண் என்புழி ஏழன்உருபு இரண்டன் பொருளில் வந்தது; உங்கள் தம் என்பதனை நாடு, மரபு, குலம், என்பன வற்றோடு தனித்தனியே கூட்டுக.

மரபு—பொதுவான இனம்; குலம்-குடிவழி: தூ—தூய்மையானது; உரை—பேசப்படுகின்ற பெருமை; யாது உறும்-என்ன ஆகும், சிறுமையாகி விடும் என்பது கருத்து; புகழ்—ஒழுக்கத்திற் சிறந்த குடி என்னும் இசை; வாய்மை—உன்னைப் பிரியேன், விரைவில் மணப்பேன் என்று தலைவிக்குக் கூறிய உறுதிமொழி; முத்தம் ஓங்கு நதித் திரை—முத்துக்கள் மிகுந்த ஆற்றின் அலை (மணி) முத்தாறு எனப் புகழ்பெற்ற ஆற்றின் அலை எனினுமாம்; விரை—நறுமணம்; குழல்—கூந்தல்; செவ்வேள்—முருகப் பெருமான்.

54. ஆற்றுவித்திருந்த அருமை கூறல் : தலைவியை மணக்க உடன்பட்ட தலைவன் தன் ஊர்க்குச் சென்றிருந்தபோது தலைவியின் பிரிவுத்துயரைத் தாங்கத் தான் ஆறுதல் மொழிகூறி அவளது காத்திருந்த செயலின் அருமையைப் பாங்கி தலைவனிடம் கூறுதல்.

நீ பிரிந்திடவே வலியை என ஏகாரத்தைப் பிரிந்திட என்பதனோடு கூட்டுக; இப்பிரிநிலை ஏகாரம் நீ தலைவியை ஆற்றுவிக்க வல்லாய் அல்லை எனப் பொருள் தந்தது; இல்லத்து நேரிழை என்பதனால் தலைவி இரவும் பகலும் எங்கும் வெளியே செல்லாது வீட்டிலேயே கிடந்தாள் என்பது வலியுறுத்தப்பட்டது. நோய் தணிக்க வழியே

சேயேயும் பாலைப் பதித்தாகந்
  தீர்த்த செழியன்வெற்பில்
தாயே எனினும் அரிதுஅவள்
  நோயைத் தணிப்பதற்கே. 54

பூங்குழை இரங்கல்

இகழ்வற்ற கூடலில் சற்றே
  மகன்றில் எனக்கரம்மேல்
நெகிழப் புறத்துஉறும் ஆவிஎன்
  றார்நெடு நாண்சுவற்றும்

அறியாமையின் நோக்கும் என நோய் என்பதிலுள்ள ஏகாரத்தை வழியின்மேல் கூட்டுக; நோக்கும் — என்ன செய்யலாம் என ஆராய்வேன்; யான் எனும் தோன்றா எழுவாய் வருவித்துக் கொள்ளப்பட வேண்டும்; வென்றிச் சேய்—வெற்றியை உடைய முருகப்பெருமான், இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை; ஏயும் — உவம உருபு; அவள் நோயைத் தணிப்பதற்குத் தாயே எனினும் அரிது என இயையும்.

வயது முதிர்ச்சியால் பெற்ற அநுபவ அறிவும், பொறுமையும் மிக்க அன்னையேயாயினும் தலைவியின் பிரிவுத்துயரைத் தணிப்பது அரிது என்றால் இளையவளாகிய நான் எத்துணைத் துன்பப்பட்டு அவளை ஆற்றியிருப்பேன் என உய்த்துணர்ந்து கொள்க எனத் தலைவன்பால் தோழி சொல்கிறாள்.

55. **பூங்குழை இரங்கல் :** *திருமணத்திற்கு வேண்டும் பொருள் பலவும் ஈட்டுவதற்காகத் தலைவன் பிரிந்து சென்றபோது தலைவி பிரிவாற்றாமையால் வருந்துதல்.*

கூடல்—புணர்ச்சி, அப்போது பிரிவுத்துயரைப்பற்றிய நினைவோ வேறு துன்பங்களைப்பற்றிய எண்ணமோ தோன்றாமையின் இகழ்வு அற்ற கூடல் எனப்பட்டது, அன்றியும் அனைத்து வகையானும் ஒத்த தலைவனோடு தான் புணர்ந்தமை தோன்ற இகழ்வற்ற கூடல் என்றாள் எனினுமாம்; மகன்றில்—தன் துணையைவிட்டுக் கணமும் பிரியாத இயல்பினை உடைய ஒரு நீர்ப்பறவை,

பகழிச் சிலைச்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
புகழுக்கு நன்றல்ல என்றோசொல்
லாதுஇன்று போயினரே. 55

இகுளை வம்பு என்றல்

மறந்தார் அலர்அன்பர்; உன்சாயல்
கற்க மயில்நடிக்கும்;
துறந்துஆரும் மின்இடை போல்உற
வேதுற வாதநண்பு

''சோர்துகில் திருந்தல் தேற்றாள் துணைபிரி மகன்றில் ஒத்தாள்'' (சீவக சிந்தாமணி 302); இகழ்வு அற்ற கூடலில் கரம்மேல் சற்றே நெகிழ மகன்றில் என ஆவி புறத்துறும் என்றார் என இயையும்; நெடுநாண்—நீண்ட வில்நாண்; சுவற்றும்—(பகைவர்களை) அழிக்கும் இயல்பு உள்ள; பகழி—அம்பு; சிலை—வில்; நெடு நாணையும் சுவற்றும் பகழியையும் உடைய சிலை என விரியும், இரண்டன் உருபுகளும் எண்ணும்மைகளும் தொக்கன; சிலைச்செழியன்—சிலையை உடைய செழியன், இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்கதொகை; புகழுக்கு—(சற்றே கரம் நெகிழினும் ஆவி புறத்துறும் என இகழ்வற்ற கூடலில் கூறி அணைந்த) பெருமைக்கு.

கூடலில் நெகிழினும் ஆவி புறத்துறும் என்றார்; (அந்தப்) புகழுக்கு நன்று அல்ல என்றோ இன்று சொல்லாது போயினர் என்பது பொருண் முடிபு.

56. **இகுளை வம்பு என்றல்:** *திருமணத்திற்காகப் பொருள் தேடச் சென்ற தலைவன் தான் மீள்வதாகக் குறித்த கார் காலம் வந்தும் வராமையின் வருந்திய தலைவியின்பால் பாங்கி 'இது உண்மையான கார்காலம் அன்று; கால மல்லாத காலத்தில் கார்காலம் போன்ற தோற்றங்கள் நேர்கின்றன' என்று சொல்லல்.*

அன்பர் மறந்தார் அலர்; மயில் உன் சாயல் கற்க நடிக்கும்; வெற்பில் நிறம்தாழ் முகில் துறந்த மின் (நின்) இடைபோல் உறவே ஆரும்; (தலைவர்) பொய்ப்பரோ? வந்து நேருவது மெய்அதே என இயையும்.

சிறந்துஆரும் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
நிறம்தாழ் முகில்; பொய்ப்ப ரோ?மெய்ய
தேவந்து நேருவதே. 56

அவன் அவண் புலம்பல்

கொடுக்கின்ற நீறுங்கை யாறும்
உயிர்ப்பும் குறுவெயர்ப்பும்
அடுக்கின்ற கண்முத்து மாலையும்
காட்டி-ஒன் னார்திரளைப்
படுக்கின்ற வேற்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்-
மடுக்கின்ற பாவிக்கு எதிர்தோன்றும்
ஆவியின் வந்துவந்தே. 57

துறவாத நண்பு—தன்னை அண்டியவர்களை இடையில் நீக்கி விடாத நட்பு; சிறந்து ஆரும்—சிறப்பைப் பெற்றுப் பொருந்தும்; நிறம் தாழ் முகில்—(கார்காலத்திற் குரிய) கரிய நிறத்தைப் பொருந்திய மேகம்; மெய் அதே—அது பகுதிப் பொருள் விகுதி; நேருவது—தலைவர் வந்து சேருவது.

57. அவன் அவண் புலம்பல் : திருமணத்திற்காகப் பொருள் ஈட்டச் சென்ற தலைவன் சென்ற நோக்கம் நிறைவேறிய உடனேயே அவ்விடத்துத் தலைவியை நினைத்துப் புலம்புதல்.

கொடுக்கின்ற நீறு – (தலைவியின் உடலின் மேல் படிந்து) தோன்றுகின்ற புழுதி; கையாறு – வருத்தம்; உயிர்ப்பு—பெருமூச்சு; குறு வெயர்ப்பு—சற்றே உண்டாகும் வியர்வை; கண் அடுக்கின்ற – விழிகளில் பொருந்துகின்ற; முத்துமாலை— நித்திலச்சரம் போன்ற கண்ணீர்த்துளிகள்; ஒன்னார் திரள் – பகைவர்களின் கூட்டம்; படுக்கின்ற – தோல்வியுறச் செய்கின்ற;வேல் செழியன்—வேல் படையை உடைய செழியன், இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை;மடுக்கின்ற—(தீவினையைத்) துய்க்கின்ற

மீண்டு வருங்காலைப் பாகனொடு சொல்லல்

கரம்கொண்ட முட்கசை இட்டுக்
கறங்குஎனக் கால்விடுமாக்
குரம்கொண்டு எதிர்செலத் தேரைக்
கடவுநீ கூடலரைத்
திரம்கொண்ட பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
உரம்கொண் டிடும்மின்னின் கண்ணீர்விண்
நீரின் ஒழுகும்முன்னே. 58

வனாகிய; பாவிக்கு—தீவினையேனாகிய எனக்கு; ஆவியின்—(இறந்தார் போன்றவர்களின்) தூல வடிவமற்ற ஆவியைப் போல.

மடுக்கின்ற பாவிக்கு நீறும், கையாறும், உயிர்ப்பும், வெயர்ப்பும், கண் முத்துமாலையும் காட்டி ஆவியின் வந்து வந்தே எதிர் தோன்றும் என்பது பொருண் முடிபு.

தலைவி பிரிவுத் துன்பத்தால் துயரமுற்றுள்ள நிலையைத் தலைவன் உருவெளித் தோற்றமாகக் கண்டு அத் துன்பம் அவளுக்கு நேரத் தான் காரணமாதல் பற்றியும் வருந்துகிறான்; எனவேதான் தன்னைப் பாவி என நொந்து கொள்கிறான்.

58. **மீண்டு வருங்காலைப் பாகனொடு சொல்லல் :** திருமணத்திற்கு வேண்டிய பொருளீட்டிய தலைவன் திரும்பி வரும் போது தேரை வேகமாகச் செலுத்துமாறு தேரோட்டியிடம் கூறுதல்.

கரம் கொண்ட—கையில் பற்றிய; முட்கசை—கூர்மையான முள் பொருந்திய சவுக்கு; கறங்கு—காற்றாடி; கால் விடுமா—வேகமாகச் செல்கின்ற குதிரை, கால் விடுதல்—வேகமாகச் செல்லல், ஒரு சொல் நீர்மைத்து, விடுமா—வினைத்தொகை; குரம்—காற்குளம்பு; எதிர்செல—(காற்றை) எதிர்த்துக் கொண்டு செல்லும்படி; கடவு—செலுத்து; கூடலர்—பகைவர்; கூடல்ரை என்புழி இரண்டாம் வேற்றுமை [illegible] ஆறன் பொருளில் வந்தது. பகைவர்களின் வலிமையை அழித்து [illegible]ழிக்கத் தன் வலிமை

தலைவன் நினைந்தமை செப்பல்

மறந்துஅலம் எய்தவும் ஆகும்கொல்
    மேகம்அவ் வாரிதனைத்
துறந்துஅலை யாது மலைமேவி
    னும்தொலை யாதஒன்னார்ப்
பறந்தலை வெல்செழி யன்தாகந்
    தீர்த்தவன் பாலைவெற்பில்
சிறந்துஅலை கூந்தல் இருள்மதி
    ஆனனச் செவ்வியதே. 59

மிகுதலின் பகைவர்களின் வலிமையைக் கவர்ந்து கொண்டதாகக் கூறினார்; திரம் கொண்ட—வலிமையைக் கவர்ந்து கொண்ட; உரம் கொண்டிடும்—திண்மையான கற்புடையவளாகிய; மின்—மின்னலைப் போன்ற பெண், இங்குத் தலைவி, உவம ஆகுபெயர்; விண் நீரின்—மழையைப் போல.

(பாக!) மின்னின் கண்ணீர் ஒழுகும் முன்னே நீ கசை இட்டுக் கால்விடுமா குரம்கொண்டு கறங்கு என எதிர் செலத் தேரைக் கடவு என்பது பொருண் முடிபு.

59. **தலைவன் நினைந்தமை செப்பல் :** திருமணத்திற்கு வேண்டிய பொருளீட்டிக் கொண்டு திரும்பிய தலைவன் திரும்பி வந்தபின், தான் தலைவியைப் பிரிந்து சென்று இருந்த போது அவளை மறவாதிருந்ததைப் பாங்கியொடு சொல்லல்.

மேகம் அவ்வாரிதனைத் துறந்து அலையாது மலை மேவினும், மதி ஆனனச் செவ்வி அது மறந்தே அலம் எய்தவும் ஆகுங்கொல் என்பது பொருண் முடிபு.

அலம் எய்தல்-துன்புறுத்தல்;வாரி—கடல்; அலையாது-(வானத்தில்) திரியாமல்; கடலிற் படிந்து நீருண்டு வானத்தில் சஞ்சரித்து மலையின் மீது வந்து மழை பொழிந்து விட்டு மீண்டும் கடலுக்கே செல்லுதல் மேகங்களின் இயல்பு; இவ்வியல்பை நீத்துவிட்டு மேகங்கள் அசைவற்று மலைகளின் மேலேயே நிலையாகத் தங்கிவிட்டாலும் **தன்னால் தலைவியை மறக்க இயலாது என்கிறான்;**

பாங்கி வெறி விலக்கல்

வயம்காட்ட நோய்தணிவு (எய்துமோ)
எய்தினும் வாகடநூல்
நயம்காட்டு மாறுஅன்றிக் கொள்வதுஉண்
டோநண்ண லார்உளத்தில்
பயம்காட் டியசெழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
அயம்காட்டி என்னை மறப்புஉன்னும்
கேண்மைஇது ஆவதுஅன்றே **60**

தொலையாத ஒன்னார்—தீராத பகைமையை உடையவர்கள்; பறந்தலை—போர்க்களம்; வெல்செழியன்—வினைத்தொகை; சிறந்து அலைகூந்தல்இருள் ஒரு தொடர்; சிறப்புடன் அலைகின்ற கூந்தலாகிய இருள், அலைகூந்தல்—வினைத்தொகை, கூந்தல் இருள்—உருவகம்; மதி ஆனனம்—திங்களைப் போன்ற முகம், உவமைத்தொகை; செவ்வி—எழில்; அது—பகுதிப் பொருள் விகுதி; அதே என்பதிலுள்ள ஏகாரம் மறந்து என்பதனோடு கூட்டப்பட்டது.

செய்யுளின் ஈற்றிலுள்ள ஆனனச் செவ்வியதேஎன்னும் தொடரைத் தொடக்கத்திலுள்ள மறந்து அலம் எய்தவும் ஆகும்கொல் என்பதுடன் இயைத்துப் பொருள்கோடலால் இது பூட்டுவில் பொருள்கோள்.

60. **பாங்கி வெறி விலக்கல் :** செவிலி வெறியாட்டாளனை அழைத்துத் தலைவிக்கு நோய் தோன்றிய காரணத்தையும் அதனை நீக்கும் வழியையும் சொல்ல வேண்டுமென்று கேட்டு ஆட்டைப் பலி கொடுக்க முயலுங்கால் தோழி அச்செயலை விலக்கல்.

வயம் காட்ட—(ஒரு மருத்துவனின் மருத்துவ நூற்புலமையால் எய்தப்பட்ட) வெற்றியை வெளிப்படுத்திய அளவிலே; வாகடநூல்—மருத்துவ நூல்; ஒரு மருத்துவனின் வாகடப்புலமையைக் கண்டு நோய் தீர்ந்து விடாது; ஒருக்கால் தீர்ந்ததாகக் காணப்பட்டாலும் அதை அவருடைய சிறப்பு என்று கூறிக்கொள்ளலாமேயன்றி நோய் தீர்க்கும் பொதுமுறையாகக் கொள்ள இயலாது. **நண்ணலார் — பகைவர்; அயம் — ஆடு; காட்டி — இறை**

தோழி பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்

கோட்டுஅலர் தந்தனர் நீர்அலர்
நின்மகள் கொய்யும்முன்னே
தோட்டுஅலர்ந்து ஆழும்என் றோநட்பி
னோதுன்ன லார்முடிமேல்
தீட்டுஅலன் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
வாட்டுஅலர் நேர்ஒளி யாம்விளை
யாடு மலர்ப்பொழிற்கே. 61

வனுக்குக் காண்டித்து; என்னை – என்ன பயன்; இது மறப்பு என்னும் கேண்மை ஆவது அன்று என இயையும்; இது – தலைவி கொண்ட நோய்க்குக் காரணம் ஆகிய காதல்; கேண்மை–(தலைவன் தலைவியின்) நட்பு.

தலைவன் தலைவியரிடையே தோன்றிய நட்பு மறக்கும் தன்மைத்தன்று; மறக்க இயலாததால் பிரிவு துயரத்தைத் தருகிறது; அத்துயரத்தின் விளைவைத் தவிரத் தலைவிக்கு வேறு நோய் இல்லை; எனவே இல்லாத நோயைப் போக்கு வதற்காக ஆட்டைப் பலியிடுதலால் பயனில்லை என்பது கருத்து. மருத்துவனின் வெற்றியைக் கேட்ட அளவில் நோய் நீங்காததைப் போல வெறியாட்டாளனின் சடங்குச் சிறப்புகளாலும் தலைவியின் பிரிவுத்துயர் நீங்காது என்றவாறு. நோய்க்குரிய மருந்து கொடுக்கப்படுவதைப் போலத் தலைவியைத் தலைவனொடு கூட்டுதலே துன்ப நீக்கத்திற்கான சரியான செயலாகும் எனத் தோழி உண்மையைக் குறிப்பாகப் புலப்படுத்துகிறாள்.

61. **தோழி பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்:** *ஒரு தலைவன் மலர் பறித்துக் கொடுத்துத் தலைவியின்பால் நட்புப்பூண்டு அவளுக்குக் காதலன் ஆனான் எனத் தோழி கூறுதல்.*

தலைவியின் களவொழுக்கத்தை வெளிப்படுத்துதல் அறத்தொடு நிற்றல் எனப்படும்.

யாம் விளையாடு மலர்ப்பொழிற்கே நின்மகள் நீர் அலர் கொய்யும் முன்னே (ஒரு தலைவர்) தோட்டு

தலைவன் தலைவியின் அச்சம் அகற்றல்

ஏஒன்றில் வேடப் படைஇருள்
ஆரும் இரவினன்னக்
காஒன்று அலர்க்குழ லாய்பொரு
வேன்பல காவியநூல்
பாஒன் றியசெழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
பூவொன் றியஅடி யாய்வரு
வாய்எந்தன் புரத்தினுக்கே. 62

அலர்ந்து ஆழும் என்றோ நட்பினோ கோட்டு அலர் தந்தனர் என்பது பொருண் முடிபு.

கோட்டு அலர்—மரக்கிளைகளில் மலரும் பூக்கள்; நீர் அலர்—நீர்நிலைகளில் உண்டாகும் பூக்கள்; தோட்டு அலர்ந்து—புற இதழ்கள் முற்றிலுமாக விரிந்து; ஆழும் என்றோ—(இச்செய்யுளில்) கிளைகளில் இருந்து நிலத்தில் விழுந்துவிடும் எனக்கருதியோ; நட்பினோ — (தலைவி மெய் வருத்தப்பட வேண்டாமென நினைத்து) நட்பின் காரணமாகவோ; துன்னலார்—பகைவர்; முடி—கிரீடம்; அலம்—படை; அலன்—படையை உடையவன், தீட்டு அலன்-தீட்டப்படுகின்ற படைக்கலன்களை உடையவன்; வாட்டு அலர் — (இப்போது எம்மை) வருத்துகின்ற பழிமொழி; ஒளி — வெய்யில்; அலர் எங்கும் பரவி இருப்பதைப் போன்று ஒளி பரவியிருந்த பொழிலில் என்று கூறியதால் தலைவன் தலைவியை முதன்முதலில் சந்தித்தது பகற்பொழுதில் என எடுத்துக்காட்டப் பட்டது; பொழிற்கு — சோலையினிடத்தே, கு உருபு ஏழாம் வேற்றுமை இடப்பொருளில் வந்தது.

62. **தலைவன் தலைவியின் அச்சம் அகற்றல்:** தலைவன் தலைவியை உடன்கொண்டு தன் ஊர்க்குச் செல்லத் தொடங்கியபோது இடைவழியில் ஆறலை கள்வரால் ஏதம் வரும் என அஞ்சிய தலைவியின் அச்சத்தைப் போக்குதல்.

இத்துறை இக்கோவையாசிரியர் படைத்துக்கொண்ட ஒன்றாகும். வேறு ஐந்திணைக் கோவைகளுள் இது காணப்படவில்லை.

தலைவன் தன்பதி அடைந்தமை சாற்றல்

கருமணி வண்ணன் அணிஉத்த
 ரீயக் கலைநிகராய்ப்
பெருமணி வேய்முத்து எடுத்துஎறிந்
 தேவந்த பேர்அலையின்
பருமணி யார்செழி யன்தாகந்
 தீர்த்தவன் பாலைவெற்பில்
திருமணி முத்த நதிகா
 ணுதிமொழித் தெள்ளமுதே. 63

ஏ—அம்பு; வேடப்படை—வேடர்களின் சேனை, இங்கு ஆறலை கள்வரைக் குறித்தது; வேடப்படை இருளுக்கும், அம்பு கதிரவனுக்கும் உவமை; ஒரு சூரியன் பல இடங்களிலும் பரவியுள்ள இருளைஒழிப்பதுபோல் என்னுடைய ஓர் அம்பு பல ஆறலை கள்வர்களையும் அழித்துவிடும் என்ற உவமை நயமிக்கது; கா ஒன்று அலர்—சோலையில் உள்ள மலர்கள்; அலர்குழாய்—மலர்கள் அணியப்பெற்ற கூந்தலை உடையவளே, இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை; பொருவேன்—போரிடுவேன்; பா—பாக்கள், இன ஒருமை; ஒன்றிய—(நன்கு பயின்றதால் தன் அறிவில்) பதியப்பெற்ற; பூ ஒன்றிய—தாமரை மலரை நிகர்த்த, 'பூவெனப் படுவது பொறி வாழ் பூவே' (நால்வர் நான்மணிமாலை) ஆதலின் இவ்வாறு உரைக்கப்பட்டது; சுரத்தினைக் கடந்து செல்வதில் தலைவிக்கு உள்ள துன்பத்தை அறிவான் என்பதால் பூ ஒன்றிய அடியாய் என்ற அடை புணர்க்கப்பட்டது; புரம்—ஊர்.

குழலாய்! அடியாய்! வேடப்படை இருள் ஆரும் இரவி என்ன ஏ ஒன்றில் பொருவேன்; (அதனால் அச்சமின்றி) எந்தன் புரத்தினுக்கே வருவாய் என்பது பொருண்முடிபு.

63. **தலைவன் தன்பதி அடைந்தமை சாற்றல் :** தலைவியை உடன்போக்காகத் தன் ஊர்க்கு அழைத்துச் சென்ற தலைவன் தன் ஊர்க்கு வந்து சேர்ந்துவிட்டமையை அவளுக்கு உரைத்தல்.

கருமணிவண்ணன் — கரிய மாணிக்கத்தைப் போன்ற நிறத்தினராகிய திருமால்; உத்தரீயக் கலை — மேலாடை

செவிலி தெய்வம் வாழ்த்தல்

தருவன் பலிஅந் தணர்போல்
அணங்குஎனத் தாழ்வன்இருள்
பொருவன் குடிகைஇ டாதுஅளிப்
பேன்பொருந் தாரைவென்ற
திருவன் நிகர்செழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
மருவ மடக்கொடி யேதகை
வாய்என் மடந்தையையே. 64

யாகிய துகில், இருபெயரொட்டுப் பண்புத் தொகை, கலை—பொதுப்பெயர், உத்தரீயம்—சிறப்புப்பெயர்; பெரு மணி—பெரியனவாகிய இரத்தினங்களையும்; வேய்முத்து—மூங்கிலில் தோன்றிய முத்துகளையும், ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை, முத்து பிறக்கும் இடங்கள் இருபது எனல் இலக்கியமரபு, அவற்றுள் மூங்கில் ஒன்று; பேரலையின்—பேரலைகளை உடைய, இன் உருபு இரண்டாம் வேற்றுமைப்பொருளில்வந்தது; பரும் — பெரியதும்; அணிஆர்—அழகு பொருந்தியதுமாகிய, பரும் வெற்பு, அணியார் வெற்பு, செழியனாகிய தாகந் தீர்த்தவன் வெற்பு என இயையும்; திருமணிமுத்த நதி — மணிமுத்தாறு, புனிதத்தைக் காட்டும் திரு என்னும் அடைமொழி பெற்றது; மொழித்தெள்ளமுதே காணுதி என இயையும்; மொழித்தெள் அமுது—தெள்ளிய அமுதத் தைப் போன்ற மொழிகளை உடையவள், முன்பின்னாகத் தொக்க உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

மொழித்தெள்ளமுதே! கலைநிகராய் முத்து எடுத்து எறிந்தே வந்த பேரலையின் திருமணிமுத்தநதி காணுதி என்பது பொருண் முடிபு.

64. **செவிலி தெய்வம் வாழ்த்தல் :** தலைவி உடன்போக்காகத் தலைவனோடு சென்றதை அறிந்த செவிலித்தாய் அவள் செலவொழிந்து மீளவேண்டும் எனத் தெய்வத்தை வாழ்த்தி வேண்டிக்கொள்ளல்.

அந்தணர் போல் பலி தருவன் என இயையும்; அணங்கு—அச்சத்தைத் தரும் பெண் தெய்வம்; இருள்

நற்றாய் பாங்கியொடு புலம்பல்

கல்லும் குழியும் எறும்புஎய்தும்
ஆற்றால் கட்டுரைபோல்
சொல்உந்த மான்இனம் நீங்கிய
தோஇந்தத் தொல்புவியில்
செல்உந்து பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
புல்லும் சுரத்துஅம் புயத்தாள்
உறமகள் போயினளே. 65

பொரு—இருட்டைப் போன்ற; வன்—வலிய; குடிஞை—கூகை, பேராந்தை; இடாது அளிப்பேன்-குடியேறாதவாறு (உன் திருக்கோயிலில்) திருவிளக்கிட்டுப் பேணுவேன்; பொருந்தார்—பகைவர்; திருவன்—திருமகளை (மனைவியாக) உடைய திருமால்; மடக்கொடியே—மடப்பத்தை உடையவளும் கொடி போன்றவளுமாகிய தெய்வமே; என் மடந்தையை மருவத் தகைவாய் என இயையும்; மருவ—என்பால் வந்து அடையும்படி; தகைவாய் — (உடன் போக்கின் வழியில் அவள் செலவைத்) தடுப்பாய். நீ தடுத்தால் நான் தருவன், தாழ்வன், அளிப்பேன் என்பது கருத்து.

65. நற்றாய் பாங்கியொடு புலம்பல் : தன்மகள் தலைவனுடன் அவன் ஊருக்குச் சென்றுவிட்டதை அறிந்த அன்னை தோழியிடம் வருந்திக் கூறுதல்.

எறும்பு எய்துமாற்றால் கல்லும் குழியும்—எறும்பூரக் கல்லும் தேயும் என்பது பழமொழி; கட்டுரை—பழமொழி; சொல் (தலைவன் கூறிய ஆசை) வார்த்தைகள்; உந்த—(தலைவியின் உள்ளத்தை ஊக்குவித்துச்) செலுத்த; மான்—மான் போன்றவளாகிய தலைவி, உவம ஆகுபெயர்; இனம் என்றது (தலைவிக்கு) உற்றார் ஆகிய பெற்றோர், செவிலி, தோழி, உடன் பிறந்தார் முதலியோரை; தொல் புவி—பழமையான நில உலகம்; செல் உந்து—மேகங்கள் திரிகின்ற; அந்த அளவு வெற்பு உயர்ந்து விளங்குகிறது என்பது கருத்து; செல் உந்து வெற்பு, செழியன் வெற்பு என இயையும், வெற்பில் புல்லும் சுரத்து—மலையிற் பொருந்திய கடத்தற்கரிய வழியில்; அம்புயத் தாள்—

ஆற்றிடை முக்கோற்பகவரை வினாதல்

ஐங்கோல் மதிக்குடை தாழச்செங்
கோல்குடை ஆகக்கையில்
வெங்கோல் பொருதமுக் கோல்கடை
இல்கடல் மேய்ந்தபுயல்
பைங்கோலம் ஆனசெழி யன்தாகந்
தீர்த்தவன் பாலைவெற்பில்
எம்கோல மான்ஒரு காளைபின்
போனது இசைத்திடுமே. 66

தாமரை போன்ற பாதங்கள், உவமைத் தொகை; மகள் அம்புயத் தாள் உறச் சுரத்துப் போயினளே என இயையும்.

சுரத்துப் போயினள் என்ற அளவில் காலால் நடந்து சென்றாள் என்பது பெறப்படுமாயினும் தலைவியினுடைய அடிகளின் மென்மை நோக்கி அம்புயத் தாள் உறப் போயினள் எனவேண்டா கூறினார். ''அவ்வழிவைக் கண்ணால் பார்க்க முடியவில்லை'' என்பது போன்ற வழக்கு இது.

மகள் போயினளே! கட்டுரை போல் சொல் உந்த மான் இனம் நீங்கியதோ என்பது பொருண் முடிபு.

66. **ஆற்றிடை முக்கோற் பகவரை வினாதல் :** தலைவி தலைவனுடன் உடன்போக்காகச் சென்று விட்டாள்; செவிலி அவளைத் தேடிக்கொண்டு செல்லும்போது வழியில் எதிர்ப்பட்ட திரிதண்ட சந்யாசிகளை 'என் மகளைக் கண்டீரோ?' என வினவுதல்.

ஐங்கோல் — (மன்மதனின்) ஐங்கணைகளும்; மதிக்குடை—(காமனின்) சந்திரனாகிய வெண்கொற்றக் குடையும்; தாழ — தம் பெருமையை இழக்குமாறு; குடை செங்கோல் ஆக — (தாங்கள் பிடித்துள்ள தாழங்) குடை செங்கோலாகவும்; கையில் — கரங்களில்; வெங்கோல் பொருத—(இயமனுடைய) தண்டாயுதத்துடன் போரிட்டு வென்ற, முனிவர்கள் மரணபயம் நீங்கியவர்கள் ஆதலின் அவர்களின் கையிலுள்ள முக்கோலைக் காலனின் தண்டினை வென்ற முக்கோல் என்றார். முக்கோல்—

முக்கோற் பகவர் கண்டமை கூறல்

வனம்நீத்த மானும் இரலையும்
போல்உங்கள் மாதொடுஅன்பால்
இனம்நீத்து ஒருவன்இப் பால்வரக்
கண்டனம்; யாவருக்கும்

மூன்று தண்டுகளை ஏந்திய முனிவர்களே; ஆகுபெயராக அதனைத் தாங்கிய முனிவரை உணர்த்திற்று, அண்மை விளி இயல்பாயிற்று; கடை இல் கடல் -- எல்லையற்ற சமுத்திரம்; மேய்ந்த – (கடலின்) நீரைப்பருகிய; புயல்– மேகத்தின்;பைம்கோலம் ஆன–பசிய வடிவத்தை உடைய, திருமாலைப் போன்ற என்பது குறிப்பு; எம் கோல மான்– எம்முடைய அழகிய மான் போன்ற தலைவி, கோலமான்– அடையடுத்த உவமவாகுபெயர்; காளை – ஏற்றைப் போன்ற தலைவன்,உவம ஆகுபெயர். முக்கோற் பகவர் காமத்தை வென்றவர் ஆதலின் அவர் குடையும் கோலும் மாரனின் மலர்க்கணை களையும் மதிக்குடையையும் தாழ்த்தி விட்டன எனப்பட்டது.

முக்கோல்! எம் கோலமான் வெற்பில் ஒரு காளைபின் போனது இசைத்திடும் என்பது பொருண் முடிபு.

67. முக்கோற் பகவர் கண்டமை கூறல்: 'உடன்போக்கிற் சென்ற எம் மகளைக் கண்டீரோ' எனக்கேட்ட செவிலிக்குத் திரிதண்ட சந்யாசிகள் உன் மகளைத் தன் காதலனுடன் செல்லக் கண்டோம், எனப் பதிலுரைத்தல்.

வனம் நீத்த–காட்டை விட்டு நீங்கிய; இரலை–ஆண் மான்; இனம் நீத்து–தம் சுற்றத்தாரைத் துறந்து; இனம் நீத்த தலைவிக்கு வனம் நீத்த மான் உவமையாயிற்று. ஒருவன்-ஒரு தலைவன், ஒப்பற்ற ஓர் ஆடவன் எனினுமாம்; தனம்–செல்வம், செல்வத்திற்கு அதிதேவதையாகிய திருமகளை ஆகுபெயராக உணர்த்திற்று. அரி–திருமால்; அணி – (ஒருவரோடொருவர் நன்றாகப்) பொருந்தி, அண்ணி என்பதன் இடைக்குறை.

சினம்நீத்த பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
தனம்நீத்திடாத அரிபோல்
அணிஇத் தடம்தனிலே, 67

தலைவனின் புறத்தொழுக்கம் கண்ட ஆன்றோர் அறிவுரை

சிலம்புளன் பறைகண் பரிக்கோல்
அவேசிச் சிறுநடையால்
நலம்பொற் பிடிகொங்கை வேழத்தி
னால்தமிழ் நாவலவர்

தலைவன் தலைவி ஆகிய இருவரையும் திருமாலுக்கும் திருமகளுக்கும் இணையாகக் கூறியதாலும், அவர்கள் அன்பால் இணைந்தவர்கள் என்றதாலும், முக்கோற் பகவர் அவர்களின் செயலைத் தவறாகக் கருதவில்லை என்பதும் வனம் நீத்த மானும் இரலையும் போல் என்றதால் அவர்களின் உடன்போக்கு இயற்கைக்கு ஒத்ததே என்பதும் குறிப்பாற் பெறப்பட்டன.

ஒருவன் உங்கள் மாதொடு வனம் நீத்த மானும் இரலையும் போல் இனம்நீத்து, தனம் நீத்திடாத அரி போல் அன்பால் அணி, வெற்பில் இத்தடம் தனியே வரக் கண்டனம் என்பது பொருண்முடிபு. யாம்—தோன்றா எழுவாய்.

68. **தலைவனின் புறத்தொழுக்கம் கண்ட ஆன்றோர் அறிவுரை :** தலைவன் தான் காதலித்துத் திருமணம் செய்துகொண்ட தலைவியுடன் இல்லறத்தில் இருக்கும் பொழுது அவனுக்குப் பொருட்பெண்டிரின் தொடர்பு ஏற்பட்டு விடுகிறது. இத்தகைய புறத்தொழுக்கத்தை அறிந்த சான்றோர்கள் தலைவனுக்குப் பரத்தையர்களின் கூட்டுறவை நீக்கிவிடுக என அறிவுரை கூறல்.

இஃது இக்கோவையாசிரியர் கண்ட புதுத்துறை; ஏனைய ஐந்திணைக் கோவைகளில் ''காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு ஏது இது ஆம் அவ்விறைவிக்கு என்றல்'' என்ற துறை இடம் பெற்றுள்ளது; ஆனால்

பலன்பெற்ற சொற்செழி யன்தாக்
தீர்த்தவன் பாலைவெற்பில்
குலம்பெற்ற மாவுத்த சேரல்மின்
னார்அல்குல் கொப்பத்திலே. 68

தலைவனுக்குச் சான்றோர் அறிவுரை கூறும் நிலையை இக்கோவையில்தான் காண முடிகிறது.

சிலம்பு என் பறை—காற்சிலம்பாகிய கொட்டு; கண் பரிக்கோல்—விழியாகிய யானையைக் குத்தும் கோல்; (அ—அந்த, சேய்மைச்சுட்டு) வேசி—விலை மகளிர் வசிக்கும் தெரு; சிறுநடை—குறுகிய நடைபாதை, நடையால் என்பதிலுள்ள மூன்றன் உருபைப் பறை, பரிக்கோல் ஆகிய இரண்டுடனும் கூட்டுக; நல், அம், பொன் என்னும் மூன்று சொற்களும் அழகை உணர்த்திநின்று பிடிக்கு அடைகளாயின, பரத்தையரின் பேரெழிலைக் காட்ட வந்த ஒருபொருட்பன்மொழி, 'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே' (பாரதியார் பாடல்) என்புழிப் போல; பிடி—பெண் யானை, இங்குப் பரத்தையைக் குறித்தது; கொங்கை வேழம்--நகிலாகிய யானை, உருவகம்; தமிழ் நாவலர் சொல் பலன் பெற்ற செழியன் என இயையும்; புலவர் சொல்லின் பயன் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப் பொருள்கள் நான்குமாதலின் செழியன் இந்நான்கையும் பெற்றவன் என்பது கருத்து; குலம் பெற்ற—நற்குடியில் தோன்றிய; மாவுத்த—இச் சொல் பிரிமொழிச் சிலேடையாக இருபொருள் பயந்து நின்றது, 1. மாவுத்த—யானைப்பாகனே, 2. மாஉத்தன் திருமகளைப் போன்ற தலைவிக்கு ஏற்புடையதலைவனே, யுக்தன் என்ற வடசொல் உத்தன் என வந்தது; மின்னார்—ஈண்டுப் பரத்தையரைக் குறித்தது; சேரல்—எதிர்மறை ஏவல்; கொப்பம்—யானையை வீழ்த்தும் படுகுழி; அல்குல் கொப்பம்-உருவகம்.

மாவுத்த! பறையால் பரிக்கோலால் சிறுநடையால் வேழத்தினால் கொப்பத்தில் சேரல் என்பது பொருள் முடிபு.

காட்டு யானையைப் பிடிப்பவர்கள் யானை விழுமளவு ஒரு பெரிய குழியை வெட்டி அதனை மூங்கில் தட்டியால்

இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தல்

பரிந்துஆசை முத்தம்உ றாதுஅள்ளி
அள்ளிப் பலவளமும்
சொரிந்தால்என்? நீர்நசை நீங்கா
தயிலத்தின்—தூண்டுவிற்கோல்

மூடிப் பொய்த்தரைபோல் காட்சி தருமாறு செய்வர். பிறகு பறை ஒலித்தும், அம்புகள் எய்தும் யானைகளைத் துரத்துவர். அவை விருப்பம் போல் ஓட இயலாதவாறும் இப்படுகுழியை நோக்கியே வருமாறும் முன்பே மற்ற வழிகள் அடைக்கப்பட்டிருக்கும். அவ்வழி ஓரளவு குறுகியதாகவே இருக்கும். அந்த சிறுவழியில் அஞ்சி ஓடி வரும் யானை பொய்த்தரையில் கால் வைத்துத் தட்டி முறிந்து விழப் பள்ளத்தில் சிக்கிவிடும். பிறகு பழக்கப் பட்ட யானைகளின் துணையுடன் வீழ்ந்த யானையை வசப்படுத்துவர். யானை பிடிப்பவர்களின் இச்செயலாகப் பரத்தையர்களின் செயல் உருவகிக்கப்பட்டுள்ளது.

சிலம்பொலி—பறை முழக்கு; கண் வீச்சு-அம்பெய்தல் (பரிக்கோல் பல்வகைப் படைக்கலங்களுக்கு உபலக்கணம்); வேசியர் தெரு-யானை ஓடிவரும் சிறிய பாதை; அல்குல்-படுகுழி; தலைவனால் விரும்பப்பட்ட விலைமகளின் நகில் முன்பே பழக்கப்பட்ட யானை; மாவுத்தனாகிய நீயே கொப்பத்தில் விழுதல் தகாது என்றது நயம்; முற்றுருவகம்.

69. **இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தல்:** தலைவனுக்குப் பரத்தையர்பால் ஏற்பட்ட தொடர்பைப் பாங்கியிடம் தலைவி கூறுதல்.

(தலைவர்) பொன்நீற்றுப் பொன்பெறும் பேர் என்னப் பொற்சேரியில் பிரிந்தார்; (அவர்தரும்) ஆசை முத்தம் பரிந்து உறாது (வேறு) பல வளமும் அள்ளிச் சொரிந்தால் என் (பயன்)? தயிலத்தின் நீர் நசை நீங்கா என இயைந்து பொருள் தரும்.

தெரிந்தான்நம் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
பிரிந்தீர்பொற் சேரியில் பொன்நீற்றுப்
பொன்பெறும் பேர்என்னவே. 69

தாமக்குழலியைப் பாங்கி தணித்தல்

ஈற்றுஅலம் மூழ்க எடுத்துஅகட்
டுள்வைத் திடும்புவிஆம்
மாற்றவள் தோள்உறத் தான்கீழ்
உறைந்தும்பொன் வாரிசக்கண்

பரிந்து — ஆவலுற்று; பல வளம் — உணவு, உடை, அணிகலன் முதலிய வேறு பல செல்வங்கள்; நீர் நசை— தண்ணீர் வேட்கை; தயிலத்தின்—எண்ணெயினால்; நான் தலைவனின் அன்பை நாடியுள்ளேன். இவ்வேட்கை அவனன்பைத் தவிர வேறு செல்வங்களால் தணியாது என்பது உவமையால் பெற்ற பொருள், எடுத்துக் காட்டுவமையணி; கோல் தூண்டு வில் என இயையும். அம்புகளைச் செலுத்துகின்ற வில்; வில் தெரிந்தவன்— விற்போர் முறைகள் (பலவும் நன்கு) அறிந்தவன். இனிச் சொற்றொடரை உள்ளவாறே வைத்துத் தூண்டப் படுவதும் வில்லுக்கு ஏற்றதுமாகிய கோலின் தன்மைகளை அறிந்தவன் என உரைப்பினும் அமையும்; பொற்சேரி— பொருளீட்டலையே குறிக்கோளாகக் கொண்டவர்கள் வாழும் சேரி, பரத்தையர் சேரி, வாழ்வாரின் இயல்பு இடத்தின் மேல் ஏற்பட்டது; பொன் நீற்றுப் பொன் பெறும் பேர்—இரசவாதிகள் நாகம், இரும்பு, செம்பு போன்ற மலிவான உலோகங்களை நீறவைத்துத் தங்கமாக மாற்ற முயல்வர், இதுவே ஊதியம் மிக்கது; தன்னிடம் உள்ள பொன்னை நீற்று மீண்டும் பொன்னாக்க முயலல் பயனற்றது ஆகும்; தலைவன் தான் ஏற்கெனவே பெற்றுள்ள தங்கம் போன்றவளாகிய தலைவியைப் பிரிவுத் துயரத்தால் உருகவைத்து (நீற்று) வேறொரு பெண்ணிடம் இன்பம்பெற விழைதலுக்கு உவமை ஆயிற்று.

70. **தாமக் குழலியைப் பாங்கி தணித்தல்:** *தலைவனின் புறத் தொழுக்கத்தைத் தலைவி வாயிலாக அறிந்த தோழி* **அவளை ஆற்றுவித்தல்.**

சேற்றலை பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
போற்றலர் போற்றப் பொருள்தாங்கும்;
நீயும் பொறுத்தருளே. 70

ஈற்று—யுக முடிவாகிய ஊழிக்காலத்தே; அலம்—பெரு வெள்ளத்துள்; அகட்டுள்—வயற்றுள்; புவி ஆம் மாற்றவள்—நிலமடந்தை ஆகிய சக்களத்தி; தோள் உற — திருமால் உலகைத் தோள்களால் தாங்குவதாகக் கூறல் கவிமரபு; தான்—(இங்குத்) திருமகள்; கீழ் உறைந்தும்—(தோளுக்குக்) கீழ் உள்ள உறுப்பாகிய மார்பினிடத்தே இருந்து கொண்டும்; பொன் — இலக்குமி; வாரிசக்கண்—தாமரையினிடத்து; சேறு அலை — சகதி படிந்து அசைகின்ற, சேறலைஎன இருத்தற்பாலாது எதுகை நோக்கி சேற்றலை என விரிந்தது; போற்றலர் போற்ற — பகைவர்களும் புகழும்படி, இழிவுசிறப்பும்மை தொக்கது; பொருள் — ஈண்டுப் பொருட் செல்வத்தைச் சுட்டி நின்றது; பொருள் தாங்குதலாவது எல்லா வகையான வளங்களையும் உண்டாக்கி அவை அழியாமல் பாதுகாத்தல், இது திருமகளின் தொழில்; பொறுத்தருள்—(தலைவனின் பரத்தைமையைப்) பொருட்படுத்தாமல் மன்னித்து அவனை நேசிப்பாயாக; தலைவி தலைவன்மாட்டு மாறா அன்பு செலுத்தலே அருள் ஆதலின் இவ்வாறு உரைக்கப்பட்டது.

வாரிசக்கண் சேறு அலை பாலைப் பதி — தூய்மையும் புனிதமும் நிறைந்த தாமரை மலர்களின்மீது சகதி படிந்துள்ளதைப் போல இன்பமான இல்வாழ்க்கையில் தலைவனின் பரத்தைமையாகிய மாசு சேர்ந்துள்ளது என்பது இறைச்சிப்பொருள். மருத நிலத்துள்ள நீர்நிலைகளில் எருமைகள் படிந்து கலக்குவதால் அங்கே மலர்ந்துள்ள தாமரைகளின் மேல் சேறு படிவதைப் போலப் பாணன் முதலியவர்களின் கூட்டுறவால் தலைவனுக்கு இம் மாசு சேர்ந்துள்ளது என்பது தோழியின் உட்கோள்; ''உன்னால் நேசிக்கப்படுபவன் இயல்பாகத் தாமரை போன்ற தூயன், இப்போது புறத்திலே இருந்து வந்த மாசு படிந்துள்ளது'' என்கிறாள்.

ஈற்று அலம் மூழ்க எடுத்து (திருமால் தன்) அகட்டுள் வைத்திடும் புவி ஆம் மாற்றவள் (திருமாலின்) தோள்

தலைவி செவ்வணி அணிந்து சேடியை விடுப்புழி அவ்வணி உழையர் கண்டு அழுங்கிக் கூறல்

**குலம்ஆன பெண்டிர்த் துணைமணம்
மேல்கவி கொண்டல்உறும்
நலம்ஆன ஊர்முற்றும் நாறும்கொ-
லோதமிழ் நாவலவர்**

உறப் பொன் தான் கீழ் உறைந்தும் போற்றலர் போற்றப் பொருள் தாங்கும்; (அது போல) நீயும் பொறுத்தருள் என்பது பொருண் முடிபு; எடுத்துக்காட்டுவமையணி.

''ஓலப் புனல்பொன்னி நல்நீர்
அரங்கர் உகம்திரியும்
காலத் தினில்கொள்ளை அண்டம்எல்
லாம்உண்டு காமர்பசுங்
கோலக் குழவி உருவாய்
அகண்டமும் கோத்தவெள்ளத்து
ஆலத்து இலையின் புடைக்கே
துயில்வர் அகம்மகிழ்ந்தே''

(திருவரங்கத்துமாலை 16)

என்றதால் ஊழிமுடிவில் திருமால் உலகத்தைத் தன் வயற்றில் அடக்கிக்கொள்ளல் பெறப்படும்.

71. **தலைவி செவ்வணி அணிந்து சேடியை விடுப்புழி அவ்வணி உழையர் கண்டு அழுங்கிக் கூறல் :** தலைவன் பரத்தையர் சேரியில் தங்கியிருக்கும் போது தலைவி மாதப்பூப்பெய்து கிறாள். நீராடியபின் ஆறிரண்டு நாள்கள் தலைவன் தலைவியோடு இருத்தல் வேண்டும் என்னும் உலகியல்பற்றி அவனைத் தன் இல்லத்திற்கு வரவழைக்க விழைகிறாள். தான் பூப்பு நீராடியதை அவனுக்குக் குறிப்பாலுணர்த்தச் தன் சேடியைச் செவ்வாடையணிவித்துச் செந்நிறப் பூத் சூட்டிச் செஞ்சாந்து பூசித் தலைவன் கண்ணிற் படுமாறு அனுப்புகிறாள். இச்சேடியைக் கண்ட மற்ற பெண்கள் தலைவியின் நிலையைப் பார்த்து இரக்கப்பட்டுக் கூறுதல்.

இதனை அகப்பொருள் நூல் செவ்வணி அணிந்து சேடியை விடுத்தல் எனக் கூறும்.

குலம்ஆன பெண்டிர்—நல்ல குடிவழியில் தோன்றிய மகளிர்; துணைமணம்-தம் கணவரைப் புணர்தல்; மேல்கவி-

பலம்ஆன பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்நல்நாட்டு
இலம்ஆன பூஅலர் சேர்ப்பார்க்குச்
சேர்ந்ததை என்சொல்வதே. 71

உயரத்தே கவிந்துள்ள; கொண்டல் – மேகம்; மேல் கவி கொண்டல் உறும் நலமான ஊர் முற்றும் குலமான பெண்டிர்த் துணைமணம் நாறும் கொலோ என இயையும்; மணம் என்பதற்கேற்ப நாறும் என்றார்; துணை மணத்தை ஊர் முழுவதும் அறியுமோ என்பது கருத்து; பலம்–இங்கு ஆதரவாக உள்ள என்ற பொருளில் ஆட்சி; இலம் ஆன பூ– இல்லறத்தில் இருப்பவளும் மலர் போன்று மென்மையும் தூய்மையும் மிக்கவளான தலைவி, உருவகம்; அலர் சேர்ப்பார்க்கு–வீணே பழி கூறுபவர்களிள்நடுவே, நான்கன் உருபு ஏழாம் வேற்றுமைப்பொருளில் வந்தது;சேர்ந்ததை– வாழ நேர்ந்ததை; என் சொல்வதே–எப்படிச் சொல்வது, மிகப் பரிதாபத்திற்குரியது என்பது கருத்து.

அலர் சேர்ப்பார்க்குப் பூ சேர்ந்தது எனக் கூறியதும், இதனோடு தொடர்புடையதாக மணம் ஊர் முற்றும் நாறுமோ என அமைத்ததும் பாடலின் நயம்.

சேடியின் செவ்வணி ஒப்பனையால் தலைவியின் பிரிவும் கூட்டமும் ஊர் முழுவதற்கும் தெரிந்து விடுகிறது என விளக்க, மேல் கவி கொண்டல் உறும் ஊர் என்றார். மேலும் மேகங்கள் கவிழ்ந்தால் மழைத்துளி தூற்றப்படு வதைப் போல இக்காட்சியைக் கண்டவர் பழிதூற்றுவர் என்ற இரக்கமும் குறிப்பாகக் காட்டியவாறு.

ஒப்புமை :

''வேளாண் மரபு விளக்கிய
வாணன்மின் னார்கழல்சூழ்
தாளான் வளம்கெழு தஞ்சைஅன்
னீர்சங்கம் தந்தநல்நீர்த்
தோளா மணிஅன்ன தொல்குல
வோடையில் தோன்றியபூ
வாளா அலர்தொடுப் பார்க்குளங்ங
னேவந்து வாய்த்ததுவே''

(தஞ்சைவாணன் கோவை–382).

பாணனைப் பழித்தல்

**சுரைஓடு கொண்ட புலையா
இருமனத் தோகைதன்பால்
உரையோடு உளை;கடை வாசல்செல்—
லாய்;முத்தம் ஓங்குநதித்**

---

72. **பாணனைப் பழித்தல் :** *பரத்தையர் மாட்டு உறவு கொண்டு தலைவியைப் பிரிந்த தலைவன் தலைவியின் ஊடலைத் தணிக்கப் பாணன் ஒருவனைத் தூதாக அனுப்ப அப் பாணனை வீட்டிற்குள்ளேயே நுழைய விடாமல் தடுத்துத் தலைவி இழித்துரைத்தல்.*

இது தலைவி பாணனுக்கு வாயில் மறுத்தல் என்றும் கூறப்படும்.

சுரை ஓடு கொண்ட புலையா — பாணர்கள் சுரைப் பழத்தின் ஓட்டைக்கொண்டு தங்கள் இசைக் கருவியை உண்டாக்கிக். கொள்வர்; அவர்கள் சுரைப்பழத்தின் ஓட்டை நூலிழையால் தைப்பர் என்ற செய்தியைச், ''சுரையோட்டை மெல்ல இழையிடுவேன்'' எனவரும் திருவாரூர்க்கோவைப் (461) பாணன் கூற்றாலும் அறியலாம். இச்சுரை ஓடு திருப்பதிக் கோவையிலும் ''ஊணற் றிருகைச் சுரை ஓடுடன்புன லூரன்பின்போய் நாணற்ற எங்கையர்பால் இச்சை பாடி நடித்து உணவுஉண் பாணப் பயல்இங்கு வந்தது என்னோ'' (486) என இடம் பெற்று உள்ளது. இங்குச் சுரையோடு ஆகுபெயராக அதனால் செய்யப்பட்ட இசைக்கருவியை உணர்த்திற்று; பாணனைப் புலையன் என்னும் வழக்கு பிற்காலக் கோவை நூல்களுள் பரவலாகக் காணப்படுகின்றது.

*''கன்றுதின்னிப் புலையா கடக்களம்
இல்போக போகப் புறங்கடையே''*

(தஞ்சைவாணன் கோவை 393),

*''பாடு பெறுநர்முன் பாடு
புலைத்தொழிற் பாண்மகனே''*

(சிராமலைக் கோவை 410).

திரைஓடும் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
கரையோம் உளம்உங் கள்அருளும்
சேர்எங் கையரும்ஒத்தே. 72

''விடக்குதின் னிப்புலை யாபோக
வேறுஒரு வீடு அறிந்தே''

(திருவாவடுதுறைக்கோவை 413),

''புலைப்பாண் மகசேறியென் வாய்தல் விட்டே''

(சீகாழிக்கோவை 477),

''புலைத்தன்மை யாபோதும் போது
மடாசெல் புறத்துஇனிதே''

(திருப்பேரூர்க்கோவை 441).

இருமனத்தோகை—விலைமகள், இருமனப்பெண்டிர் என்புழி இருமனம் என்பதற்கு, ''ஒருவனோடு புணர்தலும் புணராமையும் ஒரு காலத்தே உடைய மனம்'' எனப் பரிமேலழகர் நயவுரை (திருக்குறள் 920) வகுப்பர். உரை யோடு உளை — அவளுடைய சொற்களுக்குக் கட்டுப்பட்டு உள்ளாய் என்பது கருத்து; முத்தம்—முத்துகள்; முத்தம் ஓங்கு நதி—மணி முத்தாறு என்னுமாம்; திரை—அலை; உங்கள் அருளும் சேர் எங்கையரும் ஒத்தே உளம் கரையோம் என இயையும்; பாணர்களாகிய நீங்களும் பரத்தையரும் ஒருவரின் செல்வத்தையும் செல்வாக்கையும் கொண்டுதான் அவரை விரும்புவீர்; நான் அப்படியன்று; ஒருவரின் அன்பைக் கொண்டுதான் அவரை நேசிப்பேன் என்பதும் என் நேசம் என்றும் மாறாது என்பதும் கருத்து; எங்கையர் — தலைவனால் கூடப்பட்ட பரத்தையரைத் தலைவி இவ்வாறு சுட்டுகிறாள், இளைய சக்களத்தி ஆதலின்.

புலையா? உரையோடு உளை; உங்கள் அருளும் சேர் எங்கையரும் ஒத்தே உளம் கரையோம்; கடைவாசல் செல்லாய் என்பது பொருண் முடிபு.

விருந்தொடு வந்துழிப் பொறுத்தல் கண்டு இறையோன் மகிழ்தல்

நெரியும் புருவமும் கண்சேப்பும்
மாற்றும்இந் நீள்விருந்தின்
புரியும் தவப்பயன் ஒன்றுள—
தோ;பொருந் தார்முடிவில்
பரிஉந் தியசெழி யன்தாகந்
தீர்த்தவன் பாலையில்நூல்
தெரியும் பயன்நல் விருந்தோம்பல்
செய்து சிறப்புஉறவே. 73

---

73. **விருந்தொடு வந்துழிப் பொறுத்தல் கண்டு இறையோன் மகிழ்தல் :** *பரத்தையரை நாடிச்சென்ற தலைவன் பாணன், விறலி முதலியவர்களைத் தலைவிபால் தூது அனுப்பினான். அவள் மனமிரங்கவில்லை. பிறகு தலைவன் சில விருந்தினர்களை அழைத்துக்கொண்டு தன் வீட்டிற்குச் சென்றான். விருந்தினர் முன் தன் ஊடலை வெளிப் படுத்தக் கூடாது என்று தலைவி தலைவனை ஏற்றுக் கொண்டாள். இதனால் தலைவன் உவகையடைதல்.*

நெரியும்—சுருங்குகின்ற; சேப்பு—சிவப்பு என்பதன் மரூஉ; மாற்றும்—நீக்கும்; புருவநெரிப்பும் சிவந்த கண்களும் சினத்தைக் காட்டும் மெய்ப்பாடுகளாகத் தலைவியின் ஊடலை உணர்த்தின; விருந்தின் என்புழி இன் உவம உருபு; புரியும் என்ற பெயரெச்சம் புரியப்படும் எனப் பொருள் தந்து பிறவினைப் பொருளில் வந்தது; பொருந்தார்—பகைவர்; முடியில்—தலைகளின் மேல்; பரி—குதிரை; உந்திய—செலுத்திய; நூல் தெரியும் பயன்—அறிவு நூல்களைக் கற்பதால் உண்டாகும் பயன்.

நூல் தெரியும் பயன் (ஆகிய) நல் விருந்தோம்பல் செய்து (தலைவியின்) நெரியும் புருவமும் கண் சேப்பும் சிறப்பு உறவே மாற்றும் இந்நீள் விருந்தின் புரியும் தவப் பயன் (வேறு) ஒன்று உளதோ என்பது பொருண் முடிபு.

ஒப்புமை :

*''புற்றுஇல் அராஅணி ஆரூர்த்
தியாகர் பொதியவெற்பில்*

தலைவி பிரிவாற்றாது புலம்பல்

கற்றார் கலைமுற்றும் மின்னார்
பிரிவுஒன்று கற்கும்வண்ணம்
உற்றார்; எம்ஆவி தனில்பெரி-
தோகல்வி? ஊதுகழைச்
சிற்றாயன் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்நல்நாட்டு
அற்றார் துணைஎனப் பெற்றார்என்
அன்பினை அற்றனரே. 74

சுற்றிய நல்விருந்து என்றள
வேநகை தோற்றியது
நெற்றியில் ஓடும் புருவம்முன்
போல நிமிர்ந்தனமேல்
பற்றிய செம்மையும் கண்ணீரும்
போயின பைந்தொடிக்கே''

(திருவாரூர்க் கோவை 464).

74. **தலைவி பிரிவாற்றாது புலம்பல்:** தலைவன் தன் கல்வி யறிவை வளர்த்துக் கொள்வதற்காகப் பிரிந்து சென்ற பிரிவுத் துயரைத் தாங்க இயலாத தலைவி வருந்திப் புலம்புதல்.

இப்பிரிவு அகப்பொருள் நூலுள் ஓதற்பிரிவு எனப்படும்.

கலை முற்றும் கற்றார் மின்னார் பிரிவு ஒன்று கற்கும் வண்ணம் உற்றார் என இயையும்; கற்றார்—கற்றவராகிய தலைவர், வினையாலணையும் பெயர்; மின்னார் பிரிவு ஒன்று கற்கும் வண்ணம்—இத்தொடர் இரட்டுற மொழிதலாக மகளிர் பிரிவுத்துன்பமாகிய ஓர் அநுபவத்தை உணரும்படி எனவும், தான் தலைவியைப் பிரிந்திருக்கும் நிலையை உணருமாறு எனவும் ஆளப்பட்டுள்ளது; பிரிவு என்றது ஈண்டுப் பிரிவுத்துயரையும், கற்கும் என்பது அநுபவித்து உணர்தலையும் சுட்டியது; கலை முற்றும் கற்றார் இந்த ஒன்றைக் கற்கச் சென்றார் என்றது பிரிவாற்றாப் புலவி காரணமாகத் தோன்றிய எள்ளல்; கல்வி எம் ஆவிதனில் பெரிதோ என இயையும்; ஆவி-உயிர்; ஊது கழை-வாசிக்கப்படும் குழல்; கழை-

தோழி தலைவன் தூதிற்பிரிவு உணர்த்தல்

ஐவர் இடர்க்கு அன்று கண்ணன் உற்
றால்என்ன அண்ணல்சென்றார்;
மைவரு கண்ணி! மதன் அடல்
நாடலர்; வன்மலைவாய்ச்

ஆகுபெயராகப் புல்லாங்குழலை உணர்த்திற்று, ஊது கழை-வினைத்தொகை; சிற்றாயன்-ஆயர் குலத்தே தோன்றிய சிறுவனாகிய கண்ணன், திருமால்; அற்றார்-வறியவர்; அற்றார் துணை என-(கல்வி) வறியவர்களுக்கும் உதவி செய்யும்தகைமைத்து என்று, இழிவு சிறப்பும்மை தொக்கது; பெற்றார் என்னும் வினைக்குக் கல்வி எனும் செயப்படுபொருள் வருவிக்கப்பட வேண்டும்; அற்றார் துணை எனக் (கல்வியைப்) பெற்றார் என் அன்பினை அற்றனரே என இயையும்; ஈற்றேகாரம் எள்ளலும் இரக்கமும் தோன்ற நின்றது. அற்றார் துணை என நாடியதால் போலும் என்னை இழந்துவிட்டார் என எள்ளுகிறாள்; தான் இறப்பது உறுதி என்பது தோன்ற அற்றனர் என இறந்தகால வாய்பாட்டால் கூறுகிறாள்.

75. **தோழி தலைவன் தூதிற்பிரிவு உணர்த்தல்:** *தலைவன் தன் அரசனின் தூதனாக மற்றோர் அரசன்பால் செல்ல வேண்டி வருகிறது. இக்காரணத்தால் தலைவன் நின்னைப் பிரிந்து செல்ல இருக்கிறான் எனப் பாங்கி தலைவிக்குக் கூறுதல்.*

ஐவர் – பாண்டவர் தொகைக் குறிப்புப் பெயர்; இடர்க்கு – (வனவாசம், மறைந்துறைதல் போன்ற) துன்பங்களை நீக்க, இங்கு இடர்க்கு என்ற நான்கன் உருபு நோய்க்கு மருந்து என்புழிப் போல வந்தது. அண்ணல்–தலைவர்; மை வரு கண்ணி–அஞ்சனம் தீட்டப்பெற்ற விழிகளை உடையவளே, அண்மை விளி இயல்பாயிற்று, மதன் அடல்–மாரனின் போர், காமம்; நாடலர்–நாடாதவராக, முற்று வாய்பாட்டான் வந்த வினையெச்சம் சென்றார் என முடிந்தது. மை வரு கண்ணி! அண்ணல் ஐவர் இடர்க்கு அன்று கண்ணன் உற்றால் என்ன மதன் அடல் நாடலர் சென்றார் என இயையும்; வன் மலைவாய்–வலிய மலைகளினிடத்து; செய்வளர்–வயல்கள்

செய்வளர் பாலைப் பதித்தாகந்
தீர்த்த செழியன்வெற்பில்
மெய்வளர் வேந்தர்க்கு உதவியன்
றோமிக்க வீறுஎன்பதே. **75**

நிறைந்த; மெய்வளர் வேந்தர்க்கு உதவி அன்றோ மிக்க வீறு என்பதே; இஃது இரட்டுற மொழிதல்.

1. உண்மையான மன்னர்களுக்குத் தாம் பிற அரசர்கட்குச் செய்யும் உபகாரமே பெரும் புகழாகும்.

2. ஒருவன் உன் உடம்மை வளர்த்தற்குத் தேவையான ஊதியம் தருகின்ற அரசனுக்கு உதவிபுரிதலே பெரும் இப்பொருளில், மெய் வளர்–உடம்பை வளர்க்கின்ற, இரண்டன் தொகை. இது ஒருசொல் நீர்மைப்பட்டு வினைத்தொகையாக மெய்வளர் வேந்தர் என வந்தது. மெய் வளர்த்தல்–உயிரோடு வாழ ஊதியம் தருதல்.

வன்மலைவாய்ச் செய்வளர் பாலைப்பதி என்றது இறைச்சிப்பொருள். கடினத் தன்மை வாய்ந்து பயிர்கள் வளர இயலாத மலைகளே வயல்கள் தோன்ற இடம் அளிக்கின்றன. இது மலைகள் செய்யும் உதவி. அறிவற்ற நிலைத்திணைப் பொருளாகிய மலையே பிறர்க்கு உதவி செய்யும்போது அறிவு நிறைந்த தலைவர் திண்ணமாக அரசற்கு உதவி புரியவேண்டும் என்பது குறிப்பாகத் தோழியால் உணர்த்தப்பட்டது.

செழியதரையன் கோவை

முற்றும்

துறை அகரநிரல்

துறைப்பெயர்	புதிய எண்	சுவடியில் இருந்த எண்
அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தல்	14	37
அவன் அவண் புலம்பல்	57	70
ஆற்றிடை முக்கோற் பகவரை வினாதல்	66	57
ஆற்றுவித்திருந்த அருமை கூறல்	54	36
இகுளை வம்பு என்றல்	56	48
இடம் அணித்து என்றல்	18	17
இடம்பெற்றுத்தழாஅல்	10	12
இரந்து பின்னிலை நிற்றல்	6-	7
இரந்து பின்னிலை நிற்றற்கு எண்ணல்	5	6
இரவு வருவானைப் பகல் வருகென்றல்	52	26
இற்கொண்டேகல்	42	38
இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தல்	69	66
இறைவனை நகுதல்	22	41
இறைவி கையுறை ஏற்றமை பாங்கி இறைவற்கு உணர்த்தல்	31	69
இறைவியை இல்வயின் விடுத்தல்	41	35
உரவோன் நாடும் ஊரும் குலனும் மரபும் புகழும் வாய்மையும் கூறல்	53	24
ஐயம்	2	2
கவினழிவு உரைத்தல்	46	50
காட்சி	1	1
குறிப்பறிதல்	4	4
சுனைவியந்து உரைத்தல்	20	13
செல்லுங்கிழத்தி செலவுகண்டு உளத்தொடு சொல்லல்	18	40
செவிலி தெய்வம் வாழ்த்தல்	64	59
தலைவன் உட்கோள் சாற்றல்	23	72
தலைவன் கையுறை புகழ்தல்	27	71
தலைவன் நினைந்தமை செப்பல்	59	56
தலைவன் நெறியதன் எளிமைகூறல்	38	44
தலைவன் தலைவியின் அச்சம் அகற்றல்	62	60

துறைப்பெயர்	புதிய எண்	சுவடியில் இருந்த எண்
தலைவன் தலைவியை உயர்த்தல்	25	16
தலைவன் தன்பதி அடைந்தமை சாற்றல்	63	54
தலைவன் புறத்தொழுக்கம் கண்ட ஆன்றோர் அறிவுரை	68	65
தலைவன் வரும் தொழிற்கு அருமை சாற்றல்	45	46
தலைவி குறிமருண்டமை தோழி தலைவற்கு இயம்பல்	44	23
தலைவி செவ்வணி அணிந்து சேடியை விடுப்புழி அவ்வணி உழையர் கண்டு அழுங்கிக் கூறல்	71	74
தலைவி பிரிவாற்றாது புலம்பல்	74	67
தன்துயர் தலைவற்கு உணர்த்தல் வேண்டல்	47	32
தாமக் குழலியைப் பாங்கி தணித்தல்	70	73
துணிதல்	3	3
தோழி ஆற்றுவித்தல்	34	19
தோழி சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல்	35	30
தோழி தலைவன் தூதிற்பிரிவு உணர்த்தல்	75	47
தோழி பூத்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்	61	28
நற்றாய் பாங்கியொடு புலம்பல்	65	53
நாணிக் கண் புதைத்தல்	11	5
நீங்கருமை தலைவி நினைந்திரங்கல்	33	20
பகல் வருவானை இரவு வருக என்றல்	51	25
பாங்கி அருளியல் கிளத்தல்	30	57
பாங்கி அறியாள் போன்று வினாதல்	26	39
பாங்கிக்கு மடலை உலகியல் மேல் வைத்து உரைத்தல்	28	55
பாங்கி குலமுறை கிளத்தல்	24	15
பாங்கி தலைமகன் முன்நின்று உணர்த்தல்	36	31
பாங்கி தலைமகனைக் குறியிடை நிறீஇத் தாய் துயிலறிதல்	39	42
பாங்கி நீயே உரைஎனத் தலைவி நோதல்	48	33
பாங்கி நெறியது அருமை கூறல்	37	43
பாங்கி வெறி விலக்கல்	60	49
பாணனைப் பழித்தல்	72	75
பிரிந்து வருகென்றல்	17	21

துறைப்பெயர்	புதிய எண்	சுவடியில் இருந்த எண்
பிரியேன் என்றல்	16	23
பிறர்வரைவு விலக்குவித்தல்	49	39
புகழ்தல்	13	27
புரவலன் தேற்றல்	40	45
புலந்தவன் போதல்	43	68
பூங்குழை இரங்கல்	55	18
பெயர் வினாதல்	21	34
பெருநயப்புரைத்தல்	15	14
பொய்பாராட்டல்	9	10
மடலைத் தன்மேல் வைத்துத் தலைவன் சாற்றல்	29	58
மீண்டு வருகாலைப் பாகனொடு சொல்லல்	58	63
முக்கோற்பகவர் கண்டமை கூறல்	67	52
முறுவற் குறிப்புணர்தல்	12	11
முன்னிலை ஆக்கல்	7	8
மெய்தொட்டுப்பயிறல்	8	9
விருந்து இறை விரும்பல்	32	62
விருந்தொடு வந்துழிப் பொறுத்தல்கண்டு இறையோன் மகிழ்தல்	73	64
வெறி அச்சுறுத்தல்	50	61

செய்யுள் முதற்குறிப்பு அகரநிரல்

பதிப்பாசிரியரால் புதியதாகக் கொடுக்கப்பட்ட துறைக்குறிப்புகள்

உரை மேற்கோள் அகரநிரல்

(எண் செய்யுள் வரிசை எண்)

சொல்லடைவு

செழியதரையன்
வண்ணம்

செழியதரையன் வண்ணம்

துறை : தலைவி இரங்கல்

குழிப்பு

தானத் தனதன தானன தனன தனதன தானன
தனன தனனதன தனன தனனதன
தனதந் தானன தனதன தனனா
(தொங்கல்) தனதாந்தன தனன தானனா

ஏருற் றிடுமக ராலய மதனில் வருகடு வானதை
இடர்கொ ளரிபிரமர் அமரர் அபயமென
அமுதம் போலுணும் அரபர சிவனார்
வேரிச் சரணம லாதொரு கடவு ளையுநினை யாதவன்

---

1. ஏர் உற்றிடும் – அழகு பொருந்திய; மகராலயம்–மகர+ ஆலயம்: வடமொழித் தீர்க்க சந்தி; சுறா மீன்களுக்கு இருப் பிடமாகிய கடல்; கடு ஆனது–நஞ்சு, இங்கு ஆலகால விடம்.

2. இடர்கொள்–(அமுதத்தை விரும்பிக் கடலைக் கடைய ஆல கால விடம் தோன்றியதால் உண்டான) வருத்தத்தை உடைய; அரிபிரமர்–திருமாலும் நான்முகனும், உம்மைத் தொகை; அமரர்–தேவர்கள்; அரிபிரமரும் அமரரும் என ஈரிடங்களிலும் எண்ணும்மை விரிக்க; முதன்மையான முக் கடவுளரில் இருவர் ஆதலின் அரிபிரமர்களைச் சிறப்பு நோக்கிப் பிற தேவர்களினின்றும் பிரித்துக் கூறினார்; அபயம் என–அடைக்கலம் புகுத.

3. அரபர சிவன்–அரனும் பரனும் ஆகிய சிவபெருமான்,அரன்– எல்லாப் பொருட்கும் இறைவன், பரன்–எல்லாவற்றையும் கடந்து நிற்பவன். அரிபிரமர் அமரர் அபயம் எனக் கடுவானதை அமுதம்போல் உணும் அரபர சிவனார் என இயைக்க.

4. வேரிச்சரணம் – மணமிக்க திருவடிகள், திருவடிகளைத் தாமரை மலர்களாகக் கூறும் மரபுபற்றி வேரிச்சரணம் என்றார்.

விதுவொ டிரவிநிலை பெயரு கினுமசல
நிலைதிண் டாடினும் இயல்மொழி தவறான்
ஏழெட் டெனவொளிர் தேசமும் உடையர் திறையிட வாழ்பவன்
இதமொ டறிவுபொறை நிறைவு சுருதிநெறி
விரதந் துயரை யநுதின மகலான்
மகவான்றனை நிகரு மேன்மையான்

---

5. விது – சந்திரன்; இரவி – சூரியன்; நிலைபெயர்தல் இங்குத் தத்தம்இயக்கங்களில் மாறுபடுதலைக் குறித்து நின்றது; அசலம்–அசைவற்றது, மலை.

6. நிலை திண்டாடினும் – உறுதியாக நிலைபெற்றுள்ள இயல்பு மாறி அசைவு கொண்டிடினும் அஃதாவது மலை பெயர்ந்தாலும்;இயல்மொழி–இயற்றப்பட்ட சொல் என்றது தரப்பட்ட உறுதிமொழியை.

7. ஏழெட்டென ஒளிர்தேசம் – ஐம்பத்தாறு நாடுகள், பாரத நாட்டை ஐம்பத்தாறு தேசங்களாகக் கூறுதல் இலக்கிய வழக்கு; திறையிட–கப்பம் செலுத்தும்படி.

8. இதமொடு – நன்மையோடு, அத்துச் சாரியை தொக்கது; அறிவு–இவ்விடத்தில் மெய்ப்பொருள் அறிவைச் சுட்டியது, ஞானம்; பொறை – பொறுமை; நிறைவு – உள்ளதைக் கொண்டு மனம் மகிழ்தல், திருப்தி; சுருதிநெறி–மறைகளால் காட்டப்பட்ட வழி. அறிவு, பொறை, நிறைவு ஆகிய மூன்றிடங்களிலும் எண்ணும்மை தொக்கது. இம்மூன்றும் பிற உயிர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் இதத்தோடு சேர்ந்து இருத்தல்வேண்டும் என்பதால் முதல்நிலைவிளக்காக 'இதமொடு' என்றார்.

9. விரதம்–தவம்; விரதத்தூயர் என இருக்கவேண்டியது சந்தம் நோக்கி விரதந்தூயர் என மெலிந்தது; இதமொடு அறிவு, பொறை, நிறைவு, சுருதி, நெறி, விரதம் ஆகியனவற்றை உடைய தூயரை அநுதினம் அகலான் என்க; சுருதிநெறி என்றது ஆகுபெயராக வேதநெறியில் ஒழுகும் ஒழுக்கத்தை உணர்த்தி நின்றது.

10. மகவான்–வேள்விகளால் பதவி அடைந்தவன், இந்திரன். இம் முதல் கலையில் பாட்டுடைத்தலைவனின் சிறப்புகள்

ஏமக் குவலய மாலிகை வரைய ருவிநிகர் தோளினன்
இணையில் திரிபதகை மரபு திகழவரு
சதுரன் பூமகள் இசைபெறு சபையான்
மேழிக் கொடியினன் நாவலர் மிடிகள் கெடுபுக வேபொருள்
மிகவு முதவுகுண வெழிலி திகிரிவரை

கூறப்படுகின்றன. செழியதரையன் சிவபெருமானின் திருவடிகளைத்தவிர வேறு தெய்வங்களை வணங்காதவன்; சொன்ன சொல்லை எப்போதும் தவறாமல் காப்பாற்று பவன்; பல அரசர்களால் போற்றப்படுபவன்; ஞானிகளின் கூட்டுறவை உடையவன்; இந்திரனுக்கு இணையான சிறப்புகளை உடையவன் என்பன அவனது வாழ்க்கை நலன்களை வெளிப்படுப்பன.

11. *ஏமம்–களிப்பு; குவலயம்–குவளைப்பூ; ஏமக் குவலய மாலிகை–களிப்பைத் தருகின்ற குவளை மலர் மாலை; வரை–மலை; வரை புயத்திற்கும், அங்கிருந்து வீழும் அருவி மாலைக்கும் உவமை ஆயின.*

12. *திரிபதகை–செழியதரையர்களின் குலத்தின் பெயர்.*

13. *சதுரன்–அறிவுடையவன்; பூமகள் இசைபெறு சபையான்– செல்வச் சிறப்பு நிறைந்த கொலுவில் வீற்றிருப்பவன்.*

14. *மேழிக் கொடியினன்–கலப்பையின் உருவம் பொறிக்கப் பெற்ற கொடியை உடையவன், மேழிக்கொடி வேளாள ருக்கு உரியதாதலின் செழியதரையர்களும் வேளாளர் என்பது பெறப்பட்டது. குவளைத்தாரும் அவர்களுக்கு உரியதாம். ''மேழிக் கொடியொடு வெண்ணிறக் குடையும் காவி மாலையும் கங்கைசே யினர்க்கே'' என்பது அறுவகை இலக்கணம் (593). மிடிகள்–வறுமை; உணவின்மை, உடையின்மை, இருப்பிடமின்மை, நோய்க்கு மருந் தின்மை எனப் பலவாறு வறுமை வெளிப்படுதலின் பன்மையிற் கூறப்பட்டது; கெடுபுக–கெட்டுப் போக, அழியஎன்றபடி.*

15. *எழிலி–மேகம், கைம்மாறு கருதாத வள்ளன்மையால் தலைவன் மேகமாக உருவகிக்கப்பட்டான்; திகிரிவரை– சக்ரவாள மலை, இது பெரும்புறக்கடலைச் சூழ்ந்திருப்ப தாக இலக்கியங்கள் கூறுகின்றன.*

விசையுந் தாவிய நடைதரு புகழான்
ஏகிக் கனலிடை யேபழி கழுவி யிடுகுல தீபகன்

---

16. விசையும்—வரையும் என்பதன் பேச்சு வழக்கு; நடைதரு புகழான் – வழங்கி வருகின்ற கீர்த்தியை உடையவன்.

17. கனலிடையே ஏகிப் பழி கழுவியிடும் குல தீபகன் என இயைக்க. பழையனூரில் ஒரு வணிகன் இருந்தான். அவன் மனைவியாகிய நீலி என்பாள் திருமணமான சில நாள்களிலேயே இறந்து காட்டில் பேயாய்த் திரிந்து கொண்டிருந்தாள். ஒரு நாள் அவ் வணிகன் தனியாக அவ் வனத்தின் வழியே செல்கையில் இந்த நீலிப்பேய் அவ் வணிகனின் இரண்டாம் மனைவியின் வடிவில் வந்து பின்தொடர்ந்தது. வணிகன் அவ் வுருவம் தன் இரண்டாம் மனைவி அல்லள்; ஏதோ ஒரு பேய் எனத் துணிந்து அஞ்சி ஓடினான். அந் நீலிப் பேயும் அவனைத் தொடர்ந்து காஞ்சீபுரத்தில் அறங்கூறவையத்தில் கூடி இருந்த எழுபது வேளாளரிடஞ் சென்று தன் கணவன் தன்னைக் கைவிட்டு நீங்குவதாக வழக்கிட்டாள். வணிகனோ ''இவள் பெண் அல்லள்; ஏதோ ஒரு பேய்'' என்றான். பேயின் கூற்றை நம்பிய வேளாளர்கள் ''நீயும் இப் பெண்ணும் ஓர் அறையில் சிறிது நேரம் தனித்திருங்கள்; உனக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தால் நாங்கள் பிணை ஆவோம்'' என முடிவு கூறினர். மறுக்க இயலாத வணிகன் ஓர் அறையினுட் செல்லப் பேயும் பின்தொடர்ந்து அவனைக் கொன்றுவிட்டு மறைந்து விட்டது. தம் தவறால் வணிகன் இறந்ததை உணர்ந்த வேளாளர் எழுபதின்மரும் அப் பழிதீரத் தீக்குளித்து மாண்டனர். இக் கதை தொண்டை நாட்டின் பழையனூரில் நடந்ததாகக் கூறப்படுகிறது; வேளாளர்களின் சிறப்பைக் கூறும் பல இலக்கியங்களிலும்இடம் பெற்றுள்ளது.

''மாறுகொடு பழையனூர் நீலி செய்த
வஞ்சனையால் வணிகன்உயிர் இழப்பத் தாங்கள்
கூறியசொல் பிழையாது துணிந்து செந்தீக்
குழியில்எழு பதுபேரும் முழுகிக் கங்கை
ஆறணிசெஞ் சடைத்திருவா லங்காட்டு அப்பர்
அண்டமுற நிமிர்ந்தாரும் அடியின் கீழ்மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை எம்மால்
பிரித்துஅளவிட்டு இவளவுஎனப் பேசல் ஆமோ''

இடரு விகடதட கரட கடவருவி
பொழிதந் தாவள வணியுடை யடலான்
கணைதேர்ந்தனு விசையன் மானுவான் 20

என்பது சேக்கிழார் புராணம் (15). இவ் வண்ணத்தில் பழி கழுவியிடு குலம் என்றது வேளாளர் குலத்தை. செழிய தரையன் வேளாள மரபின் விளக்கனையவன் என்பது கருத்து.

18. இடரும் – (பகைவர்களுக்கு) ஆபத்தைச் செய்யும், இடர் என்னும் பெயர்ச்சொல் வினைச்சொல்லாக்கி ஆளப் பட்டது;விகட–அழகிய; தட–பெரிய; கரட–(முன்பு மதம் பாய்ந்ததால் ஏற்பட்டு நிலைத்து விட்ட) மதச்சுவட்டின் மேல்; கடஅருவி–மதமாகிய நீர் ஒழுக்கை;

19. பொழி – சொரிகின்ற; தந்தாவள – யானைகளின்; அணி யுடை – கூட்டத்தைப் பெற்றுள்ள, உடை – ஆறாம் வேற்றுமைச் சொல்லுருபு. அடலான்–வலிமை மிக்கவன்; செழியதரையன் யானைப் படையால் வலிமை பெற்றவன் என்பது கருத்து.

20. கணை தேர்ந்து–இலக்கை எய்வதற்கேற்ற சிறந்த அம்பு களைத் தெரிவுசெய்து (குறி தவறாது செலுத்தி வெற்றி பெறுகின்ற அதனால்); அனு விசையன் –(பாண்டவரில் ஒருவனாகிய அருச்சுனனுக்குப்) பின்னால் தோன்றிய ஓர் அருச்சுனனை; மானுவான்–நிகர்ப்பான்; கணை தேர்தல்– குறிபார்த்தல், எய்யல், இலக்கை வீழ்த்தல் ஆகிய செயல்களுக்கு உபலட்சணம்.

இந்த இரண்டாவது கலையிலும் பாட்டுடைத் தலைவனின் சிறப்புகள் தொடர்கின்றன. அவைவருமாறு- கருங்குவளைத் தார்களை அணிந்துள்ள பெரிய புயங்களை உடையவன்; திரிபதகைக் குலத்தான்; அறிஞன்; செல்வ வளம் மிக்கவன்; மேழிக்கொடியை உடையவன்; புலவர் களுக்கு வரையாது வழங்கும் வள்ளல்; உலகளாவிய பெரும் புகழான்; வேளாளர் மரபில் தோன்றியவன்; பெரிய யானைப்படையை உடையவன்; வில்வித்தையில் அருச்சுனனுக்கு நிகரானவன்.

சேரப் புணரியில் வான்புனல் பருகி யெழுமெழு கார்மற
செருவி தரணமுட னிகல்வ தெனமதுரை
இறைமுன் போயிடு சிறைவிடு பிணையான்
மூதக் கவருல கோர்பலர் பரவ வினிதுட னேகரு
முதிரு மவள்முதுகில் அடிசில் இடுகுரிசில்

---

21. புணரியில் புனல் பருகி வான் சேரஎழும் எழு கார் என இயைக்க. புணரியில்–கடலில்; புனல்–நீர்; எழு கார்–ஏழு மேகங்கள், அவையாவன: சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம்; மறம்–வீரம், மறச்செரு என இருக்க வேண்டியது சந்தம் நோக்கி மறசெரு என்று நின்றது.

22. செரு–போர்; விதரணம்–அழகு, இவ்விடத்தில் செம்மையான முறை; இகல்வது–மாறுபட்டது, இங்குப் போர் அறத்திற்கு முரணானது.

23. இறை–மன்னன், இங்குப் பாண்டியன்; இடுசிறை–வினைத்தொகை; பிணையான்–உத்தரவாதம் அளித்தவன்; விடு பிணையான்–(சிறையிலிருந்து) விடுவிப்பதற்காகப் பிணை ஆனவன்.

இந்திரன் பாண்டியனுடன் போரிட்டுத் தோற்றுத் தன்னுடைய ஊர்தியாகிய மேகத்தை விடுத்து ஓடினான். பாண்டியன் அதைத் தளையிட்டுச் சிறைப் படுத்தினான். சோழ நாட்டு வேளாளர்களிற் சிலர் பாண்டியனிடம் பிணையேற்று மேகத்தை விடுவித்தனர். இதனாலேயே அவர்கள் கார்காத்த வேளாளர் எனப் பட்டனர் (கார்–மேகம்). இந்தக் கார் காத்த வேளாளர்களுக்குரிய நாடு மகத மண்டலமாகும். (நம் செழிய தரையர்களும் மகத மண்டலத்தைச் சேர்ந்தவர்களே ஆவர்).இவ் வரலாற்றை மேழிவிளக்கம்(கண்ணி 554-572) தெளிவாகக் கூறுகிறது.

24. மூதக்கவர்–வயது முதிர்ந்த சான்றோர்கள், மூ+தக்கவர்; கரு–கருப்பம்;

25. கரு முதிருமவள்–நிறைசூல் கொண்டவள்;அடிசில்–சோறு; குரிசில்–தலைவன்; மூதக்கவர் உலகோர் பலர் பரவு கரு

அரவின் பான்மணி ... ...

(இதற்குப் பிறகு சுவடியில் ஓர்ஏடு காணப்பெறவில்லை. அதனால் மூன்றாங் கலையின் பிற்பகுதி முதல் ஆறாங்கலையின் முற்பகுதி முடிய அறியக்கூட வில்லை)

... ... வருகல மேமலர்
மிசையி னுறைபிரமன் எழுது தலைவிதியை
மிகநொந் தாலது தருபய னிலையே
ஆரக் குலமுடு வாமென விரவு குவைமண லேசுவை

முதிரும் அவள் முதுகில் உடனே இனிது அடிசில் இடு குரிசில் என இயைக்க.சூலி முதுகில் சுடுசோறு படைத்ததாகக் கூறப்படும் இந் நிகழ்ச்சி பெரும்பாலும் வேளாளர்களைப் பற்றிய எல்லா இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளது. எனினும் இது எங்கு எப்போது யாரால் ஏன் நிகழ்த்தப் பட்டது என்ற வரலாறு எங்கும் தெளிவாகக் கூறப் பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

26. அரவின்பால் மணி—பாம்பினிடத்துள்ள மாணிக்கம்;பால்—ஏழன் உருபு.

மூன்றாம் கலையின் இப்பகுதியிலும் பாட்டுடைத் தலைவனின் சிறப்புகள் தொடர்கின்றன. மேகங்களின் சிறை நீக்கத்திற்குப் பிணை நின்ற வேளாளர் மரபினன்; சூலி முதுகில் சுடுசோறு படைத்த பெருமை வாய்ந்த வேளாளர் இனத்தினன்...............

54. மலர்—ஈண்டுத் தாமரையைக் குறித்தது.

55. பிரமன் எழுது தலைவிதி என இருப்பினும் பிரமனால் எழுதப்பட்ட தலைவிதி எனப்பொருள் கொள்க. எழுது தலைவிதி—வினைத்தொகை.

56. அது – விதியை நோதலாகிய அச் செயல்; தருபயன்—வினைத்தொகை.

57. ஆரக்குலம்—முத்துக் குவியல்கள்;உடு—விண்மீன்,கடற்கரை மணற்பரப்பில் ஆங்காங்குக் குவிந்துள்ள முத்துகளுக்கு வானில் ஆங்காங்கு விளங்குகின்ற நட்சத்திரங்கள் உவமை;

அமுத கதிர்மதியென் அளவில் வடவைஎனல்
எனவிண் பால்வரில் உயிர்உறல் அரிதே
இனிநான்செறு தெவரை நோவதே
நாரைக் கணமுறு கேதகை நறிய மலரின மேயிள

குவை மணல் — முன் பின்னாகத் தொக்க மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை; மணலே—விளி; சுவை—இனிமையான.

58. அமுத கதிர் மதி—அமுதத்தைப் போன்ற கிரணங்களை உடைய சந்திரன், அமுதக் கதிர் என இருக்க வேண்டிய உவமைத் தொகைத் தொடர் சந்தம் நோக்கி அமுத கதிர் என நின்றது; என் அளவில்—என்னைப் பொறுத்த வரையில்; வடவை—கடலுக்குள் இருப்பதாக நம்பப்படும் பெரும் தீ.

59. விண் பால் — ஆகாயத்தினிடத்தே; உயிர் உறல் — உயிர் பிழைத்தல்; ''மணலே! மதி என் அளவில் வடவை எனல் என விண்பால் வரின் உயிர் உறல் அரிதே'' என இயைக்க. இரங்கல்துறை ஆதலின் நெய்தலுக்குரிய மணற்குவை இடம் பெற்றது. அடுத்த கலையிலுள்ள நாரை, தாழம்பூ, பனை மரம் ஆகியவற்றிற்கும் இவ்வாறே கொள்க.

60. செறுது — சினந்து, வினையெச்சம், நோவது என்னும் வினையைக் கொண்டு முடிந்தது

ஆறாவது கலையான இக்கலையின் இறுதி ஆறு வரிகளில் தலைவி தன் பிரிவாற்றாமையைக் கூறி இரங்குகிறாள். கடற்கரையில் குவிந்துள்ள மணற் குவியலை நோக்கிப் புலம்புகிறாள். ''மணற் குவியலே! என் தலைவிதியை நொந்து கொள்வதால் என்ன பயன்? வானில் அமுதம் பொழிகின்ற வெண்ணிலா என்னைப் பொறுத்த அளவில் வடவைத்தீயைப் போலச் சுட்டெரிக்கும். அது உதித்து விட்டால் என் உயிர் நிலைத்தல் அரியதாகும். என் இந்த ஆற்றாமை காரணமாக யாரைச் சினந்து என்ன பயன்?'' என்னும் தலைவி கூற்று இப் பகுதியின் கருத்தாக அமைகிறது.

61. நாரைக் கணம்—குருகுக் கூட்டம்; கேதகை—தாழை; நறிய—மணம் மிக்க; நறிய கேதகை மலர் இனமே என்க: விளி; இள நகை—புன்முறுவல்.

நகைகொ டுவகைசொன தலைவர் படிறுதனை
நினையும் போதுடல் மெலிகுதல் சிறிதோ
வானைத் தொடுபனை யேபனை மிசையினுறுகனி யேகர
வளையு மணிகலையு நெகிழ உளமுருகு
தழலுந் தீயிடை யிடுமெழு கெனவே
நாகத் தனிவன மேவன மிசையி னுலவன மேநனி
நவில ரிதரிது குயிலின் ஒலிசெவியில்
நுழையுந் தோறுமென் மதிபடு துயரே

---

62. உவகை—ஈண்டு ஆகுபெயராகி மகிழ்ச்சியைத் தரும் சொற்களை உணர்த்தியது; படிறு—குற்றம், இங்குத் தான் பிரிந்து தலைவியை வாடவிட்டது; படிறுதனை என்புழித் 'தன்' பகுதிப்பொருள் விகுதி.

64. கர—கைகளில் அணியப் படுகின்ற.

65. அணி கலையும்—உடுக்கப் படுகின்ற புடவையும், அணிகலை: வினைத்தொகை; உளம் உருகுது:பேச்சு வழக்கு.

66. அழலும்—சுடர் விட்டு எரியும்.

67. நாகம்—புன்னாகம், புன்னைமரம்; நாகத் தனி வனம்—தனியே சுரபுன்னை மரங்கள் மட்டுமே செறிந்த காடு; வனமே:விளி; வனம் மிசை இன் உலவு என்புழி மிசை மேற் பகுதியைச் சுட்டியது, இன் ஏழன் உருபு; உலவு அனமே: விளி.

68. நவில—சொல்ல; நவில வரிது என இருத்தற்பாலது செய்யுளாதலான் நவிலரிது என வந்தது, அகரம் தொகுத்தல் விகாரம். 'கருதரிய கடலாடை' என்புழிப் போல; அரிதரிது—அடுக்குத் தொடர் மிகுதிக்கண் வந்தது.

69. மதி—அறிவு, ஈண்டு மனத்தைச் சுட்டி நின்றது; ஏ: அசை; 'வனமே! அனமே! குயிலின் ஒலி செவியில் நுழையுந் தோறும் என்மதிபடுதுயர் நனிநவில அரிது அரிது' என இயைக்க.

வனவேய்ங்குழல் அமலை வீசுதே 70
நாதப் பயிரவி மாளவி யெனுநல் இசையளி யேயுரு
நடுவன் இவர்கடவின் மணியி னெழுமொலிகொல்
அசையுந் தூவிடை யணிமணி யொலியே

---

70. வனவேய்ங்குழல்–காட்டில் தோன்றிய மூங்கிலால் செய்யப் பட்ட குழல், இங்கு ஆகுபெயராக அக் குழலில் பிறக்கும் இசையைச் சுட்டி நின்றது; வீசுது:பேச்சு வழக்கு, ஏகாரம்–இரக்கத்தைக் காட்டி நின்றது.

'தாழை மலர்களே! புன்முறுவலுடன் மகிழ்ச்சி தரும் வார்த்தைகளால் உரையாடிய தலைவர் என்னைப் பிரிந்த தவறான செயலை நினைத்தால் உடம்பு மிகவும் மெலிவடைகிறது. பனைமரமே! பனங்கனியே! கைவளை களும் சேலையும் தத்தம் இடத்து நில்லாது நெகிழ்கின்றன. மனம் அனலிடையிட்ட மெழுகென உருகாநிற்கிறது. புன்னையங்கானலே! அன்னமே! நான் குயிலோசையைக் கேட்குந்தொறும் என் உளம் படும்பாட்டைச் சொற் களால் கூற இயலாது. உவகையைத் தர வேண்டிய குழலிசையும் நெருப்பை அள்ளி வீசினாற் போன்ற பெருந் துன்பத்தைத் தருகிறதே' எனத் தலைவி தொடர்ந்து புலம்புகிறாள்.

71. நாதப் பயிரவி – இனிய ஒலியை உடைய பைரவிப்பண்; மாளவி–பண் வகையுள் ஒன்று. இசை அளி – இசையைப் பாடுகின்ற வண்டு: இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை; அளியே : விளி; வண்டின் ரீங்காரத் திற்குப் பயிரவியும் மாளவியும் உவமை.

72. நடுவன்–இயமன்; இவர்–ஏறிச் செலுத்துகின்ற; கடவின்–எருமைக் கடாவினுடைய, கடா என இருத்தற்பாலது சந்தம் நோக்கிக் கட என்று குறுகியது; மணி–கழுத்தில் கட்டப்பட்டுள்ள ஒலிமணி.

73. தூவிடை–வெண்மையான எருது; அணிமணி–அணிந் துள்ள மணி: வினைத்தொகை; தூவிடை அணி மணி ஒலி நடுவன் இவர் கடவின் மணியின் எழும் ஒலிகொல் என இயையும்.

பானற் குளிர்கொடி யேகொடி யிடையினுறுசிர லேநசை
பயிலு மிசையுமுணு மனமு மணிநகையு 75
நலியுங் கார்விட மனையன சொலிலே
நானிப் படிபட வேபிழை சிறுகு தொளிர்பட வேபெரு
நவையில் சுகமருவி யிடுதல் சிறிதுமிலை

---

74. பானல்–கருங்குவளை; சிரல்–சிச்சிலிப் பறவை; நசை–விருப்பம், குளிர் பானற் கொடி என இயைக்க.

75. நசை பயிலும் இசை–விருப்பத்தை உண்டாக்கும் சங்கீதம்; உணும் அனம்–சாப்பிடும் உணவு; அணி நகை–அணியப் படுகின்ற ஆபரணங்கள்: வினைத்தொகை. உம்மைகள் மூன்றும் எண்ணும்மைகள். அணிநகை என்பதற்கு அணிகலன்கள் என்பதோடு இரட்டுற மொழிதலாகப் பிறருடைய அழகிய சிரிப்பு என்றும் கொள்க. துயரத்தால் வருந்திக் கொண்டிருப்போரின் துன்பத்தை மற்றவர்களின் மகிழ்ச்சி அதிகப்படுத்துதல் இயல்பு.

76. நலியும்–நலிவிக்கும் என்ற பொருளில் வந்தது; திண்ணை மெழுகிற்று என்பதைப் போல. கார் விடம்–கருமையான நஞ்சு; கொடியே! சிரலே! இசையும் அனமும் நகையும் சொலில் கார்விடம் அனையனவே என இயையும். சொலில் என்பதிலுள்ள ஏகாரத்தை அனையன என்பதிற் கூட்டுக. இவை இன்பம் தருவன அல்ல எனக் குறிப்பித் தலின் பிரிநிலை ஏகாரம்.

77. நான் இப்படி படவே–யான் இவ்வாறு துன்பமுறும் வண்ணம், இப்படிப் படவே என இருக்க வேண்டியது இப்படி படவே என மெய்கெட்டு நின்றது சந்த நோக்கி; பிழை–(தலைவியாகிய நான் செய்த) தீமைகள்; சிறுகுது–என்மேற் சினம் கொள்கிறது, துன்புறுத்துகின்றன எனப் பொருள்: பேச்சு வழக்கு; ஒளிர்பட – ஒளி இங்கு மகிழ்ச்சியைச் சுட்ட நின்றது.

78. நவை–குற்றம்; நவை இல் பெரும் சுகம் மருவி என இயைக்க. மருவிடுதல் சந்தம் நோக்கி மருவியிடுதல் என விரிந்தது. நான் முன் செய்த தீய செயல்களின் விளைவால் என்னால் எப்போதும் இன்பம் துய்க்க இயலவில்லை என்பது கருத்து.

ஏனமுன் சூழ்தரு கொடுவினை யலவோ
அவர்தாங்கொடு மைசெயல் நீதியோ. 80

செழியதரையன் வண்ணம்
முற்றும்

---

79. கொடுவினை—தீவினை, பாவம்; நான் முன் சூழ்தரு கொடுவினை இப்படி படவே பிழை சிறுகுது; ஒளிர்படவே நவை இல் பெரும் சுகம் மருவியிடுதல் சிறிதும் இலை அலவோ எனக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்க.

80. அவர்—தலைவர்: நெஞ்சறி சுட்டு; கொடுமை—காதலியைப் பிரிதல்; நீதியோ—நீதி அன்று என்பது குறிப்பு. என் தலைவிதி எனக்குத் துன்பம் தருகிறது; எனவே கொண்டாலும் தலைவர் எனக்கு அருள் செய்யாதிருப்பது அவருடைய அன்புடைமைக்கு ஏற்றதன்று என்றவாறு.

'பண் என மிழற்றும் வண்டுகளே! எருதுகள் அசையும் போது அதன் கழுத்துமணிகளின் ஓசை இயமனுடைய ஊர்தியாகிய எருமையின் மணியொலியைப் போன்று துன்பம் தருகிறது. கருங் குவளைக் கொடியே! சிச்சிலியே! இன்னிசை, உணவு, அணிகலன்கள் இவற்றோடு பிறருடைய சிரிப்பும் நஞ்சைப் போல நலிவிக்கின்றது. என் பழைய தீவினைப் பயனால் நான் இவ்வாறு துன்புறுகிறேன். நான் இன்பம் துய்க்கப் போவதே இல்லை. என்றாலும் தலைவர் இவ்வாறு தன் அன்பை மறுத்தவராக என்னைப் பிரிந்து செல்லல் அறமாகுமோ' எனத் தலைவி இரங்குகிறாள்.

சொல்லடைவு

(எண்கள் பாடலின் வரியைக் குறிக்கும்)

தாகந்தீர்த்த செழியன்
பிள்ளைத்தமிழ்

தாகந்தீர்த்த செழியன் பிள்ளைத்தமிழ்

காப்பு

இரட்டையாசிரிய விருத்தம்

உலகுபதி னான்குந்தி கந்தங்கள் இருநான்கும்
உழுகொழுக் கொண்டுமுழுது ஆண்டு
ஒருகுடைக் கீழ்வைத்த செழியதரை யத்திலகன்
உலகாபு ரேசன்நிதியில்
பலகுபே ரன்திரண் டனையஅந் தாலன் (தரு
பாலன்தா கந்தீர்த்தவன்)
பருவத்து இளம்பிள்ளை யம்பாடல் ஒருநூறு
பழுதுஅறுத்து எழுதுதுணையாம்—
விலகுபொற் சடிலப்ப ராசரத் தவராசன்
மீனகந் தியைஅந்தநாள்
விழைதந்து தந்தநந் தனன்ஒருத் தன்பார
மேருச்சி கரத்தலைவாய்
அலகுபெற்று அமுதுஎனப் பாடுவட பாடல்நூறு
ஆயிரத் தொடுஇருபத்துஐ
ஆயிரத் தொகைதொகுத்து எழுதுவா ரணத்துஈர்
அரணத்தி ருப்பாதமே.

குறிப்பு :— (நக வளைவிற்குள் காட்டப்பட்டுள்ள பகுதிகள் உரையாசிரியரால் சேர்க்கப் பெற்றவை; செய்யுட்களின் யாப்பு, சந்தக்குழிப்பு ஆகியனவும் அவ்வாறே.)

உலகுபதினான்கு—பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், ஜனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் என்னும் மேல் உலகங்கள் ஏழும் அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாலம் என்னும் கீழ் உலகங்கள் ஏழும்; திகந்தம் — திக்+அந்தம், திசைகளின் முடிவு; இரு நான்கு — எண்டிசைகள்; உழுகொழு—உழுகின்ற ஏரின் கொழு; செழியதரையர் வேளாளர் ஆதலின் கொழுக்கொண்டு ஆள்வதாகக் கூறப்படுகிறது; முழுதாண்டு என்புழி முற்றும்மை விகாரத்தால் தொக்கது; உலகாபுரேசன் — உலகாபுர+ஈசன்,

உலகியல்நல்லூரின் தலைவன்: வடமொழிக் குணசந்தி; குபேரன்— வடதிசைக் காவலனாகிய இவன் மிகப் பெருஞ்செல்வன்; அந்தாலன்—தாகந்தீர்த்த செழியனின் தந்தை; பருவத்து இளம் பிள்ளையம்பாடல் – (பத்துப்) பருவங்களை உடையதும் தலை வனை இளங்குழவியாகப் பாவித்துப் பாராட்டுவதுமாகிய அழகிய பிள்ளைத் தமிழ், பாடல் என்னும் சினை ஆகுபெயராக முதலாகிய பிரபந்தத்தை உணர்த்துகிறது; பழுது அறுத்து—நூற் குற்றங்களை நீக்கி; எழுது துணை – எழுதுவதற்குஉற்ற துணை: நான்காம் வேற்றுமைத் தொகை.

விலகு – அசைகின்ற; பொற்சடில – அழகிய சடைகளை உடைய; பராசரத்தவராசன் – தவசியர்களுள் மிகச் சிறந்த வராகிய பராசர முனிவர்; மீனகந்தி – தன் மேனியின் மீது மீன் வாடை வீசப்படுபவள், மச்சகந்தி எனவும் அழைக்கப்பெறுவாள், பராசர முனிவரால் மீன்நாற்றம் போக்கப்பட்டுப் பரிமளகந்தி ஆனவள், வேத வியாசரின் தாய்; விழைதந்து—விரும்பி; தந்த— பெற்ற; நந்தனன்—மகன்; ஒருத்தன்—நிகரற்றவராகிய வியாசர்; பார மேருச் சிகரத் தலைவாய்—பெரிய மேருமலையின் கொடுமுடி யினிடத்தே; அலகுபெற்று—விசாலமாக,மிக விரிவாக;வடபாடல்— வடமொழியில் அமைந்த மகாபாரதம்; நூறு ஆயிரத்தொடு இருபத்தையாயிரத்தொகை—ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் கிரந்தங்களாலானது வியாசபாரதம், ஒற்றெழுத்துகளொழிய முப்பத்திரண்டு எழுத்துகளைக் கொண்டது ஒரு கிரந்தம் எனப்படும்; வியாசர் பாரதத்தைச் சொல்லச்சொல்ல விநாயகர் அதை மேருமலையில் எழுதினார்; வாரணத்து – யானையின்; கணபதி; ஈர்—இரண்டு; அரண—அடியார்களுக்குப் பாதுகாவலாக அமைந்த.

வடபாடல் தொகுத்து எழுது வாரணத்து ஈர் அரணத் திருப் பாதமே தாகந் தீர்த்தவன் பருவத்து இளம்பிள்ளையம் பாடல் ஒரு நூறு பழுது அறுத்து எழுது துணையாம் என்பது முடிபு.

வசிட்ட முனிவரின் பேரராகிய பராசரர் ஒருமுறை யமுனை யாற்றங்கரையில் ஒரு செம்படவத் தலைவனின் மகளாகிய மச்சகந்தியை விழைந்து அவளைப் பரிமளகந்தியாக மாற்றி வியாசரைப் பெற்றார். இம் மச்சகந்தி சத்தியவதி எனவும் அழைக்கப்படுவள். இவ் வியாசரே வடமொழி பாரதத்தின் ஆசிரியர். வியாசர் சொல்லச் சொல்ல அதனை விநாயகர் எழுதியதாகப் பல நூல்களிலும் காணக் கிடைக்கிறது.

காப்புப்பருவம்

திருமால்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

திருமேவும் பெரும்பரவைத் திரைஉடுத்தாள் கொடுப்பச்
செழித்தகுலோத் தமனைஎங்கள் செழியர்வரோ தயனைத்
தருமேவும் படைக்கரனை அந்தாலங் தீர்த்தான்
தவப்பயனைத் தாகந்தீர்த் தவனைநனி காக்க—
கருமேவும் புயல்ஏழும் நிறம்கடப்பக் கறங்கும்
கடல்ஏழும் பதம்கடப்பக் கரத்துஒருசக் கரம்போய்
உருமேவும் பகன்கடப்பச் சலஞ்சலம்மா மதியத்து
ஒளிகடப்பத் தனதுமனத்து அளிகடவா முதலே. 1

1. திருமேவும் — செல்வம் பொருந்திய, பல மணிகளுக்கும் இடமாகிக் கடல் இரத்தினாகரம் எனப்படுவதால் இவ்வாறு கூறப்பட்டது; பரவை—கடல்; பரவைத் திரை உடுத்தாள் — கடலலைகளை ஆடையாக அணிந்துள்ள நிலமகள், கடல் சூழ் புவி; நிலம் கொடுத்ததால் செழித்த குலம் என்றது வேளாளர் மரபை, அவரே முதன்மையான பயிர்த்தொழிலினராதலின்; குலோத்தமன்—குல உத்தமன், மரபில் சிறந்தவன்: குணசந்தி; வரோதயன்—வர உதயன், தெய்வ ஈகையால் தோன்றியவன்: குணசந்தி.

தருமேவும் — கற்பகத்தைப் போன்ற, வள்ளன்மை மிக்க; படைக்கரனை — ஆயுதங்களை ஏந்தியுள்ள கைகளை உடையவனை, இனிப் படை என்பதற்கு மேழி என உரைத்து மேழிக் கொடியை யேந்தும் கையினன் எனினும் ஆம்; தருமேவும் கரன், படைக்கரன் எனத் தனித்தனியே இயையும்.

கருமேவும் — (நீரால் நிரம்பிச்) சூலுற்ற; புயல் ஏழும் — சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் எனப் பெயர் பெற்ற ஏழு மேகங்களையும்; நிறம் கடப்ப—தமது திருமேனியின் வண்ணம் வெல்லவும், மேகத்தைத் திருமாலின் திருமேனி தன் நிறத்தால் வென்றது; கறங்கும் கடல் ஏழும்—ஒலிக்கின்ற ஏழு கடல்களையும்; பதம் கடப்ப—தமது திருவடிகள் வெல்லவும்; திருவடிகள் கடலை வென்றது வராக அவதாரத்தில் இரணியாட்சனைத் தேடிக்

கடலுள் மூழ்கிய போது; கரத்து – திருக்கைகளில் ஏந்தியுள்ள; ஒரு–ஒப்பற்ற; சக்கரம்–சுதரிசனம்.

உருமேவும் – அழகுபொருந்திய; பகன் கடப்ப – சூரியனை வெல்ல, பன்னிரு கதிரவருள் ஒருவனாகிய பகனின் பெயர் இங்குப் பொதுவாகச் சூரியன் என்ற அளவில் நின்றது; சக்கரம் கதிரவனை தன் ஒளியாலும் வடிவாலும் வென்றது; சலம்சலம் – ஆயிரம் வலம்புரிச் சங்குகளால் சூழப்பட்ட சிறந்த சங்கு, இது இங்குத் திருமாலின் பாஞ்சசன்னியத்தைக் குறித்தது; மா மதியத்து ஒளி–மதியத்து மா ஒளி என இயையும், சந்திரனின் பெரிய ஒளியை; சங்கு சக்கரங்களுக்கு மதியும் கதிரும் உவமை, 'திங்களும் பரிதியும் சங்கமும் திகிரியும்' (திருவரங்கக் கலம்பகம். 32); தனது மனது அளி– தன் திருவுள்ளத்தின்கண் உள்ள கருணை; கடவா– நீங்காத; முதலே–முதற்பொருளாகிய திருமாலே.

நிறம் புயல்ஏழும் கடப்ப, பதம் கடல் ஏழும் கடப்ப, சக்கரம் பகன் கடப்ப, சலஞ்சலம் மதியத்து ஒளி கடப்ப, தனது மனத்து அளி கடவா முதல் குலோத்தமனை, வரோதயனை, படைக்கரனை, தவப்பயனை, தாகந் தீர்த்தவனை நனி காக்க என்பது முடிபு.

திருமகள்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

பொன்மனைப்பங் கயக்காட்டுப் புறக்கிடங்கு படைக்கும்
புரிசைஉல காபுரியைப் புரந்தபுரந் தரனைத்
தென்மலைச்செந் தமிழ்க்குஅடிமை தன்கிளையோடு எழுதும்
தியாகனைத்தா கந்தீர்த்த செழியனையே காக்க–
இன்மனைப்புங் கவன்உலகில் பிறப்புஒருபத்து எடுப்பான்
எனக்கேட்ட கேள்விதொடுத்து இதழ்க்கதவுஆ யிரம்சூழ்
தன்மனைக்குப் பகைமைபத்து கேண்மைபத்து பிறக்கத்
தலைப்படும்என்று ஒருப்படும்அத் தாமரை(மா) மகளே. 2

2. பொன்மனை–திருமகளின் வீடு: ஆறன் தொகை; பொன் மனையாகிய பங்கயம் என்க; பங்கயக் காட்டு–தாமரை மலர்கள் நெருங்கி வனம் போல் வளரும்; புறக்கிடங்கு படைக்கும்–வெளி அகழியைப் பெற்றுள்ள; புரிசை – மதிலை உடைய; புரந்த–

காக்கின்ற என நிகழ்காலப் பொருளில் ஆட்சி; புரந்தரனை— இந்திரனைப் போன்றவனை: உவம ஆகுபெயர்.

தென்மலைச் செந்தமிழ் — தென் திசையிலுள்ள பொதிய மலையிற் பிறந்ததும் செம்மையுடையதுமாகிய தமிழ்மொழி; கிளை—சுற்றத்தார்; தியாகன்—பெருவள்ளல்; 'விலையே தமிழ்க்கு எழுதும் செழியா! திருவேங்கடமே' எனும் செழியதரையன் நன்னெறித் தொடர் (35:4) இங்குக் கருதத்தக்கது.

இன்மனைப்புங்கவன்—இனிய கணவன், திருமால்; அகமுடையான், வீட்டுக்காரன் என்பது போல் மனைப்புங்கவன்; பிறப்பு ஒரு பத்து—தசாவதாரம்; இதழ்க்கதவு ; உருவகம்.

தன் மனை—(இலக்குமிக்குத்) தனது வீடாகிய தாமரை; இச் செய்யுளின் பிற்பாதியில் திருமகளைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ள செய்தி விளங்கவில்லை.

தாமரைமாமகள் தாகந்தீர்த்த செழியனைக் காக்க என்பது பொருள் முடிபு.

பிரமதேவன்

பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்

வேல்இரண்டு ஆயிரம் கண்ணுடை மடங்கற்கு
விட்டவற்கு ஒத்தகட் டழகனை,
மேகத்து அடித்தளை களைந்த பிணையாளனை
வியன்பாலை யம்பதித் தலைவனைச்
சேல்இரண்டு ஆயிரம் பொருகண்ணார் ஆயிரத்
திருநதித் தொல்குலத் திலகனைச்
சேலம்பு ரந்ததா கந்தீர்த்த செழியனைத்
தென்தமிழ்ச் செழியனைக் காக்குமால்—
பால்இரண் டாயிரம் தசம்ஆம்இ யோசனைப்
படுநிலா மண்டலப் பகைமையும்
பன்னிரண்டு ஆயிரம் செங்கதிர்க் கேண்மையும்
பாரித்த பீடிகைக் கடவுளாய்
நால்இரண்டு ஆயிரம் பன்னகா திபர்கள்தம்
நகைமுடிச் சுமைதரற்கு ஆதியாய்
நனிஇரண்டு ஆயிரம் சதுர்யுகத்து எல்லைஓர்
நாள்வரைக்கு எல்லையாம் நம்பனே. 3

3. இரண்டாயிரம் கண்ணுடை மடங்கல் – (ஆயிரம் தலைகளும்) 2000 விழிகளையும் உடைய சிங்கமுகாசுரன்; மடங்கற்கு வேல் விட்டவற்கு என இயையும், சிங்கமுகாசுரனின் மேல் வேலாயுதத்தை ஏவிய முருகக்கடவுளுக்கு;சிங்கமுகாசுரன்–இவன் காசிப முனிவனுக்கும் மாயைக்கும் ஆயிரம் சிங்க முகங்களோடு பிறந்து முருகப்பெருமானின் வேலாயுதத்திற்கு இரையானவன்; செழியன் எழிலில் முருகனைப் போன்றவன் என்றவாறு;மேகத்து அடித்தளை களைந்த பிணையாளன்–ஒரு காலத்தில் இந்திரன் பாண்டியனுடன் போரிட்டுத் தோற்றுத் தன் வாகனமாகிய மேகத்தையும் விட்டுவிட்டு ஓடிவிட்டான். பாண்டியன் அம் மேகத்தைச் சிறைப்படுத்தினான். சோழ நாட்டு வேளாளர்களிற் சிலர் பாண்டிய மன்னனிடம் பிணையேற்று மேகத்தை விடுவித்தனர். இதனாலேயே அம் மரபினர்க்குக் கார்காத்த வேளாளர் என்ற பெயர் அமைந்தது. இக் கார்காத்த வேளாளர்கள் மகத மண்டலத்தைச் சேர்ந்தவர்கள். இப் பாட்டுடைத் தலைவனாகிய தாகந்தீர்த்த செழியனும் மகத மண்டலத்தைச் சேர்ந்தவனே. இவ் வரலாற்றைச் சரவணையா என்னும் புலவரால் இயற்றப் பெற்ற 'மேழி விளக்கம்' என்னும் நூல் விளங்கக் கூறுகிறது (கண்ணிகள் 554–572); வியன் – பெரிய; பாலையம்பதி – பாலையூர்.

சேல் – மீனினத்துள் ஒன்று, மகளிரின் விழிக்கு உவமை; பொரு : உவமஉருபு; கங்கைக்கு ஆயிரம் முகம் உடைமை பற்றி விழிகள் இரண்டாயிரம் ஆயிற்று; 'நிலைதளரா ஆயிரம்மா முகத்தி னோடும் பாய்ந்தொருத்தி படர்சடைமேல் படரக் கண்டும்' என்பது அப்பர் வாக்கு (தேவாரம் 6 – பலவகைத் திருத்தாண்டகம்– 1). திருநதி – புனிதமிக்க ஆறாகிய கங்கை; தொல்குலம் – பழைமையான மரபு; திலகன்–நுதலில் அணியும் திலகம் போன்று தலைமையானவன்; பொதுவாகக் குலதிலகன் என இயல்பாக வரும் வடமொழிச்சந்தி செய்யுளோசை கருதிக் குலத்திலகன் என விரிக்கப்பட்டது. வேளாளர்களைக் கங்கைக் குலத்தோர் என்பது மரபு; சேலம் – சின்னசேலம் என்னும் ஊர்; தென்தமிழ்ச் செழியனை – தென்திசையை ஆள்பவனும் தமிழ்ச் சங்கத்திற்கு உரியவனுமாகிய பாண்டியனைப் போன்ற தாகந்தீர்த்த செழியனை: அடை அடுத்த உவம ஆகுபெயர்; முதலில் வந்த செழியன் பாட்டுடைத் தலைவனின் குடிப்பெயர், பின்னர் வந்தது பாண்டியன் என்ற பொருளில்; காக்கும்–பாதுகாப்பார்; ஆல்:அசை.

பால்–தனக்கு உரிமையாக; இரண்டாயிரம் தசம் – சொற்கிடக்கை 2000 × 10 = 20,000 எனக் கொள்ளக் கிடப்பினும்

தசம் இரண்டாயிரம் எனக் கூட்டி 12,000 எனப் பொருள் கொள்க. என்னை? சந்திர மண்டலம் 12,000 யோசனைப் பரப்புடையது எனல் மரபு (அபிதான சிந்தாமணி. பக். 579); யோசனை–நான்கு குரோச தூரம், சுமார் 9.9 மைல் (நாமதீப நிகண்டு 807,808); நிலாமண்டலம்–சந்திர மண்டலம்; தாமரை இரவில் குவிதலின் நிலவின் பகை எனப்பட்டது; பன்னிரண்டு ஆயிரம் செங்கதிர் – ஆயிரம் சிவந்த கிரணங்களை உடைய பன்னிரண்டு கதிரவர்கள், செங்கதிர் : ஆகுபெயர்; 'சூரியர்கள் பன்னிருவர் பன்னிரண் டாயிரம் சுடரொடும் சூழ்வருவரே' (தக்கயாகப் பரணி. 78); பன்னிரு சூரியர்–தா்த்ரூ, சக்கரன், அர்யமான், மித்திரன், வருணன், அம்சுமான், இரணியன், பகன், விவசுவான், பூஷணன், சவித்ரு, துவட்டன் எனப்படுவார். கேண்மை – நட்பு; தாமரை சூரியனைக் கண்டு மலர்தலின் நட்புண்மை பெறப்பட்டது; பாரித்த – மிகுதியாகப் பெற்ற; பீடிகைக் கடவுளாய் – ஆசனத்தை உடைய தெய்வமாய், கமலாசனக் கடவுளாய் என்றவாறு.

நால் இரண்டு பன்னகாதிபர்கள் தம் ஆயிரம் நகைமுடிச் சுமை தரற்கு ஆதியாய் என இயையும்; நால் இரண்டு பன்னகா திபர்கள் என்றது பூமியைத் தாங்குகின்ற எட்டு நாகங்களை; அவையாவன:– கிழக்கு – வா்சுகி, தென்கிழக்கு – அனந்தன், தெற்கு–தட்சன், தென்மேற்கு–சங்கபாலன், மேற்கு – குளிகன், வடமேற்கு–பதுமன், வடக்கு–மகாபதுமன், வடகிழக்கு–கார்க் கோடகன், இந்த எட்டு நாகங்களும் நடுவேயிருந்து பூமியைத் தாங்குகின்ற ஆதிசேடனைப் போலவே ஆயிரம் தலைகளைப் பெற்றவை என்பது இந்நூலாசிரியர்கருத்துப்போலும்;நகைமுடி– ஒளிவீசுகின்ற தலை: வினைத்தொகை; முடிச்சுமை என்றது தலைகளால் தாங்கப்படும் உலகை; தரற்கு – தருதற்கு, படைத் தலுக்கு; ஆதியாய் – முதற்கடவுளாய்; சதுர்யுகம் – கிருதயுகம், திரேதாயுகம்,துவாபரயுகம்,கலியுகம் எனப்படும் நான்கு யுகங்கள்; எல்லை – கால அளவு; இவ்வாறு ஆயிரம் சதுர்யுகங்களைக் கொண்டது பிரம தேவனுக்கு ஒரு பகலாகும்; இரவு மற்றுமோர் ஆயிரம் சதுர்யுகங்களாம்; இவ்வாறு பிரமனுக்கு ஒரு நாள் என்பது மனிதர்களின் கணக்கில் இரண்டாயிரம் சதுர்யுகங்கள் ஆகின்றன; 'நால்வகை ஊழி ஆயிரம் நடக்கில் நான்முகற்கு ஓர் பகல். . . .' (செவ்வைச்சூடுவார் பாகவதம்–471); நம்பன்– கடவுள், இங்குப் பிரமதேவன். பீடிகைக் கடவுளாய் ஆதியாய் எல்லைஆம் நம்பன் அழகனை பிணையாளனை, தலைவனை,

குலதிலகனை, தாகந்தீர்த்த செழியனை, தென் தமிழ்ச் செழியனைக் காக்கும் என்பது பொருள் முடிபு.

பொன்பரப்பீசர்

ஞ ஊ..தென் குமரியும் சோழர்கா வேரியும்
சேரர்தம் பொருநையும் தேரலர்ச்
செஞ்சோரி நதிபெறப் பொருதஅந் தாலன்சேய்
செழித்ததா கந்தீர்த்த செழியனைப்
பொன்னகம் பொருவுபொற் புரிசைஉல காபுரிப்
பொன்பரப் பியநாதர் பாதமும்
புவனகோ டியின்முடித் திருஅரைக் கச்சையும்
பூண்முலைச் செதுக்கைமார்பு அகலமும்
கல்நகும் கரதலத்து அருணக்க ணிச்சியும்
கண்டநீ லக்குலக் கொண்டலும்
கருணோத திச்சந்த்ர வதனமும், வேதுஅறுஅக்
கடல்பவள வாய்நகைத் தரளமும்
அல்நகும் பெருவயக் குண்டலத்து உபயமும்
அலர்ந்தமுக் கட்புலச் சோதியும்
ஆயிரத் திருமுகப் பங்கயக் கங்கையும்
அரக்குவார் சடையும்பு ரக்கவே. 4

4. தென்னவர் — பாண்டியர்; குமரி—சேர, சோழர்களுக்கு ஆற்றைக் கூறியதால் இங்கும் ஆறே கொள்ளப்பட்டது, கடலால் கொள்ளப்பட்ட குமரியாற்றைப் பாண்டியரதாகக் கூறும் மரபு பற்றித் தம் காலத்தில் இருப்பதாகக் கூறுகிறார்; பொருநை — தாமிரவருணி; தேரலர்—பகைவர்; செஞ்சோரி—சிவந்த உதிரம்; தேரலர் செஞ்சோரி நதியைக் குமரியும் காவேரியும் பொருநையும் பெறப் பொருத அந்தாலனுடைய சேய் என இயையும். அந்தாலன் மூவேந்தர்தம் நாடுகளிலும் சென்று போரிட்டதால் அவர்களுக் குரிய ஆறுகளில் இரத்த ஆறு கலந்தது என்பது கருத்து.

பொன்னகம் — தேவருலகம்; பொருவு — நிகர்க்கும்; பொற் புரிசை—பொன்னாலாகிய மதிற்சுவர்: மூன்றன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை; பொன்னாலாகிய மதிலால் சூழப்பட்ட தால் அதன் ஒளிபட்டு உலகைநகர் பொன்னுலகைப் போன்று ஒளிர்கிறது; பொன்பரப்பிய நாதர்—உலகைநகர்ச் சிவபெருமான் திருநாமம்; பாதமும்—திருவடிகளும்: உம்மை எண்ணுப்பொருளில்

வந்தது; கச்சை முதலிய பிற இடங்களிலும் இவ்வாறே; புவன கோடி—பலவாகிய உலகங்கள்: முன்பின்னாகத் தொக்க பண்புத் தொகை, கோடி என்பது மிகப்பல என்ற பொருளில் வந்தது; முடி — தன் தலையிலே தாங்குகின்ற; அரைக்கச்சை — இடையில் அணியும் கச்சு, உதரபந்தனம்; சிவபெருமான் ஆதிசேடனை இடையில் கச்சாக அணிபவர் ஆதலின் 'புவன கோடியின் முடித் திருவரைக் கச்சை' என்றார்; பூண் முலை— (உமா தேவியாரின்) அணிகலன்களை அணிந்த நகில்களின்; செதுக்கை—தழும்பினைப் பெற்ற;மார்பகலம்:ஒருபொருட் பன்மொழி, இனி அகல மார்பும் என மாற்றி உரைப்பினும் அமையும்; சிவபெருமான் தேவியின் நகில்களின் தழும்பைத் தன் மார்பில் பெற்ற வரலாற்றைக் காஞ்சிப்புராணம் விரிவாகக் கூறுகிறது.

கல்நகும் கரதலத்து—மேருமலை வில்லாக ஒளிரும் கைகளி னிடத்து உள்ள; கரதலம் : இருபெயரொட்டுப் பண்புத்தொகை; அருண—சிவந்த; கணிச்சியும்—மழுவும்; கண்டம்—கழுத்து; நீலம்—(ஆலகாலமாகிய) நஞ்சு; குலக்கொண்டல்—கூட்டமான மேகம், இங்குச் செறிவான மேகம் என்ற கருத்தில் ஆட்சி; நீலக் குலக் கொண்டல்—நஞ்சாகிய மேகம் என உருவகம். கருண + உததி—கருணோததி, அருட்கடல்; சந்த்ரவதனம்—மதியைப் போன்ற முகம்; வேதுஅறு—வெம்மையைப் போக்குகின்ற; வேது அறு தரளம் எனஇயையும்; கடல்பவளம்—கடலின்கண் தோன்றிய பவளம்;நகைத்தரளம்—பற்களாகிய முத்துகள்: உருவகம்.

அல்நகும்—இருளைத் தோற்கடிக்கின்ற, போக்குகின்ற என்றவாறு; பெரு வய — பெரிய வெற்றியை உடைய; குண்டலத்து உபயமும்—இரு காதணிகளும்; அலர்ந்த—விரிந்த; கட்புலம்—கண் ஆகிய அறிகருவி: இருபெயரொட்டுப்பண்புத்தொகை; அலர்ந்த முக்கட்புலச்சோதி என்றது சிவபெருமானுக்கு ஞாயிறு, திங்கள், தீ ஆகிய மூன்று சுடர்களும் விழிகளாதலின்; ஆயிரம் திருமுகப் பங்கயக் கங்கை—தாமரை போன்ற ஆயிரம் அழகிய முகங்களைப் பெற்றவளாகிய கங்கை, கங்கை இறைவனின் சடையில் இடம் பெற்றுள்ளாள்; அரக்கு—செந்நிறமான; வார்—நீண்ட; அரக்குச் சடை, வார்சடை என இயையும்.

உலகாபுரிப் பொன்பரப்பிய நாதர் பாதமும், கச்சையும், அகலமும், கணிச்சியும், கொண்டலும், வதனமும், தரளமும், குண்டலத்து உபயமும், கட்புலச் சோதியும், கங்கையும், சடையும் தாகந்தீர்த்த செழியனைப் புரக்க என்பது பொருள் முடிபு,

விநாயகர்

சந்தவிருத்தம்

தனதன தனதானந்
தாத்ததனத் தனத்தனத்

குருநிருபர் கதையாதும்
கோட்டின்அழுத்து எழுத்தனைக்
குறியசிறு பிறைசூடும்
சூட்டுமுடிச் சிரத்தனைக்
குரைகடலும் வரைஏழும்
கோத்தமதக் குதிப்பனைக்
குமறுஉததி குதிபாயும்
கூர்த்தபுழைக் கரத்தனைப்
பொருதிகிரி அரிசாபம்
போக்கியஅற் புதத்தனைப்
புடவியொடு நெடுவானம்
போர்த்தவயற்று அகட்டனைப்
புவனம்ஒரு பதினாலும்
போய்த்தொழுபொற் பதத்தனைப்
புகர்முகனை வினையேமும்
போற்றிகருத்து இருத்தும்—
பருதிமதி மலைபோலும்
பூட்டுதொடிப் புயத்தனைப்
பரிவினொடு தருமேகம்
காட்டும்அணிக் கரத்தனைப்
பகல்இரவு பலகாலும்
கேட்கும்இசைப் பெருக்கனைப்
பரணிதர ணிபர்பாடும்
பாட்டுவயக் களிற்றனைத்
திரிபதகை குலதீபம்
போல்பொலிகைக்கு ஒருத்தனைச்
சிகரகிரி இருநாலும்
தீட்டுபுகழ்ச் சிறப்பனைத்
திருஉலகை நகர்சேலம்
காத்தநெறித் திறத்தனைச்
செழியர்அதி பதிதாகந்—
தீர்த்தவனைப் புரக்கவே. 5

5. குரு நிருபர்—குருகுலத்து அரசர், கௌரவரும் பாண்டவருமாகிய சந்திரகுலத்து அரசர்கள்; கதை—இவர்கள் வரலாறாகிய மகாபாரதம்;கோட்டின்—இரட்டுறமொழிதலாகத் தந்தத்தால், மலைச்சிகரத்தின் மீது எனப் பொருள்படுகிறது; அழுத்து—பதியும்படி;எழுத்தனை—எழுதுகின்றவனை,மேருவில் பாரதத்தை வியாசர் சொல்லச் சொல்ல மருப்பினால் எழுதியவர் விநாயகர்; குறியசிறு, முடிச்சிகரம் : ஒருபொருட் பன்மொழிகள்; சூட்டு—உச்சியை உடைய; விநாயகர் முடியிலும் சடை, கொன்றை, பிறை முதலியனவற்றினுண்மையை, 'மூத்த மைந்தன்பால் அளித்தவற்கு ஆர்வம்எனும் மூதுரை வழக்குடைமையான் முப்புரம் முருக்கும் திறல்தந்தை தந்தருள முறைமையில் கொண்டதேபோல் பூத்தவெண் திங்களும் பாசுஅறுகும் இதழியும் பொறியரவும் ஒண்கங்கையும் பொற்புற அணிந்தருள் கொழிக்கும் ஒருகோட்டுப் புராதனனை அஞ்சலிப்பாம்' என்பதால் அறியலாம் (திருத்தவத்துறைப் பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழ். பாயிரம்—4); குரைகடல் – ஒலிக்கின்ற சமுத்திரம்; வரை ஏழு – கயிலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி என்னும் ஏழு மலைகள்,இவற்றுடன் கந்தமாதனத்தைச் சேர்த்து அட்டகுலாசலம் என்பர்; மதக் குதிப்பன்—குதித்துப் பெருகுகின்ற மதநீரை உடைய விநாயகர்; பிள்ளையாரின் மதநீர் ஏழுமலைகளையும் கடலையும் ஒன்றாக இணைக்கிறது என்றவாறு; இனி ஏழு என்பதனைக் கடலுடனும் கூட்டி உவர்நீர், நல்நீர், பால், தயிர், நெய்,கருப்பஞ்சாறு, தேன்கடல் என்னும் சப்த சமுத்திரங்கள் எனினுமாம்;குமுறு உததி—கொந்தளிக்கின்ற கடல்; கூர்த்த—சிறந்த; புழைக்கரம்—உள் தொளையையுடைய கை, துதிக்கை; விநாயகர் கடல்நீரை உறிஞ்சிய வரலாறு உபதேச காண்டம் கூர்மவதாரச் சருக்கத்தில் உள்ளது, 'சொரிதரு புனலை வாரித் துதிக்கையால் வீசுகின்ற பருமணி ஓடை யானை பாய்திரைப் பரவை ஏழும் கரதலம் எடுத்துச் சிந்தும் கண்ணுதற் களிறு போலும்' என்பது கந்தபுராணம்

(தெய்வயானை திருமணம். 106).

பொரு திகிரி—போரிடுகின்ற சக்கரம்,திருமாலின் சுதரிசனம்; அரி சாபம்—திருமால் பெற்றிருந்த சாபம்; அற்புதத்தன் – வியப்பிற்குரியவராகிய விநாயகர்; ஒரு சமயத்தில் சிவபெருமான் உமாதேவியாருடன் கவறு ஆடுகையில் அம்மையார் வென்றார். திருமால் பெருமானே வென்றதாகப் பொய்ச்சான்று கூறினார். வெகுண்ட தேவியார் திருமாலை மலைப்பாம்பாகப் பாலைவனத்தில் உழலுமாறு சபித்து விட்டார்.சாபம் பெற்ற திருமால் பிறகு விநாயகரால் சாபநீக்கம் அடைந்தார் என்பது புராண

வரலாறு. புடவி—நிலம்; வயற்று அகடு — வயிற்றின் உட்பகுதி; புவனம்—உலகம்; பொற்பதத்தன்—அழகிய திருவடிகளை உடைய மூத்த பிள்ளையார்; புகர்முகனை — யானை முகத்தனை; வினையேமும் — தீவினையை உடையேமாகிய யாமும்: இழிவு சிறப்பும்மை;போற்றிக் கருத்து இருத்துதும் என இருத்தற்பாலது சந்த நோக்கிப் போற்றி கருத்து எனக் கெடுதல் விகாரம் பெற்றது.

பருதிமதி மலை—சூரியனும் சந்திரனும் வெற்பும்: உம்மைத் தொகை; பூட்டு — அணியப்பெற்ற; தொடி—கைவளை, இங்கு வாகுவலையத்தைக் குறித்தது; இருபுயங்கள் உதயகிரி அஸ்தமன கிரி என்னும் மலைகளையும் வாகுவலையம் இரு சுடர்களையும் நிகர்க்கின்றன; புயத்தன் — தோள்களை உடைய தாகந்தீர்த்த செழியன், இனி வருவனவும் இவ்வாறே; பரிவினொடு—கருணை யுடன்; தருமேகம் — வழங்குகின்ற முகில்; காட்டும் — போலும்: உவமஉருபு; அணிக்கரம்—பெருமையை உடைய கைகள்; பெருமை ஈகையால் வந்தது; இசைப் பெருக்கன் — நிறைந்த புகழை உடையவன், செழியன்; தரணியர் பாடும் பரணிப்பாட்டு வயக் களிற்றனை என இயையும்; தரணியர்—மன்னர்; பரணி—போர் வெற்றியைச் சிறப்பித்துப் போற்றும் ஒரு பிரபந்தம்; பரணிப் பாட்டு:இருபெயரொட்டுப் பண்புத்தொகை; வய — வெற்றியை யுடைய; களிற்றனை — யானைப் படையைப் பெற்றுள்ள செழியனை; புலவர்களேயன்றிப் பிற மன்னர்களும் செழியனின் வெற்றியைப் போற்றுகின்றனர் என்றவாறு. அச்சுத களப்பாள னாகிய வாணனை மூவேந்தரும் புகழ்ந்து பாடியதாகக் கூறுவர். அவனைப்போல் இவனும் மகத மண்டலத்தின் மன்னன் ஆதலின் அவன் புகழ் இவன் மேல் ஏற்றிக் கூறப்பட்டது.

திரிபதகை—கங்கை; பொலிகைக்கு ஒருத்தன்—சிறப்படைந்து விளங்குவதற்குக் காரணமானவனும் நிகரற்றவனுமாகிய செழியன்;சிகரகிரி—கொடுமுடிகளையுடைய மலைகள்:இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை; சிகரகிரி இருநாலு என்றது எட்டுக் குலபருவதங்களை, இவை முதலடிக் குறிப் புரையில் கூறப்பெற்றன;திரு என்னும் அடையை உலகை, சேலம் ஆகிய இரண்டுடனும் கூட்டுக; செழியர் அதிபதி—செழியர்களின் தலைவனாகிய; புரக்க—காக்க; ஏகாரம்: ஈற்றசை.

புயத்தனும் கரத்தனும் பெருக்கனும் களிற்றனும் ஒருத்தனும் சிறப்பனும் திறத்தனும் ஆகிய தாகந்தீர்த்தவனைப் புரக்க வினையேமும் புகர்முகனைப் போற்றிக் கருத்து இருத்துதும் என்பது கருத்து.

முருகப்பெருமான்

தனதன தானந் தனதன தானந்
தனதன தானந் தானந் தாத்தா

கரிமகள் தானும் பிணைமகள் தானும்
கடிகமழ் தாமம் சூடும் சூட்டான்
கனவரை மார்பம் புயவரை நீயம்
களிஅளி கீதம் பாடும் பாட்டான்
கமலமும் நாணும் பரிபுர பாதம்
கதறிய வேதம் தேடும் தேட்டான்
கடல்உலகு ஏழும் சிறுநொடி சூழும்
கதியின்ம யூரம் போகும் போக்கான்
சொரிமத வேழம் தனதுஇரு பாலும்
சுரபரி யாளம் கூடும் கூட்டான்
தொடுகுழை ஆகும் படிஅடி யார்தம்
துதிபல யாவும் பூணும் பூட்டான்
தொழும்இமை யோர்பண்டு அவுணர்க ளால்வெங்
துயர்படு பாடும் கேடும் கேட்டான்
சுருதிபு ராணம் கருதிய போதம்
தொகுமுனி வோர்முன் கூறும் கூற்றான்
திரிபுரம் மோதும் பொருசிலை வீரன்
திருவடி ஞானம் தேறும் தேற்றான்
சினவுக னாடம் குகுரம்இ லாடம்
திமிதக டாரம் சீனம் தேய்த்தான்
திசைஇரு நாலும் புவிபதி னாலும்
திகிரியொ டேசெங் கோலும் சேர்த்தான்
திரைகரை மோதும் புணரியின் மேலும்
செறுநர்தம் மேலும் பாணம் கோத்தான்
தரியலர் காலன் தவபரி பாலன்
தருமவி சாலன் தாலம் பூத்தான்
தழைகையி னாலும் பொழிகையி னாலும்
தருநிக ராம்அங் தாலங் தீர்த்தான்
தனதுகு மாரன் செழியகு லேசன்
தமிழுல கேசன் தாகந் தீர்த்தான்
தனைமலர் மானும் கலைநில மானும்
சயமகள் தானும் சாரும் காப்பே, 6

6. கரிமகள் – ஐராவதத்தால் வளர்க்கப்பெற்ற தெய்வ யானை; பிணைமகள் – மானின் வயிற்றில் பிறந்த வள்ளி நாச்சியார்; கடி–நறுமணம்;தாமம்–மாலை, இங்கு மணமாலை; கணவரை மார்பம்–பெரிய மலையைப் போன்ற மார்பு;புயவரை– தோள்களாகிய மலை: உருவகம்; நீபம்–கடம்பு, இங்கு நீபமலர் மாலைக்கு ஆகுபெயர்; களிஅளி – தேனருந்துகின்ற வண்டுகள்: வினைத்தொகை; மார்பிலும் தோள்களிலும் உள்ள கடம்ப மாலையில் வண்டுகள் இசைக்கின்றன; கமலமும் நாணும் பாதம், பரிபுரப் பாதம் என இயையும்; பரிபுரம்–காற்சதங்கை; கதறிய வேதம்–ஒப்புமை: 'இதுஅல அதுஅல எதுஎன இசைபொலி முது மறை கதறிட முடிமிசை மருவினை' (திருப்பேரூர்க்கலம்பகம். 1. அராகம், 4.); வேதங்கள் முருகப்பெருமானுடைய திருவடித் தாமரைகளைத் தேடுகின்றன; தேட்டம்–தேடுதல்; தேட்டான்– தேடப்படுபவன் எனப்பிறவினைப்பொருளில் வந்தது;சிறுநொடி– சிறிய கால அளவையாகிய ஒரு நொடிக்குள்; சூழும்–வலம்வரும்; கதியின் – வேகத்தில்; மயூரம் – மயில்; போக்கான் – போக்கை உடையவன்; மாங்கனிக்காக உலகை ஒருநொடியில் வலம் வந்த வரலாறு குறிக்கப்படுகிறது.

சொரிமத வேழம் – பொழிகின்ற மதநீரைப் பெற்றுள்ள யானை; இருபாலும்–இருபக்கங்களிலும்;சுர பரியாளம்–தேவர்க ளாகிய சூழ்ந்து வருபவர்கள்; கூட்டான் – கூட்டத்தை உடையவன்; முருகப்பெருமானுடைய திருஞான வேழம் என்னும் யானை, 'காவில் தேவர்களோடு உற்று ஆள்அரி காணிக்கு ஆதரம் ஆம் மல் பெறுமே' (திருச்செந்தில் தசாங்க வகுப்பு.5.) எனக் கூறப்படுவது இங்குக் கருதத்தக்கது; தொடுகுழை–அணிந் துள்ள காதணி; அடியார்தம் துதியாவும் தொடு குழை ஆகும்படி பூணும் பூட்டான் என இயையும்;துதிகளே முருகனுக்குக் காதணி களாம்;இமையோர்–தேவர்கள்;பண்டு–முற்காலத்தில்;அவுணர்– அசுரர்; பாடும் கேடும்–துன்பமும் இழப்பும்: எண்ணும்மைகள்; கேட்டான்–கேட்டவராகிய முருகக் கடவுள்:வினையாலணையும் பெயர்; சுருதி–செவியால் கேட்கப்படும் வேதம்;சுருதி புராணம்: உம்மைத்தொகை; போதம் – மெய்யறிவு; தொகு முனிவோர்– ஞானத்தைத் தம்பால் தொகுத்துள்ள தவசிகள்; முன்கூறும்– அனைத்திற்கும் முதலாவதாகச் சொல்லும்; கூற்றான் – சொல்லாகிய பிரணவப் பொருளாம் முருகப்பெருமான்.

திரிபுரம்–முப்புரங்களுடன்; மோதும்–போர் புரியும்; பொரு சிலை–போரிடுகின்ற வில்; இனி இரட்டுற மொழிதலாகப் போர் புரியும் மலையானியன்ற வில் எனினுமாம்;வீரன்–சிவபெருமான்; திருவடி ஞானம் என்பது சிவஞானத்தை; தேறும்–தெளிகின்ற;

தேற்றான் – அறிவுத் தெளிவினை உடைய அந்தாலந்தீர்த்த செழியன், இனி வருவனவும் இவ்வாறே கொள்க; சினவு – கோபிக்கின்ற; கனாடம் – கருநாடகம், குகுரம் – ஐம்பத்தாறு தேசங்களுள் ஒன்று; இலாடம் – ஒரு தேசம்; திமித–ஒலி மிக்க; கடாரம்–பர்மா; தேய்த்தான் – போரில் தோற்கடித்தவனாகிய அந்தாலந் தீர்த்தான்; திசை இருநாலு – எட்டுத்திக்கு; புவி – உலகங்கள்; திகிரி–ஆக்ஞாசக்கரம்; திரை – அலைகள்; புணரி – கடல்; செறுநர்–பகைவர்; பாணம் கோத்தான்–அம்பு தொடுத்த அந்தாலந் தீர்த்தான்; இராமவதாரத்தில் இலங்கைக்குச் செல்ல வழிவிடாத போது இராமர் கடல்மீது அம்பெய்யக் கருதினார்; திருவுடை மன்னரைத் திருமாலாகக் காணும் இலக்கியமரபு பற்றி இவ் வரலாறு செழியன்மேலேற்றப்பட்டது.

தரியலர்–பகைவர்களுக்கு; காலன்–இயமனைப்போன்றவன்; தவ–தவம் முதலிய அறச்செயல்களை; பரிபாலன் – பாதுகாப்பவன்; தரும விசாலன்–விசால தருமன் என மாறுக, மிக விரிவான அளவில் அறப்பணிகளைச் செய்பவன்; தாலம் பூத்தான் – உலகத்தின்கண் விளங்கியவனாகிய அந்தாலந் தீர்த்தான்; காலனாகவும் பரிபாலனாகவும் விசாலனாகவும் தாலம் பூத்தான் என்பது கருத்து; தழைகையினாலும் – தான் மேன்மேலும் செழித்து வளர்வதாலும்; பொழிகையினாலும் – இரவலர்களுக்கு வழங்குவதாலும்; தரு நிகர் ஆம்–கற்பகத்திற்கு இணையான; செழிய குலேசன் – செழியர்களின் வம்சத்திற்குத் தலைவன், குல+ஈசன்=குலேசன்; தமிழ் உலகேசன் – தமிழ் நாட்டிற்குத் தலைவன், உலக+ஈசன்; இனி உலகேசன் என்பதனை உலகைக்குத் தலைவன் எனினுமாம், இப்பொருளில் உலகை ஈற்று ஐகாரம் கெட்டுக் குணசந்தி பெற்றதாகக் கொளல் வேண்டும்; தாகந் தீர்த்தான்தனை என்றது தாகந்தீர்த்தான் தன்பால் என்ற பொருளில்: வேற்றுமை மயக்கம்; மலர்மான் – இலக்குமி; கலைமான் – சரசுவதி; நிலமான் – நிலமடந்தை; சயமகள் – வெற்றிச் செல்வி, கொற்றவை; சாரும்–பொருந்தும்.

தாகந்தீர்த்தானை வாளா காப்பதோடு அமையாமல் அவன் பால் செல்வம், கல்வி, அரசு, வெற்றி முதலியனவும் பொருந்தச் செய்து முருகப்பெருமான் காக்க வேண்டும் என்பது விழைவு.

அந்தாலந் தீர்த்தான் தனது குமாரன் தாகந்தீர்த்தான்தனை (தன்பால்) மலர்மான், கலைமான், நிலமான், சயமகள் தானும் சாரும் காப்பு சூட்டானும், பாட்டானும், தேட்டானும், போக்கானும், கூட்டானும், பூட்டானும், கேட்டானும், கூற்றானும் ஆகிய முருகப்பெருமானாவர் என்பது கருத்து.

பெரிய நாயகி

தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தானந் தாத்தன

மரகத பரிபுரை பரைஅனு பமைஉமை
மகிதலம் ஒருபதி னாலும் பூத்தவள்
வளர்இள முகுளித சததள முலைகளை
மலைவரி சிலையவர் மார்பம் சேர்த்தவள்
வரைமுக டதுபயில் மடமயில் மயில்என
மயிடனது ஒருதலை மேல்நின்று ஆர்த்தவள்
மறிகடல் வலிகெட வருணனும் வழிவிட
வருமுகி லுடன்வரு கோலம் காத்தவள்
உரகரும் அமரரும் முனிவரும் மனிதரும்
ஒளிதெளி தரஅரு ளோடும் பார்த்தவள்
உழிதரு பருதியொடு உடுபதி விழிஎன
உருள்புரி திகிரியில் வாளம் கூர்த்தவள்
உமிழ்மத கரிபொரும் அரியதன் முதுகினும்
உருஎழில் மலிகலை மீதும் தோற்றினள்
உபனிட விதியினும் அரியர்தம் மதியினும்
உறநிறு வியஇரு பாதம் போற்றுதும்—
அரதன கணபண மவுலியின் உலகமது
அடையவும் ஒருகுடை ஆளும் பார்த்திபன்
அதிமது ரியமது கவிகொடு மதுரையர்
அளகையர் உதகையர் பாடும் கீர்த்தியன்
அறிவினில் நெறிதனில் நிறைபொறை முறைமையில்
அழகினில் இளமையில் ஆரும் தோற்பவன்
அளிகுலம் மலகரி பயிரவி பவுளியின்
அமுதுஒழு கியகமு நீர்அம் தார்ப்புயன்
இரணிய தரணியை இரசத தரணிஇது
எனஎழு புகழ்உலகு ஏழும் போர்ப்பவன்
இகலிய கலிஇருள் அகலிய மிடிஇருள்
இவைமுத லியஇருள் ஈரும் பாற்கரன்
இருநிலம் முழுவதும் உழுகொழு மிகுதியின்
எதிரும்ஓர் எதிர்இலி தாகந் தீர்த்தவன்
எனும்ஒரு செழியனை உலகையர் தலைவனை
இமகர தினகரன் நாளும் காக்கவே. 7

7. பெரிய நாயகி – உலகாபுரியில் எழுந்தருளியுள்ள உமையம்மையின் திருநாமம், 'உலகைநகர்ப் பெரியாளைச் சிந்தை சேர்ப்பாம்' (திருவாணி வாது. 3.)

மரகத பரிபுரை – பச்சைக் கற்களிழைத்த சிலம்பினை அணிந்தவள்;பரை–அனைத்தையும் கடந்துநிற்பவள்;அனுபமை–நிகரற்றவள்; மகிதலம் ஒரு பதினாலும் பூத்தவள் – பதினான்கு உலகங்களையும் தோற்றுவித்தவள், 'பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம் காத்தவளே' (அபிராமி அந்தாதி. 13.); வளர், இள, முகுளித சததள எனும் மூன்று அடைகளும் தனித்தனியே முலைகளை என்பதனோடு இயையும்; முகுளித சததளம்–குவிந்த தாமரை, தாமரை மொட்டு, இது நகிலுக்கு உவமை, 'கமல முகுளித முலை' (திருப்புகழ் 1241); மலை–மேருகிரியாகிய; வரி சிலையவர் – கட்டப்பெற்ற வில்லை உடையவர், சிவபெருமான்; முலைகளை மார்பம் சேர்த்தவள் என இயையும், தழுவியவள் என்றபடி; இனி முலைகள் என்பதனை முலைகளாலான தழும்புக்கு ஆகுபெயராக்கி உரைப்பினும் அமையும்; 'கரியுரி போர்த்தசெஞ் சேவகன் மெய்யடையக் கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி' என்பார் அபிராமி பட்டர்(அபிராமி அந்தாதி.62.);வரை முகடது பயில்–மலையின் சிகரங்களில் பழகிய, இறைவி இமவானின் மகளாதலின் மலைகளில் பழகியவள்;மடமையில்–பேதைமையால்,அறியாமையால்; மயிடனது ஒரு தலைமேல் நின்று மயில் என ஆர்த்தவள் என இயையும்; மயிடன் – மகிஷாசுரன்; ஒருதலை – ஒப்பற்ற சிரம்; ஆர்த்தவள் – முழங்கியவள்; மயிடனது தலை கரிய பெரிய எருமைத்தலை; அது மலைச்சிகரம் போல விளங்குகிறது; அதைப் பார்த்த உடனே கொடுமுடிகளில் வரையெதிர் கூவி விளையாடிப் பழகிய தேவி அது அசுரனின் தலையென்பதை மறந்த பேதைமையால் அதன்மீது ஏறி மயில் போல் நின்று முழங்குகிறாள் என்றவாறு; 'அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை' (சிலப்பதிகாரம். வழக்குரை காதை. 34 – 36); மறி கடல் – அறைகின்ற கடல்; வலி கெட – தன் வலிமையை இழக்கும்படி; வருணன் வழிவிட்டது இராமர் இலங்கைக்குக் கடல் மீது பாலம் கட்ட; முகில் – மேகம் போன்ற நிறமுடைய திருமால்: உவம ஆகுபெயர்;கோலம்–வடிவம்;முகிலொடு வரு கோலம் காத்தவள் என்றது தான் திருமாலுக்குத் தங்கை என்பதால் அவரைப் போன்றே கரிய நிறத்தைப் பெற்று விளங்குவதை நினைத்து.

உரகர்–நாகர்கள், ஒளி தெளிதர–அறிவுத்தெளிவைப் பெற, இது தேவியின் ஓர் அம்சமான கலைமகளை நினைந்து கூறியது;

''தேவரும் தெய்வப் பெருமானும் நான்மறை செப்புகின்ற
மூவரும் தானவ ராகியுள் ளோரும் முனிவரரும்
யாவரும் ஏனைய எல்லா உயிரும் இதழ்வெளுத்த
பூவரும் மாதின் அருள்கொண்டு ஞானம் புரிகின்றதே''
(சரசுவதியந்தாதி. 12)

பருதி – சூரியன்; உடுபதி – சந்திரன்; உருள் – உருண்டையான கதாயுதம்;புரி–சங்கு,பாஞ்சசன்னியம்;திகிரி–சக்கரம்,சுதரிசனம்; வில்–சாரங்கம்;வாளம்–வாள்,நந்தகம்,இவ்வைந்தும் திருமாலின் ஐம்படைகள்; கூர்த்தவள் – (மேற்கூறிய படைக்கலங்களால்) சிறப்பினைப் பெற்றவள், வைஷ்ணவி அம்சத்தை நினைந்தார்; உமிழ் மதகரி–உமிழ்கின்ற மதத்தையுடைய யானை;கரி பொரும் அரி – யானையோடு போரிடும் சிங்கம்; உரு எழில் மலி கலை – வடிவ அழகு மிக்க மான்; துர்க்கைக்கு மானும் ஊர்தியாரும், 'வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக் கரியதிரி கோட்டுக் கலையின்மிசை நின்றாயால்' (சிலப்பதிகாரம்.வேட்டுவ வரி. முன்னிலைப்பரவல்.) உபநிட விதி – உபநிடதத்தின் உபதேசம்; ஆகம, உபநிடதங்களில் கூறப்பெறும் பொருள் தந்திர கலை, மந்திர கலை, உபதேச கலை என மூன்றாகும், சரியை, கிரியை தந்திரத்திலும்,யோகம் மந்திரத்திலும், ஞானம் உபதேசத்திலும் அடங்கும், இதன் விரிவை 'அநாதியே அமலன் ஆய' என்னும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தின் உரைகளில் காணலாம்; 'உபதேச கலையாவது ஆதியந்தமற்ற பரம சிவனுடைய சொரூபத்தையும், ஆன்ம சொரூபத்தையும் ஆசாரி யரால் உபதேசிக்கப் படுதல்' (சிவஞானசித்தியார்–அளவை. 13. மறைஞானசம்பந்தர் உரை); அடியர் தம் மதி – அடியார்களின் உள்ளத்திலும், மதி என்ற சொல் அறிவையன்றி இங்கு உள்ளத்தைக் குறித்தது; உற நிறுவிய – இருக்குமாறு பதித்த, எழுந்தருளிய என்பது கருத்து.

அரதன–(மாணிக்கமாகிய) மணிகளை உடைய; கண–கூட்ட மான; பண மவுலியின்–பாம்பின் தலையின் மீதுள்ள. உலகைத் தாங்கும் ஆதிசேடனுக்கு ஆயிரந் தலைகளாதலின் கண பண மவுலி என்றார்; அடையவும்–முழுவதும்; பார்த்திபன்–மன்னன்; அதி மதுரிய–மிக இனிமையான; முதுகவி–(மிகப் பழைய மொழி யாகிய) தமிழ்க் கவி, மொழியின் முதுமை கவிதையின் மேல் ஏற்றப்பட்டது; உபசார வழக்கு; அளகையர்–தஞ்சைச்சோழர் கள், தஞ்சாவூருக்கு இப் பெயருண்மையைக் குலோத்துங்க சோழன் கோவையில், 'அத்தாரு நேரும் குலோத்துங்க சோழன் அளகை வெற்பில்' (11) என்பது போன்ற பல இடங்களில் காணலாம்;உதகையர்–சேரர்,'சாரன்மலை ஈட்டும்சேரன் மலை

ஞாட்டுத் தாவடிக்குவட்டின் பாவடிச் சுவட்டுத் தொடர்நெய்க் கனகம் துகள்எழ நெடுதல் கோபுரம் கோவை குலைய மாபெரும் புரிசை வட்டம் பொடிபடப் புரிசைச் சுதைகவின் படைத்த குளிகை மாளிகை உதகை....' (பெருந்தொகை. 1047); செழியதரையனை மூவேந்தரும் புகழ்கின்றனர் என்றவாறு; இந் நூல் ஐந்தாம் பாடல் குறிப்புரை காண்க. நெறி—ஒழுக்கம்; நிறை பொறை முறைமை—நிறைந்த பொறுமையுடன் ஆட்சி செய்தல்; ஆரும் தோற்பவன்—(அழகு முதலிய பண்புகளில்) பிறரனைவரும் தோல்வியடையும்படி வென்று நிற்பவன்; அளிகுலம் – வண்டுக் கூட்டங்கள்; மலகரி,பயிரவி, பவுளி என்பன பண்கள்; 'மலகரி குறிஞ்சி தேசி பயிரவி சுரும்பு பாடும் வயலருணை' (திருவருணைக் கலம்பகம். 66); அமுது—இசை யாகிய அமுது: உவம ஆகுபெயர்; கழுநீர்த்தார்—குவளை மலர் மாலை, இது வேளாளர்களுக்கு உரியது.

இரணிய தரணியை—பொன்னுலகை, தேவலோகத்தை;இது இரசத தரணி என—இவ்வுலகு வெள்ளியுலகமே என்று கூறும்படி; எழு புகழ் – உயர்கின்ற கீர்த்தி: வினைத்தொகை; செழியனின் புகழ் ஏழு உலகங்களிலும் பரவுகிறது; அது வானுலகிலும் மிக்கு விளங்குவதால் அப் பொன்னுலகம் வெள்ளி உலகம் போல் காட்சி யளிக்கிறது. புகழ்வெண்மை நிறமுடையது என்பது மரபு. இகலிய—போரிடுகின்ற, வருத்துகின்ற; கலி இருள்—துன்பமாகிய இருட்டு;அகலிய-அகன்றுள்ள.'நாடுகண் அகற்றிய உதியஞ் சேரல்' (அகநானூறு 65:5) என்புழிப் போல;மிடி இருள்—வறுமையாகிய இருட்டு; கலி இருள், மிடி இருள் இரண்டும் உருவகம்; இவை முதலிய இருள் என்றது அறியாமை, நோய், பகை முதலியன வற்றை; ஈரும்—போக்கும்; பாற்கரன்—சூரியன்,பாஸ்கரன் எனும் வடசொல்லின் திரிபு; இருநிலம்—பெரிய பூமி; உழுகொழு – உழு கின்ற ஏர்க்கொழு;இங்கு விவசாயத்தைக் குறித்தது; எதிரும் ஓர் எதிர்இலி—உவமிப்பதற்கு ஓர் உவமை இல்லாதவன்,நிகரற்றவன்; இமகர தினகரன் நாளும்—திங்களும் கதிரவனும் இருக்கும் காலம் வரையிலும், ஆசந்த்ரார்க்கம், எப்போதும் என்றபடி; இமகரன்—குளிர்ந்த கதிர்களை உடைய மதி; தினகரன்—பகலைச் செய்கின்ற கதிர், 'உதய தினகர இமகரன் வலம்வரும் உலகம்'

(திருப்புகழ் 1244.)

தாகந் தீர்த்தவன் எனுமொரு செழியனை, உலகையர் தலை வனை இமகர தினகரன் நாளும் காக்க பரிபுரை,பரை,அனுபமை, உமை, பூத்தவள், சேர்த்தவள், ஆர்த்தவள், காத்தவள், பார்த்தவள், கூர்த்தவள், தோற்றினள்(ஆகிய பெரியநாயகியின்) இரு பாதம் போற்றதும் என்பது பொருள் முடிபு.

சத்தமாதர்

தானந் த்ரத்த தனதன தனதன
தனதன தனதன தானனத் தனத்தன

காலம் பூத்த கருமழை முகிலொடு
கடலொடு நிறமுறழ் கரசக் கரத்தியைக்
காதும் காய்ப்பின் இருபிறை எயிறுகள்
கதிர்எறி எறுழியின் வதனத்து ஒருத்தியைக்
காணம் காட்டு கிரிவரி சிலைஅரி
கணைகுணம் அரவுஎன வருவித் தசத்தியைக்
காணும் காட்சி இரணியம் முரணிய
கடிகமழ் இதழிகள் கமழ்பொற் சிரத்தியைச்
சீலம் சீர்த்த சதுமறை அறைவொடு
சிறைமிஞிறு அறைவன வனசத்து அகத்தியைச்
சீறுஞ் சீற்ற வெளிறுஎழும் அழகிய
சிறுகணின் மழகளிறு உகைபொற் பதத்தியைச்
சேடன் சூட்டு முடியுலகு இருள்அடு
தினகர னவன்எதிர் எதிர்குக் குடத்தியைத்
தேடுங் தேட்ட முடன்நெடிது உளஅரி
உறஇரு திருவடி மலரத் துதிக்கும்
கோலங் கோச்சி யமுனையில் ஒருவிசை
குடநிரை கொடுதிரி குரவைக் குனிப்பனைக்
கோடுங் கோட்டின் எறிசுனை குடைபவர்
குடவியர் உடுதுகில் கவர்கைத் தலத்தனைக்
கோபம் கோத்த மகபதி விடுபுயல்
குவடுஒரு குடைஎன விலகிட் டசிட்டனைக்
கூரங் கூர்த்த திகிரியின் ஒருமுறை
கொதிபகல் இரவுஎழ நிருமித்த பொற்பனைத்
தாலந் தாழ்த்த ஒருகர மதமலை
தனைவட மதுரையில் அடும்மற் புயத்தனைத்
தாழும் தாப்பின் முடிஉறி நிறுவிய
தடஅளை களைநுகர் உதரத் தடத்தனைத்
தாளம் தாக்கு சதிதர அரவது
தலையிடை நடமிடு சரணச் சிவப்பனைத்
தாகந் தீர்த்த செழியனை உலகையர்
தலைவனை நயகுண தரனைப் புரக்கவே. 8

8. காலம் பூத்த – கரிய நிறத்தால் பொலிவு பெற்ற; கரு– சூலுற்ற;மழை முகில்–குளிர்ந்த மேகம்:முகிலொடும் கடலொடும் உறழ் நிற என இயையும்; எண்ணும்மைகள் தொக்கன; மேகம் கடல் இவை போன்ற நீல நிறத்தினர் என்றவாறு;கர சக்கரத்தி– சக்கரக் கரத்தி என மாறுக, கைகளில் ஆழிப்படையை ஏந்திய வைஷ்ணவி; காதும் – (இரணியாக்கனைக் கொல்கின்ற; காய்ப்பின் – சினத்தை உடைய; பிறை எயிறுகள் – பிறைச் சந்திரனைப் போன்ற கொம்புகள்; கதிர் எறி–ஒளி வீசுகின்ற எறுழி யின் வதனத்து ஒருத்தி – பன்றியின் முகத்தை உடையவளும் ஒப்பற்றவளுமாகிய வராகி; காணம் காட்டு கிரி – பொன்மலை, மேரு; வரிசிலை – வரிந்து கட்டப்பெற்ற வில்; அரி – திருமால்; கணை–அம்பு; குணம் – வில்லின் நாண்; அரவு–பாம்பு, வாசுகி; வருவித்த – தோற்றுவித்த; சத்தி – மாகேசுவரி; திரிபுரத்தை எரித்த வரலாறு;

''கல்லால்நிழற் கீழாயிடர் காவாய்என வானோர்
எல்லாம்ஒரு தேராய்அயன் மறைபூட்டி நின்றுஉய்ப்ப
வல்லாய்எரி காற்றீர்க்கரி கோல்வாசுகி நாண்கல்
வில்லால்எயில் எய்தானிடம் வீழிம்மிழ லைய்யே''

(தேவாரம். i. திருவீழிமிழலை. 7)

'கருதலர் திரிபுரம் மாண்டு நீறெழ மலைசிலை ஒருகையில் வாங்கு நாரணி' என்றார் அருணகிரியாரும் (திருப்புகழ். 503). காணும் காட்சி–பார்க்கத்தக்க அழகினை உடைய; இரணியம் – பொன்னோடு; முரணிய – மாறுபட்ட; கடிகமழ்–மணம் பரப்பு கின்ற; இதழி – கொன்றை; இரணியம் முரணிய இதழிகள், கடிகமழ் இதழிகள் என இயையும்; கமழ் – பரந்து விளங்குகின்ற; பொற்சிரத்தி–அழகிய தலையையுடைய காளி; தக்கயாகப் பரணி யின் 61 ஆம் தாழிசையில் வரும், 'காடுபடு சடை' என்னுந் தொடருக்கு உரையாசிரியர் 'காடுபடு சடையாவது கொன்றை யும், எருக்கு முதலியனவும், பாம்பும், பிறவும் உள்ளதான திருச்சடை' என உரை கூறுவதால் காளிக்கும் சடைமுடியும் கொன்றையும் உரியன என்பது பெறப்படுகிறது.

சீலம் சேர்த்த–ஒழுக்கத்தால் சிறப்புடைய, மறைகளின் நெறி யில் ஒழுகுவாரின் சிறப்பு நூலின்மேல் ஏற்றப்பட்டது: உபசார வழக்கு, இனி ஒழுக்கத்தை உணர்த்துவதால் சிறப்புடைய என இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகையாக்கினும் அமையும்; சதுமறை – (இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்னும்) நான்கு வேதங்கள்; அறைவொடு – சொல்லுதலுடன்; சிறைமிஞிறு – சிறகுகளையுடைய வண்டு; அறை – ஒலிக்கின்ற; வன–வன்ன, அழகிய; இடைக்குறை; வனசத்து–வெண்தாமரை

ஆகிய; அகத்தி – இருப்பிடத்தை உடைய பிராம்மி; இவளை அபிராமி எனவும் கூறுவர்; வனசம் என்பதற்கு இடம் நோக்கி வெண்டாமரை எனச் சிறப்பித்து உரை கூறப்பட்டது; வேதங்களின் முழக்கத்தோடு வண்டுகளின் ஒலியும் தேவியைச் சூழ்கிறது; சீறும் சீற்ற–சீறிப்பாயுமளவு பெருங்கோபத்தையுடைய;வெளிறு எழும் – வெண்மை நிறம் விளங்குகின்ற; சிறுகணின்–சிறிய கண்களையுடைய, 'சிறுகண் யானை செவ்விதின் ஏவி' (புறம் 6:13); மழகளிறு – இளைய ஆண்யானை, ஐராவதம்; உகை பதத்தி – செலுத்துகின்ற திருவடிகளை உடைய இந்திராணி; உகை பதத்தி, பொற்பதத்தி எனத் தனித்தனி இயையும்; சேடன் சூட்டு முடி உலகு – சேடன் முடிச்சூட்டு உலகு என மாறுக; ஆதிசேடனின் தலைக்கு அணிகலனாக உள்ள உலகம், 'அடிச்சூட்டு நூபுரமோ' என்னும் தொடரால் சூட்டு அணியென்பது பெறப்படும் (தக்க. பரணி 119);இருள் அடு–இருட்டைப் போக்குகின்ற;தினகரனவன் எதிர் – கதிரவனுக்கு முன்பாக, அவன் பகுதிப் பொருள் விகுதி; எதிர் – வரவேற்று உபசரிக்கின்ற; குக்குடத்தி – கோழியைக் கொடியாக ஏந்திய கௌமாரி; தேடும் தேட்டமுடன்–அடையும் பெருவிருப்புடன்; நெடிது – நீண்டகாலம்; உள அரி–மனமாகிய பொழில்: உருவகம்.

ஒருவிசை யமுனையில் அங்கு கோல் ஒச்சி குடநிரை கொடு திரி குரவைக் குனிப்பனை எனஇயையும்;ஒருவிசை-(கண்ணனாகத் திரு அவதாரம் செய்த) ஒரு சமயத்தில்: கோல்–இடையர்களின் கையிலுள்ள குச்சி; குட நிரை–குடம் நிறையப் பால்கறக்கும் பசுக்களின் கூட்டம், 'குடஞ் சுட்டு நல்லினத்து ஆயர் எமர்' என்னும் முல்லைக்கலித் தொடரும், அதற்கு 'எம்முடைய சுற்றத்தார் நும் இனத்திற் சிறந்த இன்னதனைக் குடம்பால் போதுமென்று கருதப்படும் பசுவினத்தையுடைய இடையரெனத் தன் செல்வக் குடிப்பிறப்பு உணர்த்தினாள்' என்ற நச்சினார்க்கினியருரையும் (கலி. 113) இங்குக் கருதத்தக்கது, 'வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்' என்றாள் கோதையும் (திருப்பாவை. 3); குரவைக் குனிப்பன்–குரவைக் கூத்தாடிய கண்ணன், 'குடநடம் மகிழ்ந்து குரவைகள் பிணைந்து பொரு தொழில் எருது ஏழு செற்றுத் தணிந்தன' (திருவரங்கக் கலம்பகம்–7); கோடும் கோட்டின்–வளைந்த மரக்கொம்பில் இருந்து; குடைபவர் குடவியர்–நீராடுபவர்களாகிய ஆயர் மகளிர்; குடைபவர்: வினையாலணையும் பெயர்; உடுதுகில்–புனைந்த ஆடை; கவர்–(ஆய்ச்சியர் அறியாதே எடுத்து) மறைத்துக் கொண்ட; கைத்தலத்தன்–கைகளையுடைய கண்ணன்; இவ் வரலாறு வெளிப்படை; கோபம் கோத்த–(ஆயர்கள் தனக்கு

விழா எடுத்து வழிபடாததால்) மிக்க சினமடைந்த; மகபதி—மேகங்களுக்குத் தலைவன் ஆகிய இந்திரன்; விடுபுயல்—ஏவிய மேகங்களை; குவடு—மலை, இங்குக் கோவர்த்தனம்; விலகிட்ட—விலக்கிட்ட எனற்பாலது சந்தநோக்கிக் குறுக்கல் விகாரம் பெற்றது; கண்ணன் கோவர்த்தன மலையைக் குடையாகத் தாங்கி இந்திரன் சினந்து ஏவிய மேகங்கள் ஏழுநாள் பெய்த பெரு மழையைத் தடுத்து ஆயர்களையும் ஆநிரைகளையும் காத்தான்; 'வெடிபட முழங்கி எழு முகிலும் அண்டரொடு நிரை தயங்க எறி திவலை கண்டு தடவரை குடையா எடுத்துச் சுமந்தன' (திருவரங்கக் கலம்பகம். 7); கூரங் கூர்த்து—மிகக் கூர்மையான, இரட்டித்துக் கூறியது கூர்மையின் மிகுதியைப் புலப்படுத்த; திகிரியின்—சக்கரத்தால்; ஒருமுறை—(பாரதப் பெரும் போரின் போது) ஒரு தரம்; கொதி பகல்—(சூரிய வெப்பத்தால்) கொதிக்கின்ற பகல் நேரத்தில்; இரவு எழு—இராக் காலம் தோன்றுமாறு; நிருமித்த—செயற்படுத்திய; பொற்பன்—அழகனாகிய கண்ணன்; அருச்சுனன் தன் மகன் அபிமன்யுவைக் கொன்ற சயத்திரதனைக் கொல்வதற்கு வாய்ப்பாகப் பாரத யுத்தத்தில் பதினான்காம் நாளன்று கண்ணன் தன் சக்கராயுதத்தால் சூரியனை மறைத்து இரவை உண்டாக்கினான்; 'ஒரு பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப் பத்தற்கு இரதத்தைக் கடவிய பச்சைப்புயல்' (திருப்புகழ் 6).

தாலம் தாழ்த்த—பனைமரத்தைப் போன்ற வடிவுடன் தொங்குகின்ற; ஒருகர—ஒப்பற்ற துதிக்கையையுடைய; மதமலை—மதத்தை உடையதும் மலை போன்றதுமாகிய யானை: இல் பொருள் உவம ஆகுபெயர், குவலயாபீடம்; மல்—மற்போர்; புயத்தன்—தோள்களை உடைய கண்ணன்; வடமதுரையில் கஞ்சன் நடத்திய வில்விழாவிற்குக் கண்ணன் சென்றபோது தன்னைத் தாக்கிய குவலயாபீடம் என்னும் பெரிய யானையைக் கொன்று வீழ்த்தினான்; தாழும்—தொங்குகின்ற; தாப்பின் முடி—கயிறுகளை முடித்துச் செய்யப்பட்ட; தட—உயர்ந்த இடத்தி லுள்ள; அளைகளை—வெண்ணெயை, பொருள் ஒன்றாயினும் பல வீடுகளில் தனித்தனியே வைக்கப்பட்டிருந்தமையின் அளை களை என்றார்: உதரத் தடத்தனை—தடஉதரனை என மாறுக, பெரிய வயிற்றினை உடைய கண்ணனை; தாளம் தாக்கு சதிதர—தாள வாத்தியங்களை அடிப்பதால் உண்டாகின்ற தாள வொத்தைப் போன்று ஒலி உண்டாகுமாறு; 'தமருகங்கள்

தருகின்ற சதியின்கண் வருவார்' (கலிங்கத்துப்பரணி. 115); அரவது தலையிடை—காளிங்கன் என்னும் பாம்பின் தலையினிடத்தில், அது: ஆறன் உருபு; நடமிடு—கூத்தாடிய; 'எரியுமிழ் உரக சுடிகையில் நடநவில் அரி' (திருப்புகழ். 1244); சரணச் சிவப்பனை—சிவந்த சரணனை என மாறுக, செந்நிறம் பெற்ற திருவடிகளை உடைய கண்ணனை, இவன் திருமேனி நீல வண்ணத்ததெனினும், 'அரங்கற்குக் கஞ்சம் திருப்பாதம்; கார் மேனி' (திருவரங்கக் கலம்பகம். 23) என்பதால் சிவந்த திருவடிகள் என்றார்; இனிக் காளிங்கனின் தலையில் கூத்தாடியதால் திருப்பாதங்கள் சிவந்தன எனினுமமையும்; உலகையர் தலைவன்—உலகாபுரியில் வாழ்கின்ற மக்களுக்கெல்லாம் நாயகன்; நயகுணதரன்—நல்ல பண்புகளைப் பெற்றிருப்பவன்; மன்னரைத் திருமாலாகக் கூறும் மரபு பற்றி இப்பாடலில் தாகந்தீர்த்தான் கண்ணனாகவே கூறப்படுகிறான்.

குனிப்பனும், கைத்தலத்தனும், சிட்டனும், பொறபனும், புயத்தனும், உதரத் தடத்தனும், சிவப்பனும், தலைவனும், நயகுணதரனும் ஆகிய செழியனைப் புரக்க வைஷ்ணவி முதலிய எழுவரையும் தேடும் தேட்டமுடன் நெடிது உள அரி உற இரு திருவடி மலரத் துதிக்குதும் என்பது பொருள் முடிபு.

பைரவக் கடவுள்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

கசைப்புடைய இரவிபசும் புரவிவிசும்பு இயங்கும்
காலைக்கு மேற்கடல்போய் மாலைக்கீழ்க் கடல்போம்
திசைப்புடைய நிழல்சோலைத் திருப்பாலைக்கு அரசைச்
செழியதரை யனைத்தாகந் தீர்த்தவனைப் புரக்க
அசைப்புடைய கணபணகங் கணங்கள்வெயில் எறித்தும்
(அருளுடனே தலையின்மிசை அமைத்த)நிலவு எறித்தும்
இசைப்புடைய மலர்ச்சடிலக் கானகம்தீ எறித்தும்
இருள்எறிப்பத் திருமேனிக்கு இடும்கருங்கஞ் சுகனே. 9

9. கசைப்புடைய – குதிரைச் சவுக்கைப் பக்கத்தே வைத்துள்ள, கதிரவனின் தேர்க்குதிரைகள் தாமே உரிய வேகத்தில் செல்ல வல்லவை, பிறரால் அடித்துச் செலுத்தப்பட வேண்டியன வன்று, எனவே சவுக்கு பெயரளவிற்கு அருகே வைக்கப்பட்டுள்ளது என்பது கருத்து; இரவி—சூரியன்; பசும் புரவி—பச்சை நிறமுள்ள குதிரைகள், சூரியனின் தேர்க்குதிரைகள் ஏழும் பச்சை நிறத்தன எனப்படும்.

7 'செச்சை மாலிகைச் செய்யவேள் இவர்தரு சிகிநேர்
பச்சை வாம்பரி ஏழுடைப் பரிதிவா னவனே''

(ஞாயிறு ஆயிரம். 882); விசும்பு—ஆகாயம்;மேல்கடல்—மேற்குத் திசையின் கடைசியிலுள்ள கடல்; காலை மாலை, மேற்கடல் கீழ்க்கடல்: பொருள் முரண்தொடை.

திசைப்பு – திகைப்பு; சோலையின் நிழல் சூரியன் கிழக்கி லிருக்கும் காலைப்போதில் மேலைக்கடலையடைந்தும், அவன் மேற்குத் திசையை அடையும் மாலையில் கிழக்குத் திசையை யடைந்தும் திகைக்கிறதாம்; சோலையின் மரங்கள் மிக உயர்ந் திருப்பதால் காலை மாலைகளில் நிழல் சூரியனுக்கு எதிர்த் திசை யில் கடல்வரை நீண்டு விழுகின்றன: உயர்வு நவிற்சியணி; திசைப் புடைய நிழலையுடைய சோலைகள் நிறைந்த திருப்பர்லை என்றவாறு.

அசைப்புடைய – புகழ் மொழிகளைப் பெற்றுள்ள; கண— கூட்டமாகிய, பல; பண – படங்களை உடைய பாம்புகளாகிய; கங்கணங்கள்—கைவளைகள்; 'உரக கங்கணம் தருவன பணமணி, (தக்கயாகப் பரணி—காப்பு); வெயில் எறித்தும் – (பாம்புகளின் படங்களிலுள்ள மாணிக்கங்கள்) ஒளியைப் பரப்பியும்.

இசைப்புடைய – தன்பாற் பொருந்திய; மலர்ச்சடிலக் கானகம்—மலர்களையுடைய சடையாகிய காடு; 'பவளவனம் அடர்பல் சடைக்காட்டினர்' (மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் காப்புப். 2), சடையைக் காடு என்பதற்கேற்ப அதன்கண் கொன்றை, ஆத்தி முதலிய மலர்கள் பொருந்தியுள்ளன என்ற வாறு; சடிலமாகிய இசைப்புடைய மலர்க்கானகம் என இயையும்; தீ எறித்தும் – நெருப்பைப் போன்று செவ்வொளி வீசியும், 'எரியகைந் தன்ன அவிர்ந்துவிளங்கு புரிசடை' (அகநானூறு க.வா. 10.); இருள் எறிப்ப—இருளைத் தோற்றுவிக்கும்படி; கங்கணங்கள் வெயிலெறித்தும், நிலா எறித்தும், இவற்றை யெல்லாம் மீறித் தீ எறித்தும் கூட இருள் பரப்புமாறு என்பது கருத்து; திருமேனிக்கு இடும்—தெய்வீகமான உடலில் அணிகின்ற; கரிய கஞ்சுகன்—கருமையான சட்டையை உடைய பைரவக் கடவுள்; 'கழற்சிலம்பு ஒலித்திட வரும் தனிக்கரிய கஞ்சுகக் கடவுளே' (சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ். காப்புப். 8.); 'வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடும் அஞ்சனப் புகையென ஆலம் ஆமெனச் செஞ்சுடர் படிவமேல் செறித்த மாமணிக் கஞ்சுகக் கடவுள்பொற் கழல்கள் ஏத்துவாம்' (கந்தபுராணம், க,வா. 10).

கருங்கஞ்சுகன் திருப்பாலைக்கு அரசைச் செழியதரையனைத் தாகந்தீர்த்தவனைப் புரக்க என்பது பொருள் முடிபு.

ஐயனார்

அளிக்கும்நிலப் புலம்ஏழும் உழும்குலக்கா வலனை
அந்தாலந் தீர்த்தபிரான் அருந்தவத்தின் பயனைத்
தெளிக்கும்இரு கலைப்புணரி வழிக்குஒருமா லுமியைச்
செழியனைத்தா கந்தீர்த்த சிகாமணியைப் புரக்க-
பளிக்குமலைத் தலைநீல மலைபரிக்கும் பரிப்பும்
பாற்கடல்மீ மிசைப்பசிய கார்க்கடல்போம் பரிசும்
களிக்கும்ஒரு வெண்முகிலில் கருமுகில்ஊர்ந் தமையும்
கண்டதுஎனக் கடகரிமேல் கண்டசெண்டுஆ யுதனே. 10

10. அளிக்கும் நிலப்புலம் - தன்னால் காப்பாற்றப்படும் உலகமாகிய இடம்; அளிக்கும் என்றது அளிக்கப்படும் எனப் பிறவினைப் பொருளில் வந்தது; நிலப்புலம்: இருபெயரொட்டுப் பண்புத்தொகை, பொதுவாக நிலத்தைக் காத்தல் எனில் ஆகு பெயராக மக்களைப் பேணினான் எனவரும், அவ்வாறன்றிச் செம்பொருளே பயப்ப நிலப்புலம் என விளக்கப்பட்டது; உழும் குலம் - வேளாளர் மரபு; அருந்தவத்தின் பயனை - செயற்கரிய நல்வினைகளின் பயனாக மகனாகத் தோன்றியவனை, வரோ தயன் என்றவாறு.

தெளிக்கும் - கற்பவர்களின் அறிவைத் தெளிவாக்கும்; இருகலை-தமிழ், வடமொழி என்னும் இரு மொழிகள்; புணரி- கடல்; இருகலைப்புணரி : உருவகம்; புணரிவழி - புணரியைக் கடப்பதற்கமைந்த நீர்வழி; மாலுமி - மீகாமன், கப்பலோட்டி; தாகந்தீர்த்த செழிய சிகாமணியை என இயையும்; செழிய சிகா மணி - செழியர்களுக்குள் முடிமுணியைப் போன்றவன், 'சைவ சிகாமணி சம்பந்தன்' (ஆளுடையபிள்ளை மும்மணிக்கோவை.13) என்புழிப் போல.

பளிக்கு மலைத்தலை - பளிங்காலாகிய வெற்பின் மீது, பரிக்கும் - சுமக்கின்ற; பரிப்பு - சுமை; மீமிசை - மேலே: ஒரு பொருட் பன்மொழி; பசிய - அழகிய; கார்க்கடல்-கருமையான சமுத்திரம்; பரிசு-இயல்பு.

முகில்-மேகம்; ஊர்ந்தமையும்-இவர்ந்து செல்லுதலையும்; பரிப்பும், பரிசும், ஊர்ந்தமையும் கண்டது என இயையும்;

உம்மைகள் எண்ணுப்பொருளன; கண்டது என—போல; கடகரி—மதத்தை உடைய யானை; செண்டு — குதிரைச் சம்மட்டி; செண்டாயுதன் — செண்டைப் படைக்கலமாக ஏந்திய ஐயனார்; சாத்தனார், அரிகர புத்திரர் எனப்படும் ஐயனாருக்கு வாகனம் வெள்ளையானையும், படைக்கலம் செண்டும் ஆகும். ஒரு பொருளுக்கு மூன்று உவமை கூறப்பட்டதால் இது பல்பொருள் உவமையணி.

காவலனும், பயனும், மாலுமியும், சிகாமணியும் ஆகிய தாகந்தீர்த்தவனைச் செண்டாயுதன் புரக்க என்பது முடிபு.

முப்பத்து மூவர்

பதினான்கு சீர் ஆசிரிய விருத்தம்

மந்தாகி னித்தனிக் குலகிரித் தீபத்தை
வையகக் கொடிபடைத் துடையதுஓர்
மாணிக்க மாலையைக் கொங்கதர குடகதர
வங்கதர சிங்கத்தை மாறுஇலா
அந்தால மகிபதிக்கு ஆவியைக் காவியத்து
அரசர்க்கு நிதியைத்த மர்க்குவாழ்வு
அனையதா கந்தீர்த்த செழியனைப் பாலைநாடு
ஆளியைக் கருணைவைத் தாளுவார்
பைந்தாம மரகதக் குரகதத் திண்தேர்
பரித்தமா அம்பகடு சேவுடன்
பன்னிரண்டு ஓர்இரண்டு ஒருநான்கு இரண்டுபதி—
னொன்றுஎனச் சொன்னவா கனம்உளார்
சிந்தா மணிக்கிரண இரணியப் பதியினார்
திகழும்ஒரு வற்குஒரோர் கோடியாய்த்
தெய்வம்ஒரு முப்பத்து முக்கோடி தொழுதுஎழும்
தேவரொரு முப்பத்து மூவரே. 11

11. மந்தாகினி—கங்கை; தனி—ஒப்பற்ற; கங்கைக் குல மாகிய வேளாளர் மரபு மலைபோல் உயர்ந்து விளங்குகிறது; தாகந்தீர்த்தசெழியன் அக்குன்றின் மேலிட்ட விளக்கைப்போலச் சிறந்து விளங்குகிறான் என்பது கருத்து; மந்தாகினிக் குல கிரி—வேளாண்மரபாகிய மலை: உருவகம்; வையகக்கொடி—நில மடந்தை; கொடி—கொடி போன்றவள்: உவம ஆகுபெயர்; ***செழியன் நிலமகளுக்குரிய மாணிக்க மாலையைப் போல் விளங்கி***

அவள் எழிலை அதிகமாக்குகிறான்; தர—தரித்துள்ள, தாங்கு கின்ற, ஆள்கின்ற; கொங்கு, குடகு, வங்கம்—நாடுகள்; மாறு இலா—பகைவர்களே இல்லாத.

ஆவி—உயிரைப் போன்ற மகன்; காவியத்து அரசர்—கவிஞர்; நிதி—பொக்கிஷம் போன்றவன், புலவர்கட்கு வேண்டிய பொழுது எல்லாம் வேண்டியனவற்றை அளிப்பதால் நிதி எனப்படுகிறான்; திருமாலின் பெயர்களுள் ஒன்றாக 'வைத்த மாநிதி' என வழங்குவதும் இப் பொருள் பற்றியே; தமர்—சுற்றத்தார்; வாழ்வு அனைய—வாழ்முதலாகிய; பாலை நாடாளி, பாலையூர்ப் பகுதியை ஆள்பவன்.

பைந்தாம — பசுமையான ஒளியையுடைய; மரகத—மரகத மணியைப் போன்ற; குரகத—குதிரைகள் பூட்டப்பெற்ற; திண் தேர்—வலிமை மிக்க இரதங்கள், இவை பன்னிரு சூரியர்களுக்கும் வாகனம்; பரித்த மா—சுமக்கின்ற குதிரைகள், இவை அசுவினி தேவர் இருவருக்கும் ஊர்தி; அம் பகடு—அழகிய யானை, இவை வசுக்கள் எண்மருக்கும் வாகனம்; சே—காளை, இவை பதினொரு உருத்திரர்களுக்கும் ஊர்தி; பன்னிரண்டு முதலிய நான்கு எண்களால் இந் நான்கு வகையினரும் குறிக்கப்படுகின்றனர்: நிரல்நிறைப் பொருள்கோள். முப்பத்து மூன்று கோடி தேவர்கள் இவ்வாறு நால்வகைப்படுவர் என்பதனை, 'நலகுடந்தைநகர் அமர்தருங்கருணை நவிலுமங்களையை நால்வகைய முப்பத்து மூவரும் காக்கவே' (மங்களாம்பிகை பிள்ளைத்தமிழ். காப்புப். 11.) என்பதனால் அறியலாம்.

சிந்தாமணி—வேண்டியன எல்லாம் தருகின்ற ஒரு தெய்வ லோக மணி; கிரண — கதிர்களை உடைய; இரணியப் பதி—பொன்னுலகு, தேவலோகம்; திகழும் — புகழ்மிக்க; ஒருவற்கு ஒரோர் கோடியாய்—தலைக்கு நூறு லட்சம் பேர்கள் வீதம்; ஒரு முப்பத்து முக்கோடி தெய்வம் தொழுது எழும் என இயையும்; தெய்வம் என்ற சொல் சிறு தேவதைகளையும், தேவர் என்ற பதம் தலைமை பெற்ற கடவுளரையும் குறித்து நிற்கின்றன; தொழுது எழும் — 'தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுது எழுவாள்' (திருக்குறள். 55); 'தேர்இடபம் அத்திபரி பொற்புற உகைத்தருள் சூரியர் உருத்திரர் வசுக்கள்நன் மருத்துவர் எனும் இவர் முப்பத்து முக்கோடி தேவரே' (பெருந்திருப்பிராட்டியார் பிள்ளைத்தமிழ். காப்புப். 11.) என்பது இங்கு ஒப்பிடத்தக்கது.

தீபத்தை, மாணிக்க மாலையை, சிங்கத்தை, ஆவியை, நிதியை, வாழ்வு அனைய செழியனை, பாலை நாடாளியைத்

தேவர் ஒரு முப்பது மூவர் கருணை வைத்து ஆளுவார் என்பது முடிபு.

செங்கீரைப்பருவம்

இரட்டையாசிரிய விருத்தம்

கன்னிக்கு முதல்இவன் பொருநைக்கு வைப்புஇவன்
கம்பைக்கு நாயகன்இவன்
கங்கைக்கு நாதன்இவன் யமுனைக்கு வரன்இவன்
கவுதமைக்கு ஆதிபன்இவன்
பொன்னிக்கு மன்இவன் சரயுவுக்கு அரசுஇவன்
பதிபார திக்குஇவன்எனப்
புவனம்பு ரத்தலுக்கு அந்நதிதொ றும்பெரும்
புவனாபி ஷேகம்செயும்நாள்
மின்னிப்பு காநின்ற பருதிக்கு லத்துஅரசும்
விதுகுலத்து அரசுமுதலாய்
வெவ்வேறு பட்டபல் நூறுநீள் வட்டத்து
மேதக்க அரசுக்குஎலாம்
சென்னிக்கி ரீடம்கொ டுக்கும்கு லாதிபதி!
செங்கீரை ஆடியருளே! **12**
செழிய கந்தீர்த்த செழியகுல சேகரா!
செங்கீரை ஆடியருளே!

12. கன்னி—குமரியாறு, 5ம் பாடலின் குறிப்பைக் காண்க; பொருநை — தாமிரவருணி; கம்பை — காஞ்சியில் உள்ள ஆறு; கவுதமை—கோதாவரி.

பொன்னி—காவிரி; சரயு—அயோத்தியில் பாயும் ஆறு; பாரதி—சரஸ்வதி; அலகாபாத்தில் கங்கை, யமுனை ஆகிய இரு பேராறுகளுடன் இந் நதியும் கண்ணுக்குத் தெரியாமல் வந்து கலப்பதாகக் கூறுதல் மரபு; முதல், வைப்பு, நாயகன், நாதன், வரன், ஆதிபன், மன், அரசு, பதி என்னும் ஒன்பது சொற்களும் தலைவன் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளன; புவனம் புரத்தலுக்கு — உலகைக் காப்பாற்ற, ஆட்சி புரிய; அந் நதிதொறும்—முற்கூறப் பெற்ற கன்னி முதலிய ஆறுகள் தோறும்; புவனாபிஷேகம் — முடிசூட்டுவிழா.

பருதிக் குலத்து அரசு—சூரிய வம்சத்தைச் சேர்ந்த மன்னர்கள்; விதுகுலம்—சந்திரவமிசம்; வட்டம்—நாடு என்ற பொருளில் ஆளப்

பட்டுள்ளது; பல்நூறு நீள் வட்டம்—பல பெரிய நாடுகள்; நீள் வட்டத்து அரசு, மேதக்க அரசு என இயையும்.

சென்னிக்கிரீடம்—தலையில் அணிந்துகொள்ளும் முடி, கிரீடம் கொடுக்கும் குலாதிபதி — மன்னர்கள் முடிசூடும் பொழுது வேளாளர்கள் கிரீடத்தை எடுத்துக் கொடுத்தல் மரபு, 'சடையன் தங்கள் மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி' (கம்பராமாயணம். திருமுடிசூட்டுப். 37) எனச் சூரிய வமிசத்திலும், 'அந்தமில்சீர் வேளாளன் கொடுப்ப வாங்கி அகத்தியமா முனிபுனைந்தான் அம்பொன் மோலி' (சீவலமாறன் கதை. 327) எனச் சந்திர வமிசத்திலும் இம் மரபைக் காணலாம்; குலாதிபதி—குலத்தின் தலைவனே; அண்மை விளி இயல்பாயிற்று; குலசேகரன் மரபின் முடிமணியனையான்.

குலாதிபதி! செழியகுல சேகரா! செங்கீரை ஆடி அருள் என்பது பொருள் முடிபு.

கந்தாட்டு புட்கரக் கரிபரித் தானைக்
கடல்கொண்டுஎ ழுந்துஅந்தநாள்
கன்னிக்கு மன்னனைப் பின்னிடக் கண்டும்அக்
கன்னிஅம் திருநாடுஉனக்கு
இந்தாஎ னத்தந்து பாணனுக் குப்பாணன்
என்பதுது டைத்தும்மலையத்து
இறையவா கொற்கைஅம் துறையவா வாஎன்று
இசைத்தான்வ ழிக்காதலா!
அந்தாம ரைக்குலநி திக்குத்து திக்கரும்
அசஞ்சலச லஞ்சலநிதிக்குஅம்
மாதானத் தான்அவா வனகற்ப காடவிக்கு
அமுதமே காடவிக்குச்
சிந்தாம ணிக்குச்சி காமணிக் கரதலா!
செங்கீரை ஆடியருளே!
செழியதா கந்தீர்த்த செழியகுல சேகரா!
செங்கீரை ஆடியருளே! 13

13. கந்து—கட்டுத்தறியை; ஆட்டு—அசைக்கின்ற; புட்கர—துதிக்கையின் நுனியை உடைய; கரி—யானை; பரி—குதிரை; தானை—படை; யானைகளையும் குதிரைகளையும் தன்பாற் பெற்ற படை; அந்தநாள்—முற்காலத்தில்; கன்னிக்கு மன்னன்—பாண்டியன்; பின்னிடக்கண்டு—புறங்கண்டு.

பாணனுக்கு இந்தா எனத் தந்து என இயையும்; பாணன் என்பது துடைத்து–(பாழ்+நன்=பாணன்) ஒன்றுமற்ற வறியவன் என்ற இழிநிலையை மாற்றி; மலயம்–பொதியை மலை; கொற்கை–பாண்டிய நாட்டின் ஒரு துறைமுகப்பட்டினம்; இசைத்தான்–கூறியவன்; வழிக்காதலா–மரபில் தோன்றிய மகனே.

ஆறகழூர் மாவலிவாணன் பாண்டியர்களை வென்று அந் நாட்டைப் பாணனுக்கு அளித்ததாக ஒரு செய்தி வழங்கி வருகிறது.

''பாண்டியனைப் பேர்மாற்றிப் பாணர்க்கு அரசளித்த
ஆண்டகைஎன்று உன்னை அறியேனோ–மூண்டெழுந்த
கார்மாற்றும் செங்கைக் கடகரிவா ணாவுனது
பேர்மாற் றுவதரிதோ பேசு'',

''பாணன் மதுரைப் பதிஆள வைத்தபிரான்
வாணர் புகழ வரும்ஆறை–வாணன்''

(பெருந்தொகை. 1188, 1191).

செழியதரையனும் மகதமண்டலத்தை ஆள்கின்றவனாதலின் அந் நாட்டையாண்ட முன்னோர்களின் சிறப்பை இவன்மேல் ஏற்றிக் கூறுகிறார்.

அம் தாமரைக் குலநிதி–பதுமநிதி, குபேரனுடைய ஒன்பது பொக்கிஷங்களுள் ஒன்று; துதிக்கரும்–போற்றுதற்கரிய, துதிக்க வரும் என இருத்தற்பாலது அகரம் தொக்கது; அசஞ்சல–மாறு பாடற்ற, நிலையான மதிப்புடைய; சலஞ்சலநிதி–சங்கநிதி, நவநிதிகளில் இது மற்றொன்று, 'சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து' (தேவாரம் 6–திருநெடுந்தாண்டகம்) என இவற்றை அப்பர் கூறுவார்; மா தானத்தான்–பொன்னுலகை உடைய இந்திரன், பொன்னின் மாற்றைக் குறிக்கும் மா என்ற சொல் தங்கத்திற்கு ஆகி வந்தது; அவா–விரும்புகின்ற; வன–அழகிய; கற்பகாடவி–கற்பகச் சோலை; அமுத–அமுதமாகிய மழையைப் பொழிகின்ற; மேகாடவி–மேகக் கூட்டம்; 'வானின் றுலகம் வழங்கி வருதலால் தானமிழ்தம் என்றுணரற் பாற்று' (குறள். 11) என்பதனை நினைந்து கூறியது.

பதுமநிதி, சங்கநிதி, கற்பகம், மேகம், சிந்தாமணி என்பன போன்ற வளமையும் வள்ளன்மையும் மிக்கவற்றுள் எல்லாம் செழியனின் கைகள் முதன்மை பெற்றது என்பார் இவற்றிற்குச் சிகாமணி என்றார். தாமரைக் குலநிதி முதலிய ஐந்து இடங் களிலும் எண்ணும்மைகள் தொக்கன.

இசைத்தான் வழிக்காதலா! சிகாமணிக் கரதலா! செழிய குலசேகரா! தாகந்தீர்த்த செழியா! செங்கீரை ஆடியருள் என்பது பொருள் முடிபு.

கம்பக்க ரித்தென்னர் தென்னாடு சாடிஅக்
காவேரி நாடும்உதகைக்
கடிமலா டும்கொண்டு கருநடம் சீறித்தெ-
லுங்கைக்க லங்கத்துரந்து
உம்பல்க லிங்கக்க பாடமா டம்துகைத்து
ஒட்டத்தை வெட்டிமட்டித்து
உச்சயனி அம்தீம டுத்துஆரி யத்தையும்
உழக்கிமிதி லாபுரம்போய்
அம்பொற்பெ ரும்புரிசை நூறிமா ராட்டத்தை
அட்டுக்க டாரம்கடந்து
அருமணம் கொங்கணம் பொருதுஅலைத்து எல்லைக்குஇது
அடையாளம் என்னமுன்னம்
செம்பொற்கு வட்டுஎழுது மேழிப்ப தாகையாய்!
செங்கீரை ஆடியருளே!
செழியதா கந்தீர்த்த செழியகுல சேகரா!
செங்கீரை ஆடியருளே! **14**

14. கம்பக்கரித் தென்னர்—தறியில் கட்டப்படும் யானைப் படை கொண்ட பாண்டியர்; சாடி—அழித்து; காவேரி நாடு—காவிரியால் வளம்பெறும் சோழநாடு; உதகைக் கடி மலாடு—உதகையைத் தன்பால் பெற்றதும் பாதுகாப்பமைந்ததும் ஆகிய மலைநாடு, சேர நாடு; உதகையைப்பற்றி முன் கூறப்பட்டது; கருநடம்—கருநாடகம்; சீறி—அழித்து; தெலுங்கு—ஆந்திரம்; துரந்து—வென்று.

உம்பல் கலிங்கம்—யானைகளால் புகழ்பெற்ற கலிங்கநாடு, கபாடம்—வாயில்; மாடம்—உப்பரிகைகளை உடைய மாளிகைகள்; கபாடமாடக் கலிங்கம், உம்பற் கலிங்கம் எனத் தனித்தனியே இயையும்; துகைத்து—அழித்து; ஒட்டம் – ஒட்டிய நாடு; மட்டித்து—அழித்து; உச்சயனி—ஒரு நகரம்; அம்—அழகு; உச்சயினியின் அழகைத் தீயிட்டு என்றவாறு; ஆரியம்—ஆரியாவர்த்த நாடு; உழக்கி—அழித்து; மிதிலாபுரம்—மிதிலை என்னும் தலை நகரம்.

அம்பொற்புரிசை, பெரும் புரிசை என இயையும்; அழகிய பொன்னால் கட்டப்பெற்ற பெரிய மதில்; நூறி—இடித்து; மாராட்டம்—மகாராஷ்டிரம், மராத்திய நாடு; அட்டு—போர் புரிந்து; கடாரம்—பர்மா; அருமணம்—நறுமணப்பொருள்களுக்குப் பெயர் பெற்ற ஒரு தீவு; கொங்கணம் — கொங்கண நாடு; பொருது—போரிட்டு; எல்லைக்கு—(தன் ஆட்சியின் கீழே உள்ள நாட்டின்) எல்லைக்கு.

செம்பொன் குவட்டு—சிறந்த பொன் மலையில், இமயத்தில்; மேழிப் பதாகை—கலப்பை பொறிக்கப்பெற்ற கொடி, இது வேளாளர்களுக்குரிய கொடி.

பைந்தாம மௌலிப்ப ரந்தாமன் உந்தியில்
பதுமப்பொ லன்கோயில்வாய்
பண்டைப்பி றந்துஒருவன் அண்டத்தை அண்டப்
பரப்போடு உடுத்தகடலைத்
தந்தாவ ளங்கள்ஓர் எட்டைஎட் டாலும்
தரித்தபூச் சக்ரகிரியைச்
சக்ரகிரி யுட்பட்ட புவனவட் டத்தைத்
தனித்தனி படைத்திட்டநாள்
விந்தாச லக்கொங்கை நாமகள் கொண்டுஆள
மேடையும் திருமகட்காய்
வெம்பவள மாடமும் சதகோடி கண்டனைய
வெண்தாம ரைக்காட்டுடன்
செந்தாம ரைக்காடு செறிபாலை நகர்ஆளி!
செங்கீரை ஆடியருளே!
செழியதா கந்தீர்த்த செழியகுல சேகரா!
செங்கீரை ஆடியருளே! 15

15. பைந்தாம — பசிய மாலைகளை அணிந்த, திருமாலின் மாலை திருத்துழாயாதலின் பைந்தாமம் என்றார்; மௌலி—முடியை உடைய; பரந்தாமன் — திருமால்; உந்தி — கொப்பூழ்; பதுமப் பொலன் கோயில் — தாமரையாகிய அழகிய ஆலயம்; பண்டை — முற்காலத்தில்; ஒருவன் — பிரமதேவன்; அண்டம் — பிரபஞ்சம்; அண்டப்பரப்பு—உலகப் பரப்பு.

தந்தாவளங்கள்—யானைகள்; எட்டு—திசையானைகள், இவை முன்னர்க் கூறப்பட்டன. தரித்த—சுமக்கப்பெறும்; பூச்சக்ர கிரி, சக்ர கிரி—சக்கரவாள மலை; புவனவட்டம்—பூமண்டலம், உலகம்;

ஒருவன் பிறந்து தனித்தனி படைத்திட்ட நாள் என இயையும்; நாள்–காலத்தில்.

விந்தாசலம் – விந்திய மலை, அசலம் – மலை, இது கலை மகளின் நகிலுக்கு உவமை; கொண்டு ஆள – பயன் படுத்த; திருமகட்காய்–திருமகளுக்காக; வெம் – விரும்புகின்ற; மாடம்–உப்பரிகை; சதகோடி – நூறு கோடி, மிகப்பல; கண்டனைய–படைத்தாற்போல.

நாமகளுக்கு மேடையாக வெண்தாமரைக் காடும் திருமகளுக்கு மாடமாகச் செந்தாமரைக் காடும் கணக்கின்றிப் படைக்கப்பட்டதைப் போலப் பாலையூரில் அவை விளங்குகின்றனவாம்: நிரல்நிறைப் பொருள்கோள்; ஆளி–ஆள்பவன்.

கார்ஆயி ரத்துஉறைதெ றித்துஎனத் தெறுசிலைக்
கணைகோடி கோடிதலைநாள்–
கடலகத்து உதிரக்க டல்செலவி சும்புஎலாம்
காகசா லம்செலப்பின்
ஓர்ஆயி ரத்துஅளவை வெள்ளத்து அரக்கர்தம்
உடற்குவட்டு அலகைசெல்ல,
உலகபா லர்க்குப்ப தம்செலச் செல்லாத
உம்பர்க்கு நெறிசெலப்பூந்
தார்ஆயி ரத்துஅத்திப் புண்டரிகன் அண்டத்
தலைக்கடா கத்துஇடைசெலத்
தனிஇலங் காபுரத்து ஒருபதுச மீரணம்
தாராக ணாதிமதியம்
தேர்ஆயி ரக்கதிர்செ லச்செலுத் தியவீர!
செங்கீரை ஆடியருளே!
செழியதா கந்தீர்த்த செழியகுல சேகரா!
செங்கீரை ஆடியருளே! 16

16. கார்–மேகம்; ஆயிரத்து – ஆயிரக்கணக்கில், மிகப்பலவாக; உறை–மழைத் துளி; தெறுசிலை–பகைவரை அழிக்கின்ற வில்; கணை–அம்புகள்; தலைநாள் – முற்காலத்தில்; உதிரம் – இரத்தம்; விசும்பு–ஆகாயம்; காகசாலம்–காக்கையின் கூட்டம், காக்கைகள் இங்குப் பிற பறவைகளுக்கும் உபலட்சணம்.

அளவை–அளவுள்ள; வெள்ளம்–ஒரு பேரெண்;ஓர் ஆயிரத்து வெள்ளத்து அளவை அரக்கர் என இயையும், மிகப்பலர் என்றவாறு; உடற்குவட்டு–உடல்களாகிய குன்றுகளின் மீது; அலகை–

பேய்கள்; உலகபாலர் – எண்திசைக் காவலர்; பதம் – காவல் தொழில்;செல–செல்லுபடியாகும்படி,அதிகாரம் நிலைக்கும்படி; செல்லாத–இறத்தல் இல்லாத; நெறிசெல–ஆட்சி நடைபெற.

பூந்தார்–மலர் மாலைகள்;அத்தி–யானை,இங்கு ஐராவதம்; நிறைய மலர்மாலைகளை அணிந்த ஐராவதத்தைச் செலுத்து கின்ற புண்டரிகன் என்றவாறு; புண்டரிகன் – தென்கீழ்த்திசை யானையின் பெயர், இங்குத் திசையானை என்ற அளவில் நின்று ஐராவதத்தைச் சுட்டி அதனையுடைய இந்திரனுக்கு ஆயிற்று; அண்டத் தலைக்கடாகத்திடை – பிரபஞ்சத்தின் மேற்பகுதியில்; செல–(அச்சமில்லாமல்) செல்லும்படி; தனி–ஒப்பற்ற; ஒருபது சமீரணம்–பத்து வாயுக்கள்,அவையாவன: பிராணன்,அபானன், சமானன், உதானன், வியானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்செயன்; தாராகணாதி–தாராகண + ஆதி, விண்மீன் கூட்டங்கள் முதலியன; மதியம்–சந்திரன்.

தேர் ஆயிரக்கதிர் – இரதத்தையும் ஆயிரம் கிரணங்களையும் உடைய சூரியன்: செல – (தன் இயல்பான போக்கில்) செல்லும் படியாக; வீர–வீரம் மிக்க இராமாவதாரனே.

உதிரக்கடல் செல, காகசாலம் செல, அலகை செல, பதம் செல, நெறிசெல,கடாகத்திடை செல,இலங்காபுரத்து சமீரணம் தாராகணாதி மதியம் கதிர் செல, தலைநாள் தெறுசிலைக் கணை கோடி கோடி கார் ஆரத்து உறை தெறித்து எனச் செலுத்திய வீர செங்கீரை ஆடியருள் என்பது பொருள் முடிபு.

இலங்கையில் இராவணனுக்கஞ்சி இயற்கைப் பொருள்களும் இயங்காதிருந்தன; இராவணன் மீது இராமபிரான் கணை செலுத்தியதால் அவ்வியற்கைப் பொருள்கள் இயல்பாக இயங்கத் தொடங்கின என்பது கருத்து.

பொருப்புஆ லயத்திலும் வெண்தாம ரைப்போது
செந்தாம ரைப்போதுஎனும்
புனிதால யத்தினும்ம லைக்கொடிக லைக்கொடி
பொருந்துஅலைக் கொடிவிரும்பும்
விருப்பால யம்போல்அ றங்கல்வி செல்வத்து
மேதக்க மனைமுழக்கின்
வீதிநின்று ஓதிமத் தொகுதிஅப் பழனத்து
மென்மேல்வெ ருண்டுஓடவும்

கருப்பாலை ஆவயின் வயலகத்து அன்னக்
கணம்தெருவ கத்துஓடவும்
கழனிக்கும் நகரிக்கும் நடுஎங்கும் நித்திலக்
காவணம்நி றைத்தனையவாம்
திருப்பாலை யம்பதிக்கு உலகாப திக்குஅதிப!
செங்கீரை ஆடியருளே!
செழியதா கந்தீர்த்த செழியகுல சேகரா!
செங்கீரை ஆடியருளே! 17

17. பொருப்பு ஆலயம் – மலையாகிய கோயில், இமயம்; புனிதாலயம் – புனித + ஆலயம், தெய்விகமான இருப்பிடங்கள்; மலைக்கொடி–மலைமகள், பார்வதி; கலைக்கொடி–கலைமகள்; அலைக்கொடி – கடலிற் பிறந்த திருமகள்; பொருப்பு–மலைக் கொடி–அறம், வெண்தாமரை – கலைக்கொடி–கல்வி; செந் தாமரை–அலைக்கொடி – செல்வம் என நிரல்நிறை.

மேதக்க மனை– (அறம், கல்வி, செல்வங்களால்) சிறப்புற்ற வீடுகள்;முழக்கின்–முரசொலி முதலிய பற்பல ஒலிகளை உடைய; ஓதிமத் தொகுதி – அன்னங்களின் கூட்டம்; பழனம்–வயல்; அப் பழனம் என்றது அன்னங்களுக்கு முன்பே பழகிய இடம் என்பது பற்றி: பண்டறி சுட்டு; ஓதிமத் தொகுதி மனை முழக்கின் வெகுண்டு வீதி நின்று மென்மேல் ஓடவும் என இயையும்.

கருப்பு ஆலை ஆவயின்–கரும்பாலைகளாகிய அவ்விடத்தின்; வயலகத்து–வயல்களின்; கணம்–கூட்டம்; கழனி–வயல்; நகரி–ஊர்; நித்திலக் காவணம்–முத்துப்பந்தர்; நிறைத்தவனையவாம் என இருத்தற்பாலது தொகுத்தல் விகாரம் பெற்றது; வீதியில் உள்ள அன்னங்கள் வயல்களுக்கும், வயல்களிலுள்ளவை வீதிக்கும் மாறிமாறிப் பறந்து கொண்டுள்ள காட்சி ஊருக்கும் வயலுக்கும் நடுவே முத்துப்பந்தர் அமைத்தாற்போன்று விளங்குகிறது.

இறையிட்ட சனபதச் சனம்அனைத் தும்திரண்டு
எதிர்இலா மதுராபுரிக்கு
இரவிவெம் பியதுஇனிப் பரவிவிண் சொரிதராது
என்செய்தும் என்றுஎன்றுபோய்
முறையிட்ட நிலைகண்டு மூதண்டர் கோமகன்
முடிக்குஆழி விட்டுஅவனோடு
முப்பத்து முத்தேவ ரும்தேவர் யாவரும்
முதுகிடப் பொருதுஅந்தநாள்

உறையிட்ட சதகோடி வாள்விடுத்து ஆலித்துஒரு
மேகரா சனைவளைத்து
ஒளிவிடும் தாரகா கணராச குலராசன்
ஒருவன்பி டித்துஒடிவெஞ்
சிறையிட்ட தளைவிடப் பிணையிட்ட மரபாளி!
செங்கீரை ஆடியருளே!
செழியதா கந்தீர்த்த செழியகுல சேகரா!
செங்கீரை ஆடியருளே! 18

18. இறை இட்ட—அரசர்க்குச் செலுத்த வேண்டிய வரிகளை கட்டிய; சனபதம் – குறுநாடுகள், சுயாட்சிக் கிராமங்கள் எனினுமாம்; சனம்—மக்கள்; எதிர் இலா—நிகரற்ற; இரவி—சூரியன்; வெம்பியது—மிகவும் சூடாகி விட்டது; இனி விண் பரவி சொரிதராது—இனிமேல் மேகங்கள் படர்ந்து மழை பொழியாது, விண்: ஆகுபெயராக முகிலை உணர்த்தியது; என் செய்தும்—(நாம்) என்ன செய்வோம்.

மூது அண்டர்—பழமையான தேவர்கள்; அண்டர் கோமகன்—தேவர்க்குத் தலைவனாகிய இந்திரன்; முடி—தலை; ஆழி—சக்கரம்; அவனோடு—அந்த இந்திரனுடன்; முதுகிட—புறங்காட்டி ஓடும்படி; பொருது—போரிட்டு.

உறை இட்ட—கூட்டிலே (வாளுறை) செருகப்பட்டிருந்த; சதகோடி—நூறு கோடி, மிகப்பல; ஆலித்து—முழங்கி; ஒரு—ஒப்பற்ற; மேகராசனை—முகிலாகிய தலைவனை; தாரகாகணம்—நட்சத்திரக் கூட்டம்; தாரகாகணராசன்—விண்மீன் கூட்டங்களுக்குத் தலைவனாகிய சந்திரன்; அவன்குலம் பாண்டிய வம்சம்; தாரகாகண ராசகுல ராசன் ஒருவன் என்றது ஒரு பாண்டியன் என்றவாறு.

தளை—விலங்கு; பிணையிட்ட—உத்திரவாதமாக நின்ற; மரபாளி—மரபாகிய வேளாளர் மரபில் தோன்றியவனே: அண்மை விளி இயல்பாயிற்று; வேளாளர்கள் மேகங்களை விடுவிக்கப் பிணைநின்ற வரலாறு இந் நூல் மூன்றாம் பாடற் குறிப்புரையில் காட்டப்பெற்றது.

சனம் அனைத்தும் திரண்டு மதுராபுரிக்குப் போய், இரவி வெம்பியது; இனி விண் பரவி சொரிதராது; என் செய்தும்! என்றென்று முறையிட்ட நிலைகண்டு, கோமகன் முடிக்கு ஆழி

விட்டு, அவனோடு தேவர் யாவரும் முதுகிடப் பொருது அந்த நாள், ஆலித்து, மேகராசனை வளைத்துக் குலராசன் ஒருவன் பிடித்துச் சிறையிட்ட தளை விடப் பிணையிட்ட மரபாளி! செழியகுல சேகரா! தாகந்தீர்த்த செழிய! செங்கீரை ஆடியருள் என்பது பொருள் முடிபு.

வாவித்து ருக்கர்யாம் வைகைத்தென் னாடர்யாம்
மாராட்டர் ஒட்டத்தர்யாம்
வங்கதே யத்தர்யாம் அங்கதே யத்தர்யாம்
வடகடா ரத்தவர்யாம்
ஏவிப்ப ணித்தபணி தலைகொளும் துளுவர்யாம்
ஈழத்தர் மகதத்தர்யாம்
யவனத்தர் சீனத்தர் யாம்உனக்கு அபயம்என்று
என்றுரா சாதிபர்எலாம்
மேவிக்கை வேழம்இவை வாசிக்கு ழாமும்இவை
மெய்க்குஅணிம தாணிஇவைபொன்
மேருவின் குவைஇவைகு வித்தநவ ரத்னம்இவை
விடுதிஎம் பதிநாடுஎனச்
சேவிக்க வாழ்விக்கும் ஒருதனிச் சேவகா!
செங்கீரை ஆடியருளே!
செழியதா கந்தீர்த்த செழியகுல சேகரா!
செங்கீரை ஆடியருளே! 19

19. வாவித் துருக்கர் — நீர் நிலைகள் நிரம்பிய துருக்கி நாட்டினர்; வைகைத் தென்னாடர் — வைகையாற்றிற்குரிய பாண்டியர்; மாராட்டர்—மகாராஷ்டிரர் எனப்படும் மராத்தியர்; ஒட்டத்தர்—ஒட்டர நாட்டினர், ஒரிஸ்ஸா; வடகடாரம்—பர்மாவின் வடபகுதி.

துளுவர் — துளு நாட்டினர்; ராசாதிபர் — ராச+அதிபர், அரசர்களாகிய தலைவர்கள்: இருபெயரொட்டுப் பண்புத் தொகை; துருக்கர் முதலியவராகிய யாம் உனக்கு அபயம் என்று ராசாதிபர் எலாம் மேவி என இயையும்.

கை வேழம்—துதிக்கையை உடைய யானை; வாசிக் குழாம்—குதிரைக் கூட்டம்; மெய் — உடல், இங்கு மார்பு; மதாணி—பதக்கம்; மேருவின்—மேருமலையைப் போன்ற: இன் உவமஉருபு; குவை—குவியல்; எம் பதியையும் நாட்டையும் விடுதி எனச் சேவிக்க (அவர்களை) வாழ்விக்கும் என இயையும்.

தனிச் சேவகா—ஒப்பற்ற வீரனே,

சந்த விருத்தம்

தனதன தனதன தானந் தாத்தன
தந்தா தந்தானா

தகைமுழுது ஒழுகிய பூகம் சாய்த்தன
செஞ்சேல் உஞ்சாலத்
தடைபடும் மடைஇரு பாலும் கூப்பிடு
செங்கோ லம்காலப்
புகைமுழு தினும்மணம் நாறும் பூத்தொறும்
வண்டுஊடு உண்டுஆடப்
புடைவயல் நடுபவர் பாடும் பாட்டின்நெ–
டும்கீ தம்போதத்
தொகைமுழுது அரிபடு வேழம் காழ்த்துவி–
டும்சா றும்பாறத்
துணையுடன் மடஅனம் மேயும் பார்ப்புடன்
அம்தோ யம்தோயத்
திகைமுழுது ஒலிமலி சேலம் காத்தவ!
செங்கோ செங்கீரை!
செழியர்தம் அதிபதி! தாகந் தீர்த்தவ!
செங்கோ செங்கீரை! 20

20. தகை–பெருமிதம், குலைகள் நிறைந்திருப்பதால் ஏற்படுகிறது; முழுது என்புழி முற்றும்மை தொக்கது; ஒழுகிய–சோர விட்ட; பூகம் – பாக்கு மரங்களை; சாய்த்தனவான செஞ்சேல் என்க; உஞ்சால – அசைவதாலும், ஊஞ்சலாடுதல்; தடைபடும் மடை–தடுக்கப்பட்ட மதகு; இருபாலும்–இரு பக்கங்களிலும்; கூப்பிடு–முழங்குகின்ற; செங் கோலம் – செம்மையான வாய்க்கால்கள், இனிப் புதுவெள்ளமாதலின் கலங்கிச் செந்நிறமான நீர்பாயும் கால்கள் எனினுமாம்; கால–கரை புரளுவதாலும்.

புகை–அட்டிற்புகை, ஆலைப்புகை முதலியன; உண்டு வண்டு ஊடாட என மாறுக; கள் என்னும் சொல்லை வருவித்துக் கொள்க; ஊடாட – இயங்குவதாலும்; புடை வயல் – அருகில் உள்ள வயல்களில்; போத–வெளிப்படவும்.

தொகை – தோகை: எதுகை நோக்கிய குறுக்கல் விகாரம், கரும்பின் தாள்; அரிபடு – வெட்டப்படுகின்ற; வேழம் – கரும்பு; காழ்த்து–நன்கு முற்றி; விடும்–சொரிய விடும்; சாறும்–கரும்புச் சாறும்; பாற–மிகுதியாக ஓட; மட அனம்–மடப்பத்தை உடைய அன்னப்பறவை; பார்ப்பு – குஞ்சு; அம் – அழகிய; தோயம் – தண்ணீர், இங்கு நீர்நிலை; தோய–நீராட.

திகை – திசை; முழுது என்புழி முற்றும்மை விகாரத்தால் தொக்கது; ஒலி மலி–பலவகையான ஓசைகள் மிக்கு விளங்குகின்ற; சேலம்–சின்ன சேலம்.

செஞ்சேல் உஞ்சால, கோலம் கால, வண்டு உண்டாட, கீதம் போத, சாறும் பாற, தோயம் தோய, திகை முழுதும் ஒலி மலி கின்ற சேலம் என இயையும். உஞ்சால முதலிய எச்சங்கள் யாவும் ஒலிமலி என முடிந்தன.

இப்பாடலின் தெளிவான வடிவத்தையும் பொருளையும் அறிவுறுத்திய கல்விக்கடல் உயர்திரு எஸ். கே. இராமராசன் அவர்களுக்கு இவ்வுரையாசிரியனின் பணிவான நன்றிகள் உரித்தாகின்றன.

கரைவிரி கதலிகள் சூதம் காய்த்துப
சம்பூ கம்போகக்
கதிரவன் இரதமும் மாவும் தாழ்ந்துஎழும்
அந்தா மம்போகக்
குரைவிரி கடைசியர் யாரும் பார்த்துவ
ரம்புஒ ரம்சேரக்
குவளைகள் முளரிகள் யாவுஞ் சாய்த்துஅயல்
பஞ்சா யஞ்சாய்த்
தரைவிரி வயலிருபாலும் போய்ப்பல
சங்குஆ ரஞ்சோரத்
தனிதனி மயிடச முகம் தேக்குத–
டம்தோ றும்பாறத்
திரைவிரி கயல்பொரு சேலம் காத்தவ!
செங்கோ செங்கீரை!
செழியர்த மதிபதி தாகந் தீர்த்தவ!
செங்கோ செங்கீரை! 21

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

21. கரைவிரி—ஆற்றங்கரையில் நிறையக் கனிந்துள்ள; கதலிகள்—வாழைப்பழங்கள்; சூதம்—மாங்கனிகள்; பூகம்—பாக்குப் பழங்கள்; போக—(உதிர்ந்து ஆற்றில் அடித்துக்கொண்டு) செல்லும்படியும்; மா—(தேரில் பூட்டப்பெற்ற) குதிரைகள்; இரதத்தையும் குதிரைகளையும் தாழச்செய்து (கயல் மீன்கள்) வைகுண்டத்திற்கே செல்கின்றனவாம்; எழும் அந்தமாம்—உயர்ந்து கொண்டே இருக்கும் பரமபதம்.

குரை—கூச்சல்; விரி குரை கடைசியர் என இயையும்; கயலின் பாய்ச்சலைக் கண்டஞ்சிய பள்ளியர் வரப்பின் ஓரத்தில் ஒன்றாகக் கூடுகின்றனர்; குவளை—நீலம்; முளரி—தாமரை, யாவும்—(முதலிய நீர்ப்பூக்கள்) அனைத்தையும்; இரண்டனுருபு தொக்கது முற்றும்மை,

சாய்த்து—சாய்ந்து எனற்பாலது பாடல் சந்த நோக்கி வலித்தல் விகாரம் பெற்றது; அயல்—அருகே உள்ள; பஞ்சாயம்—கோரைப்புல்.

விரி தரை வயல்—அகன்ற நிலப்பரப்பை உடைய வயல்; ஆரம்—முத்து; சங்கும் முத்தும் என உம்மை புணர்க்க; சோர—தளர்ந்திருக்க, வயல்களின் சங்கும், செந்நெல், கரும்பு இரண்டிலும் உள்ள முத்துகளும் கயல்களின் பாய்ச்சலால் சோர்வுற்றன; தனித்தனி என இருத்தற்பாலது சந்த நோக்கித் தொகுத்தல் விகாரம் பெற்றது; மயிட சமூகம்—எருமைக்கூட்டங்கள்; தேக்கு—தண்ணீர் நிரப்பி வைக்கப்பெற்ற; தடம்தோறும்—நீர்நிலைகள் தோறும்; பாற—சிதறியோடும்படியாக.

திரை—அலை, இங்கு அலைகளுக்கு இடமான நீர்நிலைக்கு ஆகி வந்தது; விரி திரைக்கயல் என இயையும்; இனித் திரையின் கண் விரிகின்ற கயல் எனினுமாம்.

பொரு—போர்புரிகின்ற; சேலம்—சின்னசேலம்.

கதலிகள் சூதம் பூகம் போக(வும்), இரதமும் மாவும் அந்தாமம் போக(வும்), கடைசியர் வரம்பு ஓரம் சேர(வும்), குவளைகள் முளரிகள் யாவும் சாய்த்துப் பஞ்சாயம் சாய(வும்), சங்கு ஆரம் சோர(வும்), மயிட சமூகம் தடம்தொறும் பாற(வும்), விரி திரைக்கயல் பொரு சேலம் காத்தவ! செழியர்தம் அதிபதி! தாகந்தீர்த்தவ! செங்கோ செங்கீரை என்பது பொருள் முடிபு.

தாலப்பருவம்

பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

கரளத்து உரகக் கனமா ணிக்கக்
கதியைக் கரிமுத்தைக்
கழைஆ ரத்தைக் கமுகுஆ ரத்தைக்
கார்முகில் ஐக்கலையைப்
புரளச் சிதறிச் சிங்கம் சிங்கச்
சங்கமு டன்பொங்கப்
பொங்கர்க் கயலும் புரவுக் கயலும்
புயல்தா வத்தாவித்
திரளப் புள்இனம் கரைஅப் புளினம்
கரையத் திரைமோதிச்
செந்நெல் கன்னல் கோடும் காடும்
சிந்தும் சிந்துபடும்
தரளப் பெயர்ஈர்ப் பெயர்ஆறு உடையாய்!
தாலோ தாலேலோ!
நாகந் தீர்த்தபி ரானே செழியா!
தாலோ தாலேலோ! **22**

22. கரளத்து உரகம் — நஞ்சினையுடைய பாம்பு; கன — பெரிய; உரக மாணிக்கம், கன மாணிக்கம் எனத் தனித்தனி இயையும்; கதி—செல்வம், மாணிக்கமாகிய செல்வம் என்க; கரி முத்து — யானைத் தந்தத்தில் பிறந்த நித்திலம்; கழை — கரும்பு; ஆரம் — முத்து; கமுகு — பாக்குமரம்; கார்முகில் — கரிய மேகம்; ஐ — அழகிய; கலை — வைரம், இங்கு மணிப்பொதுவாக நின்று முத்தைக் குறித்தது;முத்து இருபது இடங்களில் பிறக்குமென்பது இலக்கிய மரபு;

''தந்தி வராக மருப்புஇப்பி பூகம் தனிக்கதலி
நந்து சலஞ்சல மீன்தலை கொக்கு நளினம்மின்னார்
கந்தரம் சாலி கழைகன்னல் ஆவின்பல் கட்செவிகார்
இந்து உடும்பு காரமுத்தம் ஈனும் இருபதுமே''
(இரத்தினச்சுருக்கம். 35)

புரள — புரண்டோடுமாறு; சிதறி — இடம் மாறி; சிங்கம்— வாளைக் கன்றுகள்; சிங்க — (வெள்ளத்தில் அடித்துக் கொண்டு

போகப்படுவதால் எண்ணிக்கையில்) குறையும்படி; 'சேல்பட்டு அழிந்தது செந்தூர் வயற்பொழில்' என்னும் அருணகிரியார் கருத்துக்கு (கந்தரலங்காரம். 40) ஒத்தது இது.

சங்கம்—சங்குகள்;பொங்கம்—நறுமணம்; பொங்கர்—சோலை; பொங்கப் பொங்கர்—மணமிக்க மலர்கள் நிறைந்த சோலை; புரவு – வயல்; புயல் —மேகங்களூடு; தாவ—பாய.

புளினம் தாவித் திரள என இயையும்; பறவைக் கூட்டங்கள் பறந்து ஒன்றுசேருமாறு என்பது பொருள்; கரை அ புளினம் — (ஆற்றின்) கரைகளிலுள்ள அந்த மணல் மேடுகள்; கரைய—நீரில் கரைந்து போய்படி; திரை—அலை; செந்நெற் கோடும் கன்னற் காடும் என: நிரல்நிறை; கோடு—மலைச்சிகரம், செந்நெல் குவியல் மலையாக உருவகிக்கப்படுகிறது; சிந்தும்—அழிக்கும்; சிந்துபடும்—கடலில் தோன்றுகின்ற; தரளப் பெயர் — மணிகளின் பெயரில்; ஈர்ப்பெயர் ஆறு – இரண்டைத் தன் பெயராக உடைய ஆறு, மணி முத்து ஆறு; தரளம் என்ற சொல் பொதுவாக மணி என்ற பொருளில் ஆளப்பட்டது.

கடலில் பல மணிகளும் தோன்றுவதால் அதனை இரத்தி னாகரம் என்பர்.

மாணிக்கக் கதியை(யும்) கரி முத்தை(யும்) கழை ஆரத்தை (யும்) கமுகு ஆரத்தை(யும்) கார்முகில் ஐ கலையை(யும்) புரள. திரை மோதி சிதறி, சிங்கம் சிங்க, உடன் சங்கம் பொங்க. பொங்கர்க் கயலும் புரவக் கயலும் புயல்தாவ, புளினம் தாவித் திரள, கரை அ புளினம் கரைய, திரைமோதிச் செந்நெல் கோடும் கன்னல் காடும் சிந்தும் ஆறு, சிந்துபடும் தரளப் பெயர் ஈர்ப் பெயர் ஆறு என இயையும்.

கிரணச் செவியின் குழையாம் உபயக்
கிரிமேல் கடல்வீழக்
கீழக் கடல்வீழ் கால்கொடு சுற்றிக்
கேழ்வயி ரத்துஉகிரால்
இரணத்து இரணிய நாகத் தனையதோர்
இரணியன் ஆகத்தே
எழும்அரு ணக்குரு திப்பெரு நதிவந்து
எதிரப் பொரும்வீரா!

அரணப் புணரிப் பூவுல கத்துஒன்று
ஆகப் பகிரண்டத்து
அரவிந் தத்தவன் மூதுலக கத்துஒன்று
ஆகஎ டுத்தநெடும்
சரணத் தருணக் கமலத் துணையாய்!
தாலோ தாலேலோ!
தாகந் தீர்த்தபி ரானே செழியா!
தாலோ தாலேலோ! **23**

23. கிரண—ஒளிவீசுகின்ற; கிரணக் குழை, செவியின் குழை என இயையும்; குழையாம் – காதணிகளாகிய; உபயக்கிரி – இரு மலைகளும், மேல்கடல் – அண்ட வெளிக்கு மேலேயுள்ள கடல், 'ககன வெளிக்கூட முகடு திறந்து புறங் கோத்த முந்நீர் உழக்கி' (மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ். 24:3); கீழக்கடல்—நிலத்தின் கீழ் இருக்கும் கடல்; கால்கொடு—கால்களால்; சுற்றி—வளைத்து; கேழ் – ஒளிர்கின்ற; வயிரத்து உகிரால் – வைரத்தைப் போன்ற உறுதியும் ஒளியும் படைத்த நகங்களால்; திருமால் நரசிங்கமாக வந்தபோது அவர் காதணிகள் மலைகளைப் போல் பெரியன வாகவும், அண்ட வெளிக்கு மேலே உள்ள கடலைத் தொடுவன வாகவும் இருந்தன; கால்கள் கீழ்க்கடலைத் தொட்டுக் கொண்டு இருந்தன; மானிட மடங்கல் ஆகாயத்திற்கும் நிலத்திற்குமாக மிகப் பெரிய வடிவையுடையவர் என்றவாறு. 'காமர்வெம் படைகள் யாவும் கார்மழை பொழிந்தது என்னத் தாமம்ஆர் நரசிங் கத்தின் தனிஉடல் மூடி ஆர்த்தார்', 'அக்கணத்து அரிகோ ரம்கொண்டு அங்கம்ஈர் இலக்கம் நீளம் மிக்கமார்பு அகலம் லட்சம் யோசனை விளங்கத் தோன்றி' (மச்ச புராணம். சங்குல யுத்த அத்தியாயம். 8,9.), 'காலினான் மாட கூடத்தை இடிக்கக் கதிர்மணி முடிஅடக் ககன மேவிய அண்ட கடாகமும் இடிந்த' (மேற்படி. சேனாவத அத்தியாயம். 5) என்பன மானிட மடங் கலின் பேருருவத்தைக் காட்டுகின்றன.

இரணத்து—போரில்; இரணிய நாகத்து அனைய—பொன்னா லான மலையைப் போன்றதாகிய; ஓர் இரணியன் – ஒப்பற்ற அசுரனாகிய இரணியகசிபு வினுடைய; ஆகத்தே—உடலில்; நாகத் தனைய ஆகம், இரணியன் ஆகம் என இயையும்; அருணம் – சிவப்பு; குருதி—உதிரம்; எதிர—தோன்றுமாறு; குழையாம் உபயக் கிரி மேல்கடல் வீழ, கால்கொடு சுற்றி, இரணத்து, இரணியன் ஆகத்தே குருதிப் பெருநதி வந்து எதிர உகிரால் பொரும் வீரா என இயையும். ஆளரியாய் வந்த திருமாலே எனச் செழியனை விளித்தவாறு.

அரணம்—மதில்; புணரி—கடல்; தன் மதிலாகக் கடல்களை உடைய நிலவுலகம் என்க; பகிரண்டம்—அண்டத்தின் மேற்புரம்; அரவிந்தத்தவன் — தாமரையை இருக்கையாக உடையவனும் உயர்ந்தவனுமாகிய பிரமதேவன்; மூதுலகு என்றது பழமையானதும் பிரமனுக்குரியதுமான பிரமலோகத்தை; திருமால் திருவிக்ரமாவதாரத்தில் நில உலகங்களை ஓரடியாலும், மேலண்டங்களை மற்றோர் அடியாலும் அளந்தார்.

''நின்றகால் மண்எலாம் நிரப்பி அப்புறம்
சென்றுபா விற்றிலை சிறிது பார்எனா
ஒன்றவா னகமெலாம் ஒடுக்கி உம்பரை
வென்றகால் மீண்டது வெளிபெ றாமையால்''
(கம்பராமாயணம். பால. வேள்விப். 25)

சரண—திருவடிகளாகிய; தருண — எப்போதும் புதுமையாக விளங்குகின்ற; கமலத்துணை — இரு தாமரை மலர்கள்; சரண கமலம், தருண கமலம் என இயையும்; தருண கமலம் என்னும் வடசொற்றொடர் இயல்புப் புணர்ச்சி பெறலாமெனினும் செய்யுளோசை நோக்கித் தருணக் கமலம் எனத் தமிழ்வழிப் புணர்த்தார்.

ஆளரியே! உலகளந்த பெருமாளே! தாகந் தீர்த்த பிரானே என அழைத்துத் தாலாட்டியவாறு.

அங்கட் கமுகக் காடும் கதலிக்
காடும் கோடிமடித்து
அரளப் புரள்தரு வாளைக் கிளைவிளை—
யாடப் புடைஎங்கும்
வங்கக் கடல்விட் டெழுமே காடவி
மானத் தனிதனிபோய்
மயிடப் பத்தித டத்தைவி டுத்துஎழு
மகதைத் திருநாடா!
செங்கட் கமலப் பவளத்து இதழத்
திதலைமு கிழ்க்கமலச்
செம்பொற் பரிபுர தமரக் கமலச்
செவிலியர் தம்கடகச்
சங்கக் கமலத் தலத்துஅமுது அனையாய்!
தாலோ தாலேலோ!
தாகந் தீர்த்தபி ரானே செழியா!
தாலோ தாலேலோ!

24

24. அம்கண் கமுகு – அழகிய கணுக்களை உடைய பாக்கு மரம்; கதலி–வாழை; கோடி–மிகப்பல; மடித்து–அழித்து, அரள–பெருவியப்பு உண்டாகும்படி; வாளைக்கிளை – வாளைமீன் கூட்டம்; புடை எங்கும்–எல்லா இடங்களிலும்.

மேக + அடவி = மேகாடவி – முகிற்குலங்கள்; மான: உவம உருபு; தனித்தனி எனற்பாலது செய்யுளோசை நோக்கித் தொகுத்தல் விகாரம் பெற்றது; மயிடப் பத்தி–எருமைக் கூட்டங்கள்; தடம்–நீர்நிலை; எழு–எழுகின்ற; வாளைக் கிளை விளையாட மயிடப்பத்தி தனித் தனிபோய் மேகாடவி மானத் தடத்தை விடுத்து எழு மகதைத் திருநாடா என்பது முடிபு. மகத நாட்டெல்லைகள் வருமாறு:–

''செங்கம்மா மேற்கு வடக்குநதி சேயாறு
பொங்கு கடல்கிழக்கு பூண்முலையாய்–சங்கம்ஊர்
வெள்ளாறு தெற்கு விளங்கு மகதையருக்
குள்ளான நாடுஎன்று உரை''

(மேழிவிளக்கம்–கண்ணி 571 இன் அடிக்குறிப்பில் பதிப்பாசிரியர் உயர்திரு வே. ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர் அவர்களின் மேற்கோள் வெண்பா.)

செங்கண் கமல – தாமரை போன்ற விழிகளை உடைய; பவளத்து இதழ–துகிர் போன்ற உதடுகளை உடைய; திதலை – தேமல் பூத்த; முகிழ்க் கமல – தாமரை மொட்டுகளை உடைய, தேமல் பூத்த தாமரை மொட்டுகள் என்றது நகில்களை; செம்பொற் பரிபுர – செம்பொன்னாலாகி சிலம்பினாலுண்டாகும்; தமர–ஓசையை உடைய; பரிபுர தமரக் கமலம் என்றது தாமரை போன்ற பாதங்களை; செங்கட் கமல முதலிய நான்கையும் தனித் தனி செவிலியர் என்பதனோடு கூட்டுக.

சங்கக் கமலம் – வளையல்களை அணிந்த தாமரை போன்ற கைகள்; செழியன் அழகிய செவிலியர்களின் கைகளினிடத்தே அமுதம் போலச் சிறப்புற்று விளங்குகின்றான் என்றவாறு.

காலைக் கமுகில் வேயில் மருகில்
காயச் சிறைகோதிக்
கடுநண் பகலுக்கு ஆவியின் மூழ்கிக்
கயல்உண்டு அயலேபோய்
மாலைப் பொழுதில் சோலைத் தலையின்
மலர்க்கூடு எய்திப்பின்
வைகறை வண்டுஎழ அன்னம் துயில்எழு
மகதைத் திருநாடா!

பாலைச் சொரிமுத் தில்பவ ளத்தில்
பருவயி ரக்கொத்தில்
பத்திவ குத்ததெ ருத்தொறும் ஒருமுப்-
பத்துஇரு பேறுஉதவுஅச்
சாலைத் தருமச் சேலத்து அரசே!
தாலோ தாலேலோ!
தாகந் தீர்த்தபி ரானே செழியா!
தாலோ தாலேலோ 25

25. வேய்—மூங்கில்; மருகு — வாழையில் ஓர் இனம்; கமுகு முதலிய மூன்றிடங்களிலும் எண்ணும்மைகள் தொக்கன; காய — ஈரம் புலரும்படி; சிறை—இறகுகள்; கோதி—வகிர்ந்து கொண்டு, சிறை காயக் கோதி என இயையும்; காயக் கோதி என்றதனால் முன்னம் நீருள் மூழ்கியது பெறப்பட்டது; பகலுக்கு — பகலில்: வேற்றுமை மயக்கம்; ஆவி—குளம்; கயல்—கயல் மீன்கள்.

சோலைத் தலையின்—சோலையின் உச்சியிலுள்ள, மரங்களின் மீதுள்ள என்பது கருத்து; மலர்க்கூடு — மலர்களாகிய கூண்டு, சோலை மலர்கள் அன்னங்களுக்குக் கூண்டுகளாகப் பயன்படுகின்றன; வைகறை—விடியற்காலையில்; வண்டுஎழ— (மலர்களின் தேனை நாடி) வண்டுகள் வந்தடைய, வண்டுகள் அன்னங்களுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடுகின்றன என்றவாறு; காலைக் குளியல், கமுகு மூங்கில் வாழை போன்ற மங்கலப் பொருள்களினருகே ஒப்பனை, பகலில் மறுபடியும் நீராடி உண்ணல், இரவில் மலர்ப்படுக்கை, துழலெழுப்ப வண்டுகள் என்றபடி அன்னங்களும் இராச போகம் துய்ப்பதால் அந்நாட்டிலுள்ள மக்கள் எத்தகைய பெருவாழ்வு பெற்றுள்ளவர் என்பது புலப்படுகிறது.

பால்—வெண்மையான ஒளி; சொரி—வீசுகின்ற, பரு—பெரிய; கொத்து — இனம், வயிரக் கொத்து என்றது வைரம், நீலம், மரகதம் போன்ற மணிகளின் வகைகளை; பத்தி — (வீடுகளின்) வரிசை; சின்ன சேலத்தின் தெருக்களிலுள்ள வீடுகள் நவ மணிகளானியன்றன என்றவாறு; முப்பத்திரண்டு அறமாவன:—

"தெய்வந்தென் புலத்தார் பூத மானிடம் பிரமம் என்றோர்
ஐவகை எச்சம் பூர்த்தம் துறந்தவர் மடங்க ளன்பு
செய்யுமில் வாழ்வார்க்கு இல்லம் மனைக்குப கரணம் தேம்பூப்
பெய்துஅமை தண்ணீர்ப் பந்தர் எங்கணும் பிறங்கு சோலை,

இரப்பவர் குருடர் எவ்வ முற்றவர்ப் புரத்தல் வெந்நோய்
துரக்குநன் மருந்து தூவாய் மகவினை ஓம்பல் சுண்ணம்
பரித்தபா கடையே எண்ணெய் பைம்புனல் குளிப்ப வேண்டும்
மருக்கிளர் துவர்கள் ஆதி மலரணை நிலனான் கன்னி,
கடிமணம் விளக்கு மாறாக் கடனொழித் திடுதல் ஈசன்
அடியவர் விழைவ வீகை அக்கமா மணிவெண் ணீறு
படியிலாக் கடவுட் பூசை உபகர ணங்கள் பாசம்
தடிதரு வேத வாய்மைச் சைவநூல் புராண நல்கல்,
சிவபிரான் அடிக்கீழ்ப் பத்தி செவியறி வுறுத்த லோடும்
உவகையின் அபயம் யார்க்கும் வழங்குதல் உள்ளிட்டு ஓதும்
நவையறும் அறம்எண் நான்கும்....'' (காஞ்சிப்புராணம்)

பேறுஉதவு அத் தருமச் சாலைச் சேலம் என இயையும்; முப்பத்திரண்டு தருமங்களையும் செய்கின்ற அறச்சாலைகள் சேலத்தில் நிறைய உள்ளன என்றவாறு.

மகதைத் திருநாடா! சேலத்து அரசே! தாகந்தீர்த்த பிரானே! செழியா! தாலோ தாலேலோ என்பது பொருள் முடிபு.

தேனைக் கனியைப் பாலைச் சோலைத்
திரளும், திரள்மேதித்
திரளும் பொழியப் புரளும் பொருதுதி–
ரைத்துஇரை திரையோடும்
வானைத் தடவிப் புவியைப் பரவிம–
ணிப்பா தலலோகம்
மட்டும் தழுவிச் சிட்டர்தொ ழப்போம்
மணிமுத் தாநதியா
ஆனைக் கடல்கொண்டு இரதக் கடல்கொண்டு
அடுதுர கக்கடல்கொண்டு
அகன்மேற் கடல்கீழ்க் கடல்தென் கடல்வட
கடல்மட்டு அடல்கொள்ளும்
தானைக் கடலுக்கு உதயக் கதிரே!
தாலோ தாலேலோ!
தாகந் தீர்த்தபி ரானே செழியா!
தாலோ தாலேலோ! 26

26. சோலைத்திரள் தேனையும் கனியையும் திரள் மேதித் திரள் பாலையும் பொழிய என நிரல்நிறைப் பொருள் கோள்;

திரள்மேதி—பருத்துள்ள எருமை;திரைத்து—அலைவீசிக்கொண்டு; இரை—ஒலிக்கின்ற; திரை—அலை.

மணிப் பாதல லோகம் — மாணிக்கங்கள் நிறைந்த கீழ்உலகு, அது நாகங்களின் உலகாதலின் மணிகள் மிகுதி; சிட்டர் — சான்றோர்.

கடல் — கடல் போன்ற படை; அடுநரகம் — போரிடுகின்ற குதிரை, சுமைகளை இழுத்துச் செல்லும் குதிரைகளிலிருந்து வேறுபடுத்திக் காட்ட அடு என்னும் அடை புணர்த்தார்; அகன்—இடமகன்ற; மட்டு என்புழி முற்றும்மை தொக்கது; அடல் கொள்ளும்—வெல்லும்.

தானைக்கடல் — சேனையாகிய சமுத்திரம்: உருவகம்; கடலுக்கு—கடலின்கண்: வேற்றுமை மயக்கம்; உதயக்கதிர்—உதய சூரியன்.

மணிமுத்த நதியா! தானைக் கடலுக்கு உதயக் கதிரே! தாகந் தீர்த்த பிரானே! செழியா! தாலோ தாலேலோ என்பது பொருள் முடிபு.

மாரா கருணா தருணா சதுரா
மதுரா வில்விதுரா
வாளுக்கு அபிமா அபிமா னீகா
மகதந ராதீகா
"சேரா வளவா தென்னா என்னைத்
தென்தமிழ் பாடுகெ" னச்
சிறையிட் டார்பால் பொருதுஅச் சிறைவிடு
செல்வக் குலதீபா!
வீரா கரனே பரமோ தாரா
வினவுக லைக்கடலே!
மேருக் கிரியே பாருக்கு அரசே!
விதுரவி ஏய்முத்தத்
தாரா தரம்ஏய் தமர்ஆ தரமே!
தாலோ தாலேலோ!
தாகந் தீர்த்தபி ரானே செழியா!
தாலோ தாலேலோ?

27. மாரா – மன்மதனைப் போன்ற அழகனே; கருணா– கன்னனைப் போன்ற பெருவள்ளலே; தருணா – இளையவனே; சதுரா–திறமை மிக்கவனே; மதுரா–இனியவனே: வில் விதுரா– வில்வித்தையில் திறமை மிக்கவனே, விதுரன்–அறிஞன்; அபிமா– அருச்சுனன் மகனாகிய அபிமன்னியு; அபிமானீகா – மதிக்கத் தக்கவனே; மகத–மகத நாட்டை உடையவனே; நர + அதீகா = நராதீகா–மனிதர்களுக்குள் உயர்ந்தவனே, மன்னன் என்றவாறு.

வளவா – சோழனே; என்னை – கூறுகிறவன் அச்சுத களப் பாளன்;பொருது–போரிட்டு;சிறைவிடு–சிறையிலிருந்துவிடுவித்த; செல்வ–செழிப்புமிக்க; குலதீபா–குலமாகிய வேளாளர் மரபின் விளக்குப் போன்றவனே; அச்சுதகளப்பாளன் மூவேந்தரையும் சிறைப்படுத்தி விட்டான். புகழ்ந்து பாடினால் தம்மை விடுதலை செய்து விடலாம் என நம்பிய மூவரும் களப்பாளனைப் புகழ்ந்தும் பாடிப் பார்த்தனர். எனினும் விடுதலை கிடைக்கவில்லை, இந்த நிலையில் கொங்கு வேளாளர்களில் பூசன் குலத்தில்ஓர் இளைஞன் களப்பிரன் படையை முறியடித்துச் சிறையிலிருந்த மூவேந்தரை யும் விடுவித்தான். 'மூவர்தமைச் சிறையது வாங்கிய பூசனன் தொண்டைமான் செம்மல்' (கொங்குமண்டல சதகம் – வால சுந்தரக் கவிஞர். 72.) இவ் வரலாற்றின் விரிவைக் கல்வெட்டு அறிஞர் புலவர் செ. இராசு, எம்.ஏ., அவர்கள் எழுதிய, 'மூவேந்தரைக் காத்த மூலனூர்த் தொண்டைமான்' என்ற கட்டுரையில் காணலாம். (கொங்கு. மாத இதழ். மலர் 2. இதழ். 6: 15–11–85)

வீர + ஆகரன் = வீராகரன், வீரமே வடிவானவன்; பரம+உதாரன் =பரமோதாரன், மிக்க கருணை உள்ளவன்; வினவு கலை–கேள்வியால் பெறப்படும் கல்வி, செவிச் செல்வம்; மேருக்கிரி – இமய மலை, உறுதியில் மலையனையவன்; விது – சந்திரன்; ரவி–சூரியன்; ஏய்–போன்ற; முத்தத் தாரன் – முத்து மாலைகளை அணிந்தவன்; முத்துகளுக்குச் சூரியர் சந்திரர் உவமை.

தரம் ஏய் – தகுதிவாய்ந்த; தமர் – சுற்றத்தார்; ஆதரம் – பாதுகாப்பவன்.

சிறைவிடு செல்வக் குலதீபா! வீராகரனே! பரமோதாரா! கலைக்கடலே! கிரியே! அரசே! தாரா! ஆதரமே! தாகந்தீர்த்த பிரானே! செழியா! தாலோ தாலேலோ என்பது பொருள் முடிபு.

அமரப் பதவிக்கு உதவிப் பொருளாய்
அருளுக்கு எழுகடலாய்
ஆழிப் படுவும் பாழிக் குவடும்
அடக்குத டக்கதிர்வேல்
குமரக் கடவுள் கொடிமுடி திமிரக்
கூகைபு டைத்துஅடையக்
கூவா எல்லைக்கு எல்லைஎ னும்பொற்
கோவைத் தெரியாமே
பமரத் திரளும் திரளும் குயிலும்
பயிலும் கிளிமயிலும்
பந்திக் கருமந் தியும்உடன் அண்டப்
பகிரண் டத்துஅதிரும்
தமரப் பலகத்து உலகா புரியாய்!
தாலோ தாலேலோ!
தாகந் தீர்த்தபி ரானே செழியா!
தாலோ தாலேலோ! **28**

28. ஆழிப்படு—கடலாகிய நீர்நிலை, மடுவைக் குறிக்கும் படு என்னும் சொல் பொதுப் பொருளில் வந்தது; பாழிக் குவடு—வலிமையுடைய மலை, கிரவுஞ்ச கிரி; சூர சம்ஹாரத்தின் போது கடலை வற்றச் செய்ததும், கிரவுஞ்ச மலையைப் பிளந்ததும் முருகனின வேலாகும்.

கொடி—(முருகப் பெருமானின்) பதாகை; கொடி முடி—கொடியின் உச்சியிலுள்ள சேவல்; திமிரக் கூகை—இருட்டில் வாழும் ஆந்தைகள்; புடைத்து அடைய—இறகுகளை அடித்துக் கொண்டுபோய்த் தம் கூட்டிற்குள் அடைபடுமாறு;கூவா எல்லை—கூவுகின்ற அந் நேரம்; எல்லை—சூரியன்; எல்லைக்குப் பொற் கோவை, எல்லை எனும் பொற்கோவை எனத் தனித்தனி இயையும்; பொற்கோ—அழகிய தலைவன்.

பமரத் திரள்—வண்டுகளின் கூட்டம்; திரளும்—கூடுகின்ற; பயிலும்—ஆங்காங்குச் சுற்றித் திரிகின்ற; கிளியும் மயிலும் என்க; பந்தி—வரிசையாக உள்ள; கருமந்தி—கருங்குரங்கு; உடன்—ஒன்றாகச் சேர்ந்து; இவை அனைத்தும் கரிய நிறத்தனவாதலால் சூரியனை மறைத்தன;அண்டப் பகிரண்டம்—இப் பிரபஞ்சத்திலும் இதற்கு வெளியேயும்; அதிரும்—மிக்கொலிக்கும்.

தமர—ஒலிகளின்; பலகத்து—அடுக்குகளை உடைய; பலவகைப் பட்ட ஓசைகளை உடைய என்றவாறு.

குமரக் கடவுள் கொடிமுடி கூவா எல்லைக்குப் பொற் கோவைத் தெரியாமே பமரத்திரளும், குயிலும், கிளி(யும்), மயிலும் கருமந்தியும் உடன் அண்டப் பகிரண்டத்து அதிரும் தமரப் பலகத்து உலகாபுரியாய் என இயையும். இக் கரிய உயிரினங்கள் தம் நிறத்தால் சூரியனை மறைத்ததோடு தம் முழக்கத்தால் சேவலின் கூவலையும் அடக்கிவிட்டனவாம்.

சந்தவிருத்தம்

தனதன தனதன தனதன தனதன
தானந் தாத்தன தா்னானா

வடவரை வரைபடு கொடுவரி உயரிய
மார்பம் சாத்திய தார்ஆரார்
மறிகடல் சுவறிய புகழ்மிகு மதுரையில்
வாழும் சேற்கொடி சூழ்போவார்
படவரை நிலமுலை வடம்என மலைநதி
பாயும் சீர்க்குட நாடுஆள்வார்
பலசுவை யினும்அதி மதுரிய கவிகொடு
பாடும் பாட்டுள வேளாளா
கடவரை உரிவையர் இடம்ஒரு தெரிவையர்
காலன் போர்க்குஒரு கால்ஈவார்
கரம்அதில் அயன்முடி கொடுதவ இருடியர்
கானம் போய்த்தலை நாள்மீள்வார்
தடவரை யரவினர் சடைவரு பகிரதி
சாருங் கோத்திர தாலேலோ!
தமிழ்உல கையர்பதி செழியர்தம் அதிபதி!
தாகந் தீர்த்தவ தாலேலோ! **29**

29. வடவரை—வடக்கின்கண் உள்ள மலையாகிய இமயம்; வரைபடு – எழுதப்பெற்ற; கொடுவரி – புலி; உயரிய – (புலிக் கொடியை) உயர்த்தியவர்களாகிய; மார்பம்—மார்பு; தார் ஆரார்— ஆர்த்தாரார் என மாறுக, ஆத்தி மாலையை யணிந்த சோழர்கள்; மறிகடல்—அலை எறிகின்ற ஆழி; சேற்கொடி—கயற்கொடி, இது பாண்டியர்களுக்குரியது. உக்கிரச் செழியன் தொண்ணூற்றாறு அசுவமேத வேள்விகள் செய்தான். அதைக் கண்டு பொறுக்காத இந்திரன் மதுரை நகரை அழிப்பதற்காகக் கடலை ஏவினான். பாண்டியன் சிவபெருமானின் திருவாணைப்படி வேலெறிந்து

கடலை வற்றச் செய்தான் இவ் வரலாறு திருவிளையாடற் புராணம் கடல்சுவற வேல்விட்ட படலத்தில் கண்டவாறு.

படவரை நிலம் — பாம்புப் படத்தால் சுமக்கப்படுகிற இடமாகிய நிலவுலகம், இவ்வுலகு ஆதிசேடனால் தாங்கப்படுதலின் இவ்வாறு கூறினார்; நிலமகளின் நகிலும், முத்து மாலைகளுமாக மலைகளும் ஆறுகளும் விளங்குகின்றன: நிரல்நிறை; குடநாடு— மேற்குத் திசையிலுள்ள சேரநாடு; மதுரிய — இனிமையான, மாதுரிய என்னும் வட சொற்றிரிவு; வேளாளர்—வேளாள மரபில் தோன்றிய செழியனே; முடியுடை வேந்தர் மூவரும் போற்றிப் பாடுகின்றனர் என்பது முன்னர் விளக்கப்பட்டது.

கடவரை — மதம் பொழிவதும் மலை போன்ற வடிவினது மாகிய யானை; உரிவையர்— (யானையின்) தோலை மேலாடையாக உடையவர்; இடம்—திருமேனியின் இடப்புறம்; தெரிவையர்— உமாதேவியாகிய பெண்ணை உடையவர். தெரிவை என்ற சொல் பருவத்தைச் சுட்டாது பொதுப்பொருளில் வந்தது, மாதொரு பாகர் என்றபடி; காலன்—இயமன்; காலன் போர் — இயமனால் நேர்ந்த போர்; ஒரு கால் ஈவார் — ஒரு திருவடியை மட்டுமே பயன்படுத்தியவர், காலனை உதைத்தவர் என்றவாறு; மார்க்கண்டேயருக்காகச் சிவபெருமான் கூற்றுவனைஉதைத்த வரலாறு வெளிப்படை; அனைவராலும் அஞ்சப்படும் கூற்றுடன்று மேல் வந்தபோது மிக அலட்சியமாக ஒற்றைக் காலால் உதைத்த செயல் இறைவனின் பேராற்றலை உணர்த்துகிறது; கரம் அதில்— கையில், அது: பகுதிப் பொருள் விகுதி; அயன் முடி கொடு — பிரமனின் மண்டையோட்டை ஏந்தியவராக; தவ இருடியர் கானம் — தவம் புரியும் முனிவர்கள் வாழ்ந்த தண்டகாரணியம் என்னும் காடு; தலை நாள்—முற்காலத்தே.

தட அரவு அரையினர் என மாறுக, இடுப்பில் பெரிய பாம்பைக் கச்சாக அணிந்தவர், 'விட அரவு அரையினர்' (மதுரைக் கலம்பகம். 79); சடைவரு—சடையின் வழியாக வருகின்ற; பகிரதி: பகீரதி எனும் வட சொற்றிரிவு, பகீரதனுக்காக வந்தவளாகிய கங்கை; கங்கை சாரும் கோத்திரம்—கங்கா குலம், இது வேளாண் மரபு. உலகையர் பதி, அதிபதி என்னும் ஈரிடங் களிலும் அண்மைவிளி இயல்பாயின.

பாடும் பாட்டு உள வேளாளா! பகிரதி சாருங் கோத்திர! உலகையர் பதி! செழியர்தம் அதிபதி! தாகந்தீர்த்தவ தாலேலோ என்பது முடிபு.

நிழலிடை துயில்வன கவரிகள் (வயலிடை)
நீலம் பூத்தன மேயாமே
நிரைநிரை இரிதர வளமலி களமரும்
நீளும் கோட்டுழை சூழாமே
அழலிடை நிறம்உறு சததள வயல்விளை-
யாடும் போர்க்கயல் ஊடேபோய்
அளவில கதலியும் மடல்அவிழ் கமுகும்
அசோகும் சாய்த்திடு நாடாளா!
குழலிடை அளிகளி வணிகனொடு ஒருவிசை
கூறும் கூற்றுஅது மாறாமே
கொலைபுரி குவன்இவன் உயிர்என வெறிமகள்
கோபங் கோத்தமை போமாறே
தழலிடை பழிபழு வியகுல நிலைகொடு
தாலம் காத்தவ தாலேலோ!
தமிழ்உல கையர்பதி செழியர்தம் அதிபதி!
தாகந் தீர்த்தவ தாலேலோ! 30

30. கவரிகள்—எருமைகள், 'நிழலிடை உறங்கும் மேதி' (கம்பர். பால. நாட்டுப். 6); நீலம்—கருங்குவளை; நிரைநிரை—கூட்டம் கூட்டமாக; இரிதர—அஞ்சியோடவும்; களமர்—விவசாயிகள்; நீளும்—நீண்ட; கோட்டு உழை—குளத்தின் அருகே; சூழாமே—நெருங்காதவாறும்.

அழலிடை நிறம்—தீப்போன்ற வண்ணம், இடை: உவம உருபு; சததளம்—தாமரை; சததள வயல் என்றது தாமரை மிக்கிருந்த காரணத்தால்; போர்க்கயல்—போர் புரியும் இயல்புள்ள கயல் மீன்கள்; கதலியும் கமுகும் அசோகும் (அவற்றின்) ஊடே போய்ச் சாய்த்திடும் என இயையும்; கதலி—வாழை; கவரிகள் மேயாமே இரிதர(வும்), களமரும் கோட்டுழை சூழாமே, போர்க்கயல் கதலியும் கமுகும் அசோகும் ஊடேபோய்ச் சாய்த்திடும் நாடாளா என்பது முடிபு. இது மகதநாட்டு வளம். கயலின் போர்த் திறத்தால் சோம்பலுள்ள எருமைகள் மட்டுமன்றி ஆற்றல்மிக்க உழவர்களும் அஞ்சினர் என்பதனைக் காட்ட வளமலி களமரும் என்றார்: உம்மை உயர்வு சிறப்பு.

குழலிடை அளி களி—கூந்தலில் வண்டுகள் மொய்க்கின்ற (வணிகன் பெருஞ்செல்வனாதலின் குடுமி நிறைய மல்லிகைப்பூச் சூடியிருப்பன் போலும்); ஒருவிசை—ஒருதரம்; கூற்றுஅது—சொல்;

இங்கு உறுதிமொழி, அது: பகுதிப்பொருள் விகுதி; இவன் உயிர்க் கொலை புரிகுவன் என வெறிமகள் கோபம் கோத்தமை போமாறே என இயையும்; பழையனூர் நீலியின் வரலாறும், பழி கழுவ வேளாளர்கள் தீக்குளித்ததும் பிரசித்தம்.

பழிக்ழுவிய குல:விளி; நிலைகொடு—அரசாட்சியில் நிலைத்து நின்று; தாலம்—உலகத்தை; காத்தவ—புரந்தவனே.

நாடாளஎ! பழி கழுவிய குல! தாலம் காத்தவ! உலகையர் பதி! அதிபதி! தாகந்தீர்த்தவ! தாலோ தாலேலோ என்பது பொருள் முடிபு.

முரணிய கரவுடன் வருகடி மகள்எனும்
மோய்பண்டு ஊட்டிய பால்வாயா!
முகடுஅள விடுமரு தொடுசகடு உடைபட
போதும் தாள்துணை மாமாயா!
அரணிய யமுனையில் இருகரை தனில்பல
ஆவுங் கேட்டுள வேய்ஆயா!
அரவுஅரசு அரதன முடிநெரி தரநெடிது
ஆடுங் கூத்துஅருள் தாளானே!
இரணிய கிரியையும் இரசத கிரியென
ஈசன் போய்ப்புக மாலானோன்
'எதுநமது எறிகடல்' எனும்நெறி அறுகடல்
யாவும் பாற்கடல் ஆமாறே
தரணியது உடலையும் நெடுவெளி யையும்ஒளி
தாவும் கீர்த்திப தாலேலோ!
தமிழ்உல கையர்பதி செழியர்தம் அதிபதி!
தாகந் தீர்த்தவ தாலேலோ! 31

தாலப்பருவம் முற்றிற்று

31. முரணிய – மாறுபட்ட; கரவுடன் – வஞ்சகத்தோடு; கடிமகள்—கோகுலத்திற்குப் புதிதாக வந்த பெண்; மோய்—தாய், முலைப்பால் அளித்ததால் தாய் என்றார், கொல்ல வந்த அரக்கியைத் தாய் என்றது வஞ்சப் புகழ்ச்சி; பண்டு—முற்காலத்தில்; 'செஞ்சுடர் மணிக்கலை சிலம்பொடு சிலம்ப வஞ்சியென

நின்றொசி மருங்குல்தடு மாற நஞ்சுபொதி வெம்முலை யருத்துற நடந்தாள் அஞ்சுவரு பூதனை அணங்குஉருவெடுத்தே' (செவ்வைச் சூடுவார் பாகவதம் 2731.), ஆதலின் 'முரணிய கரவுடன் வரு கடிமகள்' என்றார்; இவ் வரலாறு வெளிப்படை. முகடு அளவிடு- வானளாவி; மருதொரு-மருத மரங்களுடன்; சகடு-நடைவண்டி; மா-பெரிய; மாயா-மாய வித்தையில் வல்லவனே; குபேரனின் மைந்தர்களாகிய நளகூபரன், மணிக்கிரீவன் என்னும் இருவரும் நாரதரின் சாபத்தால் மருதமரங்களாக நின்றனர். உரலிற் கட்டுண்ட கண்ணன் அம் மரங்களிடைத் தவழ்ந்து அவற்றை வீழ்த்தினான். நளகூபர மணிக்கிரீவர்கள் சாபநீக்கம் பெற்றனர். ஓர் அசுரன் கைவண்டியின் வடிவில் வந்து கண்ணபெருமானின் மூன்றாந் திங்கள் பிறந்தநாள் திருவிழாவன்று கொல்லச் சமயம் பார்த்திருந்தான். கண்ணன் தன் மலர்க்காலால் உதைத்தருளி அச் சகடாசுரனை மாய்த்தான்.

அரணிய யமுனை – காடுகளைத் தன்கரைகளிற் பெற்ற யமுனைநதி; வேய் : ஆகுபெயராக மூங்கிலாலான குழலை உணர்த்திற்று; ஆயா-ஆயர்குடியில் பிறந்தவனே; வேதங்களால் அறியமுடியாத பரம்பொருள் கோகுலத்தில் எழுந்தருளிய போது அவர் ஆக்களின் பின்னே திரிந்தார்; அவர் குழலோசையை ஐந்தறிவுடைய பசுக்களும் கேட்டன என்பார் 'ஆவும் கேட்டுள வேய் ஆயா' என்றார்: இழிவு சிறப்பும்மை; அரவு அரசு- பாம்பு களின் ஒரு கூட்டத்திற்குத் தலைவனாகிய காளியன், இவன் ரமணகத் தீவில் இருந்தவன், பாகவதமும் இவனை, 'தீவின்வாய் எறித்த செஞ்சுடிகை அரவினுக்கு இறை எழுந்து தன்னியரொடு ஏகினான்' என்கிறது (செவ்வைச்சூடுவார். 2854); அரதனமுடி- மாணிக்கத்தைத் தாங்கியுள்ள தலை; நெரிதர-நொறுங்குமாறு; நெடிது – நீண்ட நேரம்; ஆடும் கூத்து அருள் – இயற்றும் திரு நடனத்தைச் செய்த; தாளானே-திருவடிகளை உடையவனே.

இரணிய கிரியையும்-பொன்மலையையும்; இரசித கிரி என- வெள்ளி மலை என நினைத்து; ஈசன்-சிவபெருமான்; போய்ப்புக- சென்று நுழையும் படியும்; மால் ஆனோன்-திருமால், ஆனோன்: பகுதிப் பொருள் விகுதி; நமது எறிகடல் எது எனும் நெறி என இயையும், நமக்குரிய அலைகளை வீசுகின்ற பாற்கடல் எது என்று தேடுமாறு என்பது பொருள்; அறு கடல் யாவும் பாற்கடல் ஆமாறே-பாற்கடலை யொழிந்த மற்ற ஆறு கடல்களான உவர் நீர், நன்னீர், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன் கடல்களும் பாற்கடலைப் போன்றே வெண்மையாகக் காட்சி தருமாறு;

இந் நூலாசிரியர், 'இரணிய தரணியை இரசத தரணிஇது எனஎழு புகழ்உலகு ஏழும் போர்ப்பவன்' என்றார் அடியிலும் (காப்புப். 7).

தரணியது உடலையும் – உலகத்தின் உடம்பினையும், கடல்களை ஆடை என்பதனால் நிலப்பகுதியை உடம்பு என்றார்; நெடுவெளி – நீண்ட ஆகாயம்; ஒளிதாவும் – பிரகாசிக்கின்ற; கீர்த்திய – பெரும்புகழை உடையவனே; புகழ் வெண்மை நிற முடையதென்பது மரபு. செழியனின் புகழ் அண்ட முழுவதும் பரவி வெள்ளொளி பாய்ச்சுவதால் பொன்மலை வெள்ளிமலை யாகக் காட்சி தருகிறது; ஏழுகடல்களும் பாற்கடலாக விளங்கு கின்றன; ஈசனும் திருமாலுமே தத்தம் இருப்பிடம் எது என் அறியாமல் மயங்குகின்றனராம்: இது மயக்க அணி.

முதலிரண்டு அடிகளில் செழியதரையன் கண்ணபெருமா னாகக் கூறப்படுகிறான். பால்வாயா! மாமாயா! வேய்ஆயா! தாளானே! கீர்த்திப! உலகையர் பதி! அதிபதி! தாகந்தீர்த்தவ தாலேலோ என்பது பொருள் முடிபு.

சப்பாணிப்பருவம்

இரட்டையாசிரிய விருத்தம்

முகடுஓட விடுதூளி இவுளியும் தேர்களும்
முழங்குஆனை யுஞ்சேனையும்
மோதுவா ரிதிஎனக் குருமண்ட லத்துவெளி
முட்டத்தொ குத்ததொகுதி
அகடுஓட விசையர்க்குஓர் இரதத்தை விட்டுஅந்த
அக்ரோணி பதினெட்டையும்
அடையப்ப டக்கண்டு பண்டுபா ரதம்முடித்து
அருளப்பி றந்துவளர்நாள்
பகடுஓட ஓடாத மல்லர்கெட்டு ஓடிடப்
படர்முலை கொடுத்தஅலகைப்
பாவிஆ வியும்ஓட மருதுஉருண்டு ஓடிடப்
பத்துஅண்டம் அதிரஅதிரும்
சகடுஓட ஓடிப்போ ரும்குதலை வாய்மதலை!
சப்பாணி கொட்டியருளே!
தமிழ்காத்த செழிய!தா கந்தீர்த்த செழியனே
சப்பாணி கொட்டியருளே! 32

32. முகடு ஓட—வான முகட்டின் வரை எழும்பிச்செல்லு மாறு; விடு தூளி—எழுப்புகின்ற புழுதிகளை உடைய; இவுளியும்—குதிரைப் படையும்; சேனையும்—காலாட்படைகளும்; மோது வாரிதி—கரையை அலைகளால் தாக்குகின்ற கடல், என:உவம உருபு; குருமண்டலம்—குருக்ஷேத்திரம், பாரதப் பெரும்போர் நடந்த வெளி; முட்ட—நிரம்பும்படி; தொகுத்த தொகுதி—அணி வகுத்து நிறுத்தப்பெற்ற இருதிறப் படைகளின்.

அகடு ஓட—நடுப்பாகத்தில் செல்லும்படி; அக்ரோணி—21870 தேர்கள், அதே அளவு யானைகள், 45,610 குதிரைகள், 1,09,350 காலாள்கள் கொண்ட ஒரு படைப்பிரிவு, கௌரவர் படை இவ்வாறு 11 அக்குரோணிகளையும் பாண்டவர் படை 7 அக்குரோணிகளையும் கொண்டது. பாரதப் பெரும்போரில் இருபுறச்சேனைகளும் முற்றிலும் அழிந்ததால், 'அக்ரோணி பதினெட்டையும் அடையப்படக்கண்டு' என்றார்; அடைய—முற்றிலுமாக; படக்கண்டு—இறக்குமாறு செய்து; பண்டு—முந்காலத்தில்.

பகடு ஓட—குவலயாபீடம் என்னும் ஆண் யானை தோற்று ஓடவும்; ஓடாத மல்லர்—யாருக்கும் தோல்வி அடையாதவராகித் துணிந்து எதிர்த்த முஷ்டிகாசுரன், சாணூரன் என்னும் இரு மல்யுத்த வீரர்களும்; கெட்டு ஓடிட—தோற்றோடவும்; படர் அலகை, முலை கொடுத்த அலகை எனத் தனித்தனி இயையும்; படர் அலகை—(கண்ணனைக் கொல்லவே கோகுலத்திற்கு) வந்த பேயாகிய பூதனை; மருது—இரு மருத மரங்களாய் நின்ற நள கூபர மணிக்கிரீவர்கள்; பத்து அண்டம்—பல உலகங்களும் என்ற பொருளில் ஆட்சி.

சகடு—சகடாசுரன்; குதலை—மழலை மொழி; குதலைவாய்—மழலை பேசுகின்ற வாய்; மதலை—குழந்தை: அண்மை விளி இயல்பாகியது; பூதனை, மருதமரங்களாக நின்ற குபேரன் மக்கள், சகடாசுரன் ஆகிய மூவரும் ஓடியபோது கண்ண பெருமான் குதலைவாய் மதலை; பகடு, மல்லர் ஓடியது இளம் வாலிபப் பருவம்;கண்ணனாகத் தோன்றி இத்துணைத் திருவிளை யாடல்களையும் செய்தது பாரதப் போரை நடத்தி முடிப்பதற் காக என்னும் கருத்தைப் 'பாரதம் முடித்தருளப் பிறந்து வளர் நாள்' எனக் குறித்தார்; அதுவே கிருஷ்ணாவதார லட்சியம் என்றவாறு.

பாரதம் முடித்தருளப் பிறந்து வளர்நாள் பகடு ஓட, மல்லர் கெட்டு ஓட, அலகைப்பாவி ஆவியும் ஓட, மருது உருண்டு ஓட,

சகடு ஓட ஓடிப் பொரும் மதலை! தமிழ் காத்த செழிய! தாகந் தீர்த்த செழியனே! சப்பாணி கொட்டியருள் என்பது பொருள் முடிபு.

இப்பாடலிலும் செழியதரையன் கண்ணனாகப் போற்றப் படுகிறான்.

பாரப்ப ளிக்குக் கிராவணக் கணமும்
பலாலமுத் தக்குவாலும்
பணிலசா லங்களும் அகிலும்ஏ லங்களும்
பலதமா லங்களும்எலாம்
தீரத்தி ரைதிரைத்து எறிதொறும் துறைதொறும்
சிகரிவண் டானம் அன்னம்
சிரவம் கரண்டம்கு ரண்டம்தி ரண்டுழுடு
திருமுத்த நதிகாவலா!
ஆரத்த டக்கடல்ஓர் ஏழையும் திசைமுகத்து
அசையாத களிறுஎட்டையும்
அண்டகோ ளத்தையும் சக்ரவா ளத்தையும்
அகப்பட அடக்குதவளத்
தாரத்த ளிக்கவிகை உலகர்பு ராதிபதி!
சப்பாணி கொட்டியருளே!
தமிழ்காத்த செழிய!தா கந்தீர்த்த செழியனே!
சப்பாணி கொட்டியருளே! 33

33. பார—பெரிய; பளிக்குக் கிராவணம்—பளிங்குக்கல்; கணம்—தொகுதி; பலால முத்தம்—நெல்லிற் பிறந்த முத்து; குவால்—குவியல்; பணில சாலம்—சங்குகளின் கூட்டம்; அகில்—அகில்கட்டை; ஏலம்—ஓர் வாசனைப் பொருள், ஏலங்கள் என்றது பல வகையான மணப்பொருள்களையும் குறித்து நின்றது; தமலாம்—பச்சிலை என்னும் ஒரு சிறந்த மணப்பொருள், இங்கும் பன்மை பல்வேறுபட்ட வாசனைத் திரவியங்களைச் சுட்ட வந்தது.

தீர—முழுவதுமாக, மிகுதியாக என்ற கருத்தில் ஆட்சி; திரை—அலை; திரைத்து—அலைத்து; துறைதொறும்—ஆற்றின் படித்துறைகள் அனைத்திலும்; சிகரி—கருநாரை; வண்டானம்—நாரை; சிரவம்—கவுதாரி; கரண்டம்—நீர்க்காகம்; குரண்டம்—கொக்கு; முத்தநதி—மணி முத்தாறு; காவலா—அரசனே; பளிங்கு,

முத்து போன்றவை அலைகளால் வீசி எறியப்படுவதால் பறவை இனங்கள் அஞ்சி ஓடுகின்றனவாம்.

ஆர—முத்துகள் நிறைந்த; தட—பெரிய; திசைமுகத்து—எட்டுத் திசைகளிலும்; அசையாத—நிலைத்து நின்று உலகத்தைத் தாங்கிக் கொண்டிருக்கும்; எட்டுக் களிற்றையும் என மாறுக; அண்ட கோளம்—பிரபஞ்சமாகிய உருண்டை; சக்கரவாளம்—இம் மலை நிலவுலகைக் கோட்டை போல் சூழ்ந்துள்ளது எனல் இலக்கிய மரபு; அகப்பட—தன் எல்லைக்குள் அடங்குமாறு; அடக்கு—அடக்கி ஆள்கின்ற; தவள—வெண்மையான; தவளத்தார்க் கவிகை, தனிக்கவிகை எனத் தனித்தனி கூட்டுக, வெண்கொற்றக் குடை, ஒப்பற்ற குடை என்றவாறு; கவிகையை உடைய உலகாபுராதிபதி என்பது பொருள்.

திருமுத்தநதி காவலர்! உலகாபுராதிபதி! தமிழ் காத்த செழிய! தாகந்தீர்த்த செழியனே! சப்பாணி கொட்டியருள் என்பது பொருள் முடிபு.

கொங்கத்து மன்னவன் குகிரத்து நாயகன்
கொல்லாபு ரிப்புரவலன்
குமரித்து றைக்குமன் கொல்லிச்சி லம்பன்அக்
குடகாவி ரிப்புலம்பன்
அங்கத்து ரந்தரன் அத்திநக ரத்தினன்
அயோத்திமி திலாபுரேசன்
அநுராபு ரிக்குஅரசன் வடகாசி காந்தன்
அவந்திகா நகர்காவலன்
வங்கப்ப டப்படப் படைஉடைந்து ஓடிடப்
பரித்திரன் கரித்திரளுடன்
பருமணிக் கணம்மதா ணிக்கணம் தமனியம்
பலகுவித் திட்டனஎலாம்
சங்கத்த மிழ்கொண்டு விலைதரும் தலைவள்ளல்!
சப்பாணி கொட்டியருளே!
தமிழ்காத்த செழிய!தா கந்தீர்த்த செழியனே!
சப்பாணி கொட்டியருளே! 34

34. குகிரம் – தேயமைம்பத்தாறில் ஒன்று; மன்—அரசன்; கொல்லிச் சிலம்பன் – கொல்லி மலையின் தலைவன்; குட – மேற்குத் திசையிலுள்ள; புலம்பன் என்ற சொல் நெய்தல்நிலத்

தலைவன் என்ற பொருளை உடையதேனும் இங்குப்பொதுவாகத் தலைவன் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது.

துரந்தரன் – வலிமை உடையவன், அங்க நாட்டை ஆளும் வல்லவன்; அத்தி நகரம் – அத்தினாபுரம்; அயோத்திபுரேசன், மிதிலா புரேசன் எனத் தனித்தனி இயையும்; புர+ஈசன்= புரேசன், நகரத்தின் தலைவன்; அநுரா புரி – ஈழத்தில் உள்ள அநுராத புரம்; காந்தன்–தலைவன்;

பங்கப் படப்பட – மேன்மேலும் கீழ்நிலையடையும்படி, தோற்கும்படி; பருமணிக் கணம் – பெரிய மாணிக்கங்களின் தொகுதி; மதாணி–பதக்கம்; தமனியம்–பொன்.

கொங்கத்து மன்னன் முதலியோர் தம்படை உடைந்து ஓடிடக் குவித்திட்ட பரித்திரள் முதலியன எல்லாம் தமிழ்ப்புலவர்களுக்குப் பரிசிலாக வழங்கப்படுகின்றன. இதனைக் கவிஞர், செழியன் தமிழைப் பெற்றுக் கொண்டு விலையாகப் பரிசில் தருகிறான் என்கிறார்; தலை வள்ளல்–முதல் வள்ளல், இரவலர் தம் வாய் திறந்து கேட்காமலே குறிப்பறிந்து நல்கும் கொடையாளி: அண்மைவிளி இயல்பாயிற்று; பின்வரும் தனிப்பாடல் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது:

''என்கவிகை என்சிவிகை என்கவசம் என்துவசம்
என்கரிஈது என்பரிஈது என்பரே–மன்கவனம்
மாவேந்தன் வாணன் வரிசைப் பரிசுபெற்ற
பாவேந்த ரைவேந்தர் பார்த்து''(பெருந்தொகை.1187).

சங்கத்தமிழ்கொண்டு குவித்திட்ட எல்லாம் விலைதரும் தலைவள்ளல்! தமிழ்காத்த செழிய! தாகந்தீர்த்த செழியனே! சப்பாணி கொட்டியருள் என்பது பொருள் முடிபு.

கரிக்கும் பம்இன்பப்பி டிக்கணம் கண்டுகண்டு
அலறக னன்றுசிங்கம்
கைக்கொண்டுஅ டித்தலும்வெ டித்துஉதிரும் நித்திலக்
கதிர்பதின் காதம்வீசப்
பரிக்கும்ப ரிப்பரிதி எழுபகல் போதும்
பரந்தசந்த் ரோதயம்எனப்
பளிக்குச்சு னைக்கமல கோடிமு டியபெரும்
பாரிக்கி ரிக்காவலா!

விரிக்கும்ச மீரத்தை நுகரும்உர காதிபதி
மேல்ஆயி ரத்தலைதொறும்
மிக்கமா ணிக்கம்தெ றிக்கும்ஓர் ப்ரபைக்குவெண்
ப்ரபைஆயி ரத்தொன்றுஎனத்
தரிக்கும்ச டாடவிப் புகும்தடினி குலக்குரிசில்!
சப்பாணி கொட்டியருளே!
தமிழ்காத்த செழிய!தா கந்தீர்த்த செழியனே!
சப்பாணி கொட்டியருளே! 35

35. கரிக்கும்பம்–ஆண் யானையின் மத்தகம்; இன்பப் பிடிக் கணம்–காதலிகளாகிய பெண்யானைக் கூட்டம்; கனன்று–சினந்து; நித்திலக்கதிர்–முத்தின்ஒளி; யானை மத்தகத்தில் முத்துச் சனிக்கும் என்பர்.

பரிக்கும்–சுமக்கின்ற, இங்கு இழுக்கின்ற என்னும் கருத்தில் ஆட்சி; பரி–ஏழு குதிரைகளை உடைய; பரிதி–சூரியன்; ஏழு பகல்போது–எழுகின்ற பகலாகிய நேரம்; பரந்த–எங்கும் பரவிய; சந்த்ர+உதயம்=சந்த்ரோதயம், திங்களின் தோற்றம், பளிக்கு–பளிக்கைப் போன்று தெளிந்த; சுனைக்கமலம்–மலையிலுள்ள ஊற்றின் நீர்; கமலம்–நீர்; கோடி–புத்தாடை; கமலகோடி–தண்ணீராகிய புதிய ஆடை; யானையின் மத்தகத்திலிருந்து உதிர்கின்ற முத்துகள் ஒளிவீசுவதாலும், சுனைநீர் பளிங்கால் ஆடை போர்த்தியவாறு தோற்றமளிப்பதாலும் பாரிமலை பகலிலும் நிலவுடைய இரவாக விளங்குகிறது என்றவாறு.

விரிக்கும்–விரிகின்ற இயல்பினை உடைய; சமீரத்தை–காற்றை; நுகரும்–உண்ணும்; உரகாதிபதி–உரகம்+அதிபதி, பாம்புகளுக்குத் தலைவனாகிய ஆதிசேடன், பாம்புகள் காற்றை உண்டு வாழும் என்பது கவிமரபு; ஆதிசேடனுக்குத் தலைகள் ஆயிரம்; ஒவ்வொன்றிலும் மாணிக்கம் உள்ளது; கங்கைக்கும் ஆயிரம் முகம்; அது முத்துகளை வீசுகிறது; மாணிக்கம் ஒரு செஞ்சுடர் பரப்பினால் கங்கையின் முத்து ஆயிரத்தொரு வெண் கதிரை வீசுகிறதாம்; ப்ரபை–ஒளிக்கதிர்.

தரிக்கும் சடாடவிப் புகும்தடினி–தன்னை அணிந்துள்ள (சிவபெருமானின்) சடைக்காட்டில் புகுகின்ற நதியாகிய கங்கை; ஓர் ப்ரபைக்கு வெண்ப்ரபை ஆயிரத்து ஒன்று என (வீசிக்கொண்டு தன்னைத்) தரிக்கும் சடாடவிப் புகும் தடினி என இயையும்; தடத்தை (கரையை) உடையது தடினி; தடினிகுலக் குரிசில்–கங்கை மரபின் தலைவன்: அண்மை விளி.

பாரிக்கிரிக் காவலா! தடினிகுலக் குரிசில்! தமிழ் காத்த செழிய! தாகந்தீர்த்த செழியனே! சப்பாணி கொட்டியருள் என்பது முடிபு.

உருவைத்தொ குத்துஎழுதும் ஓவமா டக்கோடி
உத்தரத் திருமதுரைவாய்
ஒருதாய்ப யப்பவங் தொருதாய்வ ளர்ப்பநின்று
ஒருகணத் தாய்முலைமடுத்து
எருவைக்கு மற்றவள்உ டல்கொடுவி ருந்திட்டு
இருங்கடல் கொடுத்தபுரம்ஆம்
என்கின்ற த்வாரகா புரம்புக்கு நாரதன்
இடைப்புக்க கலகத்தினால்
செருவைத்தொ டங்கும்ஒரு முப்பத்து முக்கோடி
தேவரும் தேவர்கோவும்
திருவாய்வ லம்புரிமு ழக்கலும் உழக்குண்டு
தெருமரக் கண்டுபண்டு
தருவைக்கொ ணர்ந்துஇழிந்து அரிவைக்கு நல்கும்முகில்!
சப்பாணி கொட்டியருளே!
தமிழ்காத்த செழிய!தா கந்தீர்த்த செழியனே!
சப்பாணி கொட்டியருளே! 36

36. உருவை—பல்வேறு வடிவங்களை; தொகுத்து—திரட்டி: பல்வேறுபட்ட பொருள்களின் உருவத்தைத் திரட்டி ஓர் இடத்தில் ஓவியமாக வரையப்படுதலின் இவ்வாறு கூறினார்;ஓவ—ஓவியங்கள் நிறைந்த; மாடம் — உப்பரிகை; கோடி — பல என்ற அளவில் நின்றது; கோடி ஓவ மாடங்களை உடைய வட மதுரை;ஒருதாய் பயப்ப — தேவகி பெற்றெடுக்க; ஒரு தாய் வளர்ப்ப—யசோதை வளர்க்க,'ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓர் இரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர' (திருப்பாவை. 25). திருமதுரைவாய் ஒரு தாய் பயப்ப, நின்று என இயையும்; ஒருகணத் தாய் — சிறிது நேரமே தாயைப் போல வந்தவளாகிய பூதனை, பால் கொடுத்தாளாதலின் 'தாய்' என்றார்,

எருவை—கழுகு; மற்று:அசை;அவள் உடல் என்றது பூதனையின் மேனியை; கடல் தனக்கு நடுவே பன்னிரண்டு யோசனைப் பரப்புள்ள இடத்தை வழங்க, அவ்விடத்தில் நிறுவப் பெற்றது துவரை நகராதலின் இருங்கடல் கொடுத்த புரம் என்றார்,

''கார்மேவிய பரவைத்திரைக் கடல்தன்அகட் டிடையே
ஈராறுஎனப் பகர்யோசனை இடம்நல்கஅவ் விடத்தின்
ஓராயிரம் பெயரோன்விசும் புஉறைதச்சனைக் கூவாச்
சீர்மேவிய துவரைப்பெயர்த் திருமாநகர் அமைத்தான்''
(செவ்வைச்சூடுவார் பாகவதம். 3361);

நாரதர் கொண்டுவந்து கொடுத்த ஒரு பாரிசாத மலரைக் கண்ணன் உருக்குமிணிக்குக் கொடுத்தான். இதனால் சத்யபாமை ஊடல் கொண்ட போது அவளுக்குப் பாரிசாத மரத்தையே கொணர்ந்து தருவதாக வாக்களித்தான் என்ற ஒரு செய்தி ஹரி வம்சத்தில் காணப்படுகிறது.இவ் வரலாறு பாகவதத்தில் இல்லை. இப் பிள்ளைத்தமிழ் ஆசிரியர் ஹரிவம்ச, பாகவத வரலாறுகளை இணைத்து நாரதன் கலகத்தால் பாரிசாதம் நிலவுலகத்திற்குக் கொண்டு வரபட்டதென்கிறார்.

செருவை–போரை; தேவா கோ–இந்திரன்; வலம்புரி–சங்கு, பாஞ்ச சன்னியம்; உழக்குண்டு – கலங்கி; தெருமர – அஞ்ச; கண்ணபெருமான் பாஞ்சசன்னியத்தை இசைத்த உடனே தேவர்கள் அஞ்சி ஓடி விட்டனர்,

''கள்உ லாம்துணர்க் காமர் கற்பகம்
கொள்ளல் நீஎனாக் குழுமு வானுளோர்
தள்ள ருந்திறல் சாய மாறிலா
வள்ளல் வால்வளை வாய்வைத் தானரோ''
(செவ்வைச்சூடுவார் பாகவதம். 3642).

தரு – பாரிசாத மரம்; இழிந்து – தேவருலகிலிருந்து நில உலகிற்கு இறங்கி வந்து; அரிவைக்கு – சத்தியபாமைக்கு, இங்கு அரிவை என்னும் சொல் பருவம் சுட்டாது பெண் என்னும் பொதுப்பொருளில் வந்தது; முகில் – முகிலனைய கண்ண பெருமான்; அண்மைவிளி.

துவளத்து ருக்கரைப் பந்தித்து அவந்தியர்ச்
சோழபாண் டியசேரரைச்
சோரத்தொ டுத்துமா ராட்டரை இரட்டரைத்
துளுநாட ரைப்பிடித்துக்
கவளக்க ரிக்கலிங் கேசரைப் பற்றிக்
கடாரத்த ரைத்தடுத்துக்
கருநாட ரைக்கவர்ந்து அங்கதே யத்தரைக்
கலியாண ரைக்கைவாரிப்

பவளக்க டல்சிங்க ளத்தரைக் கொடுவந்து
பண்டுஇடும் திறைஇடத்துப்
பதவிலங்கு இடுமிடத்து அவரவர் சிரத்துப்
பறித்துப் பறித்துஎறிதொறும்
தவளப்ப னித்தும்பை மன்றல்எழு முன்றிலாய்!
சப்பாணி கொட்டியருளே!
தமிழ்காத்த செழிய!தா கந்தீர்த்த செழியனே!
சப்பாணி கொட்டியருளே! 37

37. துருக்கரை — இசுலாமியரை, துருக்கி நாட்டைச் சேர்ந்தவரை எனினும் ஆம்; துருக்கரைத் துவளப் பந்தித்து என இயையும், துவள—வாட்டமுறும்படி; பந்தித்து — சிறைப்படுத்தி; அவந்தியர் — அவந்தி தேசத்தவர்; அவந்தியர் முதலிய மூன்று இடங்களில் இரண்டன் உருபையும் நான்கு இடங்களில் எண்ணும்மையையும் விரிக்க; சோர — சோர்வு அடைய; தொடுத்து—பிணைத்து; மாராட்டம்;இரட்டம்,துளு—தேசங்கள்.

கவளக்கரி — பெரிய அளவில் உணவுகொள்கின்ற யானை; கலிங்கேசர்—கலிங்கநாட்டு மன்னர்;கடாரம்—பர்மா;கலியாணர்—கலியாணபுரியை ஆண்ட சாளுக்கியர்; கை — படைகள்; வாரி—கவர்ந்து; கலியாணர்தம் எனற்பாலது கலியாணரை எனநின்றது: வேற்றுமை மயக்கம்.

பவளக் கடல் — பவளம் தோன்றுவதற்கு இடமாகிய ஆழி; சிங்களத்தர்—இலங்கையர்; பண்டு—முற்காலத்தில்; பண்டு திறை இடும் இடத்தும் என மாறுக; திறை இடுதல் — கப்பங் கட்டுதல்; பத விலங்கு — காலில் பூட்டும் தளை; இடத்து என்னும் ஈரிடங் களிலும் எண்ணும்மை தொக்கது; அவரவர் — (போரில் தோற்ற மன்னர்கள்) தத்தம்; சிரத்து — தலையினின்றும்: வேற்றுமை மயக்கம்.

தவள — வெண்மையான; பனி — குளிர்ச்சி மிக்க; தும்பை — தும்பைப்பூ; மன்றல்—நறுமணம்;எழு முன்றிலாய்—தோன்றுகின்ற முற்றத்தை உடையவனே; தும்பை சூடிப் போரிட்டுத் தோற்றுச் சிறைப்பட்ட மன்னர்கள் தாம் சூடியிருந்த தும்பை மாலையைப் பறித்து எறிய அவை செழியதரையனின் சிறை முன்றிலில் மணம் பரப்புகின்றன என்றவாறு.

(பலமன்னர்கள்)திறையிடும் இடத்தும், விலங்கிடும் இடத்தும் தும்பை மன்றல் எழு முன்றிலாய்! தமிழ் காத்த செழிய! தாகந்

தீர்த்த செழியனே! சப்பாணி கொட்டியருள் என்பது பொருள் முடிபு.

விடாகைச் சரங்கள்இ வன்விட்டால் எனப்பலரும்
விசையனுக்கு அஞ்சிஅஞ்சி
வேல்கொடும் வாள்கொடும் சிலைகொடும் கதைகொடும்
வெம்பிண்டி பாலம்கொடும்
படாகைக் கொடித்தானை கொண்டுகொண்டு ஒருசிந்து
பதிபடா வகைவகுத்துப்
பகல்காப் பளவுங் காப்போம்எ னப்பெரும்
பவுரவா திபர்புக்கநாள்
கடாகப் புறத்துஅண்டம் எண்திசா முகமுடன்
கங்குல்பொங் கிப்பொதியும்முன்
கங்குல்மூ டியதுஎனச் செங்கதிர்க் கடவுளைக்
களிறுஓலம் என்னமுன்னம்
தடாகத்து எறிந்தசக் கரங்கொடு தடுத்தமுகில்!
சப்பாணி கொட்டியருளே!
தமிழ்காத்த செழியதா கந்தீர்த்த செழியனே!
சப்பாணி கொட்டியருளே! 38

38. இவன் கைச்சரங்கள் விட்டால் (அவை மாற்றானை விடா) என விசையனுக்குப் பலரும் அஞ்சி என இயையும்; அஞ்சி யஞ்சி—அடுக்குத்தொடர் பேரச்சத்தைக் குறித்தது; சிலை—வில்; கதை—தண்டு; வெம்—கொடிய; பிண்டி பாலம்—ஓர் ஆயுதம்.

படாகைக் கொடி : ஒரு பொருட் பன்மொழி, விருதாகிய கொடி என்ற சிறப்புப் பொருளில் வந்தது; தானை—சேனை; சிந்துபதி—சிந்து நாட்டின் மன்னனான சயத்திரன்; படாவகை—இறவாமல்;வகுத்து—தக்க ஏற்பாடுகளைச் செய்து;பவுரவாதிபர்—பவுரவ+அதிபர், குருகுலத்தின் தலைவர்கள், கௌரவர்கள்; சிந்துபதி பகல் படாவகை காப்பளவும் காப்போம் என விசயனுக்கு அஞ்சி வகுத்துப் பவுரவாதிபர் தானை கொண்டு கொண்டு புக்க நாள் என இயையும்; பல அரசர்களும் தத்தம் படைகளைக் கொண்டு வந்தமையின் கொண்டு கொண்டு என்றார்; தன் மைந்தனாகிய அபிமன்னியுவை வஞ்சித்துக் கொன்றமைக்காக அருச்சுனன் அடுத்த பகலில் சயத்திரதனைக் கொல்வதாக வஞ்சினம் கூறியதும், கண்ணன் சூரியனைச் சுதரிசனத்தால் மறைத்ததும்; சயத்திரத வதமும் ஆகிய வரலாறு வெளிப்படை.

கடாகப் புறத்து அண்டம்—அண்டகோளகையைத் தனக்கு வெளியே உடைய பிரபஞ்சம்; எண் திசாமுகம்—எட்டுத்திக்குகள்; கங்குல்—இருள்; பொதியும் முன்—மூடிக் கொள்ளும் முன்பாகவே, இயல்பாக இரவு வருவதற்கு முன்பாகவே என்பது கருத்து; செங்கதிர்க் கடவுள்—சூரியன்; களிறு—கசேந்திரன்; ஓலம் என்ன—(ஆதிமூலமே!) அடைக்கலம் என்று கூப்பிட; முன்னம் — முற்காலத்தில்.

தடாகத்து — (கசேந்திரனை முதலை பற்றிய அந்த) மடுவினிடத்து; எறிந்த—செலுத்திய; சக்கரம் கொடு—ஆழிப் படையால்; தடுத்த—இங்கு மறைத்த என்பது கருத்து; செங்கதிர்க் கடவுளைச் சக்கரம் கொடு தடுத்தஎன இயையும்; முகில்—முகிலின் நிறமுடைய கண்ணனே: உவம ஆகுபெயர், அண்மை விளி இயல்பாயிற்று.

பவுரவாதிபர் புக்க நாள் கங்குல் பொதியும்முன் கங்குல் மூடிய எனச் செங்கதிர்க் கடவுளைச் சக்கரங்கொடு தடுத்த முகில்! தமிழ் காத்த செழிய! தாகத்தீர்த்த செழியனே! சப்பாணி கொட்டியருள் என்பது பொருள் முடிபு.

சந்த விருத்தம்

தனதன தனதன தானந் தாத்தன
தத்தன தத்தானா

எழில்மிகு திரன்புயம் மார்பம் சாத்துக
றைக்குவ ளைத்தாமா!
எழுதரும் உருவரி சாபம் கோத்தம
லர்க்கணை யிற்காமா!
வழுமிகு பகையினர் கானம் போய்ப்புக
விட்டுஎறி விட்டேறா!
மதுரிய சுருதிய கீதங் கேட்கும்ம—
ணிக்குழை யிற்காதா!
முழுமிகு நகுமதி ஞாலம் போர்த்தென
சித்திர முத்தாரா!
முதுகவி விதமொரு நாலும் சாற்றிய
முத்தமிழ் வித்தாரா!
கொழுமிகு தியன்உலகு ஏழும் காத்தவ!
கொட்டுக சப்பாணி!
குவலய குலபதி! தாகந் தீர்த்தவ!
கொட்டுக சப்பாணி!

39. எழில்மிகு, திரள் என்னும் ஈரடைகளையும் தனித்தனி புயம், மார்பம் என்னும் இரண்டுடனும் கூட்டுக; புயம் மார்பம் ஈரிடத்தும் ஏழுனுருபும் எண்ணும்மையும் தொக்கன; சாத்து—அணியும்; நறைக்குவளை—மணமிக்க காவிமலர்; தாமம்—மாலை; தாமா—மாலையணிந்தவனே; எழுதவரும் எனற்பாலதில் அகரம் தொக்கது; மன்மதன் உருவிலி ஆதலின் எழுதரும் உரு எனப் பட்டது; அருத்தாபத்தியாகச் செழியன் உள்ளத் தடத்தே உரு எழுதிப் பார்த்திருக்கத் தக்க எழில்வடிவுடையவன் என்பது பெறப்படுகிறது; வரி சாபம்—வரிந்து கட்டப்பட்ட வில், இனி வரி ஆகுபெயராக வரிகளை உடைய கரும்பை உணர்த்தியதெனக் கொண்டு கரும்புவில் எனினுமாம்; சாபம் கோத்த — வில்லில் தொடுத்த;இனி சாபம்,கோத்த அரி,மலர்க்கணை என இயைத்து வில்லையும், நாணாகத் தொடுக்கப்பட்ட வண்டுகளையும், பூவம்புகளையும் என உரைப்பினும் அமையும்; காமா — மன்மதனே, விரும்பப்படுபவனே (சிலேடை); மாரன், செழியன் ஆகிய இருவரும் காமர்களே; முன்னவன் கரும்புவில் முதலிய வற்றைப் பெற்றே காமனாக இருக்கிறான்; செழியனோ அவை யொன்றும் இல்லாமலேயே காமனாக விளங்குகிறான்என்றவாறு: உறுப்புக் குறை விசேட அணி.

வழுமிகு—குற்றம் மிக்க; கானம் — காடு; விட்டேறு — வேல்; விட்டேறா — வேலை உடையவனே; மதுரிய சுருதிய இரண்டை யும் தனித்தனியே கீதம் என்பதனுக்கு அடையாக்குக, இனிய பாடல், சுருதி சுத்தமான பாடல் என்பது கருத்து; இக் கவிஞர் மாதுரிய என்னும் வடசொல்லை மதுரிய என அடிக்கடி ஆளு கிறார், கீதம் கேட்கும் காதா, மணிக்குழையிற் காதா எனத் தனித்தனி இயையும்; குழை இல் காதா—காதணிக்கு இடமாகிய செவிகளை உடையவனே.

மிகுநகு முழுமதி என இயையும்;மதி—நிலவு;ஞாலம்—உலகம்; போர்த்தென என்பதை அடுத்து ஒளிவீசுகின்ற என்பதனைச் சொல்எச்சமாகக் கொள்க; சித்திர—அழகிய; முத்தாரா—முத்து மாலைகளை அணிந்தவனே; முதுகவி—பழமையான தமிழ்மொழி யில் இயற்றப்பெற்ற பா,மொழியின் முதுமை கவியின் மேலேற்றப் பட்டது: உபசார வழக்கு; நாலு — ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய நால்வகைக் கவிகள்; முத்தமிழ்—இயல், இசை, நாடகத்தமிழ்; வித்தாரா—புலமை மிக்கவனே.

கொழு—ஏர்; குவலயம்—உலகம்; குலபதி—தலைவன்; குவலய குலபதி—உலகத்தின் தலைவன்: அண்மை விளி.

குவளைத்தாமா! காமா! விட்டேறா! காதா! முத்தாரா! வித்தாரா! காத்தவ! குலபதி! தாகந்தீர்த்தவ! சப்பாணி கொட்டுக! என்பது பொருள் முடிபு.

விடுகொடு மழைபட ஆடுங் கூத்தின்ம
யிற்பல கட்பீலி
வெயில்உமிழ் வனஎன ஈனும் பாப்பும—
ணிக்குவை யத்தோடும்
எடுகொடு மரமற வோர்உண் டாக்கிய
புற்குடி லிற்கோடி
இழைதழல் எழுகழை யாவும் பூத்தபு
துத்தர ளப்பேதம்
அடுகொடு வரியொடு வேழம் காட்டெரு—
மைக்குலம் மைக்கோலம்
அகில்மரம் மரவமொ டாரம் தேக்கொடு
பச்சிலை நற்சீனி
கொடுகொடு நதிகுதி சேரன் கோட்டவ!
கொட்டுக சப்பாணி!
குவலய குலபதி! தாகந் தீர்த்தவ!
கொட்டுக சப்பாணி! 40

40. விடுமழை—பெய்கின்ற மழை; கொடுமழை—(பயிர்களைத்) தோற்றுவிக்கும் மழை; இவ்வாறு தனித்தனி இயையும்; கூத்து—நாட்டியம்; கூத்தின் மயிற்பீலி; பலகட்பீலி எனத் தனித் தனி இயையும்; பல தோகைக்கண்களை உடைய மயிலிறகு என்றவாறு; வெயில் உமிழ்வன என—ஒளியைக் கக்குவது போல; ஈனும்—வெளிப்படுத்தும்; பாப்பு மணி—நாக மாணிக்கம்: சந்த நோக்கிய வலித்தல் விகாரம்; குவை அத்தோடும்—குவியலாகிய அதனுடனும், எண்ணும்மை பீலியைத் தழுவியது, மயிற்பீலியை மணிக்குவை அத்தோடும் எடுக்கின்ற என்றவாறு.

கொடுமரம்—வில்; மறவோர்—வேடர்கள், குறிஞ்சி நில மக்கள்; உண்டாக்கிய—கட்டிய; புற்குடிலின்—புல்லால் வேயப் பெற்ற குடிசைகளின்; கோடி—பின்புறத்திலுள்ள; இழை—ஒன்றுடன் ஒன்று உரசுகின்ற; தழல் எழு—தீப்பற்றுகின்ற; கழை—மூங்கில்; குடிசைகளின் பின்புறம் உள்ள மூங்கில்கள் ஒன்றுடன் ஒன்று இழைந்து தீப்பற்றுகின்றன என்றபடி; பூத்த—தோற்று வித்த; தரளப் பேதம்—பல வகையான முத்துகள்; பூத்த தரளப் பேதம் யாவும் என இயையும்.

அடு—அடுத்துள்ள, தனக்கு அருகே உள்ள; கொடு அரியொடு—வளைந்த மூங்கில்களோடு; வேழம்—நாணல்; காட்டெருமைக் குலம்—சதுரக் கள்ளிக் கூட்டங்கள்; மை கோலம்—கருமையான மிளகு; மரவம்—குங்கும மரம்; ஆரம்—சந்தனம்; பச்சிலை—தமாலம் என்னும் மணப்பொருள்; நல் சீனி—நல்ல சர்க்கரை வள்ளிக் கிழங்கு; இவ்வடியில் கொடுவரி (புலி), வேழம் (யானை), காட்டெருமை மை (ஆடு), கோலம் (பன்றி), அரவம் (பாம்பு) எனச் சில உயிர்களின் பெயர்கள் தொனிக்கின்றன.

கொடுகொடு: அடுக்கு மிகுதியின் பொருட்டு; சேரன் கோடு—சேரன்மலை; கோட்டவ—மலையை உடையவனே.

தரளப்பேதம், கொடுஅரி, வேழம், காட்டெருமைக்குலம், கோலம், அகில்மரம், மரவம், ஆரம், தேக்கு, பச்சிலை, சீனி (முதலியவற்றைக்) கொடுகொடு நதி குதிக்கின்ற சேரங்கோடு என்பது கருத்து.

கரைகட கரிபரி தேர்கொண்டு ஓட்டிஒ-
லிக்கும்ஒ லிப்பாலும்
கடைதொறும் (முரசுஒலி மேகம்) தோற்கமு-
ழக்கும்மு ழக்காலும்
புரைகடம் எனும்முலை யார்பந் தாட்டின்அ-
திர்க்கும் அதிர்ப்பாலும்
புனலிடை பொழிலிடை ஆடுங் கூட்டம்இ-
ரட்டும்இ ரட்டாலும்
திரைகடல் அமுதென யாழும் கூத்தும்இ-
சைக்கும்இ சைப்பாலும்
செழியர்தம் வழிமுறை பேசும் பேச்சின்இ-
சைக்கும்இ சைப்பாலும்
குரைகடல் வெருவரு சேலம் காத்தவ!
கொட்டுக சப்பாணி!
குவலய குலபதி தாகந் தீர்த்தவ!
கொட்டுக சப்பாணி! 41

சப்பாணிப் பருவம் முற்றிற்று

41. கரை—ஒலிக்கின்ற, இதனைக் கரி முதலிய மூன்றோடும் கூட்டுக: வினைத் தொகைகள்; கட கரி—மதம் பொழிகின்ற யானை; பரி—குதிரை; கரி முதலிய மூன்றும் தாமே ஒலிக்கின்றன; மேலும் அவற்றைச் செலுத்துவோரும் மிகுந்த ஓசையை உண்டாக்குகின்றனர்; ஒலிப்பு—ஓசை; கடை—வீட்டின் தலை வாயில்; முரசுகளின் முழக்கம் இடிமுழக்கத்தை விட அதிகமாக உள்ளது.

புரைமுலை, கடம் எனும் முலை எனத் தனித்தனி இயையும். புரை முலை— பெருக்கின்ற நகில்கள்; கடம் எனும்—கும்பத்தைப் போன்ற; பெண்கள் பந்தாடுகின்றனர், நீரில் திளைத்தாடுகின்றனர், பொழிலில் மலர்கொய்தும் கண் கட்டியும் வேறு பல்விதமாகவும் விளையாடுகின்றனர்; இவர்கள் பேரொலி எழுப்புகின்றனர். இரட்டும் இரட்டு—ஒலிக்கின்ற ஒலி.

திரை—அலை; யாழ் என்றது உபலட்சணமாக நரம்புக் கருவிகளையும், கூத்திற்கு இன்றியமையா வாய்ப்பாட்டையும் உணர்த்தியது; கூத்து என்றது ஆடுவோர் சிலம்பையேயன்றி மற்ற தாள வாத்தியங்களையும் உணர்த்தியது; இசைக்கும்—பாடப்படும்; இசைப்பு—சங்கீதம். வழிமுறை—முன்னோர்கள்; பேசும் பேச்சு — முன்னோர்களைப் பற்றிய புகழ்மொழிகள்; இசைப்பு—புகழ்; குரை—ஒலிக்கின்ற; ஒலிப்பாலும், முழக்காலும், குரைகடலை அச்சுறுத்தும் அரசே! குலபதி! தாகந்தீர்த்தவ! சப்பாணி கொட்டுக என்பது முடிபு.

முத்தப்பருவம்

பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

காலும் சிவக்கும் தழல்விழிப்பாப்பு
அரசு கவித்த வடமேரு
காணும் பசும்பொற் கொடிமாடம்
கலைமா ணிக்கத் தொகைஉகைப்பக்
கோலும் சிவக்கும் திருவுலகா—
புரிக்கும் வயற்கும் நடுஅடங்காக்
கொழும்கோ கனகக் களைகளைந்தும்
செழுங்கள் ளல்அம்கா னகம்துமித்தும்

வாளும் சிவக்கும் படிசிவந்த
கதிர்ச்சா லியிற்கால் அறுத்தெடுத்தும்
மள்ளர் பரப்பப் பரந்தெறிக்கும்
மணிமுத்து உறைப்பக் கடைசியர்தம்
தாளும் சிவக்கும் தமிழ்நாடா!
தருவாய் திருவாய் முத்தமே!
தாகந் தீர்த்த செழியர்பிரான்!
தருவாய் திருவாய் முத்தமே! 42

42. நாளும் – எப்போதும்; சிவக்கும் – சிவந்தே இருக்கும்; தழல் விழி – தீயைப் போன்ற கண்களை உடைய; பாப்பரசு– நாகராசனாகிய ஆதிசேடன்; கவித்த – குடையாக மூடிய; தொகை–குவியல்; உகைப்ப – பதிக்கப்பட்டிருப்பதால்; உலகா புரியின் மாடங்கள் மேருமலையைப் போன்று உயர்ந்தும் பெரிய தாகவும் உள்ளன; அங்கே மாணிக்கங்கள் மிகுதியாகப் பதிக்கப் பட்டு உள்ளன; அவற்றின் செவ்வொளிபட்டுக் கிரகங்களும் சிவந்து காட்சியளிக்கின்றன என்றவாறு.

கோள்–சூரியன் முதலிய கிரகங்கள்; அடங்கா – (எவ்வளவு முறை களையெடுத்தாலும் நீர், மண் வளத்தால் மீட்டும் மீட்டும்) அடங்காது வளர்கின்ற; கொழும்–செழித்து வளர்ந்த; கோகனகக் களை–தாமரையாகிய களை; களைந்தும்–வெட்டியும்; செழும்– வளப்பமாக வளர்ந்துள்ள; கன்னல் அம் கானகம் – கரும்பு விளைந்துள்ள அழகிய வயல்; துமித்தும் – வெட்டியும்.

வாளும் சிவக்கும் – அரிவாள் கூடச் சிவந்து விடும்படி; அத்தனை செம்மை பெற்ற நெல்லாம்; கதிர்ச்சாலி – கதிர்களை உடைய நெல்; கால்–தாள்; மள்ளர் – விவசாயிகள்; கோகனகக் களை களைந்தும், கன்னலங் கானகம் துமித்தும், சாலியில் கால் அறுத்து எடுத்தும் பரப்ப என இயையும்; எறிக்கும்–(அத் தாமரை முதலிய மூன்றும்) தெறித்து வீழ்த்தும்; மணி முத்து–மணியாகிய முத்து; உறைப்ப–காலில் குத்த; கடைசியர் – பள்ளியர்.

தாள் – கால்; வயல் முழுவதிலும் முத்துகள் சிதறிக் கிடப்பதால் அங்கு நடமாடிப் பணிபுரியும் பள்ளியரின் மெல்லிய பாதங்களில் குத்திச் சிவக்கச் செய்கின்றன.

செழியனின் நாட்டில் முத்துகளுக்குப் பஞ்சமே இல்லை. அவை கடைசியர்களால் ஓரளவு வெறுக்கவும்படுகின்றன. இப்படி

எத்தனை முத்துகள் இருந்தாலும் அவையெல்லாம் செழிய யனின் திருவாய் முத்தத்திற்கு ஈடாகாது என்பது குறிப்பு.

திகையில் கருப்பு அம் பெருவனமும்
செழிக்கும் செழும்சா லிபின்வனமும்
தினமும் கறித்துக் கறித்துஅருந்தித்
திரியும் கவரிக் கடைவாயும்
தொகைஇல் பிரசத் துளிவனசம்
சோலைத் தலைகூடு அடுக்குகைக்குச்
சுமந்து சுமந்து பெடையொடும்போம்
துணைஓ திமத்தின் மணிவாயும்
நகைமுத்து எறிக்கும் கடல்மடுக்கும்
புயலில் சொரிஆ ரக்குலமும்
நனிவா னகத்துப் பனிமதியம்
ஞாலத்து உகுநித் திலமும்எனத்
தகைமுத்து ஒழுகும் தமிழ்நாடா!
தருவாய் திருவாய் முத்தமே!
தாகந் தீர்த்த செழியர்பிரான்!
தருவாய் திருவாய் முத்தமே! 43

43. திகையில்—(எல்லாத்) திசைகளிலும் உள்ள; பெரு கருப்பு அம் வனம் என மாறுக, பெரிய கரும்புகள் நிறைந்த அழகிய வயல்; சாலியின் வனம்—நெல் வயல்; கறித்துக் கறித்து—கடித்துக் கடித்து: அடுக்கு மிகுதியை உணர்த்தியது; கவரி—எருமை; கடைவாய்—வாயின்கடை.

தொகை இல் வனசம், பிரசத்துளி வனசம் எனத் தனித்தனி இயையும்; தொகை இல் — எண்ணற்ற; பிரசத் துளி — தேன் துளிகளை உடைய; சோலைத்தலை—சோலையினிடத்து; கூடு — (அன்னங்கள் தம்) கூட்டில்; பெடை—பெண் அன்னம்; துணை ஓதிமம் — கணவனாம் அன்னங்கள்; மணிவாய் — அழகிய வாய்.

நகை முத்து—ஒளிவீசுகின்ற நித்திலம்; கடல் மடுக்கும்—கடலைப் பருகும்; புயலில் சொரி—மேகத்திலிருந்து பொழியப்படுகின்ற; ஆரக் குலமும்—முத்துக்குவியல்களும்; பனி மதியம்—குளிர்ந்த சந்திரன்; ஞாலத்து—உலகத்தில்; உகு—கொட்டுகின்ற.

தகைமுத்து—தகுதிவாய்ந்த (சிறந்த) முத்துகள்; செழியர் பிரான்; அண்மைவிளி; தமிழ் நாடா! செழியர்பிரான்! திருவாய் முத்தம் தருவாய் என்பது பொருள் முடிபு.

கரும்பிலும், நெல்லிலும் தோன்றும் முத்துகள் எருமைகள் அவற்றைக் குதட்டத் தெறிக்கின்றன. தாமரையில் பிறக்கும் தரளங்கள் அம் மலர்களை அன்னங்கள் சுமந்து செல்லும் போது உதிர்கின்றன, மேகத்தில் சனிக்கும் நித்திலங்கள் மழையோடு சேர்த்துப் பொழியப்படுகின்றன, சந்திரனில் உண்டாகும் ஆரங்கள் தாமே உலகில் வீழ்கின்றன. இவ்வாறு செழியனின் ஆட்சிக்குட்பட்ட தமிழ்நாடு முழுவதிலும் முத்துகள் நிறைந் துள்ளன. இவ்வளவு இருந்தும் செழியனாகிய குழவியின் திருவாய் முத்தம் இவையனைத்தையும் விடச் சிறந்ததாகலின் மன்றாடிக் கேட்கப்படுகிறது.

கரும்பு முதலியவற்றில் முத்துகள் தோன்றுமெனல் கவி மரபு.

குமிழும் கயலும் கிடக்கும்முகக்
குறுவேர்வு அடக்கும் வகைஇதுஎனக்
குறும்பைத் தனத்தார் சயனத்தும்
குடங்கைக் கொடுபந்து ஆடுஇடத்தும்
இமிழும் சுருப்பு மருப்பொதும்பில்
இசைக்கும் மிசைஊ சலின்புறத்தும்
யாழும் குழலும் திரள்முழவும்
இரங்கத் திரண்டுஆடு அரங்கத்தும்
உமிழும் சுடர்அங் கணக்கணத்தும்
ஒழுகித் தென்றல் அம்குழுவி
உலாவித் தவழும் சுவடுதொறும்
உதித்த பொதியப் பசும்சாந்தும்
தமிழும் கமழும் தமிழ்நாடா!
தருவாய் திருவாய் முத்தமே!
தாகந் தீர்த்த செழியர்பிரான்!
தருவாய் திருவாய் முத்தமே! **44**

44. குமிழ் — குமிழ் போன்ற மூக்கு; கயல் — மீன் போன்ற விழிகள்; முகக் குறுவேர்வு — முகத்தில் அரும்புகின்ற மெல்லிய வியர்வை; குரும்பை—இளநீர், இது நகிலுக்கு உவமை; சயனத்தும்— படுக்கையிலும்; குடங்கை — எல்லா விரல்களையும் நெருக்கிச் சேர்த்து உள்ளங்கையைக் குழித்துக் கொள்ளும் நிலை, இது ஒரு நாட்டிய முத்திரை, பந்தடிக்கும்போது கை இருக்கும் நிலையுமிது.

சுருப்பு இமிழும் பொதும்பு, மருப்பொதும்பு என இயையும்; சுருப்பு இமிழும்—வண்டுகள் ஒலிக்கின்ற; மரு — மணம் நிறைந்த;

பொதும்பு–சோலை; இசைக்கும் — கட்டியுள்ள; மிசை—துய்க்கப் படுகின்ற, ஊசல் இன்பம் துய்ப்பதற்குரிய கருவியாதலின் இவ்வாறு கூறினார்; முழவு — ஒரு தாள வாத்தியம்; இரங்க— ஒலிக்க; திரண்டு—மகளிர் ஒன்றாகக் கூடி; அரங்கம்—நாடகசாலை.

சுடர் உமிழும் அங்கணக் கணம் என மாறுக, ஒளிவீசுகின்ற முற்றங்களின் வரிசை; தென்றல் அம் குழவி — இளந்தென்றல்; தென்றலங் குழவி குறுவேர்வு அடக்கும் வகை இது எனச் சயனம் முதலிய இடங்களில் ஒழுகி உலாவித் தவழும் என இயையும்; ஒழுகி உலாவித் தவழ்ந்து எனச் சொற்கிடக்கை இருப்பினும் தவழ்ந்து உலாவி ஒழுகித் தென்றல் குறுவெயர்வையை அடக்கும் எனலே சிறப்பு. மெதுவாகத் தவழ்ந்து வந்து, கொஞ்சம் நடை பயின்று உலாவி, எல்லா இடங்களிலும் பரவி (ஒழுகுதல்) இருத்தல் தென்றலுக்கு இயல்பு; சுவடு — அடித்தடம்; உதித்த — (தென்றலாகிய தான்)தோன்றிய; சந்தனமும்தென்றலும் தமிழும் பொதியையில் தோன்றியனவாகும். எனவே தென்றல் வீசும் போது சந்தன மணமும், தமிழ் மணமும் சேர்ந்து பரவுகின்றன என்றவாறு; சாந்து — சந்தனம்.

தமிழ்நாடா! தாகந்தீர்த்த செழியர்பிரான்! திருவாய் முத்தம் தருக என்பது பொருள் முடிபு.

பொங்கும் கடவுள் கதிர்மாவைப்
பொரும்தே மாஇல் பொதும்பருக்கும்
பொதும்பர் அடுத்த மதில்கிடங்குக்
கிடங்கின் கரையும் கரைமுளரிக்
கொங்கும் சுரும்பும் நிறைந்ததுறைக்
கயமும் கயத்தின் அளவளவும்
குவளைக் குளமும் குளம்பாயக்
குழைந்த பணையும் பணைஅகலாக்
கங்கும் பிறவும் சலஞ்சலம்ஒன்—
றினுக்குஆ யிரம்சூழ் வலம்புரியும்
கலந்து வளர்ந்த வலம்புரிஒன்—
றினுக்குஆ யிரம்சூழ் இடம்புரிவெண்
சங்கும் தவழும் தமிழ்நாடா!
தருவாய் திருவாய் முத்தமே!
தாகந் தீர்த்த செழியர் பிரான்!
தருவாய் திருவாய் முத்தமே!

45. பொங்கும் – மிகவும் சூடேறிக் கொதிக்கும் நிலையில் உள்ள; கடவுள் கதிர்–தெய்வமாகிய சூரியன், கதிர்க்கடவுள் என மாறினுமாம்; மா – குதிரை, சூரியனின் தேர்ப்புரவி; பொரும்–போர்புரியும், இயக்கத்தைத் தடுக்கும் என்பது கருத்து; தேமா இல் – இனிய மாங்கனிகளை உடைய மரங்களுக்கு இடமாகிய; பொதும்பர் – சோலை, இங்குச் சோலையிலுள்ள நீர்நிலையைச் சுட்டியது; மதிற்கிடங்கு, கிடங்குக் கிடங்கு எனத் தனித்தனி கூட்டுக;மதிலை ஒட்டிய அகழி,ஆழமான அகழி;முளரி–தாமரை.

கொங்கு–தேன்; சுரும்பு–வண்டு; துறை–நீராடுதுறை; கயம்–நீர்நிலை;அளவளவும்–தொடர்பு கொள்ளும்; குவளை–நீலமலர்; குழைந்த–இளகிச் சேறாக உள்ள; பணை–வயல்.

கங்கு – (வயலின்) வரப்பு; பிறவும் – இது போன்ற பிற நீர் தேங்கியுள்ள இடங்களிலும்.

ஆயிரம் இடம்புரிச் சங்குகள் ஒரு வலம்புரிச் சங்கையும், ஆயிரம் வலம்புரிகள் ஒரு சலஞ்சலம் என்னும் உயர்ந்த சாதிச் சங்கையும் சூழ்ந்திருக்கும் என்பர். இத்தகைய சலஞ்சலங்கள் ஆயிரத்தால் சூழப்பட்ட சங்கே பாஞ்சசன்னியம் எனப்படும்.

'இடம்புரி ஆயிரம் சூழ்ந்தது வலம்புரி',
'வலம்புரிஆயிரம் சூழ்ந்தது சலஞ்சலம்',
'சலஞ்சலம் ஆயிரம் சூழ்ந்தது பாஞ்சசன்னியம்'
(பிங்கல நிகண்டு 2639–2641).

சோலையிலுள்ளது, அகழி, கயம், குளம், வயல், வரப்பு ஆகிய எல்லா இடங்களிலும் வெண்சங்குகள் தவழும்படி நீர்வளம் மிக்கது செழியதரையனின் நாடு என்பது கருத்து.

" இடக்கை எடுத்த வலம்புரியும்
வலக்கை எடுத்த திகரியும்ஈத்து
இகலுஞ் சிலையும் வேலும்எடுத்து
எமதுஅங் தாலங் தீர்த்தவன்பால்
நடக்கை உலகில் நடத்தவந்தோன்
நனைத்தண் துளவன்'' எனத்தாங்கள்
நவிற்ற நவிலும் கிளிக்குஎகின
நடையார் அடையக் களிப்பினராய்

அடக்கை அரிய ரவிகாந்தத்து
அழலில் பகலைக்கு அடும்பாலை
அந்திக்கு அருத்தி மணிமாடத்து
இந்து காந்தத்து அருவியில்போய்த்
தடக்கை கழுவும் தமிழ்நாடா!
தருவாய் திருவாய் முத்தமே!
தாகந் தீர்த்த செழியர்பிரான்!
தருவாய் திருவாய் முத்தமே! 46

46. இடக்கை—இடது கரம்; வலம்புரி—திருமாலின் சங்கு; திகிரி—சுதரிசனம்; இகலும்—போர் புரியும்; சிலை—வில்; உடையவனின் தொழிலைக் கருவியின் மேல் ஏற்றி இகலுஞ்சிலை எனப் பட்டது: உபசார வழக்கு; அந்தாலந் தீர்த்தவன்—தாகந்தீர்த்த செழியனின் தந்தை; திருமாலே தாகந்தீர்த்த செழியனாகத் தோன்றினார் என்பது கருத்து.

நனை—தேன்நிறைந்த; தண்—குளிர்ந்த; துளவன்—திருத் துழாய் மாலை அணிந்தவன்; எகின நடையார்—அன்னம் போன்ற நடையை உடைய மகளிர்; மகளிர் தாம் வளர்க்கும் கிளிகளுக்கு, 'இடக்கை எடுத்த . . . . துளவன்'-என்றெல்லாம் சொல்லப் பயிற்சி அளித்துள்ளனர். அவை நன்றாகத் திருப்பிச் சொல்ல அவர்கள் உவக்கின்றனர். அடையக் களிப்பினராய்—முற்றிலும் மகிழ்ச்சி அடைந்தவர்களாக.

அடக்கை அரிய—கட்டுப்படுத்த முடியாத; ரவிகாந்தம்—சூரிய காந்தக்கல், இது தன்மேல் வெயில் படும்போது தீயைக் கக்கும் இயல்புள்ளது; அழல்—(சூரிய காந்தக் கல்லின்) நெருப்பு; பகலைக்கு—பகல் நேரத்தில்: பேச்சு வழக்கு; அடும்—காய்ச்சிய: அந்திக்கு—இரவில்; அருத்தி—ஊட்டி; அடக்கை அரிய தீ ஆதலின் பகலில் அட்டதை அந்தியில் தான் அருந்த முடிகிறது என்க; இந்து காந்தம்—சந்திரகாந்தக்கல், இது தன்மேல் நிலவு படும் போது குளிர்ந்த நீரைப் பொழியும் தன்மையது; அருவி—(சந்திரகாந்தக் கல் பொழியும்) நீர்த்தாரை.

தடக்கை—பெரிய கைகள்; எகின நடையார் தாங்கள் (வளர்க்கும் கிள்ளைகளுக்கு) 'இடக்கை எடுத்த . . . . துளவன்' என நவிற்ற, (தவறில்லாமல்) நவிற்றும் கிளிக்கு அடையக் களிப்பினராய், பகலைக்கு ரவிகாந்தத்து அடும்பாலை அந்திக்கு

அருத்தி, மணிமாடத்து இந்து காந்தத்து அருவியில் போய்த் தடக்கை கழுவும் தமிழ்நாடா எனப் பொருள் முடிபு காண்க.

இதனால் செழியனின் ஆட்சியின் கீழிருந்த மகளிர் யாவரும் அவனைத் திருமாலாகவே மதித்தனர் என்பதும், அம் மகளிரின் செல்வ வளமும் பெறப்பட்டன.

செந்தாள் இணையில் கரத்துணையில்
செங்கள் கனிவாய் முகத்துஅழகில்
சிறக்கும் பதும ராகவிதம்
தெரிசிப் பவருக்கு எதிர்கொடுத்தும்
அம்தா மரைக்கண் கடைதொறும்நீன்
அருமைத் திருமே னியிற்பெருமை
அணிநீ லமும்இக் காலத்(தே)
அளித்தும் வளர்க்கும் அளவேயோ
எந்தாது இரப்ப வரைப்புரப்பக்
கதிரா யிரம்உண்டு உமிழ்ந்ததுள்ள
நாகப் பகுவாய் ஆயிரத்தும்
நகைமா ணிக்கத் தொகைகவர்ந்து
தந்தாய் எனக்கேட் டனம்காணத்
தருவாய் திருவாய் முத்தமே!
தாகந் தீர்த்த செழியர்பிரான்!
தருவாய் திருவாய் முத்தமே! 47

47. செந்தாள் – சிவந்த பாதங்கள்; கரத்துணை–இரு கைகள்; கட்செங் கனிவாய் என மாறுக; கள் நிறைந்த விழிக் கனியைப் போன்ற உதடு; முகம்–தாமரை போன்று விளங்குகிறது; பதும ராகம்–இச் சொல் சிலேடையாக ஆளப்பட்டுள்ளது: 1. நவமணியில் ஒன்று, சிவப்பு நிறமுள்ளது. 2. பதும–ராகம் எனப் பிரிந்து தாமரையின் நிறம் எனப்பொருள் தருகிறது. காண்பவர்களுக்குச் சிவப்பு நிறத்தைக் காட்டி என்னும் இயல்பான பொருளும் பதுமராக மணியைப் பரிசிலாக வழங்கி என்ற உபசார பொருளும் கிடைக்கின்றன.

நீலம் அவ்வாறே நீலமணியையும், நீல நிறத்தையும் உணர்த்துகிறது; தெரிசிப்பவருக்கு என்பதை இரண்டாம் அடியினும் சேர்த்துக் கொள்க; இக் காலத்தே என்றது வறுமை மிஞ்சி, வள்ளன்மை குறைந்த இந்தக் காலத்திலும் என்றவாறு: இழிவு

சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. அளவேயோ — (இவ்வாறு பத்துகர்ச்கழும் நீலமும் தருவது) மட்டும் தானா.

இரப்பவரை நந்தாது புரப்ப — யாசகர்களைக் கெட்டு விடாமல் காப்பாற்ற; கதிர் ஆயிரம் உண்டு உமிழ்ந்தது என—பல ஒளிக் கதிர்களை உட்கொண்டு வெளிவிடுவதைப் போல; நாகப் பகுவாய்—பாம்பின் பிளந்த வாய்; ஒரு பாம்பு கொடுத்ததாகச் செவிவழிச் செய்தி இருக்க இப் புலவர் ஆதிசேடனின் ஆயிரம் தலைகளிலிருந்தும் மணிகளைக் கவர்ந்ததாகக் கூறுவது உயர்வு நவிற்சி. இச் செவிவழிச் செய்தி வருமாறு:—

'திருநின்றஊரில் காளத்தியப்ப முதலியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் நாள்தோறும் தம்மிடத்து வரும் வித்வான் களுக்கு அவர்கள் மனமகிழும்படி வேண்டிய பொருள்களைப் பரிசிலாகக் கொடுத்துவருவது வழக்கம். இவர் இப்படிக்கொடுத்து வருவதை அந்த நாட்டு அரசன் கேள்வியுற்றுப், பொறாமை கொண்டு, அவரிடத்திலிருந்த திரவியம் முழுதும் கவர்ந்து கொண்டனன். அதனால் அவர் வறுமையடைந்து அந்த ஊரை விட்டு வேறு தேசத்துக்குப் போக எண்ணிப் புறப்பட்டுப்போய் அன்று சாயங்காலம் வழியிலிருந்த ஓர் சத்திரத்தின் ஒரு புறத்தில் படுத்திருந்தார். அப்போது வேறொரு ஊரிலுள்ள ஒரு வித்வான் இவரது கொடைச்சிறப்பைக் கேள்வியுற்று இவரிடத்தில் போய்ப் பரிசில் பெற்று வரலாமென்று எண்ணிவந்தவர் அந்தச் சத்திரத் தில் இவரிருந்த இடத்திற்கு அருகே ஒருபுறத்தில் படுத்திருந்தார். அந்த இரவில், அந்த வித்வான் பசி அதிகரிக்க வருந்தித் தன் தரித்திரத்தை நோக்கிச் சொல்லியது.

நீளத் திரிந்துஉழன்றாய் நீங்கா நிழல்போல
நாளைக்கு இருப்பாயோ நல்குரவே — காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீஎங்கே நான்எங்கே
இன்றைக்கே சற்றே இரு.

இந்தப் பாடலை முதலியார் கேட்டு, இந்த வித்வான் நம்மை நோக்கிச் சென்று நம் ஊரில் நம்மைக் காணாது வருந்துவரே யென்று இரக்கமுற்று, அவ் வித்வான் பொருட்டாக அன்று இரவில் தானே தம் ஊரை வந்து சேர்ந்து தமது மனைவியின் திரு ஆபர ணங்களை விற்று, வித்வானை உபசரித்தற்கு வேண்டிய பொருள்க ளெல்லாம் சித்தப்படுத்தி வைத்திருந்தார். மறுநாள் வித்வான் வந்து தம்மைக் கண்டவுடன் அவருக்கு எதிர்கோடல் இன்சொற் கூறல் முதலிய உபசாரங்களைச் செய்து, விருந்துண்பித்த பிறகு, இப்படிப்பட்ட வித்வான்களுக்குக் கொடுக்கப் பொருளில்லாது

இருப்பதினும் இறப்பதே நலம் என்றுஎண்ணி, தமது வீட்டின் பின்புறத் தோட்டத்திலுள்ள ஒரு புற்றில் கையை வைத்தார்.

அந்தப் புற்றிலிருந்த பாம்பு அவர் கையில் தன் தலையிலிருந்த மாணிக்கத்தை உமிழ்ந்து போய்விட்டது. முதலியார் மன மகிழ்ந்து அதனை அந்த வித்வானுக்குப் பரிசிலாகக் கொடுத் தனுப்பினார். அவர் அதை வாங்கிக் கொண்டு விக்ரயஞ் செய் தற்காக அந் நாட்டு அரசனிடத்தில் சென்றனர். அரசன் இந்த ரத்தினம் உமக்குக் கிடைத்தது எப்படி என்று வினவ, அவர் நடந்த செய்தியைச் சொல்லக்கேட்ட அரசன் கோபம் கொண்டு காளத்தியப்ப முதலியாரை வரவழைத்து, நாம் உமது பொருள் களைக் கவர்ந்தபோது இதை எவ்விடத்தில் ஒளித்து வைத் திருந்தீர், இன்னும் இது போன்ற எவ்வப் பொருள்களை ஒளித்து வைத்திருக்கின்றீர் என்று வருத்த, முதலியார் நடந்த செய்தியை உண்மையாய்ச் சொன்னார். அதுகேட்ட அரசன் நீர் சொன்னது உண்மையாயின் நாம் பார்க்க அந்தப் பாம்பு வந்து தன்னிடத்துள்ள சீவரத்தினத்தை உமிழும்படி செய்வீராயின் ஒப்புக் கொள்வோம், அப்படிச் செய்யாதிருந்தால் உமது சிரசை வாங்கி விடுவோம் என்றான். அது கேட்ட முதலியார் அப்படியே செய்கிறேன் என்று அரசனை அழைத்துபோய் அந்தப் புற்றை வலம்வந்து நீ முன்னே எனக்கு இந்த ரத்தினத்தைக் கொடுத்தது உண்மையானால் உன்னிடத்திலுள்ள ஜீவரத்தினத்தையும் இவ் வரசன் காண எனக்குக் கொடுத்தருள வேண்டும் என்று வணங்கி நிற்க,அப் பாம்பு புற்றினின்றும் வெளிப்பட்டு வந்து முதலியாரைப் பிரதட்சணம் செய்து அவர்க்கு எதிரே தன் ஜீவரத்தினத்தை உமிழ்ந்து இறந்துபோயிற்று. அதுகண்ட அரசன் அச்சமுற்று அவரை நமஸ்கரித்து அவரிடத்திலிருந்து தான் முன் கவர்ந்த பொருள்களையும் தன்னிடத்திலிருந்த திரவியங்களையும் கொடுத்துச் சிறியேன் உமது மகிமையை அறியாது செய்த அபராதத்தை க்ஷமித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்து வணங்கிச் சென்றான். பிறகு முதலியார்வழக்கம் போலவேவருகிற வித்வான்களுக்கு வேண்டும் பொருள் கொடுத்து அவர்களை மன மகிழ்வித்துக் கொண்டிருந்து, இறுதிக் காலத்தில் சிவபதம் அடைந்தார் என்பது கர்ணபரம்பரையாய்க் கேட்ட செய்தி' (தனிப்பாடற்றிரட்டு – முதல்பாகம்–கா. இராமசாமி நாயுடு – பத்மநாப விலாசம் பிரஸ், சென்னை–1905–பக். 291–292).

கேட்டனம் காண–செய்தியை மட்டும் கேள்வியுற்றிருப்பவர் களாகிய நாங்கள் நேரில் பார்க்குமாறு.

சந்த விருத்தம்

தனனதன தனனதன தனதனா தந்தாத்த
தனனதன தனனதன தத்தனா

உமையவரை அனுபமரை உரகசூ டும்சூட்டும்
ஒலியல்மவு லியரைஉரை பத்தியா!
உதிமதிஇது எனநிலவு குலவும்ஆ ரம்கோத்த
ஒருகவிகை உலகுஉதவு நித்தியா!
அமையவரைவு அரும்உருவின் முருகவே ளும்தோற்க
அதிரும்மத கரியில்வரு சித்திரா!
அறிவுபொறை நிறைஉடைமை முறைமைசீ லம்கேட்கில்
அவரவர்தம் மனம்உருகு மித்திரா!
இமையவரை முனிவரரை நிருதரா சன்பூட்டி
இடுதளைகள் களையஎறி விற்குணா!
எறிகடலி னிடைகடையும் அமுதசா ரம்தேக்கும்
இனிமையினும் இனிமைபுரி சற்குணா
சிமையவரை பொதிமுகிலை இகலநீ லம்பூத்த
தெரியல்இடு புயதருக முத்தமே!
திரிபதகை உதவுகுல திலக!தா கந்தீர்த்த
செழிய!நர பதி!தருக முத்தமே! 48

48. உமையவரை—உமாதேவியை இடப்பாகத்தில் பெற்றவரை; அனுபமரை—நிகரற்றவரை; உரக சூடும்—பாம்புப் படத்தையும், உரகச் சூடு எனற்பாலது சந்த நோக்கி மெய் கெட்டது; சூட்டும்—அணிகின்ற; ஒலியல்—மாலையாக உடைய; மவுலியரை—சடையை உடைய சிவபெருமானை; உரை—துதிக்கின்ற; பத்தியா—இறையன்பனே, பக்தன்.

இது உதி மதி என மாறுக, இது உதிக்கின்ற திங்கள் போன்றது எனும்படி; நிலவு குலவும் — வெள்ளொளி வீசுகின்ற; ஆரம்—முத்து; ஒரு கவிகை—ஒப்பற்ற வெண்கொற்றக் குடையின் கீழிருந்து; நித்தியா—அழிவற்றவனே.

அமைய — முழுமையாக; வரைவு அரும் — எழுதிக் காட்ட இயலாத; உருவின் — பேரெழிலால்; 'ஓவியத்து எழுத ஒண்ணா உருவத்தாய்!' (கம்பர். கிட்கிந்தா. வாலிவதை. 84); தோற்க வரும், மதகரியில் வரும் என இயையும்; அதிரும் — பேரொலி எழுப்பும்; சித்திரா — அழகனே; பொறை — பொறுமை; நிறை — ஆடுஉக் குணம் நான்கனுள் ஒன்று, இது காப்பன காத்துக் கடிவன

கடியும் தன்மை; உடைமை – செல்வம், இனி உடைமை என்ப தனைப் பெற்றிருத்தல் எனக் கொண்டு மத்திம தீபமாக்கி அறிவு முதலிய ஐந்தினொடும் கூட்டிப் பொருள்கொள்ளினும் அமையும்; பொருளுடைமையும் நட்பை மிகுவிக்குமாதலின் இங்கு உடைமை தனியாகக் கொள்ளப்பட்டது.

இமையவரை – தேவர்களை; நிருதரரசன் – அரக்கர்களின் அரசனாகிய இராவணன்; தளைகள்–விலங்குகள்; எறிகுண விலா என மாறுக; எறி – (அம்புகளை) எய்கின்ற; குண – நாணை உடைய; வில் – கோதண்டம், இராமபிரானின் வில், இங்குச் செழியன் இராமனாகப் போற்றப்படுகிறான்; எறி கடல் – அலை களை வீசுகின்ற ஆழி; அமுத சாரம் – அமிர்தமாகிய சாறு: இரு பெயரொட்டுப் பண்புத் தொகை; தேக்கும் – (தன்பால்) நிறைத் திருக்கும்; சற்குணா–நற்பண்புகளை உடையவனே.

சிமைய–சிகரங்களை உடைய; வரை – மலைகளை; பொதி முகிலை–மூடுகின்ற மேகத்தை; இகல:உவம உருபு; நீலம் பூத்த தெரியல்–பூத்த நீலத் தெரியல்என மாறுக,கருங்குவளை மாலை; தெரியலிடு புய–மாலையையணிந்த தோள்களை உடையவனே! திரிபதகை–கங்கை; நரபதி–மனிதர்களுக்குத் தலைவன்,அரசன்: அண்மைவிளி.

பத்தியா! நித்தியா! சித்திரா! மித்திரா! விற்குணா! சற் குணா! தெரியலிடு புய! குலதிலக! தாகந்தீர்த்தசெழிய! நரபதி! முத்தம் தருக என்பது பொருள் முடிபு.

இப் பாடலின் எதுகையில் திரிபு என்னும் சொல்லணியும், முதல் மூன்றடிகளில் இயைபுத் தொடையும் பயின்றன.

அனகரது விரதவிதி மிருதிவே தம்கோத்த
அடைவுஅடைய நெறிமுறைந டக்கவே
அரிணமொடு கொடுவரிகள் பெரிதுகூ டும்கூட்டம்
அமரஒரு துறையுறைகு டிக்கவே
கனகரத சிகரதன வனிதைமார் வந்துஏத்து
கடவுள்எமது இறைவர்என வைக்கவே
கடுமறலி மயிடம்எதிர் கடவுகோ பம்தாக்கு
கவலைகுவ லயமதில்வி லக்கவே

மனகரணம் ஒழுகுவலி ஒழுகமா ரன்பூட்டி
வருபகழி தொடுவழித டுக்கவே
மழைமுகிலும் நவகிரக பதமும்மோ தும்காற்றும்
மறிகடலும் ஒருநிலைநி லைக்கவே
தினகரனும் இமகரனும் நிகரலோ கம்காத்த
திகிரிகர தல!தருக முத்தமே!
திரிபதகை யுதவுகுல திலக!தா கந்தீர்த்த
செழிய!நர பதி!தருக முத்தமே! 49

49. அனகர் – இயல்பாகவே குற்றங்களிலிருந்து நீங்கியவராகிய இறைவன்; அது: ஆறன் உருபு; விரத விதி–ஆணையோடு கூடிய நெறிகளாகிய; மிருதி – ஸ்மிருதி, தரும சாத்திரங்கள்; வேதமும் ஸ்மிருதியும் கூறப்பட்டதால் ஆகமங்களையும் உரையிற் கோடலாகக் கொள்க. இப்படித்தான் ஒழுக வேண்டும் என்னும் ஆணையுடன் இறைவனால் அருளப்பெற்றன இந் நூல்கள்; கோத்த–வகுத்த; அடைவு – நெறிமுறைகள்; அடைய–முற்றிலுமாக; நெறிமுறை நடக்கவே – பழக்கத்தில் வருவதற்காகவும்: ஏகாரம் எண்ணுப்பொருள், இவ்வாறு வரும் ஆறு ஏகாரங்களும் எண்ணுப் பொருளனவே; அரிணமொடு – மானுடன்: அத்துச் சாரியை கெட்டது; கொடுவரிகள் – புலிகள்; அமர – நெருங்கி; உறை–தண்ணீர்.

கனக ரத சிகரம்–பொற்றேரின் உச்சிக் கும்பம், இது நகிலுக்கு உவமை; இறைவர் – கணவரே என்று: ஏகாரம் விகாரத்தால் தொக்கது; வனிதைமார், 'எமது இறைவர் வந்து ஏத்து கடவுள்' என வைக்கவே என இயையும்; 'தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்' (குறள் 55) என்பதனை நினைந்து கூறியது; கடு மறலி–சினக்கின்ற இயமன்; மயிடம்–எருமை, இது இயமனின் ஊர்தி; கடவு – செலுத்துகின்ற; 'கடுமறலி எதிர் மயிடம் கடவு கோபம் தாக்கு கவலை' என்றது மரணபயத்தை, 'யான்ஏதும் பிறப்பு அஞ்சேன் இறப்பதனுக்கு என் கடவேன்' என்றார் மணிவாசகரும் (திருவாசகம். சதகம். 12); குவலயம் – உலகம்; உலகில் சர்வச்சம் ஒழியவும் என்பது கருத்து.

மன கரணம்–மனமாகிய பொறி: இருபெயரொட்டுப் பண்புத் தொகை; மன கரணம் ஒழுகுவழி ஒழுக–மனம் போன போக்கில் நடக்க, நன்மை தீமைகளைப் பற்றிக் கருதாமல் புலனுகர்ச்சிகளையே விழைந்து வாழுமாறு; மாரன் – மன்மதன்; பூட்டி – (தன் வில்லில்) நாண்பூட்டி; வரு பகழி – (ஒருவர் மேல்) வந்து

பாய்கின்ற அம்பை, தொடுவழி—தொடுக்கின்ற காரணத்தை, தீமைகளுக்கு அடிகோலுகின்ற ஆசையின் மூலகாரணத்தை என்பது கருத்து; முகில்—மேகம்; நவகிரக பதம்—சூரியன் முதலிய ஒன்பது கோள்களின் நிலை; மோதும் – வேகமாக வீசும்; ஒரு நிலை – தத்தமக்கு உரிய ஒழுங்கான நிலைகளில்.

தினகரன்—கதிர்; இமகரன்—திங்கள்; நிகர—போல; லோகம்—உலகம்; திகிரி – சுதரிசனப்படையை ஏந்திய; கரதல – திருக்கைகளை உடைய திருமாலே.

நடக்கவும், குடிக்கவும், வைக்கவும், விலக்கவும், தடுக்கவும், நிலைக்கவும் லோகம் காத்த திகிரி கரதல! தினகரனும் இமகரனும் நிகர்த்தவ! குலதிலக! தாகந்தீர்த்த செழிய! நரபதி! முத்தம் தருக என்பது பொருள் முடிபு.

முதலதடி கெடுபொழுதின் உழுதுகோ டும்கோட்டு
முனைஅவனி புனைஎறுழி அச்சுதா!
முதுபுடவி முடியவெளி முகடுபா தம்சூட்டி
முழுதும்அள விடும்இருடி மெய்ச்சுதா!
விதலைமது கயிடவரும் அடையவே கம்காட்டி
விசையமுடன் அடரும்அதி பத்திரா!
விழிஒழுகி வழிகருணை புணரிஎ ழும்தாழ்த்து
வெருளஅரு ளியமுளரி வத்திரா!
மதலைஉனது அலதுஇலைஇது அறிதியான் உன்காப்பு
வருகவரு கெனும் ஒருகை மத்தமா
மகதசலம் நிகரஅழுது அலறும்ஓ லம்கேட்டு
மடுவில்ஒரு திகிரிவிடும் உத்தமா!
திதலைஇள முலைமுகிள மகளிர்மோ கம்தேக்கு
திகழும்அழ கிய! தருக முத்தமே!
திரிபதகை உதவுகுல திலக!தா கந்தீர்த்த
செழிய!நர பதி!தருக முத்தமே! 50

50. முதல் – முதற்பொருளாகிய நிலம், இங்கு உலகம்; முதல் அது அடி—உலகத்தின் இடம்; கெடு பொழுதின் – (இரணியாட்சனால் இருக்க வேண்டிய இடத்தில் இல்லாமல் கடலுக்குள் சென்றதால்) கேடடைந்த போது; உழுது—நிலத்தைத் தோண்டி; கோடும் கோட்டு முனை – வளைந்த கொம்பின் உச்சி; அவனி – உலகம்; எறுழி – பன்றி; அச்சுதன் – என்றும் அழிவற்றவரான

திருமால்: கெடு பொழுதில் கோட்டு முனையில் அவனியைப் புனைந்த வராகமாகிய திருமாலே என்பது கருத்து. முது புடவி முடிய—பழமையான உலகம் முழுவதும் ஓர்அடிக்குள் அடங்கிவிட; வெளி முகடு—அண்ட கோளகையில்; பாதம் சூட்டி—திருவடிகளை வைத்து; அளவிடும்—(இரண்டாவது அடியாக) அளந்தவராகிய; இருடி மெய்ச்சுதா—காசியப முனிவரின் மகனாக வாமனாவதாரம் எடுத்தவரே; வாமனாவதார வரலாறு வெளிப்படை.

மது கயிடவரும் விதலை அடைய என இயையும்; மது கயிடவர் — திருமாலின் கொப்பூழிலிருந்த இரு நீர்த்துளிகளைத் திருமால் உற்று நோக்க அவை இரண்டு அரக்கர்களாயின. அவ்வரக்கர் கொப்பூழ்த் தாமரையின் நாளத்தின் வழியாக மேலேறி வேதங்களைக் கவர்ந்தனர்; இவர்கள் ஹயக்ரீவராகிய திருமால் அம்சத்தால் அழிக்கப்பட்டனர். இவ் வரலாறு பாரதத்துட் கண்டது. இதுவே இங்குப் பொருந்தும். ஆனால் மது கைடபர்கள் என மிகப் புகழ் பெற்று விளங்குபவர்கள் வேறு, அவர்கள் வரலாறு தேவிபாகவதத்துள் காணப்படுகிறது. அவர்கள் திருமாலை விட வலிமையில் சிறந்தவர்களாகவும், அவருக்கே வரமளித்தவர்களாகவும் கூறப்படுகின்றனர்; விதலை—நடுக்கம்; அடரும்—போரிடும்; பத்திரா—ஆயுதத்தை உடையவனே; அதி என்பது வேகம் என்பதுடன் இயையும்; புணரி ஏழும் — சப்த சமுத்திரங்களையும்; தாழ்த்து—அளவில் சிறியது எனச் செய்து. வெருள—அஞ்சும்படி; முளரி — தாமரை; வத்திரா — முகனே; தாமரை முகத்தில் வழியும் கருணை ஏழுகடல்களிலும் மிக்கது என்பது கருத்து.

யான் உன் மதலை, உனது காப்பு அலது இலை, அறிதி, வருக வருக என இயையும்; இது கசேந்திரன் கூற்று. ஒரு கை மத்த மா—ஒப்பற்ற துதிக்கையை உடையதும் மதம் நிறைந்தது மாகிய யானை, கசேந்திரன்; மகத்+அசலம்=மகதசலம், பெரிய மலை; திகிரி—சுதரிசனம்; உத்தமா—உயர்ந்தவனே; இவ் வரலாறு வெளிப்படை.

திதலை முலை, இள முலை எனத் தனித்தனி இயையும்; திதலை—அழகுத்தேமல்; முலை முகிள — நகல்களாகிய மொட்டுகளை உடைய: உருவகம்; மோகம் — விருப்பம்; தேக்கு—(வேறு விஷயங்களில் செல்லாமல் தன்னிடத்திலேயே) தடுத்து நிறுத்திக் கொள்கின்ற; தேக்கும் அழகிய, திகழும் அழகிய என இயையும்; அழகிய—அழகியவனே: விளி.

பகரஅரு நரலைபொரு குமரிசே ரும்சேர்ப்பர்
பசியதமிழ் மொழிவிரகர் தெற்குஉளார்
பரிவின்ஒரு வடிவின்ஒரு வடிவுகூ டும்கூட்டர்
பயில்கயிலை மலைஎனவ டக்குஉளார்
தகரம்அணி தரணிதரு தரணிஆ ழம்தாழ்ந்த
தடஅசலம் எனகுணிகு டக்குஉளார்
தபனதம னியஇரத வரவுகா ணும்காட்சி
தருகுவடுஇது எனஒருகு ணக்குஉளார்
மகரமுதல் வனையருளும் முதல்வர்போ கும்போக்கு
வரைஇதுஎன உரைதரஅ ளப்பிலா
வயிரநிரை தரளநிரை நிறைபட ரம்தோற்றி
வளமையழ குடைமையைவ ளர்ப்பதுஓர்
சிகரமர கதகிரியும் மகதநா டும்காத்த
திசைவிசைய! தரதருக முத்தமே!
திரிபதகை உதவுகுல திலக!தா கந்தீர்த்த
செழிய!நர பதி!தருக முத்தமே! 51

முத்தப்பருவம் முற்றிற்று

51. பகர—அரு—சொல்ல முடியாத அளவு பெரிய; நரலை—கடல்; பொரு — தாக்குகின்ற; குமரி — குமரியாறு; சேர்ப்பர்—நெய்தல் நிலத் தலைவர்; விரகர்—அறிஞர்; பரிவின்—அன்புடன்; ஒருவடிவின் — ஆணாகிய சிவபெருமானின் வடிவத்தோடு; ஒரு வடிவு — பெண்ணாகிய அம்மையின் திருவுருவம்; கூடும் கூட்டர்—சேரப்பெற்ற மாதொரு பாகனாகிய சிவபெருமான்; பயில் — எழுந்தருளியுள்ள.

தகரம் அணி — (கூந்தலில்) வாசனைச் சாந்தைப் பூசுகின்ற; தரணி—தட்சப் பிராஜாபதியின் மகள்; மேரு மலையின் மனைவி, இவளே மந்தர மலையின் தாய்; தரு — பெற்றெடுத்த; தரணி—மலை, மந்தரம்; ஆழம் தாழ்ந்த — (பாற்கடலைக் கடையும் காலத்தில் மத்தாக) ஆழமாக இறக்கப் பட்ட; தட — பெரிய; அசலம்—மலை;பாற்கடலைக் கடையும்போது மந்தரமே மத்தாக இருந்தது; குடக்கு — மேற்கு; தபன — சூரியனின்; தமனிய—பொன்னாலான;இரத வரவு—தேரின் வருகை;காட்சி தரு குவடு — காட்சியளிக்கின்ற மலை, உதயகிரி; ஒரு — ஒப்பற்ற; குணக்கு — கிழக்கு.

மகர முதல்வனை — மகர ராசிக்கு அதிபதியாகிய சனியை; அருளும் முதல்வன் — பெற்றெடுத்த தெய்வமாகிய சூரியன்; சனி சூரியனுக்கும் சாயா தேவிக்கும் பிறந்தவர், சூரியன் அறுசமயக் கடவுளரில் ஒருவராதலின் முதல்வர் என்றார்;போகும்—மறையும்; போக்கு வரை—அஸ்தமனகிரி; (செழியனின் பச்சை மலை)தெற்கு உளார் கயிலை மலை என, வடக்குளார் மந்தர மலை என, குடக்குளார் உதயகிரி என, குணக்குளார் அஸ்தமனகிரி எனக் கருதும்படி சிறப்பு வாய்ந்தது என்றவாறு;அளப்பிலா—அளவற்ற; நிரை—வரிசை, இங்கே குவியல்; தரளம்—முத்து; நிறை — மிகுதி யான; படீரம் — சந்தனம்; தோற்றி — உண்டாக்கி; வளமை அழகுடைமை—வளப்பத்தையும் எழிலையும்: உம்மைத்தொகை.

சிகர—கொடுமுடிகளை உடைய; மரகத கிரி — பச்சை மலை; திசை விசயதர — எட்டுத் திக்குகளிலும் வெற்றியைப் பெற்றவனே.

மகதநாட்டு மலைவளம் போற்றப் பெற்றது.

வாரானைப்பருவம்

பதினான்குசீர் ஆசிரிய விருத்தம்

பெருவரைத் திண்சிலைத் தலைவர்வே ணிப்பிரைப்
பிறையில்நின்று அசைபசும் கொன்றையில்
பெருநலச் சிறுநுதற் சுட்டியைத் தமியம்பி—
ணித்துஅசைப் பவும்மிசைக் குடுமிவாய்ப்
பருவரைக் குளவியைப் புயல்உடுக் குலமெனப்
பந்தகந் திப்படச் சூடவும்
பனிமதித் தரளம்சொ ரிந்தெனத் திருமுகப்
பங்கயக் குறுவேர்வு நீவவும்
உருவரைக் கொண்டதிரு மார்பகப் புலிநகத்து
ஒழுகுஇதழ்ப் புனலைத்து டைப்பவும்
உலகுளலாம் விற்கும்மா ணிக்கம்க ழீஇஎன
உடல்கழீஇ ஆர்அமுது அருத்தவும்
திருவரைக் கிண்கிணிஎ கிழ்ந்தஅரை ஞாணோடு
சிலம்புஆ திதிருத்த வும்வருகவே!
தென்பாலை சேலம்பு ரந்ததா கந்தீர்த்த
செழியர்வழி நாயகன் வருகவே! 52

52. பெரு வரை — பெரிய மேரு மலை; திண் சிலை — வலிய வில்; தலைவர்—சிவபெருமான்; வேணி—சடை; பிரை — பந்தல்; பிரைப்பிறை — பந்தலிலுள்ள பிறைச்சந்திரன்; வேணிப்பிரை : உருவகம்; கொன்றையில் என்புழி இல் உவம உருபு.

பெருநலச் சிறுநுதல் — பேரழகைப் பெற்ற சிறிய நெற்றி: முரண்தொடை; தமியம் — எளியேமாகிய நாங்கள் (எனச் செவிலியர் அழைப்பதாகக் கொள்க), இதுவே அசைப்பவும் முதலிய ஆறு வினைகளுக்கும்எழுவாய்; மிசை—உயரத்தில் உள்ள; குடுமிவாய்—கொண்டையில்.

பருஅரை — பருத்த தண்டினை உடைய, கனமான காம்பு; புயல் உடுக்குலம்—மேகமும் நட்சத்திரங்களும்:உம்மைத்தொகை: குளவி — காட்டுமல்லிகை; குடுமி மேகத்திற்கும் மல்லிகை மலர் விண்மீன்களுக்கும் உவமை; பந்தம் — அழகு; கந்தி — நறுமணம்; பந்த கந்தி:உம்மைத்தொகை; பனிமதி—குளிர்ச்சியான சந்திரன்; தரளம் — முத்து; குளிர்ச்சியான மதியின் நித்திலம் உதிர்வதைப் போல் முகத்தில் வியர்வை அரும்புகிறது; நீவ—துடைக்க.

உரு — அழகிய; வரை கொண்ட — கோடுகளைத் தன்பாற் பெற்ற, செய்யுளோசை நோக்கி வரைக் கொண்ட என மிக்கது; புலிநகம்—இரு புலிநகங்களைக் கட்டிப் பதக்கமாகத் தொங்கவிடப் பட்ட மாலை; இதழ்ப்புனல் — உதடுகளிலிருந்து ஒழுகும் எச்சில்.

உலகம் முழுவதையும் தனக்கு விலையாகப் பெறத்தக்க மாணிக்கம் என்க; சிவப்பான செழியதரையக் குழந்தையைக் குளிப்பாட்டுதலுக்கு மாணிக்கத்தைக் கழுவுதல் உவமை;அமுது—சாதம், பால்.

திரு அரை — அழகிய இடுப்பு; கிண்கிணி — அரைச்சதங்கை; ஞெகிழ்ந்த—விலகிய; சிலம்பு ஆதி—சிலம்பு முதலிய காலணிகலன் கள்; கிண்கிணி, அரைஞாண் இடுப்பில் இருப்பனவாதலின் ஒடுக் கொடுத்துப் பிரித்தார்;தென் பாலை—அழகிய பாலையூர்;செழியர் வழி நாயகன்—செழியர் மரபில் தோன்றிய தலைவன்: அண்மை விளி.

தமியம் அசைப்பவும், சூடவும்,நீவவும், துடைப்பவும், உடல் கழீஇ ஆர் அமுது அருத்தவும் திருத்தவும் வருக என்பது பொருள் முடிபு.

ஏகத்தொ டங்கியத டங்கிணைய ரைக்கண்டு
யவனத்தர் எமதுஉவா என்னவும்,
ஏறிமற்று எதிர்வரும் பொருநரைக் கண்டுஈழர்
எம்களிற் றுக்குழாம் என்னவும்,
பாகப்பெ ருங்கவிஞ ரைக்கண்டு வங்காளர்
பரதர்எம் கரடவெற்பு என்னவும்,
பாண்மக்க ளைக்கண்டு மக்கர்மக தத்தர்எம்
பருமருப் பிற்பொருப்பு என்னவும்,
ஆகக்கு னிப்புடைய வேழம்ப ரைக்கண்டு
அவந்திகையர் எம்கைமா என்னவும்,
அடிவிலங் கொடும்இப் படிநின்று முன்றில்வாய்
அரசுஎலாம் தேரும்மாப் பரிசிலாய்த்தி-
யாகக்க டாயானை சதகோடி தருகின்ற
திரிபதகைக் குலதிலகன் வருகவே!
தென்பாலை சேலம்பு ரந்ததா கந்தீர்த்த
செழியர்வழி நாயகன் வருகவே! 53

53. பா.வே. 3-8 அடுவிலங்கு

ஏகத்தொடங்கிய-(பரிசில் பெற்றுக்கொண்டு தம் ஊருக்குப்) புறப்பட்ட; தடம் கிணையர் – பெரிய கிணைப்பறையை முழக்கு கின்ற கலைஞர்கள்; யவனத்தர் – கிரேக்கர்; உவா – யானை; பொருநர்–களத்தில் பாடும் கூத்தர்; ஈழர்–சிங்களவர்.

பாகம் – திராட்சை, வாழை, தெங்கு எனப்படும் மூன்று விதமான செய்யுள் நடைகள், திராட்சாபாகம், கதலீபாகம், நாரிகேள பாகம் என்பர்; மூவகைப் பாகமும் கைவந்த பெருங் கவிஞர் என்க; வங்காளர் பரதர்–வங்க தேசத்தாரும் குருநாட்டு மன்னரும்: உம்மைத்தொகை; கரட வெற்பு–மத மலை, யானை; பாண் மக்கள் – பாணர்கள்; மக்கர் – மக்காவைச் சேர்ந்தவர்; மகதத்தர் – மகதநாட்டு மன்னர், மக்கர் மகதத்தர்: உம்மைத் தொகை;பரு–பெரிய; மருப்பிற் பொருப்பு–கொம்புகளை உடைய மலை, யானை.

ஆகக் குனிப்பு – உடலை வளைத்தல்; வேழம்பர் – கழைக் கூத்தாடிகள்; அவர்கள் உடலைப் பலவிதமாக வளைத்து வித்தை காட்டலின் ஆகக் குனிப்புடைய என்றார்; அவந்திகையர்– அவந்தி நாட்டரசன்; கை மா – துதிக்கையையுடைய விலங்கு,

யானை; அடி விலங்கு – காலில் பூட்டப்பட்ட தளை; (செழிய தரையனின்) முன்றில்வாய் அரசு எலாம் அடி விலங்கோடும் இப்படிநின்று என்னவும் என்னவும் தேடும் மா பரிசிலாய்த் தியாகக் கடாயானை சதகோடி தருகின்ற குல திலகன் என இயையும். இ படி நின்று – இந்தத் தரையின் மேல் நின்று கொண்டு; (அரண்மனை) முற்றம்; பல நாட்டு மன்னர்களும் தத்தமக்குரியன வாக இருந்த யானைகள் எவைஎவை எனத் தெரிந்து கொள் கிறார்கள் என்பதைத் தேரும் மாப் பரிசில் என்றார்.

கடா யானை சதகோடி தியாகம் தருகின்ற என இயையும். கடா யானை – மதங்கொண்ட களிறு; சதகோடி – நூறு கோடி. இங்கு மிகப்பல என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது; திரிபதகை குலம்–கங்கா குலம்.

யானையைச் சுட்டுகின்ற உவா, களிறு, கரடவெற்பு, மருப்பிற் பொருப்பு, முகமா என்னும் சொற்கள் இப் பாடலில் வந்தன.

''என்கவிகை என்சிவிகை என்துவசம் என்கவசம்
என்கரிசுது என்பரிசுது என்பாரால்–மன்கவன
மாவேந்தன் வாணன் வரிசைப் பரிசுபெற்ற
பாவேந் தரைவேந்தர் பார்த்து''

(பெருந்தொகை. 1187)

என்னும் பழம்பாடலை அடியொற்றியது இது.

பஞ்சுஏறு பதயுகச் செழுமலர்ச் சிகழிகைப்
பருவத்து ளங்குமரர் யானையின்
பவனியில் குடைஎடுத்து இழிநிலா வெள்ளமே
பால்எனப் பாலனக் கிளிஎலாம்
நெஞ்சுஏறு களிதிளைத்து இடுநெடும் பந்தரால்
நீள்வரைப் புயமும்அவர் மார்பமும்
நிச்சம்ப சுங்குங்கு மச்சேறு உணங்காது
நியமத்து உலாவருந் துணையதோ
மஞ்சுஏறும் அளகத்தின் அளிக்குலப் பந்தரால்
மைக்கணைக் கயல்எனச் சிரால்எலாம்
வந்துவந்து உழலும்அப் பந்தரால் சுந்தர
மடந்தையர் முலைத்தலைச் சந்தனச்
செஞ்சேறும் அகருவும் புலராது தண்எனத்
திரியும்உல காபுரிமன் வருகவே!
தென்பாலை சேலம்பு ரந்ததா கந்தீர்த்த
செழியர்வழி நாயகன் வருகவே! 54

54. பஞ்சு—செம்பஞ்சுக்குழம்பு;பதயுகம்—இரண்டு கால்கள்; செழுமலர் : கால்களாகிய செழித்த மலர்கள் என உருவகம்; சிகழிகை—இண்டை, தலையில் அணியும் மாலை; பஞ்சு ஏறு.... பருவம் என்றது மகளிரின் கால்களைத் தலைமேல் தாங்கி மகிழ் கின்ற வாலிபப் பருவத்தை; பவனி—உலா; பாலனக் கிளி — வீடு களில் வளர்க்கப்படும் கிளிகள்.

குடைகளில் முத்துகள் நிறைய உள்ளன. இவற்றின் ஒளி பால் வழிவதைப்போலத் தோற்றமளிக்கிறது.வீட்டில் வளர்க்கப் படுகின்ற கிளிகள் பாலென மயங்கிப் பந்தலிட்டாற்போல் உலாவைத் தொடர்ந்து பறக்கின்றன. இதனால் அவ் வாலிபர் களின் தோள்களிலும் மார்பிலும் பூசப் பெற்ற வாசனைச்சாந்து காய்வதேயில்லை; வரைப்புயம் – மலை போன்ற தோள்கள்: உவமைத் தொகை; நிச்சம்—நாடோறும்; பசும்—குளிர்ச்சியான; குங்குமச்சேறு – குங்குமப்பூக் குழம்பு; உணங்காது – உலராது; நியமம் – தெரு; உலாவரும் துணையதோ – பவனி வரும்போது மட்டிலும்தானா? இல்லை, எப்போதும் என்பது குறிப்புப் பொருள்; அதற்குக் காரணம் அடுத்துக் கூறப்படுகிறது.

மஞ்சு ஏறும்—மேகத்தைப் போன்ற; அளகம்—மகளிர் கூந்தல்; அளிக்குலப் பந்தர் – வண்டுக் கூட்டங்கள் நிறைய மொய்த்துப் பந்தலிட்டாற்போல் இருத்தல்;மை கணை—மையுண்டவிழிகளை; சிரல்—சிச்சிலிப்பறவை, மீன்கொத்தி: பெண்களின் கண்களைக் கயல்மீன்கள் என எண்ணிப் பல சிச்சிலிப் பறவைகள் பந்தலிடு கின்றனவாம்; சுந்தர – அழகிய; கிளி, சிரல் ஆகிய இரு பறவை களும் ஒன்றைப் பிறிதொன்றாக எண்ணி மயங்கியனவாகக் கூறியது மயக்க அணி.

செஞ் சந்தனச் சேறு என மாறுக; அகரு – அகிற்குழம்பு; புலராது – உலராமல்; தண் என – குளிர்ச்சியாக; மடந்தையர் தண்எனத்திரியும் என இயையும்; மன்—அரசனே: அண்மை விளி. உலாவரும் இளங்குமரர் புயமும் மார்பமும் பசுங் குங்குமச் சேறு உணங்காது; நியமத்து உலாவரும் துணையதோ? முலைத் தலைச் செஞ்சேறும் அகருவும் புலராது மகளிர் தண்ணெனத் திரியும் உலகாபுரி என்பது கருத்து.

கிங்காளர் செஞ்சடைக் காடுஅனைத் தும்திரைக்
கைபரந்து எறிதுறைக் கங்கையாய்க்
கனைகடல் பவளத்தி னிட்டுஇழைத் திட்டசெங்
கதிர்மாளி கைத்திரள் திரளினும்,

வெங்காள முகில்வண்ண னைச்சூழ்கி டக்கின்ற
வெண்ணிறத்து ஒழுகுபா லாழியாய்
மேதக்க நீலத்தின் மரகதத் தின்சோதி
விட்டகுட் டிமமா மருங்கினும்,
பொங்குஆத வன்படக் குடதிசைமி சைப்படும்
புத்தங்கி மீதுஎழுந் திங்களாய்ப்
பொன்நிறச் செந்நெற் பரம்பினும், தாமரைப்
பூமலர்ப் பொய்கைப்படு அம்பினும்,
செங்கால்அ னம்சிறைஅ சைத்துஅசைத் துக்கோடி
திரியும்உல காபுரிமன் வருகவே!
தென்பாலை சேலம்பு ரந்ததா கந்தீர்த்த
செழியர்வழி நாயகன் வருகவே! 55

55. பா.வே. 3:1,2 ஆதபம் படக்

கங்காளர் – சிவபெருமான்; காடு அனைத்தும் – காடு முழுவதிலும்; திரைக்கை – அலைகளாகிய கரங்கள்: உருவகம்; எறிதுறை – வீசுகின்ற இறங்குதுறை; கனைகடல் – ஒலிக்கின்ற சமுத்திரம்;செங்கதிர்–சிவப்பு ஒளி வீசுகின்ற; திரள் திரள்–மிகுதியாக நெருங்கியுள்ள கூட்டம், திரண்டதிரள்.

வெம்–விரும்பப்படுகின்ற; காள–கரிய;முகில்–மேகம்; முகில் வண்ணன்–நீலநிறம் பெற்ற திருமால்; சூழ்–சுற்றிலும்;பாலாழி–பாற்கடல்; மேதக்க–சிறந்த; நீலம் – நீலமணி; மரகதம்–பச்சை மணி; சோதி விட்ட – ஒளிவீசுகின்ற; குட்டிமம்–கற்கள் பாவப் பட்ட நடைபாதை.

ஆதவன் பட–சூரியன் மறைய; குடதிசை–மேற்கில்; மிசைப் படும் – ஆகாயத்தில் உண்டாகும்; புத்தங்கி – புதிய நெருப்பு, மாலைக் காலத்தின் செக்கருக்குத் தீ உவமை; பரம்பு – வரப்பு: இங்கு ஆகுபெயராக வயல்களை உணர்த்துகிறது;பொய்கைப்படு–நீர் நிலைகளிலுள்ள; அம்பினும்–தண்ணீரினும்.

அனம் –அன்னப்பறவை; சிறை–இறகு;கோடி–மிகப்பலவாக.

கங்கையாய் மாளிகைத் திரளினும்,பாலாழியாய்க் குட்டிமமா மருங்கினும், திங்களாய்ப் பரம்பினும் அம்பினும் செங்கால் அனம் கோடி திரியும் உலகாபுரி என இயையும்! பவளங்களிழைக்கப் பெற்ற மாளிகைக் கூட்டங்கள் சிவபெருமானின் சடாடவி போல்

விளங்க, அதைச் சுற்றிப் பறக்கும் அன்னக் கூட்டங்கள் கங்கை யாற்றின் அலைகளைப் போலக் காட்சி தருகின்றன; நீல மணிகளும் மரகதங்களும் இழைக்கப்பெற்ற நடைபாதை திருமால் போல் விளங்க, அங்கே பறக்கும் அன்னக் கூட்டங்கள் பாற்கடலாகத் தோன்றுகின்றன; செந்நெல் வயல்களும் செந்தாமரைப் பொய்கைகளும் அந்தி வானைப் போல் தோன்ற அங்கே அன்னங்கள் மதியத்தைப் போல் விளங்குகின்றன என உவமையைப் பொருத்திக் கொள்க.

பணையோடு பிரிதரா மருதத்து உழத்தியர்
பசும்செந்நெல் அவல்இடிப் பவைஎலாம்
பணிலம்நித் திலம்இட்டு நெய்தல்க ருங்கழிப்
பட்டினத் தெரிவைமார் கவரவும்,
இணையோடு கடல்நெய்தல் உப்பிற்கு மருதத்தர்
ஈரக்க ருப்புஆரம் நல்கவும்,
இடைமுல்லை யில்பால்எ யிற்றியர் குறிஞ்சிவே-
யின்முத்து இனம்கொடுத்து எய்தவும்
பிணையோடு புறவத்துள யிற்றியர்அ ளைக்கும்
பெரும்தரள மேதந்து பொதுவிமார்
பெருவரைச் சிறுகுடித் தாழ்வரை வரைப்பில்
பிறங்குசெந் தேன்நறா மாறவும்
திணையோடு திணைஅடுத்து இப்படிவ ளம்கெழுமு
தென்மகத நாடாளன் வருகவே!
தென்பாலை சேலம்பு ரந்ததா கந்தீர்த்த
செழியர்வழி நாயகன் வருகவே! 56

56. பணையோடு பிரிதரா – வயலைவிட்டு நீங்காத: வேற்றுமை மயக்கம்; பணிலம் நித்திலம்: ஒருபொருட்பன்மொழி, முத்து வகைகள் எனினுமாம்; நெய்தல் – கடல் சார்ந்த நிலப் பகுதி; கருங்கழி – பெரிய உப்பளங்களைத் தன்பாற் பெற்ற; பட்டினம்–நெய்தல் நிலத்து ஊர்; தெரிவை – பருவம் சுட்டாது மகளிர் என்ற அளவில் வந்தது; கவர்தல் – நிறைய வாங்குதலின் இவ்வாறு கூறினார்; பட்டினத் தெரிவைமார் நித்திலமிட்டு உழத்தியர் இடிப்பவை அவல் எலாம் கவரவும் என இயையும்.

இணையோடு–கூடவே; கருப்பு ஆரம்–கரும்பில் தோன்றிய முத்துகள்; எயிற்றியர்–குறிஞ்சி நிலப் பெண்கள்; இடை முல்லையில் – (குறிஞ்சிக்கும் மருதத்திற்கும்) இடைப்பட்ட முல்லை

நிலத்தில்; வேயின் முத்தினம்—மூங்கிலில் தோன்றிய முத்து வகைகள்; மருதத்தர் உப்பிற்கு ஆரம் நல்கவும், எயிற்றியர் முத்தினம் கொடுத்து முல்லையில் பால் எய்தவும் என இயையும்.

பிணையோடு—விருப்பத்துடன்;புறவத்து எயிற்றியர்—குறிஞ்சி நிலத்தைச் சேர்ந்த வேட்டுவப் பெண்கள்; அளைக்கும்—(முல்லை நிலத்திலுள்ள) வெண்ணெய்க்கும்: உம்மை இறந்தது தழுவியது, முற்கூறப்பட்ட பாலை;தரளமே—முத்துகளையே; பொதுவிமார்—இடைச்சியர்; செந்தேன் பொதுவிமார் நறா மாறவும் என இயையும்; தந்து எச்சம் மாறவும் என்னும் பிறிதோரெச்சத்தைக் கொண்டு முடிந்தது; பெருவரைச் சிறு குடி—பெரிய மலையிலுள்ள சிறிய குடியிருப்பு: முரண் தொடை; தாழ்வரை – அடிவாரம்; வரைப்பு—எல்லை; தாழ்வரை வரைப்பு – அடிவாரமாகிய இடம் என்க; செந்தேனை நறாவிற்கு மாறவும் என விரித்துக் கொள்க. எயிற்றியர் மலைத்தேனைக் கொடுத்து முல்லைநில மங்கையரிடம் கள் வாங்கிச் செல்கின்றனர்.

திணையோடு திணை இப்படி அடுத்து வளம் கெழுமு மகத நாடு, தென் மகதநாடு என இயையும்; அடுத்து—பண்டமாற்றத்திற்கு வசதியாக மிக நெருங்கியிருந்து; கெழுமு—நிறைந்த.

(வேறு)

தத்திக் குஞ்சரம் நிகர்அக் கவரிச்
சமுகம்இ ரித்துக் கமுகுஎலாம்
தாவித் தாவிக் கயல்பொர பாளைத்
தளைஅவி ழப்பொழி மதுவமும்
கொத்திக் கும்பல வில்கனி பலவும்
குதிஅரு விப்பெரு நதிகளும்
கோடிக் கோடிக் கோடரம் ஓடக்
குழைபிர சத்தேன் மழையுமாய்
எத்திக் கும்செறு வில்புர ளத்தாள்
எழுசெங் நெல்குல மடநலார்
இட்டன திட்டைஉ லக்கையும் அம்கையி-
டைக்கழு வுங்கழு நீரும்
தித்திக் கும்படி கொண்டுஅளி மொய்க்கும்
திருஉல கைக்கோன் வருகவே!
செழியர்கள் பெருமான் தாகந் தீர்த்தான்
திரிபதை மருமான் வருகவே! 57

57. பா.வே 2:8-11 கோடா,கோடிக் கோடரம் ஏகக்
3:7 மடநல்லார்

தத்தி – (கயல்கள்) தாவி; குஞ்சரம் நிகர் – யானைகளைப் போன்ற; கவரிச் சமூகம் – எருமைக் கூட்டம்; இரித்து – ஓட்டி; பாளை–மடல்; பாளைத்தளை–மடலின் கட்டு; மதுவம்–தேன்; கயல் தத்திக் கவரிச் சமூகம் இரித்துத் தாவித் தாவிப் பொரப் பாளைத்தளை அவிழக் கமுகு எலாம் பொழி மதுவம் என இயையும்; தத்தி என்னும் எச்சம் இரித்து என்னும் பிறிதொரு எச்சத்தையும், தாவி என்னும் எச்சம் பொற என்னும் பிறிதோர் எச்சத்தையும் கொண்டு முடிந்தன.

கொத்திக்கும் – வெட்டப்படும், பலாக்காய் கொத்துதல் என்பர், இங்குப் பழத்திற்கும் அதே சொல் ஆளப்பட்டுள்ளது; பலவில்–பலாமரங்களில்; குதி–வீழ்கின்ற; கோடிக்கோடி–மிகப் பல; கோடரம்–குரங்கு; குழை–குழைந்த, இளகிய; பிரசத்தேன்–பூந்தாதுகள் சொறிந்த தேன்; குரங்குகள் ஓடுவதால் பூந்தாதுகள் குழைந்து தேன் வடிகிறது; இது மிகுதியாக இருப்பதால் தேன் மழை எனக் கூறப்படுகிறது.

எத்திக்கும் எல்லாத் திசைகளிலும்; செறுவில் – வயலில்; புரள–மாறி மாறிப் பாய்வதால்; கமுகு எலாம் பொழி மதுவமும், பலவிற் கனி பலவும், குதி அருவிப் பெருநதிகளும், பிரசத்தேன் மழையுமாய் மாறி மாறிப் பாய்கின்றன; எழுதாள் செந்நெல் என இயைக்க, எழுந்த தண்டினை உடைய செந்நெல், இனிய தேன் முதலியவை பாய்ந்ததால் விளைந்த செந்நெல் என்பது கருத்து; குலமட நலார்–நற்குடியில் பிறந்த மடப்பத்தை உடைய மகளிர்; திட்டை–உரல்; திட்டை உலக்கை: உம்மைத்தொகை; திட்டை உலக்கை ஒரு சொல் நீர்மைத்தாக நின்று பிறிதோர் எண்ணும்மை பெற்றது; மடநலார் செந்நெல் இட்டன திட்டையுலக்கை என்க, பெண்களால் நெல் போடப் பெற்ற உரல்கள்; மக்கு–மண்; இடை – இடையில், நடுவில்; அம் கையிடை–தம் அழகிய கைகளால்: வேற்றுமை மயக்கம்; மடநலார் அங்கையிடை (அரிசியைக்) கழுவும் கழுநீரும் என இயையும்; உரல் உலக்கை கூறப்பட்டமையின் செந்நெல் குத்தப்பட்டு அரிசி எடுத்தமை உணரப்படுகிறது.

தித்திக்கும்படி கொண்டு–இனிக்கின்ற காரணத்தால்; அளி–வண்டுகள்; திரு உலகை–அழகிய உலகியல்நல்லூர்; பெருமான்–தலைவன்; மருமான்–மகன்; திரிபதகை மருமான்–கங்கா குலத்தில் பிறந்தவன்.

இன்சுவை நீர் பாய்ந்த வயலில் விளைந்த செந்நெல்லைக் குத்தப் பயன்படுத்திய உரல் உலக்கைகளிலும், அரிசியாக்கிய பிறகு கழுவிய கழுநீரிலும் வண்டுகள் மொய்த்தனவாம்: இது குண அதிசய அணி.

வெறியஇ தழ்க்கோ கனகன் புரக்கும்
மேலுல கத்தும் தொடரவும்,
வெந்தொழில் மயிடத்து அந்தகன் மூதுஊர்
மீதும்அ டிப்பின் போதவும்,
நெறிஅம ரக்கோ மகன்நக ரத்தும்
நினதுத னிக்கோல் முனியவும்,
''நெஞ்சம்ந டுங்கியது; அஞ்சினன் அஞ்சினன்;
நிற்புஉழி மற்றுஇலை; பொற்புஉளாய்!
நறியவ னத்தாய்! சுருதிதொ குத்தாய்!
நரலைம தித்தாய்! உரக ணையாய்!
ஞாலம்எ டுத்தாய்! நீலமொடு ஒத்தாய்!
நான்உன்அ டைக்கலம்,'' என்றுபோய்ச்
சிறியஇ ழைத்ததுஓர் காகம்அ ழைப்பச்
சேரஅ ழைத்தான் வருகவே!
செழியர்கள் பெருமான் தாகந் தீர்த்தான்
திரிபதை மருமாள் வருகவே! 58

58. வெறிய – நறுமணமிக்க; கோகனகன் – தாமரையில் இருக்கும் பிரமதேவன்; புரக்கும் – ஆளும்; மேல் உலகம் – பிரம லோகம்; வெந்தொழில் – கொடிய செயல் (உயிர்களைப் பறித்தல்); மயிடத்து – எருமையை வாகனமாக உடைய; அந்தகன் – இயமன்; வெந்தொழில் அந்தகன், மயிடத்து அந்தகன் எனத் தனித்தனி இயையும்; மூதுஊர்–பழமையான நகரம், இது சையமினி எனப்படும்; அடிப்பின் போதவும் – பின் தொடரவும்.

அமரக்கோமகன் நெறிநகரத்தும் என இயையும், தேவர்களின் தலைவனாகிய இந்திரனின் ஆட்சி நடைபெறும் பட்டினம், இது அமராவதி; நினது – இராமனாகிய நீ எய்த; தனிக் கோல்– ஒப்பற்ற அம்பு, ஒரு தருப்பைப்புல்லைக் கையால் எறிந்தமையால் வேறு இணை கூற முடியாத கணையும் ஆயிற்று; முனியவும்– (துரத்திச் சென்று) சினக்கவும்; அஞ்சினன் என அடுக்கியது

பேரச்சத்தால்; நிற்பு உழி—இருக்க வல்ல இடம்; பொற்புளாய் — அழகனே.

நறிய வனத்தாய்—மணமிக்க திருத்துழாயை அணிந்தவனே; சுருதி தொகுத்தாய்—(பலவிதமாக மண்டிக் கிடந்த) வேதங்களை நான்காக முறைப்படுத்திய வியாசனே, வியாசர் திருமாலின் அம்சமாவார்; நரலை — கடல், இங்குப் பாற்கடல்; மதித்தாய்—கடைந்தவனே, வரலாறு வெளிப்படை; உரகணையாய் — பாம்பணையை உடையவனே, உரகவணை எனற்பாலது தொகுத்தல் விகாரம் பெற்றது. ஞாலம் எடுத்தாய்—(வராக அவதாரத்தில் மருப்பில்) உலகத்தைத் தூக்கியவனே; நீலம்—காவி மலர்.

சிறிய இழைத்ததோர் காகம்—(சீதாபிராட்டியின் பக்கலிலே) ஒரு தவறான காரியத்தைச் செய்துவிட்ட சயந்தன்; அழைப்ப — கூக்குரலிட; சேர — (தான் விட்ட கணை மீட்டும் தன்பாலே) வந்தடையுமாறு; அழைத்தான் — திருப்பிக் கொண்டவனாகிய இராமபிரானே: அண்மைவிளி.

நினது தனிக்கோல் மேல்உலகத்தும் தொடரவும், மூதூர் அடிப்பின் போதவும், நகரத்தும் முனியவும், ' நெஞ்சம் நடுங்கியது . . . . அடைக்கலம்' என்று போய்ச் சிறிய இழைத்தது ஓர் காகம் அழைப்ப, (அக் கோலை) சேர அழைத்தான் வருகவே என இயையும்.

இராமபிரான் வனவாசத்தில் சித்திரகூடத்தில் சீதாபிராட்டியோடு இருந்தார். அப்போது இந்திரனின் மகனாகிய சயந்தன் தேவியின் திருமேனியைத் தீண்ட விழைந்து ஒரு காகத்தின் உருக் கொண்டு வந்து கருதியதைச் செய்தான். பெருமான் ஒரு புல்லைக் கணையாக்கி எறிய, அவன் ஆற்றாது அனைத்துலகும் திரிந்தோடிப் புகலிடம் கிடைக்காமல் திரும்பி அடைக்கலமடைந்தான். எம்பெருமான் அக் காகத்தின் ஒரு விழியை மட்டும் போக்கிக் கொல்லாமல் விட்டு விட்டார்.

இப் பாடலில் செழியதரையன் இராமனாகப் போற்றப்படுகிறான்.

பூவரு திகிரியும் நீர்வரு சங்கும்
பொறிவரும் அமளியும் இளையராய்ப்
புடையுடன் வரவும் கடல்கடை யமுதப்
பூவைஇ லங்கையர் பாவமாய்த்

தாவரு மிதிலைச் சாலையில் வரவும்
தழல்பக லாம்என நீலனும்
தலைவனும் வரவும்உ லவையும் அனுமன்
தான்என வரவும் தேன்உலாம்
தூவரு நளினன் பங்குஎன எண்குத்
தொல்லையன் வரவும் வல்லையே
சுரபதி கவிமா மகன்மகன் வரவும்
தொழும்எழு பதுகவி வெள்ளமாய்த்
தேவரும் வரவும் சரயுஅ யோத்தித்
திருநகர் வருகோன் வருகவே!
செழியர்கள் பெருமான் தாகந் தீர்த்தான்
திரிபதை மருமான் வருகவே! **59**

59. பா.வே. 3:12,13 தொழுது எழுபது

பூ வரு திகிரி – நிலத்திலிருந்து வந்த சக்கரம், சுதரிசனம்; சிவபெருமான் சலந்தராசுரனை வதைக்கும் பொருட்டு ஓர் ஆழி வேண்டிப் பூமியில் காலால் வட்டமாகக் கிழிக்க அசுரன் அவ் வட்டத்தைப் பெயர்க்க உடல் பிளவுண்டு மாய்ந்தான்; அந்த ஆழி சிவபெருமானால் திருமாலுக்குத் தரப்பட்டது. இவ் வரலாற்றின் விரிவைக் காஞ்சிப் புராணத்தில் காணலாம்; நிலத்தில் வட்டமிட்டு எடுக்கப்பட்டதால் பூ வரு திகிரி என்றார்; நீர் வரு சங்கம் – கடலில் தோன்றிய பாஞ்சசன்னியம்; பொறி வரும் அமளி – புள்ளிகளோடு கூடிய பாம்பாகிய ஆதிசேடன்; இளையராய்–தம்பியராக; இது,

''வளையொடு திகிரியும் வடவை தீதர
விளைதரு கடுவுடை விரிகொள் பாயலும்
இளையர்கள் எனஅடி பரவ ஏகிநாம்
வளைமதில் அயோத்தியில் வருதும் என்றனன்''

என்னும் கம்பர் வாக்கை (பால. திருஅவதாரப். 20) அப்படியே அடியொற்றியது; சங்கு – சத்ருக்னன், சக்கரம்–பரதன், ஆதி சேடன்–இலக்குவன்; புடை உடன் வரவும்–தனக்குப் பக்கத்திலே தன்னுடனேயே பிறக்கவும்; கடை கடல் அமுதப் பூவை என மாறுக, கடையப்பட்ட பாற்கடலில் தோன்றிய அமுதம் போன்ற திருமகள்; சீதை 'போர் அரக்கர் என்னும் கான்சுட முளைத்த கற்பின் கனலி' ஆதலின் இலங்கையர் பாவமாய் வரவும் என்றார்.

தாவு அரு—(உரியவர்கள் அல்லாதவர்களால்) எட்டிப்பிடிக்க முடியாத; மிதிலை — சீதை வளர்ந்ததும் சனகனின் தலைநகரும் ஆகிய பட்டினம்; சாலை—யாகசாலை, வேள்விச்சாலை அமைக்க உழும்போது கொழு முனையில் கிடைத்தவளாதலின் சாலையில் வரவும் என்றார்; தழல்—அக்கினிதேவன்; பகல்—சூரியன்; நீலன்—அக்கினியின் அம்சமான ஒரு வானர வீரன்; தலைவன்—சூரியனின் அம்சமானவனும் வாலிக்குப் பின் கிஷ்கிந்தைக்கு மன்னனான வனுமான சுக்ரீவன்; தழல்பகல் — நீலன் தலைவன்: நிரனிறை; உலவை—வாயுதேவன், இவனுக்கு அஞ்சனையிடம் தோன்றிய வனே அநுமன்; தேன் உலாம்—தேன்மிகுந்த, வண்டுகள் மூசுகின்ற எனினுமாம்.

தூ—வெண்மையான; அரு — மிக்க அரியதான; நளினன் — தாமரையில் உள்ளவன், தூ நளினன், அருநளினன் என இயையும், பிரமன்; பங்கு—அம்சம்; எண்குத் தொல் ஐயன்—கரடிகளின் பழமையான தலைவன், ஜாம்பவான்; வல்லையே—விரைவாக; சுரபதி — தேவராஜாவாகிய இந்திரன்; கவி மா மகன் — குரங்கு இனத்திலேயே மிகப்பெரிய தலைவனாகிய வாலி; மகன்—அவன் மகனாகிய அங்கதன்; வெள்ளம்—ஒரு பேரெண், படைகளின் ஓர் அளவைக் குறிக்கும்; எழுபது கவிவெள்ளம் — வானரப் படை வீரர்களான எழுபது வெள்ளம் பேர், 'வெள்ளம் ஏழு பத்து உள்ள மேருவைத் தள்ளல் ஆனதோள் அரியின் தானையான்' என்பார் கவிச்சக்கரவர்த்தி (கம்பர் கிட்கிந்தா. நட்புக் கொள்.46).

தேவரும்—மற்ற அமரர்களும்; சரயு அயோத்தி—சரயு நதியின் கரையிலுள்ள அயோத்தி; இங்குக் கம்பனின் காவியம் அப்படியே பின்பற்றப்பட்டது.

'' ......பிதாமகன் பேசு கின்றான் முன்னரே எண்கின்
வேந்தன் யான் . . . ''

''தருவுடைக் கடவுள் வேந்தன் சாற்றுவான் எனது கூறு
மருவலர்க்கு அசனி அன்ன வாலியும் மகனும் என்ன
இரவிமற்று எனது கூறுஅங்கு அவர்க்குஇளை யவன்என்று ஓத
அரியும்மற்று எனதுகூறு நீலன்என்று அறைந்திட் டானால்'';

''வாயுமற்று எனது கூறு மாருதி எனலும் மற்றோர்

காயுமற் கடங்கள் ஆகிக் காசினி அதனின் மீது
போயிடத் துணிந்தோம் என்றார்......''
(கம்பர். பால. திருஅவதாரப். 23-25)

செழியதரையனை இராமபிரானாகப் போற்றியவாறு.

சந்தவிருத்தம்

தானந் தாத்த தனதன தனதன
தனதன தனதன தனதனா

ஆலம் பூத்த சததள முளரிகள்
அழிதர வழிதரும் மதுவொடே
ஆடும் பாட்டின் அளிகுல ஒலிகெழு
அணிபொழில் விழுபழம் ஒழுகுதேன்
ஓலம் பூத்த அருவியின் வரவுஎன
உவரியின் இழிதலும் உவரிபோய்
ஊறும் சாற்றின் மதுரிய சுவைபுகும்
உலகையர் புரவலன் வருகவே!
ஏலம் பூத்த இலவுஇதழ் கரதலம்
இனிதுஒரு கவுசலை விரிதரா,
''யாவும் காப்பது ஒருமர கதகிரி
எனதுகண் எனதுஅமுது எனதுசேய்
தாலம் பூத்த முகில்வரு கெ''ணகனி
தவழ்வுடன் வருபவன் வருகவே!
தாகந் தீர்த்த செழியர்த மதிபதி
சலநதி குலபதி வருகவே! 60

60. ஆலம் பூத்த—நீர் நிலைகளில் மலர்ந்த. நீரைக் குறிக்கும் ஆலம் என்ற சொல் ஆகுபெயராகப் பொய்கையை உணர்த்தியது. இனித் தாமரையை நீருள் பிறந்தது எனப் பொருள்படும் சலசம் என்பர், அவ்வாறுரைப்பினும் அமையும்; சததள — நூறு இதழ்களை உடைய; முளரிகள்—தாமரை மலர்கள்; அழிதர—மிக அதிகமாகிவிட; வழிதரும்—வழிகின்ற; மது—தேன்; ஆடும்—புகழ்ந்து சொல்லப்படுகின்ற; அளிகுலம் — வண்டுக் கூட்டம்; அளிக்குலம் எனற்பாலது சந்த நோக்கித் தொகுத்தல் விகாரம் பெற்றது; ஒலி கெழு — ஓசை மிகுந்த; அணி பொழில் — அழகிய சோலை; விழு பழம் — (மரத்தில் இயற்கையாகப் பழுத்துத் தாமே) உதிர்கின்ற கனிகள்,

ஓலம் பூத்த – ஒலிக்கின்ற; வரவு என என்புழி என உவம உருபு; உவரி–கடல்; மதுவொடு ஒழுகுதேன் அருவியின் வரவென உவரியில் இழிதலும் என இயையும்; உவரி போய் – கடல்நீரின் உவர்ப்புத் தன்மை நீங்கி; ஊறும் சாற்றின் – பெருகுகின்ற கருப்பஞ் சாற்றினுடைய; மதுரிய – இனிய; உலகை – உலகியல் நல்லூர்; உலகையர்–உலகை நகரத்தினர்.

ஏலம் பூத்த – மணம் வீசுகின்ற; இலவு இதழ் – இலவம்பூ போன்ற உதடுகளையும்; கரதலம் – கைகளையும்; இலவிதழ் கரதலம் ; உம்மைத்தொகை; விரிதரா – விரித்து; வாய்விட்டுக் கூப்பிட்டும் கைகளை நீட்டி அழைத்தும் என்றவாறு; யாவும் – உலகத்தின் நிலைத்திணை இயங்குதிணைப் பொருட்கள் அனைத்தையும்; சேய்–குழந்தை.

தாலம் பூத்த முகில் – நிலத்தில் தோன்றிய மேக வண்ணன், முகில்: உவம ஆகுபெயர்;ஒரு கவுசலை இலவிதழ் கரதலம் இனிது விரிதரா, 'யாவும் காப்பது . . . . வருக' எனத் தவழ்வுடன் நனி வருபவன் என இயையும்;வருபவன்-இராமன்: அண்மைவிளி;இது.

''எந்தை வருக ரகுநா யகவருக
மைந்த வருக மகனே இனிவருக
என்கண் வருக எனதா ருயிர்வருக அபிராம

இங்கு வருக அரசே வருகமுலை
உண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னொடுகோ சலைபுகல வருமாயன்''

என்பதனை அப்படியே அடியொற்றியது (திருப்புகழ். 47). சலநதி–நீர் நிரம்பிய ஆறு; நதிகுலம் – கங்கை மரபு; குலபதி– மரபின் தலைவன்.

கோபம் தீர்த்த நிறம்அலர் மரகத
குருவிர வியரவி வருகவே!
கோரம் தீர்த்த செவிலியர் முலைஇடு
குலமலை தவழ்மதி வருகவே!
ஓவம் தீர்த்த உருவினும் உணர்வினும்
ஒருவரும் எதிர்இலி வருகவே!
ஓதம் தீர்த்த ஒலிமலி தகையதுழர்
உலகையர் தனிமுதல் வருகவே!

ஆவம் தீர்த்த கணைபொரும் இணைவிழி
அகலிகை ஒருவிசை ஒருகலா
ஆகம் தீர்த்து வெளியிடை கிடைகொள
அவளது முதுமுனி முனிவுகூர்
சாபம் தீர்த்த அடிகொடு கவுசிகர்
தமதுபின் வரும்முகில் வருகவே!
தாகந் தீர்த்த செழியர்தம் அதிபதி
சலபதி குலபதி வருகவே! 61

வாரானைப்பருவம் முற்றிற்று

61. கோபம் தீர்த்த நிறம் - இந்திரகோபப் பூச்சியைப் போன்ற வண்ணம், சிவப்பு; அலர் - (ஆங்காங்கே) மலர்கின்றதும்; மரகத குரு - பச்சை ஒளி; விரவிய - கலந்த; ரவி - சூரியனே: அண்மைவிளி; திருமாலின் கண்கள், இதழ்கள், கைகள், திருவடிகள் செந்தாமரை அனையன; திருமேனி பச்சை நிறம்; ஒளியோ கதிரைப் போன்றது; எனவே திருமாலை இடையிடையே செவ்வொளி கலந்ததும் பச்சையொளி வீசுவதுமாகிய ஒரு சூரியன் என உருவகிக்கிறார்: இது இல்பொருள் உருவகம்; கோரம் தீர்த்த-சூட்டை தணிக்கின்ற, இது நகிலுக்கு அடை; குல மலை- அழகிய குன்றுகள்; மதி-சந்திரனே.

ஓவம் தீர்த்த உருவினும் - ஓவியத்தில் எழுதிக் காட்ட முடியாத அளவு மிகுந்த அழகிலும்; உணர்வினும் - அறிவிலும்; எதிர்இலி-இணையற்றவனே; ஓதம் தீர்த்த-கடலைப் போன்ற; ஒலி மலி - ஓசை மிக்க; தகையது - பெருமிதம் மிக்கது; ஓர்- ஒப்பற்றது; ஒலிமலி உலகை, தகையது உலகை, ஓர் உலகை எனத் தனித்தனி இயையும்; தனி முதல்-இணையற்ற தலைவனே.

ஆவம் தீர்த்த - அம்பறாத்தூணியிலிருந்து விடுபட்ட; கணை பொரும்-அம்பைப் போன்ற; ஒரு விசை-ஒரு முறை; கலா-கல் ஆகி; ஆகம் தீர்த்து-உடலை இழந்து; வெளியிடை-வெளியில்; கிடைகொள - கிடக்கும்படி; அவளது முதுமுனி-அந்த அகலிகையின் கணவரான முதிய முனிவர், கௌதமர்; முனிவுகூர் சாபம்- கோபித்துக் கொடுத்த சாபம்.

தீர்த்த அடி - கல்லாகக் கிடந்த அகலிகையைத் தீண்டி அவளுக்குச் சாபநீக்கம் அருளிய திருவடிகள்; ஒரு விசை அகலிகை ஆகம் தீர்த்து வெளியிடை ஒரு கலா கிடைகொள அவளது

முதுமுனி முனிவுகூர் சாபம் தீர்த்த அடிகொடு என இயையும். இராமபிரான் அகலிகைக்கு அருளிய வரலாறு வெளிப்படை; கவுசிகர்–விசுவாமித்திரர்; கவுசிகர் தமது பின் சாபம் தீர்த்த அடிகொடு வருமுகில் என இயையும்; இதுவும் வெளிப்படை.

அம்புலிப் பருவம்

இரட்டையாசிரிய விருத்தம்

சூழிமால் யானைஓர் எட்டும்இவன் எண்இலாத்
தொல்புலத்து உழுபகடுகாண்
சூழ்அஷ்ட கிரிஎல்லை நட்டகல் காண்அட்ட
பாலர்சுற் றியகாவல்காண்
வாழியாய்த் தொடுகடல் படுஏழும் இங்குஇவன்
வயல்அகத்து ஏரியேகாண்
மாகமே கக்குலம் மிவன்குறிப் பால்வந்து
வந்துஇறைக் கும்கருவிகாண்
பாழி மேருவும் இவன்சூடு அடுக்கிப்
படுக்கின்ற போர்மேடுகாண்
படுவிசும்பு உடுஎலாம் இவன்நெற்க ளத்திலும்
பரவும்முத் தாரமேகாண்
ஆழிமால் வரையும்இவன் வேலிகாண் இவனுடன்
அம்புலீ ஆடவாவே!
அந்தாலன் உதவுதா கந்தீர்த்த செழியனுடன்
அம்புலீ ஆடவாவே! 62

62. சூழி–முக படாம்; மால்–பெரிய; எட்டு யானை என்றது திசையானைகளை; தொல் புலம்–பழமையான வயல்; உழுபகடு–உழுகின்ற எருமைகள்; சூழ்–உலகைச் சுற்றியுள்ள; அஷ்ட கிரி–எட்டுக் குலகிரிகள்; நட்ட எல்லைக்கல் என மாறுக; அட்டபாலர்–இந்திரன் முதலிய எண்திசைப் பாலகர்கள்.

தொடு கடல் படு ஏழும் – ஆழமான கடல்களாகிய ஏழு நீர் நிலைகளும்; இவை சப்த சாகரங்கள் எனப்படும், 31 ஆம் பாடல் குறிப்புரை காண்க; மாக மேகக் குலம்–ஆகாயத்திலுள்ள முகில் கூட்டங்கள்; குலமிவன் எனற்பாலது செய்யுளோசை கருதிக்

குலம்மிவன் என மிக்கது; இறைக்கும் கருவி - வயல்களுக்கு நீர் பாய்ச்சும் இயந்திரம்.

பாழி-பெரிய; மா - பொன்னாலாகிய; சூடு - வைக்கோற் போர்; போர் மேடு-போராகிய மேடு; பொன்மலை வடிவாலும் வண்ணத்தாலும் பெருமையாலும் வைக்கோற் போருக்கு உவமையாயிற்று; விசும்பு படு உடு என மாறுக, வானில் உள்ள மீன்கள்.

ஆழிமால் வரை-சக்கரவாள கிரி.

இப் பாடல் செழியதரையனின் செல்வச் செழிப்பைக் காட்டி நிலாவை அழைக்கும்படி அமைந்துள்ளது. இதனால் செழியதரையனை அடைந்தால் சந்திரனும் வளம் பெறலாம் என்பது குறிப்பால் உணர்த்தப்படுகிறது. பாடலில் இவன் இவன் என வந்தவை யாவும் நெஞ்சறி சுட்டு, செய்யுளாதலின் சுட்டு முதலில் வந்தது.

இந்நாய கன்கடல் உடுக்கும்மா நிலமங்கை
என்பவள் குலக்காதலன்
இருடிஅத் திரிஇல்பி றந்தபிற விக்குநீ
இந்நிலப் பேதைதாதை
தொல்நாளை நதியின்வந்து இவன்உதித் தான்நீ
துதிக்கும்நதி பதிஉதித்தாய்
சுற்றம்இரு வர்க்கும்இன்று உற்றமுறை பற்றித்
தொடிக்கைவிரல் கொண்டுஅழைத்தான்
தென்நாவ லோர்எனக் கவிபாடுஎ னக்குஎனச்
சென்னியைச் சிறையிட்டுஇவன்
சேரனைத் தளையில்இட்டு அவனோடு நின்குலத்
தென்னனைக் கூடப்பிடித்து
அந்நாள் விலங்கிட்ட பகைமறந்து இவைநினைந்து
அம்புலீ ஆடவாவே!
அந்தாலன் உதவுதா கந்தீர்த்த செழியனுடன்
அம்புலீ ஆடவாவே! 63

63. குலக் காதலன் - நன்மையைப் புரிகின்ற கணவன், செழியதரையனைத் திருமாலாகக் கொண்டு பூமகள் கொழுநன் என்றவாறு; அத்திரி இருடி என மாறுக; இல்-வீட்டில்; அத்திரிக்கும் அநசூயைக்கும் பிறந்த மூன்று குழவிகளில் சந்திரன் பிரமனின் அம்சம்; பிரமன் பூமியைப் படைத்தவன்; எனவே அத்திரி இல் பிறந்த பிறவிக்கு நீ இந் நிலப் பேதை தாதை என்றார். எனவே

இவ்வகையில் சந்திரனின் மகளாகிய நிலத்தின் கணவனாகிய செழியதரையனுக்கு அம்புலி மாமனார் முறை.

''அத்திரி ஆகம் தோய்ந்த
அருள்அந சூயை என்பாள்
தத்தொளி திளைக்கும் திங்கள்
தகைகொள்தத் தாத்தி ரேயன்
தொத்துறு கனலில் சீற்றம்
துறுதுரு வாசன் என்னும்
மெய்த்தவர்க் கருவு யிர்த்தாள்
விரைமலர் பொழிந்தார் விண்ணோர்'',

''விடுசுடர் எறிக்கும் திங்கள் விரைமலர் விரிஞ்சன் ஆகும்''
(செவ்வைச்சூடுவார் பாகவதம். 705, 706)

நதியின் வந்து—கங்கை மரபில்; நதிபதி – யாறுகளின் கணவனாகிய கடல், பாற்கடல்; இவ்வகையில் சந்திரனும், செழிய தரையனும் சகோதரர்களாகின்றனர். இருவர்க்கும் சுற்றம் உற்ற முறை பற்றித் தொடிக்கை விரல் கொண்டு இன்று அழைத்தான் எனக் கொண்டுகூட்டுக; தொடிக்கை—வளையல்களை அணிந்த கை.

ஆறகழூர் வாணன் மூவேந்தரைச் சிறையிட்டது முன்னர்க் கூறப்பட்டது; சென்னி – சோழன்; பாண்டியன் சந்திரவம்சமாதலின் நின்குலத் தென்னன் என்றார்; இவை – உங்களுக் கிடையேயுள்ள இருவகைச் சுற்றங்களை.

ஓதிமத் தொகுதிசூழ் கடல்கடைந் துழிஉன்
உடன்பிறந் தாள்மிதிலைவாய்
உழுதவன் கொழுமுனைக் கிடைவந்த வாசிகொண்டு
ஒருபதுசி ரக்கோமகன்
வீதியில் கொடிஇலங் காபுரத்து உன்னையும்
வெயில்பக லவன்தன்னையும்
மேல்வரக் கண்டுபண்டு உங்களின் அடங்காத
வெம்பகைஅ டக்கிவென்றான்;
போதிஇப் பொழுதுஎன்று அழைக்கும்இக் கோவையே
புக்குஇனம்ள னக்கலந்தால்
பொங்குவாள் அரவமும் செங்கைவாள் அவுணரும்
பொருதுஉனைச் சினவினாலும்

ஆதியில் செருவெலத் தலைமைநீ யும்பெறுவை
அம்புலீ ஆடவாவே!
அந்தாலன் உதவுதா கந்தீர்த்த செழியனுடன்
அம்புலீ ஆடவாவே! 64

64. ஓதிமத்தொகுதி – அன்னக்கூட்டங்கள்; உன் உடன் பிறந்தாள்–(சந்திரனுடன் தோன்றிய) திருமகள்; மிதிலை வாய் என்புழி வாய் ஏழனுருபு; உழுதவன் – சீதா பிராட்டியாரின் தந்தையாகிய சனகன்; உழுதவன் என வினைத்தொகையாக்கினும் சனகனுக்குப்பொருந்தும். ஏனெனில் அவன் பெரிய பிரமஞானி; வாசி–ராசி; அதிநட்டம்; ஒருபது சிரக் கோமகன்–தசமுகன், இராவணன்.

கொடி இலங்காபுரத்து வீதியில் என மாறுக; வெயில் பகலவன்–வெயிலைத் தருகின்ற சூரியன்: இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்கதொகை; இராவணனின் ஆட்சியில் அவன் ஆணையின்றிக் கோள்களும் இயங்கா; உங்களின் என்றது கதிரவனையும் இணைத்துக் கூறியது; பாற்கடல் கடைந்து அமுதம் எடுத்துத் தேவர்களுக்குப் பரிமாறும்போது அசுரர்களைச் சேர்ந்த இராகுகேதுக்கள் இருவரும் அமிர்தம் பருகி விட்டனர். இதனைக் கண்டறிந்து சூரிய சந்திரர்கள் காட்டிக்கொடுத்து விட்டதால் இவர்கள் அசுரர்களின் பெரும்பகைக்கு இலக்காயினர். திருமால் இராவணனை வென்ற நிகழ்ச்சியைப் புலவர், செழிய தரையன் சூரிய சந்திரர்களின் பகையை வென்றதாகக் கூறுகிறார். அவன் வென்றதற்குக் காரணம் சந்திரனின் உடன்பிறந்தாளைக் கைப்பிடித்த அதிருஷ்டமே என்றும் கூறுமுகத்தால் மைத்துனக் கேண்மையும் சுட்டுகிறார்.

போதி–வந்து போ. வந்துவிட்டுச்செல் என்பது உலக வழக்கு; கோவை–அரசனோடு: வேற்றுமை மயக்கம்; பொங்கு வாள்–மிகுகின்ற ஒளியையுடைய; அரவம்–பாம்பு; அவுணர்–அரக்கர்; சினவினாலும்–கோபித்துக் கொண்டாலும்.

ஆதியில்–எடுத்த எடுப்பிலேயே: தலைமையும் நீ பெறுவை என மாறுக; எனவே அம்புலியே இவனுடன் விளையாட வா என்றவாறு.

சந்திரனே! திருமாலான செழியதரையன் உன்னுடன் பாற் கடலில் பிறந்த திருமகளைக் கைப்பற்றிய அதிருட்டத்தால் இலங்கையில் பெருவெற்றி பெற்றான்; அவன் வெற்றிபெற்றதால்

தானே நீயும் சூரியனும் இலங்கையில் இயங்க முடிந்தது; மேலும் அவனால் தோற்கடிக்கப்பட்டவர்கள் இயல்பாக நின் பகைவர்; அவன் செயல்களால் நீ நன்மை அடைந்தது மட்டுமன்றி உறவும் இருப்பதால் இப்போது அதனை எண்ணி விளையாட வா. அவ்வாறு வந்தால் உன் பகைவர்களை எதிர்த்து வெல்லும் தலைமை கிடைக்கும் என்றவாறு. இதில் சாமம், தானம் ஆகிய இரு உபாயங்களும் கலந்து வந்தன.

ஆயிரக் கதிரவன் தனைநினைத் தனனோஇது
அன்றிஇத் தரணிசேயை
அறிவனைக் கனகனைச் சுங்கனைப் பங்கனை
அகத்துஅழைத்து அருளினானோ
ஆயிரப் பெருவிழிக் குணதிசைக்கு அரசைத்தன்
அருகுஅழைத்து உருகினானோ
அமரரைக் கருடரைக் கிம்புருட ரைத்தவரை
ஆவலில் கூவினானோ
ஆயிரப் பெயருடைக் கடவுள்ச டைக்கான–
கத்துஇவர் குலக்கங்கைதன்
அலைமலர்க் கரமீது வளர்இளங் குழவிநீ
ஆதலால் தான்அழைத்தான்
ஆயிரப் பிறைகளால் உனைவணங் குவன்இவன்
அம்புலீ ஆடவாவே!
அந்தாலன் உதவுதா கந்தீர்த்த செழியனுடன்
அம்புலீ ஆடவாவே! 65

65. ஆயிரக் கதிரவன்–ஆயிரம் ஒளிக்கதிர்களை உடைய சூரியன்; தரணி சேய்–பூமியின் மகனான செவ்வாய்; அறிவன்–புதன்; கனகன்–வியாழன்; சுங்கன்–சுக்கிரன்; பங்கன்–முடவனான சனி; அகத்து–(விளையாடத் தன்) வீட்டிற்கு.

ஆயிரம் பெருவிழிகளை உடையவனும் கிழக்குத் திசைக்கு அதிபதியும் ஆகிய இந்திரனை என்க. ஆயிரம் என்பது பல என்னும் பொருட்டு; அமரர் முதலியோர் பதினெண்கணத்தைச் சேர்ந்தவர்கள்.

ஆயிரப்பெயருடைக் கடவுள் – சிவபெருமான், 'பேராயிரம்பரவி வானோர் ஏத்தும் பெம்மானை' (தேவாரம். 6. வேளூர்த் திருத்தாண்டகம். 8.); இவர்–இவர்கின்ற, படர்கின்ற; குலக்கங்கைதன்–மேன்மையான கங்கா நதியின்; சந்திரன்

கங்கையில் வளர்கின்ற குழந்தை, செழியன் கங்கா குலத்தினன், இவ்வொற்றுமை கருதியே அழைத்தான் என்றவாறு.

இவன் உனை ஆயிரம் பிறைகளால் வணங்குவன் என இயையும். ஆயிரம் என்புழி எதுகை நோக்கிய வலித்தல் விகாரம். செழியதரையன் ஆயிரம் பிறைகண்டு வாழ்வான் என்பது கருத்து. ஒருவர் எண்பத்திரண்டு ஆண்டுகள் உயிர் வாழ்ந்தால் அவர் ஆயிரம் பௌர்ணமிகளைப் பார்த்திருப்பார். எனவே ஒருவரின் எண்பத்தி மூன்றாவது பிறந்தநாளில் அவரை ஆயிரம் பிறைகண்ட பெரியவர் என வாழ்த்துவது மரபு. வடமொழியில் இது ஸஹஸ்ர சந்த்ர தரிசனம் என்று சொல்லப்படும். செழியன் நீடூழி வாழ வேண்டும் என்னும் விழைவு அவன் வாழ்ந்து மதியை வணங்குவதால் சந்திரனுக்கு ஏதோ நன்மை ஏற்படும் என்பது போலக் கூறப்படுகிறது. இப்பாடலையும் சாம, தான, உபாயங்களின்பாற் பட்டதாகக் கொள்ளலாம்.

செல்லாது, "இவன்பக்கல் புக்குவிளை யாடித்
திரிந்தால்வி ரிந்தவானத்
திமிரம்து ரப்பவர் யார்?" எனச் சிந்தையில்
சிந்தித்தி ராதிகண்டாய்
கல்லார மாலைப்பு யத்திஇவன் கவிகையில்
கவின்நிலா வும்புகழ்எனக்
கடல்அகத்து ஒளிவிடும்நி லாவும்உன் பெருநிலாக்
கதிரினும் பதின்மடங்காம்
எல்லாம றைக்கும்த ரைக்கும்தி ரைக்கும்உயிர்
யாவைக்கும் அண்டகூடத்து
ஈர்ஐம்ப திற்றாம்பெ ரும்கோடி யோசனையின்
எல்லைக்கும் இருள்அகற்றும்
அல்லாதும் உலகைஇருள் நீக்கினான் பேரன்இவன்
அம்புலீ ஆடவாவே!
அந்தாலன் உதவுதா கந்தீர்த்த செழியனுடன்
அம்புலீ ஆடவாவே! 66

66. செல்லாது—(செழியதரையன் அழைக்கவும் அவனுடன் விளையாட) போகாமல்; திமிரம்—இருள்; துரப்பவர்—ஓட்டுபவர்; நாம் செழியனோடு விளையாடிக் கொண்டிருந்தால் வானில் இருளையோட்டுபவர் வேறு யார் எனத் திங்கள் சிந்திக்குமாம்; அப்படி நினைக்காதே என்கிறார் புலவர்.

கவிகையில் கவின்நிலா—வெண்கொற்றக் குடையாக விளங்கு கின்ற நிலவு, இல்: உவமஉருபு; புகழ்என — செழியதரையனின் புகழைப் போல; கடல்அகம் — சமுத்திரத்தை எல்லையாகக் கொண்ட இடம், உலகம்: இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை; பெருநிலா என்றது ஒரு வருடத்தில் வரும் முழுநிலவுகளில் எல்லாம் மிகப் பெருமை பெற்ற கார்கால நிலவை; செழியதரையனின் வெண்கொற்றக்குடையும், புகழும் தனித்தனியே கார்காலத்தின் முழுமதியைவிடப் பதின் மடங்கு அதிக ஒளிவீசுகின்றன; எனவே அவை வானத்திமிரம் துரப்ப வல்லவை என்பது கருத்து; இது அடுத்த அடியில் மேலும் தெளி வாகக் கூறப்படுகிறது.

தரை—நிலஉலகம்; திரை—அலைகளைஉடைய கடல்; அண்ட கூடம்—உலகம்: ஒரு பொருட்பன்மொழி; ஈர்ஐம்பதிற்றாம் கோடி யோசனையின் பெரும் எல்லை என இயையும்; இவ்வுலகம் நூறு கோடி யோசனைப் பரப்புடையது என்பர். 'அந்தயோ சனையின் எல்லை ஐம்பதிற் றிரண்டு கோடி வந்ததிவ் வண்டத்திற்கும்' என்பது கந்த புராணம் (அண்ட கோசப்படலம். 7.).

உலகை இருள் நீக்கினான் என்ற சொற்றொடர் இங்குச் சிலேடையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. உலகத்து இருட்டைப் போக்கியவன் என்பது ஒருபொருள். இப் பொருளில் இரண்டன் உருபு ஏழன் பொருளில் வந்தது: மயக்கம். மற்றொன்று உலகியல் நல்லூரின் தலைவனும் இருள்நீக்கினான் என்னும் இயற்பெயர் வாய்ந்தவனுமாகியவன் என்பது; தாகந்தீர்த்த செழியனின் பாட்டன் உலகை இருள்நீக்கினானாதலின் இவனும் அதைச் செய்ய வல்லவன் என்பது கருத்து.

இப் பாடல் பேதோபாயத்தின்பாற் பட்டதாகும்.

பாரவைக் கும்புயத் தின்குலத்து ஒருவனைப்
பண்டுஇவன்கு லத்துள்ஒருவன்
பரவவா ராமையின் கயதுயரங் காதிப்
பதாதிக்க டல்கொண்டுபோய்
வீரவைக் குங்கால்சி வப்பேற ஓடவும்
வெகுண்டுமது ராபுரிக்குஓர்
வீணையிற் பாணனே அரசுஎனத்தனிவைத்து
மீளவந் தமைபொய்மையோ

போரைவைத்து இதயத்தில் நீயும்அணுகாமல்
புறந்தந்து இருந்தாய்எனில்
பூமிமீது எழும்ஏழு நதிப்பிரான் அனிகமும்
பொருதுநின் பதவிக்குவேறு
ஆரவைத் தருணமோ அறிகிலோம் வைக்குமுன்
அம்புலீ ஆடவாவே!
அந்தாலன் உதவுதா கந்தீர்த்த செழியனுடன்
அம்புலீ ஆடவாவே! 67

67. பாரை வைக்கும் புயத்தின் குலம் – இயல்பாகவே அரசாட்சிப் பொறுப்பை ஏற்கவேண்டிய மன்னர் மரபு, பாண்டிய குலம்; பண்டு–முற்காலத்து; இவன் குலத்துள் ஒருவன் – செழிய தரையனின் குலத்தைச் சேர்ந்தவர்களுள் ஒருவனாகிய மாவலி வாணன்; பரவ வாராமையின் – பாண்டியன் வந்து வணங்காத தால்; கய துரங்க ஆதி–யானை குதிரை முதலியவற்றோடு கூடிய; பதாதிக் கடல்–சேனையாகிய ஆழி, பதாதி இங்குப் படை என்ற அளவில் நின்றது.

வீரை–வீரக்கழல்; வைக்கும்–அணியும்; வீணையிற் பாணன்–வீணையை மீட்டுகின்ற பாணன்: வேற்றுமை மயக்கம்; இவ் வரலாறு இந்நூல் 13ஆம் பாடல் குறிப்புரையில் காட்டப்பட்டது.

நீயும் இதயத்தில் போரை வைத்துப் புறந்தந்து அணுகாமல் இருந்தாய் எனில் என இயையும்; பாண்டியன் சந்திர வம்சத்தவன் ஆதலின் நம் மரபினனுக்குத் தீங்கிழைத்தவனின் வழித் தோன்றலே இச் செழியன் எனக் கருதி வாராமல் வேறு பக்கம் சென்றால் என்றவாறு; ஏழு நதிகள்–கங்கை, யமுனை, சரஸ்வதி, நர்மதை, காவேரி, கோதாவரி, சிந்து ஆகியன. இந்திய உப கண்டம் முழுவதற்கும் செழியதரையன் தலைவனாவான் என்ற பொருளில் ஏழுநதிப்பிரான் என்றார்; அனிகம்–சேனை.

செழியதரையன் நினைத்தால் யாரை வேண்டுமானாலும் சந்திரனாக அமர்த்தி விடுவான். இதுபோல் அவன் குலத்தில் ஒருவன் முன்பே செய்துள்ளான். எனவே சினங் கொள்வதற்கு முன் வந்துவிடு என்பது கருத்து.

இது தண்டோபாயத்தின்பாற்படும்.

காளப்பெ ரும்புயல்எ னக்கடல்க டைந்தஅக்
காலத்துஇ யற்கைபோலக்
காசங்க வெண்ணிலா இன்நிலா வைப்பொரக்
கடவதுஎன்று இடைபடாதே

நாளப்பொ லன்கமலம் ஒத்தகைத் திகிரியால்
நகைஆத பனைஒளித்தான்
நம்மையும் பங்குக்கு ஒளிக்கும்என் னாதேஅன்-
னான் ஆணைக்கு அலம்வராதே
வாளப்பொ ருப்புஉலகை வாழ்விக்க உலகையின்
மானிடத் திருமேனியாய்
வந்துபதி னோராம்பி றப்புஎனச் சங்குஆழி
வாளா வைத்துநம்மை
ஆளப்பி றப்பதாம் இப்பிறப்பு இவனுடன்
அம்புலீ ஆடவாவே
அந்தாலன் உதவுதா கந்தீர்த்த செழியனுடன்
அம்புலீ ஆடவாவே! 68

68. பா.வே. 1:9 உண்ணிலா

காள—கரிய; காசங்க—கய நோயை உடைய உடலினனாகிய, தக்கனின் பெண்கள் இருபத்தெழுவரைச் சந்திரன் மணந்தான்; அவர்களைச் சமமாக நேசிக்காமல் உரோகிணியின் மீது மட்டும் பெருங்காதல் கொண்டிருந்தான்; பிற பெண்களின் வருத்தத்தைக் கண்ட தக்கன் சந்திரனைக் காச நோயுண்டாகச் சபித்தான்.

''ஆரலே முதல்மூ வொன்பது நாளாம்
அவிர்எழில் பிணாக்களை மணந்த
சீர்பெறு சோமன் மனைவிய ரிடத்தில்
சிறுவரைப் பெற்றிலன் கயநோய்
பேர்பெறு தக்கன் வழங்குசா பத்தால்
பெற்றனன் . . . .''

(செவ்வைச்சூடுவார் பாகவதம் 1410)

இப் பிள்ளைத்தமிழ்ப் பாடல் முதலடியின் கருத்து தெளிவாக விளங்கவில்லை.

நாள—தண்டோடு கூடிய; பொலன்—அழகிய; திகிரி—சுதரிசனம்; நகை—ஒளிரும்; ஆதபனை—சூரியனை, ஒளித்தான்—ஒளித்தது பாரதப்பெரும் போரில், சயத்திரதனைக் கொல்ல; அலம் வராதே—குழப்பமடையாதே, ஆணையிட்டு அழைத்துத் தீமை செய்து விடுவானோ எனக் கலங்க வேண்டாம் என்பது கருத்து.

வாளப் பொருப்பு—சக்கரவாள மலை; உலகையின்—உலகியல் நல்லூரில்; பதினோராம் பிறப்பு—மச்சம் முதல் கல்கி ஈறாகிய

பத்து அவதாரங்களை அடுத்த பிறவி; வாளா வைத்து—பயன் படுத்தாமல் வெறுமனே விட்டு.

இது சாமோபாயத்தால் அம்புலியை அழைப்பதாகும்.

புழைத்தாரை வாள்எயிற்று உரகம் பிணிப்பப்
பொருப்புமத்து இடுகாலையும்
புணரிக்குள் வாஎனலும் வந்தாய் இதுஅன்றிப்
பொரும்பார தத்துள்ஒருநாள்
இழைத்தான் இவன்களப் பலிபலிக்கு உரியநாள்
எய்தநீ எய்துகெனலும்
எய்தாத பருவத்தும் எய்தினாய் அன்றையினும்
இன்றைக்கு இவன்சிறியனோ
பிழைத்தார்ப் பிழைப்பினும் பிழையல்ல இந்தப்
பெரும்பிரான் திருஆணைமுன்
பிழைபடக் கடவாத நீகடந் தால்என்ன
பிழையாய்வி டுங்கொல்அறியேம்
அழைத்தால் அழைத்தளவில் வருவதே நீதிகாண்
அம்புலீ ஆடவாவே!
அந்தாலன் உதவுதா கந்தீர்த்த செழியனுடன்
அம்புலீ ஆடவாவே! 69

69. *புழை—உட்டுளையை உடைய; தாரை — வரிசையான; வாள்—ஒளிமிக்க; இம் மூன்றும் எயிற்றினுக்கு அடைகள்; உரகம் — பாம்பு; இங்கு வாசுகி; பொருப்பு மத்து—மந்தரமலையாகிய மத்து; புணரி—கடல், இங்குப் பாற்கடல்; இறைவனின் சங்கற்பப்படிதான் எதுவும் நடைபெறும் என்ற கருத்தில் புணரிக்குள் வா எனலும் வந்தாய் என்றார்; பொரும் பாரதம்—பாரதப் பெரும் போர்.*

இவன் களப்பலி இழைத்தான்; பலிக்கு உரிய நாள் எய்த நீ எய்தாத பருவத்தும் எய்துக எனலும் (நீ) எய்தினாய் என இயையும். பாரதயுத்தத்தில் அமாவாசையைக் களப்பலிக்குரிய நாளாகத் துரியோதனனுக்குச் சகதேவன் குறித்துக் கொடுத் திருந்தான். அருச்சுனனின் மகனாகிய இராவான் களப்பலியாக ஒப்புக் கொண்டிருந்தான். இதனை அறிந்த கண்ணபெருமான் முதல் நாளாகிய சதுர்த்தசியன்றைக்கே சூரியசந்திரர்களை ஓர் இடத்தில் கூட்டி அமாவாசையாக்கி இராவானையே பாண்டவர் களுக்காகக் களப் பலியாக்கி விட்டார். ‘கொடுத்தனன் பலிக்குத் தன்னைக் குமரன்என்று அறிந்து குன்றம் எடுத்தவன் திதியன்

னான்கி னிடைஉவா இன்றா கென்று தொடுத்தநூல் முனிவ ரோடும் சொல்லினன் சுடர்கள் தம்மில் அடுத்ததுஇங்கு என்னை என்ன அன்றுஅது ஆயது அன்றே' (வில்லி பாரதம். களப்பலி.2); அந்நாளைய கண்ணனை விட இன்றைய செழியன் சிறியன் அல்லன் என்றபடி.

பிழைத்தார்ப் பிழைப்பினும்—தாமே தவறு செய்கிறவர்கள் பால் நீயும் தவறிழைத்தாலும். பிழைபடக் கடவாத — தவறு இயற்றக் கூடாத.

இப் பாடல் பேதோபாயத்தின் பாற்படும்.

கோதுஇலா நினைவளைத்து உண்பதற்கு உமிழ்வதற்கு
உரனுடைக் கொடியநாகக்
கோவும்இக் கோமகன் குலமுதல் கடவுளைக்
கொடுசிரத் தால்எடுத்தான்
தீதுஇலா இரவலர்க்கு இரவைத் துரக்கத்
திருக்கரத்து இரவிநாணும்
திவ்யரத் னங்களைத் திறைகள்இட் டான்இத்
திறம்சிறிது அறிந்திலைகொலாம்
காதலால் அவனைமற்று இவன்அழைத்து, ''இவனைஇக்
கணம்இனிக் கொணர்தி'' என்றால்
கடுநெடும் பகுவாய்இ டைப்பிடித்து இவனுக்குஓர்
கையுறைஎ னத்தரும்காண்
ஆதலால் முந்திவந்து அடைவதே அடைவுகாண்
அம்புலீ ஆடவாவே!
அந்தாலன் உதவுதா கந்தீர்த்த செழியனுடன்
அம்புலீ ஆடவாவே! 70

70. உரனுடை — வலிமையுடைய; இராகு கேதுக்களாகிய கொடிய பாம்புகளே மதியை உண்டு உமிழ வல்லன; பாம்புகளின் அரசன் ஆதிசேடன்; அவன் பூமியைத் தன் தலைமேல் தாங்கு கின்றான்; செழியன் வேளாளனாதலின் நிலமகள் அவன் குல முதல் கடவுளாம்.

இரவை — யாசிப்பதை; துரக்க — நீக்க; ஒரு பாம்பு அளித்த செயல் பாம்பரசன் மேல் ஏற்றப்பட்டது; அரவு புலவருக்காக ஒரு வள்ளலுக்கு மாணிக்கம் அளித்த வரலாறு இந் நூல் 47 ஆம் பாடல் குறிப்புரையில் விளக்கப்பட்டது, திறைகள் — கப்பம்;

அவ்வள்ளலும் வேளாளனாதலின், செழியனுக்கு அளித்ததாகவே கொள்ளப்படுகிறது.

அவனை – அந்த ஆதிசேடனை; இவன் – இச் செழியன்; இவனை–இந்த மதியை; கடு, நெடு, பகு என்னும் மூன்றும் வாய்க்கு அடைகள், நஞ்சினை உடையதும், நீண்டதும், பிளவு பட்டதுமான வாய்; கையுறை–பரிசில்.

முந்தி வந்து – செழியனுக்குச் சினம் வருவதற்கு முன்பே வருகை தந்து; அடைவு–பொருத்தமானது.

இது தண்டத்தின்பாற்படும்.

இவன்இப்ப சும்குழவி என்கின்ற படிகடந்து
எண்திசா முகமண்டலத்து
எதிர்கடக் கும்பருவம் எய்தினால் நீசென்று
எழுந்துவிழு வேலைமுழுதும்
கவனித்த இவுளியந் தூளியால் படிபடும்;
கடவுசே னாபராகம்
கதுவலால் நீதிரியும் விண்ணும்மண் மேவிடும்;
கடகளிற் றுத்தொகுதியால்
நவநித்தி லம்பொழிய நீதவழும் வெற்புளலாம்
நனிபெயர்த்து எறியும்; இந்த
நாள்வராது அந்தநாள் வந்தால்உ னைப்பிறர்
நகைப்பதற்கு இடமாய்விடும்
அவனிக்கு லாதிபன்அ ழைத்தபொழு தேஅறிந்து
அம்புலீ ஆடவாவே!
அந்தாலன் உதவுதா கந்தீர்த்த செழியனுடன்
அம்புலீ ஆடவாவே! 71

அம்புலிப்பருவம் முற்றிற்று

71. இவன்–தாகந்தீர்த்த செழியன்; படி–நிலை; எழுந்து விழு வேலை முழுதும்–சந்திரன் உதிக்கின்ற கடலும், மறைகின்ற கடலும்.

கவனித்த–வேகமாகச் செல்கின்ற; இவுளி–குதிரை; கவனித்த இவுளியந்தூளி என்றது வேகமாகக் குதிரைப் படைகள் செல்வதால் எழும் தூசித்தொகுதியை; படிபடும்–அடியில் தங்குவதால்

மேடிடும், இனிப் படும் என்பதனை ஆகும் எனக்கொண்டு தரையாகும் எனினுமாம்; கடவு—செலுத்துகின்ற; தேனா பராகம்—படைகள் இயங்குவதால் எழும் தூசி; கதுவல்—பற்றுதல்; கட களிறு—மதத்தை உடைய யானை.

யானை மலைகளைப் பெயர்த்து எறியும்போது அதன் மறுப்புகளிலிருந்து முத்துகள் தெரிக்கின்றனவாம்; இந்த நாள்—செழியதரையன் சிறு குழந்தையாக இருக்கின்ற இக்காலம்; அந்த நாள்—செழியன் வாலிபப் பருவமடைந்து அவன் படைகளால் சந்திரனின் கடல், ஆகாயம், மலைகள் யாவும் துன்புறும் காலம்.

அவனிக்குல அதிபன்—பற்பல உலகங்களுக்கும் தலைவன்.

இப் பாடலும் தண்டகத்தின் பாற்படும்.

சிறுபறைப்பருவம்

பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

பாஆறு ஒழுகிய பாமகள் கமலப்
பலகா டுகள்முடிப்
பவளப் பாதத் தவளத்து ஓதிம
பந்திப ரந்துஓடிப்
பூஆறு அடிபடு புறவத் தளவப்
புதலைத் தலைமோதிப்
பொருகிரி யிற்கோடு அளவிக் குளவிப்
போதுதி ரைத்துஇரையா
நாஆ ரிடவெண் பணிலத் தொகையும்
நகைதர ளத்திரளும்
நளியப் பொதுளிம லைக்கும்அ லைக்கும்
நடுப்பெரு கப்பெருகும்
தேவஆறு அனையநி வாஆறு உடையாய்
சிறுபறை கொட்டுகவே!
செழியா! தாகந் தீர்த்தம கீபா!
சிறுபறை கொட்டுகவே! 72

72. பா ஆறு ஒழுகிய – (தன்னை வழிபடுவோருக்குக்) கவிதைகளை வெள்ளம்போல் அருள்கின்ற, ஒழுகிய என்பது ஒழுக்கிய என்ற பொருளில் ஆளப்பட்டது; பாமகள் – சரசுவதி.

'பாவும் தொடையும் பதங்களும் சீரும் பலவிதமா மேவுங் கலைகள் விதிப்பாள்' என்பார் கம்ப நாடர் (சரசுவதியந்தாதி. 9); பாமகள் கமலம் என்றது வெண்தாமரையை; கமலக்காடுகள் பல மூடி என்க; பவளப் பாத – பவளத்தைப் போன்ற சிவந்த கால்களை உடைய; தவளத்து ஓதிம பந்தி – வெண்மையான அன்னக் கூட்டம், செய்யுளோசை நோக்கி ஓதிமபந்தி என இயல்பாய் நின்றது; அன்னங்களின் மிகுதியால் வெண்தாமரை மலர்கள் எங்கிருக்கின்றன; எனவே தெரியவில்லை என்பது கருத்து.

பூ–மலர்கள்; ஆறு–வழியில்; அடிபடு–நடப்போரின் கால்களில் மிதிபடுகின்ற; புறவம்–முல்லைநிலம், 'உதிர்த்த மலர்வீழ் புறவு' (பெரும்பாணாற்றுப்படை. 496.); தளவப் புதலைத் தலை–முல்லைப் புதர்களில்; பொருகிரி–மேகங்களுடன் போரிடும் மலைகள் என்க, வானளாவிய என்றவாறு; கோடு அளவி–பக்கமலையை அடைந்து; குளவிப் போது–மலை மல்லிகை மலர்; திரைத்து–திரளச் செய்து, ஓரிடத்தில் சேர்ந்து; இரையா–உணவாக,

நாஆரிட–நாக்கால் துய்க்க. உண்ண என்றபடி; பணிலத் தொகை–சங்குக் கூட்டங்கள்; நடை தரளத் திரள்–ஒளிவீசுகின்ற முத்துக் குவியல்கள்; நளிய: உவமஉருபு: பொதுளி–நிறைந்து; அலை–கடல்; ஓதிம பந்தி பரந்து ஓடி, காடுகள் மூடி, புதலைத் தலை மோதி, கோடு அளவி, குளவிப்போது இரையா நாவாரிட (அவை)மலைக்கும் அலைக்கும் நடுப்பெருகிப் பணிலத்தொகையும் தரளத் திரளும் நளியப் பொதுளிப் பெருகப் பெருகும் நிவா ஆறு என இயையும்; பெருகும் நிவா, தேவ ஆறு அனைய நிவா எனத் தனித்தனி இயைக்க; மருத நிலத்திலுள்ள அன்னப்பறவைகள் முல்லைநிலத்தின் முல்லை மலர்களையும் குறிஞ்சியின் மலை மல்லிகைகளையும் நாவார உண்டு மகிழ்கின்றன. நிவா தோன்றும் மலையிலிருந்து அந் நதி கடலில் கலக்குமிடம் வரை இந்த அன்னங்களின் இயக்கமும் வெண்மையான மலர்களின் மிகுதியும் வழிநெடுகிலும் சங்குகளையும் முத்துகளையும் இறைத்திருப்பது போல் தோன்றுகிறது: இது திணை மயக்கம்.

தேவஆறு–கங்கை; நிவாவின் நீர்ப் பெருக்கத்தாலேயே மருதம் முல்லை குறிஞ்சி ஆகிய பகுதிகள் வளம் பெறுகின்றன வாதலின் ஓதிமப்பந்தி பெருகப் பெருகும் நிவா ஆறுஉடையாய் என்றார்; மகீபன்–மன்னன்.

கவ்வைச் சிறுபறை கொட்டிக் குன்றவர்
குறுமார் கமழ்முல்லைக்
கானக் கோழிகள் அலம்வர அந்தக்
கானவர் தொறுவர்சிறார்
வவ்வச் சிறுபறை கொட்டிக் குன்றின்
மடக்கிளி யும்களிமா
மயிலும் தெருமர வாரி (அடுத்திடு)
மதலையர் விரைவொடுபோய்ப்
பவ்வச் சிறுபறை கொட்டிம ராளம்
பழனத் தினும்இரியப்
பழனத்து உழவர்சி றாரே வாரிப்
படுகுருகு ஓலமிடத்
தெய்வச் சிறுபறை கொட்டிய நாடா
சிறுபறை கொட்டுகவே!
செழியா! தாகந் தீர்த்தம கீபா!
சிறுபறை கொட்டுகவே! 73

73. கவ்வை—ஒலிமிக்க; குன்றவர் குறுமார்—குறிஞ்சிநில மக்களின் பிள்ளைகள்; முல்லை கமழ் கானக் கோழிகள் என மாறுக, முல்லைமலர் மணக்கின்ற காட்டுப் பகுதியிலுள்ள கோழிகள்; அலம் வர—அஞ்ச; கானவர் தொறுவர்—முல்லை நில மக்களாகிய ஆயர்: இருபெயரொட்டுப் பண்புத்தொகை; தொறுவர் சிறார்—இடையர்களின் பிள்ளைகள்.

வவ்வ—ஓசை கிளர்ந்தெழுமாறு; மடக்கிளி—மடப்பத்தை உடைய கிளி; களி மா மயில்—மகிழ்கின்ற பெரிய மயில்; தெருமர—அஞ்ச; வாரி—கடல்; வாரி அடுத்திடு மதலையர்—நெய்தல் நிலத்துப் பிள்ளைகள்.

பவ்வம்—கடல்; பவ்வச் சிறுபறை—கடல்போல் ஒலிக்கின்ற சிறுபறை; மராளம்—அன்னப் பறவைகள்; பழனத்திலும்—வயல் களிலும்; இரிய—அஞ்ச; வாரிப்படு குருகு—கடலின் அருகே வாழ்கின்ற நாரைகள்.

தெய்வச் சிறுபறை—புனிதமான ஓசையை எழுப்புகின்ற சிறுபறை; குறிஞ்சிச் சிறுவர்களின் சிறுபறையால் முல்லை நிலத்துக் கோழிகளும், இடைச்சிறுவர்களின் சிறுபறையால் குறிஞ்சி நிலத்துக் கிளிகளும் மயில்களும், நெய்தற் சிறுவர்களின் சிறு பறையால் மருதநிலத்து அன்னங்களும், மருதநிலத்துச் சிறுவர்

களின் சிறுபறையால் நெய்தல் நிலத்துக் குருகுகளும் அஞ்சுகின்றன என்றவாறு. குறிஞ்சியும் முல்லையும், மருதமும் நெய்தலும் அடுத் தடுத்து இருந்தன என்பது கருத்து: இதுவும் திணை மயக்கம்.

தூவித் தவளத்து எகினச் சிறகு
சுரும்புஅறை யச்சாறே
துவலைதெ றிப்பமு றித்தக ரும்பு
தொடிக்கை பிடித்துஅயலே
வாவிக் கடையிற் கடைசியர் மோத
வரால்வெடி போய்ஒருபால்
மதகுக்கு இடைபுக்கு அடையக் குதிபாய்
மகதைத் திருநாடா!
காவித் தொடலைக் கருணைக் கடலே!
கமலவ னப்புயலே!
கங்கைக் குலரவி யே!புவி மரபில்
கனகன காசலமே!
சேவிப் பவருக்கு ஆவித் துணையே!
சிறுபறை கொட்டுகவே!
செழியா! தாகந் தீர்த்தம கீபா!
சிறுபறை கொட்டுகவே! 74

74. தூவி—இறகுகளை உடைய; தவளத்து—வெண்மையான; எகினச் சிறகு—அன்னத்தின் இறகுகள்; சுரும்பு அறைய—வண்டு களை அடிக்கவும்; துவலை—துளி; கரும்புச்சாற்றின் துளிகள் தெறிக்கும்படி முறிக்கப்பட்ட கரும்பு என்க; தொடிக்கை—வளை யல்களை அணிந்த கரங்கள்; அயலே—அருகே.

வாவிக் கடையில்—குளத்தின் ஓரத்தில்; கடைசியர்—பள்ளியர்; கடைசியர் தொடிக்கை(யில்) முறித்த கரும்பு பிடித்து அயலே (உள்ள) வாவிக் கடையில் மோத என இயையும்; வெடிபோதல்—வாணத்தைப் போன்று பாய்தல்; வரால் திடீரென்று பாய்வதால் அன்னப்பறவைகள் அஞ்சிச் சிறகுகளை அடித்துக் கொள்கின்றன; அதனால் வண்டுகள் அறையப் படுகின்றன; பள்ளியர் அஞ்சிக் குளத்தின் ஓரத்திற்கு ஓடுகிறார்கள். இது மகத மண்டலத்தின் நீர்வளம் உரைத்தவாறு.

''பிறைமதிக் கூன்குயக் கைக்கடைஞ ரோடுபுடை
பெயர்ந்திடை நுடங்கவொல்கும்

மின்னல் தடித்துக் கரும்பொற் றொடிக்கடைசி
மெல்லியர் வெரீஇப்பெயரவான்
மீன்கணம் வெருக்கொள்ள வெடிவரால் குதிகொள்ளும்''
(மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ். முத்தப்.7.).

காவித் தொடலை—குவளை மாலை; கமல வனப் புயல்—தண்ணீர்க் காடாகிய மேகம், நீருண்ட மேகம், கைம்மாறு கருதாது வழங்கும் வள்ளலே என்றவாறு: உருவகம்; ரவியே—சூரியன் போன்றவனே; புவிமரபு—உலகில் உள்ள வம்சங்கள்; கனகனக அசலம் – பெருமை மிக்க பொன்மலையைப் போன்றவனே, செழியதரையனின் மரபு பொன்மலையைப் போன்றது என்றவாறு.

சேவிப்பவருக்கு – தலைமையை ஏற்றுப் பணிபவர்களுக்கு; ஆவித்துணை—உயிர் போன்ற துணைவன்.

மகதைத் திருநாடா! கடலே! புயலே! ரவியே! கனகாசலமே! துணையே! செழியா! தாகந்தீர்த்த மகீபா! சிறுபறை கொட்டுக என்பது முடிபு.

நானம ணம்புக முழுகிய மாதர்
நடைக்குஉறவு என்றுநிவா
நதிஅன் னம்தொட ரத்தொடர் அன்னம்
நமக்குஉறவு என்றுஉடனே
மானவ லம்புரி தொடரத் தொடரும்
வலம்புரி ஊர்அளவா
மதியம்இது என்றுச கோரம் தொடரும்
மகதைத் திருநாடா!
கானந றுங்கம லக்கா லைத்தொழு
காலைக்கு இடம்அரிதாய்க்
கையணை யில்தலை வைத்துக் கடகம்
கவுடம் கருநாடம்
சீனம்உ றங்கிய முன்றில்மு குந்தா!
சிறுபறை கொட்டுகவே!
செழியா! தாகந் தீர்த்தம கீபா!
சிறுபறை கொட்டுகவே! 75

75. நான மணம் புக – குளத்தில் கத்தூரியின் வாசனை சேரும்படி, மான வலம்புரி – பெருமையை உடைய வலம்புரிச் சங்கு, இப் பெருமை ஆயிரம் இடம்புரிச் சங்குகள் சூழ்வதால் வந்தது; ஊர் அளவா – பரிவேடம் இட்ட, சந்திரனைச் சுற்றி யிருக்கும் ஒளி வட்டத்திற்குப் பரிவேடம் எனப்பெயர்; சகோரம்– சக்கிரவாகப் பறவை.

நறுங்கானக் கமலம் என மாறுக, நறுமணமுள்ள தாமரை; தொழு காலைக்கு–வணங்குகின்ற நேரத்திற்கு; இடம்–வாய்ப்பு; கையணையில் தலை வைத்து – தம் கரங்களையே தலையணை யாக வைத்துக் கொண்டு; கடகம், கவுடம், கருநாடம், சீனம் என்னும் தேயப்பெயர்கள் அந்தந்த நாட்டு மன்னர்களைக் குறித்து நிற்கின்றன.

செழியதரையனின் அரண்மனை முற்றத்தில் பல நாட்டு வேந்தர்களும் அவன்அருள்நாடிக் காத்துக்கிடக்கின்றனர் என்பது கருத்து; முகுந்தா–திருமாலைப் போன்றவனே.

பெண்களை அன்னங்களும், அவற்றை வலம்புரிகளும், வலம்புரிகளைச் சக்கரவாகப் புட்களும் தத்தம் இனமெனத் தொடர்கின்றன. இதனால் மகத மண்டல மகளிரின் வனப்பும், அந் நாட்டு நீர்வளமும் சிறப்பிக்கப்பட்டன.

ஆறும ணக்கும் படிபடி மாதர்
அவிழ்த்த குழல்கானத்து
ஆவிம ணக்கும் நாவிம ணக்கும்
அலைபுனல் கால்வழிபோய்
நாறும ணக்கும் பழனம ணத்தை
நறைச்சிறை வண்டினமே
நாடும்இ ரும்கே ரளபாண் டியவள
நாடுப டைத்துடையாய்!
வீறும ணக்கும் செவிலிமு லைத்தலை
மேருக் குவடூடே
விளையா டிப்பல காலும் எழுந்து
விழுந்தசெ ழும்சந்தச்
சேறும ணக்கும் திருவடி மதலாய்!
சிறுபறை கொட்டுகவே!
செழியா தாகந் தீர்த்தம கீபா!
சிறுபறை கொட்டுகவே! 76

76. மணக்கும்படி—வாசனை வீசுமாறு; படி மாதர்—மூழ்கு கின்ற மகளிர்; குழல் கானம்—கூந்தலாகிய காடு: உருவகம்;ஆவி—அகிற் புகை; நாவி – கத்தூரி; மாதர் குழல் கானத்து ஆவியும் நாவியும் மணக்கும்; அவ் வாசனை அலைகின்ற நீர்நிரம்பிய வாய்க்கால் வழியே செல்லும் என்க.

நாறு:நாற்று என்பதன் இடைக்குறை; நறைவண்டு, சிறை வண்டு எனத் தனித்தனி இயையும்; இழிந்த பொருள்களை விழையும் பிற வண்டுகளிலிருந்தும் பிரித்துக் காட்ட நறைவண்டு என்றார், இது தும்பி; இரும்—பெரிய;வாசனைமிக்க நீர் பாய்ந்த தால் நாற்றுகளும் மணக்கின்றன. வயல்களின் இந்த நறு மணத்தைத் தேனீக்கள் விரும்புகின்றன என்றபடி; கேரள நாடு—சேரநாடு.

வீறுமணக்கும் – பெருத்து விளங்கும்; மேருக் குவடு – மேரு மலைச் சிகரம், செவிலியின் நகில்கள் இவ்வாறு உருவகிக்கப் படுகின்றன; சந்தச் சேறு – (செவிலியர் தம் மார்பில் பூசியுள்ள) சந்தனக்குழம்பு; மதலாய்—குழந்தையே.

நாடுடையாய்! மதலாய்! செழியா! மகீபா! சிறுபறை கொட்டுக என்பது முடிபு.

பெய்மா ரிஎனம துத்துளி பொதுளிப்
பிறழும் சோலைஎனப்
பெருகுப னித்திவ லைக்கங் குல்எனப்
பெருமுத் தாநதிதோய்
மைமால் விழியின்ம டந்தையர் ஓதி
வனத்தைச் சாதகமும்
வண்டுநி லாமுக் கியும்அடி தொடரும்
மகதைத் திருநாடா!
எம்மால் வரைகளும் எக்கடல் அகலமும்
எத்திசை எத்தீவும்
எக்கா லமும்ஒரு காலத் தன்மை
எனக்கவி யும்கவிகைச்
செம்மால்! தியாகத்து எழுமு வள்ளால்!
சிறுபறை கொட்டுகவே!
செழியா தாகந் தீர்த்தம கீபா!
சிறுபறை கொட்டுகவே! 77

77. பா.வே. 3:11,12 கவி அம்கவிகைச்

பெய்மாரி – பொழிகின்ற மழை; மதுத்துளி – தேன் துளிகள்; பொதுளிப் பிறழும் – நிரம்பித் தெளிக்கும்; பனித் திவலைக் கங்குல்–குளிர்ந்த பனித்துளிகளை உடைய இரவு, இருள்.

மைவிழி, மான் விழி எனத் தனித்தனி இயையும்; ஓதி – கூந்தல்; முத்தாநதி தோய் மடந்தையர் ஓதி வனத்தை மாரி எனச் சாதகமும், சோலை என வண்டும், கங்குல் என நிலா முக்கியும் அடிதொடரும் என நிரல்நிறையாக்குக; நிலாமுக்கி– சக்கரவாகப் புள், இது நிலவை உண்டு வாழும் என்பர்.

மால் வரை – பெரிய மலை; எக்காலமும் ஒரு காலத்தன்மை என – இயற்கையின் உற்பாதங்கள், பகைவர் படையெடுப்பு போன்ற நிலைமைகள் ஏற்பட்டாலும் செழிப்பும் அமைதியும் மிக்க காலத்தைப் போன்ற தன்மையையே கொண்டு; கவியும்– பொதுமக்களைக் காப்பாற்றுகின்ற என்பது குறிப்பு.

செம்மால்–சிறந்தவனே; தியாகத்து – கொடையில்; எழு மூ வள்ளால் – மூவேழு வள்ளல்களை நிகர்த்தவனே, முதல் ஏழு வள்ளல்கள்; குமணன், சகரன், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி; இடையெழுவர்–அக்குரன், அந்திமான், அரிச்சந்திரன், கன்னன், சந்திமான், சிசுபாலன், தந்தவக்த்ரன்; கடையெழுவர்– எழினி, ஓரி, காரி, நள்ளி, பாரி, பேகன், மலையன்.

மகரச் சலதிப் பருதிக் குருதி
மலைப்பம லைக்கும்அரா
மாணிக் கங்களும் ஆணிக் கனகமும்
வயிரக் குவைஎவையும்
குகரக் கிரியின் கரியின் கோடு
கொடுக்கும் நித்திலமும்
கொடுவரி யும்கைக் கோளரி யும்சத
கோடிகு டாவடியும்
முகரக் கவியும்மு சுக்கலை யும்கலை
மொய்க்கும் மறிப்பிணையும்
மூரிம யூரமும் ஆரமும் ஆர
முகந்துசு ழித்துஇழியும்
சிகரத்து அருவிப் பாரிக் கிரியாய்!
சிறுபறை கொட்டுகவே!
செழியா தாகந் தீர்த்தம கீபா!
சிறுபறை கொட்டுகவே! 78

78. மகரச் சலதி–சுறாமீன்களுக்கு இருப்பிடமாகிய கடல்; பருதி–சூரியன்;குருதி–உதிரம்; மலைப்ப:உவம உருபு;மலைக்கும்–போரிடுகின்ற; அரா – நாகப்பாம்பு; ஆணிக் கனகம் – உயர்ந்த பொன்; குவை–குவியல்;கடல் போன்ற நீலஒளி வீசும் வைரங்கள், சூரியனைப் போலப் பிரகாசிக்கும் ஆணிப்பொன், இரத்தம் போற்சிவந்த நாக மாணிக்கங்கள் என எதிர் நிரல்நிறையாக்குக; சலதி பருதி என்னும் சொற்களையடுத்துச் செய்யுளோசை நோக்கி வல்லொற்று மிக்கது.

குகரம்–குகை;குகரக் கிரி–குகைகளை உடைய மலை;கரியின் கோடு–யானைத் தந்தம்;நித்திலம்–முத்து; கொடுவரி–புலி; கைக் கோளரி–சினத்தையுடைய சிங்கம்; சதகோடி–நூறுகோடி, மிகப் பல என்க; குடாவடி–கரடி.

முகரக் கவி–குரங்கில் ஓர் இனம் போலும்; முசுக்கலை–முசு என்னும் இனத்தைச் சேர்ந்த ஆண்குரங்கு; கலை மொய்க்கும்–ஆண்மானைச் சூழ்ந்து திரியும்; மறப்பிணையும் – பெண்மான் களும்; மூரி–பெரிய; மயூரம்–மயில்; ஆரமும்–சந்தனமரங்களை யும்; ஆர–நிரம்ப; முகந்து–மொண்டு; இழியும்–(மலையிலிருந்து) இறங்குகின்ற.

இழியும் அருவிச் சிகரத்துப் பாரிக்கிரியாய் என மாறுக, இறங்குகின்ற அருவிகளுக்கு இடமான கொடுமுடிகளைப் பெற்ற பாரிமலையை உடையவனே.

மாணிக்கங்களும், கனகமும், வயிரக்குவை எவையும், நித் திலமும், கொடுவரியும், கோளரியும், குடாவடியும், முகரக் கவியும், முசுக்கலையும், மறிப்பிணையும், மயூரமும், ஆரமும் ஆர முகந்து சுழித்து இழியும் அருவிச் சிகரத்துப் பாரிக்கிரியாய் என இயையும். இம் மலைபடு பொருள்களால் குறிஞ்சிவளம் கூறப்பட்டவாறு.

பேசக் கிளவிப யிற்றிய காலைப்
பிணைக்கண் ணியர்நீலப்
பெருவடம் நாவல் கனிஎன வந்து
பிடிக்கும்ம டக்கிளிமுன்
வாசத்து இருகைம றிப்பவெ ருக்கு
வரிக்கண்வி ழித்தஎனா
வயிறு ரியவண்டு அலைகண்டு அலைவிடு
மகதைத் திருநாடா!

பாசத்து உறவுக்கு உறவே! அறவோர்
பகைமைக்கு ஒருபகையே!
பத்திக்கு உருகிய பத்திக் கடலே!
பாரத கண்டம்எனும்
தேசத்து அரசர்க்கு அரசே! வாழிய!
சிறுபறை கொட்டுகவே!
செழியா! தாகந் தீர்த்தம கீபா!
சிறுபறை கொட்டுகவே! 79

79. கிளவி–சொற்கள்; கிளவி பேசப் பயிற்றிய காலை என மாறுக, கிளிக்குப் பேசக்கற்றுக் கொடுக்கும் போது; பிணைக் கண்ணியர் – மானின் விழிகளைப் போன்ற கண்களை உடைய மகளிர்; நீலப் பெருவடம்–பெரிய நீலமணிகளாலான மாலையை,

வாசத்து–மணமிக்க; மறிப்ப – தடுக்க; வெருக்கு – வெருகு, காட்டுப்பூனை; வரிக்கண்–கோடுகளை உடைய விழி; வயிடூரிய வண்டு –வைடூரிய மணிகள் பதிக்கப்பெற்ற வளையல்கள்; வண்டு அவை : அவை பகுதிப்பொருள் விகுதி; அவை விடு–மாலையின் நீலக்கற்களை விட்டுவிடுகின்ற; பெண்களின் மாலையிலுள்ள நீல மணிகளைக் கிளிகள் நாவற்பழம் எனக் கருதிக் கொத்த முயல் கின்றன. அப்போது பெண்கள் தம் இருகைகளாலும் தடுக் கிறார்கள் அவர்களின் கைவளைகளிலுள்ள வைடூரியங்கள் பூனையின் கண்களைப் போல் தோற்றமளிப்பதால் கிளிகள் அஞ்சிப் பின்னடைகின்றன. கிளிகள் கனிகளைக் கொத்துவதும் பூனைக்கு அஞ்சுவதும் இயல்பு: மயக்க அணி.

அறவோர் பகைமை – சான்றோரால் வெறுத்து நீக்கப்பட்ட பண்புகள்; வாழிய: மங்கலப்பொருளில் வந்த முன்னிலையசை.

தானைத் தொகுதிகள் சூழ்வர வரும்அங்–
தாலப் பெயர்உடைமைத்
தலைமைக் கேசரி அரியத வத்தின்
அளித்துத் தரணிபர்ஆம்
ஆனைக் கடல்விடு சிங்கக் குருளாய்!
அவனிக் குலமதலாய்!
அன்றுஉலகு ஏழும்அ ளந்தாய்! இன்றுஎமை
ஆளத் தனிவந்தாய்!

சோனைப் புயலைத் தொடரப் படரும்
சோலைப் பிலவங்கம்
சொரியும்வ ருக்கைச் சுளைமுக் கிச்சுளை
விக்கலும் அச்சுளையின்
தேனைப் பருகித் தெளிவள நாடா!
சிறுபறை கொட்டுகவே!
செழியா! தாகந் தீர்த்தம கீபா!
சிறுபறை கொட்டுகவே! 80

80. தானை— படை; அந்தாலன்—தாகந்தீர்த்த செழியனின் தந்தை; கேசரி—சிங்கம்; தரணிபர்—அரசர்.

கேசரி அளித்து தரணிபர் ஆம் ஆனைக்கடலில் விடு (கின்ற) சிங்கக் குருளை என்க; ஆனைக்கடல்—யானைக்கூட்டம், பற்பல மன்னர்கள்: உருவகம்; சிங்கக்குருளை — இளஞ்சிங்கம்; அவனிக் குலம்—வேளாளர்மரபு; உலகு ஏழும் அளந்தது திரிவிக்ரம அவதார காலத்தில்.

சோனைப்புயல்—விடாமல் மழை பொழியும் மேகம்; சோலைகள் மேகங்களைத் தொட்டுக்கொண்டிருந்தன என்றபடி; பிலவங்கம்—குரங்கு; சொரியும் — (பலாப்பழங்கள் தாமே வெடித்து) உதிர்க்கும்; வருக்கைச் சுளை—பலாச்சுளை; முக்கி—வாய் நிறைய அடைத்துக் கொண்டு.

தெளி—விக்கலைத் தீர்த்துக் கொள்கின்ற.

கங்கர்க்கு அடுபுலி குடகர் கடாரி
கடாரர்க மூத்துஇடறும்
கரடக் கடகரி குகிரர்கு டாரிகன்—
னாடகர் குலமறலி
வங்கர்க்கு அசனிவ டக்கர்தம் வடவை
மலுக்கர் உயிர்காலன்
மகதர்சி காமணி அவனிபு றங்கடை
மந்தா கினிமருமான்
சங்கத் தரளத் திரளிற் கோவையர்
தம்இரு கட்பாவை
சலதிப ணித்தக வுத்துவம் மால்ஜ
தருத்தரு மச்சோலை

திங்கட் குழவிதி ருப்பா லைக்குஇறை
சிறுபறை கொட்டுகவே!
செழியா தாகந் தீர்த்தம கீபா!
சிறுபறை கொட்டுகவே! 81

சிறுபறைப்பருவம் முற்றிற்று

81. பா.வே. 3:12 தருமச் சாலை

அடுபுலி — போரிடுகின்ற கொடுவரியைப் போன்றவன்; கடாரி — குத்துவாள், கட்டாரி என்பதன் இடைக்குறை; கரட கட கரி — கவுளிலுள்ள தொளையின் வழியாக மதத்தைப் பொழிகின்ற யானை; குடாரி — அங்குசம்; குலமறலி—மரபிற்கு இயமன்அனையவன்.

அசனி—இடி; வடவை—கடலின் நடுவில் உள்ள வடவா முகத் தீ; அவனி புறங்கடை மந்தாகினி — நில உலகத்திற்கு வெளியே உள்ள கங்கை, இது மேல் உலகத்திலிருந்து பகீரதனால் கொணரப் பட்டதாதலின் இவ்வாறு கூறினார்; மருமான்—மரபினன்.

சங்க தரள திரளின் கோவையர்—சங்குகளையும் முத்துகளை யும் கோத்து மாலையாக்கி அணிந்துள்ள மகளிர், செவிலித் தாயர்; கட்பாவை — கண்ணின் மணியனையவன்; சலதி—கடல்; பணித்த—கொடுத்த; கவுத்துவம் — (பாற்கடலில் தோன்றியதும் திருமாலின் மார்பில் இடம் பெற்றுள்ளதுமாகிய) கௌஸ்துப மணி; மால் ஐ தரு—பெருமை மிக்க ஐந்து தெய்விக மரங்கள், அவையாவன: அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம், இவை சுவர்க்கத்திற்குரியவை; தருத் தருமச் சோலை— மரங்கள் நிறைந்த ஈகைத் தன்மை மிக்க பொழில், கற்பக விருட்சம் ஒன்றே பொதுவாக வள்ளல்கட்கு உவமையாகும், ஆனால் செழியதரையன் பஞ்ச தருக்களும் நிறைந்த சோலையை நிகர்த்த கொடையாளி என்றவாறு.

திங்கட்குழவி — பிறைச்சந்திரனைப் போன்று எழிலும், குளிர்ச்சியும், தொழுது காண வேண்டிய பெருமையும் வாய்ந் தவன் என்றபடி.

அடுபுலி முதல் இறை முடிய உள்ள பதினைந்தும் அண்மை விளி, எனவே இயல்பாய் நின்றன.

சிற்றிற்பருவம்

பன்னிரு சீர் ஆசிரிய விருத்தம்

பைம்பொன் குயிற்று மணிமதிலும்
பருமுத்து ஒளியின் மாளிகையும்
பருதித் தலைக்கோ புரநிலையும்
பருமா ணிக்கத் திருஇருப்பும்
அம்பொன் சுடரும் சுடர்க்கலமும்
அளத்தற்கு அரிய பரிகலமும்
அனைத்தும் உனைத்தந்து அளித்தபிரான்
அளிப்ப வாங்கி யவன்வாங்க
வெம்பொன் குவித்த திரள்குவையும்
வேதக் கடவுள் நெடுநாளும்
வேலா வலையத் தனிக்கோலும்
விறலும் கொடுத்த திறல்உலகைச்
செம்பொன் பரப்பும் சிவனடியாய்!
சிறியேம் சிற்றில் சிதையேலே!
செழியா தாகந் தீர்த்தானே!
சிறியேம் சிற்றில் சிதையேலே! 82

82. உலகாபுரியில் அந்தாலன் செய்த சிவாலயத் திருப்பணி பற்றிக் கூறப்படுகிறது.

மணிகள் குயிற்றிய பைம்பொன் மதில் என்க; பரு முத்து– பெரிய நித்திலம்; பருதித் தலை – சூரியனைத் தன் முகட்டில் பெற்றுள்ள, வானளாவிய என்றபடி; திரு இருப்பு–புனிதமான இருக்கை, தேவாசனம்.

சுடரும் சுடர்க்கலம் – ஒளிரும் ஒளியையுடைய தகைகள்; பரிகலம் – இறைவன் நிவேதனப் பொருள்களை வைக்கும் பாத்திரம்; உனைத்தந்தளித்த பிரான்–தந்தை, அந்தாலன்; மதில் முதலியவற்றை அந்தாலன் அளிப்ப அவற்றைப் பொன் பரப்பீசர் வாங்கிக் கொண்டு பதிலாக அந்தாலன் பெறும்படி பின்வருவனவற்றைத் தந்தார் என்றவாறு: பரிவருத்தனையணி.

வெம்பொன் – விரும்பத்தக்க தங்கம்; வேதக் கடவுள் நெடு நாள் – கடவுள்தன்மை வாய்ந்த மறைகளால் விதிக்கப்பட்ட

ஆயுளாகிய நூறாண்டு, 'வேதநூற் பிராயம் நூறு' என்பார் ஆழ்வாரும் (திருமாலை.); வேலாவலயம்—உலகம்; தனிக்கோல்—பிறருக்கு உட்படாத சுயாட்சி; விறல்—வலிமை; உலகை—உலகியல் நல்லூர்; ஒப்புமை: 'பொன்பரப்பு நாதற்குச் சேயதிருக் கோபுரமும் மாமதிளும் கோயிலும் மண்டபம் மாபுரமும் தேரும் மணிமறுகும் தீபமும் நந்தா வனமும் நளினத் திருக்குளமும் கந்தா அளகக் கணிகையரும் நந்தா விழாவும் சிறப்பும் விமானமும் செம்பொன் குழாமும் பிறவும் கொடுத்து வழாமொழியும் சீறாத் திருமுகமும் செந்தமிழும் சந்ததியும் மாறாப் பெருவாழ்வும் வாங்கினோன்' (தாலந்தீர்த்த செழியன் மஞ்சரி. 183—188)

''மறைபுகழும் கங்காத ரேசர்இயல்
வாழ்க்கைக்கும் வரத ராசர்
செறிகருணை வாழ்க்கைக்கும் உளமகிழப்
பெருங்கோவில் சிறப்பின் ஈந்து
விறல்பெருகு தன்னுடைய அரசாட்சி
வாடகையை மிகவும் பெற்றான்
மறுவில்கலை வலன்உலகா புரன்கங்கா
தரச்செழியன் மன்னர் ஏறே''
(செழியதரையன் பஞ்சதந்திரம். 6)

செம்பொன் பரப்பும் சிவன்—உலகாபுரத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் திருநாமம் பொன்பரப்பீசர் என்பது; தாகந் தீர்த்த செழியன் சிறந்த சிவபக்தன் என்று சிறப்பிக்கப்படுகிறான்.

இறைவன்பால் அன்புகொண்டவனாகிய நீ உள்ளத்தில் இரக்கம் இல்லாமல் சிறுபெண்களாகிய நாங்கள் இழைக்கும் சிற்றிலைச் சிதைத்தல் அறமாகாது என்பது குறிப்பு.

நிவக்கும் குடுமித் தலைதொடுத்த
நிலாமுத்து ஒளிரும் திருத்திலகம்
நெகிழ்ந்தது அறியாய் அருமந்த
நிறத்தா மரைக்கோ மளமுகத்தின்
உவக்கும் திருச்செவ் வியைக்குறுவேர்வு
ஒளிப்பது அறியாய் களிப்புஅடங்காது
உலகை உருக்கும் திருமேனி
ஒளிபோர்த் தியதூ ளியைஅறியாய்
துவக்கும் படிக்கிண் கிணிஅரைஞாண்
சோர்வது அறியாய் சதங்கையுடன்
சுடர்த்தண் டையின்கண் பரிவுஅறியாய்
துணைச்சே வடிக்குஇப் படிதகுமோ?

சிவக்கும் செழும்போது என்றுஅறியாய்
சிறியேம் சிற்றில் சிதையேலே!
செழியா தாகந் தீர்த்தானே!
சிறியேம் சிற்றில் சிதையேலே! 83

83. நிவக்கும் குடுமித்தலை — உயர்ந்துள்ள கூந்தலில்; தொடுத்த—அணிவித்துள்ள; நிலாமுத்து ஒளிரும்—மதியைப் போலும் முத்தைப்போலும் விளங்கும்; திருத்திலகம்—அழகிய நெற்றிப் பொட்டு; நெகிழ்ந்தது—இடம் பெயர்ந்து விட்டதை; அருமந்த—அருமையான; கோமள—மென்மையான.

உவக்கும்—விரும்பப்படும்; திருச்செல்வி—புனிதமான பொலிவு; உலகை உருக்கும்—உலகத்தினர் உள்ளத்தைக் கரைக்கும்படி பேரெழில் வாய்ந்த; திருமேனியின் ஒளியைத் தூசி மூடிவிடுகிறது.

துவக்கும்படி—(மீள ஒரு முறை) கட்டவேண்டிய படி; சோர்வது—(இடையிலிருந்து) நழுவி விழுதல்; கண்: ஏழன்உருபு; பரிவு—துன்பம்; சிற்றிலை உதைப்பதால் சதங்கையும் தண்டையும் துன்புறுகின்றன என்றவாறு.

போது—மலர், இங்குத் தாமரை.

செழியதரையனே! நீ எம் சிற்றிலைச் சிதைப்பதால் உன் ஒப்பனை கலைகிறது; உன் சதங்கையும் தண்டையும் அடிபடு கின்றன; உன் திருவடிகள் மென்மையான தாமரையன்றோ? அவற்றால் இப்படி எம் சிற்றிலைச் சிதைத்தல் அறமாகுமோ? ஆகாது. எனவே சிதைக்காதே என்பது கருத்து.

அய்யா உனது திருவடிக்கீழ்
அடியேம் இரப்பது எதுகொடுஎன்று
ஐயுற்று அருளேல் மிதிலையிற்போம்
அளவில் கிடந்த சிலைகடுப்பக்
கையால் வினையேம் சிறுமனையாய்ப்
புனைந்த கணமா ணிக்கம்உன்
கமலப் பதத்தால் சதகோடிக்
கயல்கண் மடவார் ஆயினும்ஆம்
உய்யா உலகம் பதினான்கும்
உலகா யதமே மிகினும்மிகும்
உம்பர் கதிவேட்டு இம்பர்செயும்
உலப்பில் முனிவர் எனப்புகலும்

செய்யார் தவங்கோ டினுங்கோடும்
சிறியேம் சிற்றில் சிதையேலே!
செழியா தாகந் தீர்த்தானே!
சிறியேம் சிற்றில் சிதையேலே! 84

84. சிலை கடுப்ப–(சாபத்தால் அகலிகை கல்லாக மாறிக் கிடந்த அந்தக்) கல்லைப் போன்று.

மாணிக்க கணம் என மாறுக, பல மாணிக்கக் கற்களை வைத்து மகளிர் சிற்றில் இழைக்கின்றனர் என்றவாறு; சதகோடி– நூறுகோடி, எண்ணற்ற என்பது கருத்து; உன் கால் பட்ட உடனே ஒரு கல் அகலிகை ஆயிற்று, அதே போல் நாங்கள் சிறுவீடு கட்டப் பயன்படுத்தியுள்ள மாணிக்கங்கள் ஒவ்வொன்றும் ஒரு பெண்ணாக மாறிடவும் கூடும்.

உலகாயதம்-பெண்ணின்பமே பேரின்பம் என்னுங் கொள்கை; 'சுதைஅமு தேஎனத் துய்த்திடு நீரார்க்கு இதம்மிக நல்குவது இம்மையின் முத்திக் கதியருள் கிற்பது காமர் உலோகா யதமென வேநெறி யொன்றுள தன்றே, 'அச்சம யத்தலை யாற்றிடை நின்றே எச்சமில் வீடுபெற்று இன்புறு கின்றோர் மெச்சியல் ஆடவர் மேலதை ஈவோர் நச்சுறு கூர்விழி நாரியர் தாமே' (கந்தபுரா. தேவகாண். இந்திரபுரிப். 23, 24.); உம்பர்கதி வேட்டு–மேலுலகப் பதவிகளை நாடி; இம்பர்–இவ்வுலகில்; உவப்பு இல்–குறைகள் இல்லாத, ஆசை, வெகுளி, மயக்கம் முதலிய குறைகளற்ற என்றவாறு; செய்யார்–செப்பமானவர்கள் சிறந்தவர்கள்; உலப்பில் முனிவர் எனப்புகலும் செய்யார் உம்பர் கதிவேட்டு இம்பர் செயும் தவம் கோடினும் கோடும் என இயையும்.

கோடுதல்–தவறுதல்; கணக்கற்ற பேரழகிகள் தோன்றி விட்டால் எல்லா உலகங்களிலும் உலோகாயத சமயமே பரவி விடுவதோடு தவசிகளின் தவநெறியும் கெட்டுவிடக்கூடும் என்பது கருத்து. எனவே எம்மீது இரக்கம் இல்லாவிடினும் உலகில் இறைவழிபாடும், தவமும் நிலைத்திருக்கவாவது எங்கள் சிற்றிலைச் சிதைக்காமலிருக்க வேண்டும் என்றவாறு.

பருவப் பிடிபின் பிடிக்கும்நடைப்
பதுமைப் பதும முகைச்சாந்தின்
பராகம் உனது திருமார்பில்
படினும், புவிமான் கொடிமருங்குல்

வெருவப் பணைக்கும் பணைமுலையின்
விரைத்தூ ளிஅதுஉன் வரைத்தோளின்
மிசைபோக் கினும்கண்டு அசைந்துஅசைந்து
விரைந்து திருப்பால் கடல்புடைபோய்
உருவத் திரைக்கைத் திவலைஎறிந்து
எறிந்து துடைத்துத் துடைத்துஉலவாது
உவக்கும் அருமைத் திருமேனி
உலாப்போம் களிற்று மதநாற்றத்
தெருவில் துகளும் அணைவதுவோ?
சிறியேம் சிற்றில் சிதையேலே!
செழியா தாகந் தீர்த்தானே!
சிறியேம் சிற்றில் சிதையேலே! 85

85. பருவப்பிடி – இளமையையுடைய பெண்யானை; பின் பிடிக்கும்–பின்பற்றும்; பதுமை–திருமகள்; திருமகளின் நடையைப் பார்த்துப் பிடி அப்படியே நடந்து நடை பழகுகிறது என்றபடி; பதும முகை–தாமரை மொட்டுப் போன்ற நகில்கள்: உவம ஆகு பெயர்; சாந்தின் பராகம் – (நகில்களின் மீது பூசப் பெற்றுள்ள) சந்தனக் கலவையின் தூள்; புவி மான்–நிலமகள்; கொடி மருங்குல்– பூங்கொடியைப் போன்ற இடை.

வெருவ–அஞ்ச; பணைக்கும் – வீங்குகின்ற; பணைமுலை – திரண்ட நகில்கள், விரைத்தூளி அது – வாசனைப்பொடி: அது பகுதிப்பொருள் விகுதி; வரைத் தோளின்மிசை – மலை போன்ற புயங்களின் மீது; அசைந்து அசைந்து–அவ்விடத்தை விட்டு நீங்கி.

திரை உருவக்கை என மாறுக, பொருள் வெளிப்படை; திவலை–தூளி; உலவாது – குறையாமல்; உலவாது உவக்கும் – மிக மகிழும்; உலாப்போம்–(வீதியில்) ஊர்வலமாகச் செல்கின்ற; களிற்று – ஆண்யானையின்; மத நாற்ற – மதப்பெருக்கால் துர் நாற்றம் வீசுகின்ற.

திருமகள், நிலமகள் ஆகியோரின் கலவைச் சாந்தணிந்த நகில்களாகிய யானைகளின் தூசியையே விரும்பாத நீ தெருவில் திரியும் மதநாற்றம் பிடித்த ஆண்யானைகளின் கால் தூசியில் அளையலாகுமா என்ற நயம். தெருவில் மத நாற்றக் களிறுகள் உலா வருகின்றன என்றதால் செழியனின் நகரச் சிறப்பும் பழிப்பது போலப் புகழப்பட்டது: இலேச அணி.

பொருந்தும் திறையில் பொறையன்விடப்
போந்த தந்தா வளத்தந்தம்
புறத்து வழுதித் துறைத்தரளம்
புலிஏறு உயர்த்த புவிவேட்ப
விருந்தின் பணிக்கோ மான்கொணர்ந்த
விழுச்சீ தனத்து மாணிக்கம்
விரவித் திருத்தும் திருத்தொட்டில்
மிசைத்தாய்ப் படுக்கும் படுக்கையதோ?
பரிந்தும் புகழ்ந்தும் அணைத்துஎடுக்கும்
பால்தாய் மடியோ? படர்முலையோ?
பாலைப் பதிஅந் தாலன்இரு
மாலைப் பொருப்போ? தெருப்பலவும்
திரிந்துஉன் பதம்சேக் கவும்தகுமோ?
சிறியேம் சிற்றில் சிதையேலே!
செழியா தாகந் தீர்த்தானே!
சிறியேம் சிற்றில் சிதையேலே! 86

86. பா.வே. 2:2,3 பணிக்கோ மகன்

பொருந்தும் திறை– இவ்வளவு செலுத்தப்படவேண்டும் என்னும் ஆணைக்குப் பொருந்திய கப்பம்; பொறையன்–சேரன்; தந்தா வளம்–யானை; வழுதி–பாண்டியன்; தரளம் – முத்து; புலி ஏறு உயர்த்த புவி–சோழ நாடு; வேட்ப–விரும்பியவாறு, சோழனின் விருப்பப்படி என்பது கருத்து.

விருந்தின் – மகத நாட்டிற்கு விருந்தினனாக வந்த; பணிக்கோமான்–சோழனின் அரசியல் உயர் அலுவலர்;விழுச்சீதனத்து– சிறந்த சீர்வரிசையாகிய;புலிஏறு உயர்த்த புவி வேட்ப விருந்தின் பணிக்கோமான் விழுச்சீதனத்துக் கொணர்ந்த மாணிக்கம் என்ற சொற்றொடர் செழியதரையன் மரபில் யாரேனும் ஒருவர் சோழர் மரபில் வந்த ஓரிளவரசியை மணந்து கொண்டிருக்கலாமோ எனக் கருத வைக்கிறது. செழியதரையனின் தொட்டிலில் மூவேந்தர்களும் திறையளித்த மும்மணிகளும் பதிக்கப்பட்டு உள்ளன; படுக்கை அதோ–(எங்கள் சிற்றில்) உன் படுக்கையோ.

பால்தாய் – முலைத்தாய், பாலூட்டி வளர்க்கும் செவிலி; மாலைப் பொருப்பு – மாலைகளை அணிந்துள்ள மலை போன்ற புயங்கள்.

பல தெருவும் திரிந்து என மாறுக;பதம்—கால்கள்;சேக்கவும்—சிவக்கவும்,

எம் சிற்றில் மணிகளிழைத்த தொட்டிலிலுள்ள நின் சேக்கை அன்று; செவிலியரின் மடியும் நகிலும் அன்று; அந்தாலனின் புயங்க ளன்று; அங்கெல்லாம் உன் கால்கள் படத்தகும்; நாங்கள் வீதி யில் சிற்றில் இழைத்து விளையாடுகிறோம்; அதைச் சிதைத்து உன் கால்களில் தெருப்புழுதி படலாகுமோ? ஆகாது எனவே எம் சிற்றிலைச் சிதையற்க என்றவாறு.

கோலத் திரள்வண் டலம்பாவைக்கு
ஒருவர்க்கு ஒருவர் மணம்புணர்ப்பேம்;
குலநித் திலம்கொண்டு அலங்கரிப்பேம்;
கொடிமுல் லையில்பந் தரும்எடுப்பேம்;
சாலத் தவள மணற்சிறுசோறு
அடுவேம்; வதுவைத் திரட்குஇடுவேம்;
தடங்கொன் றையின்பொன் மாதளையின்
மாணிக் கம்சீ தனம்கொடுப்பேம்;
ஆலத் தியும்பல் விளக்கும்உயர்
பவளக் கமலத் தால்இழைப்பேம்;
அருத்த மருங்கு பெரிதழைப்பே
மாகப் புகுந்தேம்; ஆகையினால்
சேலத்து உலகா புரத்துஅரசே!
சிறியேம் சிற்றில் சிதையேலே!
செழியா தாகந் தீர்த்தானே!
சிறியேம் சிற்றில் சிதையேலே! 87

87. கோல—அழகிய; திரள்—நிறைய உள்ள; வண்டல் அம்பாவைக்கு—விளையாட்டுப் பொம்மைகளில்: வேற்றுமை மயக்கம்; குல நித்திலம்—உயர்ந்த முத்து.

தவளச் சிறுசோறு, மணற் சிறுசோறு சால இடுவேம் எனத் தனித்தனி இயையும்; தவள—வெண்மையான; சால—நிறைய; வதுவைத்திரட்கு—திருமணக் கூட்டத்திற்கு; கொன்றை மலர் களைப் பொன்னாகவும் மாதுளை வித்துகளை மாணிக்கங்களா கவும் சீர் தருவோம்.

பவளத்தால் ஆலத்தி இழைப்பேம், பல்விளக்கு கமலத்தால் இழைப்பேம் என நிரல்நிறையாக்குக: கமலம்—தாமரைமலர்;

அருத்த—(உனக்கும்) விருந்து படைக்க; பெரிது அழைப்பேமாக—வருந்தி அழைக்கின்றவர்களாக: வினையாலணையும் பெயர் மருங்கு — (உன்) அருகே; புகுந்தேம் — வந்தோம், யாம் சிற்றிலிழைத்துப் பொம்மைக் கலியாணம் செய்து படைக்கும் விருந்தில் கலந்து கொள்ள வேண்டுமென வருந்தி அழைக்கின்ற வர்களாக வந்துள்ளோம்; நீ வந்து திருமணத்தைச் சிறப்பிக்க வேண்டும்; சிற்றிலையே சிதைத்துப் பாழ்செய்துவிடக் கூடாது; இஃது உன் பெருந்தன்மைக்கு இழுக்கு என்பது கருத்து.

சேலம்—சின்ன சேலம்; புணர்ப்பேம் முதலிய தன்மைப் பன்மை வினைகளுக் கெல்லாம் சிற்றிலிழைத்து விளையாடும் சிறுமியராகிய நாங்கள் என்பது தோன்றா எழுவாய்.

பாரக் கருமக் கரம்இழைத்த
பதனப் புரிசைப் புதவமோ?
பரதத் தவரும் வத்தவரும்
பரந்து கரந்த பொருப்புஅரணோ?
வீரக் கருநா டகத்தவரும்
விதேகத் தரும்போம் உததியோ?
விதர்ப்பத் தவரும் யாதவரும்
வெருவிப் படரும் பெருங்காடோ?
கோரத்து அபயர் நெடிதுஉறையும்
உறந்தைப் பதியோ புகார்நகரோ?
கோப்பாண் டியர்தம் மதுரையோ
கொற்கைப் புரியோ குமரியோ?
சேரக் குலத்தர் மலாடுகொலோ?
சிறியேம் சிற்றில் சிதையேலே!
செழியா தாகந் தீர்த்தானே!
சிறியேம் சிற்றில் சிதையேலே! 88

88. பாரக் கரும—பெரிய பெரிய வேலைகளைச் செயவல்ல; கரம் இழைத்த—கைகளால் செய்யப்பெற்ற: பதன—பாதுகாவல மைந்த; புரிசை — மதில்களில் உள்ள; புதவமோ — கோட்டை வாயில்களோ; பரதத்தவர்—பரதவர், தென்னாட்டைச் சேர்ந்த குறுநில மன்னருள் ஒருவர்; வத்தவர் — வச்ச நாட்டு அரசர்; பரந்து—பரவி; கரந்த—ஒளிந்துள்ள;பொருப்பு அரண்—மலையரண்,

விதேகத்தர்—விதேக நாட்டு மன்னர்; உததி—கடல்; வெருவி—அஞ்சி.

கோரத்து—கோரம் என்னும் பட்டத்துக் குதிரையை உடைய; அபயர்—சோழ மன்னர்; உறந்தைப்பதி—உறையூர்; புகார் நகர்—காவிரிப்பூம் பட்டினம்; கோப் பாண்டியர் – தலைமை பெற்ற பாண்டியர்; குமரி—குமரிமுனை.

மலாடு—மலைநாடு; எம் சிற்றில் கைவல்ல வல்லுநர் கட்டிய கோட்டையன்று; உன் பகைவர்களின் கரந்துறையிடமன்று; அவர்கள் நகரங்களுமன்று; அவற்றையெல்லாம் நீ அழித்தல் தகும்; இதை ஏன் வீணே சிதைக்க விழைகிறாய், வேண்டாம் விட்டுவிடு என்பது கருத்து.

சொல்லால் சுருங்கிப் பொருள்பரந்து
சுவையில் குறையாப் பிறர்துளக்காத்
துறையில் பிழையா பழையர்நிழல்
கீழ்ப்போய் நுழையாத் தொடைபிறழாக்
கல்லாக் கருத்திற் குணம்அணவாக்
கருகா வெளிறா வைதருப்பம்
கவுடம் கோடா அலங்காரக்
கதியில் கலங்கா வினைவிலங்கா
நல்லார்க்கு இதயம் மறுதலையா
நடந்து நடைதாழ்ந்து இடைமடங்கா
நலத்திற் கவிஞர் நல்குரவோ?
நல்கும் திறைதந்து அடிவணங்கச்
செல்லாப் பகைஞர் செல்வமோ?
சிறியேம் சிற்றில் சிதையேலே!
செழியா தாகந் தீர்த்தானே!
சிறியேம் சிற்றில் சிதையேலே! 89

89. நல்ல கவிதை எப்படி இருக்க வேண்டும் எனக் கூறப் படுகிறது.

பிறர் துளக்கா—மற்றவர்கள் கூறியதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்காமல் புதியனவாகக் கூறவேண்டும்

என்றபடி; துறையில் பிழையா—எடுத்துக் கொண்ட பொருளில் தவறு நேர்ந்துவிடாமல், அகப்புறத் துறைகள் மட்டுமன்றிச் சமயம், தத்துவம், சோதிடம், மருத்துவம் போன்ற துறைகளிலும் பிழை வரலாகாது என்றவாறு; பழையர் நிழல்கீழ்ப் போய் நுழையா—முன்னோர்களின் சொற்களையும் பொருள்களையும் அப்படியப்படியே திருடித் தன்பாடலாக அமைக்காமல்; (இன்றியமையாத இடங்களில் பெரும்பயன் கருதி முன்னோர் தொடர்களை எடுத்தாளல் தவறன்று; இங்குக் குறிப்பிடப்படுவது திறமையற்ற போலிப் புலவன் பிறர் கவிகளைத் தனதாக்கலை); தொடை பிறழா—எதுகை முதலிய யாப்பியல் தொடைகளில் பிழையின்றி.

கல்லாக் கருத்தில் குணம் அணவா—சிறந்த நூல்களை நிரம்பக் கற்றிராத இளம்புலவர்களின் உள்ளத்தில் தன் சிறப்பைக் காட்டாத, சிறந்த கவிதையின் சிறப்பைப் பெரும்புலவர்களே உணர முடியும், மற்றையோர் அறியார் என்றபடி; கருகா—பொருள் என்னவென்றே தெரியாதபடி மிகக்கடினமாக இருக்கலாகாது; வெளிறா—மிகவும் வெள்ளையாகவும் வெறும் உரை நடையாகவும் அமையலாகாது; 'குச்சிலிய மாதர் குயமும் குவலயத்தோர் மெச்சு தமிழ்மாதர் வியன்முலையும் — சிச்சீ தெலுங்க மடமாதர் சிங்காரக் கொங்கைக் கலிங்கம் என வேசொல் கவி' என்னும் தனிப்பாடல் இங்குக் கருதத்தக்கது.

வைதருப்பம், கௌடம் என்னும் செய்யுள் நெறிகள் தண்டியலங்காரம் பொதுவியலுள் விளக்கப்பட்டுள்ளன; கோடா—மேற்சொன்ன நெறிகளிலிருந்து மாறுபடாமல்; அலங்காரக் கதியில் கலங்கா—அணிகளின் இயல்பான போக்கில் குழப்பம் ஏற்படாமல்; வினை விலங்கா—ஒரு எழுவாயின் வினை பிறிதொன்றைச் சேர்ந்து மாறுபாடடையாமல், அல்லது சொல்ல எடுத்துக்கொண்ட காரியத்தை விட்டுவிட்டு வேறு காரியங்களை விவரித்துக் கொண்டிராமல் எனினும் அமையும்.

நல்லார்க்கு—இலக்கியப்பயிற்சி மிக்க சான்றோர்க்கு; இதயம் மறுதலையா—உள்ளத்தில் தீய உணர்வுகளை ஏற்படுத்தாத. கற்றாரே என்றாலும் நல்லுணர்வு இல்லாத புன்புலவர் அழுக்காற்றால் நல்ல கவிதைகளிலும் குற்றங்காண்பர்; அத் தீயோரை நீக்க நல்லார்க்கு என்றார்; நடந்து—தொடங்கிச் சிறிது கம்பீரமாகச் சென்று; நடை தாழ்ந்து—பிறகு நடையில் தொய்வு ஏற்பட்டு; இடைமடங்கா—இவ்வாறு இடையிடையே தொய்வு ஏற்படாத: நலம்—மேற்கூரிய செய்யுட்சிறப்புகள்; சிறந்த கவிஞர்களின் வறுமையை அழித்தல் உனக்குத் தக்கசெயல் ஆகும்; எம் சிற்றிலை ஏன் வீணே அழிக்கிறாய் என்றபடி.

உனக்குச் செலுத்த வேண்டிய கப்பத்தைச் செலுத்தி உன்னை வணங்காத பகைவர்களின் செல்வத்தைச் சிதைப்பது அழகு; எம் சிற்றிலைச் சிதைக்க வேண்டாம் என்றவாறு.

சொல்லிற்சுருங்கிப் பொருள்பரந்து சுவையில் குறையா நலம், பிறர் துளக்கா நலம், துறையில் பிழையா நலம், பழையர் நீழல்கீழ்ப் போய் நுழையா நலம், தொடை பிறழா நலம், கல்லாக் கருத்தில் குணம் அணவா நலம், கருகா நலம், வெளிறா நலம், வைதருப்பம் கவுடம் கோடா நலம், அலங்காரக் கதியில் கலங்கா நலம், வினைவிலங்கா நலம், நல்லார்க்கு இதயம் மறு தலையா நலம் நடந்து நடைதாழ்ந்து இடைமடங்கா நலம் எனத் தனித்தனி இயையும்; நலம் இறுதி விளக்கு.

பிரியாப் பிடிக்குத் தேன்ஒடித்துப்
பிழியப் பொழியும் கடாக்களிறு
பெருங்கோ டரத்தை ஒசிப்பமிசைப்
பிரசம் பறவைத் திரள்பறந்தும்,
அரிஆர் மும்மை மதக்கரியின்
அடல்கோடு எடுத்துக் கொடிச்சியர்தாம்
அறையில் கறையில் குங்குமகா
ரகிலை இடித்த பொடிசூழ்ந்தும்
முரியாச் சுடுகா மரமடுக்கும்
முதுசந் தனஇந் தனப்புகைபோய்
முழுதும் பரந்தும், பொழுதுகரந்து
இரவும் பகலும் முறைதிறம்பித்
தெரியாச் செழும்கொல் லியஞ்சிலம்பா!
சிறியேம் சிற்றில் சிதையேலே!
செழியா தாகந் தீர்ந்தானே!
சிறியேம் சிற்றில் சிதையேலே! 90

90. பிரியாப் பிடி – (ஆண்யானையை விட்டு) அகலாத பெண்யானை; தேன்–கரும்பு; கோடரம்–மரக்கொம்பு; ஒசிப்ப–முறிக்க; மிசை–உயரத்தில்; பிரச அம் பறவைத்திரள்–வண்டுகளாகிய அழகிய பட்சிக்கூட்டம்; வானில் கரிய நிற வண்டுகள் படாமிட்டது போல் பறப்பதால் இரவு போல் தோன்றுகிறது.

அரி–வண்டுகள்; ஆர்–பொருந்துகின்ற; மும்மை மதக்கரி–தன்ன மதம், கபோல மதம், பீஜமதம் என மூன்று மதங்களை

உடைய யானை; அடல்கோடு–வலிமையான தந்தம்; கொடிச்சியர்–குறிஞ்சிநில மகளிர்; அறை – மலையுச்சி; கறை – உரல்; குங்குமம் – ஒரு மரம், வாசனைப் பொருள்; காரகில் – கருப்பு நிறமுள்ள அகில்மரம்; மலையுச்சியில் குறத்தியர் உரலில் குங்குமத்தையும் கார்அகிலையும் போட்டு யானைத் தந்தங்களால் இடிக்கின்றனர்; இதனால் கரிய தூசி படர்ந்து பகலை இரவாக மயங்க வைக்கிறது.

முரியா–முரித்து, ஒடித்து; சுடு காமரம்–பொருள்களைச் சுட வைக்கின்ற அடுப்பு:வினைத்தொகை, அடுக்கும்–(அடுப்பில்) ஒன்றன்மேல் ஒன்றாக வைக்கும்; முது சந்தன–நன்கு முதிர்ந்த சந்தனக் கட்டையாகிய; இந்தனம்–விறகு; சந்தன விறகின் புகை பரந்து பகலை இரவாக்குகிறது; கரந்து–மறைந்து.

கொல்லி அம் சிலம்பு–அம்கொல்லிச் சிலம்பு, அழகிய கொல்லி மலை; சிலம்பா–மலையின் தலைவனே.

''பண்ணீர் கமழும் அமுதஇதழ்ப்
பவளக் கொடிஒப் பவர்முழ்கிப்
பனிநீர் கமழும்; அகில்கமழும்
படுவில் கழுநீ ரொடுகமலக்
கள்நீர் கமழும்; கயிரவம்தேன்
கமழும்'' எனப்போய்ப் படிபோகக்
கடிகா உறங்கிப் புயல்இறங்கிக்
கமலம் பொழியும் காலம்எலாம்
வள்நீர் கமழும் கனிகாரம்
மரவம் குரவம் செருந்திகுந்தம்
வழைமா துளங்கம் வகுளம்முதல்
வனப்பூ அனைத்தும் முத்தாதித்
தெள்நீர் கமழும் தமிழ்நாடா!
சிறியேம் சிற்றில் சிதையேலே!
செழியா தாகந் தீர்த்தானே!
சிறியேம் சிற்றில் சிதையேலே! 91

சிற்றிற்பருவம் முற்றிற்று.

91. பண்நீர் கமழும்–இசைத்தன்மை மிளிரும்; பனிநீர்–தண்ணீர்; அகில்–பெண்கள் தலைக்கூட்டிய அகிற்புகை; படு–குளம்; கழுநீர்–குவளை,

கள்நீர்—தேன் ஆகிய திரவம்; கயிரவம்—ஆம்பல்மலர், படி, போகம், கடி என்பனவற்றைத் தனித்தனியே கா என்பதனோடு கூட்டுக; படிகா—மேகங்கள் படிகின்ற சோலை; மிக உயர மானவை என்றபடி; போகக்கா – இன்பந்துய்த்தற்கு உரிய இடமாகிய சோலை; கடிகா—மணமிக்க சோலை; புயல்—மேகம்; கமலம்—நீர்; புயல் ''பண்நீர் கமழும்......தேன் கமழும்'' எனப் படி போக கடிகா போய் இறங்கி உறங்கிக் கமலம் பொழியும் காலமெலாம் எனச் சொற்களைக் கொண்டு கூட்டுக.

கனிகாரம் —கன்னிகாரம், கோங்க மலர்; மரவம்—கடம்ப மலர்; குரவம்—குரா மலர்; செருந்தி—பொன்னிறமான ஒரு மலர்; குந்தம்—காட்டுஎலுமிச்சை; வழை—சுரபுன்னை; மாதுளங்கம்—மாதுளை; வகுளம்-மகிழம்பூ; வனப்பூ—காட்டில் மலர்கின்ற பூக்கள்; முத்தநதி—மணிமுத்தாறு.

புயல் கமலம் பொழியும் காலமெலாம் முத்தநதித் தெள்நீர் வனப்பூ அனைத்தும் கமழும் தமிழ்நாடா என இயையும்.

சிறுதேர்ப்பருவம்

பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

தெருட்டு மனத்தரு மன்தொழுது ஏவத்
தேவப் புரிபொருவும்
திருஅத் திரிபுத் துரியோ தனன்முன்
தேயத் தாயத்தின்
பொருட்டுந டந்துஎழு பாரா வாரப்
பூபா ரம்தீரப்
பொருபற் குனனுக்கு ஒருசா ரதியாய்ப்
புகுவனன்ன னப்புகுநாள்
வெருட்டும்அ ரக்கன்மு டித்தலை தத்தி
விழக்கோல் கடவுகையால்
வீரக் கவனப் பாரத் துரக
மிசைக்கோல் கடவிவிடாது
உருட்டு பெருந்தேர் காணேம் காண
உருட்டுக சிறுதேரே!
உலகைத் தாகந் தீர்த்தரு ரேசன்
உருட்டுக சிறுதேரே! 92

92. தெருட்டு மன—தெளிவான மனத்தை உடைய, தனக்குத் தீமையே செய்த துரியோதனனிடம் சினம்கொள்ளாமல் அரசியல் அறம் நோக்கித் தூது அனுப்புவதால் இவ்வாறு கூறினார்; தேவப்புரி—தெய்வலோகத்தின் தலை நகரமாகிய அமராவதி; பொருவும்: உவம உருபு; அத்திபுரி—அத்தினாபுரம்; தேயத்தாயம்—தேசத்தில் தனக்குவர வேண்டிய பங்கு.

பாராவாரம்—கடல்; எழு பாராவாரப் பூ—எழு கடல்களால் சூழப்பெற்ற உலகம்; பூ பாரம்—உலகத்தில் தீமைப்பெருக்கத்தால் நிலமகளுக்கு ஏற்படும் பெருஞ்சுமை; பொரு பற்குனன்—போரிடு கின்ற அருச்சுனன்; ஒரு சாரதி—ஒப்பற்ற தேரோட்டி.

வெருட்டும் அரக்கன்—அச்சுறுத்தும் இராவணன்; முடித் தலை—கிரீடங்களை அணிந்த தலைகள்; தத்தி விழ—சிதறிவிழ; கோல்—அம்பு; கடவு—செலுத்துகின்ற; வீர—அஞ்சாமை மிக்க; கவன—வேகமாகச் செல்கின்ற; பார—பெரிய; துரகம்—குதிரைகள்; துரகமிசைக்கோல் கடவி—குதிரைகளைச் சவுக்கால் ஓட்டி; சுக்கிரீவன் வீடணன் போன்ற இளவரசர்களும, இலக்குவன், அநுமன் போன்ற மாவீரர்களும் கொண்ட படையின் தனித் தலைவனாக இருந்து இராவணனைக் கொன்ற திருமால் ஓர் இளவரசனாகிய விசயனுக்குத் தேரோட்ட முன்வந்த எளிமை கருதி இதனை விதந்து உரைத்தார்.

காணேம் காண—(நீ பெருந்தேர் கடவியதைக்) காணாதவர்க ளாகிய நாங்கள் பார்க்குமாறு: வினையாலணையும் பெயர்; நரேசன்—மன்னன்; திருமாலின் அம்சமான செழியதரையா! இராவணனின் தலைகளை அம்பெய்து உருட்டிய திருக்கைகளால் நீ அருச்சுனனின் தேர்க் குதிரைகளை ஓட்டியதை நாங்கள் காண வில்லை. அப் பேறு பெறாத எங்களுக்காக நீ தயவுசெய்து சிறுதேர் உருட்ட வேண்டும் என்பது கருத்து.

செருவரு நிருதன் சிரகரம் ஒருமுப்
பதுதே ரொடும்உருளச்
சிசுபா லன்கஞ் சன்தட முடிஅவர்
தேரொடும் உருளப்போய்
மருவரும் இருதோள் வலிகொடு உருட்டி
வரச்சர யுக்கரையில்
மணியமு னைக்கரை யில்கோ சலைதன்
மகன்தே வகிமகவாய்ப்

பொருவரும் உருவம்எ டுத்துஓர்அ`யோத்திப்
பொன்மறு கினும்மதுரா
புரிமறு கினும்விளை யாடிஉ ருட்டிய
பொற்சிறு தேர்அன்றைக்கு
ஒருவரும் அறியோம் இன்றைக்கு அறிய
உருட்டுக சிறுதேரே!
உலகைத் தாகந் தீர்த்தந ரேசன்
உருட்டுக சிறுதேரே! 93

93. செருவரு–போருக்கு வருகின்ற; நிருதன் – அரக்கன் ஆகிய இராவணன்; சிர கரம்–தலைகளும் கைகளும்: உம்மைத் தொகை; முப்பது–பத்துத் தலைகளும் இருபது கைகளும்; சிசுபாலன்–சேதிநாட்டு மன்னன், பாண்டவர்களின் இராஜசூய வேள்வியில் கண்ணபெருமானால் அழிக்கப்பட்டவன்; கஞ்சன்–கம்சன், கண்ணனின் தாய்மாமன், அவனால் கொல்லப்பட்டவன்; தடமுடி–பெரிய கிரீடம்.

மருவ அரும்–கிடைத்தற்கரிய; வலி–வலிமை; வரச் சரயு–புனிதமான சரயு நதி, அயோத்தியில் பாய்வது; மணி யமுனை–அழகிய யமுனையாறு, வட மதுரையில் பாய்வது; தேவகி–வசுதேவரின் மனைவி, கண்ணபிரானைப் பெற்ற தாய்.

பொருஅரும் – இணையற்ற; பொன் மறுகு–அழகிய தெரு, செல்வம் நிறைந்த வீதி எனினுமாம்; செருவரு நிருதன் சிரகரம் ஒருமுப்பதுதேரொடும் உருளச் சரயுக் கரையில் கோசலைதன் மகனாய்ப் பொருவரும் உருவம் எடுத்து ஓர் அயோத்தி பொன் மறுகின் அன்றைக்கு விளையாடி உருட்டிய பொற் சிறு தேர் எனவும், சிசுபாலன் கஞ்சன் தடமுடி அவர் தேரொடும் உருளப் போய் மருவரும் இருதோள் வலிகொடு உருட்டி வர மணி யமுனைக்கரையில் தேவகி மகவாய்ப் பொருவரும் உருவம் எடுத்து ஓர் மதுராபுரி மறுகின் அன்றைக்கு விளையாடி உருட்டிய பொற் சிறு தேர் எனவும் தனித்தனியே நிரல்நிறையாக்குக.

நீ இருமுறை சிறுதேருருட்டியுள்ளாய்; எனினும் யாம் அதைக் காணப் பெற்றோமில்லை; எனவே எமக்காக இன்னம் ஒரு முறை செழியனாகிய இந்த அவதாரத்தில் சிறுதேர் உருட்டுக என்பது கருத்து.

தண்சிறு மகவாய் மகவான் ஈனத்
தமனிய லோகத்தார்
தங்கள்ச யந்தன்உ ருட்டிய வாறு
தனித்தனி கண்டிலரோ?
வண்சிறு முளையாய் மாயன்அ ளித்தனும்
வைகுந்தப் பதியார்
மாரன்உ ருட்டுகை கண்டில ரோநம்
வையமும் உய்யாதோ?
விண்சிறு தேரைஉ ருட்டிய கதிரை
விலக்கும் மலர்க்காவின்
வேரைஉ ருட்டிவ ரால்உக ளத்தலம்
விழுமுக் கனிபொழிதேன்
ஒண்சிறு தேரை உருட்டிய நாடன்!
உருட்டுக சிறுதேரே!
உலகைத் தாகந் தீர்த்தந ரேசன்!
உருட்டுக சிறுதேரே! 94

94. தண்—குளிர்ந்த, இங்கு மகிழ்ச்சியளிக்கின்ற; மகவான்—மேகங்களுக்குத் தலைவனாகிய இந்திரன்; தமனிய லோகம்—பொன்னுலகு, தேவலோகம்; சயந்தன்—இந்திரனின் மகன்; தனித்தனி—ஒவ்வொருவரும்.

வண்—வளப்பம் மிக்க, இங்கு அழகிற் சிறந்த; முளை—மகன்; மாயன் — திருமால்; மாரன் — மன்மதன், இவன் திருமாலின் மைந்தன்; நம் வையம்—நாம் வாழும் நிலவுலகம்; உய்யாதோ—ஒரு தெய்விகக் குழவியால் சிறுதேரோட்டப் பெறாதோ என்பது குறிப்பு; அந்தாலன் இந்திரனையும் திருமாலையும் போன்றவன் என்பதோடு இச் செழியன் சயந்தனுக்கும் காமனுக்கும் இணையானவன் எனவும் சுட்டுகிறார்.

விண்—வானில்; கதிரை—சூரியனை; சோலை மிக உயர்ந்து கதிரவனின் தேர்ச் செலவைத் தடுக்கிறது என்றபடி; அத்தகைய பெருமரங்களும் வரால் மீன்கள் உகளுவதால் வேரோடு சாய்கின்றன; தலம் விழு—நிலத்தில் வீழ்கின்ற; முக்கனி—மா, பலா, வாழை.

ஒண்—அங்கு மிகுதியாக உள்ள; தேரை—ஒருவகைத் தவளை; தேரைகள் முக்கனிகளின் தேனை உண்டு திகட்டியதால் அதை உருட்டி விளையாடுகின்றன.

சுவைஅத் தனையும் சொரிமுத் தமிழ்நரும்,
மதுரச் செயிரியரும்,
சுருதித் தலைவரும் மிருதித் தவரும்
துயரத் திடைஇடையப்
பைவயக் குருதிப் பருதிஉ டற்றப்
பதறிக் கார்தவறிப்
பைங்கூழ் உலறிப் பசிதெறு காலப்
பகைஅட ரத்தொடர்நாள்
அபயப் புகலுக்கு ஒருதென் திசையில்
செழியனை அன்றிவடக்-
கானதி சைக்கண் சேலத் திலும்உள
அந்தா லன்தவம்ஆம்
உபயச் செழியன்எ னப்புகழ் செழியன்
உருட்டுக சிறுதேரே!
உலகைத் தாகந் தீர்த்தந ரேசன்
உருட்டுக சிறுதேரே. 95

95. சுவை – கலையின்பம்; முத்தமிழ்நர் – இயல், இசை, நாடகத் தமிழ்க் கலைஞர்; மதுர – இனிய; செயிரியர் – இசைக் கருவிகளை வாசிப்பவர்கள், முற்கூறியது பாடகர்களை; சுருதி– வேதம்; சுருதித்தலைவர்–அந்தணர்; மிருதி–ஸ்ம்ருதி, நீதி நூல்கள்; மிருதித்தவர்–ஸ்ம்ருதி நூல்களில் கூறப்பட்டவாறு துறவொழுக் கத்தைத் தவறாமல் கடைப்பிடிக்கும் துறவிகள், ஸ்மார்த்த சந்யாசிகள்; இடைய–வருந்த.

பை – ஒளி வீசுகின்ற; வய – வலிமை மிக்க; குருதி – செந் நிறமான; பருதி–சூரியன், குருதி வயப்பைப் பருதி என இயையும், உடற்ற – துன்புறுத்த, வெய்யில் மிகுதியாகி என்பது கருத்து; கார் தவறி–மழை பொய்த்து; பைங்கூழ்–பசிய பயிர்கள்; உலறி– உலர்ந்து; தெறு – கொல்லும்; காலப்பகை – பஞ்ச காலமாகிய பகைவன்; அடர–அடிப்பதற்காக.

அபயப்புகல் – தஞ்சமடையத்தக்க புகலிடம்; தென்திசைச் செழியன் என்றது பாண்டியனை; வடதிசை என்றது தமிழ் நாட்டின் வடபகுதியான மகதமண்டலத்தை.

உபயச்செழியன் – இரட்டைச்செழியன், பாண்டியனைவிட இருமடங்கு மேலானவன் எனக் கருதுகிறார் போலும்.

அந்தாலந்தீர்த்தான் என்பது அந்தகாலம் தீர்த்தான் என்பதன் மரூஉ ஆகும் எனவும், இவன் தான் வாழ்ந்த நிலப்பகுதிக்கு (உலகத்திற்கு) வந்த தீங்கைப் போக்கியதனால் அந்தகாலம் தீர்த்தான் எனப் பெற்றான் எனவும், அந்தகாலம் என்றால் முடிவுகாலம் போன்று அழிவு நேர்ந்த பெரும் பஞ்சகாலம் என்று கொள்ளலாம் எனவும் கருதுவதற்கு இப் பாடல் இடந்தருகிறது. இப் பிள்ளைத்தமிழின் ஈற்றிலுள்ள வாழிவிருத்தம் இக்கருத்துக்கு அரண் செய்கிறது. இவ்வாறு அந்தகாலந்தீர்த்தவன் இந்த அந்தாலனல்லன்; இவன் முன்னோருள் ஒருவன் ஆகலாம் என்பது இந்நூல் முகவுரையில் விளக்கப்பட்டுள்ளது.

இப்பாடலின் எதுகை சிறப்பாக அமையவில்லை.

இரட்டையாசிரியவிருத்தம்

நிறைதரத் தெரிதமிழ்க்கு ஒருகும்பன் முதுகிட்டு
நிலைமலைக் கமழ்சந்தமும்,
நித்தம்வச னித்தலுக்கு உரகேசர் இப்பெரு
நிலம்புக்கு மாணிக்கமும்,
அறைதரத் தொலைதரா அழகிற்கு அனங்கவேள்
அங்கைக் கரும்புமலரும்,
ஆழிபோல் வாழ்வுக்கு இயக்கர்மன் பணிலத்தின்
அம்புசா தத்தின்நிதியும்,
முறைதரச் சொரிகின்ற கருணைக்கு வருணனார்
முடிசுமந்து ஆர்முத்தமும்,
முத்தமிழ்க்கு உதவுபேர் உதவிக்கு இடைந்துஓடி
முகில்வேந்து நகுமுத்தமும்,
திறைதரப் பெருகுதிரு வேங்கிடவன் மெய்த்துணைவ!
சிறுதேர்உ ருட்டியருளே!
தியாகதா கந்தீர்த்த செழியபூ பதிவாழி!
சிறுதேர்உ ருட்டியருளே! 96

96. கும்பன் – அகத்தியர்; முதுகிட்டு – தாகந்தீர்த்தானின் புலமைக்குத் தோற்றுப் புறமுதுகுகாட்டி ஓடிப் பொதிகையில் நிலைத்திருக்கிறாராம்; சந்தம்–சந்தனம்; கும்பன் முதுகிட்டு கமழ் சந்தமும் திறைதரப் (4ஆம் அடி) பெருகு என இயையும்; மாணிக்கம் முதலாக இனி வருவனவும் இவ்வாறே; வசனித்தல்–உரையாடுதல்; உரகேசர்–பாம்புகளின் மன்னர்.

அறைதர—சொல்ல, தொலைதரா—இயலாத; அனங்கவேள்—உடலில்லாதவனாகிய மாரன்; இயக்கர்மன் — யட்சர்களின் அரசனாகிய குபேரன்; பணிலத்தின் நிதி, அம்புசாதத்தின் நிதி எனத் தனித்தனி இயையும், சங்கநிதி, பதுமநிதி.

வருணனார் — மேற்குத் திசைக்கும், நெய்தல் நிலத்திற்கும் உரிய கடவுள்; முகில் வேந்து — மேகங்களுக்குத் தலைவனாகிய இந்திரன்; நகு—ஒளிர்கின்ற.

திருவேங்கிடவன் — தாகந்தீர்த்த செழியனுக்கு நேர் இளையவன், அந்தாலனின் இரண்டாவது மகன்.

தவக்கும் குமக்கொங் கைபாகன்தி ருக்காது
தனதுகவி யால்சிவப்பத்
தான்வழங் கும்கனக மாரிவா ரிச்சுருதி
தாரணர் கரம்சிவப்பப்
பவக்கும் பர்தென்கலைப் பாடலைப் பாடிஅப்
பாவலோர் வாய்சிவப்பப்
பதுமபீ டத்திருப் பீடம்ஆம் மார்பகப்
பணைசிவக் கும்துணையதோ?
துவக்கும் பரித்தானை யானையில் பொருகளச்
சோரியில் புவிசிவப்பத்
தொடுகடல் படுவும்சி வப்பஇப் படிகோடி
தொல்வேந்தர் தேயம்தொறும்
சிவக்கும் கடைக்கண் இருள்நீக்கி னான்முனவ!
சிறுதேர்உ ருட்டியருளே!
தியாகதா கந்தீர்த்த செழியபூ பதிவாழி!
சிறுதேர்உ ருட்டியருளே! 97

97. தவ—மிகுதியாக; குங்கும — செஞ்சாந்து பூசப்பெற்ற; கொங்கை—நகில்களையுடைய உமாதேவியார்;பாகன்—மாதொரு பாகனாகிய சிவபெருமான்; சிவபெருமானைத் துதித்து அவர் செவிகளைக் குளிர்வித்து என்பது கருத்து; கனகமாரி — பொன் மழை; சுருதி தாரணர் — வேதங்களைத் தாங்கியுள்ளவர், அந்தணர்; கைகள் பரிசுப் பொருள்களை ஏந்திச் சிவக்குமளவு பெருங்கொடை வழங்குவான் என்றபடி.

பவக் கும்பர்—கும்ப பவர் என மாறுக, குடத்தில் பிறந்தவர், அகத்தியர்; தென்கலை — தமிழ்; அப் பாவலோர் — அத் தமிழ்ப்

புலவர்: பண்டறிசுட்டு: பதும பீடத் திருப்பீடம் – தாமரையை இருக்கையாகப் பெற்றுள்ள திருமகளின் இருப்பிடம். செழியனைத் திருமாலாகக் கொண்டு அவன் மார்பில் திருமகள் இருப்பதாகக் கூறப்படுகிறது; பணை–பெருமை; சிவக்கும் துணையதோ என்றது இறைவன் செவி, அந்தணர் கரம், பாவலோர் வாய், தன் மார்பு சிவப்பது மட்டும்தானா, அன்றன்று வேறும் உள என்ற பொருளில்.

துவக்கும்–கட்டப்படுகின்ற; பரித் தானை–குதிரைப்படை; சோரி–உதிரம்; படு–பள்ளம்; கோடி–மிகப்பல என்பது கருத்து.

செழியனின் கடைக்கண் சிவந்தால் தொல்வேந்தரி தேயந் தொறும் பொருகளச் சோரியில் புவி சிவக்கும் என்க. இருள் நீக்கினான் – அந்தாலனின் மூன்றாவது மைந்தன், தாகந்தீர்த் தானின் இரண்டாவது தம்பி.

மாகரன் திரிசிரன் இருபதுத டங்கரனை
வாகைகொள் முகத்துஇமகரன்
மகிதலக் குலநதிக் குலகிரித் தினகரன்
மனோகரன் குணசாகரன்
மோகரன் சமரவீ ரோதயன் வரோதயன்
முத்தமிழ்க் கும்போதயன்
முனையுடைப் படைகண்ட சேவகன் சேவித்த
மூவேந்தர் கவிதாதரன்
ஆகரன் பலகலைக்கு அகிலலோ காதிகன்
அணிகொள்முத் தாநதீசன்
ஐம்பத்துஓர் ஆறுஎனும் தேசரா (சர்கள்பணி
அக்கிரன் நவமணிமுடிச்)
சேகரன் புரிசைஉல காபுரிப் புரவலன்
சிறுதேர்உ ருட்டியருளே!
தியாகதா கந்தீர்த்த செழியபூ பதிவாழி!
சிறுதேர்உ ருட்டியருளே! 98

98. பா.வே. 1:5 வாகான

மா–பெரிய; கரன், திரிசிரன் – விசிரவசுவின் நான்காவது மனைவியான இராகையின் மைந்தர், இவரின் இரண்டாம்

மனைவியான கைகேசியின் மைந்தர்களே இராவணன் முதலிய மூவர், இவ்வகையில் இராவணனின் தம்பியர், பஞ்சவடியில் இராம லக்குவருடன் பொருது மாண்டவர்; இருபது தடம் கரன்–இருபது பெரிய கைகளை உடைய இராவணன்; முகத்து இமகரன்–இமகர முகத்தன் என மாறுக, சந்திரனைப் போன்ற முகத்தை உடையவன்; மகிதல–உலகத்தில் உள்ள; குலநதிக் குலகிரி–மிகச் சிறந்த நதியாகிய கங்கையின் மரபு என்னும் குன்றிலுதித்த; கங்கை மரபு 'உதயகிரியாகவும் செழியன் கரியனாகவும் உருவகிக்கப்பட்டவாறு; தினகரன் – சூரியன்; மனோகரன் – மற்றவர் மனங்களைக் கவாவல்லவன்; குண சாகரன் – நற் பண்புகள் நிறைந்த கடலனையவன்.

மோகரன்–பெருஞ் சினத்தை உடையவன்; சமரவீரோதயன்–போர் வீரர்களிடையே கரியனைப் போன்று பிரகாசிப்பவன்; வரோதயன்–தெய்வத்தின் அருளால் பிறந்தவன்; கும்போதயன்–குடத்தில் பிறந்தவராகிய அகத்தியர், தமிழறிவில் அகத்தியனைப் போன்றவன் என்றபடி; சேவகன் – பெருவீரன்; கவிதாதரன்–கவிதைகளைப் பெற்றவன், மூவேந்தராலும் பாடல் பெற்ற ஆறகழூர் வாணனைப்பற்றி முன்னர்க் கூறப்பட்டது.

பலகலைக்கு ஆகரன் என இயையும், ஆகரன் – உறைவிடமானவன்; அகில லோக அதிகன்–உலகத்தார் அனைவரிலும் உயர்ந்தவன்; முத்தாநதீசன் – மணிமுத்தாற்றின் தலைவன்; அக்கிரன்–முதன்மையானவன்; நவமணிமுடி – நவ ரத்தினங்கள் இழைத்த கிரீடம்.

சேகரன் – தலையை உடையவன், முடியையணிந்தவன் என்றவாறு; புரிசை–மதில் சூழ்ந்த; புரவலன்–அரசன்.

விழியருட் பொழிவென் றமாலையிட் டானும்
வியக்கும்அப் பையமன்னனும்
வில்லவே ணிக்குஅடிமை நல்லநா யகனும்நூல்
வினாயரா யப்பிரானும்
ஒழிவுஅறத் திறைகொண்டு நவகண் டமும்கொண்ட
உடையான் கள்ப்பாளனும்
ஓங்குநா கணயனும் வேங்கிடவ னும்பதுமை
உரமேய பிரமேசனும்

பழிகழுவு பொற்குலத் திலதமொத் துளகளப்
பாளனும் வாளகிரியின்
பற்றுடைய சிற்றானும் வெற்றிஅம் திருவேங்க-
டேசனும்எ னப்படிதொழும்
செழியர்தம் வழிமுதல் பெரியோர்வ ழிக்குரிசில்!
சிறுதேர்உ ருட்டியருளே!
தியாகதா கந்தீர்த்த செழியபூ பதிவாழி!
சிறுதேர்உ ருட்டியருளே! 99

99. இப்பாடலில் தாகந்தீர்த்த செழியனின் முன்னோர்கள் குறிப்பிடப்படுகின்றனர். இவர்களின் வரலாறு தெரியாததால் அடைச்சொற்களின் கருத்து முழுமையாக விளங்கவில்லை.

மாலையிட்டான், அப்பைய மன்னன், நல்லநாயகன், ராயப்பிரான், உடையான் களப்பாளன், நாகணயன், வேங்கிடவன், பிரமேசன், ஒருகளப்பாளன், சிற்றான், திருவேங்கடேசன் எனப் பதினொருவர் குறிப்பிடப்படுகின்றனர் இவர்கள் வரிசையாகத் தந்தையும் மைந்தனுமாக வருபவர்களோ அல்லது இடையில் சகோதர முறையினரும் உள்ளனரோ என அறியக்கூடவில்லை.

வில்வ வேணி—வில்வ இலைகளை உடைய சடையினர், சிவபிரான்; நூல் வினாய – இவன் கல்வியறிவில் தலை சிறந்தவன் போலும்; நவகண்டம் – ஒன்பது பூமிப்பிரிவுகள், அவையாவன: கீழ் விதேகம், மேல் விதேகம், வட விதேகம், தென் விதேகம், வட ரேபதம், தென் ரேபதம், வட பரதம், தென் பரதம், மத்திய கண்டம்; பதுமை உரம் மேய – திரு மகளை மார்பில் பெற்ற, திருமாலின் அம்சமான என்றபடி.

பழி கழுவு பொற்குலம் – பழையனூர் நீலி வரலாற்றால் சிறப்புற்ற வேளாளர் மரபு; வாளகிரி – சக்கரவாள மலை; படி தொழும்—உலகத்தார் வணங்குகின்ற;குரிசில்—பெருமை மிக்கவன்.

பெருஆர வாரத்தி ரள்கொல்லி மலையும்
பிறங்குசே ரச்சிகரமும்
பெரியபா ரிக்கிரியும் உரியமா மரகதப்
பெயர்வெற்பும் ஆனவெற்பன்

இருஆர முத்துஎறியும் முத்தாறி வாஆறு
எனும்பனித் துறையிறையவன்
எமதுஇருங் கேரளவள நாடுடன் மகதநாடு
என்கின்ற நாடுகிழவோன்
உருஆர மாளிகைப் பாலைசே லம்தனக்கு
உலகைக்கு மன்(னன்எனும்வேள்)
ஒலிநடைக் கவனமா மலிகடக் கரடமா
உழும்மேழி முப்பணைதனித்
திருஆணை கொண்டுஓர்எண் திசைகாத்த காவலன்
சிறுதேர்உ ருட்டியருளே!
தியாகதா கந்தீர்த்த செழியபூ பதிவாழி!
சிறுதேர்உ ருட்டியருளே; 100

100. பா.வே.2:5 எனும்பனித்த

பெரு ஆரவாரக் கிரள்–பெரிய ஒலிகள் திரண்டு ஒலிக்கின்ற; பிறங்கு – விளங்குகின்ற; சேரச் சிகரம் – சேரமலை; பாரிக் கிரி–பாரிமலை; மரகதப் பெயர்வெற்பு–பச்சை மலை.

பனித் துறை – குளிர்ந்த ஆறு; கேரள வள நாடுடன் எனக் கூறுவதன் கருத்தும் அதனை எமது இருங் கேரள வளநாடு என்பதன் காரணமும் விளங்கவில்லை: இரு சுவடிகளிலும் இவ்வாறே உள்ளது; இங்கு ஏதேனும் பிழை நேர்ந்திருக்கலாம் போலும்.

உருஆரமாளிகை–அழகிய முத்துகளால் அலங்கரிக்கப்பட்ட மாளிகை; உலகைக்கும் என்பதிலுள்ள உம்மையைப் பாலை• சேலம் இரண்டுடனும் கூட்டுக; வேள் – காமனைப் போன்ற அழகன்; ஒலிநடைச் கவன மா – ஒலிக் கவன நடை மா என மாறுக, காற்றைப்போல் கடுகி ஓடும் ஓட்டத்தை உடைய குதிரை; மலி கட கரட மா – மிகுதியான மதம் பாய் வதால் நிலைத்த சுவட்டினை உடைய யானை; மு – (குதிரை, யானை, ஏர் என்னும்) மூன்று ஆகிய, ஆணை செல்லுபடியாக இவை காரணமாகலின் இவற்றையே ஆணை என்றார்: உபசார வழக்கு. பணை–பெருமை மிக்க; தனி–ஒப்பற்ற.

மு, பணை, தனி, திரு ஆகிய நான்கும் ஆணைக்கு அடைமொழிகள்.

மறிதேன்நி கர்த்தகண் பாவையர்ம ரப்பாவை
வண்டலில் கொண்டுதேவர்
வந்துகாக் கென்றும்நீ செங்கீரை ஆடுஎன்றும்,
வைத்ததா லேலென்றும், நின்
எறிதேனின் மலர்க்கரச் சப்பாணி கொட்டுஎன்றும்,
இதழ்முத்தம் உதவுகென்றும்
எம்பிரான் வருகென்றும், அம்புலீ ஆடவா
இக்குரிசில் பக்கம்என்றும்,
உறுதேயம் எங்கணும் குறைஅறச் சிறுபறை
ஒலிக்கென்றும், வீதியில்நடந்து
ஓடுவது பாவித்துஅ ழித்திடேல் சிற்றிலை
உனக்குஅபயம் என்றும்வயிரச்
சிறுதேர்உ ருட்டுஎன்றும் மொழிகின்ற தமிழ்நாட!
சிறுதேர்உ ருட்டியருளே!
தியாகதா கந்தீர்த்த செழியபூ பதிவாழி!
சிறுதேர்உ ருட்டியருளே! 101

101. இப் பாடலில் ஆண்பாற் பிள்ளைத் தமிழ்க்குரிய பத்துப் பருவங்களும் வரிசையாகக் கூறப்படுகின்றன. தமிழ் நாட்டில் பெண் குழந்தைகள் மரப் பொம்மையை வைத்து விளையாடும் பொழுது பத்துப் பருவப் பாடுபொருள்களைக் கொண்டு விளையாடுவர் என்ற கூற்று மிகச் சிறப்பானது. தமிழ் இலக்கிய அமைப்பு மக்களின் வாழ்க்கையோடு ஒட்டியது என்பதை இப் பாடல் தெளிவிக்கிறது.

மறி—மான்; தேன்—வண்டு, இவை இரண்டும் விழிகளுக்கு உவமை; பாவையர் – சிறுமியர்; வண்டலில் – பெண்கள் விளையாட்டில்.

எறிதேனின் மலர் – சிந்துகின்ற தேனை உடைய தாமரை, கரங்களுக்கு உவமை; இதழ்—உதடு.

பாவித்து—பாவனை செய்து, தெருவில் இயல்பாக ஓடுவதாகப் பாசாங்கு செய்து வேண்டுமென்றே சிற்றில்களைச் சிறுவர் சிதைப்பதை நினைந்து கூறியது.

பாவையர் வண்டலில் மரப்பாவை கொண்டு, 'காக் கென்றும்.. .,சிறுதேர் உருட்டென்றும்' மொழிகின்ற தமிழ்நாட! தியாக! தாகந்தீர்த்த செழிய பூபதி! சிறுதேர் உருட்டியருள்! (நீ) வாழி என்பது பொருள் முடிபு.

வாழி

தார்வாழி! உலகுஉய்ய வந்தகா லக்கொண்டல்
அந்தகா லந்தீர்த்தவன்
தந்ததா கந்தீர்த்த செழியனும், இவற்குஉயிர்த்
தம்பிதிரு வேங்கடவனும்,
ஏர்வாழி! மற்றுஇவர்க்கு இளவல்ஆம் இருள்நீக்கும்
எம்பிரான் வாழி! இவனுக்கு
இனியஅநு சன்சட்டை யான்வாழி! இங்குஇவர்க்கு
இளையதீர்த் தவனும்வாழி!
சீர்வாழி! ஐவர்க்கும் உற்றதுணை ஆம்திருப்
பொன்பரப் பியநாதனும்
தினம்வாழி! சேலம், தி ருப்பாலை உலகைச்
செழும்பதி செழித்துவாழி!
பார்வாழி! பத்துஅரசர் கண்டு, 'கட் டாண்மையில்
படைகண்ட சேவகன்' எனப்
பரராசர் பாடும்இவர் விருதோடும் தமரோடும்
பதுமநா ளொடும்வாழியே!

தார்—வெற்றிமாலை, ஆகுபெயராக வெற்றியை உணர்த்துகிறது. அன்றிப் படைகள் எனினுமாம்; காலக் கொண்டல்—பருவமழை. இங்கும் கொண்டல் ஆகுபெயர்.

ஏர்—கலப்பை, முதலடியில் போர் வெற்றியை வாழ்த்தியவர் அடுத்து அதற்குக் காரணமான உழவுத் தொழிலை வாழ்த்துகிறார்; இளவல்—தம்பி; அநுசன்—இளைய சகோதரன்.

பொன்பரப்பிய நாதர்—உல்கை நகர்ச் சிவபெருமான்; தினம்—எக்காலத்தும், நிலைத்து என்றபடி.

பத்து அரசன் – பல மன்னர்கள் என்பது கருத்து; கட்டாண்மை – பெரு வீரர்; படை கண்ட சேவகன்—பல சேனைகளை வென்ற வீரன்; பர ராசர் – வேற்றரசர்களும்: உயர்வு சிறப்பும்மை தொக்கது; இவர் – தாகந்தீர்த்தசெழியன் முதலிய இந்த ஐவரும், இங்கும் முற்றும்மை தொக்கது; விருதோடும்—சிறப்புப்பட்டங்களோடும்; தமரோடும் – உறவினர்களுடனும்; பதும நாள் – கோடிகோடி (10^{14}) வருட ஆயுள், மிக நீண்ட வாழ்நாள் என்றவாறு.

தாகந்தீர்த்த செழியன் பிள்ளைத்தமிழ் முற்றிற்று

செய்யுள் முதல் குறிப்பகராதி

உரையில் எழுத்தாளப்பட்ட நூல்கள்

சொல்லடைவு

அந்தாலந்தீர்த்த
செழியதரையன்
மஞ்சரி

அந்தாலந்தீர்த்த செழியதரையன் மஞ்சரி

காப்பு

தேமாலை அந்தாலந் தீர்த்தசெழி யன்மீதில்
மாமாலை யேபுகழும் மஞ்சரிக்குப் – பூமாலை
தளித்தானைத் தானைமுகன் ஆதரித்த வானைக்
களித்தானை யானைமுகன் காப்பு.

தேம் மாலை—மணமிக்க பூமாலைகளை அணிந்துள்ள; மா மாலையே – (கிளவித்தலைவியாகிய அதிரூபவல்லி கொண்ட) சிறந்த காதலையே; மஞ்சரிக்கு—மஞ்சரியாகிய இச் சிற்றிலக் கியத்துக்கு; பூமால்—நிலமகளின் கணவனாகிய திருமால்; ஐது அளித்தான்—(உலகத்தை) எழிலுறப் படைத்தவனாகிய பிரமன்; நைத்தான் ஐமுகன் – (உலகத்தை) அழிப்பவனும், ஐந்து திரு முகங்களை உடையவனுமாகிய சிவபெருமான்; ஆதரித்த— போற்றிய; பூ என்ற சொல் மால், அளித்தான், நைத்தான் என்னும் மூன்றுடனும் இயையும்; மேற்கண்ட மூன்றிடத்தும் எண்ணும்மைகள் தொக்கன; வான் ஐக்கு அளித்தான்—தேவ லோகத்தின் மன்னனாகிய இந்திரனுக்கு அருள்புரிந்தவன், 'புரந்தரன் எந்தை பூசை புரிதரு பொருட்டால் ஈண்டுஓர் வரம்தரு காமர் தண்கா வைத்தனன் அதுநீர் இன்றி விரைந்தது பொழிவு மாழ்கி வெறுந்துகள் ஆதலோடும் இரந்தனன் புனல்வேட் டெம்மை இயல்புடன் வழிபட்டு இந்நாள்; ஆதலின் கொடிபோல் யாம்உன் னரும்புனல் குடிகை மீது காதலித் திருந்து மெல்லக் கவிழ்த்தனம்' என்பது வரலாறு. (கந்தபுராணம் II: 27–48,49); ஐ – தலைமையை உடைய; யானைமுகன்—விநாயகர்.

பூமாலும், (பூ) அளித்தானும், (பூ) நைத்தான் ஆகிய ஐம் முகனும் ஆதரிக்கின்ற யானைமுகன்; வான் ஐக்கு அளித்தான் ஆகிய யானைமுகன், ஐ யானைமுகன் எனத் தனித்தனி இயையும். யானைமுகன் மஞ்சரிக்குக் காப்பு என்பது பொருள் முடிபு.

இவ் வெண்பாவின் பிற்பாதியில் மடக்கணி இடம்பெற்றுள்ளது.

நூல்

அதிரூபவல்லியின் அருமை

பூமேவு தெய்வப் பொலன்கமலப் பொன்பொகுட்டின்
மாமேவு தண்துளப மார்பினான் – நாமேவு 1

எழுத்தும் பொருளும் எனவே உலகம்
வழுத்தும் படிகாத்த மாயோன் – முழுத்திகிரிக் 2

கையும் வலம்புரி அம் கையும் சிவவாமல்
மெய்யும் புணரி மெலியாமல் – வையம் 3

வருந்தாமல் ஆலம் மழுஉவந்தார் வாங்கி
அருந்தாமல் வந்த அமுதம் – கருங்கல் 4

உரையாத செம்பொன் உவட்டாத செந்தேன்
வரையாத சித்ரவடிவம் – கரையால் 5

அடைபடா மோகப்பேர் ஆறுஅறுகால் வண்டு
குடைபடா கற்பகப்பூங் கொம்பு – நெடியமறு 6

---

1. பொகுட்டின் – தாமரைக்கொட்டையில் அமர்ந்துள்ள; மா–திருமகள்; துளப–துழாய் மாலை அணிந்த.

2. வழுத்தும்படி–புகழுமாறு.

3. சிவவாமல் – செந்நிறமடையாமல்; புணரி மெய்யும் மெலியாமல்–கடலும் தன் உடல் வருந்தாமல்.

4. மழு உவந்தார்–மழுப்படையை ஏந்திய சிவபெருமான்; மழு உவந்தார் ஆலம் வாங்கி அருந்தாமல் எனக் கூட்டுக; பாற் கடலில் வந்த அமுதம் திருமால் கை சிவக்கக் கடைய, அதனால் கடலின் உடல் வருந்த, சிவபிரான் ஆலம் அருந்த வந்தது; ஆனால் அதிரூபவல்லியாகிய இந்த அமுதம் இத் தீமைகள் இன்றித் தோன்றிய தெள்ளமுது: நிந்தை உவமையின் அடிப்படையில் தோன்றிய உருவகம்; கருங்கல்–பொன்னின் மாற்றறியும் உரைகல்.

5. உவட்டாத–திகட்டாத.

6. வண்டு குடைபடா – வண்டுகளால் கவியப்படாத, தொளைக்கப்படாத எனத் தொனிக்கிறது; நெடிய–பெரிய; மறு–களங்கம்.

மான்ஆகம் ஈனாத மாமதியம் உள்வெருளும்
மாநாகம் ஈனாத மாணிக்கம் – கான்நாறு 7

செவ்வந்தி மாலை தினம்மாலை யேவளர்க்கும்
செவ்அந்தி மாலைச் சிறுதிங்கள் – பவ்வ 8

வனப்புவனம் மேவா மலரால் மயக்கும்
வனப்புவனம் மேவா மயூரம் – சினத்துஇடிக்கும் 9

வாரிஎழி லிக்கு மயங்காக் குயில்பெண்மை
வாரிஎழில் இக்கு மதன்வாழ்வு – சீர்இரதித் 10

தென்மலையத் தோடா செலும்காந்தள் அம்கானத்
தென்மலையத்து ஓடாச் சிறுதென்றல் – நன்மை 11

---

7. பா. வே. 2:4 கான்உலவா

ஆகம் நெடிய மான்மறு ஈனாத மா மதியம்–தன் உடலில் பெரிய மான் போன்ற களங்கத்தைத் தோற்றுவிக்காத சிறந்த சந்திரன்; உள் வெருளும்–(காண்பவர்களின்) உள்ளம் அஞ்சும்; மா நாகம்–பெரிய பாம்பு; கான்நாறு–மணம் வீசுகின்ற.

8. செவ்வந்தி மாலை–செவ்வந்திப் பூமாலை; தினம்–எப்போதும்; மாலையே–மயக்கத்தையே; செவ் அந்தி மாலை–செக்கர் நிறம் பெற்ற மாலைப்பொழுது; பவ்வ–கடலின்.

9. வனப்பு வனம்–அழகும் நிறமும்: உம்மைத்தொகை; மேவா–பெற்ற: செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம், மயக்கும் என முடிந்தது; இங்கு மலர் என்றது கருங்குவளை போன்ற கண்களை; வனப் புவனம்–காடாகிய உலகம்; மேவா–பொருந்தாத: ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்; மயூரம்–மயில்.

10. வாரி எழிலி–நீர் நிறைந்த மேகம்; குயில் மேகத்தைக் கண்டு வருந்தும் என்பர்; 'உழை தூங்கு குயில் ஏங்க உருமுத்தீ உகநக்கு மழைதூங்கு பொழில் தில்லை' (சிதம்பரச்செய்யுட் கோவை–65);பெண்மை வாரி–பெண்மை நலங்களின் சமுத்திரம்; இக்கு மதன்–கரும்பு வில்லையுடைய காமன்; சீர் இரதி–சிறப்புடைய இரதிதேவியின்.

11. தென்–எழிலை; மலை–எதிர்த்து வெற்றிபெற்ற; அ தோடா–அந்த விருது, அதிரூபவல்லி எழிலில் இரதியை வென்றவள் என்றவாறு; மலையத்து–பொதியை மலையில்.

மதித்த தருக்குஉலவா வச்சிரம்முன் நீரின்
மதித்த தருக்குலவா வல்லி – முதல்கிரியின் 12

அம்கிள்ளை யும்போத கக்கிள்ளை யும்பிடித்த
பைங்கிள்ளை யும்தாழ் பசுங்கிள்ளை – அங்குஅரக்கன் 13

விட்டமா னும்சசியில் வீற்றிருக்கும் மானும்அரன்
தொட்டமா னும்போய்த் துதிக்கும்மான் – தெட்டுஅமர்வேள் 14

ஆவிக்கும் ஆவி அரவிந்தப் பூங்கோவில்
தேவிக்கும் சேவிக்கும் தேவாரம் – பூவில் 15

சுரும்பை வணக்கத் தொடுநாணாய்க் கொண்ட
கரும்பை வணக்கும் கரும்பு – விரும்பும் 16

அமல விரதத்து அருந்தவத்தோர் உள்ளக்
கமலம் அலர்த்தும் கமலம் – சமயத் 17

---

12. மதித்த–போற்றப்படுவதால் நேர்ந்த; தருக்கு–பெருமிதம்; வச்சிரம்–வைரம்; முன் – முற்காலத்தில்; நீர் – கடல், இங்குப் பாற்கடல்; மதித்த–கடைந்ததால் கிடைத்த; தரு–மரம், கற்பகம்; வல்லி–கொடி; முதல்கிரி–முதன்மையான இமயமலை.

13. கிரியின் அம் கிள்ளை–மலைமகளாகிய பார்வதி; போதகக் கிள்ளை–கலைமகள்; இவ்விருவரும் கையில் கிளியைப் பிடித்திருப்பர், அவற்றைவிட அதிரூபவல்லியாகிய கிளி சிறப்புடையது; அரக்கன்–இராவணன்.

14. விட்ட மான்–மாரீசனாகிய பொய்மான்; சசி–சந்திரன்; அரன் தொட்ட மான்–சிவபெருமான் ஏந்திய மான்; தெட்டு அமர்வேள்–வஞ்சித்துச் செய்யும் போரை யுடைய மன்மதன், தான் எதிரில் வராது பொருதலின் தெட்டமர் என்றார்.

15. ஆவி–(மாரனின்) உயிர் போன்ற இரதி; அரவிந்தப் பூங்கோவில்–தாமரையாகிய அழகிய ஆலயம்; தேவாரம்–விக்கிரகம்; பூவில்–மலர்களிலுள்ள.

16. சுரும்பை–வண்டுகளை; வணக்க தொடு நாண்–கட்டப் பெற்றதும் வில்லோடு இணைந்திருப்பதுமாகிய நாண்கயிறு; கரும்பை–மன்மதனின் கரும்பு வில்லினை; வணக்கும்–பணிய வைக்கும்; கரும்பு–கரும்பினைப் போன்ற அதிரூபவல்லி: உருவகம்.

17. அமல–குற்றமற்ற; விரதத்து–நோன்பினை உடைய; அலர்த்தும்–மலரவைக்கும்; கமலம்–முதலது தாமரை, அடுத்தது

துளக்கை மறைக்கும் தொழில்முனிவர் ஞான
விளக்கை மறைக்கும் விளக்கு – கிளைக்கின்ற 18

ஆராமம் சேரா அருங்கோ கிலம்அமுதம்
தீராமஞ்சு ஏறாச் சிறுமின்னல் – பார்ஏழின் 19

மெய்த்த இளைஞர் வியன்வடிவை வேய்ஈன்ற
முத்தர்வடி வஞ்செய் முழுமுத்தம் – அத்திப் 20

படுவில் பிறவாப் பவளம் செழும்கா
நடுவில் பிறவா நறவம் – கடல்முகந்த 21

நீர்; குவிய வேண்டிய தவசியர் உள்ளங்களை உலக இன்பங்களை நாடி விரியச் செய்பவள் என்றவாறு. 'தோராத ஞானத் துற வோர்கள் தொகையாவும் சோர மனவயிரம் சோரவரும் மா வயிரம்' (சென்னிமலையாண்டவர் காதல். கண்ணி 248).

18. சமயத் துளக்கை–சமய உண்மைகளில் ஏற்படும் சந்தேகங்களை; மறைக்கும்–முதலது இல்லாமற் செய்யும், அடுத்தது ஒளி மழுங்கப் புரியும்; கிளைக்கின்ற–பற்பல கிளை களாக வளர்கின்ற.

19. ஆராமம்–சோலை; கோகிலம்–குயில்; அமுதம் தீரா மஞ்சு–மழைக்கான நீர் குறையாத மேகம்.

20. வியன் வடிவை–பெருமைக்குரிய வடிவத்தை, அழகிய உருவை என்றபடி; வேயீன்ற முத்தர்–சிவபெருமான், நெல்லைத் தல வரலாறு காண்க; அதிரூபவல்லியாகிய முழுமுத்தம் இளைஞர் வடிவைச் சிவ வடிவமாக மாற்றுகிறது. வாலிபர்கள் இவளைப் பெறாது உடம்பில் சாம்பலைப் பூசிக்கொண்டு எருக்கமாலை களையும் எலும்புகளையும் அணிந்து மடலேறுவர் என்பது கருத்து. 'அன்பணி மாதவர் தாழ்பேரை வெள்ளி அசலமுளார் துன்புஅணி நீற்றும் திருநீறு பூசித் துணர்எருக்கோடு என்புஅணி பூண்டு மடன்மா மிசைகிழி ஏந்திநும்கண் முன்புஅணி வீதியில் நான்வரு வேன்நாளை மொய்குழலே' (திருப்பேரூர்க் கோவை. 127);

'மாலாகும் யான்சிவ னாகச்செய் வேன்உங்கள் மன்றகத்தே'
(குலோத்துங்க சோழன் கோவை. 130);

அத்தி– கடல், அப்தி எனும் வடசொல்லின் திரிவு.

21. படு–பள்ளம், கடலாகிய பள்ளம்; நறவம்–தேன்.

தலைமுதல் கால்வரைச் சாற்றிடும் பேரெழில்

கூந்தல்

காரை நிகரக் கறுத்து வனம்செறிந்து
வாரி விரவிமுல்லை வந்துஅடைந்து – தாரணியைத் 22

தாங்கி அகிலம் தனைஉண்டு மாஅரவத்து
ஓங்கி ஒருதிருவை உற்றுஅணிந்து – வாங்கரிய 23

நெய்த்தடவி நேர்ந்து சுருங்கி நெடும்திகிரி
வைத்தபகல் கங்குல் வருவித்து – மொய்த்த 24

---

22. இதிலிருந்து 25 ஆம் கண்ணிவரை தலைவியின் கூந்தலுக்கும் திருமாலுக்கும் சிலேடை. **குழல்:** காரை–மேகத்தை; வனம் செறிந்து–காட்டைப் போல் மிக அடர்ந்து; வாரி விரவி–சீப்பின் தொடர்பு பெற்று, சீவப்பெற்று; தார் அணியை மலர்ச்சரங்களின் வரிசையை.

திருமால்: வனம் செறிந்து–திருத்துழாய் மாலைகள் நிறைந்து; வாரி விரவி–(பாற்) கடலில் பொருந்தி; முல்லை வந்து அடைந்து–பரம பதத்தை விட்டு முல்லை நிலமாகிய ஆயர்பாடியில் எழுந்தருளி; தாரணியைத் தாங்கி–உலகத்தைக் காக்கும் தொழில் புரிந்து.

23. **குழல்:** அகில் அம் தனை–அகிலின் சிறப்பாகிய நறுமணத்தை; உண்டு–(புகை வழியாக) ஏற்று; மா அரவத்து ஓங்கி–வண்டின் ஒலியினால் பெருமை பெற்று, ரீங்காரம் மிக என்றவாறு; திருவை–திருகுப்பூ, சடைவில்லை எனப்படும்.

திருமால்: அகிலம் தனை உண்டு–உலகம் முழுவதனையும் சாப்பிட்டு, தன் வயிற்றில் அடக்கி என்றவாறு; இனி ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் மண்ணை உண்டதைக் குறிப்பிடினும் அமையும்; மா அரவத்து ஓங்கி–பெரிய பாம்பாகிய ஆதிசேடனின் மேல் விளங்கி; திருவை–இலக்குமியை.

24. பா. வே. 1:4 நெடுங்கிரிமேல்

குழல்: நெய்த்தடவி–எண்ணெய் பூசப்பெற்று; எதுகை நோக்கிய மிகுத்தல் விகாரம்; நேர்ந்து–மென்மையாகி; சுருங்கி–சுருண்டு; திகிரி–சூரியன்; கங்குல்–இரவு; கூந்தல் பகலிலேயே இரவைத் தோற்றுவிக்குமளவு கரியது.

திருமால்: நெய்த்து–பளபளப்பைப் பெற்று; அடவி நேர்ந்து–இராமாவதாரத்தில் வனவாசம் புக்கு; சுருங்கி–வாமனனாக

இராவண னான இகல்பொருது மால்போல்
குரா அணியும் மாலைக் குழலாள் – விராவியசீர் 25

நெற்றி

பூத்த அளகப் புயற்கீழும் பேர்அழகு
வாய்த்த பிறைபோலும் வாள்நுதலாள் – கூர்த்த 26

புருவங்கள்

இளைஞர் தனுவும் இரதிபதி வில்லும்
வுளைய வளைந்த புருவத்தாள் கிளைகொண்ட 27

விழிகள்

மாவை நெருக்கி மறிகடலை யும்கடிந்து
மேவும் அயில்விளங்கி மீன்பயின்று – பூவிற் 28

வடிவத்தில் குறுகி; திகிரி–சுதரிசனச் சக்கரத்தால்; பாரதப் போரில் பகலில் சூரியனை மறைத்து இரவைத் தோற்றுவித்தது சயத்திர வதத்திற்காக.

25. பா. வே. 1:1,2,3 **இராவணன் ஆணை இகல் பொருந்து**

குழல்: இராவணம்–இரவுப்பொழுதின் நிறமாகிய கருமை; இகல் பொருது–அதற்கு இணையாகி விளங்க என்றவாறு.

திருமால்: நாண–தோற்று வெட்கமுற; இகல் பொருது–போரிட்டு வென்று.

26. அளகப் புயல்–கூந்தலாகிய மேகம்; வாள்–பிரகாசிக்கின்ற; நுதலாள்–நெற்றியை உடையவள்.

27. தனு–உடல்; இரதி பதி–இரதிதேவியின் கணவன், மன்மதன்.

28. இதுமுதல் 30 ஆம் கண்ணிவரை தலைவியின் கண்களுக்கும் முருகப்பெருமானுக்கும் சிலேடை.

கண்கள்: மா–மாவடு, இது விழிக்கு உவமை; கடல்–கரு நிறத்தாலும் விசாலத்தாலும் கண்கட்கு நேர்; அயில்–கூர்மை; பூவில்–மலர்களுக்குள்.

முருகன்: மாவை–மாமரமாக நின்ற சூரனை; கடலைக் கடிந்து–சூரனை வெளிக்கொணரச் சமுத்திரத்தை வற்றச் செய்து; மயில் விளங்கு–மயிற்பரியில் தோன்றி; மீன் பயின்று–(கார்த்திகை மாதர்களாகிய) விண்மீன்களின் தொடர்பு பெற்று; பூவிற்கு–உலகத்திற்கு.

குவளையாய் நின்று குவடுநனி வென்று
திவளச் சரவணத்தில் சேர்ந்து – கவின்எறிப்ப 29

நன்குறமா னில்பொலிந்து நாகா பரணனது
பின்குமரன் போலப் பிறங்கியே – வன்கூர் 30

அரத்தை முறுக்கி அயில்கறுவிக் கூற்றின்
உரத்தை நெருக்கி ஒறுத்து – திரைக்குள் 31

விடத்தை வெருட்டி வியன்சக் கிரவாளத்து
இடத்தை அளந்துமயக் கிட்டுத் – துடித்துச் 32

சதகோடி யானைத் தளைப்படுத்தி லீலா
விதகோடி யும்படித்து மேன்மேல் – முதிர 33

---

29. **கண்கள்:** குவளை–நீலமலர்; குவடு–நஞ்சு, கருமையாலும் ஆடவர்களைக் கொல்லும் தன்மையாலும் உவமை; திவள் அ சர வணத்தில்–விளங்குகின்ற அந்த அம்பின் தன்மையில்; கவின் எறிப்ப–அழகு பொழிய.

முருகன்: வள் ஐ ஆய்–பெருமை மிக்க தலைவனாக; குவடு–கிரவுஞ்ச கிரி, வரலாறு வெளிப்படை; திவள–(நீரில்) திளைக்க; சரவணத்தில்–சரவணப் பொய்கையில், வெளிப்படை.

30. **கண்கள்:** நன்கு உற மானில் பொலிந்து, மானில்–மானின் விழிகளைப் போல்.

முருகன்: நன் குற மான்–நல்ல குறமகளாகிய வள்ளி நாச்சியார்: எதுகை நோக்கிய மெலித்தல் விகாரம்; இல் பொலிந்து–மனைவியால் புகழ்பெற்று: மூன்றன்தொகை.

நாகாபரணன்–பாம்புகளை அணிகலன்களாக அணிந்த சிவபெருமான்; பின் குமரன்–இளைய மகனாகிய முருகன்; பிறங்கி–விளங்கி; வன்–வலிமை மிக்க; கூர்–கூரிய.

31. அரம்–அராவும் கருவி; அயில்–வேல்; கூற்றின்–இயமனின்; உரத்தை–வலிமையை; திரைக்குள்–அலைகளுக்குள்.

32. வெருட்டி–அச்சுறுத்தி; சக்கிரவாளத்து இடத்தை அளந்து–உலகம் முழுவதையும் தன் பார்வையால் அளந்து என்றபடி.

33. பா. வே. 1:2 யானைத்

சதகோடியான்–வச்சிராயுதத்தை உடைய இந்திரனையும்: உயர்வு சிறப்பும்மை தொக்கது.

வடுங்கொலை வஞ்ச மருங்குஉள எங்கும்
நடுங்குதல் கொண்டு நடந்து – நெடுங்குழல் 34

வண்டை வெகுண்டு மணம்கமழ் அம்குமிழ்
அண்டை முயங்கி அகம்புறம் – அண்டிமுன் 35

ஓடி உலாவி உபாயமோ டேவிளை
யாடி நிலாவணி யாவணி – நீடி 36

ஊரிய தவரை உளம்உருகச் செய்யும்
கரிய பெரிய தடம்கண்ணார் – இருவிழியால் 37

செவிகள்

ஏயும் சகோரம் இரண்டுஉண்ண வெண்நிலவு
காயும் குழைத்தரளக் காதினாள் – தூயகதிர்க் 38

சன்னங்கள்

கண்நாடி ஒத்த கருத்தர் கருத்துஅழிக்கும்
கண்ணாடி போலும் கபோலத்தாள் – வெண்நிலவே 39

---

34. பா. வே. 1:3,4 மருங்கு உலவு எங்கும்

இக் கண்ணி 'தனந்தன தந்த' எனும் சந்தம் பெற்ற முடுகு வெண்பா.

35. குமிழ்—ஓர் அரும்பு, இது உவம ஆகுபெயராக நாசியைச் சுட்டுகிறது; அண்டை—அருகே.

36. நிலா அணியா அணி – நிலவின் குளிர்ந்த ஒளியை (த்தமக்கு) ஆபரணமாகப் பொருந்தி, நிலவெரித்து என்றபடி.

இக் கண்ணியில் ஆனி, ஆடி, ஆவணி என்ற மாதப் பெயர்கள் தொனிக்கின்றன.

38. சகோரம்—சக்கரவாகப்புள், இது நகில்களுக்கு உவமை; ஏயும் இரண்டு சகோரம் இருவிழியால் உண்ண வெண்நிலவு காயும் தரளக் குழைக் காதினாள் என இயையும்; காதில் தொங்குகின்ற முத்தின் ஒளி நிலவு; முலைகளாகிய சகோரங்கள் தம் ஆசுகங்களாகிய கண்களால் அந் நிலவை உண்கின்றனவாம்; கதிர்க்கண் – பேரொளியாகிய இறைவனிடத்தில்.

39. நாடி – விரும்பி; ஒத்த – தியானத்தால் ஒன்றிய; கருத்தர் – சிந்தையை உடைய யோகியர்தம்; கபோலத்தாள் – கன்னங்களை உடையவள்,

மூக்கு

**ஆகும்இழை முத்தம் அணிநாசி முல்லைமுகி
ழாகுமிழை ஒத்ததுஎன மானுவாள் – பாகுஒழுகும்** 40

உதடுகள்

**மென்பவளம் போல்சிவந்து வெண்கற் புரவாசத்து
இன்பவளம் காட்டும் இதழினாள் – அன்பால்** 41

புன்சிரிப்பு

**முருந்தும் தளவு அரும்பும் முத்தும்அமைத் தென்னத்
திருந்து முறுவல் திகழ்வாள் – கரும்சிலைக்கும்** 42

மொழிகள்

**நண்ண உயிர்ப்பு நயந்துதர லால்கரிய
வண்ணன் எனச்சிறந்த வார்த்தையாள் – விண்ணகத்தின்** 43

---

40. இழை – ஆபரணம்; முல்லை முகிழா – முல்லையரும்புகளோ? அன்றன்று, அவற்றினும் அழகியவை என்றபடி; குமிழை—நிலக்குமிழ் மலரரும்பை. இக் கண்ணியின் சரியான வடிவம் விளங்கவில்லை; முல்லையரும்புகள் நாசிக்கு உவமை ஆகா; மானுவாள் என்ற சொல் சரியன்று; மோனையும் இல்லை.

41. மென் பவளம் – மென்மையான பவளமணி: இல் பொருளுவமை; வெண் கற்பூரம் – வெண்மையான நிறம்பெற்ற பச்சைக்கருப்பூரம்; இன்ப வளம் – சுகத்தின் செழிப்பு; இதழினாள் – அதரங்களை உடையவள்.

42. முருந்து – மயில் இறகின் அடிப்பகுதி; தளவு – முல்லை; திருந்து – திருத்தமான; கரும்சிலைக்கும் – பெரிய கல்லுக்கும், கணவரின் சாபத்தால் கல்லாகக்கிடந்த அகலிகைக்கும்.

43. நண்ண – அடைய; உயிர்ப்பு – பெருமூச்சு; நயந்து – விரும்பி; இவள் பேசினால் கல்லும் பெருமூச்சுவிடும் என்க; கரிய வண்ணன் – இராமன்; இக் கண்ணி சிறந்த ஒன்று; அதிரூபவல்லியாகிய தலைவி பெருங்கற்புள்ளவள்: அவள் சொற்கள் இனிமையுடையன மட்டும் அன்று, சக்கரவர்த்தித் திருமகளின் அருள் மொழிகளைப் போல மாறாதவையும் ஆகும் எனத் தொனிக்க வைத்த நயம் பாராட்டற்பாலது.

முகம்

அம்தண் மதிமுனிவது அல்லால் மதியைமுனி
செம்தண் முளரித் திருமுகத்தாள் – வந்துஇளைஞர் 44

கழுத்து

கண்டுஅசரச் சங்காய்க் கமுகாய்க் கதிர்முத்தக்
கண்டசரம் பூண்ட களத்தினாள் – கண்டவர்க்குக் 45

புயங்கள்

காமக் கனல்இழைக்கும் கானக் கழைமாது
தாமத் தரத்துஆர் தடம்தோளாள்–பூமுழுதும் 46

முன்கைகள்

விற்கும் மகரம் மிதுனமும் ஈனம்படவே
கற்கடகம் தாங்கியமுன் கையினாள்–நற்கு 47

---

44. அம் தண் மதி – அழகும் குளிர்ச்சியும் மிக்க சந்திரன்; இவள் முகம் சந்திரனையும் அவளைப் பகைக்கும் தாமரையையும் ஒரே சமயத்தில் பகைத்துக் கொள்கிறது.

45. அசர–பெருவியப்படைய; கதிர்–ஒளிவீசுகின்ற; கண்டசரம் – கழுத்தில் அணியப்படும் மாலை; இளைஞர் சங்காய்க் கமுகாய்க் கண்டு அசரக் கதிர் முத்தக் கண்டசரம் பூண்ட களத்தினாள் என இயையும்; களம் – கழுத்து.

46. கனல் – நெருப்பு; கானக்கழை – காட்டு மூங்கில்; மூங்கில்கள் தம்முள் உரசிக் காட்டுத்தீயை உண்டாக்கும்; இவள் தோள்கள் காண்பார் பார்வையோடு உரசிக் காமத்தீயை உண்டாக்கும்; மாது – அழகிய; தாம – மாலைகளை அணிந்த; தரத்து ஆர் – தகுதி வாய்ந்த; தடம்–பெரிய; கானக் கழைத் தோளாள், தரத்து ஆர் தாமத் தோளாள், தடம் தோளாள் எனத் தனித்தனி இயையும்; பூ – உலகம்.

47. விற்கும்–விற்றால் விலைக்கு ஈடாகும்; மகரம்–ஒன்பது நிதிகளுள் ஒன்று; மிதுனம்–ஜோடி; மகர மிதுனமும் என்றது இரு மகர நதிகள் சேர்ந்தும் எனும் பொருட்டு; ஈனம் பட–பெருமை குன்ற; கல் கடகம்–இரத்தினங்கள் இழைக்கப்பெற்ற வளையல்கள்; நற்கு–நன்றாக, இக் கண்ணியில் வில் (தனுசு), மகரம், மிதுனம், மீனம், கற்கடகம் என்னும் இராசிப் பெயர்கள் தொனிக்கின்றன.

அங்கைகள்

வியப்பங் கயமனையில் மெய்த்திருநீங் காத
கயப்பங் கயம்அனைய கையாள்—பயத்தில் 48

விரல் நகங்கள்

சுகமே முகம்எடுப்பத் தோற்று வனமே
நகமே புகுத்தும் நகத்தாள்—நிகர்இலா 49

நகில்கள்

வாய்தாளம் (அத்) தோடும் வாதாடி ஈர்விடத்து
மேய்புண்ட ரீகத்தை மேல்அடர்த்து—காயும் 50

---

48. வியப்பு—பாராட்டிற்குரிய தன்மையும்; அம்—அழகும்; கய — பெருமையும்; மனையில் — வீடாக; முற்கூறிய மூன்றும் மனைக்குத் தனித்தனி அடைகள்; மெய்த் திரு—நிலைத்தவளாகிய இலக்குமி, மக்களிடம் இருக்கும் திரு நிலைக்காதது, அதனின்றும் வேறுபடுத்த மெய்த்திரு என்றார்; கய பங்கயம்—நீர்நிலையில் உள்ள தாமரை: ஏழன்தொகை.

49. சுகம்—கிளி; இதிலுள்ள ஏகாரத்தை முகம் எடுப்பவே என இயைக்க; முகம் எடுப்பவே—பார்ப்பதற்கே; வனமே—காட்டிலும்; நகமே—மலையிலும்: இரு ஏகாரங்களும் எண்ணுப் பொருளன.

50. இதுமுதல் 55 ஆம் கண்ணிவரை நகில்களுக்கும் சிவபெருமானுக்கும் சிலேடை.

முலைகள் : வாய்தாளம்—ஒன்றற்கு ஒன்று சரியாகப் பொருந்திய தாளக்கருவி: வினைத்தொகை, கிண்ணம் போலமைந்த தாளக் கருவியை நகிலுக்கு உவமை கூறல் மரபு; ஈர் விடத்து மேய்—ஈரமானதும் தண்ணீரில் தோன்றுவதுமாகிய; புண்டரீகம்—தாமரை முகை.

சிவபிரான் : இறைவன் காளியுடன் கூத்தில் வாதாடினார், இந்த நடனம் தாளத்திற்கு இயைந்தது ஆதலின் தாளத்தோடு வாதாடி என்றார்; ஈர்—தன்பால் ஈர்த்து; விடத்து மேய்—கேட்டிற் பொருத்துகின்ற, துன்புறுத்துகின்ற என்றவாறு; புண்டரீகத்தை—புலியை; சிவபிரான் தாருகாவன முனிவர்தம் வேள்வியில் தோன்றிய புலியைக் கொன்று அதன் உரியை அணிந்த வரலாறு வெளிப்படை.

கரியை முனிந்துகன்னி காரம் கடுத்துப்
புரியும்அம் சக்கரத்தின் புள்ளாய்-இருவரையும் 51

வைத்த வடிவுபெற்று மாமேரு வைவணக்கு
வித்தகமாய்க் கண்டமது மெய்க்கறுத்து-நித்திலத்து 52

வாரினஞ் சார்ந்து வடத்தின் நிழல்புகுந்து
சீரிய பொற்பணியே சேர்த்துஅணிந்து-கூரத் 53

துடிநடுக்கி அம்பரத்தின் ஏகாயம் சூழ்ந்து
நெடிய அமுதுஎடுத்து நின்று-கடிது 54

---

51. **முலைகள்:** *கரி—யானை; கன்னிகாரம்—கோங்கமுகை; புரியும்—விரும்பப்படும்; அம்—அழகிய; சக்கரத்தின் புள்—சக்கர வாகப் பறவை; இரு வரை—இரண்டு குன்றுகள்.*

சிவபிரான்: *கரியை முனிந்து—கஜ சம்ஹார மூர்த்தி; கன்னி கார் அங்கு அடுத்து, கார்க்கன்னி என மாறுக, பச்சைநாயகியாகிய இறைவியை இடப்பாகத்தே கொண்டு; புரியும் அஞ்சு அக்கரத்து இன்பு உள்ளாய்—ஜெபிக்கும் பஞ்சாட்சரத்தினால் உவந்து; இருவரையும்—தானும் தேவியுமாகிய மாதொருபாகன் வடிவம்; திருமாலோடு கூடிய சங்கரநாராயண வடிவம் எனினும் ஆம்; தொடர்ச்சி அடுத்து.*

52. பா. வே 1:4 வணக்க; 2:1 வித்தகமாம்

முலைகள்: மா மேரு — பெரிய இமயம்; வணக்கு — வணங்கச் செய்யும்; வித்தகமாய்—செம்மையுடையனவாய்; கண்தமது—ஆசுகங்களின், (முலைக்காம்பு).

சிவபிரான்: மாமேருவை வணக்கும் வித்தகம்—மேருமலையை வில்லாக வளைக்கின்ற அறிவு, திறமை; கண்டமது மெய்கறுத்து—கழுத்து உண்மையாகவே நீலநிறம் பெற்று.

53. **முலைகள்:** நித்திலத்து இன வார் என்க, முத்துகளும் அதற்கினமான பிற மணிகளும் கோக்கப்பெற்ற கச்சு; வடத்தின் நிழல்—முத்துமாலையின் பிரதி பிம்பம்; பொன்பணி—தங்கத்தா லாகிய அணிகலன்கள்; கூர—மிகுதியாக.

சிவபிரான்: நித்திலத்து வாரி—முத்துகளுக்கு இடமான கடல்; நஞ்சு ஆர்ந்து—ஆலகாலத்தை அருந்தி; வடத்தின் நிழல்—கல்லால மர நீழலில்; பொன் பணி—அழகிய பாம்புகளாகிய நகைகளை.

54. **முலைகள்:** துடி—உடுக்கையைப் போன்ற இடை: உவம ஆகுபெயர்; நடுக்கி (இத் தனபாரங்களை நம்மால் சுமக்க

மணச்சந் துரைத்திட்டு மாதேவர் போலப்
பணைத்துத் தளதளத்துப் பாரித்து—அணைக்கும் 55

பிடிக்கச்சு இறுக்கிப்ர மிக்கப் பெருத்துப்
பொடிக்கற் புரத்தில் புதைந்துத்—தடித்துக் 56

கனத்துக் குமிழ்த்துக் களித்துத் திளைத்துச்
சினத்துத் தவத்தைச் செறுத்து—வனப்புஉடைத்தாய் 57

வெச்சென்று தண்ணென்று மெத்தென்று சிக்கென்று
பச்சென்று காதம் பரிமளித்து—வச்சிரப்பூண் 58

இயலுமோ என) அஞ்சச் செய்து; அம்பரத்தின் ஏகாயம்—ஆடையாகிய உத்தரீயம், இங்குத் தாவணி; அமுது—முலைப்பால், மங்கைப்பருவத்து இல்லையாயினும் தாய்மையோடு தோன்றும் தன்மைபற்றிக் கூறினார்; கடிது—மிகுதியாக.

சிவபிரான்: துடிநடுக்கி – திருக்கரங்களிலுள்ள உடுக்கையை ஒலித்து; அம்பரத்தின் ஏகாயம் சூழ்ந்து—திசைகளாகிய ஆடையால் சூழப்பெற்று, [திகம்பரமாக என்றபடி, அமுது எடுத்து—தண்ணீராகிய கங்கையைத் தாங்கி; கடிது—விரைவாக.

55. **முலைகள்:** மணச்சந்து—வாசனை மிக்க சந்தனம்; உரைத்து இட்டு—அரைத்து அணிந்து கொண்டு.

சிவபிரான்: மணச்சந்து—திருமணத்திற்கான தூது; உரைத்திட்டு—(திருவாரூரில் பரவை நாச்சியாரின் ஊடலைத் தீர்ப்பதற்காகச் சமரச வார்த்தைகளைச்) சொல்லி; ஓர் இரவில் இருமுறை சென்றதால் கடிது உரைத்திட்டு என்றார்.

பணைத்து—பருத்து; தளதளத்து—செழுமை பெற்று; பாரித்து—கனம்பெற்று.

56. பொடிக் கற்புரம்—பச்சைக் கருப்பூரப் பொடி.

57. குமிழ்த்து—குமிழின் வடிவத்தைப்பெற்று; திளைத்து—ஒன்றையொன்று நெருங்கி; வனப்பு—எழில்.

58. வெச்சென்று—(குளிர்காலத்தில்) வெதுவெதுப்பாகவும்; தண்ணென்று—(கோடையில்) குளிர்ச்சியாகவும்: சிக்கென்று—இறுகி; பச்சென்று—பசுமையாகி, எப்போதும் புதியனவாகவே விளங்கி என்றவாறு; காதம்—ஒரு காத தூரம்; பரிமளித்து—மணம் பரப்பி; வச்சிரப் பூண்—வைர நகை.

பூண்டு நிமிர்ந்து பொருமிப் பெருமுகடு
தாண்டும் உபய தனத்தினாள்—காண்தகைஅக் 59

உரோமாவளி

கொங்கைக் கிரிஇரண்டும் கொட்டி நடுவீழ்ந்த
அங்குஐ அழகுஒழுக்கம் ஆம்என்னச்—செங்கை 60

ஒருபொருப்பு மால்எடுப்ப ஒப்புஅலஎன்று இந்த
இருபொருப்பு மால்எடுப்பது என்ன—முருகு 61

திரண்ட கரும்தேன் செழும்தாரை குன்றம்
இரண்டு நடுவீழ்ந்தது என்ன—நிரம்பித் 62

துலங்கி எழுந்த துணைமுலைப்பூண் நீலம்
இலங்கி விழும்சோதி என்ன—அலங்கல் 63

தயங்கு களபத் தனநடுவே வீழ்ந்து
வயங்கும் உரோமா வளியாள்—வியங்கண் 64

---

59. பெரு முகடு—பெரிய மலைச் சிகரங்களை; தாண்டும்—வெல்லும்; உபய தனத்தினாள்—இரு நகில்களை உடையவள்; காண்தகை அக்—காணத் தக்கனவாகிய அந்த.

60. கொட்டி—சொரிந்து; கொட்டி அங்கு நடுவீழ்ந்த ஐ அழகு ஒழுக்கம் என இயையும்; ஐ—தலைமையான, சிறந்த என்றபடி; அழகு ஒழுக்கம்—எழிலின் ஆற்றொழுக்கு.

61. ஒரு பொருப்பு—கோவர்த்தனம் என்னும் ஒரு குன்று; மால்—திருமால், கண்ணன்; மயிரொழுங்கு கருமையாக உள்ளது, அதன்மேல் இரு புறங்களிலும் மலைகளை மானும் கொங்கைகள் விளங்குகின்றன, இது கரிய கண்ணன் இரு மலைகளைத் தாங்கி நிற்பது போல் காட்சியளிக்கிறது: இல்பொருளுவமை; முருகு—வாசனை.

62. பா. வே. 2:2 நடு விழுந்தது
இரண்டு குன்றம் நடு கரும் தேன் செழும் தாரை விழ்ந்தது என்ன என இயையும்.

63. பூண் நீலம்—அணியிலுள்ள நீலமணி; அலங்கல்—பூமாலை.

64. பா. வே. 2:2,3 உரோம வழியாள்
களப—வாசனைச் சாந்து பூசப்பெற்ற; வயங்கும்—விளங்குகின்ற; உரோமாவளி—மயிரொழுங்கு; வியன்—பெருமை மிக்க.

திடபத் திரம்ஆம் திருமணவன் வைகும்
வடபத் திரம்நேர் வயிற்றாள்-நெடுநூல் 65

கொப்பூழ்ச் சுழி

வழிபோம் முனிவர் மனத்தும்மயல் ஆற்றுச்
சுழிபோலும் உந்திச் சுழியாள்-இழையோ 66

துடியோ அணுவோ சுருதியோ மின்னோ
கொடியோ வரிஅரவோ கொம்போ-அடுகோ 67

ளரியோ உருவிலியோ அம்பிடியோ விண்ணோ
தெரியோம் எனப்பலரும் செப்பச்-சொரிதேன் 68

புடையின் சுரும்பு பொருசிறகின் காற்றுக்கு
இடையும் சிறுநுண் இடையாள்-கடவுளரே 69

அல்குல்

மோக இளைஞோர் முதுபாற் கடலுமே
ஆக வமுதூறும் அல்குலாள்-மாகருப்பு 70

---

65. திட – உறுதியான; பத்திரம் ஆம் – அம்பைப் போல் உள்ள; திரு–இலக்குமியின்; மணவன்–மணாளனாகிய திருமால்; வட பத்திரம்–ஆலிலை; நூல்–சாத்திர நூல்கள்.

66. நூல் நெடு வழி என மாறுக, நூல் காட்டும் நீண்ட மார்க்கம் என்றவாறு; மனத்தும்–உள்ளத்திலும்: உயர்வு சிறப்பும்மை; மயல்–மயக்கம்; ஆற்றுச் சுழி இரட்டுறமொழி தலாகப் புரிகின்ற சுழி என வினைத்தொகையாகவும், ஆற்றின் கண் தோன்றுகின்ற சுழி என ஏழன்தொகையாகவும் பொருள் தந்தது; முன்னதில் சிலேடை நோக்கி இனமெய் மிக்கது: மிகுத்தல் விகாரம்; உந்தி–கொப்பூழ்; இழை–நூலிழை.

67. துடி–உடுக்கை; சுருதி–ஒலி, இது இருப்பதை உணர முடியும், ஆனால் கண்ணாற் காண முடியாது, இத்தன்மையால் இடைக்கு உவமை; வரி அரவு–தன்மேல் கோடுகளைப் பெற்ற பாம்பு, நெளிவதால் உவமை; அடு–பகைவருடன் போரிடுகின்ற.

68. கோளரி – சிங்கம்; உருவிலி – வடிவமற்ற மன்மதன்; அம்–அழகிய; பிடி–கைப்பிடி.

69. சுரும்பு–வண்டு; இடையும்–வருந்தும்.

70. மோக இளைஞோர் கடவுளரே ஆக (த்தான்) முது பாற்கடலுமே ஆக அமுது ஊறும் அல்குலாள் என இயையும், ஏற்ற பெற்றி விரித்துக் கொள்க. மா–பெரிய.

துடை

வில்லர்அம்பை அன்ன விழிஅரம்பை தைவருடும்
நல்அரம்பை என்னும் நறும்துடையாள்—மல்கும் 71

முழங்கால்

பயஅலவன் போலும்முழம் பாதத்தாள் தென்றல்
வயவலவன் பூசல் வளர்ப்பாள்—புயல்நிறத்து 72

கணைக்கால்

மின்னிவருஆல் வைகும் விறலோன் மகன்வணங்கும்
கன்னிவரால் அன்னகணைக் காலினாள் — மன்னும்மலர்ப் 73

பரடு

பெண்ணின் அழகும்தன் பேரழகும் தூக்கஅயன்
பண்ணுதுலை அன்ன பரட்டினாள் — விண்ணோர் 74

குதிங்கால்

தழைந்துதொழும் இந்திராணி தாமரைப்பூம் பாணி
குழைந்துதொழும் பந்துஆம் குதியாள் — செழும்கொடியே 75

---

71. பா. வே. 1:4 தைவருட

கருப்பு வில்லர்—மன்மதன்; அம்பு—மாரனின் கணைகளாகிய மலர், இங்கு நீலம்; அரம்பை தைவருடும் — (தெய்வலோகப் பெண்ணாகிய) அரம்பையும் மெதுவாக வருடும்: உயர்வு சிறப்பும்மை தொக்கது; நல் அரம்பை—நல்ல வாழைமரம்; நறும்—நல்ல.

72. பய அலவன் — நீரில் வாழும் நண்டு; தென்றல் வய வலவன்—தென்றலாகிய தேரை வெற்றியோடு செலுத்துகின்ற மன்மதன்; புயல் நிறத்து—மேகத்தின் வண்ணம் பெற்று.

73. மின்னிவரு — ஒளிவீசுகின்ற; ஆல்வைகும் — ஆலிலையில் பள்ளிகொள்ளும்; மின்னி வரு விறலோன், ஆல்வைகும் விறலோன் எனத் தனித்தனி இயைக்க; விறலோன்—வலிமையுள்ள திருமால்; மகன்—மாலின் மைந்தனாகிய காமனும்: உயர்வு சிறப்பும்மை தொக்கது; கன்னி வரால்—இளமையையுடைய வரால் மீன், இது கணைக்காலுக்கு உவமை; மலர்ப்பெண் — அலர்மேல்மங்கை, இலக்குமி.

74. தூக்க—நிறுத்துப் பார்க்க; அயன் — பிரமன்; துலை — தராசு.

75. பாணி—கைகளை உடையவள், தாமரைப்பூவை ஏந்திய திருமகள்.

புறங்கால்

அன்னார் குழாமும்மதன் ஆவியும் நீங்காத
பொன்ஆர் கமடப் புறந்தாளாள் – மின்னா 76

நகம், விரல்

துகிரும் வயிரமுமே சூழ்ந்ததுஎனப் பத்து
உகிரும் விரலும் ஒளிர்வாள் – இகல்அற்று 77

அடங்கமலம் தீரப்பார் அக்கமலம் தீராத்
தடம்கமலம் போலும்இரு தாளாள் – நடந்துஅயனும் 78

நடை, சாயல்

சேயும் தொடரத் திருநடையும் சாயலும்பெற்று
ஏயும் மதனனையும் ஏவுவாள் – ஆயுங்கால் 79

உருவம்

வாளி நயனமதன் தேவியும் தன்கால்
தூளி திலதம்இடத் தோன்றுவாள் – நாளும் 80

---

76. மதன் – மாரன்; பொன் ஆர் – பொன்னிறம் பெற்ற, அழகிய எனினுமாம்; கமட–ஆமையைப் போன்ற; மின்னா–ஒளி வீசிக்கொண்டு, இவ்வெச்சம் அடுத்த கண்ணியிலுள்ள சூழ்ந்தது என்னும் வினை கொண்டு முடியும்.

77. துகிர்–பவளம்; உகிர்–நகம்; நகங்களுக்குப் பவளமும் விரல்களுக்கு வயிரமும் உவமை, நிரல்நிறை.

78. மலம் அடங்க இகல் அற்றுத் தீர என இயையும், பாசம் முழுவதும் தன் பகையை விட்டு அகலும்படி என்றவாறு; அ கமலம்–அந்தத் தண்ணீர், பாசங்களை அழிக்கின்ற அப் புனித நீர்; தீரா–குறையாத; தடம் கமலம்–நீர்நிலையில் தோன்றிய தாமரை; அயன்–பிரமன்.

79. சேய் – முருகப்பெருமான்; பிரமனின் வாகனமாகிய அன்னத்தின் நடையையும் முருகப்பெருமானின் ஊர்தியாகிய மயிலின் சாயலையும் பெற்றிருப்பதால் அவர்கள் தொடர் கின்றனர், நிரல்நிறை; ஏயும் – தன்பால் வந்தடையும்; மதனன்– மாரன்.

80. வாளி–அம்பு; நயனம்–கண்கள்; மதன் தேவி–இரதி; இங்குத் தன் என்றது அதிரூபவல்லியை; இவளின் கால்தூளியை இரதியும் நெற்றித்திலகமாக அணியும்படி பேரெழில் கொண்டு விளங்குகிறாள் என்றவாறு.

வருகை

திரதெய்வ ரம்பையர்க்குச் சீர்அழகு நல்க
வரதெய்வம் போல வருவாள் – இருதாள் 81

பேரழகி

திருவும் இரதியும்போய்ச் சேவிக்கச் செல்வம்
மருவும் அதிரூப வல்லி – அருகுஇருந்தார் 82

புனலாட்டம்

அண்டையில் வீசும் அரும்குலிகச் சேற்றினால்
பண்டை மலர்மகளாய்ப் பாவிப்பார் – மண்டுகருப் 83

பூர இமசலத்தால் புண்டரிகன் நாவின்அலங்
காரக் கொடியாய்க் கவின்எறிப்பார் – பூரித்த 84

துய்யநறும் கத்தூரி சோரும் சிவிறியால்
ஐயை வடிவுஒத்து அழகுஎழுவார் – கைசிவப்பத் 85

தேய்த்தநறும் குங்குமத்தின் சேற்றால் கனலின்நிறம்
வாய்த்த திரிபுரையை மானுவார் – தோய்த்த 86

---

81. திர–நிலையான; தெய்வ ரம்பையர்–அரம்பை முதலிய வானுலக அழகியர்; வர தெய்வம்–ஈகையை வழங்கும் கடவுள்: இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

82. செல்வம்–ஈண்டு அழகு, இளமை, பொருட்செல்வம், இன்பம் துய்க்கும் தகுதி முதலிய அனைத்தையும் சுட்டியது, என்னை! திரு, இரதி என இருவரையும் கூறியமையின்; அருகு இருந்தார்–பக்கத்தில் உள்ள தோழியர்.

83. குலிகச் சேற்றினால்–செந்நிறமுள்ள சாதிலிங்கக் குழம்பால்: பண்டை – முற்காலத்தில் தோன்றிய; பாவிப்பார் – கருதுவர்; மண்டு–மிக்குநெருங்கிய.

84. கருப்பூர–பச்சைக் கருப்பூரம் கரைத்த; இம சலத்தால் –பன்னீரால்; புண்டரிகன்–தாமரைமேல் வீற்றிருக்கும் பிரமன்; கொடி–சரசுவதி, வெண்மை நிறம் பெற்றுக் கலைமகளாகக் கவினுவாள்.

85. துய்ய–தூய; நறும்–மணமிக்க; சோரும்–துளிக்கும்; ஐயை–காளி, இவள் வண்ணம் கருமை.

86. பா வே. 1:4 கனக நிறம்
கனலின்–தீயின்; திரிபுரை–இவ்வன்னை செந்நிறத்தாள், 'ஒளி

பளிங்கு நிறத்துப் படிஅன்னம் என்னத்
துளங்கு புனல்சிலம்பத் தோய்வார் – குளம்கமழத் 87

தோய்ந்துஎழு தோற்றம் சுரிமுகம்சூழ் பாற்கடலில்
வாய்ந்துஎழு மாதர் வளம்ஒப்பார் – பூம்தண் 88

கருங்குவளைக் காட்டுக் கருமுகில் மின்போல்
மருங்குவளை வோடும் மகிழ்வார் – சுரும்புஅமரும் 89

செந்தா மரைவனத்துச் செவ்அந்தி வான்பூத்த
நந்தா உடுக்குலம்போல் நண்ணுவார் – பைந்தடத்தை 90

மின்உருப்பூம் கொங்கையின் மென்குங் குமம்கரையப்
பொன்உருக்கு நீரில் பொலிவிப்பார் – எல்நிலத்து 91

வீழ்ந்த பணிமணியால் வெள்ளத் தினைப்பகலோன்
ஆழ்ந்த குடகடலே ஆக்குவார் – சூழ்ந்துஅந்த 92

செம்மை, அம்மை நாமம் திரிபுரை ஒன்றோடிரண்டு நயனங்களே' (அபிராமியந்தாதி. 73) ; தோய்ந்த–சாயத்தில் மூழ்கடித்த.

87. துளங்கு–ஒளிவீசுகின்ற; புனல்–தண்ணீர்; சிலம்ப–ஒலி எழுப்புமாறு.

88. சுரிமுகம்–சங்கு; எழு மாதர்–பாற்கடலில் தோன்றிய திருமகள்: வினைத்தொகை; வளம்–எழில்.

89. மருங்கு–இடை; குவளை மலர்களுக்கிடையே அதிரூப வல்லியின் இடை ஓசிதலுக்கு நீல மேகங்களுக்கிடையே மின்னல் ஓடுதல் உவமை; கரும்பு–வண்டு.

90. நந்தா–குறையாத; உடுக் குலம்–நட்சத்திரக் கூட்டம், தலைவியின் தோழியர் கூட்டம்.

91. மின்–பிரகாசம் மிக்க; உரு–நல்ல வடிவமைந்த; பூம்–அழகிய; அம்–அழகிய, பூசப் பெற்ற அந்த எனச் சுட்டாக்கினும் அமையும்; பொன் உருக்கு நீர்–திரவ நிலைக்கு உருக்கப்பெற்ற தங்கம், தண்ணீரில் முலைகளின் வாசனைச் சாந்து கரைந்ததால் அது உருக்கப்பெற்ற பொன்போல் விளங்குகிறது; எல்–பகல் நேரத்தில், வெய்யிலில்.

92. பணி மணி–அணிகலன்களில் பதிக்கப்பெற்ற இரத்தினங்கள்; வெள்ளம்–தண்ணீர்; பகலோன்–சூரியன்; குட கடல்–மேற்குத்திசையிலுள்ள சமுத்திரம்.

தண்நாடு நீழலால் தையலர்க்குஎல் லாம்அயன்ஓர்
கண்ணாடி வைத்ததுஎனக் காட்டுவார் – வண்ணக் 93

கிரிஅளகம் மூழ்கும் கிளைத்தோகை அன்னச்
சுரிஅளகம் நீர்மிதப்பத் தோய்வார் – அருகுஅணைந்து 94

சுற்றும் பளிங்கிடைத்தம் சோதியை நீராடும்
மற்றுஇவர்ஆர் என்று மனம்கொள்வார் – (முற்றுஉருவம்) 95

(நேரில்)விழுந் தாலும்அந் நீழலையும் இன்னார்இந்
நீரினும் வந்தார்கொல் நெடிதுஎன்பார் – வேரிநறும் 96

செவ்வனசம் தோறும் சிறந்த திருமகளிர்
அவ்வனச நீராட்டு அகன்றனர் – இவ்வகையே 97

மெல்லியலார் (ஆயம்) விரவ அதிரூப
வல்லிபுனல் ஆடி மகிழ்ந்துஏறி – மெல்ல 98

ஒப்பனை

நனைதுகில் நீத்து நறும்துகில் சாற்றிப்
புனைவன எல்லாம் புனைந்து – கனைஅறுகால் 99

---

93. சூழ்ந்து நாடு நீழலால் அந்தத் தையலர்க்கு எல்லாம் அயல் ஓர் தன் கண்ணாடி வைத்தது எனக் காட்டுவார் என இயையும்; வண்ண–அழகிய.

94. கிரி அளகம்–மலையிலுள்ள நீர் நிலை; கிளைத்தோகை– தோகைக்கிளை என மாறுக, மயில் கூட்டம்; சுரி அளகம்– சுருண்ட கூந்தல்.

95. பா. வே. 1:4 நீராட்டும்

பளிங்கு–பளிங்குக்கல்; சோதி–பிரதிபிம்பம்.

96. நீழல்–பிம்பம். வேரி, நறும்–நறுமணம்: ஒருபொருட் பன்மொழி.

97. செவ் வனசம் – செந்தாமரை; அவ் வனசம் – அந்தக் குளம், வனசம் ஆகுபெயர்.

98. ஆயம்–தோழியர் கூட்டம்; விரவ–சூழ; கனை–ஒலிக் கின்ற.

99. அறுகால் புள்–வண்டு.

புள்ஆடு செங்கமலப் பூவை எனஒருத்தி
வெள்ஆடை தந்து விழைந்துஏத்தித் – தெள்ளும் 100

திருவோலக்கம்

இமிழ்கலத்துக் கொங்கை இரதிஎன ஓர்பெண்
உமிழ்கலத்தைக் கைஏந்துஓ லக்கம் – கமழும் 101

உருப்பசியும் மேனகையும் ஒப்பார் இருவர்
மருப்பதுமக் கைக்கவரி வாங்க – விருப்பின் 102

அரம்பையர் எல்லாரும் அன்ன சதகோடி
வரம்பைஇல் மின்னார்முன் வாழ்த்தப் – பரம்பிஅப் 103

பாசடை சூழ்ந்த பதுமா தனம்துறந்து
தேசுஅடைய வந்த திருஎன்ன – மாசுஇலாப் 104

பச்சை மணியுமுடைப் பற்பரா கப்(பீடத்து)
இச்சை புரிந்துஇருக்கும் எல்லைக்கண் – விச்சைக்குள் 105

'கலைகளில் உயர்ந்தது எது' எனக் கேட்டல்

யாது பெரிதுஎன்று இகுளையைப் பார்த்துஅந்த
மாது வினவுதலும் வாள்நுதலே – ஆதனவார் 106

---

100. செங்கமலப் பூவை – தாமரையில் வீற்றிருப்பவளும் நாகணவாய்ப் புள்ளை நிகர்த்தவளுமாகிய திருமகள்.

101. இமிழ்–ஒலிக்கின்ற; கலத்து–நகைகளை அணிந்துள்ள; ஓலக்கம்-ராஜரீகமான காட்சி.

102. மரு – மணமிக்க; பதும – தாமரை போன்ற.

103. அரம்பையர் – வானுலக மகளிர்; சதகோடி – நூறு கோடி, மிகப்பல என்றவாறு; வரம்பை இல்–அளவற்ற; பரம்பி–விரிவடைந்து.

104. பாசடை – பசுமையான இலைகள்; பதுமாதனம் – தாமரை இருக்கை; தேசு–ஒளி, புகழ்.

105. பற்பராகப் பீடம்–பதமராக மணிகள் இழைக்கப் பெற்ற இருக்கை; இச்சை புரிந்து–விரும்பி; இருக்கும்–அமர்ந் திருக்கும்; எல்லைக்கண்–நேரத்தில்; விச்சை–வித்தை; கலை.

106. இகுளை–தோழி; ஆதவனார்–சூரியன்.

தோழி, 'இசைக்கலையே' என்னல்

போய்அறியாது என்னும் புவிஉண்டோ விச்சைக்குள்
நீஅறியாது ஒன்றுஉண்டோ நேரிழையாய் – ஆயினும்கேள் 107

உன்அமுதே ஊணுக்கு உயர்வுகாண் பல்கலைக்குப்
பெண்அமுதே கீதம் பெரிதுகாண் – தண்அம் 108

திரைகரைஅம் முந்நீர் திரைத்துஉண்டோன் செய்ய
வரைகரையச் செய்த வகைகாண் – அரவுஅணையான் 109

தொட்ட கழைஇசைப்பச் சோர்ந்த நிரையினமும்
பட்ட மரமும் பசந்ததுகாண் – முட்டுஅறஎக் 110

காலத்தி னும்குடியாய்க் கண்நுதலோன் தன்இரண்டு
கோலச் செவிஏற்றுக் கொண்டதுகாண் – சேல்விழியாய் 111

கீதச் சுவைஅலது கேட்கச் செவிஉண்டோ
வேதச் சுவையில் விளைந்ததுகாண் – கோதையே 112

---

108. உண் அமுது–சாப்பிடும் சோறு; வினைத்தொகை; ஊண்–உணவு.

109. திரை கரை–அலைகள் ஒலிக்கின்ற; அம்–அழகிய; முந்நீர் – கடல்; திரைத்து உண்டோன் – (ஒரு கையளவாகச் சுருக்கிப்) பருகிய அகத்தியர்; வரை–மலை; இராவணனுடன் இசை வாதிட்டு அகத்தியர் மலையை உருகச் செய்தார்; அரவு அணையான்–பாம்புப் படுக்கையை உடைய திருமால்.

110. தொட்ட கழை–இசைத்த புல்லாங்குழல்; கழை–மூங்கில், ஆகுபெயராகக் குழலை உணர்த்தியது; நிரையினம்–பசுக்கூட்டம்; முட்டு அற – (இசை கேட்பதில்) இடையூறு இல்லாமல் இருக்க.

111. கண்நுதலோன்–சிவபெருமான்; கம்பளன், அசுவதரன் என்னும் இரு கந்திருவர்களைச் சிவபிரான் தம் காதணிகளாக அணிந்துள்ளார் என்பர், 'பகரும் இசைதிசை பரவ இருவர்கள் பயிலும் இயல்தெரி வெள்வளைத் தோட்டினர்' (மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ். 2).

112. கோதை–பூமாலையைப் போன்றவள்; உவம ஆகு பெயர்.

விறலியொருத்தி வருதல்

என்று தொழுங்காலை இன்பரச வாணிஎனத்
துன்றும் ஒருவிறலி தோன்றினாள் – குன்றுஅகலா 113

விறலி அதிரூபவல்லியைப் புகழ்தல்

மானே கலாப மயிலே மதனரசத்
தேனே மலர்க்கமலத் தெய்வமே – நானஅகில் 114

சூழ்வேய் எனும்உபயத் தோளில் பசுந்தொடிய
வாழ்வே அதிரூப வல்லியே – ஏழ்உலகின் 115

மாதர் உருஅனைத்தும் வாங்கி ஒளிதுலக்கி
வேதன் வகுத்ததுநின் மேனியே – மாதுபங்கற்கு 116

இன்று பெறக்காட்டும் இக்கோலம் காணாரே
அன்று மதனை அழியாரே – நன்றுநன்று 117

கண்ணேறு வாராமல் காக்க உனைஅந்தப்
பெண்ஏறு பாகர்எனப் பேசினாள் – ஒள்நுதலும் 118

விறலியை அழைத்து இருக்க வைத்தல்

மைகீட் டியகண் மலரால் அருகுஅழைத்துக்
கைகீட்டி ஓர்இடம் காட்டினாள் – வைகாட்டும் 119

---

114. மதன ரசம்–காமச்சுவை; நான அகில் – வாசனைப் பொருளாகிய அகில்.

115. வேய் – மூங்கில்; உபயத்தோள் – இருபுயங்கள்; பசும் தொடிய–பசும் பொன்னாலாகிய வளையல்களை அணிந்த.

116. வேதன் – பிரமன்; மாதுபங்கர் – உமையொரு கூறுடைய சிவபெருமான்.

117. இக் கண்ணியில் 'இக்கோலம் கண்டாரேல் அன்று மதனை அழியாரே' என இருக்கலாமோ எனத் தோன்றுகிறது. ஆனால் இரு சுவடிகளிலும் பாடம் 'காணாரே' எனவே தெளிவாக உள்ளது.

118. கண்ணேறு–திருஷ்டி தோஷம்; பெண் ஏறு பாகர்– மாதொருபாகர், சிவபிரான்.

119. வைகாட்டும்–கூர்மையான.

விறலி யாழுடன் இசைத்தல்

வெய்யஅயில் கண்ணாள் வியன்ஓ வியப்படத்துச்
செய்யபுற் பச்சை திறந்துநிறம் – துய்ய 120

பசும்பொன் உருக்குஎன்னப் பல்நரம்பு செந்தேன்
அசும்பல் எனமிடற்றோடு ஆர்த்து – விசிந்து 121

வலித்து நெகிழ்த்து வலிக்கட்டு உறுத்தி
ஒலித்துப் பதம்கையால் ஓர்ந்து – நலத்தகுபொன் 122

பத்தல் கவியப் பணைமருப்பு மீதுஓங்க
முத்து முலையின் முகட்டுஅணைத்துக் – கைத்துணையால் 123

---

120. வெய்ய – (பகைவர்களிடம்) கொடுமை புரிகின்ற; அயில்–வேல்; ஓவியப் படத்து – சித்திரப் பாவையைப்போல, பாடுபவர்கள் தலை முதலிய உறுப்புகளை ஆட்டாமல் பாடுதல் வேண்டும் என்பது இசைநூல் விதி. இதனைப் பரஞ்சோதி யார், 'மிடறுவீங் காள்கண் இமைத்திடாள் எயிறு வெளிப்படாள் புருவமே நிமிராள் கொடிறது துடியாள்' எனக் கோடிட்டுக் காட்டுவார், (திருவிளையாடல். இசைவாது. 38); செய்ய–செம்மையான; புல்–நன்கு பொருந்திய; பச்சை–யாழின்மேல் போர்த்தப்படும் போர்வை; துய்ய நிறப் பசும்பொன் என இயையும்.

121. யாழின் நரம்புகளுக்கு உருக்கி வார்த்த பசும்பொன் உவமை; அசும்பல் – அசும்புதல், ஒழுகுதல்; மிடற்றோடு–குரலுடன், இங்கு வாய்ப்பாட்டு; ஆர்த்து–பொருந்தி, யாழ் வாசிப்பையும் வாய்ப்பாட்டையும் சரியாக இணைத்துச் சுருதி சேர்த்து என்றவாறு; விசிந்து–(இறுக்க வேண்டிய நரம்புகளை) இறுக்கிக்கட்டி.

122. நெகிழ்த்து– (தளர்த்த வேண்டிய நரம்புகளைத்) தளர்த்தி; வலிக்கட்டு–(யாழ் நரம்பின்) வலிந்த கட்டு; உறுத்தி ஒலித்து–அழுத்தி ஓசையுண்டாக்கி; பதம்–நரம்பின் நிலைமை, பொன்–அழகிய.

123. பத்தல்–யாழின் குடம்; மருப்பு–யாழின் தண்டு; முகட்டு–உச்சியில், இங்கு யாழை மார்புறத் தழுவி என்றவாறு; கைத் துணையால்–இருகைகளாலும்.

தைவரல் ஓர்தல் தெருட்டல் உருட்டுதல்
மெய்வரல் எல்லா விதத்தாலும் – மொய்வீணை 124

வாசித்து அணிவிரலும் மாணிக்கப் பூண்மிடறும்
நேசித்து ஒருமித்து நின்றுஆர்ப்பக் – கேசரமும் 125

கின்னரமும் வீழக் கிளைக்கின் னரர்தமது
கின்னரமும் வீழ்த்திக் கிலேசிப்ப – இன்னிசையால் 126

ஓவியமும் ஆவிபெற உள்ஆவி பெற்றதுஎலாம்
ஓவியம் ஆக உலகுஇருப்பக் – காவில் 127

தருவும் நெகிழ்ந்துஅசலம் தன்மயமாய் நிற்பப்
பருவ மடந்தை பரிந்து – கரம்அமைத்துப் 128

---

124. பா. வே. 1:2,3 ஓத்துத் தவழல்

தைவரல் ஓர்தல்–இசைநூலில் கூறப்பட்டுள்ள எட்டு முதற்றொழில்களில் இரண்டு, இவை பிறவற்றிற்கும் உபலட்சணம், முதற்றொழில்கள் எட்டாவன: பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல் (ஓர்தல்), தைவரல், செலவு, கையூழ், விளையாட்டு, குறும்போக்கு; தெருட்டல், உருட்டு–இசைக்கரணங்கள் எட்டில் இரண்டு இவை மற்றவற்றிற்கும் உபலட்சணம், அவையாவன: வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல், தெருட்டல், எள்ளல், பட்டடை; மொய் வீணை–பெருமை மிக்க வீணை.

125. மாணிக்கப் பூண் மிடறு–மாணிக்கம் இழைத்த அணிகலன்களைப் பூண்ட கழுத்து, இங்கு அடையடுத்த ஆகுபெயராகக் குரலொலியைச் சுட்டி நின்றது; கேசரம்–வண்டு.

126. கின்னரம்–பாடும் ஓர் பறவை; வீழ–விரும்புமாறு; கிளை–சுற்றத்துடன் கூடிய; கின்னரர்–இசையில் வல்லவர்களாகிய ஒரு தெய்வ கணத்தார்; கின்னரமும்–(தமது) யாழையும்; வீழ்த்தி–கீழே போட்டு விட்டு; கிலேசிப்ப–(இவ்விறலியைப்போல நம்மால் யாழ் வாசிக்க முடியவில்லையே என) வருந்த.

127. ஆவி–உயிர்; உள் ஆவி–(ஏற்கெனவே) இருக்கும் உயிர், மன்னுயிர் என்றவாறு; உயிர் உள்ளவை யாவும் இசையில் மயங்கிச் சித்திரம்போல் அசையாதிருக்க என்றவாறு; கா–சோலை.

128. தரு–மரம்; அசலம்–மலை; தன்மயமாய்–(இசையோடு) ஒன்றுபட்டு; பருவ மடந்தை–இங்கு அதிரூபவல்லி; பரிந்து–விருப்பங் கொண்டு; கரம் அமைத்து–கைகளால் போதும் எனச் சைகை காட்டி

தலைவி விறலியைப் புகழ்தல்

போதும் இசையால் பொருப்பை உருக்கிநிலம்
மீது சுமைஆற்ற வேண்டினையோ – ஓதிமமே 129

காந்திருவ தத்தையார் கற்றயாழ் வெல்வதற்குப்
பூந்திருநீ அன்றுவந்தால் போதாதோ – வாய்ந்ததுஒரு 130

மட்டும் உதயன்எதிர் வந்தக்கால் மால்யானை
எட்டும் உனதுயாழ்க்கு எய்தாதோ – கட்டுரைப்பின் 131

உன்னைப்போல் வார்பெருமை ஓர்நா வுடன்பிறந்த
என்னைப்போல் வாருக்கு எளிதாமோ – இன்னிசையால் 132

காதுஅமுதம் உண்டதால்; கண்அமுதம் உண்டதுநின்
சீதமுலை பார்த்ததால்; சேயிழையார் – மாதவத்தால் 133

தலைவியின் வினா

வந்ததோ இந்திரனும் மாலும் குபேரனுமே
தந்ததோ காமன் தரித்ததோ – உந்திவயிற்று 134

---

129. மலைகள் உருகி விட்டால் பூமியின் பாரம் குறைந்து விடும்; ஓதிமம்–அன்னம் போன்ற விறலி: உவம ஆகுபெயர்.

130. காந்திருவதத்தை–கலுழவேகன் என்னும் வித்தியா தரனின் மகள், யாழ்மீட்டலில் வல்லவள், சீவகன் இவளை யாழ் வாசித்து வென்று மணந்து கொண்டான்; பூந்திரு–தாமரையில் வாழும் திருமகளைப் போன்ற விறலி: அடையடுத்த உவம ஆகுபெயர்.

131. உதயன் – பெருங்கதையின் நாயகன், வத்த நாட்டரசன் சதானீகனின் மைந்தன், பிரச்சோதனுடைய பட்டத்து யானையாகிய நளகிரி மதவெறி கொண்ட போது மிக எளிதில் யாழ் வாசித்து அதை அடக்கியவன்; மால் யானை எட்டும்– எட்டுத் திசையானைகளும்.

133. பா. வே. 2:3 சேயிழையாய்

உண்டதால் என்புழி ஆல் ஆசை; நின் சீத முலை பார்த்த தால் கண் அமுதம் உண்டது என இயையும்.

134. வினாக்கள் முத்து மாலையைப் பற்றியன. உந்தி வயிறு–கொப்பூழைத் தன்பாற்பெற்ற உதரம்: இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்க தொகை,

ஒத்த வடமயிலே உன்பால் எவர்இந்த
முத்து வடம்ஈந்தார் மொழிகென்ன — அத்தோகை 135

விறலியின் விடை

ஆயின் சொலக்கேள் அதிருப வல்லீஎன
வாயின் கிளவி வழங்கினான் — கோய்முகடே 136

அந்தாலந்தீர்த்தான் தசாங்கம்

1. மலை

சூழ்கொண்ட லின்தரளச் சோதியாய் வெண்மதியைக்
கேழ்கொண்ட கொல்லிக் கிரியினான் — யாழ்முதலாம் 137

ஐங்கருவிக்கு ஒப்ப அகவும்மயில் ஆடலுக்குப்
பொங்குஅருவிப் பாரிப் பொருப்பினான் — சிங்கத்துப் 138

பேர்அமலைக்கு அஞ்சிப் பிளிறும் களிறுஉகளும்
சேரமலை அம்பொன் சிகரத்தான் — வேரிமலர்த் 139

தேன்நரம்பை ஆர்க்கும் செறிகளபக் காடுதொறும்
வானரம்பாய் பச்சை வரையினான் — நான 140

---

135. வடம் ஒத்த உந்தி வயிற்று மயிலே என இயையும்; வடம் — ஆலிலை, வயிற்றுக்கு உவமை; முத்துவடம் — நித்தில மாலை.

136. கிளவி — சொற்கள்; கோய் முகடு — விண்மீன்கள் நிறைந்த ஆகாயம், பரணி எனப் பொருள் தரும் கோய் எனும் சொல் பொதுவாக நட்சத்திரம் என நின்றது.

137. கொண்டல்—மேகம்; தரளம்—முத்து; கேழ் கொண்ட— நிகர்த்த.

138. ஐங்கருவி—தோற்கவி, தொளைக்கருவி, நரம்புக்கருவி கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என்னும் ஐந்துவிதமான இசைக் கருவிகள்; பாரிப்பொருப்பு—பாரிமலை.

139. அமலை—ஒலி; உகளும் — (வேகமாக) ஓடித்திரியும்; சிகரத்தான்—மலையை உடையவன்; வேரி—நறுமணம்.

140. தேன்—வண்டு: ஆகுபெயர்; இங்கு இருமடியாகு பெயராக வண்டின் ரீங்காரத்தை உணர்த்தியது; நரம்பை—வீணை முதலிய நரம்புக்கருவிகளை; ஆர்க்கும் — நிகர்க்கும்; தேன் நரம்பை ஆர்க்கும் காடு எனவும், களபம் செறிகாடு எனவும்

2. நதி

உவாவால் தடிகறங்க ஊறும்மதம் மாறா
நிவாஆ றுடைய நெடுமால் – சிவாகமத்துச் 141

சாற்றும் பெருந்தீர்த்தம் தாழ்வார் பவம்தீர்த்து அங்கு
ஆற்றும் திருமணிமுத் தாற்றினான் – போற்றுஇரண்டு 142

3. நாடு

மாகதிரும் செந்நெல் வயற்கதிரும் நின்றுபொர
நாகுஅதிரும் தென்மகதை நாட்டினான் – மேகம் 143

நறுச்சித் திரமாடம் நற்குடிஆர் கல்லைக்
குறிச்சிப் பெரும்பத்தில் கோமான் – துறைக்கயத்து 144

4. ஊர்

வாளை குதிப்ப வழிதோறும் பூகம்அடிப்
பாளை முருகுஉயிர்க்கும் பாலையான் – வாள்ஒதுங்கும் 145

தனித்தனி இயையும்; களபம்–யானை; வானரம்–குரங்கு; பச்சைவரை–பச்சைமலை; நான–நீராடுகின்ற.

141. *உவாவால்–யானையினால்; தடி கறங்க–வயல்களில் சூழும்படி; நான உவாவால் ஊறும் மதம் எனவும், தடி கறங்க ஊறும் மதம் எனவும் தனித்தனி இயையும்; குளிக்க வந்த யானைகளின் மதம் நிவாநதியில் எப்போதும் கலக்கிறது, அது நீரோடு வயல்களில் பாய்ந்து அங்கும் சுழன்றுகொண்டு இருக்கிறது என்றவாறு; நெடுமால்–திருமாலைப் போன்றவன்.*

142. *பா. வே. 1:3,4 தாங்கலால் வந்துபுனல்*

தாழ்வார்–நீராடுபவர்களின்; பவம்–பிறவிகளை; ஆற்றும்–(இருவினைகளின் விளைவாகிய) துன்பத்தை நீக்கும்.

143. *இரண்டு மா கதிர்–சூரியன் சந்திரன் என்னும் ஒளிக் கோளங்கள் இரண்டு: நாகு அதிரும்: சிலேடை. 1. மலைகள் அதிர்ச்சியடையும் இது வானக் கதிர்களால்; 2. பெண்மீன்கள் குதிக்கும், இது செந்நெற் கதிரால்.*

144. *நறுஞ்சித்திர மாடம் எனற்பாலது எதுகை நோக்கி வலித்தல் விகாரம் பெற்றது; பெரும்பத்து – அரசாங்கத்துச் சொந்தமான இடம், ஆட்சிக்குட்பட்ட இடம்; துறைக் கயத்து–துறைகளை உடைய நீர்நிலைகளில்.*

145. *பூகம்–பாக்குமரம்;பாளை–மடல்; முருகு உயிர்க்கும்–*

**சோலைத் திரள்அன்னம் சும்மைக் கரும்கவரிப்
பாலைப் பருகுதிருப் பாலையான் – மேல்இட்ட** **146**

**அம்பொன்பூண் கொங்கையார் ஆடவரோடு ஊடிஎறி
செம்பொன்பூண் கால்உறுத்தும் சேலத்தான் – கொம்புஅனையார்**

**மாறுஓ வியம்ஒளிக்கும் மாணிக்க மாளிகையின்
சீர்ஓ வியம்ஒளிக்கும் சேலத்தான் – வீறுஓதம்** **148**

**வாங்கு திகிரி வரையில் பெரிதுஎன்ன
ஓங்கு புரிசை உலகையான் – ஈங்குஅனைத்தும்** **149**

**பெற்ற தலைமைப் பெரியவள் ஓர்பாகத்து
உற்றபிரான் வைகும் உலகையான் – பெற்றத்தான்** **150**

**பூசை இயம்இயம்ஆர் பூதலம்ஓர் ஏழினும்போய்
ஓசை அதிரும் உலகையான் – பாசிழையார்** **151**

மணம் பரப்பும்; பாலை–பாலையூர்; வாள் ஒதுங்கும்–(சூரிய) வெளிச்சம் (உட்புகாமல்) விலகும், மிக அடர்ந்த என்றவாறு.

146. சும்மை–ஊர்; கவரி–எருமை.

147. ஊடி எறி – ஊடல் கொண்டு கழற்றி எறிகின்ற; சேலம்–சின்னசேலம்.

148. பா. வே. 2:2 வியமொளிக்கும்

மாறு – (அழகுப் போட்டியில்) பகையான; ஓவியம் – சித்திரங்கள்; ஒளிக்கும்–மறைந்திருக்கும்; சீர் ஓவியம்–சிறந்த அழகு; ஒளிக்கும்–ஒளிவீசும்; மகளிரின் எழிலில் தோற்றுச் சித்திரங்கள் மாளிகைகளில் ஒளிந்திருக்கின்றனவாம்; வீறுஓதம்–பெரிய கடலினும்.

149. வாங்கு–(உலகைச்சுற்றி) வளைந்துள்ள; திகிரிவரை–சக்ரவாள கிரியை விடவும்; அகழியும் மதிலும் முறையே உலகைச் சூழ்ந்துள்ள கடலையும் சக்ரவாள மலையையும்விடப் பெரியன என்றவாறு; உலகை–உலகியல்நல்லூர்.

150. பெரியவள்–பெரியநாயகி, உலகையின் சிவாலயத்தில் எழுந்தருளியுள்ள இறைவி; பெற்றத்தான் – எருது கொடியை உடைய சிவபெருமான், பொன்பரப்புநாதர்.

151. பூசை இயம்–பூசையின்போது வாசிக்கப்படும் வாத்தியங்கள்; இயம் ஆர்–[illegible] புகழ்மிக்க, பாசிழையார்–பசும்பொன்னா[illegible] நகைகளை அணிந்த மகளிர்.

5. தார்

சங்குவளை மாலைகொடு தாகமா லைக்கொடுக்கும்
செங்குவளை மாலைத் திருமார்பன் – பொங்குஇருளை 152

6. பரி

மேயும் கதிர்ப்பரியின் மீது குரம்புதையப்
பாயும் கவனப் பரியினான் – தூய்மருப்பு 153

7. கரி

முத்த கரடம் முரல்வண்டு மண்டுபெரு
மத்த தடவிகட வாரணத்தான் – ஒத்துப் 154

8. கொடி

படிவணங்கும் எல்லையின்கண் பாய்புலிமீன் வில்லின்
கொடிவணங்கும் மேழிக் கொடியான் – கடவுளர்போய்க் 155

9. முரசு

குன்றில் கடையக் குமுறும் கடல்அடக்கும்
முன்றில் கடைமும் முரசினான் – என்றென்றும் 156

---

152. சங்கு வளை–சங்கினால் ஆகிய வளையல்; தாக மால் – தாகத்தைப்போன்ற காதல்: உவமைத்தொகை, இனித் தாகமாகிய மால் என இரு பெயரொட்டுப் பண்புத்தொகை யாக்கினுமமையும்; மகளிர் அந்தாலந்தீர்த்தானைக் கண்டு காமுற்று மெலிந்து வளையல்களையும் மாலைகளையும் இழக்கின்றனர். இதனைச் செழியதரையன் மாலைகொடுத்து வளையையும் மாலையையும் வாங்கிக் கொள்வதாகக் கூறப் பட்டுள்ளது: பரிவருத்தனை அணி.

153. கதிர்ப்பரி – சூரியனின் தேரில் கட்டப்பெற்றுள்ள குதிரைகள்; குரம்–குளம்பு; கவனப்பரி–வேகமாக ஓடும் குதிரை; தூய் மருப்பு–தூய்மையான தந்தத்தில்.

154. முத்த–முத்துகளை உடைய; கரடம்–மதம் பாய்ந்து உலர்ந்த சுவடு; மண்டு – நெருங்குகின்ற; மத்த – மதத்தினை உடைய; தட–பெரிய; விகட–(பகைவர்களுக்கு) அச்சத்தைத் தரத்தக்க; வாரணத்தான்–யானையை உடையவன்.

155. படி–உலகம், ஆகுபெயராக உலகினர்; மேழிக் கொடி–இது வேளாளர்களுக்கு உரியது.

156. குன்றில் கடைய–குன்றினைக் கொண்டு மதிக்க;

10. ஆணை

அர்த்தநா ரீசனார் அம்பொன் பரப்பினார்
நிர்த்தனார் ஆணை நிலமையான் – எத்திசைக்கும் 157

மூதாதையர்

ஆரியராய் மிக்குஆர் அமுதத் தமிழ்மாலைச்
சீரியர் ஆய செழியனையும் – மாரியுடன் 158

மாகத் தருவெருவ மாழை மழைபொழிந்த
தியாகப் பிரமன் செழியனையும் – மாகலியின் 159

நொந்துஅயரா வண்ணம் நுவலும் உலகுஅளித்த
முந்தயராய்ப் பெற்ற முதன்மையான் – சந்ததமும் 160

வேற்றுமை மயக்கம்; கடல் – பாற்கடல்; மும்முரசு – வீரமுரசு, நியாய முரசு, மண முரசாகிய மூவகை முரசுகள்.

157. அர்த்தநாரீசனார் – மாதொருபாகர்; பொன்பரப்பினார்–உலகைச் சிவ்பிரான்; நிர்த்தனார்–ஆடல்வல்லான்.

158. உரையாசிரியர் குறிப்பு: இக் கண்ணியின் இரண்டாம் அடியின் மூன்றாம் சீர் கிடைத்துள்ள இரு சுவடிகளிலும் செழியனையும் எனவே உள்ளது; எனினும் ஆரியராய், சீரியராய எனப்பன்மையில் வந்ததற்கேற்ப இங்கும் செழியரையும் என இருத்தலே பொருத்தமாகும்.

ஆரியராய் – உயர்ந்தவர்களாக; தமிழ்மாலைச் சீரியர்–தமிழ்மொழியிலமைந்த பாமாலைகளைப் பாடுவித்த சிறப்பினை உடைய பாண்டியர்கள், இனிப் பொதுவாகத் தமிழால் பாடப் பெற்றுச் சிறந்தவர்கள் எனினுமமையும். மஞ்சரியின் முதற் பதிப்பாசிரியர் தமிழ்மாலைச் செழியன் என்பதை ஒருவனின் இயற்பெயராகக் கருதுகிறார். மாரி–மழை.

159. மாகத் தரு–வானுலகிலுள்ள கற்பக மரமும்: உயர்வு சிறப்பும்மை தொக்கது; வெருவ–கண்டு அஞ்சுமாறு; மாழை–பொன்; கலி–வறுமை, பஞ்சம்.

160. உலகு அளித்த – உலகத்தாரைக் காப்பாற்றிய; முந்தயர்–முந்தையர்: எதுகை நோக்கிய போலி; சந்ததமும்–எப்போதும்.

பாட்டன்மார்

மற்றுஆரும் ஒவ்வாத வள்ளல்இரு பத்திரண்டாம்
சிற்றாஞ் செழியன்எனும் செல்வனுக்கும் – துற்றபுகழ்க் 161

கார்அனைய செங்கைத் திருவேங் கடவனுக்கும்
பேரன்என வந்த பிரபுராயன் – பார்மன்னர் 162

தந்தை

மூவரும் வள்ளல்ஒரு மூஎழுவ ரும்முதலா
யாவரும் காவல் இகந்ததற்பின் – பாவலரும் 163

முத்தமிழும் பல்கலையும் மொய்கலியின் மூழ்காமல்
ஒத்த பெருவாழ்வு உதவினோன் – தத்தம் 164

தடமரபில் முன்பிறந்தார் தாங்குகிளை தாங்க
வடமரம்அது என்றுஇயம்ப வந்தோன் – அடைய 165

நிலம்விளங்கத் தோன்றும்இருள் நீக்குஞ் செழியன்
குலம்விளங்கத் தோன்றும் குமாரன் – கலினைப் 166

மாமன்

பொருகண்ண மால்யானைப் பூலோக நாதன்
மருகன் எனச்சிறந்த மன்னன் – இருநிலத்து 167

---

161. இருபத்திரண்டாம் வள்ளல் என இயையும்; மூவெழு வள்ளல்கள் புகழ் பெற்றவர்; சிற்றாஞ்செழியன் அவர்களோ டொப்பவைத்து எண்ணத்தக்கவன் என்றவாறு.

162. பிரபு ராயன்–தலைவன்: ஒருபொருட் பன்மொழி.

163. மூவர்–சேர, சோழ, பாண்டியர்; மூஎழுவர்–முதல், இடை, கடைவள்ளல்களாகிய இருபத்தொருவர்; காவல்–அரசாட்சியை; இகந்ததற்பின்–விட்டபிறகு.

165. பா. வே. 2:4 அடைவுடனே (இது யாப்பின்படி தவறு)
தட மரபில்–பெரிய வம்சத்தில்; வடமரம்–ஆலமரம்; அது: பகுதிப் பொருள் விகுதி; அடைய–முழுவதும்.

166. பா வே. 2:4 கலுழிப்
நிலம் அடைய விளங்கத் தோன்றும் என இயையும்; கலினை–மிளகு, அளவிற் சிறிய யானையின் கண்களுக்கு மிளகு உவமை.

167. மால்–பெரிய.

தம்பியர்

முன்னம் தனது முதல்வர் செயும்புகழைப்
பின்னும் பெருகப் பெருக்கினோன் – ஒன்னலரைக் 168

கைகொண்ட வேலால் களைந்து தமிழ்வளரப்
பெய்கொண்டல் மெய்க்கும் பெருமாளும் – மொய்கலனும் 169

வாளும் கவசமும் மன்உயிரும் தன்இரண்டு
தோளும் துணையும் துணைவிழியும் – நாளும்மிகச் 170

சேந்தபிரான் என்துயரம் தீர்த்தான் எனும்நாமம்
வாய்ந்தபிரான் சூரப்ப வாணனும் – தேர்ந்துகலி 171

நாவுஏந்து இரவோர்க்கும் நல்கும் நரலோகத்
தேவேந் திரன்தாகந் தீர்த்தானும் – பூவேள் 172

அமைய வளர்ந்த அரும்தருமம் கீர்த்தித்
தமையர் எனஉதித்த தக்கோன் – அமலன் 173

மைந்தர்

நடம்தயவு உன்ளம் நயந்துதொழும் அன்பன்
மடந்தையர் இன்ப மதனன் – கடைந்த 174

மதுர அமுத வசனன் அநபாயன்
சதுர இசைய சயந்தன் – முதுதமிழை 175

---

168. ஒன்னலர்–பகைவர்.

169. களைந்து–ஒழித்து; பெய் கொண்டல்–மழை பொழி கின்ற மேகம்.

171. சேந்த பிரான்–செந்நிறம் பெற்ற தலைவன்.

172. வானுலக மன்னனாகிய தேவேந்திரனினின்று பிரித்துக் காட்டுவதற்காக நரலோக என்ற அடை புணர்த்தார்; பூவேள்– மலர்க்கணைகளையுடைய மன்மதன்.

173. அமலன்–இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கியவ ராகிய சிவபெருமான்.

174. நடம்–சிவதாண்டவம்; தயவு–கருணை; கூத்தையும் கருணையையும் என உம்மைத்தொகை.

175. மதுர–இனிய; வசனன்–சொற்களை உடையவன்; அநபாயன்–பிறரால் எப்போதுமே ஆபத்து இல்லாதவன்; சதுர–

ஆராயும் தொல்நூற்கு அகத்தியன்என் னும்செழியன்
தீரா வினைதீர்த்த செல்வனையும் — பாராள் 176

பொருந்துஆகன் நீலமலர்ப் பூந்தாமன் பூமான்
தரும்தாகம் தீர்த்தான் தனையும் — பெரும்தரையைப் 177

பூத்த கருணை பொழியும் விழிகொண்டு
காத்த திருவேங் கடவனையும் கோத்திரத்தில் 178

ஏய திலகன் இருள்நீக் கினபெருமான்
ஆய செழியற்கு அதிபனையும் — தூய 179

சமர முகத்துத் தனஞ்சயனுக்கு ஒக்கும்
குமரர் எனப்படைத்த கோமான் — அமுதகுணன் 180

மைத்துனன்

பூமைத் துளபப் புயத்தான் உலகுடையான்
மாமைத் துனன்ஆம் வரராமன் — காமிப்ப 181

சிவாலயத் திருப்பணி

அந்நாள் உமைக்குஈந்த அர்த்தநா ரீசருமே
இந்நாள் இவன்காணற்கு ஈந்ததுஎனப் — பல்நாளும் 182

புல்கிய நம்பெரிய நாயகிக்குப் பொற்புஆகம்
நல்கியநம் பொன்பரப்பு நாயகற்குத் — தொல்கண்ண 183

திறமையும்; இசைய — புகழையும்; சயந்தன் — வெற்றியையும் உடையவன்.

176. பாராள்—நிலமகள்.

177. ஆகன்—மார்பை உடையவன்; நீலமலர்—குவளை; பூந்தாமன்—அழகிய மாலையை அணிந்தவன்.

178. கோத்திரம்—வம்சம்.

180. சமர முகத்து—போரில்; தனஞ்செயன்—அருச்சுனன்.

181. பூ—அழகிய; மை — பச்சை நிறமுடைய; துளபம்—துளசி; வரராமன் — தெய்வீகம் பொருந்திய இராமபிரானை நிகர்த்தவன்; உலகுடையானுக்கு அந்தாலந்தீர்த்தான் மைத்துனன் என்றவாறு; காமிப்ப—விரும்புமாறு.

182. காணற்கு—தரிசிப்பதற்கு.

183. பெரியநாயகி, பொன்பரப்புநாதர் — உலகியல் நல்லூரில் திருக்கோவில் கொண்ட இறைவி; இறைவனின் திருநாமம்.

சாயகற்குத் தென்உலகைச் சங்கரற்கு நால்வேத
நாயகற்குப் பொன்பரப்பு நாதற்குச் — சேயதிருக் 184

கோபுரமும் மாமதிளும் கோயிலும் மண்டபமும்
மாபுரமும் தேரும் மணிமறுகும் — தீபமும் 185

நந்தா வளமும் நளினத் திருக்குளமும்
கந்தா அளகக் கணிகையரும் — நந்தா 186

விழாவும் சிறப்பும் விமானமும் செம்பொன்
குழாமும் பிறவும் கொடுத்து — வழாமொழியும் 187

சீறாத் திருமுகமும் செந்தமிழும் சந்ததியும்
மாறாப் பெருவாழ்வும் வாங்கினோன் — தேறிப் 188

பல்வகை அறங்கள்

பகர அரிய பழையமறை வாணர்க்கு
அகர நிலைமை அளித்தோன் — புகர்அகலப் 189

பேணி இயம்பும் பெருநூல் கவிஞருக்குக்
காணி எனப்பலஊர் கற்பித்தோன் — மாணிக்க 190

---

184. கண்ண சாயகர்—திருமாலாகிய கணையை உடையவர்.

185. மணி மறுகு — இரத்தினங்கள் இழைக்கப்பெற்ற வீதிகள்.

186. நளினத் திருக்குளம் — தாமரைக்குளம்; கந்தா — கெடாத: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; அளக— கூந்தலை உடைய; கணிகையர்—தேவதாசியர்.

187. வழாமொழி—மாறாத சொல்.

188. சீறா — சினங்கொள்ளாத; தேறி — தக்கவர் யாவர் எனத்தேடி ஆராய்ந்து.

189. மறைவாணர் — வேதங்களில் வல்ல அந்தணர்; அகரம்—மறையவர் குடியிருப்பு; அகர நிலைமை—அக்கிரகார வாசம்; அல்லது சமுதாயத்தில் முதன்மை இடம் எனினுமாம்; புகர் அகல—குற்றங்கள் இல்லாதவாறு.

190. பேணிஇயம்பும் — இலக்கிய மரபுகளைப் பாதுகாத்து நூல்களை இயற்றும்; காணி—உரிமைஉடைய நிலம்.

மாலையும் வெங்கரியும் வாம்பரியும் செங்கனகச்
சேலையும் வந்த தமிழ்க்குரங்தோன் – நூலில் 191

பண்பு நலன்கள்

குயின்ற தமிழ்க்குக் குறுமுனியும் அன்னான்
அயின்ற கடலும் அனையான் – இயன்ற 192

பரிசில் வரிசை பலதெரிந்து நல்கும்
குரிசில் விசைய குபேரன் – கிரிசை 193

வனசத் திருக்கை மலர்சட் டுவம்ஆம்
அனசத் திரசோமன் அன்னான் – முனியின் 194

அரண்அடையக் கைக்கொண்டு அடைந்தார் தனது
சரண்அடையத் தந்த தகவோன் – முரண்அடைந்து 195

வில்பிடித்து வேல்பிடித்து வீரம் பிடித்துஎதிர்த்தார்
புல்பிடிக்க வாள்பிடித்த போராளன் – தல்கம் 196

---

191. வந்த தமிழ்–தன் அவைக்கு வந்த தமிழ்க் கவிஞர்கள்; புலவர்களைத் தமிழாகவே உரைத்தார்; நூலில்–நூல்களால்: வேற்றுமை மயக்கம்.

192. குயின்ற – செய்யப்பட்டு; குறுமுனி – அகத்தியர்; அயின்ற–குடித்த.

193. குரிசில் – வள்ளல்; விசைய – வெற்றியை உடைய; கிரிசை – பார்வதி, இங்கு அன்னபூரணியை நினைத்துக் கூறப்பட்டது.

194. வனச–தாமரை போன்ற; அன்னபூரணியின் திருக் கைச் சட்டுவத்தில் எப்போதும் உணவு தீராமல் கிடைப்பதைப் போன்று அந்தாலந்தீர்த்தான் நிறுவிய அன்ன சத்திரங்களிலும் கிடைக்கும் என்றவாறு; சோமன்–குபேரன்; முனியின்–சினந்தால்.

195. அரண் அடைய–கோட்டை முதலியன யாவற்றையும் முழுமையாக; தனது சரண் அடைந்தார் அடைய என இயையும், தன்னைப் பணிந்தவர் பெறும்படி என்றவாறு; முரண் அடைந்து– பகைத்து.

196. புல்பிடிக்க–நிலத்தில் குப்புற விழுந்து புல்லைக் கவ்வுமாறு; தல் கம் – (பகைவரை) நசுக்கி அழிக்கும் தொழிலை உடைய.

படைகண்ட சேவகன்ஓர் பற்றுஆர் அரசர்கடை
நடைகண்ட காலம்முதல் நல்லோன் – படைமன்னர் **197**

வாசல் வளம்

தண்டு கவிகைகொடி தந்தி பரிகவரி
மண்டி முடிநெருங்கும் வாசலான் – கொண்டல் **198**

சத்திய விரதம்

ஒழிந்தாலும் வேதம் ஒருநான்கும் பொய்யே
மொழிந்தாலும் பொய்யா மொழியான் – தொழும்கை **199**

சிவப்புக் குணங்கள்

உழையவரைக் கற்றவரை உற்றவரை மற்றும்
பழையவரைப் பண்புஅகலாப் பண்பன் – முழுதும்தன் **200**

கொற்றம் துலங்கக் கொடைதுலங்கத் தன்னுடைய
சுற்றம் துலங்கத் துலங்கினோன் – முற்றும் **201**

வழுதி கிரியும் வடகிரியும் மேழி
எழுதி மரபுநிலை இட்டோன் – பழசைநகர் **202**

---

197. பற்று ஆர் அரசர் கடை–நட்புடைய மன்னர்களிடம்; நடைகண்ட காலம் முதல்–நடக்கப் பழகிய குழவிப் பருவத்தில் இருந்து.

198. தண்டு–விருதாக எடுக்கும் கோல்; கவிகை–பல்லக்கு; தண்டுக்கவிகை என ஒன்றாக்கித் தண்டினால் சுமக்கப்படும் பல்லக்கு எனினுமமையும்; தந்தி–யானை; பரி–குதிரை; கவரி–இரட்டப்படும் சாமரை; தண்டு முதலிய அனைத்திடங்களினும் எண்ணும்மை தொக்கது; மண்டி – நெருங்கி; முடிநெருக்கும்–மன்னர்களின் கிரீடங்கள் ஒன்றையொன்று சமீபிக்கும்; கொண்டல்–மேகம்.

199. தொழும் கை–(தன்னை) வணங்குகின்ற கைகளையுடைய.

200. உழையவரை–அண்டினவர்களை.

201. கொற்றம்–வெற்றி; துலங்க–நன்கு விளங்குமாறு.

202. வழுதி கிரி–பாண்டியனுக்கு உரிய பொதிய மலை; வடகிரி–மேரு; மேழி–ஏர்ச்சின்னம்; பழசைநகர்–பழையனூர், இவ்வூரைச் சேர்ந்தவளாகிய நீலியின் கதை வெளிப்படை.

வேளாளர் பெருமைகள்

துன்னிய நீலி தொடரும் பழிகழுவி
வன்னியை நீராக்கும் வாய்மையான் - முன்னம் 203

கரகமலம் நீட்டிக் கவிஞற்கு உதவ
உரக மணிகொண்ட உரவோன் – பரமன் 204

வளைவாரி நஞ்சுஉண்ட வாய்க்கு அன்று அமுது
முளைவாரி இட்ட முதலோன் வளமாறன் 205

சோதிப்பச் சூல்முதுகில் சூடும் அடிசிலை
ஆதிப் பருவத்து அருளினோன் – மீதில் 206

உறையிட்ட காருக்கு ஒருபிணை இட்டுஅன்று
சிறைவிட்டு அகல்வித்த சேயோன் – இறைமைபுரி 207

மூவேந் தரையும் முனிந்து தளைப்படுத்திப்
பாவேந்தர் என்னப் பணிகொண்டோன் – பூவான் 208

---

203. வன்னி–தீ: வன்னியை நீராக்கும் வாய்மை–தன் சத்தியத்தின் உக்கிரத்தோடு ஒப்பிடும் போது நெருப்பு வெறும் தண்ணீர் என்றே சொல்லலாம்படி குளிர்ந்திருக்கும் என்றவாறு.

204. இவ் வரலாறு பிள்ளைத்தமிழ் 47ஆம் பாடல் உரையில் காட்டப்பட்டது.

205. வளை – சங்குகள் நிறைந்த; வாரி – கடல்; இது இளையான்குடி மாறநாயனார் வரலாறு.

206. ஆதிப்பருவத்து–முற்காலத்தில்; சூலி முதுகில் சுடு சோறிட்ட செயல் வேளாளர்களைப் பற்றிய நூல்களிலும் பேசப் படுகிறது. வரலாறு தெளிவாக விளங்கவில்லை.

207. உறையிட்ட – மூடிவைக்கப்பட்ட, தளைப்படுத்தப் பட்ட;சேயோன்–முருகனைப்போன்றவன்;கார்காத்த வேளாளர் எனப் பெயர்வருவதற்குக் காரணமாகிய இவ் வரலாறு முன்னர்க் கூறப்பட்டது.

208. களப்பாளனை மூவேந்தரும் பாடிய இவ் வரலாறு முன் சுட்டப்பட்டது. பூவான்–உலகும் சுவர்க்கமும்: உம்மைத் தொகை.

அதிர வழுதியைவென்று அன்றுஒரு பாணற்கு
மதுரை அரசுஅளித்த மன்னன் — முதுசீர் 209

எழுகலிங்கத் துப்பரணிக்கு எல்லைஇது என்ன
எழுகலிங்க மும்கொண்டு எழுந்தோன் — முழுதும் 210

மருப்பில் எடுத்து வலையப் புயமாம்
பொருப்பில் எடுத்துப் புரந்து — விருப்பில் 211

ஒருமான் அடிதொடர்ந்த உத்தமன் நீங்காப்
பெருமால் நிலமடந்தை பெம்மான் — கிரிபயந்த 212

பேதை இடப்பாகப் பெம்மான் சடைமகுடக்
கோதைக் கடவுள் குலத்தினோன் — ஓதி 213

அந்தாலந்தீர்த்தான்

உவக்கின்ற பாவோர்க்கு உதவிஇரு செங்கை
சிவக்கின்ற அந்தாலங் தீர்த்தான் — நிவக்கும் 214

தவன்நேயன் தெய்வத் தவநேயன் — முக்கண்
சிவன்நேயன் அந்தாலங் தீர்த்தான் — கவினும் 215

இசைகாத்து இயல்காத்து இருநிலத்தோடு எட்டுத்
திசைகாத்த அந்தாலங் தீர்த்தான் — சசியும் 216

---

209. இது பற்றியும் முன் சுட்டப்பெற்றது.

210. கலிங்கம் வென்று பரணி கொண்ட கருணாகரத் தொண்டைமான் ஒரு வேளாளனே.

211. உலகை மருப்பில் எடுத்தது வராக அவதாரத்தில்; புயமாம் பொருப்பில் எடுத்தது மன்னர்களாக இருந்து ஆள்கின்ற போது; விருப்பில்—விரும்பி; சீதையின் மீது தான்கொண்ட காதலால் எனினுமாம்.

212. ஒரு மான்—ஒப்பற்ற பொன்மானாகிய மாரீச மான்; உத்தமன் — இராமன்; பெருமால் நீங்கா நிலமடந்தை என இயையும்.

213. கிரி பயந்த பேதை — மலைமகள்; சடை மகுடக் கோதை—திருச்சடையில் உள்ள பொன்னாகிய கங்கை; கடவுள் குலம்—தூய மரபு; ஓதி—புகழ் மொழிகளைக் கூறி.

214. பாவோர்க்கு—கவிஞர்களுக்கு; நிவக்கும்—உயர்கின்ற,
216. சசி—சந்திரன்.

பொருப்புஆ தவனும் புறத்துஎழி னும்சொல்
திருப்பாத அந்தாலங் தீர்த்தான் – உருத்துக் 217

கறைகொண்ட வேலினான் கன்னிகங்கை மட்டும்
திறைகொண்ட அந்தாலங் தீர்த்தான் – நிறையும் 218

மருவளரும் கல்லார மார்பத்துச் செல்வத்
திருவளரும் அந்தாலங் தீர்த்தான் – புரிகுழலே 219

முத்துமாலையின் பெருமை

தந்தவடம் இந்தத் தரளவடம் இவ்வடத்துக்கு
அந்தவட மேருவும்நேர் அல்லகாண் – இந்திரனார் 220

பொன்நகர மும்கடவுள் புட்பகஊர் திப்பெருமான்
நல்நகர மும்விலைக்கு நண்ணும்காண் – பொன்நகரத்து 221

அந்த மணியும் அழகு தரம்பார்க்கில்
இந்த மணியோடு இணைஅலகாண் – பைந்தொடியே 222

சங்க நிதியும் தரும்பற்ப மாநிதியும்
துங்க விலைஇதற்குத் தோற்கும்காண் – மங்கைநல்லாய் 223

---

217. பொருப்பு ஆதவன்–உதயகிரியில் தோன்றும் சூரியன்; புறத்து–(தாம் தோன்ற வேண்டிய திசைகளிலேயல்லாமல்) வேறு திசைகளில்; திருப்பாத–மாறாத; உருத்து–(பகைவர்களைச்) சினந்து.

218. கறை–இரத்தக்கறை; கன்னி–குமரி; திறை–கப்பம்.

219. மரு–வாசனை; கல்லாரம்–கருங்குவளை; புரிகுழலே–(அதிரூபவல்லியாகிய) சுருண்ட கூந்தலை உடையவளே. விளிப்பவள் விறலி.

220. புரிகுழலே! இந்தத் தரள வடம் அந்தாலந்தீர்த்தான் தந்தவடம் என்பது முடிபு.

221. கடவுள்புட்பக ஊர்தி–தெய்வத் தன்மை பொருந்திய புட்பகவிமானம், இதன் பொருள் குபேரன், அவன் நகரம் அளகாபுரி; பொன் நகரத்து–அமராவதியில் உள்ள.

222. அந்த மணி–சிந்தாமணி: நெஞ்சறி சுட்டு; அழகு தரம்: உம்மைத்தொகை.

223. துங்க விலை – விலைத் துங்கத்தில் என மாறுக, விலையின் உயர்ச்சியில் என்றபடி.

கண்ட விலையே கருதில் பதினெட்டு
மண்டலமுஞ் சூறைகொள்ள வல்லதுகாண் — புண்டரிகத்து 224

ஊடும் முகமடவார் ஒண்கடைக்கண் பல்கோடி
ஆடும் அவன்மார்பில் ஆரம்காண் — நீடுஅமர்க்குத் 225

தேங்காச் செருமான் திருத்தோள் எனுங்கழையே
நீங்காத் தடவரையின் நித்திலங்காண் — ஈங்குப் 226

புதிய குளிர்வும் பொலிவும் மலிவும்
மதியும் ஒதுங்க வருங்காண் — இதன்நலம்என்று 227

விறலி பரிசுபெற்று விடைகொள்ளல்

அன்ன விறலி அறையுங்கால் மாணிக்கம்
மின்னல் எழும்கனக மேகலையும் — பொன்அவிரும் 228

---

224. பதினெட்டு மண்டலமாவன: சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுவம், குடகம், கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலிங்கம், கலிங்கம், வங்கம், கங்கம் மகதம், கடாரம், கவுடம், கோசலம், தமிழகம்; சூறை கொள்ள — கொள்ளை கொள்ள; புண்டரிகம்—தாமரை.

225. பா. வே. 1:3 ஒண்கடகப் பல்கொடி

அந்தாலனின் மார்பில் பல மகளிரின் விழிகள் ஆடுகின்றன வாம்; நீடு அமர்—நீண்ட போர்.

226. பா. வே. 2:2,3 புயவரையின் நித்திலங்காண்

செரு மான்—போர்களை உடையவன், வென்றவன் என்பது கருத்து; கழை—மூங்கில்; தடவரை—பெரிய மலை, இங்கே மார்பைக் குறிக்கிறது: உவம ஆகுபெயர். பொதுவாக மகளிரின் தோள்களுக்கு மூங்கில் உவமையாகக் கூறப்படும். இங்கு அந்தாலந் தீர்த்தானின் மார்பு மலையாகவும் இருகைகளும் அதில் விளைந்த மூங்கிலாகவும் கூறப்பட்டுள்ளது.

227. குளிர்வு—குளிர்ச்சி; பொலிவு—எழில்; மலிவு—முழுமை; பூரணத்துவம்; மதியும்—சந்திரனும்: உயர்வு சிறப்பும்மை; ஒதுங்க—நாணி அகலும்படி; புதிய குளிர்வும் பொலிவும் மலிவும் (மிகுந்த) இதன் நலம் மதியும் ஒதுங்க வரும் என்பது முடிபு.

228. அன்ன—அந்த.

சேலையும் (காப்பும்) திரள்வயிரக் காறையும்பொன்
ஓலையும் கிண்கிணியும் ஒண்சிலம்பும் – சாலவும் 229

ஈதலும் அன்னாள் இறைஞ்சி விடைகொண்டாள்,
போதலும் அக்கணமே பூங்கொடியும் – காதல் 230

அதிரூபவல்லி காதல்கொள்ளுதல்

அவனது கொண்டாள்; அதிர்ஆழி ஏழ்என்
கவன துரகன் கரந்தான் – திவளும் 231

மாலையின் வரவு

சிவந்தபடத்து அண்டம் திரைவளைத்தது என்ன
நிவந்தபடச் செக்கர் நிகர்ப்ப – உவந்த 232

தடம்பொய்கை வண்டுஉறங்கத் தண்மலர்க்கா எல்லாம்
குடம்பை தொறும்புள் குழம்பப் – படர்ந்து 233

பனிமாலை தோன்றுதலும் பைந்தொடிமார் அந்தத்
தனிமாலை உற்றாளைத் தாங்கி – இனிமுத்த 234

---

229. பா. வே. 1:2,3 மேகலையும் திரள்வயிரக்
இப் பாடம் யாப்பின்படியும் பிழையானது.
ஓலை–காதணி.

230. இறைஞ்சி–வணங்கி; பூங்கொடி–அதிரூபவல்லி.

231. பா. வே: 1:4 ஏழின்

அவனது காதல்–அந்தாலந்தீர்த்தானாகிய அவன் மேல் மையல்; அதிர் ஆழி–(வேகமாகச் செல்வதால்) அதிர்கின்ற சக்கரம்: வினைத்தொகை; ஏழ் என் துரகன், கவன துரகன் எனத் தனித்தனி இயையும்; ஏழாகிய வேகமாகச் செல்கின்ற குதிரைகளை உடைய சூரியன்; கரந்தான்–மறைந்தான்.

232. சிவந்த படத்து–செந்நிறச் சீலை; அண்டம் – அண்டகோளம்; சிவந்த படத்துத் திவளும் திரை வளைத்தது என்ன; செக்கர்–செவ்வானம்; நிகர்ப்ப–ஒளிவீச.

233. தடம்பொய்கை–பெரிய நீர் நிலை; குடம்பை–பறவைக்கூடு; புள்குழம்ப–பறவைகள் அங்குமிங்குமாய் அலைய.

234. பைந்தொடிமார் – பசிய வளையல்களை அணிந்தவர்கள், தோழியர்; தனிமாலை–இணையற்ற மயக்கம், பெருங்காதல்.

மாளிகையில் போதுவோம் வாஎன்று எழுந்துஏகிச்
சூளிகையில் புக்கு அருகு சூழ்ந்திருப்ப — வாள்விழிமுன் 235

செவ்வான் வடிவம் திரள்மீன்அவ் அங்கப்பூண்
வெவ்வான் நிலவு விழுத்தாமம் — எவ்வாயும் 236

வீசும் இளம்தென்றல் மெய்ப்பூண் அரவுஉயிர்ப்பு
மூசு கடல்வாய் முழங்குதுடிப் — பூசல் 237

வசந்தன் மிடற்றுவிடம் மாறுபடச் சேவின்
அசைந்தமணி ஏற்றுமணி ஆர்ப்புப் — பசும்போதின் 238

வாளி திரிசூலம் மாவில் குயில்அன்றில்
கூளிப் பெருந்தொகுதி கொள்ஓசை — நீளத் 239

திருத்தும்இருள் வாரணத்தோல் சேர்ந்துஅந்தி அந்த
உருத்திரனைப் போல்வந்து உறலும் — வருத்தம் 240

அதிரூபவல்லியின் துன்பம்

மிகுந்து மயங்கி வியந்துஉருகித் துன்பம்
புகுந்து உலர்ந்துஉயிர்க்கும் போது — திகழ்ந்த 241

---

235. *குளிகை—நிலாமுற்றம்.*

236. *இக் கண்ணி முதல் 240 வரை அந்திமாலை உருத்திரனாக உருவகிக்கப்படுகிறது. செவ்வான் வடிவம்—செக்கர் வானம் உடல்; திரள்மீன்—மீன்திரள் என மாறுக; அங்கப்பூண்—எலும்பு அணிகள்; விழுத்தாமம் — சிறப்புடைய மாலை; எவ்வாயும்—எல்லா இடத்திலும்.*

237. *மெய்ப்பூண்—உடலில் அணிந்துள்ள ஆபரணங்களாகிய; அரவுஉயிர்ப்பு—பாம்புகளின் மூச்சு; மூசு—ஒலிக்கின்ற; துடி—உடுக்கை; பூசல் -போர் விளைக்கின்ற.*

238. *வசந்தன்—மன்மதன்; மிடற்று விடம்—கழுத்திலுள்ள ஆலகால நஞ்சு, மன்மதன் கரிய நிறத்தன் ஆதலினாலும் துன்பம் தருபவன் ஆதலினாலும் நஞ்செனப் பட்டான்; சேவின்—காளைகளின்; ஏற்று—சிவபெருமானின் ஊர்தியாகிய இடபத்தின்; ஆர்ப்பு—ஒலி.*

239. *வாளி—அம்பு; மா—மாமரம்; கூளி—பூதகணங்கள்; குயில், அன்றில் ஆகிய பறவை இனங்களின் ஒலியைப் பூத கணங்களின் சத்தமாக உருவகிக்கிறார்.*

240. *வாரணத் தோல்—யானை உரி,*

தாதியர் உபசாரம்

தளிரும் மலர்களும்பைந் தாதும் கொணர்ந்து
குளிர அமைத்துஅமளி கோலி – ஒளித்த 242

தெளிவுஒண் பனிநீரும் செஞ்சாந்தும் ஆட்டிக்
கிளியின் மொழியைக் கிடத்த – ஒளிஇழைஉள் 243

காமக் கனலால் கருகும் சருகுஆகித்
தாமத் தளிர்அமளி சாம்புதலும் – பூமடந்தை 244

ஆற்றாது அலம்வந்து அயர்வாளை வாள்விழியார்
மாற்றாது எடுத்துஅணைத்து மார்புஅணைப்பப் – போற்றி 245

அணைக்கும்தம் அங்கம் அழல்படுபூங் கொம்பில்
புணைக்கும் பசும்சூடு பார்த்தார் –மணிப்பளிங்கு 246

வேய்ந்ததுஒரு மண்டபத்து வெண்ணிலாச் சிந்தும்இந்துக்
காந்த அமுதக் கதிர்மேடைப் – பூந்தண் 247

அரம்பைக் குருத்தில் அடுக்கல் அடுக்கிப்
பரம்பப் புனைந்தமலர்ப் பாயல் – பெருந்திருவை 248

வைத்துப் பனிநீர் வழியநறும் சாந்துஆட்டி
முத்துத் தொடையல் முலைசூட்டி – எத்திசையும் 249

ஏலவட்ட வார்குழலார் ஈரப் பனிநீர்தோய்த்து
ஆலவட்டம் வீசி அயல்நின்றார் – சாலப் 250

---

242. அமளி–படுக்கை; கோலி–அமைத்து.

243. கிளியின் மொழி–அதிருபவல்லி.

244. தளிர் அமளி–தளிர்களாலான படுக்கை; சாம்புதலும்–வாடிவிடவும்; பூ மடந்தை–திருமகளைப் போன்ற அதிருபவல்லி.

245. அலம்வந்து–துன்புற்று; வாள் விழியார்–தோழியார்; மாற்றாது–நீக்காமல்.

246. அங்கம்–மேனி; அழல்–நெருப்பு; பணைக்கும்–மிகுகின்ற; பசும் சூடு–புதுமையான வெப்பம்.

248. அரம்பைக்குருத்து – வாழைக்குருத்து; பரம்ப – பரவலாக; மலர்ப்பாயல்–பூப்படுக்கை.

249. தொடையல்–மாலை.

250. ஏல–மணம்மிக்க; வட்ட – வளைவான, சுருண்ட;

அதிரூபவல்லியின் துயர் மிகுதல்

பரிகரிப்பது எல்லாம் பகைத்துத் திகைத்து
விரிகரித்துஉள் நைந்து வெயர்த்தாள் — இருதனத்தில் 251

பாய்ந்த பனிநீர் படும்உலையில் காய்இரும்பு
தோய்த்தபனி நீராய் சுவறினாள் — சாய்ந்தஇலின் 252

வெம்புழுக்கம் கஞ்சன் மெழுகுஎடுத்தது ஓர்வடிவில்
செம்புஉருக்கி விட்டதுஎனத் தேம்பினாள் — கொம்புஅனையாள்

துங்க முலைத்தரளம் தூள்வெடிப்ப அங்கிருந்தார்
அங்கம்எலாம் கொப்பளங்கள் ஆக்கினாள் — திங்கள் 254

கதிர்முகத்தார் ஆலவட்டம் கைவீசும் தோறும்
முதிர விரகத்தீ மூண்டாள் — எதிர்இலாப் 255

அதிரூபவல்லி அரற்றல்

பெண்நீர் மொழியீர் பிறைவடவை ஆனதுஅலால்
கண்ணீர்க் கடல்எனக்குக் காயாதோ — வண்ணமதன் 256

மேவியகூற்று ஆனதுஅலால் பொன்முளரி வாளிதரும்
ஆவிகவர்ந்து உண்ண அறியானோ — மேவுதென்றல் 257

வார்—நீண்ட, இம் மூன்றும் தனித்தனிக் குழலுக்கு அடைகள்; ஆலவட்டம்—விசிறி.

251. பரிகரிப்பது—துன்பத்தைப் போக்குவது;விரி—விரிப்பை; கரித்து—சூட்டால் கரியச் செய்து.

252. சுவறினாள்—வற்றச் செய்தாள்.

253. கஞ்சன் – வெண்கலத்தை உருக்கி வார்ப்பவன்; மெழுகு எடுத்தது ஓர் வடிவு—ஒரு சிலை வடிப்பதன் முன்னர் செய்துகொள்ளப்படும் அச்சு.

254. துங்க—உயர்ந்த.

255. கதிர்—ஒளிமிக்க

256. பெண்—பெண்களே: அண்மைவிளி; பிறை கடலில் இருக்கும் வடவாமுகாக்கினிபோலச் சுடுகிறது, ஆனால் அதனால் என் கண்ணீர்க் கடலை வற்றவைக்க முடியவில்லையே; வண்ண மதன்—அழகிய மன்மதன்.

257. கூற்று—இயமன்; முளரி வாளி—தாமரை அம்பு, காமன் கணைகளில் தாமரை காதலரை நினைப்பிக்கும், 'நினைக்கும்

நஞ்சுவணம் ஆனதுஅலால் நான்ஒன்றும் பொன்கிறத்து
மிஞ்சும்வணம் பார்த்தக்கால் மீளாதோ — மஞ்சு அளவு 258

மூசு திரைஅரவம் மூண்டுஎழுந்தது அன்றிஎதிர்
வீசும் இளவாடை விழுங்காதோ — பாசிழையீர் 259

காரிகையீர் என்உள் கனல்இந் நெடியமால்
வாரி சுவறுவிக்க மாட்டாதோ — ஆர்த்துஎனது 260

காது சுடும்சூடு கண்டால்இவ் வேய்ங்குழலை
ஊதும்இதழ் என்படுமோ ஓதீரே — மாதுநல்லீர் 261

கோளாய அன்றில் குயில்முழக்கம் என்செவிக்குக்
கேளாஊர் ஒன்று கிடையாதோ — வாள்இரவி 262

அரவிந்தம் நீள்பசலை மாம்பூ' (இரத்தினச் சுருக்கம். 11); காதலால் அதிருபவல்லியின் உயிர் போய்விடுகிறது. ஆனால் அந்தாலனின் நினைப்பு அதனை மீட்டுவிடுகிறது என்ற கருத்து முளரி வாளி தரும் ஆவி என்றதனால் பெறப்படுகிறது, மாரன் கூற்றுவன் ஆனான், ஆனால் கொல்ல அறியவில்லை.

258. நஞ்சு வணம் — விடத்தின் தன்மை, சிலேடையாக விடத்தின் நிறம்; நஞ்சின் தன்மை தான் தீண்டினோரை நீல நிறமாக்கல், நான் பசந்து பசும்பொன்னின் நிறத்தைப் பெற்று விளங்குகிறேன். தென்றலாகிய நஞ்சு தீண்டி என்னைக் கரிய நிறத்தவள் ஆக்கவில்லை; மஞ்சு அளவு — மேகமண்டலத்தின் வரையிலும்.

259. மூசு—மொய்த்தல்; திரை அரவம்—அலைகளால் நேரும் ஒலி சிலேடையாக அலைகளாகிய பாம்பு என்னும் பொருள்படும்; வாடை — வடக்குத் திசையிலிருந்து வரும் காற்று; அரவம் வானளாவ எழுகிறது, ஆனால் வாடைக்காற்றை விழுங்கவில்லை; பாசிழையீர்—பசிய பொன்னணிகலன்களை அணிந்த தோழியரே.

260. பா. வே. 1:3,4 கரிய னெடியமால்

உள் கனல்—உள்ளத்தில் உள்ள தீ; மால் வாரி—காம சமுத்திரம்; சுவறுவிக்க—வற்றச்செய்ய; ஆர்த்து—கேட்டு.

261. வேய்ங்குழல்—புல்லாங்குழல்.

262. கோளாய—தீக் கோள்களைப் போலத் துன்பம் தருகின்ற; வாள் இரவி—ஒளி பொருந்திய சூரியன்.

மான்விழுங்கும் முந்நீர் மகரம் திமிங்கிலம்ஆம்
மீன்விழுங்கிற் றோஇருளின் மீளாதோ — தேன்மொழியீர் 263

அவள்படும் ஆறாத் துயரம்

என்று புலம்பும் எழும்விழும் வெய்துயிர்க்கும்
ஒன்றும் உயிர்ப்பிலாள்போல் உள்அடங்கும் — அன்றித் 264

தளரும் மலங்கும் தாகிக்கும் ஏங்கும்
விளரும் அழுதழுது விம்மும் — வளைநெகிழும் 265

நாண்அழியும் தூசுஒழியும் நல்அறிவு பேதிக்கும்
பூண்ஒழியும் மேனி புலர்ந்துஅயரும் — ஊண்ஒழியும் 266

தோழியர் செய்வதறியாது மயங்குதல்

இவ்வழியே நைவாளுக்கு என்செய்வோம் என்றுஇகுளை
மைவிழிவேல் கண்ணீர் வழித்துஎறிந்து — கைவயிறு 267

வைத்து நெரித்து மறுகி உளம்கலங்கிப்
புத்தி தளரும் பொழுதின்கண் — சுத்தச் 268

சூரியன் உதித்தல்

செழியனைஅண் டார்புகழ்போல் தேய்ந்து பலமீனி
னுழிஒளிகள் எல்லாம் ஒளிப்ப — விழைவின் 269

---

263. பா. வே. 1:1 வான்விழுங்கும்

மான்—விலங்கு. இங்குத் தேரில் பூட்டிய குதிரைகள்; முந்நீர் மகரம் விழுங்கும் திமிங்கிலம் ஆம் மீன் வாள் இரவி மான் (மானை) விழுங்கிற்றோ என இயையும்.

264. வெய்துயிர்க்கும்—பெருமூச்சு விடுவாள்.

265. மலங்கும்—மனம் கலங்குவாள்; தாகிக்கும்—பெரு விருப்பம் கொள்வாள்; விளரும்—வெளுத்த நிறத்தினளாவாள்.

266. தூசு—ஆடை; பேதிக்கும்—மாறுபடும்; புலர்ந்து—வாடி; அயரும்—சோர்வாள்.

267. நைவாளுக்கு—துன்பமுறுபவளாகிய அதிரூபவல்லிக்கு; இகுளை—தோழி; மைவிழி, வேல்விழி எனத் தனித்தனி இயையும்.

269. அண்டார்—அணுகாதவர்கள்; உழி: ஏழன்உருபு.

அவனை அடைந்தார் அணிவதனம் போலப்
புவன வசனம் பொலிய — நவைதீரும் 270

அன்னா னுடைய அடல்ஆக் கினைத்திகிரிப்
பொன்னார் வரையைப் புறம்சூழ்ந்து — மின்னோடு 271

வந்தது எனஉதய மால்வரையின் மீதுகிளர்
சுந்தரப்பொன் தேர்இரவி தோன்றுதலும் — சிந்தைதளர் 272

அதிருபவல்லியைத் தோழியர் போற்றுதல்

பெண்அமுதம் என்னப் பிறங்கும் இளம்கொடியைப்
பண்ணின் மொழியார் பரிந்துஎடுத்துத் — தண்உறும்நீர் 273

ஆட்டிக் கலவை அணிந்து பலகலனும்
பூட்டி அருகுஇருந்து போற்றுதலும் — வேட்டுஆங்கு 274

குறத்தி ஒருத்தி வருதல்

ஒருத்தி குறத்தியுடன் எய்தத்தார்க் கோதை
அருத்தி தழைத்துஆங்கு அழைத்துக் — கருத்தில் 275

தலைவியின் வினாவும் குறத்தியின் சொல்லும்

கருதுஅல்லல் வந்ததுஎது காரணத்தால் என்ன
ஒருதலத்தை நீதொடுஎன்று ஓதத் — திருவும்தன் 276

---

270. அவனை என்றது செழியனை: பண்டறி சுட்டு; அணிவதனம்—அழகிய முகம்; புவன வசனம்—நீர்நிலைகளிலுள்ள தாமரைகள், நீர் எனப் பொருள்தரும் புவனம் என்னும் சொல் ஆகுபெயராக நீர்நிலைகளை உணர்த்திற்று.

271. பா. வே. 1:3,4 வடவாய்த் திசைத்திகிரிப்
அன்னான்—இங்கும் அந்தாலந்தீர்த்த செழியனே; அடல்—வலிமை மிக்க; ஆக்கினைத் திகிரி—ஆக்ஞா சக்கரம், இது சக்கரவாளகிரிக்கு உவமை; புறம் சூழ்ந்து—வெளிப்புறமாக வலம்வந்து.

274. கலவை—வாசனைப்பூச்சு; ஆங்கு வேட்டு என மாறுக, அவ்விடத்தை நாடி எனப்பொருள், இனித் தோழியர்கள் விரும்பிய வண்ணமே என்ற பொருளில் வேட்டாங்கு எனக் கொள்ளினும் அமையும்.

275. தார்க்கோதை—மலர்ச்சரங்களை அணிந்த கூந்தலை உடைய அதிருபவல்லி; அருத்தி தழைத்து—ஆசை மேலிட்டு.

276. நீ ஒரு தலத்தைத் தொடு என இயையும்; திரு—இலக்குமியைப் போன்ற அதிருபவல்லி.

அதிரூபவல்லி செயலும் குறத்தி குறிகூறுதலும்

முத்து வடம்தொடலும் முத்து வடநிமித்தம்
இத்துணையும் வந்தது இலங்கிழையாய் — சித்தம் மயல் 277

தீர்குவைநீ இன்றுமனம் சிந்தித்தான் தன்பவனி
பார்வை குளிரும் படிதொழுவை — தார்கொணர்ந்து 278

தோழியும் நல்கும் துணைவன் அணைந்துநீ
வாழி எனஇருந்து வாழ்த்துங்கால் — வாழிச் 279

அந்தாலந்தீர்த்தான் பவனி

செழியன் வளர்த்தெடுத்த தென்நூ ல் வளர்க்கும்
செழியன்எனும் அந்தாலந் தீர்த்தான் — இழைபொன் 280

துயில்நீங்கி எழுதல்

நகையும் மணிவெயிலும் நான அகிலின்
புகையும் விளக்கும் பொலிந்து — தொகுபூம் 281

படம்கட்டுப் பொன்அறையில் பைம்போது அமளித்
தடங்கண் துயில்உணர்ச்சி தந்து — குடம்கமழ்வித்து 282

---

277. இத்துணையும்—இவ்வளவு துன்பங்களும்; இலங்கு இழையாய்—ஒளிவீசும் அணிகலன்களை அணிந்துள்ளவளே.

278. இன்று என்னும் சொல்லை இடைநிலை விளக்காக முன்பின் இரு வாக்கியங்களுக்கும் கொள்க; சித்தம் மயல் நீ இன்று தீர்குவை; மனம் சிந்தித்தான் தன் பவனி இன்று பார்வை குளிரும்படி தொழுவை என இயையும்; மனம் சிந்தித்தான்—(உன்) உள்ளத்தால் கருதப்பட்டவனாகிய அந்தாலந்தீர்த்தான், பிறவினை விகுதி தொக்கு நிற்கும் இத்தகைய ஆட்சியை வடமொழியில் அந்தர்ப்பாவிதணிச் என்பர்.

280. முதல் செழியன் பாண்டியன் என்ற பொருளில் வந்தது; தென்நூல்—தமிழ்: ஆகுபெயர்.

281. பா. வே. 1:4 அகிலும்

நான—மணமிக்க.

282. அமளி—படுக்கை; குடம் கமழ்வித்து—நீர் எடுக்கும் குடத்துக்கு வாசனையூட்டி.

நீராடலும் தானம்செயலும்

ஏற்கும் புதுமஞ் சனம்ஆடி எப்பொருளும்
ஆர்க்கும் சுருதி யவர்க்குஈந்து – நீர்க்கொழுந்து 283

ஆடை மாற்றிக்கொள்ளல்

தூவிய தூசு துறந்து மருங்குஉடுத்த
நீவி திசையில் நிலாஎறிப்பத் – தாவு 284

பூண்கள் அணிதல்

வெயிலும் நிலவும் விரவும்மணி முத்தில்
குயிலும் மவுலி கொடுப்பச் – சயிலச் 285

சிகரத் துணைஇணையில் சேர்ந்தகதிர் என்ன
மகரக் குழைதோள் வருடத் – துகிர்இல் 286

பயத்து வலையப் பரவைநிலம் தாங்கும்
புயத்து வலையம் பொலிய – நயத்திருவின் 287

---

283. மஞ்சனம் ஆடி–நீராடி; எப்பொருளும் ஆர்க்கும்– இவ்வுலகத்திலுள்ள எல்லாப் பொருள்களைப் பற்றியும் முழங்கும்; சுருதி–வேதம்; சுருதியவர்–மறையோர்; நீர்க் கொழுந்து– தண்ணீர்த் துளிகள்.

284. தூவிய–சிந்திய, அந்தணர்களுக்குத் தானம் அளிக்கையில் வார்த்துக் கொடுத்த நீர் சிதறியது என்க; மருங்கு–அரை; உடுத்த–அணிந்த; ஆடை மருங்கு உடுத்த திசையில் நிலா எறிப்ப நீவி என இயையும்.

285. வெயிலும் நிலவும் முறையே வைரமும் முத்தும் தரும் ஒளிக்கு உவமைகள்: நிரல் நிறை; மவுலி–கிரீடம்; சயிலம்–மலை.

286. சிகரத் துணையில் சேர்ந்த கதிர் இணை என மாறுக; மலையுச்சிகள் இரண்டில் இரு சூரியர்கள் இணைந்தாங்கு என்பது பொருள்: இல்பொருளுவமை; மகரக்குழை – மீன்வடிவமாகச் செய்யப்பட்ட காதணி, குண்டலம்; துகிர் இல் – பவளத்திற்கு இருப்பிடமாகிய.

287. பயத்து–நீர் நிறைந்த; வலைய–வட்டமான;பரவை– கடல்; துகிர்இல் முதலிய மூன்றையும் தனித்தனியே பரவையுடன் இயைக்க; பரவை நிலம்–கடலால் சூழப்பட்ட உலகம்; வலையம்– கடகம், வாகுவலயம் என்பர்; அந்தாலனைத் திருமால் என்பதற் கேற்ப அவன் மார்பில் திருமகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

கோலத்தார் மார்பத்தே கொண்மூவும் மீனும்என
நீலத்தார் ஆரத்தார் நின்றுஇலங்க – சாலத் 288

தருப்பழுத்தது என்னத் தடம்கைக்கு அடங்கத்
திருப்பழுத்த ஆழி திகழ – விருப்புஉதர 289

பந்தனமும் பொன்கச்சும் பைம்பொன் தொடிமடவார்
சிந்தனை யாவும் தினம்கவர – அம்தண் 290

கடிக்கமலம் சூழ்ந்து களிஅளிஆர்த்து என்ன
அடிக்கமலப் பொன்கழல்வாய் ஆர்ப்ப – எடுத்துஅணியும் 291

மண்டலப் பூணோன் வகுத்த படிகடவுள்
புண்டரவெண் நீறு புறம்காப்ப – எண்திசைக்கும் 292

சந்து கலவை தழுவி மணம்கமழ
முந்தும் அனங்கன் முகம்நாண – வந்துஉலகை 293

இறைவனைத் தியானித்தல்

அத்தநா ரீசர் அருள்பெரிய நாயகிதாள்
சித்தஞா னத்தால் தெரிசித்து – மொய்த்த 294

---

288. பா.வே. 1:4 மின்னும்என; 2:4 மேலே

கொண்மூ—மேகம்; மீன்—விண்மீன்; இவை முறையே நீலமணி மாலைக்கும், முத்துச்சரத்துக்கும் உவமை: நிரல்நிறை.

289. தரு—கற்பக மரம்; திருப்பழுத்த—அழகு முதிர்ந்து நிறைந்த; ஆழி – மோதிரங்கள், கற்பகமரத்தின் கனிகள் இவற்றிற்கு உவமை; உதர பந்தனம்—அரைக்கச்சு.

290. பா. வே. 2:3 திறை கவர

291. கடிக்கமலம்—மணமுள்ள தாமரை;களிஅளி—தேனுண்டு களிக்கும் வண்டுகள்:வினைத்தொகை;ஆர்த்து என்ன—ஒலிப்பதைப் போல; அடிக் கமலம்—பாதங்களாகிய தாமரை; கழல்களின் ஒலி வண்டுகளின் ரீங்காரம் போல் உள்ளது.

292. மண்டலப் பூணோன் – பாம்புகளாகிய நகைகளை உடையவர், சிவபெருமான்; வகுத்தபடி – ஆகமங்களில் விதித் தருளியவாறு; கடவுள் – தெய்விகமான; புண்டர வெண்நீறு – மூன்று வரிகளாக இட்டுக்கொள்ளும் திருநீறு.

293. சந்து – சந்தனம்; அனங்கன் – உடல் அற்றவனாகிய மன்மதன்; உலகை – உலகியல்நல்லூர்.

294. சித்த ஞானம் – மெய்யறிவு.

பட்டத்து யானையின் சிறப்பு

மதத்தால் வடவை அவித்து வயக்கண்
கதத்தால் வடவைவிடும் கைமா — ஞாலம்சூழ் 295

மாஇல்ஆ ழிக்கடலே மண்அகழ்ந்து தூர்த்துத்தன்
தாவிலா ழிக்கடலே தந்தமா — மேவும் 296

எயிற்று நிலவால் இருள்ஓட்டி ஆகம்
குயிற்றும் இருள்விளைக்கும் கூற்றம் — புயத்துஇலங்கும் 297

ஓங்கு துவசத்து ஒளிமறைத்துக் கிம்புரிப்பூண்
வீங்கி வெயில்பரப்பும் வெல்வேழம் — ஞாங்கர் 298

மணியால் இடிநுடங்க மாய்த்துப் பிளிரும்
பணியால் இடிகொடுக்கும் பாய்மா — அணிபுழைக்கைக்கு 299

---

295. மதநீர் பாய்வதால் வடவைத்தீ அணைந்து விடுகிறது; கண்களின் சினத்தீப் பட்டு மீண்டும் அது பற்றிக் கொள்கிறது. கதம் — சினம்; ஞாலம் — உலகம். இக் கண்ணியின் தனிச்சொல் எதுகைத்தொடை பெறவில்லை. ஏடுபெயர்த்தெழுதும் போது ஓரிரு கண்ணிகள் விடப்பட்டிருக்கலாம்.

296. மா இல் — திருமகளின் இடமாகிய, இலக்குமி பாற் கடலில் தோன்றியதாலும், பாற்கடலில் பையத்துயின்ற பரமனின் மனைவியாதலாலும் கடல் அவள் வீடாயிற்று; ஆழிக்கடல்: ஒரு பொருட்பன்மொழி; தா — வேகமாகப் பாய்கின்ற; விலாழி — துதிக்கை உமிழ்நீர்; மா — யானை; மண்ணை அகழ்ந்து கடலைத் தூர்த்து மீண்டும் தன் உமிழ்நீரால் நிரப்புகிறது.

297. பா. வே. 2:4 புயத்திலைக்கும்

எயிற்று நிலவால் — தந்தங்களின் குளிர்ந்த ஒளியால்; ஆகம்— உடலின் கரியநிறம் இங்குக் கருதப்படுகிறது; புயத்து இலங்கும்— தன் பக்கத்தே (கட்டப்பெற்று) விளங்கும்.

298. துவசம் — கொடி; ஞாங்கர் — தன் இருபக்கங்களிலும் கட்டப்பெற்றுள்ள.

299. நுடங்க — (ஓசையின்றி) அடங்கிப் போமாறு; தன் மணியோசையால் இடியோசையை அடக்கிப் பிளிறுவதால் மீண்டும் இடியோசையை உண்டாக்குகிறது; புழைக்கை — உள் துளையை உடைய துதிக்கை.

ஆற்றான் உலகாற்றும் ஆற்றுவிக்க வீழ்காதின்
காற்றான் உலகுஆற்றும் கார்மேகம் – கால்தளையில் 300

கட்டுந் துடரும் கராகக் கடங்குவடுக்
கட்டும்மா வீய்க்கும் கார்க்களிறு – நெட்டுடலால் 301

தான்மேரு அன்றித் தனக்குஎதிர்ஒன் றாஎன்று
மாமேரு வும்பெயர்க்கும் மாதங்கம் – மேல்நாடு 302

கன்னா டகம்துரந்து கங்கைத் தரைமுருக்கித்
தென்னாடர் தங்கள் சிரம்நெரித்துத் – துன்னாத 303

கொங்கம் துகைத்துக் குகிரம் எரிவித்து
வங்கம் துகள்படுத்தும் மால்யானை – இங்குப் 304

அந்தாலன் யானையின்மேல் ஏறுதல்

பொருத்தம் புகாமன்னர் பொன்முடியில் கால்வைத்து
எருத்தம் கவடு அசைய ஏறி – விரித்த 305

மன்னர்கள் வணங்குதல்

கவிகை கவித்த கவின்நிலவால் மன்னர்
குவிகை மலர்க்கமலம் கூப்ப – அவிர்கின்ற 306

---

300. ஆற்றான் – ஆற்றானாகிய; உல – அழிந்துவிட்ட; உலகாற்று: வினைத்தொகை; துதிக்கையால் மூச்சை இழுப்பதால் காற்று முழுவதும் போய்விடுகிறது; செவிகளின் அசைவால் அது மீண்டும் தோன்றி மக்களைக் காப்பாற்றுகிறது.

301. இக் கண்ணிக்குச் சுத்தமான பாடம் விளங்காததால் பொருள் புரியவில்லை.

302. மாதங்கம் – யானை.

303. முருக்கி – அழித்து; துன்னாத – தன்னோடு பொருந் தாத, இங்குத் தன் தலைவனுக்குப் பகையாகிய என்பது கருத்து.

304. மால் – பெரிய.

305. எருத்தம்–யானைப்பிடர்; கவடு–யானைக் கழுத்திடு கயிறு; ஏறி–அந்தாலன் யானையின் மேல் ஏறி.

306. கவிகை–வெண்கொற்றக் குடை; குவிகை–குவிகின்ற கைகள்: வினைத்தொகை; பேரரசனின் உலாவில் சிற்றரசர் வணங்குதல் இயல்பு; இதற்கேற்ப வணங்கினர்; அந்தாலஞ்

மங்கையர் கவரி வீசுதல்

தேம்மரைமீது அன்னம் சிறைப்படிக்கொண் டன்னமின்னார்
காமருபூம் கைக்கவரிக் கால்அசைப்ப – மீமிசையில் 307

மேழிக்கொடி ஓங்கி விளங்குதல்

அண்டம் அளவும் அகிலம்எலாம் தன்நிழலால்
கொண்டபெரு மேழிக் கொடிஓங்க – மண்டலம்சூழ் 308

கலைஞர்கள் வாழ்த்துதல்

ஆழி மடுக்கள் அடைத்துத் துகள்மூட
வாழி எனக்கலைஞர் வாழ்த்தெடுப்பத் – தாழா 309

சேனைகள் போற்றுதல்

கரிமாக் கடலும்மிகு காலாள் கடலும்
பரிமாக் கடலும் பரவ – இருபுறமும் 310

அரசர்களின் நெருக்கம்

போந்து தொழுநிருபர் பொன்முடிகள் ஒன்றொடுஒன்று
தேய்ந்து பசும்பொன் தெருநிரப்பப் – போந்துவரி 311

வீரர்களின் கூட்டம்

வில்குழுவும் வாள்குழுவும் வேல்குழுவும் பல்கோடி
மூன்குழுமி எம்மருங்கும் மொய்த்துஈண்ட – வர்க்கத்துப் 312

செழியனின் வெண்கொற்றக் குடையின் ஒளியாகிய நிலவைக் கண்டு மன்னர்களின் கைகளாகிய தாமரைமலர்கள் குவிந்தன என்கிறார். இது உருவகத்தை அங்கமாகக்கொண்ட தற்குறிப் பேற்ற அணி.

307. தேம் – தேன்நிறைந்த; மரை–தாமரை: முதற்குறை; கால் அசைப்ப–காற்றை அசைக்க, காற்றை வரவழைக்க; கைக் கவரி கால் அசைப்ப; சொல் முரண்.

309. பா. வே. 2:4 தாழா

மடுக்கள் – நீர்நிலைகள்; தாழ்–அந்தாலனைப் பணிகின்ற; அ–அந்த.

310. கரிமா, பரிமா: இருபெயரொட்டுப் பண்புத் தொகைகள்.

311. போந்து–புகுந்து; வரி வில்–வரிந்து கட்டப்பெற்ற வில்: வினைத் தொகை.

312. வர்க்கத்து – தொகுதியாகிய.

இன்னிசைக் கருவிகளின் ஓசை

பேரித் திமிலம் பிறப்ப வலம்புரியும்
மூரிக் கடல்முரசும் முன்முழங்கத் — தாரை 313

முழாம்பதலை கல்லவடம் மொந்தை தடாரி
குழாம்பணையும் யாழும் குமுறத் — தொழாப்பேர் 314

வீதியே விளக்கம் பெறல்

புலரத் தெரிவையரும் பொன்மறுகுஞ் செவ்வி
மலரப் பவனி வரலும் — புலவர் 315

கட்டியச் சின்னத்தின் முழக்கம்

முழுவாய்த் தமிழ்அறியும் மூதறிஞன் வந்தான்
வழுவாத் திருமொழியன் வந்தான் — பழமை 316

உரைசெய் கவிக்கும் உதவுபிரான் வந்தான்
வரிசைக்கு ஒருகுரிசில் வந்தான் — பரமன் 317

நடம்நாட்டு இதய நளினேயன் வந்தான்
வடநாட்டு ஒருசெழியன் வந்தான் — படியில் 318

---

313. பேரி—ஒரு தோற் கருவி; திமிலம்—பெரு முழக்கம்; மூரி—பெரிய; தாரை—ஊதுகின்ற ஓர் இசைக்கருவி.

314. முழாம் — ஒன்றொடொன்று நெருங்கிய; பதலை — மத்தளம்; கல்லவடம் — பறை; மொந்தை — ஒற்றைக்கண் பறை; தடாரி — கிணைப்பறை; குழாம் பணையும் — பணைக் குழாமும் என மாறுக; பணை — மூங்கில், ஆகுபெயராகக் குழலை உணர்த்தியது; குமுற — மிகுந்த ஒலிகளை எழுப்ப; தொழாப்பேர் — அந்தாலனுக்குப் பணியாதவர்கள்.

315. புலர—வருந்த; தெரிவையர் என்பது பருவம் சுட்டாது மகளிர் எனப் பொதுவாக நின்றது; பொன் மறுகு—அழகிய தெரு; செவ்வி மலர — எழில்மிக.

317. வரிசை — கலைஞர்களின் தகுதியறிந்து பாராட்டிப் பரிசில் நல்குதல்; குரிசில் — தலைவன்; பரமன் — சிவபெருமான்.

318. நடம் நாட்டு — திருக்கூத்தைப் பதித்த; இதய நளினேயன் — உள்ளமாகிய தாமரையைஉடைய செழியன், அந்தாலன் எப்போதும் தூக்கிய திருவடியைச் சிந்தித்திருப்பவன் என்றவாறு; வடநாட்டு ஒரு செழியன் என்றது தென்னாட்டுப் பாண்டியர்களினின்றும் வேறுபடுத்திக்காட்ட,

சகதத் துவர்தம் தவம்காத்தோன் வந்தான்
மகதைத் திருநாடன் வந்தான் — நிகர்இல் 319

பெருத்த உலகைப் பிரான்வந்தான் சேர்ந்தார்
வருத்தம் தவிர்த்த பிரான்வந்தான் — நிருத்தத் 320

திசைமுகன் அந்தாலந் தீர்த்தமால் வந்தான்
வனசமுக மானவன்தான் வந்தான் — எனமறுகில் 321

அதிரூபவல்லி மகிழ்ச்சியடைதல்

சின்னம் ஒலித்த ஒலியும் சிறுகுறத்தி
முன்னம் மொழிந்த மொழிஒலியும் — கன்னத்து 322

இழியும் அமுதம் இதுகொல் எனப்பொங்கி
வழியும் உவகை வகைமல்க — முழுகிவரும் 323

செழியனைக் கண்ட தெரிவையர் உவகை

கார்ஓசை கேட்ட களிமயிலும் வெய்யவனார்
தேர்ஓசை கேட்ட திரள்மறையும் — நேராகக் 324

கொங்கையிலும் கச்சு குடிபோகக் கோகனகச்
செங்கையிலும் சங்குத் திரள்நெரிய — அங்கம்எலாம் 325

---

319. சக—உலகில் உள்ள; தத்துவர்—மெய்ப்பொருளை உணர்ந்தவர்களின்.

320. சேர்ந்தார் — நண்பர்கள்; நிருத்தம் — வேதங்களின் பயின்ற சொற்களை ஆய்தல், பொதுவாகச் சொல்லாராய்ச்சி எனலாம்.

321. பா. வே. 2:1,2,3 வனச முகன்வந்தான் வந்தான்
நிருத்தத் திசைமுகன் — சொல்லாராய்ச்சியில் பிரமனுக்கு இணையானவன்; வனச முக—தாமரையைப் போன்ற முகத்தினன் ஆகிய; மானவன்—மனிதன்.

322. குறத்தி—அதிரூபவல்லிக்கு முன்னர்க் குறி கூறியவள்.

323. முழுகிவரும்—கடலில் படிந்து எழுந்து வருகின்ற.

324. கார் — மேகம்; வெய்யவனார்—சூரியன்; சூரியன் உதித்ததும் வேதம் ஓதப்படுதல் பற்றி இவ்வாறு கூறினார்; நேராக—ஒப்பாக.

325. கோகனக—தாமரை போன்ற; சங்குத் திரள்—வளையல்கள்; நெரிய—இறுக்கமடைய.

பூரித்து எழுந்து பொலன்உத் தரியமுடன்
வேரிக் குழல்சரிய வீதியில்போய் -- ஆரப்பொன் 326

மாடத்தும் காவணத்தும் மண்டபத்தும் வெண்தரளக்
கூடத்தும் சாளரத்தும் கோபுரத்தும் – ஆடக 327

வீதி அகத்தும் விரைந்து சதகோடி
ஓதிமம் அன்னார் உலாவந்து – மீதே 328

மன்னனைக் கண்ட மங்கையர் மாற்றம்

அவனி சுமந்தான் அரதனம்கைக் கொண்டான்
பவனி வரும்பெருக்கைப் பாரீர் – தவழ்முகிலைச் 329

சேண்தாவு கோமானைச் செய்க்குஇறைக்கும் சிற்றாள்என்று
ஓட்டாது விட்டது உயர்பாரீர் – பாட்டுஅளிகள் 330

கொங்குஉண்டு உலவும்இவன் கோலக் குவளைத்தார்
நம்கண் கவரும் நலம்பாரீர் – தங்கம் 331

இசைஉருவம் பச்சைமால் ஆக்கி இலங்கும்
பசுமணிப்பொன் பூண்கடையம் பாரீர் – அசையில்எழு 332

பாரை அளிக்கஇவன் பாணிஇரண் டோடுஇனிஅக்
கார்ஒருமூன்று ஆன கவின்பாரீர் – மேருவரைக்கு 333

---

326. பொலன் உத்தரியம் – பொன்மயமான மேலாடை; வேரிக் குழல்–மணமிக்க கூந்தல்.

327. காவணம் – பந்தல்; சாளரம்–பலகணி, சன்னல்; ஆடக–பொன்மயமான.

328. ஓதிமம்–அன்னப்பறவை.

329. அவனி – உலகம்; அரதனம் – (பலவகையான) இரத்தினங்கள்.

330. சேண் தாவு கோமான்–ஆகாயத்தில் உலவும் இந்திரன்; உயர்–பெருந்தன்மை.

331. கொங்கு–தேன்.

332. உருவம்–இங்கு நிறத்தை நினைந்தது; பச்சை மணிக் கடையம் தங்கம் போன்ற அந்தாலனின் மேனியைப் பச்சையாக்கி அவனைத் திருமாலாகக் காட்டுகிறது.

333. பாணி–கைகள்; அக் கார்–(இவனால் தளையிடப் பட்ட) அந்த மேகம்.

அப்புறம்சேர் தன்புகழ்போல் ஆடப் புயத்துஇடுவெண்
செப்பஅருநல் உத்தரியச் சீர்பாரீர் – மெய்ப்புயத்து 334

வீரக்கோ தைக்குஉயர்த்த மேடைஎன வீற்றிருக்கும்
ஆரக்கே யூர அணிபாரீர் – சேரக் 335

கனிஇதழீர் பாரீர் கவின்உருவம் பெற்ற
இனியமதன் இவன்ஆம் என்பார் – அனகன்இவன் 336

எண்எண் கலைமுகத்துக்கு ஈர்எண் கலைஉடைய
தண்நல் மதிநிகரோ தான்என்பார் – ஒள்நுதலீர் 337

நாடத் தவம்செய்தாம் நாம்இவன்பால் காமக்கூத்து
ஆடத் தவம்செய் திலம்என்பார் – ஊடும்மதன் 338

தன்நீலம் எய்திடும்முன் சாலஅருள் செய்துஉனது
நல்நீலம் நல்குவது நன்றுஎன்பார் – அந்நீலன் 339

இங்குஉய்த்த கஞ்சத்தால் எய்த்தேன்முன் நீயுன்மா
தங்கத்தை நேர்நிறுத்து சற்றுஎன்பார் – பொங்குதிரை 340

---

334. ஆட–அசையும்படி; மேருமலை புயத்துக்கும், புகழ் வெண்பட்டு உத்தரியத்துக்கும் உவமை.

335. வீரக் கோதை–வீரலட்சுமி; ஆரக் கேயூர–முத்துக்களை உடைய தோளணி; அணி–அழகு.

336. அனகன்–குற்றமற்றவன்.

337. எண்எண் கலை–அறுபத்துநான்கு கலைஞானங்கள்; ஈர் எண் கலை–சந்திரனின் பதினாறு கலைகள்; செழியனை அனகன் என்றதால் அருத்தாபத்தியாகச் சந்திரன் களங்க முடையவன் எனக் கூறியவாறு.

338. மதன்தன் நீலம்–மன்மதனின் குவளை மலர்க்கணை, இது கொல்லும் இயல்புடையது; உனது நல் நீலம்–செழியன் அணிந்துள்ள நல்ல குவளை மலர்மாலை; இது நன்மையானது. எனவே மாரனின் நீலம் தீயது என்பது பெறப்பட்டது; அந் நீலன்–அந்த கரிய நிறத்தினனாகிய காமன்.

339. கஞ்சத்தால்–தாமரைப்பூ அம்பு, இது நினைக்கச் செய்யும்; மாதங்கத்தை–(பவனிவரும்) யானையை.

342. எங்கள் நிறம் கருத்துவிட்டது. நாங்கள் திருமாலைப் போலாகி விட்டோம். எனவே அத் திருமாலைப் போலவே

ஆயதனிக் கங்கைகுலன் ஆதலால் நின்போலத்
தூயர்இலை காண்என்று சொல்லுவார் – நேயமொடு 341

மன்னா நிறம்கருகி மால்ஆன எங்களுக்குப்
பொன்ஆடை நல்குஎன்று போற்றுவார் – இந்நாள் 342

கடகம் உடையாய்நம் கைஅகன்ற பொன்னின்
கடகம் உதவுஎன்று கலுழ்வார் – இடம்இலங்கு 343

வங்க முடைய மயல்ஆழி தாண்டஅருள்
வங்கம் உதவு என்று வழுத்துவார் – துங்கஎழில் 344

அங்கம் உடையாய் அணைத்துத் தழுவுதற்குஉன்
அங்கம் அதனை அருள்என்பார் – தங்குபுகழ்க் 345

கல்யாணம் உள்ளாய் கணப்பொழுதில் எங்களைநீ
கல்யாணம் செய்கஎன்று காமிப்பார் – நல்யாணர் 346

பாலை அதிபா பரிவினொடு நீகாமப்
பாலை அருள்என்று பகருவார் – மாலைஎனும் 347

பீதாம்பரதாரியாகத் திகழப் பொன்னாடை தருக என வேண்டுவார். அவர்கள் அணிந்திருந்த துகில் சோர்ந்துவிட்டது என்பது குறிப்பு.

343. கடகம்–யானைப்படை; பொன்னின் கடகம்–தங்க வளையல்கள்; யாம் இழந்த வளையல்களை மீட்டுத் தருக என்றவாறு; கலுழ்வார்–வருந்துவார்.

344. வங்கமுடைய–அலைகளைப்பெற்ற, மயலாழி என்புழி வறுமையை உடைய என்பதும் தொனிப்பொருள்; வங்கம் உதவு–தெப்பத்தைத் தா; வழுத்துவார்–கூறுவார்.

345. அங்கம்–பெருமைக்குரிய தசாங்கங்கள், அடுத்தது மேனி.

346. கல்யாணம்–மங்கலம், அடுத்தது திருமணம், இடக்கரடக்கலாக மெய்யுறு புணர்ச்சி குறிக்கப்பட்டது; காமிப்பார்–விரும்புவார்; நல் யாணர்–நன்மையையும் புதிய வருவாயையும் உடைய: உம்மைத்தொகை.

347. காமப் பாலை–இன்பத்துறையை; மாலை–மாலைக் காலம்,

கூற்றுவரில் ஆவி கொளும்என்று மின்அனையார்
ஆற்றரிய மால்கொண்டு அயர்போது – கோற்றொடியும் 348

அதிரூபவல்லி சென்று வேண்டுதல்

சென்றாள் தொழுதாள் செழியன் எதிர்குறுகி
நின்றாள் துதிகள் நிகழ்த்துவாள் – குன்றாத 349

உன்பெயரும் உன்குடையும் உன்திறனும் உன்கவினும்
உன்புகழும் கேட்டேன் உனைக்கூடி – இன்புறுநாள் 350

என்றுஎய்தும் என்றுஉள்ளத்து எண்ணி இரவுஉகமாய்
நின்று தளர்ந்தேன் நெடிதாகி – நன்றுஇதயத்து 351

உற்ற கடவுள் ஒளிரஎதிர் நின்றாங்கு
மற்றுஇக் கரக்கிரிமேல் வந்துற்றாய் – கொற்றவா 352

உன்குடையின் நீழலைக்கண்டு ஓங்கும் எழில்இரதி
மன்குடையால் பட்டதுயர் மாற்றினேன் – பொன்கொடுக்கும்

அய்யாஉன் தந்தியைக்கண்டு ஆடல்மதன் தந்திசெய்த
மெய்ஆர் துயர்அனைத்தும் வீழ்த்தினேன் – கையாழில் 354

கூடும்இசை கூட்டிக் கொடுமயலால் மாதர்உனைப்
பாடும்இசை கேட்டுப் பரிவுற்றேன் – தேடருநீ 355

தான்எழிலி அன்றோ தணவாது உனைக்கூட
நான்ஒருமின் ஆகவும்நீ நாட்டுவாய் – மேல்நிகழும் 356

---

348. மால்–காம மயக்கம்; கோற்றொடி–வேலைப்பாடமைந்த வளையல்களை அணிந்தவளாகிய அதிரூபவல்லி.

351. உகமாய்–ஒரு யுகம் என்னுமாறு நீண்டு.

352. கரக்கிரி–துதிக்கையை உடையதும் மலைபோன்றதுமாகிய யானை.

353. இரதிமன்–இரதி தேவியின் தலைவனாகிய மன்மதன், அவனது குடை சந்திரன். பொன்கொடுக்கும் – விரகத்தால் பசலை பாயச் செய்யும்.

354. தந்தி–யானை; மன்மதனின் யானை இருள் நிறைந்த இரவுக்காலம்.

355. பா. வே. 1:2,3 கேட்டுக் கொடுமையெலா
பரிவுற்றேன்–வேட்கை கொண்டேன்.

356. எழிலி–மேகம்; தணவாது–பிரியாது; மின்–மின்னல்,

மாலைஎனது இன்னுயிரை வாங்காமல் உன்குவளை
மாலைதனை இன்று வழங்குவாய் — ஆலைவிலால் 357

கோட்டுக் கிரிச்சிலையன் தன்னைவென்ற கோவிடத்தில்
காட்டிக் கொடாதுஅணைந்து காத்துஅருள்வாய் — வேட்ட 358

மணம்குளிர என்னைநீ வாஎன்றால் போதும்
அனங்கன்எனை என்செய்வான் அஞ்சேன் — தினம்தினமும் 359

வெம்பிஇரை கிட்டாது மேருவரை சூழவரும்
அம்புலியின் வாதை அகற்றுவாய் — தம்பம்உற 360

நின்று விரக நெருப்பைமூட் டிச்சூடும்
தென்றல் குளிரஅருள் செய்குவாய் — இன்று 361

வெறுக்கப்ப டாததுஒரு வேய்ங்குழலின் ஓசை
பொறுக்கச் செவிக்குப் புரிவாய் — கறுக்கும்நிறக் 362

கோகிலங்கள் ஆம்பிரத்துக் கூப்பிட்டு எழுந்தாலும்
ஆகுலம்எய் தாமல் அருள்செய்வாய் — ஓகைஇலேன் 363

பாலி நலம்பொருந்தப் பாவையர்கள் முன்எனக்குக்
கோல நறுமூரல் கொடுத்திடாய் — நீலி 364

---

357. மாலை — மாலைக் காலம்; ஆலை வில் — ஆலையில் வைத்துப் பிழியப்படுகிற கரும்புவில்.

358. கோட்டுக் கிரிச் சிலையன்—சிகரங்களை உடைய மலையைத் தன் வில்லாகக் கொண்ட சிவபெருமான்; மாரன் ஆலை வில்லால் கிரிச் சிலையனை வென்றான் என்றது உறுப்புக்குறை விசேட அணி.

360. தம்பம் உற—நிலையாக நிற்க, வாயுஸ்தம்பனம் எனப் படும்.

361. விரக நெருப்பை மூட்டிச் சூடும் அத் தென்றல் தம்பம் உற நின்று குளிர அருள் செய்குவாய் என இயையும்.

362. வேய்ங்குழல்—மூங்கிலாலான குழல்.

363. கோகிலங்கள்—குயில்கள்; ஆம்பிரத்து — மாமரத்தின் மேல்; ஆகுலம்—வருத்தம்; ஓகை—உவகை.

364. பாலி நலம்—(உன்னால்) பாதுகாக்கப் பெறுகின்ற சிறப்பு: வினைத்தொகை; மூரல்—புன்னகை,

பழிகழுவி நின்றகுலப் பார்த்திபன்நீ இன்றுஎன்
பழிஅணுகா வாறுஇருகண் பாராய் – விழைவுதரும் 365

உன்அருள்சற்று எய்தினால் ஓலிட்டு வைதிடும்என்
அன்னைதனை வாயில் அடியேனோ – பொன்னில் 366

விரவும்நீ வந்தால் விடியாது இருந்த
இரவு வருத்துமோ என்னைப் – பொருவிலா 367

மன்தயவுஊர் மேழி வளத்தால் புவிகாக்கும்
உன்தயவுஊர்க்கு எல்லைஇலை ஓதுங்கால் – நன்றாய் 368

உனைப்பெற்ற பின்புஅவனி ஓங்குகொடும் செவ்வாய்
தனைப்பெற்ற துன்பம் தவிர்த்தாள் – தனிப்புவியில் 369

மூவருணத் தார்கைக்கோல் மூன்றும் நிலைநிறுத்தும்
தாஇல்உயர் கோல்உன்கோல் தான்அன்றோ – பாஉரைக்கும் 370

---

365. பார்த்திபன்–அரசன்; என்பழி–உனக்கு என்னால் நேரும் வசை, நான் இறந்து பட்டால் பழிவரும் என்றவாறு.

366. ஓலிட்டு–கூச்சலிட்டு.

367. பொருவிலா–ஒப்பற்ற.

368. மன்தயவு ஊர்–நிலைத்த கருணையைத் தன்பால் பெற்ற; தய்வு ஊர்க்கு–தயவாகிய நகரத்திற்கு: உருவகம்.

369. அவனி–பூமி; ஒன்பது கோள்களில் செவ்வாய் பூமியின் மைந்தன் எனப்படுவான். இதுபற்றியே அவனைக் குஜன் என்பர். சோதிட நூலின்படி பொதுவாக அவன் ஒரு தீக்கோள், பிறரால் சான்றோன் எனப்படும் அந்தாலந்தீர்த்தானைப் பெற்றபிறகு தீயமகனைப் பெற்றதால் தான் கொண்ட வருத்தம் நீங்கி நிலமகள் பெரிது உவந்தாள் என்றபடி.

370. மூவருணத்தார் கைக்கோலாவன: அந்தணர்–முக்கோல், திரிதண்டம் எனப்படும்;அரசர்–செங்கோல்;வணிகர்–துலாக்கோல்; உன் கோல் என்றது வேளாளரின் கையிலிருக்கும் தாற்றுக்கோலை, இது 'பொங்கு ஓதைக் கடல் தானைப் போர் வேந்தர் நடத்துபெரும் செங்கோலை நடத்தும்கோல் ஏர் அடிக்கும் சிறு கோலே' எனச் சிறப்பிக்கப்படுகிறது (ஏர் எழுபது. 13.); பா உரைக்கும்–நூல்களால் புகழப்படும், பா ஆகுபெயராகப் பாவானியன்ற நூல்களை உணர்த்தியது.

உன்குலத்துக்கு ஆதியன்றோ ஒண்கங்கை தன்னை அரன்
மின்குலவு சென்னி மிசைவைத்தான் – மன்கலைசேர் 371

ஏழ்எழுவர் ஓர்உருப்பெற்று ஈண்டு சிறந்தாங்கு
வாழிஅரும் பல்நூல் வளம்பெற்றாய் – பாழியுடைக் 372

கோதுஇல் அறமும் ஒழுக்கமும் கோடாத
நீதியும்உன் பாலே நிலைத்ததே – ஆதலான் 373

செழியன் அதிரூபவல்லியைச் சிறப்பாக நோக்குதல்

மிக்க செழியன் விழிவைத்து அருள்செய்தான்
கைக்களிறும் வீதி கடந்ததால் – மைக்குழலாள் 374

அதிரூபவல்லி தன்வீட்டை அடைதல்

தன்மனையில் புக்குத் தளர்வுஅகல என்றுஎண்ணா
நன்மணிப்பொன் கூடத்தில் நண்ணுங்கால் – என்மனத்தின் 375

---

371. தன்னை–அக் கங்கையை; மன்கலை–நிலைத்த மொழி, இங்குத் தமிழ்.

372. ஏழெழுவர்–(சங்கப்புலவர்) நாற்பத்தொன்பதின்மர்; வாழி: மங்கலப் பொருளில் வந்த முன்னிலையசை; செழியதரையன் சங்கப்புலவர்கள் அனைவரும் திரண்டு ஓருருக் கொண்டதைப் போன்று கல்வியில் வல்லவன் என்றவாறு; பாழியுடை–பெருமை பெற்ற.

373. கோதுஇல்–குற்றமற்ற; கோடாத–நடுநிலை பிறழாத

*350*ஆம் கண்ணியிலிருந்து இதுவரை அதிரூபவல்லியின் கூற்று. இங்கு 'ஆதலால்' என முடிபு பெறாமல் தொங்குகிறது. அடுத்த கண்ணியில் திடீரென்று 'மிக்க செழியன் விழி வைத்து அருள் செய்தான்' எனக் கவிக்கூற்று வந்து விட்டது. பொருள் தொடர்ச்சி நன்கு அமையவில்லை. எனவே *373* ஆம் கண்ணியை அடுத்துத் திண்ணமாகச் சில கண்ணிகள் இருத்தல் வேண்டும். ஏடு பெயர்த்தெழும் போது அவை விடுபட்டு விட்டன.

375. எண்ணா – எண்ணி; நண்ணுங்கால் – பொருந்தும் போது, இங்குச் சென்றடைந்த பின் என்ற கருத்தில் ஆளப்பட்டுள்ளது.

தாதியைத் தூதனுப்பல்

எண்ணம்உரை என்ன இகுளை தனைஅனுப்பி
நண்ணிஇருந் தாள்வருதல் நாடியே – உள்நயத்த 376

தோழி செழியனிடம் உரைத்தல்

பாங்கி இனிதுஏகிப் பார்த்திபனைக் கைகூப்பி
ஆங்குமொழி கின்றாள் அரசேகேள் – வாங்கும்இடை 377

எம்கொடிநிற் பாடும் எழில்விறலி தன்சொல்லால்
தங்கும்மயல் கொண்டு தளர்காலைத் – துங்கமுடை 378

உன்பவனி கண்டாள் உனதுஅருள்பெற்ற நாள்இனிநீ
மன்புதிய தார்அளித்து மன்னனே – அன்பொடுமின் 379

அந்தாலன் மாலை அளித்தல்

வாஎன்று சொல்ல மருக்குவளைத் தார்அளித்துப்
போஎன்று அனுப்புதலும் பூங்கொடிதான் – பூஎன்ற 380

அதிரூபவல்லியின் உவகை

செங்கைதனில் வைப்பத் திகழ்அவ் அலங்கல்தனை
எம்கணவன் ஆகும் இதுஎன்று – கொங்கைமிசை 381

ஒற்றினாள் முத்தம் உதவினாள் கூந்தலிடைச்
சுற்றினாள் வைத்துத் துதித்துப்போய் – நல்தலைவன் 382

---

376. இகுளை – தோழி; வருதல் – (தோழி தூதுரைத்துத்) திரும்ப வருதல்; உள்நயத்த—மனதார நட்புடையவளாகிய.

377. வாங்கும் இடை—உட்பக்கமாக வளைந்த இடையை உடைய.

378. எம்கொடி: அதிரூபவல்லி; துங்கம்—பெருமை.

379. அருள்—சிறப்பு நோக்கம்; மன்—நிலைபெற்ற; தார் அளித்து—தலைவன் தான் அணிந்துள்ள மாலையை ஒருத்திக்கு அனுப்புதல் அவன் அவள்பால் அன்று மாலை வருதலுக்கு முன் அறிவிப்பு ஆகும்.

380. மருக் குவளை – மணமிக்க நீலமலர்; பூ என்ற— தாமரை போன்ற.

381. அலங்கல்—மாலை.

செழியனின் வருகை

வந்தான் அவன் என்று வழிநோக்கி நிற்பளவில்
அந்தாலந் தீர்த்த அருட்செழியன் — சந்தாபம் 383

அதிரூபவல்லி வரவேற்றல்

தீரவரல் கண்டு சிறந்துகளித் துத்தொழுது
வார முடன்அழைத்து வந்தருளி — சீரம் 384

அருத்திமணி மஞ்சத்து அகமே களிப்ப
இருத்தியபின் தானும் இருந்தாள் — பரித்தநறும் 385

இருவரும் இன்பந்துய்த்தல்

பாக்கும் சுருளும் பரிவின் இருவோரும்
ஊக்கமொடு கொண்டார் உளமீது — தாக்கும்மதன் 386

நோயா னதுதவிர நோக்கிஒரு வர்க்கொருவர்
வாயால் சுருள்கொடுப்ப வாங்கினார் — சேயார் 387

கரம்கொடுநல் ஆலிங் கனவிதங்கள் எல்லாம்
திரம்கொள் மனம்உருகச் செய்தார் — வரும்பெரிய 388

நண்பினொடு செய்யஇதழ் நல்அமுதம் உண்டு
பண்புஉறவே சீர்க்காரம் பண்ணினார் — வண்புவியின் 389

எந்தக் குறியினும்ஈது இன்பக் குறிஎன்றே
தந்தக் குறியால் தருக்கினார் — சந்ததமும் 390

---

383. சந்தாபம்—துன்பம்.

384. வாரமுடன்—அன்புடன்; சீரம்—பால்.

385. அருத்தி — அருந்தச்செய்து; இருத்தியபின் — உட்கார வைத்த பிறகு; பரித்த—வெட்டப்பட்ட, வெட்டுப்பாக்கு என்றே வழங்குவார்.

386. சுருள்—வெற்றிலைச்சுருள்; பரிவின்—அன்புடன்.

387. நோயானது: ஆனது பகுதிப்பொருள் விகுதி; சேயார்—சிவந்த.

388. ஆலிங்கன விதங்கள்—பலவகையாகத் தழுவுதல்; திரம்கொள் — உறுதியான; மனம் என்புழி உயர்வு சிறப்பும்மை தொக்கது; உறுதியான உள்ளமும் உருகுமாறு என்றவாறு.

389. சீர்க்காரம்—புட்குரல்.

390. தந்தக்குறி — பற்குறி; தருக்கினார் — பெருமிதம் அடைந்தனர்.

உச்சிதப் பொன்தோள் உயர்கொங்கை யில்நகத்தால்
வைச்ச குறிகள் வயங்கினார் – உச்சமுடன் **391**

நட்புஆட்சி நீசம் பகைஇன்றி யேதினமும்
ஒப்பாகக் கூடி உவப்புற்றார் – ஒப்ப **392**

உளத்தை உருக்கும் உபரி உபரி
திளைத்த சுரதவிதம் செய்தார் – வளத்தொடுபேர் **393**

ஆனந்தம் எய்தினார் அந்தக் கரணம்அமைந்து
ஊனம்தராச் சிறப்பும் ஓங்கினார் – மேனைந்தும் **394**

நீடூழி வாழ்தல்

இவ்வகைசெய்து ஊழிநாள் இவ்உலகை ஆண்டுபல
செல்வமொடு வாழ்ந்தார் திகழ்ந்து **395**

---

391. உச்சித–மேன்மையான; வைச்ச–வைத்த.

392. உச்சம், நட்பு, ஆட்சி, நீசம், பகை ஆகியன சோதிடத்தில் பயின்று வரும் கலைச்சொற்கள். இவை ஒரு சாதகத்தில் குறிப்பிட்ட கோள் இருக்கும் நிலையைப் பற்றியன. அந்தாலந்தீர்த்தானும் அதிரூபவல்லியும் தம்முள் ஒன்றாகக் கலந்து சற்றும் வேறுபாடற்ற ஒத்த காமத்தராய் விளங்கினர் என்றவாறு.

393. பா. வே. 2:4 வளத்தொடுபேர்

உபரி உபரி–மேலும் மேலும், உபரி சுரதம் என்பது இன்பநூல் சுட்டும் ஒரு கலவி விசேடமும் ஆகும்; ஒரு–ஒப்பற்ற; பேரானந்தம்–பேரின்பம்.

394. அந்தக்கரணம்–பல பகுதிகளோடு கூடிய உள் கருவி, தத்துவ நூலார் இதை மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்ற நான்காகக் கூறுவர்; அமைந்து–இவ் வேறுபாடுகள் புலனாகாதவாறு உள்ளம் ஒன்றுபட்டு, லயித்து; ஊனம் தரா–குறைவு அற்ற; இருவரும் மனங்கலந்த அன்புடன் ஒருவரையொருவர் நேசிப்பதாலும், முன் கூறியவாறு ஒத்த காமத்தராக இருப்பதாலும் குறைவு அற்ற இன்பமாயிற்று என்பது கருத்து.

இக் கண்ணியின் தனிச்சொல் இரு சுவடிகளிலும் 'மேனைந்தும்' எனவே காணப்படுகிறது. பொருள் தெளிவாக விளங்கவில்லை.

395. ஊழி நாள்–நீண்ட காலம் என்றபடி. அந்தாலந்தீர்த்தான் அதிரூபவல்லி ஆகிய இருவரும் இவ்வுலகை ஆண்டு, பல செல்வமொடு திகழ்ந்து ஊழி நாள் வாழ்ந்தார் என மங்கலமாக நூல் முற்றுப்பெறுகிறது.

அந்தாலந்தீர்த்த செழியதரையன் மஞ்சரி முற்றிற்று.

சொல்லடைவு

பின்னுரை

இந்திய அரசு பண்பாட்டுத்துறை

தமிழ்ப் பல்கலைக் கழகத் திட்டம்

தமிழ் ஓலைச்சுவடி அட்டவணைப் படுத்தல்-
பழைய நூல்கள் பதிப்பித்தல்

மைய அரசின் கல்வி, பண்பாட்டுத் துறையின் நல்கைக்குச் சுவடிப்புலத்தின் ஓலைச்சுவடித் துறை, தமிழ் ஓலைச்சுவடிகளைக் கணிப்பொறிவழி அட்டவணைப்படுத்தல், பழைய நூல்களைப் பதிப்பித்தல் ஆகியவற்றிற்கு 3.37 இலட்ச ரூபாய் நிதி அளவீட்டுடன் இரண்டு ஆண்டுத் திட்டமொன்றை ஆகஸ்டு '84-ல் படைத்தது. அதன்முன் தமிழ்நாடு அரசின் கல்வித்துறைவழி இத்தகைய திட்டம் ஒன்றும் அனுப்பப்பட்டது.

மைய அரசின் கல்வித்துறை 4-12-84 அன்று (ஆணை எண் F35-35/84 Lib, 4-12-84-ம் நாள்) இரண்டு இலட்ச ரூபாய் அனுமதித்தது. திட்டக் காலத்தை ஓராண்டாகச் சுருக்கியது. தமிழ்ப் பல்கலைக் கழகம் இத் திட்டத்திற்கு ஏறத்தாழ 67 ஆயிர ரூபாய் அல்லது 25 விழுக்காடு செலவு செய்யவேண்டும் என்றும் விதித்திருந்தது.

மையஅரசின் ஆணை 4-12-1984-ஆம் நாளில் வெளியாயினும் இத்திட்டம் தொடங்க நான்குவாரம் தேவைப்பட்டன.

இத் திட்டத்தின் கீழ், 1. தமிழ் ஓலைச் சுவடிகளின் அட்டவணை கிடைத்தமட்டில் தொகுத்தல்; 2. அட்டவணை இல்லா ஓலைச் சுவடி நிலையங்களில் தொகுப்பாளரை அனுப்பி அட்டவணை உருவாக்கி இணைத்தல்; 3. ஓலைச்சுவடிகள் கிடைக்குமாயின் அவற்றைப் பெற்றுத் தொகுத்தல்; 4. கணிப்பொறிவழி அவற்றை வகைப்படுத்தி அச்சுக்குத் தயாராக்குதல்; 5. ஓலைச்சுவடி நூற்பொருளுக்கேற்ப நூலகம் அவற்றை வகைப்படுத்தல்; 6. பழைய சுவடிகளை (ஓலை, கையெழுத்து) நூலுருவில் செப்பமாகப் பதிப்பித்தல் என்ற ஆறு கூறுகளைச் செயற்படுத்த முடிவெடுத்தது.

தமிழ்ப் பல்கலைக் கழகம் படைத்த திட்டம் இரண்டாண்டுக் காலத்தில் நிறைவேற்றத் தக்கது. 3.37 இலட்சம் நிதி அளவீடு உடையது. ஆனால் அனுமதித்த மையத் திட்டமோ 2.67 இலட்சம் நிதி அளவீடு உடையது. ஓராண்டிற்குள் முடித்திட வேண்டும் என்றும் வரையறை செய்துளது. எனவே தமிழ்ப் பல்கலைக் கழகத் திட்ட வரைவிற் கண்ட சுவடி அட்டவணையைத் தொகுத்துக் கணிப்பொறிவழிச் சீராக்கிப் பதிப்பித்தல், நூற் பொருளை நூலகமுறையில் வகைப்படுத்தல், ஓலைச்சுவடிகளைத் தொகுத்தல், நூல்களைப் பதிப்பித்தல் ஆகியவற்றிற்கு முதலிடம் நல்கித் திட்டம் செயற்படுத்தப்பட்டது. இந்தத் திட்டம் ஓலைச் சுவடித்துறை, நூலகம், கணிப்பு மையம் ஆகிய மூன்று துறைகளின் ஒத்துழைப்புடன் செயற்படுதற்கு வகைசெய்யப்பட்டிருந்தது. எனினும், மரபுப்படி எந்தத் துறை, திட்டம் படைத்து நல்கை பெற்றதோ அந்தத் துறையின் தலைவர் அந்தத் திட்டத்தின் இயக்குநராகவும் தமிழ் நூல்களின் பொதுப் பதிப்பாசிரியராகவும் நியமிக்கப்பட்டார்.

திட்டச் செயலாக்கத்தை நெறிமுறைப்படுத்தத் துணை வேந்தரவர்கள் தலைமையில், சுவடிப்புலத் தலைவர் பேரா. கே. எம். வேங்கடராமையா, ஓலைச்சுவடித்துறைத் தலைவர் பேரா. மு. சண்முகம்பிள்ளை, கணிப்பொறிமையத் தலைவர் திரு. கே.சி.செல்லமுத்து, நூலகத் தலைவர் திரு. த. பத்மநாபன், ஓலைச்சுவடித்துறைத் தொழில் நுட்ப உதவியாளர் திரு. ப.வெ. நாகராசன் ஆகியவர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. பின்னர், திட்டத்தில் பதிப்பாசிரியராக நியமிக்கப்பட்ட முனைவர் சா. கிருட்டினமூர்த்தி, ஏடு பெயர்த்து எழுதுபவர் செல்வி க. லலிதாம்பிகா முதலியவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பேரா. மு. சண்முகம் பிள்ளை குறுந்தொகையின் பதிப்புப் பணிக்காகச் சென்னையில் தங்கியபோது இத் துறை இணைப் பேராசிரியர் முனைவர் த. கோ. பரமசிவமும், நூலகத் தலைவர் விடுப்பிலிருந்தபோது உதவி நூலகர் திரு. க. நித்தியானந்தமும் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

திட்ட வரைவில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள கூறுகளை நிறை வேற்றல், உரிய காலத்தில் திட்டத்தை முடித்திடக் கண்காணித்து வரல், உரிய துணையாளரைத் திட்டத்தின்கீழ் நியமித்தல் முதலிய வற்றை நெறிப்படுத்தும் குழு மேற்பார்வை செய்தது.

12-12-84, 9-1-85, 22-4-85, 9-7-85, 21-8-85, 3-10-85, 7-1-86, 27-2-86 ஆகிய நாள்களில் கூடி விவாதித்து முடிவுகளைப் பதிவு செய்தது.

தொழில் நுட்ப உதவியாளர் திரு. ப. வெ. நாகராசன், ஓலைச்சுவடி தொகுத்து வைத்துள்ள நிறுவனங்கள் அட்டவணை தொகுத்திருந்தால் அவற்றைப் பெறவும், இல்லாத இடங்களில் அட்டவணை உருவாக்கவும் அங்கு அனுப்பப்பட்டார். அவரே செழியதரையன் பிரபந்தங்கள், செழியதரையன் பஞ்ச தந்திரம் ஆகிய நூல்களுக்குக் குறிப்புரையும் எழுதினார். தஞ்சையில் வாழும் மேஜர் அ. கிருட்டிணமூர்த்தி தொகுத்த மேல் நாட்டுத் தமிழ்ச் சுவடி அட்டவணையும் அவர் அனுமதி பெற்று இப்போது உருவாகிவரும் அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளது. சீவேந்திரர் சரிதம் நூலுக்கு முனைவர் சா. கிருட்டினமூர்த்தி குறிப்புரை எழுதியதோடு அச்சுப்பணிகளையும் கவனித்து வந்தார்.

செல்வி க. லலிதாம்பிகா சுவடி பெயர்த்தெழுதிப் படிகளைத் தட்டச்சு செய்ய உதவினார். செல்வி கோ. மணிமொழி தட்டச்சராகப் பணிபுரிந்தார்.

திரு. நாகராசன், செல்வி லலிதாம்பிகா ஆகிய இருவரும் அச்சடித்த அட்டைகளில் நூல் விவரத்தைக் குறித்துள்ளனர்.

கணிப்பொறியில் ஆங்கிலத்திலமைந்த செய்திகளை மட்டுமே அகர வரிசைப்படுத்த வசதியுள்ளது. எனவே தமிழிலமைந்த செய்திகளை அகர வரிசைப்படுத்திக் குறிப்பிட்ட படிவத்தில் அச்சாவதற்கெனத் தேவையான கணிப்பொறி வழியமைப்பு (program) ஒன்றும் கணிப்பொறியில் வடிவமைக்கப்பட்டது. இந்த அமைப்பே ஆங்கில எழுத்தில் கணிப்பொறிக்கு உள்ளீடு செய்யப் பெற்ற சொற்கோவைகளை அகர வரிசைப்படுத்தி அச்சாக்கித் தருகிறது.

நூலக நூல்களுக்குக் கணிப்பொறியின்மூலம் முறையான பொருளடிப்படையில் அட்டவணை தயாரிக்கவும் நூல்தலைப்பு, ஆசிரியர், பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபடுத்தி அகர முதலி வரிசையாக்கவும் வேண்டி Tamil/Marc என்ற கணிமம் (software) ஒன்று முன்பே வடிவமைக்கப்பட்டுள்ளது. இதே கணிமத்தை ஓலைச் சுவடிகளைப் பட்டியலிடவும் பொருள் வாரியாகப் பிரித்துப் பகுக்கவும் ஆசிரியர், பொருள், தலைப்புகளில் அவற்றைத் தெரிவு செய்வதற்கான பட்டியலிடவும் Palm Line

Software என்ற அமைப்பாக மாற்றி உருவாக்கப்பட்டது. கணிப் பொறியில் உள்ளீடாக்கித் திருத்தம் செய்யப்பட்ட ஓலைச்சுவடி களின் அட்டவணைச் செய்திகளை (data) மேற்கண்ட கணிமம் கணிப்பொறியில் ஆய்ந்து பயன்படுத்தற்கேற்பப் பொருட் பகுப்புடன் அட்டவணையாக அச்சாக்கித் தருகிறது.

கணிப்பொறிமையத்தில் திருமதி. சி. லதா மற்றும் திரு. சதாசிவம் அவற்றை ஆங்கில எழுத்திலாக்கியும் சொற்கோவை தயாரித்தற்குச் சொற்பிரித்து ஆங்கில எழுத்தில் எழுதியும் பின்னர் தமிழாக்கியும் உதவினர். திரு. செல்லமுத்து இவற்றைக் கண் காணித்துக் குறித்த நாளில் வெளிவரத் துணை புரிந்தார். நூலகத் தலைவர் திரு. த. பத்மநாபன் நூற்பொருளை வகை செய்யப் புதிய பொருள்வகை முறையை உருவாக்கிக் கணிப்பொறியில் பயன்படுத்தி வெள்ளோட்டம் பார்த்துச் செம்மைப் படுத்தினார். தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச்சுவடிகளுள் (இதுவரை சேர்ந்தவை 2256) 1123 சுவடிகளின் அட்டவணைத் தொகுப்பு எடுத்துக் காட்டாக வெளியிடப்பட்டது.

பேரா. மு. சண்முகம் பிள்ளை நூல்களுக்குப் பதிப்புரை எழுதித் தேவையான இடங்களில் நூற்பாடத்தைச் செப்பஞ் செய்தார்.

நிதி ஒதுக்கீட்டைக் கடக்காமல் முன்னர் முடிவு செய்த நாளான 7–12–85 முதல் மேலும் ஆறு மாத காலம் வரை திட்டத்தைத் தொடர்ந்திட மைய அரசிற்கு வேண்டுகோள் படைக்கப்பட்டது. அதன்படி இத் திட்டம் 6–5–86 அன்று முடிவடைந்திடும்.

இத் திட்டத்தில் கீழ்வரும் நூல்கள் பதிப்பாயின :

1. Catalogue of Tamil Palmleaf Manuscripts in the Tamil University (Computerised)
   தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச்சுவடிகளின் அட்டவணை (கணிப்பொறிவழி) நாள் 11–9–85
2. சீவேந்திரர் சரிதம் நாள் 25–12–85
3. ஆத்திசூடியுரை நாள் 25–12–85
4. செழியதரையன் பிரபந்தங்கள் நாள் 17–3–86

சிற்சில இடங்களிலிருந்து ஓலைச் சுவடிகள் இலவயமாகவும் குறைந்த விலைக்கும் பெறப்பட்டன. அவ்வாறு பெற்ற சுவடி

களின் எண்ணிக்கை 295. பெற்ற சுவடிகளில் எண்ணெய் தடவி காப்புச் செய்தவை 1045.

ஏறத்தாழ ஒரு இலட்சத்து இருபத்து ஐயாயிர ரூபாய் விலையில் நிழற்படக்கருவி (சிராக்சிங்) வாங்கப்பெற்றது. இது சுவடிகளைப் படியெடுக்க மிக உதவியாக அமைந்தது.

கணிப்பொறியில் எவ்வாறு அட்டவணை, சொல்லடைவு முதலியவற்றை விரைவிற் செய்திட முடியும் என்பதை மெய்ப்பிக்கும் வழிவகைகளை அறிந்தமை மற்றொரு நன்மை.

தமிழகத்திலும், கேரளம், ஆந்திரம், பன்னாட்டு நூலகங்கள் முதலியவற்றிலும் காணும் தமிழ்ச் சுவடிகள் அனைத்தின் அட்டவணை, பொருள் வகுப்புடன் அச்சானமை குறிப்பிடத்தக்க பயன்.

சுவடி அட்டவணையில் விடுபாடு இருப்பின் அவற்றைச் சேர்த்திடு முறையில் பதிவுதாலத்தில் (பிளாப்பிடிஸ்கில்) அமைக்கப்பட்டுள்ளது. அட்டவணைகள் புதிய செய்திகளைப் பெறப்பெறத் திருந்தும். ஆகையால், விடுபட்ட செய்திகளைத் தெரிவிப்பின் அடுத்த பதிப்பில் மாற்றிடமுடியும்.

இத் திட்டம் நிறைவேற நிதி உதவியளித்த மைய அரசின் கல்வி பண்பாட்டுத்துறைக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கும் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இத் திட்டத்தை நிறைவேற்றுதற்கு எல்லா ஒத்துழைப்பையும் நல்கிய ஆய்வாளர்கள், அலுவலர்கள் ஆகிய அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்.

திட்டங்களை உரிய நாளில் திறமையாக நிறைவேற்றிடின் நல்கை தரும் நிறுவனங்களிடமிருந்து தேவையான நிதி பெறுதல் எளிது என்னும் நியதியை அனுசரித்தமையால் இத் திட்டத்தைத் தொடர்ந்து மற்றொரு திட்டத்திற்கு, ஒரு இலட்சத்து இருபத்து ஐயாயிரம் ரூபாய் தந்துதவிய மைய அரசின் தேசிய ஆவணக் காப்பகத்திற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வ. அய். சுப்பிரமணியம்

பிழைதிருத்தம்

[இதற்காக வருந்துகிறோம்]

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
3	14	அரசனை ஓர்	அரசரை—ஓர்
5	3	செய்கள்	செயல்கள்
5	22	மங்கலச் செய்கள்— வளப்பம் மிக்க வயல்கள்	மங்கலச் செயல்கள்— நன்மைதரும் காரியங்கள்
16	6	மற்றுளவாய்	மற்றுளவாய
17	12	துயர்தரும்	உயர்தரும்
24	17	எனில்போலப்	எனல்போலப்
28	12	கண்டவாயிற்	கடைவாயிற்
31	15	வழங்கிடில	வழங்கிடில்
40	28	அளைஇ	அளைஇப்
40	32	அவன்	அவள்
41	2	நான்இலை	நாண் இலை
41	3	கதிபெற்றோர்	கதிபெற்றார்
41	15—16	இத்தகையவளின்	இத்தகையவனின்
46	18	சேலை	சோலை
46	23	ஆட்சி	அட்சி
49	4	சத்தும்	சித்தும்
59	25	இயமகள்	இமையமகள்
87	25	ஐந்தாம்	ஏழாம்
90	19	பெருமைபெரும்	பெருமை பெறும்
92	25	முன்னுறையரையனார்	முன்றுறையரையனார்
99	15	பின்லருமாறு	பின்வருமாறு
104	18	வாலிகூபம்	வாவிகூபம்
111	6,35	நன்றி	நன்று
116	1	பெயர்தம்	பெரியர்தம்
117	33	பெருபதம்	பெரும்பதம்
119	1,27,31,33	வயறு	வயிறு
120	9	இலேசணியாகக்	இலேசவணியாகக்
122	12	நாறும்	நாரும்
123	35	உயைவர்	உடையவர்
124	4	திறையால்	திரையால்
126	19	விட்டு பாலாழி	விட்டுப்பாலாழி
138	26	விசையன் 12	விசையன் 21
138	39	வயறே	வயிறே
144	22—23	என்றுஎன்று	என்று
146	9	கொடிமுடி	கொடுமுடி
148	26	செருத்தப்படும்	செலுத்தப்படும்
149	30	கூறுவராக	கூறுவீராக
152	27	இடம்பெற்றுத் தாழால்	இடம்பெற்றுத்தழால்

157	18	'அன்றலர்ந்த' என்பதை அடுத்துப் 'பூ' எனச் சேர்த்துக்கொள்க.	
158	31	மங்கக் கண்ட	மயங்கக் கண்ட
159	25	நோக்கி	நோக்கிப்
160	12	எழு—எழுகின்ற ஒளி	எழுநீழல்—எழுகின்ற ஒளி
160	22	கொடுக்க	கெடுக்க
160	24	பாணத்தை	பாணத்தைப்
164	14	பொருளை	பொருளைப்
168	15	தலைவியின்	தலைவனின்
169	3–4	கொடுப்பர்களும்	கொடுப்பார்களும்
169	23	கொடுப்பார்க்கும்	கொடுப்பார்களும்
170	20	முயற்சியைப்	முரற்சியைப்
184	13	வந்தவளயினும்	வந்தவளாயினும்
187	17	எதனாலே	எதனாலோ
194	5	ரலைமா ற்றலர்கள்	ரலைமாற் றலர்கள்
201	27	துன்புறுத்தல்	துன்புறுதல்
205	16	அலர்குழாய்	அலர்க் குழலாய்
214	6	வயிற்றுர்	வயிற்றுள்
214	13	நோக்கி	நோக்கிச்
215	16	வயற்றில்	வயிற்றில்
215	27-28	குறிப்பாலுணர்த் தச்தன்	குறிப்பாலுணர்த்தத் தன்
215	28–29	பூத்சூட்டி	பூச்சூட்டி
216	13	கூறுபவர்களிள்	கூறுபவர்களின்
218	19	என்றுமாம்	எனினுமாம்
219	6	தார் முடிவில்	தார் முடியில்
219	14	அனுப்பினாள்	அனுப்பினான்
222	10	'பெரும்' என்பதனை	அடுத்துப் 'புகழாகும்' எனச்சேர்த்துக்கொள்க
223	28	18	19
227	26	அவள்அவற்கு	தோழிதலைமகளுக்கு
257	20	விசையன் இன் ஏழன்உருபு	விசையனின் இன்சாரியை
272	17	சரவனையா	சரவணையா
274	20	தோழர்களுக்கு	சோழர்களுக்கு
276	3	தனதன	தனனதன
276	11	குமறு	குமுறு
278	17–18	தரணியர்	தரணிபர்
279	6	நீயம்	நீபம்
280	4	கணவரை	கனவரை
282	8	மடமயில்	மடமையில்
282	22	மதுகவி	முதுகவி
282	33	எதிரும்ஓர்	எதிரும்ஒர்
285	4	குளிகை	சூளிகை
285	8	புண்புகளில்	பண்புகளில்
285	28	எதிரும் ஓர்	எதிரும்ஒர்
286	19	துதிக்கு'ம்	துதிக்குதும்

289	4	குறுக்கல்	கெடுதல்
289	10	கூர்த்து	கூர்த்த
289	22	னைமரத்தைப்	பனை மரத்தைப்
295	19	செழிய கந்தீர்த்த	செழியதா கந்தீர்த்த
303	9	வரிகளை	வரிகளைக்
307	6	அந்தமாம்	அந்தாமம்
312	24	செம்பொன்னாலாகி	செம்பொன்னாலாகிய
314	21–22	மனிப்பாதல	மணிப்பாதல
319	8	வேளாளர்	வேளாளா
319	30	பகிரதி	பாகிரதி
320	13	பழி பழுவிய	பழிகழுவிய
321	13	போதும்	மோதும்
322	5	மருதொரு	மருதொடு
323	30	போரும்	பொரும்
327	27	அலறக	அலறக்க
328	14–15	ஏழுபகல்	எழுபகல்
328	24	உரகம்	உரக
330	14	தேவா கோ	தேவர் கோ
332	25	சயத்திரன்	சயித்திரதன்
333	32	மிகுதியன்	மிகுதியின்
342	26	திகரியும்	திகிரியும்
349	22	விகரத்தால்	விகாரத்தால்
352	14	விசைய!தர	விசையதர!
352	26	பிராஜாபதியின்	பிரஜாபதியின்
355	11	விலங்கொடும்	விலங்கோடும்
355	16	திரிபதகைக்	திரிபதகை
356	16	என்பாரால்	என்பரால்
356	22	ளங் குமரர்	இளங் குமரர்
361	9	பொற	பொர
366	18	மாகத	மரகத
367	32	ஓர்	ஓர்
368	18	சூட்டை	சூட்டைத்
368	23-24	ஓர்	ஓர்
369	15	'பாழி' என்பதை அடுத்து 'மா' எனச்சேர்த்துக் கொள்க	
374	4	ஆயிரம் என்புழி	ஆயிரப்பிறை என்புழி
375	27	பாரவைக்	பாரைவைக்
375	29	கயதுயரங்	கயதுரங்
375	31	வீரவைக்	வீரைவைக்
376	5	ஆரவைத்	ஆரைவைத்
377	16	உரோகினியின்	உரோகிணியின்
381	2	தேனா பராகம்	சேனா பராகம்
381	6	மறுப்புகளிலிருந்து	மருப்புகளிலிருந்து
385	9	அசலம்	அசலமே
392	7	அடுபுவி	அடுபுலி
394	5	மண்டபம்	மண்டபமும்
395	10	திருச்செல்வி	திருசெவ்வி
396	14	சுதை அழுதே	சுதை அமுதே

397	32	என்ற நயம்	என்றது நயம்
403	6	நீழல்கீழ்ப்	நிழல்கீழ்ப்
405	25	புகுவனன்	புகுவன்
413	8	கரியனாகவும்	சூரியனாகவும்
413	13	கரியனைப்	சூரியனைப்
413	32	வேங்கிடவனும்	வேங்கடவனும்
414	13	வேங்கிடவன்	வேங்கடவன்
415	29	முன்று	மூன்று
418	18	குழிமால்யானை	சூழிமால்யானை
419	2	தின் சிலை	திண்சிலை
419	12	மரகத பரியுரை	மரகத பரிபுரை
419	13	தெரிதமில்	தெரிதமிழ்
419	15	மார கருணா	மாரா கருணா
420	1	எழுத்தாளப்பட்ட	எடுத்தாளப்பட்ட
471	19	பொழிவு	பொலிவு
472	4	தன்துளப	தண்துளப
474	26	ஆழகிய	அழகிய
475	32	திரிவு	திரிபு
477	1	னான	னாண
477	5	வாள்நுதலால்	வாள்நுதலாள்
477	11	மேவும் அயில்	மேவுமயில்
477	17	விளங்க	விளங்கி
477	31	விளங்கு	விளங்கி
478	14	பொழிய	பொலிய
479	28	ஆசுகங்களாகிய	சூசுகங்களாகிய
481	28	நதிகள்	நிதிகள்
483	22	ஆசுகங்களின்	சூசுகங்களாகிய
489	32	செந்திறத்தாள்	செந்நிறத்தாள்
490	21	கரும்பு	சுரும்பு
491	17	அயல்	அயன்
491	17	தன்	தண்
492	29	பதமராக	பதுமராக
493	4	உன்	உண்
498	24	தோற்கவி	தோற்கருவி
498	24	தொளைக்கருவி	துளைக்கருவி
499	30	அரசாங்கத்துச்	அரசாங்கத்துக்குச்
500	29	எருது	எருதுக்
506	5	நந்தா வளமும்	நந்தா வனமும்
507	17	செய்யப்பட்டு	செய்யப்பட்ட
507	30	புல்பிடிக்க	புற்பிடிக்க
507	31	‘புல்லைக்கவ்வுமாறு’ என்பதனை அடுத்துத் ‘தோல்வியடைய எனச் சேர்த்துக்கொள்க.	
508	9	சிவப்புக்	சிறப்புக்
509	21	‘பற்றிய’ என்பதனை அடுத்துப் ‘பல’ எனச் சேர்த்துக்கொள்க.	
510	29	பொன்னாகிய	பெண்ணாகிய
512	26	கூறப்பட்டுள்ளது	கூறப்பட்டுள்ளன
515	24	தோழியார்	தோழியர்

516	5	நீராய்	நீராய்ச்
517	23	என்னும்	என்றும்
517	25	வாடக்காற்றை	வாடைக்காற்றை
519	2,19	வசனம்	வனசம்
523	10	பிளிரும்	பிளிறும்
529	6	இனியமதன் இவன்ஆம்	இனிய மதன்இவன்ஆம்
529	29	339	340
532	9,24	சூடும்	சுடும்
534	27	பெயர்த்தெழும்	பெயர்த்தெழுதும்
535	9	பெற்றநாள்	பெற்றாள்
536	24	வழங்குவார்	வழங்குவர்